டாக்டர் நா. மகாலிங்கம்

ஞானபரம்பரை

தொகுதி 3

வர்த்தமானன்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

அருட்செல்வர்

டாக்டர் நா. மகாலிங்கம் அவர்கள்

வழங்கும்

ஞான பரம்பரை

அருளாளப் பெருமக்களின்

வாழ்வு – வாக்கு –. பணி

பற்றிய நூல் தொகுப்பு

தொகுதி மூன்று

வர்த்தமானன் பதிப்பகம்

சென்னை – 17.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

முதற் பதிப்பு : 2006
(இராமானந்த அடிகளார் அறக்கட்டளை)

இரண்டாம் பதிப்பு : 2009
(இராமானந்த அடிகளார் அறக்கட்டளை)

மூன்றாம் பதிப்பு : 2014
(வர்த்தமானன் பதிப்பகம்)

பத்து தொகுதிகளும் சேர்த்து
விலை ரூ. 2500/-

வெளியீடு :
வர்த்தமானன் பதிப்பகம்
21, இராமகிருஷ்ணா தெரு, சென்னை -17.

அச்சிடல் :
அருணா கிராபிக்ஸ், சென்னை -17. போன் : 24345058
ஈஸ்வரி ஆப்செட், சென்னை -5. போன் : 28480481, 42157817

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

அருட்செல்வர் முன்னுரை

ஞானம் என்றால் என்ன?

மெய்யுணர்வினை – செம்பொருளைக் கட்டிக்காப்பது ஞானம். ஞாத்தல் என்றால் கட்டுதல். ஞாண் கட்டும் கயிறு என்று பொருள்படுவதைக் காணலாம்.

ஐம்புலன்களைக் கட்டி உள்ளத்தை ஓரிடத்தே நிறுத்துவது ஞானம்.

திருவள்ளுவர்,

''சென்ற இடத்தால் செலவிடா தீது ஓரீஇ
நன்றின்பால் உய்ப்பது அறிவு''

என்கிறார்.

புலன்களை அவை மேயும் பக்கமெல்லாம் அலையவிடாமல் தடுத்து, ஒரு நல்ல குறிக்கோளோடு பிணைப்பது அறிவு என்பது இத்திருக்குறளின் பொருள்.

ஆன்மிகவாதிகளின் குறிக்கோள் ''பிரமத்தில் - பரம்பொருளில் லயிப்பது - ஒன்றுவது''; அறிவியல்வாதிகளின் குறிக்கோள் ''ஒரு பௌதீகப் பொருளின் அல்லது நிகழ்வின் காரண காரியங்களை ஆராய்ந்து அவற்றை உறுதிசெய்து உலக நன்மைக்குப் பயன்படுத்துவது.''

ஆன்மிகம்கூட அறிவியலின் ஒரு பகுதியே என்பார்கள். களங்கள் வேறானாலும் நோக்கம், சமுதாய நன்மையாகவே மூடியவேண்டும்.

பாரதியார் மிக அழகாகக் கூறினார்:

''ஊருக்கு உழைத்திடல் யோகம் - நலம்
ஓங்கிடுமாறு வருந்துதல் யாகம்
போருக்கு நின்றிடும்போதும் - உளம்
பொங்கல் இலாத அமைதி மெய்ஞ்ஞானம்.''

உள்ளுணர்வாகிய மெய்யுணர்வால் உலக ஈடேற்றத்தைப் பற்றிச் சிந்திப்பது ஞானம்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

அவ்வறிவால் காணப்படுவது செம்பொருள். ஆகையால், ஞானியருடைய உபதேச மொழிகளைச் செம்பொருள் கண்டார் வாய்ச்சொல் என்பர்.

பாரதியார் கூறும் மெய்ஞ்ஞானம் வாய்க்கவேண்டுமானால் ஒருவன் தன் புலன்கள்மீது முழு அதிகாரம் செலுத்த வல்லவனாக வேண்டும்.

கண்ணபிரான் போர்க்களத்தில் பார்த்தனுக்குக் கீதையைப் போதித்தான். போர் தொடங்க ஆயத்தமாய் அணிவகுத்திருந்த போது 18 அத்தியாயம் கொண்ட முழு நூலைப் போதிப்பது சாத்தியமா எனில், சாத்தியமே! சீடனோ புலன்களை வென்ற புண்ணியன். ஆசிரியனோ கடவுளின் அவதாரம். அருளாளர்களுக்குக் காலம் இடம் அவர் வசத்திற்கு உள்ளாகும். ஒரு நொடியில் மாணவன் உள்ளத்தில் எழுந்த கேள்வி களுக்கெல்லாம் விடையும் கிடைத்தது, விளக்கம் கிடைத்தது.

கல்லால மரத்தின்கீழ் மௌனத்திலேயே கைவிரல் காட்டிக் குறிப்பினால் விளங்கவைக்கும் உபதேசம் மாணவர்களுக்குக் கிடைத்தது. வள்ளற்பெருமான் தமக்கு ஒரு நொடிப்பொழுதிலே இறைவன் சாகாக்கலையை உணர்த்தினாரெனக் கூறுவார்.

ஆக, மெய்ஞ்ஞானிகள் ஐந்தவித்தவர் என்பதும் அருள் ஞான வித்தகர்கள் என்பதும் அவர்கள் காலத்தையும் இடத்தையும் கட்டியாள வல்லவர்கள் என்பதும் தம் அனுபவங்களைத் தம் மாணவப் பரம்பரை வாயிலாக இன்றுவரை உலகிற்கு வழங்கி வருகின்றனர் என்பதும் நாம் உணரலாம்.

இந்திய நாட்டில் அப்படி என்னதான் இருக்கிறது என்று கேட்டால், பாரதியார் கூறிய உரை நம் நினைவில் நிற்க வேண்டும்:

பல்விதமாயின சாத்திரத்தின் மணம்
பாரெங்கும் வீசும் தமிழ்நாடு,

பன்னரும் உபநிட நூல் எங்கள் நூலே,
பார்மிசை ஏதொரு நூலிது போலே!

பூரண ஞானம் பொலிந்த நன்னாடு
புத்தர் பிரானருள் பொங்கிய நாடு.
பாரத நாடு பழம்பெரு நாடு.
பாடுவம் இஃதை எமக்கிலை ஈடே

என்று போற்றுகிறார்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

இன்றைய நிலை என்ன?

புத்தம் புதிய கலைகள் - பஞ்ச
பூதச் செயல்களின் நுட்பங்கள் கூறும்
மெத்த வளருது மேற்கே
அந்த மேன்மைக் கலைகள் தமிழினில் இல்லை

என்பது ஓரளவு உண்மைதான். அறிவியல் மேற்கே தோன்றி வாழ்க்கை நிலை மெத்தவும் உயர்ந்துவருகிறது. எங்கும் தொழில்கள் வளர்கின்றன. செல்வம் கொழிக்கும் ஐரோப்பிய நாடு களுக்கும் அமெரிக்காவிற்கும் ஆஸ்திரேலியாவுக்கும் நம் இளைஞர் கள் தங்கள் வாழ்க்கை முன்னேற்றத்தைக் கருத்தில் கொண்டு, 'விமானமே வீடுபேற்றுக்குரிய தவம்' என்று காத்துள்ளனர்.

எல்லாமிருந்தும் அங்கே வழிகாட்டுவாரில்லை! வாழ்வில் எல்லாப் போகங்களையும் அனுபவிக்க அங்கே வசதி இருக்கிறது. அந்த இன்பங்கள் நிறைவளிக்காமல் மக்கள் மன இறுக்கத்தால் அவதிப்படுகிறார்கள். அதிகார போதை ஒரு புறம். மித மிஞ்சிய போகத்தால் குடும்ப வாழ்க்கை சீர்குலைந்து போவது ஒருபுறம். அன்புப் பிணைப்பு அறவே மாறி, வெற்று முகமன் வார்த்தைகளாக அவற்றின் முகவரி அமைந்துவிட்டது.

இதனால்தான் மகான்களைத் தேடி இந்தியா நோக்கி வருகிறார்கள் வெளி நாட்டவர்கள். அப்படியானால் இந்துமதம் என்று சொல்லப்படுகிற இந்தியப் பண்பாட்டினைக் காலங்காலமாகக் கட்டிக் காத்து வருகிறவர்கள் யார்? அதுதான் நமது ஞான பரம்பரை. 'ஞானம் என்ற சொல்லுக்கே கட்டிக்காத்தல் என்றுதான் பொருள்' என்று முன்பு சொன்னோம்.

திருஞானசம்பந்தர், அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகியோரைச் சமய குரவர் என்கிறோம். குரவர் என்றால் முதல்நிலையில் பெற்றோர்கள் என்று பொருள்படும். இரு முதுகுரவர் என்றால் தாய் தந்தையர் என்று பொருள்.

அடுத்த நிலையில் ஆசிரியன் குரவனாகிறான். குரவன்தான் குரு. பெரியவன் என்று பொருள். அருமையாகக் கிடைப்பதுதான் பெருமை. ஆகையால் அருமையுடையன் ஆசிரியன் ஆகிறான். ஆசிரியன் = குரு.

இந்தியப் பண்பாடு குருவைப் போற்றுவது

தெளிவு குருவின் திருமேனி காண்டல்
தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்
தெளிவு குருவின் திருநாமம் செப்பல்
தெளிவு குருவுரு சிந்தித்தல் தானே

என்று திருமந்திரம் கூறுகிறது.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

தெளிவு என்பது அறிவு - தெள்ளிய அறிவு - குற்றங்களைந்து இதுவென்று அறிந்து குணம் கொள்ளும் அறிவு - அதாவது ஞானம். ஆசிரியன் ஞானத்தைத் தருகிறான். எழுத்தறிவித்தவன் இறைவன் என்று கூறுவார்கள்.

கல்வி கொடுத்தவன் வித்தியா குரு
தீக்கை அளிப்பவன் தீட்சா குரு
ஞானம் அளிப்பவன் ஞான குரு

தீட்சா குரு தனிப்பட்டவனுக்கு ஞானம் அளிப்பவன். ஞான குருமார் சந்ததிகளுக்கே ஞானம் அளிப்பவர்கள். அவர்கள் உலக குரு என்றே சொல்லப்படுபவர்கள். புத்த பெருமான், திருஞானசம்பந்தர், ஏசு பெருமான், நபிகள் நாயகம், வள்ளற் பெருமான் முதலியயாவரும் உலக குருக்கள்.

மெய்கண்டார் முதலியவர்களைச் சந்தான குரவர் என்கிறோம். சந்தானம் என்பது தொடர்ச்சி. நமது மரபு தொடர்வது பிள்ளைகளால்தானே! ஆகையால், பிள்ளைகளுக்குச் சந்தானம் என்று பெயர்.

சந்தான ஆசாரியார்கள் சைவ சமய குரவர்களின் கருத்துக்களைத் தந்தை > மகன் என்னும் உறவுவழியே பரப்புவதை மேற்கொண்டார்கள். ஆழ்வார்கள் கூறிய கருத்துக்களை ஆச்சாரியர்கள் மக்களிடையே பரப்பினார்கள்.

இந்த ஞானத்தை இறையருளால் பெற்ற சான்றோர்கள் தங்கள் மாணவர்களுக்குச் சொன்னார்கள். அவர்கள் ஞானத்தைப் பெறக் கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறைகளைப் பரம்பரையில் காப்பாற்றிவந்தார்கள். இந்தப் பரம்பரையில் வந்தவர்களில் சிலர் மடங்களை உருவாக்கினார்கள். வைணவர்களும், சைவர்களும் இவர்களில் அடங்குவார்கள்; நூல்களை இயற்றினார்கள். போதனைகள் செய்தார்கள். சமுதாயத் தொண்டுகள் செய்தார்கள். சிலர் இயக்கங்களையே உருவாக்கினார்கள். குரு நானக் சீக்கிய இயக்கம் தோன்றக் காரணமானார். குரு கோவிந்த சிங் முதலாக இந்த இயக்கம் ஒரு சமயமாகவே உருவாகிவிட்டது. வள்ளற்பெருமான் அவ்வாறு ஓர் இயக்கத்தை உருவாக்கியவர்தான்.

பகவான் ரமணர் முதலியவர்களின் கொள்கை உலகெங்கும் பரவினாலும் மடங்களாக - இயக்கங்களாக மாறாமலேயே ஆன்மிக நாட்டமுடையவர்களுக்கு வழிகாட்டி வருகின்றது.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

எப்படியிருந்த போதிலும் பாரதப் பெரும் பண்பாடு என்னும் ஜீவ நதியில் தோய்ந்து நீராடித் திளைத்து மகிழும் துறைகளாக இந்த ஞான பரம்பரை விளங்குகிறது.

வள்ளற் பெருமான் 'வாழையடி வாழையென வந்த திருக்கூட்ட மரபினில் யான் ஒருவன் அன்றோ' என்று தம்மை அந்த ஞான பரம்பரையில் வந்தவராகக் காட்டிக்கொள்வதைக் காண்கின்றோம்.

பரம்பரையில் பெறுவதைத்தான் நாம் சிறப்பாக ஞானம் என்று கொள்கிறோம்.

பாரதியார் சொல்கிறார்: 'ஒரு தேசத்தின் நாகரிகத்துக்கு அந்தத் தேசத்தின் இலக்கியமே மேலான அடையாளம்.'

இந்திய நாட்டின் மிகப் பெரிய அறிவுக் கருவூலமாகப் பெரியோர்கள் செய்த இலக்கியங்கள் கொட்டிக் கிடக்கின்றன. வடமொழியிலும் தமிழிலும்தான் ஆயிரக்கணக்கான நூல்கள் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக வற்றாத அறிவூற்றாக விளங்கிவருகின்றன.

வேதம், உபநிடதம், அவைகளிலிருந்து பிறந்த அறிவாராய்ச்சி நூல்கள், மனித வாழ்க்கையின் படப்பிடிப்புக்களாகிய இலக்கியங்கள், தேவாரம், திவ்வியப்பிரபந்தம் முதலாகிய அருள் நூல்கள், தத்துவ சாத்திர நூல்கள், புராணங்கள், இதிகாசங்கள் என இந்நூல்கள் பல வகைப்படுகின்றன. பெரியவர்களின் வாக்குகள் அல்லாமல் அவர்கள் வாழ்க்கையும் இந்த இலக்கியங்களில் ஒரு பகுதியே. அவை பெரியபுராணம், பக்த விஜயம் முதலிய நூல்களாக அமைகின்றன.

இந்தியத் தத்துவ ஞானம் வேதங்களில் வேரூன்றி, உபநிடதமென்னும் மரமாய் வளர்ந்து, பல கிளைகளைப் பரப்பி, அரிய கனிகளை வழங்கிவந்துள்ளது. இந்த மரம் இன்னும் வேர்களையும் விழுதுகளையும் நெடுகப் பரப்பி இந்த நிலத்தின் பண்பாட்டைக் காப்பாற்றிவரும் என்பது உறுதி.

விவேகானந்தர் சிகாகோ மாநாட்டில் முழங்கினார்: ''ஒரு ஹிந்து நடந்து செல்கையில் அவன் தனியாக நடந்து செல்வதில்லை. அவனுக்குப் பின்னால் ஐந்தாயிரம் ஆண்டுக் கலாசாரம் அணிவகுத்துச் செல்கிறது'' என்றார்.

மாக்ஸ்முல்லர் கூறியதை இங்கு நாம் நினைவுகூர்வது நல்லது.

'மறுபிறப்பு என்று ஒன்று உண்டென்றால், நான் இந்தியாவில்தான் பிறக்க ஆசைப்படுகிறேன். அதுவும் ஒரு புழுவாகப் பிறந்தால் கூடப் போதும்.' தம் நண்பர்களிடம் இவ்வாறு எழுதிவைக்குமாறு அவர் கூறிச் சென்றார்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

இந்து மதம், மாணிக்கவாசகர் சொல்வதைப் போல், ''முன்னைப் பழம் பொருட்கும் முன்னைப் பழம் பொருள்; பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும் அப்பெற்றியது;'' என்றுமிருப்பது. அதனுடைய உலகளாவிய பொருள் தன்மையால் யாவரையும் தன் வசமாக்கும் இயல்புடையது. சத்தியம் எந்தத் திசையிலிருந்து வந்தாலும் அதை வரவேற்கத் தன் கதவுகளை அகலத்திறந்து வைத்துள்ளது. ஆகவே, நம் ஞானிகள் இந்தியாவுக்கு மட்டுமல்ல. உலகத்துக்கே சொந்தமானவர்கள்.

''இந்து தேசத்திலுள்ள ஜீவனை யுகயுகாந்தரங்களாக அழியாதபடி பாதுகாத்து வருவோர் அந்த யோகிகளே. கடுரமான கலியில் உலகம் தலைகீழாகக் கவிழ்ந்துபோகும் சமயத்தில்கூட இந்துஸ்தானம் அழியாமல் தானும் பிழைத்து மற்றவர்களையும் காக்கக்கூடிய ஜீவசக்தி இந்நாட்டிற்கு இருப்பது அந்த யோகிகளின் தபோபலத்தாலன்றி வேறில்லை.''

— குள்ளச்சாமியார் என்னும் சித்தர் வாக்காக இவ்வாறு சொல்லிக் கொண்டேவரும் பாரதியார், ''மனவலிமையும் பொருள் வலிமையுமற்ற இந்திய அரசர்களாலோ, வேதமந்திரங்களைப் பொருள் தெரியாமல் திரும்பத் திரும்பத் சொல்லிக்கொண்டிருக்கும் பிராமணர்களாலோ, கொடைக்குணம் மறந்த வணிகர்களாலோ, மூடத்தன்மை மிக்க மற்றவர்களாலோ இந்தியாவுக்கு அமரத்தன்மை கிடைக்கவில்லை'' என்கிறார்.

இந்து தர்மத்தின் பெருமையைச் சொல்ல வந்த பாரதியார்,

''எல்லா உயிர்களிலும் நானே யிருக்கிறேன் என்றுரைத்தான் கண்ணபெருமான். எல்லாரும் அமரநிலை எய்தும் நன்முறையை இந்தியா உலகிற்களிக்கும் - ஆம் இந்தியா உலகிற்களிக்கும் - ஆம் ஆம் இந்தியா உலகிற்களிக்கும். வாழ்க'' என்று கூறினார்.

அமர கவியின் கண்களில் நமது ஞானபரம்பரை ஒன்றே சர்வ மத சமரசத்தைப் பேணிப் பாதுகாக்க வல்லது; அது ஒன்றே உலகிற்குத் தலைமை தாங்கி வழிகாட்டி உலகையே வாழ்விக்க வல்லது என்ற உண்மை தெரிகிறது.

அவரது வாக்குப் பொய்க்கவில்லை. பிற நாடுகளுக்கு நம் பெரியோர்கள் சென்றார்கள். சுவாமி விவேகானந்தர், சுவாமி இராமதீர்த்தர், பரஹம்ஸ யோகானந்த கிரி, இன்று மகேஷ் யோகி, முக்தானந்தர், பிரபுபாத பக்திவேதாந்த மகராஜ், சுவாமி சச்சிதானந்தர், பகவான் ரஜனீஷ், ரவிசங்கர், சின்மயாநந்தர், வேதாத்திரி மஹரிஷி ... என்று எத்தனை எத்தனை பேர்!

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

இவர்கள் சென்று ஆன்மிக ஒளியைப் பரப்பினார்கள். இங்கிருந்தவாறே தம் கதிரொளி பாய்ச்சியவர்களில் ரமண மகரிஷி, அரவிந்தர், சிவானந்தர், சத்திய சாயி இவர்களைக் குறிப்பிட்டுச் சொல்லலாம். எண்ணற்ற வெளிநாட்டவர்கள் தங்கள் ஒளியிழந்து, வாழ்க்கைக் களையிழந்து, மன இறுக்கத்தின் பிடியிலிருந்து விடுபட வேண்டுமானால் இந்தியாவே கதி என்று இங்கு வருகிறார்கள்.

சுவாமி சச்சிதானந்தர் இரண்டு லட்சத்திற்கு மேலான அமெரிக்கர்களின் வாழ்க்கைமுறையைச் செம்மைப்படுத்தி யிருக்கிறார்கள். வெளிநாட்டு உபதேசியார்கள் பொதுவாகக் கடைப்பிடிக்கும் மதமாற்ற வேலையை இவர்கள் செய்வதில்லை. ஒழுக்கம், இறையுண்மை, சமுதாயத் தொண்டுணர்வு என்பனவற்றில் மட்டும் அவர்களுடைய மனம் செல்லும் வண்ணம் மடை மாற்றினார்கள்.

ஞான பரம்பரையைக் காத்துவந்த நல்லாசிரியர்கள் வாழ்ந்த காலத்தைப் பலவாறு ஆராய்ந்து நிர்ணயித்துள்ளார்கள். புத்தர் முதல் சேக்கிழார்வரை இந்த நிலையே நீடிக்கிறது. பெரியோர்களின் வாழ்க்கை வரலாறு காலநெறிப்படி முறையாக எழுதப்படாத காரணமென்ன? இதற்கு முக்கியக் காரணம் ஒன்றைச் சொல்லலாம். மனிதர்கள் வாழ்வைக் காட்டிலும் மனிதர்களின் வாக்கு அல்லது அவர்கள் கடைப்பிடித்த நெறிகளே மேலானவையாக நம் முன்னோர்க்குத் தோன்றியிருக்க வேண்டும். புத்தருடைய வாழ்வைவிட அவர் போதனைகளே நாம் நினைவில் வைக்க வேண்டியவை. இராமானுஜர் செய்த அற்புதங்களைவிட அவர் தொண்டே நாம் போற்ற வேண்டியது. எனினும், பெரும்பாலும் உலகத்தின் ஏனைய பகுதிகளில் பெரியோர்களின் வாழ்க்கைகளைக் கால முறைப்படி நன்கு கணித்துப் பதிவு செய்திருக்கிறார்கள். நாம் அதுபோல நம் பெரியோர்களின் வரலாற்றைச் செம்மையாகப் பதிவு செய்து வைப்பது இன்றைய நிலையில் சட்டாயமானதுதான்.

இவர்களுடைய கால வரலாற்றின் பின்னணியில் நமது இதிகாச புராண வரலாறுகளின் காலங்கள் மறு ஆய்வு செய்யப்பட்டுள்ளன. இந்த மறு ஆய்வு அடிப்படையில் சங்க காலச் சான்றோர்கள், நாயன்மார்கள், ஆழ்வார்கள் காலங்களை வரையறுத்து நிறுவும் முயற்சியையும் நாம் இப்போது செய்துகொண்டுவருகிறோம் என்பதைத் தெரியப்படுத்திக்கொள்கிறேன்.

நம் பெரியோர்கள் வானத்தில் சப்தரிஷி நட்சத்திரங்களின் இயக்கத்தைக் கவனித்து, வைவஸ்தவ மனுகாலத்திலிருந்து கணக்கிட்டுவந்திருக்கிறார்கள்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

சப்தரிஷி மண்டலத்தின் இயக்கத்தை வைத்தே சப்தரிஷி சகாப்தம் என்பது வைவஸ்தவ மனுவின் காலத்தில் தொடங்கப்பட்டது. அது கி.மு. 15261 ஆகும்.

இதனடிப்படையில் வழக்கத்தில் உள்ள யுகக்கணக்கு முறையில் திருத்தம் காண முடிந்தது. இப்போது நடைபெறுவதாக நாம் சொல்லும் கலியுகம் என்றோ முடிந்துவிட்டது. கிருதயுகம் முடிந்து, உண்மையில் இப்போது திரேதாயுகம்தான் நடைபெறுகிறது.

சென்னையில் நாம் அமைத்துள்ள அனைத்துலகத் தொன்மை வரலாற்று ஆய்வுக் கழகத்தின்மூலம் இந்த ஆய்வுகள் செய்யப் பட்டுவருகின்றன. அதன்மூலம் பழைய ஆய்வு முடிவுகள் திருத்தம் பெற்றன.

ஆதிசங்கரருடைய காலம் கி.மு. 509 என்றும், ஒரு சதுர்யுகம் 12160 ஆண்டுகள் கொண்டது என்றும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

ஆழ்வார்களில் ஐந்து பேர் கிருஷ்ண பரமாத்மாவுக்கு முந்தியவர் என்று தெரிகிறது. சப்தரிஷி மண்டலம் (Great Bear) பற்றி இதுவரை வான நூலுள் விரிவான ஆய்வு செய்யப்படவில்லை. நாம் இப்போது அந்த ஆய்வுக்கு ஏற்பாடு செய்துள்ளோம். கூடிய விரைவில் சரியான கணக்குகள் நிர்ணயம் செய்யப்படும்.

பொள்ளாச்சி நல்லமுத்துக் கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி வாயிலாக நூல் வெளியீட்டுப் பணி மிகச் சிறப்பாக நடந்துவருகிறது.

மாணவர்களுக்கு நமது இந்தியப் பண்பாடு நாகரிகம் குறித்த பாடத் திட்டத்தைப் பத்து ஆண்டுகளுக்குமுன் நடைமுறைப்படுத்தி, அதற்கான சிறுசிறு நூல்களைத் தக்கவர்களைக் கொண்டு அக்கல்லூரி வெளியிட்டது. அப்புத்தகங்கள் வேறு சில கல்லூரிகளுக்கு முன் மாதிரியாக அமைந்தன.

பழனியப்பா பிரதர்ஸ் நிறுவனத்தினர் நம்முடைய தேசியத் தலைவர்கள், விடுதலைப் போராட்ட வீரர்கள், பெரியோர்கள் வரலாறுகளைச் சிறுசிறு நூல்களாக வெளியிட்டார்கள்.

ஈரோடு திரு. ஸ்டாலின் குணசேகரன் அவர்கள் சுதந்திரப் போராட்ட வரலாற்று வீரர்களின் சரித்திரத்தை இரண்டு தொகுதிகளாக வெளியிட்டார்கள். அதுபோல் நமது இந்திய ஞான பரம்பரையைச் சேர்ந்த அருளாளர்கள் வரலாற்றைச் சிறு நூல்களாகக் கொண்டு வரவேண்டுமென்ற எனது விருப்பத்தைத் தமிழ்ச் சான்றோரும்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

பேரறிஞருமாகிய டாக்டர் ம.ரா.போ. குருசாமி அவர்களிடம் கூறி, நிறைவேற்றித் தருமாறு வேண்டினேன்.

என்னுடைய வேண்டுகோளை ஏற்று, மூதறிஞர் ம.ரா.போ. குருசாமி அவர்கள் நமது ஞான பரம்பரையைச் சேர்ந்த 30 அருளாளர்கள் - காரைக்காலம்மையார் முதல் சித்பவானந்தர் வரை - வாழ்க்கை பற்றியும் அவர்களின் வாக்குகள் பற்றியும் பல நல்லறிஞர்களைக் கொண்டு எழுதுவித்து, அரிய முறையில் மேற்பார்த்துத் தொகுத்து நூல்கள் வெளிவரச் சிறந்த முறையில் உதவியிருக்கிறார்கள்.

டாக்டர் ம.ரா.போ. குருசாமி அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நூல்களை அரிய முறையில் எழுதியுதவிய அறிஞர் பெருமக்களைப் பாராட்டுகிறேன்.

இந்த வரலாறுகளை ஐந்து தொகுதிகளாக* அழகிய முறையில் முதல் பதிப்பாக வெளியிட்ட பொள்ளாச்சி என்.ஜி.எம். கல்லூரி முதல்வர் அவர்களுக்கும், பதிப்புத்துறையில் உதவிசெய்த ஏனையோர்களுக்கும் எனது நன்றி.

முதல் பதிப்பு வந்து சில மாதங்களிலேயே பிரதிகள் தீர்ந்து விட்டன. இப்போது இரண்டாம் பதிப்பு எனது தலைமையில் இயங்கும் இராமானந்த அடிகளார் அறக்கட்டளை ஆதரவாலும் அந்த அறக்கட்டளையின் மூலம் நடைபெறும் குமரகுரு பொறியியல் கல்லூரியின் உதவியாலும் வெளிவருகிறது.

நூல்களை அற்புதமாக அச்சிட்டு முடித்த ருக்மணி அச்சக மேலாளர் திரு. பாலசண்முகம் அவர்களுக்கும், வேண்டிய படங்களைப் பயன்படுத்திக்கொள்ள உதவிய பெரியோர் களுக்கும் உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

தமிழ் உலகமும், இளைஞர் சமுதாயமும் இதனை வரவேற்றுப் பயனடைய வேண்டும் என்பது என் பேரவா.

நா. மகாலிங்கம்

*முதற் பதிப்பிற்கானது

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

பதிப்புரை

முதற் பதிப்பிற்கானது

மாணவர்களின் முழுமையான ஆளுமை வளர்ச்சிக்கு வெறும் ஏட்டுக்கல்விமட்டும் போதாது. அதனுடன் விழுப்பொருள் உணர்வும் (sense for higher values) மாணவர்களிடையே பதிந்திட வேண்டும் என்பது எங்கள் நிர்வாகத்தின் லட்சியமாகும். இந்தக் குறிக்கோளை முன் நிறுத்தி அறவியல் மற்றும் சமயம் முதலான செவ்வியல் கருத்துக்களை மாணவர்களிடையே பரப்பி வருகிறோம்.

அந்தப் பணியின் வளர்நிலையில் தமிழ் ஞானிகள் முப்பதுபேர்பற்றி நூல்கள் வெளியிட வேண்டும் என்று அருட்செல்வரவர்கள் விரும்பினார்கள். எங்களை எல்லா வகையிலும் வழிநடத்துகின்ற அருட்செல்வரவர்களின் விருப் பத்தை முழுமனத்தோடு ஏற்று, இந்த நூல்வரிசையை வெளியிடுவதில் எம் அறக்கட்டளை பெருமை கொள்கிறது.

இந்தப் பணியில் உறுதுணையாக இருந்து பணியாற்றிய பேராசிரியர் ம.ரா.போ. குருசாமிக்கும், அவருக்கு உதவியாகப் பிழைதிருத்தம் முதலான பணிகளை உவப்போடு செய்த பேராசிரியர் இருசுப் பிள்ளை, புலவர்மணியன், பேராசிரியர் தரணி பாஸ்கர், முனைவர் மனோன்மணி ஆகியோர்க்கும் எம் நன்றி உரியது.

வெளியிட்டுள்ள நூல்களை இளைஞர் உலகம் ஏற்றுப் போற்ற வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறோம்.

இராமானந்த அடிகளார் அறக்கட்டளை
கோயமுத்தூர்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

நுழையுமுன் ஒரு சொல்

நரை திரை இன்றி இளமை நலத்தோடு விளங்கிய முதியவர் பிசிராந்தையார்; அவர் தம் இளமைத் தோற்றத்துக்குப் பல காரணம் சொல்லியுள்ளார். அவற்றுள் ஒன்று: 'சான்றோர் பலர் யான் வாழும் ஊரே!' அதாவது, 'நான் வாழும் ஊரில் சான்றோர்கள் பலர் வாழ்கின்றனர்; அதனால் நரை திரை மூப்புத் தோன்றாமல் நான் வாழ்கிறேன்' என்கிறார். வாழும் முறையாலும் வழங்கும் மொழிகளாலும் மனநலம் காத்தவர்கள் அந்தச் சான்றோர்கள். அவர்களுடைய வாழ்க்கையைப் பார்த்தும் வாசகங்களைக் கேட்டும் பிசிர் என்ற ஊரில் இருந்தவர்கள் மனவளம் பெற்றிருந்தார்கள். மனவளம் பெற்றமையால் வாழ்க்கையில் நிறைவு இருந்தது. பொறாமை, பொய் போன்ற தீமைகள் சாராமல் அன்பு, அருள், அறம் போன்ற நல்லவற்றில் நாட்டம் கொண்டவர்களுக்கு முதுமை நோய் வாராது. இது பெரியோர் அனுபவ மொழி.

அத்தகைய சான்றோர்களின் வாக்கு, வாழ்வு, வழிகளைத் தெரிந்து போற்றினால், சமூக வாழ்வு சிறக்கும்; குறிப்பாக, இளைஞர்கள் நலம் பெற்று, நாட்டை நன்கு வளர்ப்பார்கள்.

இந்தக் குறிக்கோளை நெஞ்சில் நிறுத்தித் தமிழகத்துச் சான்றோர் சிலரைப் பற்றி நூல்கள் வெளியிடும் முயற்சியில் உருவானது இது.

நல்லிளைஞர் மனவளம் பெற்று - அறிவு, அறம், அன்பு, பண்பாடு ஆகியவற்றைப் பேணி, நாட்டுக்கு நலம் செய்வர் என்ற நம்பிக்கையோடு அருட்செல்வர் டாக்டர் நா. மகாலிங்கம் அவர்கள் இந்த நூல் வரிசை பற்றித் திட்ட மிட்டார். அவர் தந்த திட்டத்தின் பயன் மக்களைச் சென்று அடைய நூல்களை வெளியிடும் பொறுப்பைப் பொள்ளாச்சி என்.ஜி.எம். கல்லூரி* நிர்வாகம் ஏற்றுக் கொண்டது.

பயன் பெறுக! பயன் பெறுக!

ம.ரா.போ. குருசாமி
ஒருங்கிணைப்பாளர்

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

*முதற் பதிப்பிற்கான செய்தி

பெருமானுக்குத் தொடுத்த பூமாலையைத் தான் முதலில் பூண்டு அனுப்பும் செயலே கோதையை ஆண்டாள் ஆக்கியது. அவள் சூடிக் கொடுத்தனுப்பும் மாலையே தமக்கு உகப்பு - உவப்பு எனப் பெருமாளே திருவாய் மலர்ந்தருளிடும் அளவுக்கு உயர்ந்தவள் - உடையவருக்குத் தங்கை என வைணவர் போற்றும் மாண்பினள். ஆண்டாள் அருளிய திருப்பாவை ஓதாதவர்களை வையம் சுமப்பது வம்பு என்ற கணிப்புக்கு உரிய பாசுரங்களை அருளிய பெருமாட்டி. அனத்தியயன காலம் எனப்படும் பருவத்தில் கூட ஆண்டாள் திருப்பாவை சாதிப்பது வைணவ மரபு.

ஆண்டாளைப் பற்றி நமக்கு நூல் உருவாக்கித் தந்தவர் முனைவர் திருமதி நிர்மலா மோகன். தென் தமிழ் நாட்டில் தம் கணவரோடு இவர் ஏறாத பட்டிமன்றம் இல்லை எனுமளவுக்கு நாவீறு படைத்தவர்; மதுரைத் தமிழ்ச் சங்கக் கல்லூரிப் பேராசிரியர்.

பெருமாள் திருமொழியை அருளிய குலசேகர ஆழ்வார் 'பெருமாள்' என்றே சிறப்பிக்கப்படுபவர். வைணவ அரங்கிலே திருமாலைத் தவிரப் 'பெருமாள்' என்றே சிறப்பிக்கப்படுவோர் இருவர்; குகப் பெருமாள், குலசேகரப் பெருமாள். திருவோடம் செலுத்தி இராமபிரானுக்கு இளவல் ஆனவர் கங்கை வேடராகிய குகப் பெருமாள்; திருமாலின் சன்னிதியில் - யாரேனும் ஒருவராக - ஏதேனும் ஒன்றாக இருக்க வேண்டுமென்ற வேட்கையால் பக்தி நலம் கனிந்தவர், குலசேகரர். திருமால் திருக்கோவில்களில் கருவறைப் படிக்கு என்றென்றும் குலசேகரப் படியெனவே பெயர் தந்த பெருமித நம்பிகள் இவ்வாழ்வார்!

குலசேகர ஆழ்வாரைப் பற்றி நமக்கு நூல் எழுதி உதவியவர் டாக்டர் கா. அரங்கசாமி ஆவார்; பயிலும் காலத்திலிருந்தே பக்தியுணர்வோடு பைந்தமிழ் பயின்ற இவருக்கு இராமாயண ஆய்வின் முதிர்ச்சிக்கு முனைவர் பட்டம் வழங்கிப் பெருமை கொண்டது திருப்பதி திருவேங்கடவன் பல்கலைக்கழகம்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

கவிதை நாடகத்தில் தத்துவச் செழிப்புச் செறிந்துள்ள படைப் பிலக்கிய நாயகர் இவர்; சமய ஊற்றமும் தனித்தமிழ் ஈர்ப்பும் கொண்ட நாவலர்; அரசினர் கல்லூரிகளில் பணியாற்றிய பேராசிரியர்.

திருப்பணி நடந்திடத் திருடவும் துணிந்தவர் **திருமங்கை** ஆழ்வார். இவர் வரலாற்றைத் துப்பறியும் புதினமாகவே உருவாக்கிட முடியும். அந்த அளவுக்குத் துணிவும் செயல் வேகமும் கொண்ட இவ்வாழ்வாரின் பாடல்களில் தெறிப்பான தொடர்கள் அணி வகுத்து நிற்கும். 'திருமங்கை மன்னன்' திருமாலுக்குச் சேவகன்; உலகத்துக்கு மன்னன்; உடையவனுக்குத் தொண்டர். திருவரங்கம் பெரிய கோயிலுக்கு இவ்வாழ்வார் செய்த திருப்பணி இன்றும் வரலாற்றுப் பதிவாகி நிலைபெற்றுள்ளது.

திருமங்கையாழ்வார் பற்றி நூல் உதவியவர் **முனைவர் அமுதன்** அவர்கள். தமிழ் அமுதம் பருகிய பெருமிதத்தால் பழைய இயற்பெயரைத் துறந்து 'அமுதன்' ஆனார். கம்ப ராமாயணத்தை வைணவக் களஞ்சியமாகத் தம் ஆய்வு வன்மையால் நிறுவியவர் இப்பேராசிரியர்; வைணவ நுட்பங்களில் தெளிவு பெறுவதற்காகவே வடமொழியும் பயின்றவர்; பொள்ளாச்சி ந.க.ம. கல்லூரியில் தமிழ்த்துறைப் பணியாற்றி ஓய்வு பெற்ற பின்னும் அக்கல்லூரியின் முதுகலைத் தமிழ்க் கல்வியை வழிநடத்தும் முதுபெரும் பேராசிரியர். எழுத்துப் பணியாலும் பேச்சுப் பணியாலும் தமிழ் பரப்பும் புலவர் இவர்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

தொகுதி மூன்று

ஆண்டாள்

முனைவர் நிர்மலா மோகன்

குலசேகர ஆழ்வார்

முனைவர் கா. அரங்கசாமி

திருமங்கையாழ்வார்

முனைவர் அமுதன்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

ஆண்டாள்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

ஆண்டாள்

பொருளடக்கம்

1.	பிஞ்சாய்ப் பழுத்தாள்	-	1
2.	பாவை நோன்பும் திருப்பாவையும்	-	19
3.	திருப்பாவையில் வைணவக் கொள்கைகள்	-	30
4.	திருப்பாவை - இலக்கிய நயம்	-	62
5.	நாச்சியார் திருமொழி - அமைப்பும் அழகும்	-	73
6.	முடிவுரை	-	121

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

ஆண்டாள்

1. பிஞ்சாய்ப் பழுத்தாள்

" ஆண்டாள் திருமாலுக்குப் பூமாலை, பாமாலை ஆகிய இரண்டினாலும் அருச்சனை செய்தாள். இவ்விரண்டையும் இறைவன் திருவடியிலே ஆத்ம சமர்ப்பணம் செய்து அரங்கனையே மணாளனாக அடைந்தாள் "

- தேவராஜன் *

ஒரு சமயம் திருப்பாற்கடலில் பரமனுக்குப் பணி செய்து கொண்டிருந்த மண்மகள் பரமனிடம், 'மண்ணுலகில் தேவரீருக்கு ஏத்தகைய தொண்டு செய்பவர்களிடம் அன்பு அதிகம்?' என்று வினவினாள். அதற்குப் பெருமான் 'தனக்குப் பூமாலை மற்றும் பாமாலை சமர்ப்பிப்பவர்களிடம்தான் அன்பு அதிகம்' என்று விடையிறுத்தான். உடனே மண்மகள், தனக்கும் அத்தகைய தொண்டு செய்யும்படியான பேறு தரும்படி வேண்ட, பரமனும் அதற்கு ஒப்புக்கொண்டு ஆசி வழங்கினான்.

பிறகு, 'இந்தப் பூலோகத்தில் எந்த இடத்தில் யாருக்குக் குமரியாகத் தோன்றலாம்' என்று யோசித்தாளாம் பூமிதேவி. 'பெரியாழ்வாருக்குப் புதல்வியாக வளர்ந்தால்தான் எண்ணிய கைங்கரியம் இனிது நிறைவேறும்' என்று நினைத்து அப்பெரியாருடைய ஊரான ஸ்ரீவில்லிபுத்தூரில் அவதரிக்க வேண்டுமென்று தீர்மானித்தாளாம்.[1]

---

* வைணவமும் ஆழ்வார்களும் - பாகம் 2. ப. 704

1. தேவராஜன். வைணவமும் ஆழ்வார்களும். ப. 693

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

பெரியாழ்வாரின் ஊரான ஸ்ரீவில்லிபுத்தூர் 'மல்லிநாடு' என்ற செந்தமிழ் நாட்டின் பகுதியைச் சேர்ந்தது. இத்தலத்தை வடநூலார் 'வராக க்ஷேத்திரம்' என்று சொல்லுவர். ஹிரண்யாட்சன் என்ற ஒரு கொடுங்கோல் அரசன் பூமிக்குப் பாரமாய்ச் சாதுக்களுக்கெல்லாம் பகைவனாய், எத்தனையோ கொடுமைகளையும் பயங்கரச் செயல்களையும் செய்துகொண்டுவந்தான் என்றும், அப்பேர்ப் பட்ட ஹிரண்யாட்சனைப் பகவான் வராக வடிவங்கொண்டு வதம் செய்த இடம்தான் ஸ்ரீவில்லிபுத்தூர் என்றும் கூறுகிறது திருவில்லிபுத்தூர்த் தல புராணம். இந்தப் பகுதியை மல்லி என்ற பெண்ணரசி ஒரு காலத்தில் ஆண்டுவந்தாள். எனவே, இத்தலத்திற்கு 'மல்லிநாடு' என்றும் ஒரு பெயர் உண்டு. மல்லிராணிக்கு இரண்டு புதல்வர்கள். மூத்தவனுக்கு வில்லி என்று பெயர். மல்லி நாட்டிலுள்ள வடேச்வரபுரம் என்னும் பழைய நகரத்தை வில்லி என்பவன் புதுப்பித்ததால், அந்த நகரத்திற்கு ஸ்ரீவில்லிபுத்தூர் என்ற புதுப்பெயர் வந்தது.[2]

" கோதை பிறந்தஊர் கோவிந்தன் வாழூமூர்
சோதி மணிமாடந் தோன்றுமூர் - நீதியால்
நல்லபத்தர் வாழூமூர் நான்மறைகள் ஓதும்ஊர்
வில்லிபுத்தூர் வேதக்கோன் ஊர் "

என்று இவ்வூர் புகழப்படுகின்றது. திருவில்லிபுத்தூருக்கு ஓர் அணியாக விளங்கினார் விஷ்ணுசித்தர். திருவில்லிபுத்தூர்க் கோயிலில் உள்ள வடபத்ரசாயிக்குப் பாமாலைகளும் பூமாலைகளும் சாற்றித் தொண்டு செய்யும் இவரைப் 'பெரியாழ்வார்' என்றும், 'வில்லிபுத்தூரார்' என்றும், 'பட்டர்பிரான்' என்றும் அழைப்பர். இத்தகைய சிறப்பு மிக்க பெரியாழ்வாருக்கு ஒரு குழந்தையாக, திருமகளாகத் தோன்றினார் பூமி தேவியாகிய மண்மகள். திருவில்லிபுத்தூரில் இறைவனுக்கு மலர்மாலை கட்டித் தருவதற்காக அமைக்கப்பட்ட நந்தவனத்தில், துளசிச் செடிக்கு அருகில், நள ஆண்டு ஆடி மாதம் வளர்பிறையில், சதுர்த்தசி திதியில் செவ்வாய்க் கிழமையன்று பூர நட்சத்திரத்தில் தோன்றினார் ஆண்டாள். 'இன்றோ திருவாடிப் பூரம் எமக்காக அன்றோ இங்காண்டாள் அவதரித்தாள்' என்ற மணவாள மாமுனிகளின் திருவாக்கால் இதனை அறியலாம்.[3]

2. பி.ஸ்ரீ., - ஆண்டாள், பக். 14-15.
3. உபதேசரத்தினமாலை - ஆண்டாள் வைபவம், திருப்பாவை வ்யாக்யானம்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

மிதிலை அரசனான சனகன் யாக பூமியை ஏற்படுத்துவதற்காக நிலத்தை உழும்போது கொழுமுனையில் சீதாபிராட்டியார் அகப்பட்டதாகக் கூறுவார் கம்பர்[4]

அதைப்போல் பெரியாழ்வாருக்குச் சீதேவி - பூதேவியின் கூறாக இப்பெண் குழந்தை கிடைத்தாள். மக்கட் செல்வம் வாய்க்கப்பெறாத பெரியாழ்வாருக்கு இஃது இறைவன் கொடுத்த செல்வமாகத் தோன்றியது. அவர் அக்குழந்தையைத் தம் மகளாகப் பாவித்துக் 'கோதை' எனப் பெயரிட்டு வளர்க்கலானார்.

பெரியாழ்வார் கண்ட பூங்கொடி

பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார், ஆண்டாள் ஆகிய நால்வரையும் 'அயோனிஜர்'கள் என்று கூறுவர். 'அயோனிஜம்' என்றால் கருப்பத்தினின்று தோன்றாதவை என்று பொருள்' என்பர்.[5] 'ஸ்ரீதேவியின் அவதாரமாகிய சீதாதேவியைப் போல் பூதேவியின் அவதாரமாகிய ஆண்டாளும் பெண்களின் கர்ப்பத்திலே தோன்றாமல், பூமியின் கர்ப்பத்திலே தோன்றினாள் என்பது ஸ்ரீ வைஷ்ணவர்களின் அபிப் பிராயம்' என பி.ஸ்ரீ.யும் இச் செய்தியை எடுத்துரைக்கிறார்.[6]

ஆண்டாள் அவதரித்த காலம்

ஆழ்வார்களின் வரலாறு 'பிரபன்னாமிருதம்', பிரமதந்திர சுதந்திரசீயர் இயற்றிய 'குரு பரம்பரை', கருடவாகன பண்டிதர் இயற்றிய 'திவ்யசூரி சரிதை' முதலான நூல்கள் பலவற்றிலும் கூறப்பட்டுள்ளது.

'ஆழ்வார்கள் பன்னிருவர். இப்பன்னிருவரையும் வரிசைப் படுத்துமிடத்துப் பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார்

4. கம்பராமாயணம், பாலகாண்டம் - கார்முகப் படலம், பா. 17.
5. தேவராஜன், மு.நூ., ப. 694.
6. பி.ஸ்ரீ., மு.நூ, ப. 14

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

ஆகிய மூவரும் முதலாழ்வார்களென முன்னிற்கின்றனர். ஆகவே, முதலாழ்வார்கள், திருமழிசையாழ்வார், குலசேகராழ்வார், பெரியாழ்வார், ஆண்டாள், தொண்டரடிப் பொடிகள், திருப் பாணாழ்வார், திருமங்கை மன்னன், நம்மாழ்வார், மதுரகவி என்பதே கால வரையறை பற்றிய முறை எனக் கொள்ளலாம்' என்பர் ஈ.எஸ். வரதராஜ ஐயர்.[7]

இவ்வாழ்வார்கள் அனைவரும் ஆசாரியருள் தலைவரான நாதமுனிகள் காலத்திற்கு முற்பட்டவர் என்பதும், அந்நாத முனிகள் கி.பி. 823-இல் அவதரித்தவர் என்பதும் 'பிரபன்னாமிருதம்', 'கோயிலொழுகு' முதலிய நூல்களால் தெரியவரும் செய்தியாகும். எனவே, ஆழ்வார்கள் வாழ்ந்த காலம் ஐந்தாம் நூற்றாண்டு முதல் எட்டாம் நூற்றாண்டுக்குள் என்று கொள்வது பொருத்தம் உடையதாகும்.

குரு பரம்பரைகளில் ஆண்டாள் தோன்றிய திங்களும், நட்சத்திரமும் காணப்படுகின்றனவே அன்றி, ஆண்டு கூறப்பட வில்லை. ஆழ்வார்கள் கால நிலை குறித்து ஆராய்ச்சி செய்த பேரறிஞர் மு. இராகவையங்கார், ஆண்டாள் இயற்றிய திருப் பாவைப் பாடலில் இடம்பெறும் 'வெள்ளி எழுந்து வியாழம் உறங்கிற்று' என்ற சொற்றொடரைக் கொண்டு அவர்தம் காலத்தை உறுதிப்படுத்துகின்றார்.

அதிகாலையில் விடிவெள்ளி தோன்றியவுடன் எழுந்து தம் வேலைகளைத் தொடங்குவது என்பது இன்றும் நம் கிராமத்து மக்களிடம் காணப்படும் வழக்கம் ஆகும். அதுபோல் பாவை நோன்பு நோற்கப் புறப்பட்ட பெண்கள் ஒருவரை ஒருவர் எழுப்பிக் கொண்டு, மார்கழி நீராடுவதற்கு உரிய பாவைக்களம் புறப்படுகின்றனர் என்பதைக் குறிப்பிடும் ஆண்டாள், வெள்ளி யெழுதலையும், வியாழன் அஸ்தமித்தலையும் ஒருசேரப் பாடுகின்றாள். இக்குறிப்பை வைத்து மு. இராகவையங்கார் கூறும் கருத்து வருமாறு:

'மார்கழிப் பௌர்ணமையன்று காலை 5 மணிக்கு முன் 165 முதல் 185 பாகைக்குள் வெள்ளி வியாழங்கள் எதிர்தோன்றும்படி நேர்ந்த நிகழ்ச்சி, பெரியாழ்வார் விளங்கிய 8-ஆம் நூற்றாண்டிலும் அதற்கு முன்னும் பின்னும் - அஃதாவது 7 முதல் 9-ஆம் நூற்றாண்டு முடிய - எந்த எந்த வருஷத்தில் உண்டாயிற்று என்பதை அறிய

7. மேற்கோள் : சி. பாலசுப்பிரமணியன், ஆண்டாள், ப. 17

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

விரும்பி வானசாஸ்திர அன்பர் சிலரை உசாவலானேன். அன்னோர் என் பொருட்டுப் பெரிதும் சிரமமெடுத்துக் கணித்துக் கண்டு தெரிவித்த காலக்குறிப்புக்கள் அடியில் வருமாறு:

மார்கழிப் பௌர்ணிமையன்று வைகறையில் வெள்ளியெழ வியாழமுறங்கிய காலம்

நூற்றாண்டு	கி.பி.வரு.	மாதந்தேதி		வியா.வெள். தூர அளவு	மணி
7	600	நவம்பர் மீ	27 ஏ	171°	3-20
8	731	டிஸம்பர் மீ	18 ஏ	177°	3-50
9	885	நவம்பர் மீ	25 ஏ	180°	5-8
	886	டிஸம்பர் மீ	14 ஏ	165°	5-20

.....பெரியாழ்வார் காலமாகப் பெறப்பட்ட 8-ஆம் நூற்றாண்டில் 'வெள்ளியெழுந்து வியாழமுறங்கிய' நிகழ்ச்சி ஒரே முறைதான் வந்துள்ளது. அஃதாவது 731-ஆம் வருஷம் டிசம்பர் மாதம் 18ஏ அதிகாலை 3-50 முதல் 4 வரையுள்ள மணி ஆகும். திருப்பாவை கூறும் வெள்ளி வியாழங்களின் உதயாஸ்தமனங்கள் நிகழ்ந்த காலமாக மேலே பெறப்பட்ட 731-ஆம் ஆண்டைக் கொண்டு நோக்கும்போது, 716-ஆம் வருஷத்துத் திருவாடிப்பூரம் ஆண்டாள் அவதார தினமாவதற்கு மிகவும் ஏற்றதாதல் காணலாம். 716-இல் அவதரித்த கோதைப் பிராட்டியார் 731-இல் தம் திருப்பாவையை அருளிச் செய்தவராயின், 15-ஆம் பிராயம் அப்போது அவர்க்கு நடைபெற்றது என்பது நன்கு பெறப்படும்.'"[8] (இக்கருத்தை பேரா. அ.ச.ஞ. மறுத்துள்ளார் காண்க : 'நான் கண்ட பெரியவர்கள்').

இக்கருத்தினையே 'இலக்கிய சாஸன வழக்காறுகள்' என்னும் நூலிலும் வலியுறுத்திக் கூறியுள்ளார் மு. இராகவையங்கார்.[9] இவருடைய கருத்தினையே ஈ.எஸ். வரதராஜ அய்யர் (தமிழ் இலக்கிய வரலாறு. பக், 283-284), இ. தேனையா (ஸ்ரீவில்லி புத்தூர்த் தல வரலாறு, பக். 48-49), பண்டித பு.ரா.புருஷோத்தமநாயுடு (கலைக் களஞ்சியம், தொகுதி 1, ப. 362) ஆகியோரும் ஏற்றுக் கொண்டுள்ளனர்.

8. மு.இராகவையங்கார், 'ஸ்ரீ கோதையார்', ஆழ்வார்கள் காலநிலை, பக். 80-83
9. மு.இராகவையங்கார், இலக்கிய சாஸன வழக்காறுகள், பக். 125

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

பேராசிரியர் ந. சுப்பு ரெட்டியார், ஆண்டாள் வாழ்ந்த காலம் கி.பி. 850-ஐச் சுற்றிய ஆண்டுகளாகக் கொள்வர்.[10] நாலாயிர திவ்வியப் பிரபந்தத்தை வெளியிட்ட மயிலை மாதவதாசனும், திருவெம்பாவை, திருப்பாவை, திருப்பள்ளியெழுச்சிக்கு உரை விளக்கம் எழுதிய பாலூர் கண்ணப்ப முதலியாரும் இக்கருத்தினரே ஆவர். ஆயின் இவர்களுக்கு முன்னால் 'ஆண்டாள் வரலாறும் நூலாராய்ச்சியும்' என்னும் நூல் எழுதிய கா. சுப்பிரமணிய பிள்ளை, "திருவல்லப தேவனென்னும் பாண்டியன் அக்காலத்தில் மதுரையில் ஆட்சி செய்ததாகத் தெரிகின்றது. அவ்வரசன் கி.பி. 830 முதல் 862 வரை அரசு புரிந்தான். ஆதலால் ஆண்டாள் காலத்தைக் கலியுகம் 98-ஆவது ஆண்டு என்று குறிக்கும் வைணவ சம்பிரதாயம் சரித்திரத்திற்குப் பொருந்துவதில்லை" என்று கூறும் கருத்து ஈண்டுச் சிந்திக்கற்பாலது. எனவே, "ஆண்டாள் எட்டாம் நூற்றாண்டில் அவதரித்தார் எனும் கொள்கை நேரிதாகும்" என்று உரைப்பர் சி. பாலசுப்பிரமணியன்.[11]

'சுரும்பார் குழற்கோதை'

திருவில்லிபுத்தூர் ஆலயத்தில் குடிகொண்டிருக்கும் பரந் தாமனுக்கு நாள்தோறும் புனித மலர்களால் தொடுக்கப்பட்ட மாலையை அணிவிப்பதைத் தமது வாழ்க்கைக் கடமையாகக் கொண்டு வாழ்ந்தவர் விஷ்ணுசித்தர் என்று அழைக்கப்பட்ட பெரியாழ்வார்.

ஒரு நாள் பெரியாழ்வார் திருமாலுக்கு மாலை கட்டுவதற்கு ஆலய நந்தவனத்தில் மலர் பறித்துக்கொண்டிருந்தபோது, திருத் துழாய்ச் செடி அருகில் பொன் விக்கிரகம் போன்ற பெண் குழந்தை ஒன்று கை கால்களை உதைத்தவாறு விளையாடிக் கொண்டிருப் பதைக் கண்டார். பெரியாழ்வார் அடைந்த மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை. இறைவன் தமக்குக் கொடுத்த வரமாகக் கருதி, அக் குழந்தையைத் தம் கைகளில் அள்ளி எடுத்தார்; தம் மனைவியாகிய விரஜையிடம் கொடுத்தார்; அவரும் அந்தத் தெய்வீகக் குழந்தையைப் பெருமாளே தமக்கு அளித்ததாகக் கருதி, பக்தியும் காதலும் மிக, குழந்தையை அணைத்துத் தொட்டிலில் இட்டார்.

" இன்றோ திருவாடிப் பூரம் எமக்காக
அன்றோ இங்குஆண்டாள் அவதரித்தாள் - குன்றாத
வாழ்வான வைகுந்த வான்போகந் தன்னையிகழ்ந்து
ஆழ்வார் திருமகளா ராய் " (உபதேசரத்தின மாலை)

10. ந. சுப்பு ரெட்டியார், வைணவமும் தமிழும், ப. 109.
11. சி. பாலசுப்பிரமணியன், மு.நூ. ப. 23

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

என்று மணவாள மாமுனிகள் கூறுவது போல், நள வருடம் ஆடிமாதம் பூரம் திருநாள் அன்று அவதரித்த அக்குழந்தைக்கு, 'கோதை' எனப் பெயர் சூட்டினார் பெரியாழ்வார். திருத்துழாய் அடியில் கிடந்த போது அம்மகவின் மேல் உதிர்ந்த மலர்களில் வண்டுகள் மொய்த்தலும், இசைபாடி எழுதலுமாய் இருந்தமையின் அதற்குச் 'சுரும்பார் குழற்கோதை' எனப் பிள்ளைப் பெயர் வைத்தாராம் பெரியாழ்வார்.[12]

அரங்கன்மீது கொண்ட ஆராக் காதல்

இராமாயணம், மகாபாரதம், ஹரிவம்சம், விஷ்ணு புராணம் போன்ற நூல்களில் திருமால்பற்றிக் கூறப்படும் கதைகளையும் அவற்றின் சிறப்புக்களையும் முதல் ஆழ்வார்கள் மூவர், திருமழிசைப் பிரான், தொண்டரடிப்பொடி யாழ்வார் முதலானோரின் வரலாற்றையும் அவர்களது பக்திச் சிறத் தினையும் கோதைக்கு ஊட்டி ஊட்டி வளர்த்துவந்தார் பெரியாழ்வார். தந்தையைப் போன்றே கோதையும் இளம் பருவத்திலிருந்தே கண்ணன்மீது பக்தி கொண்டாள். தந்தை ஊட்டிய ஆன்மிக அறிவு வளர வளர, திருமால்மீது பக்தியும் வளர்ந்தது.

கோதை சின்னஞ் சிறுமியாக, சிற்றாடை கட்டும் பருவத் தினளாய், மழலை மாறாமல் விளையாட்டிலும் கேளிக்கையிலும் பொழுதுபோக்கினாள். சிற்றில் கட்டி விளையாடும்போதும், அரங்கனுக்குத் தனிஅறை அமைக்கின்றாளாம்; அங்குப் பெருமான் அமர்கின்றானாம்; அவனுடைய சங்கு, சக்கரம், தண்டு, வாள், வில் ஆகிய கருவிகளை வரைந்து வைப்பாளாம். இக்காட்சியைப் பெரியாழ்வார் மிகுந்த வியப்புடன் தம் பாடல்களில் எதிரொலிக்கின்றார்:

" பொங்கு வெண்மணற் கொண்டு சிற்றிலும் முற்றத்து இழைக்கலுறில்
சங்குசக்கரம் தண்டுவாள் வில்லும் அல்லது இழைக்கலுறாள்
கொங்கை இன்னம் குவிந்து எழுந்தில; கோவிந்தனோடு இவளைச்
சங்கை யாகிஎன் உள்ளம் நாள்தொறும் தட்டுளுப்பு ஆகின்றதே "[13]

இயற்கைப் பொருள்களில் எல்லாம் பெரியாழ்வாரைப் போல் கோதையும் அழகனான கண்ணனையே கண்டாள். குழவிப் பருவம் நீங்கிக் குமரிப் பருவம் அடைகின்றாள் கோதை. ஒரு நாள் மலர் பறிக்க நந்தவனத்திற்குச் சென்றபோது அவள், ஒரு மரத்தைச்

12. மு. நூ. ப. 23
13. பெரியாழ்வார் திருமொழி. நாலா. பா. 288

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

சுற்றிப் படர்ந்திருந்த பூங்கொடி ஒன்றைக் கண்டாள். தனக்கும் ஒரு கொழு கொம்பைப் பற்றிப் படர வேண்டிய வயது வந்து விட்டது என்பதை உணர்ந்துகொண்டாள்;

" கோல்தேடி ஓடும் கொழுந்ததே போன்றதே
மால்தேடி ஓடும் மனம் "[14]

என்று பூதத்தாழ்வார் பாடுவதைப்போல் ஆனாள் கோதை. கோதையின் இந்த மனமாற்றத்தைப் பெரியாழ்வார் கண்டும் காணாததுபோல் இருந்தார்.

வேணுகோபாலன்தான், தான் படர வேண்டிய கொழு கொம்பு என்பதை உணர்ந்தாள் கோதை; மனத்தில் உறுதியும் கொண்டாள். ஒரு நாள் அவளுக்குச் சந்தேகம் ஒன்று தோன்றியது. தான் திருமாலுக்கு ஏற்ற பெண்தானா என்ற எண்ணம் தோன்றியது; தன்னை மிகவும் அற்புதமாகப் பல்வேறு கோலங்களில் அலங்கரித்துக்கொள்கிறாள்; கழுத்திலே காறை என்ற அணியைப் பூட்டிக் கொள்கிறாள்; கண்ணாடியில் தன் அழகைக் கண்டு மகிழ்கிறாள்; கை வளையல்களைக் குலுக்கிப் பார்க்கிறாள்; ஓர் அழகான புடைவையை உடுத்திக்கொள்கிறாள்; கோவைப் பழம் போன்ற தன் சிவந்த வாயையும் கண்ணாடியில் பார்த்துத் திருத்துகிறாள்; எப்படியோ தேறுதல் அடைந்தவளைப் போல் ஆயிரம் நாமம் கொண்ட தன் காதலனின் பெயரைச் சொல்லிப் பிதற்றுகிறாள்; இப்படியெல்லாம் கலங்கித் தவிக்கும் தம் அருமை மகளைக் கண்டு திடுக்கிட்டுப் போகிறார் பெரியாழ்வார். தம் மகள் படும் பாட்டைக் கண்ட பெரியாழ்வார் தாமே ஒரு பெண்ணின் தாயாக நின்று, அந்தத் தாய் படும் வேதனையைத் தம் பாடல்களில் வெளிப்படுத்துகின்றார்:

" காறை பூணும்; கண்ணாடி காணும்; தன் கையில் வளைகுலுக்கும்;
கூறை உடுக்கும்; அயர்க்கும்; தன்கொவ்வைச்செவ் வாய்திருத்தும்;
தேறித் தேறிநின்று ஆயிரம்பேர்த் தேவன் திறம்பி தற்றும்;
மாறில் மாமணி வண்ணன்மேல் இவள் மால்உறு கின்றாளே "[15]

'பெரியாழ்வார் திருமொழி' மூன்றாம் பத்தில் 'ஐய புழுதி' எனத் தொடங்கும் பதிகத்தில், 'மாயன் மாமணி வண்ணன் மேல் இவள் மாலுறுகின்றாளே' என்றும், 'கொங்கை இன்னும் குவிந் தெழுந்தில,

14. இரண்டாம் திருவந்தாதி. பா. 27 (நாலா. 2208).
15. பெரியாழ்வார் திருமொழி. நாலா. பா. 293

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

அதற்குள் கோவிந்தன்மேல் இவள் மையலுற்றாளே' என்றும் பலவாறாகப் புலம்புகிறார்; உலக வழக்கப்படி, கோதைக்குக் கல்யாணம் செய்துபார்க்கலாம் என்று தாம் நினைக்கையில், அவள் தன் மனத்தில் வேறு ஒரு கணக்கு வைத்திருக்கிறாளே என்று எண்ணுகிறார்.

" பெருப்பெருத்த கண்ணாலங்கள் செய்து பேணிநம் இல்லத்துள்ளே
இருத்துவான் எண்ணி நாமிருக்க இவளும் ஒன்று எண்ணுகிறாள் "[16]

என்று பலவாறாகப் புலம்புகிறார் பெரியாழ்வார். தம் மகள் கண்ணன் மேல் வைத்துள்ள காதலை அறிந்தே பெரியாழ்வார் இப்பாசுரத்தை இயற்றினாரோ என்று எண்ணத் தோன்றுகிறது.

'சூடிக் கொடுத்த சுடர்க்கொடி'

திருமாலையே தன் கணவனாகப் பெறவேண்டுமே யன்றி, வேறு மனிதர் எவரையும் மணப்பதில்லை என்ற உறுதியான கொள்கை கோதையின் மனத்தில் வலுப்பெறுகின்றது. எனவேதான், இறைவனுக்கு இடப்பெறும் பொருள்களைக் கண்ணுறும்போது அவை தனக்கும் உரிமையுடையன என்ற சிந்தனை அவள் மனத்தில் எழுகின்றது. வில்லிபுத்தூர் ஆலயத்தில் குடிகொண்டிருக்கும் பெருமானார்க்குச் செய்யப்படும் அலங்காரத்தை அடிக்கடி கண்டு மெய்ம்மறந்தவள் கோதை. அவருடைய கழுத்தில் நீண்ட பெரியதொரு மலர் மாலை அழகுறத் தொங்கிக் கிடக்கும் காட்சி அவள் மனக் கண்முன் எழும். அந்த மாதிரியான பெரிய மாலை ஒன்று தனது கழுத்தை அலங்கரித்தால் திருமாலுக்குப் பொருத்தமாகத் தனது அலங்காரம் முழுமை பெற்றுவிடும் என்று கோதை நம்பினாள். எம்பெருமானுக்காகத் தந்தை தயார் செய்து வைத்திருந்த மாலை அவள் கண்ணில் பட்டது. பெரியாழ்வார் வீட்டில் இல்லாத சமயம் பார்த்து, அவர் தொடுத்து வைத்த மாலையை எடுத்து அணிந்துகொண்டு நிலைக் கண்ணாடியின்முன் நின்று தன் அழகை ரசித்துப் பார்த்தாள். கார்முகில் வண்ணனாகிய கண்ணனுக்குத் தான் ஏற்புடையவள் என்ற எண்ணம் அப்போது அவள் மனத்தில் தோன்றியது. அகமிக மகிழ்ந்து நின்ற கோதை, தந்தை திரும்பி வரும் நேரம் ஆகி விட்டதை உணர்ந்து அவசரம் அவசரமாகத் தான் சூடி மகிழ்ந்த பூமாலைகளைக் களைந்து பூக்குடலையில் முன் போலவே வைத்து

16. மு.நூ., பா. 295

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

விட்டாள். இதையறியாத பெரியாழ்வார் மாலையை எடுத்துச் சென்று எம்பெருமான் கழுத்தில் அணிவித்து வழக்கம்போல் அகமகிழ்ந்தார். அன்று முதல் கோதை அன்றாடம் தன்னை அலங்கரித்துக்கொண்டு தந்தை இறைவனுக்காகத் தொடுத்து வைத்திருக்கும் மாலையை அணிந்து அழகு பார்ப்பது என்பது வழக்க மாகிவிட்டது.

கோதையின் இவ்வழக்கம் நாள்தோறும் தொடர்ந்தது. இவ்விதமாக, கோதை சூடித் தரும் மலர்மாலை, நறுமணம் மிக்கு இருப்பதாகவும், மாலைகளைச் சூடும் எம்பெருமான் திருக்கோலம் முன்னிலும் பேரொளி பெற்றுத் திகழ்வதாகவும் அர்ச்சகர்களும் பிறரும் கண்டு வியந்து கூறினார். இதற்குக் காரணம் விஷ்ணுசித்தரின் பரமபக்தியே என்று எண்ணி, அவர்மீது பெருமதிப்புக் கொண்டனர். ஆயினும், உண்மை நிலையை உணர்த்த இறைவன் திருவுள்ளம் கொண்டான்.

ஒரு நாள், ஆழ்வார் தாம் கட்டிய மாலையில் நீண்ட தலைமுடி ஒன்று இருந்ததைக் கண்டு அஞ்சித் தம் மகளை வினவ, அவளும் நடந்ததை மறைக்காமல் கூற, அதைக் கேட்டு, ஆழ்வார் பதறினார், கதறினார். பெருமானிடம் தம் பொருட்டுத் தம் மகள் செய்த பிழையைப் பொறுத்தருளும்படி வேண்டினார்; அன்று எம்பெருமானுக்கு மாலை சாத்தாமலேயே இருந்துவிட்டார். அன்று நள்ளிரவில், இறைவன் ஆழ்வாரது கனவில் தோன்றி, ஆழ்வார் மாலை கொண்டு வராததற்கு உரிய காரணத்தை வினவ, ஆழ்வார் தம் மகளது அறியாமைச் செயலைக் கூற, 'அத்தகைய சூடிக் கொடுத்த தூமலர்த் தாமமன்றிப் பிறிதெதுவும் தமக்குப் பிரியமற்றதாம்' என்று பெருமான் பணித்தான். துயில் நீங்கப் பெற்ற ஆழ்வார், பெருவியப்பும் உவப்பும் அடைந்து, 'தமக்கு மகளாகப் பின்னைகொல், நிலமாமகள்கொல், திருமகள்கொல் பிறந்திட்டாள்' என்று உணர்ந்து, அவள் சூடிக் கொடுத்த மாலையையே பெருமானுக்குச் சாத்தி வரலானார். அதுமுதல் 'சூடிக் கொடுத்தாள்' என்ற திருநாமம் கோதையார்க்கு வழங்க லாயிற்று.[17] திருமாலையே ஆட்கொண்ட காரணத்தால் 'ஆண்டாள்' என்றும், திருமாலுக்குரிய மலர் மாலையைத் தாம் சூடிக் கொண்டு அழகு பார்த்துப் பின்னர் இறைவனுக்குக் கொடுத்தது காரணமாக 'சூடிக் கொடுத்த நாச்சியார்' என்றும், 'சூடிக் கொடுத்த பொற்கிளி'

17. மு. இராகவையங்கார், ஆழ்வார்கள் காலநிலை, ப.67

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

என்றும் 'சூடிக் கொடுத்த சுடர்க்கொடியார்' என்றும் வழங்கப்பட்டார் கோதையார். அன்று முதல் பெரியாழ்வார் 'பெருமை மிகும் ஆண்டாளைப் பெற்ற பிரான்' ஆனார்; 'தொடை சூடிக் கொடுத்தாளைத் தொழுமப்பன்' எனப்பட்டார்.

'ஆண்டாள்'

ஒரு நாள், மாலையைத் தொடுத்து வைத்துவிட்டு வெளியே சென்றிருந்த பெரியாழ்வார் விரைவில் வீடு திரும்பினார். இல்லத்திற்குள் நுழைந்தவர் அங்கு வடபத்ரசாயி பெருமானுக்குச் சூட்ட வேண்டிய மாலையைக் கோதை சூடி அழகு பார்ப்பதைக் கண்டு திகைத்தார்; மனம் துடித்தார்; மகளைக் கண்டித்தார். மானிடர் சூடிய மாலையை மாதவனுக்கு எப்படிச் சூட்டுவது எனக் கலங்கி அன்று அம் மாலையை இறைவனுக்குச் சாத்தாமல் இருந்துவிட்டார். 'பல ஆண்டுகளாக நாள் தவறாமல் செய்து வந்த பணிக்குத் தடை ஏற்பட்டதே' என்று வருந்தி உண்ணாமல் இறைவனை வேண்டியபடியே படுத்துத் துயில் கொண்டார். நள்ளிரவில் அவர் ஒரு கனவு கண்டார். வடபெருங் கோயிற் பெருமான் அவர் கனவில் தோன்றி, 'அன்பனே! இன்று நீ எனக்கு மாலை கொண்டு வராததற்குக் காரணம் என்ன?' என்று கேட்க, ஆழ்வார் தம் மகள் செய்த பொருந்தாச் செயலை எடுத்துக் கூறி வருந்தினார். அது கேட்டுப் பெருமான், 'பெரியாழ்வாரே! கோதை சூட்டி அழகு பார்த்த மாலையே எமக்கு ஏற்புடையது. இனியும் அவள் சூடிப் பார்த்த மாலையையே கொண்டு வருவீராக' எனக் கூறி மறைந்தார்.

தூக்கம் நீங்கி விழித்தெழுந்த பெரியாழ்வார் பெரும் வியப்புற்றார். 'நம் மகளுக்கா இப்படி ஒரு பெரும் பேறு! பக்தை ஒருத்தி சூட்டி அழகு பார்த்த மாலையே வேண்டும் என்கிறானே பரந்தாமன்! என்ன பேறு பெற்றேன்!' என்று தமக்குத் தாமே சொல்லி மகிழ்ந்தார். கோதையின் பெருமையால் தமக்குப் பேரருள்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

பரிசல்லவா கிடைத்தது என்றெண்ணி மகிழ்ச்சிக் கடலில் மூழ்கினார்; கோதையின் முன் வந்து நின்று 'அம்மா, கோதாய்! நீ என்னை மட்டும் ஆளவில்லை; வடபத்ரசாயியான அந்த ரங்கமன்னாராம் எம்பெருமானையே ஆண்டு கொண்டாய்' என்று சொல்லி அவளது பெருமையை நினைத்து வணங்கப் போனார். கோதை துணுக்குற்று, 'தந்தையே, என்ன இது? என்னை நீர் வணங்கலாகுமா?' என்று அவரைக் கட்டி அணைத்து நிறுத்திக் கண்ணீர் உகுத்தாள். அப்போது ஆழ்வார், 'அம்மா கோதாய், நீ எம்பிரானுக்காகவே பூத்த கற்பக நறுமலர். நீ சூடிக் களைந்த மாலைகளையே எம்பெருமான் திருவுள்ளம் பற்ற விரும்புகிறான். நீ என்னை மாத்திரமன்று - இந்த உலகத்தையே மாத்திரமன்று - சர்வலோக சரண்யனான ஆண்டவனையே ஆண்டுவிட்டாய். எனவே, இன்று முதல் உனது பிள்ளைப் பெயராகிய கோதை என்பது மாறி 'ஆண்டாள்' என்றே உலகத்தாரால் அழைக்கப்படுவாய். அன்றியும் நீ சூடிக் களைந்த திருமாலைகளையே இறைவன் விரும்புவதால் 'சூடிக் கொடுத்த சுடர்க்கொடி' என்றும் போற்றப்படுவாய் என்று சொல்லி ஆனந்த சாகரத்தில் மகிழ்ந்தார். [18]

ஆண்டாளின் அருளிச் செயல்கள்

சூடிக் கொடுத்த சுடர்க்கொடியாகிய ஆண்டாள் பூமாலைகளை மட்டுமன்றிப் பாமாலைகளையும் பாட வல்லவராக விளங்கினாள். நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வந்த கோதையின் மனம் முழுவதும் அக் கடல்வண்ணனே நிறைந்து நின்றான்; அப்பெருமானை எப்பொழுது திருமணம் செய்து கொள்ளப் போகிறோம் என்பதைப் பற்றியே சிந்தித்தாள் கோதை. ஒரு நாள் திருவில்லிப்புத்தூரில் வாழ்ந்த வயதான பெண்களிடம் தான் எப்படித் திருமாலைச் சீக்கிரமாகத் திருமணம் செய்து கொள்ள இயலும் என்று வினவினாள். அதற்கு அவர்கள் துவாபர யுகத்தில் கோகுலத்தில் கண்ணன்மீது காதல் கொண்ட கோபியர்கள் அவனைப் பெறுவதற்காகக் காத்யாயனி நோன்பு நோற்று, அதன் பயனாய் அவனை அடையப்பெற்ற நிகழ்ச்சியினைக் கோதைக்கு எடுத்துக் கூறினார்கள். அதைக் கேட்ட கோதை, தானும் பாவை நோன்பு நோற்றுத் திருமாலைத் திருமணம் செய்ய உறுதி பூண்டாள். அவள் கற்பனையில் திருவில்லிபுத்தூரே ஆயர்பாடி ஆகியது. அங்குள்ள பெண்கள் கோபியர் கன்னிகளாயினர். வடபெருங் கோயில் நந்தகோபர் மாளிகை யாகிவிட்டது. வடபெருங்

18. கே.ஏ. மனவாளன், ஆண்டாள், பக். 18-19

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

கோயிலுடையான் கண்ணனாகக் காட்சி தந்தான். இங்ஙனம் பாவை நோன்பை அடிப்படையாகக் கொண்டு எழுந்ததுதான் 'திருப்பாவை' என்னும் இசைத்தமிழ்ப் பிரபந்தம். முப்பது பாடல்கள் கொண்ட இதுதான் ஆண்டாள் முதலாவதாக அருளிச் செய்த பிரபந்தம் ஆகும்.

ஆண்டாள் கண்ணபிரானைப் பெறுவதற்காக மார்கழித் திங்கள் முழுதும் நோன்பு நோற்கிறாள். கண்ணன் முகம் காட்டாததால் பிரிவுத் துயரில் வருந்திய அவள் தனக்கு ஏற்பட்ட அனுபவங்களைத் தொகுத்து வெளியிடுவதாக அமைந்துள்ளது 'நாச்சியார் திருமொழி' என்னும் பிரபந்தம். ஆண்டாளின் காதல் மிகுதியைப் புலப்படுத்தும் இப்பிரபந்தம் 143 பாடல்களைக் கொண்டதாக அமைந்துள்ளது. திருப்பாவை முப்பது பாசுரங்களும் நாச்சியார் திருமொழியில் அமைந்த 143 பாசுரங்களும் ஆக மொத்தம் 173 பாசுரங்கள் ஆண்டாள் அருளிச்செய்தன வாகும்.

'மானிடவர்க்கென்று பேச்சுப்படில் வாழகில்லேன்'

திருமணத்திற்கு ஏற்ற பருவம் வந்ததும், தகுதியான ஒருவரைத் தேர்ந்தெடுத்து மணமுடிக்க எண்ணினார் பெரியாழ்வார். ஆனால் கோதையோ, 'சங்கேந்தும் சங்கரற்கன்றி மானிடர்க்கு வாழ்க்கைப் படேல்' என்று மறுமொழி பகர்ந்தாள்.

> " ஊனிடை ஆழி சங்குஉத் தமர்க்குஎன்று
> உன்னித்து எழுந்த என்தட முலைகள்
> மானிடவர்க்கென்று பேச்சுப்படில் வாழகில்லேன்! " [19]

அதனால் செய்வது அறியாது திகைத்தார் பட்டர்பிரான். மகளின் மனநிலையை மாற்ற முடியாது என்று அறிந்த விஷ்ணுசித்தர், 'மகளே! நூற்றெட்டுத் திருப்பதிகளில் எம்பெருமான் எழுந்தருளியுள்ளார். அப்பதிகளுள் எந்தத் திருப்பதியில் கொலுவீற்றிருக்கும் திருமகனை நீ மணாளனாகத் தேர்ந் தெடுக்கின்றாய்?' என்று வினவினார். ஆண்டாளின் வேண்டுகோளுக்கு இணங்க, பெரியாழ்வாரும் ஒவ்வொரு பெருமானின் சிறப்புகளையும் எடுத்துக் கூறிக்கொண்டே வந்தார். திருவரங்கப் பெருமானது மகிமையைக் கேட்டவுடன், 'எப்பொருளுக்கும் எட்டாது நான்மறையின் சொற்பொருளாய் நிற்கும் மெய்ப்பொருளே - வயல்களில் பாய்ந்து, கரை

19. நாச்சியார் திருமொழி. பா. 1:5.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

புரண்டோடும் காவிரி நீர் சூழக் கோயில் கொண்டிருக்கும் அரங்கநாதரே - என் மணவாளர்' என்று திருவரங்கனையே மணக்கத் தான் உறுதி பூண்டிருப்பதைத் தந்தைக்குத் தெரிவித்தாள் ஆண்டாள். 'என் அரங்கத்து இன்னமுதர், குமல் அழகர், வாய் அழகர், கண் அழகர், கொப்பூழில் எழு கமலப்பூ அழகர்'[20] என்று அப் பெருமானின் அழகை மனக்கண்ணில் கண்டு களித்தாள். 'பொங்கு ஓதம் சூழ்ந்த புவனியும் விண்ணுலகும், அங்காதும் சோராமே ஆள்கின்ற எம் பெருமான், செங்கோலுடைத் திருவரங்கச் செல்வனார்'[21] என்று உடல் பூரித்தாள்.

ஆண்டாள் திருமணம்

அரங்கநாதனை அகத்தில் கொண்டு உருகும் மகளின் நிலை கண்டு வருந்திய பெரியாழ்வார், 'எம் பெருமானே! என் மகள் பொருட்டு நீ என்ன செய்யக் கருதியிருக்கிறாய்? அவள் ஆற்றாமல் புலம்புவதை நீ அறியாயா? இன்னும் நீ இரங்காமல் இருப்பது உன் பெருங்கருணைக்கு அழகோ?' என்று பலவாறு கூறிப் புலம்பினார்.

அன்று இரவு ஆழ்வார் கனவில் அரங்கன் தோன்றி, 'ஆழ்வீர்! உமது திருச்செல்வியைப் பெரிய கோயிலுக்கு அழைத்து வாரும்; அவளை நாம் ஏற்றுக்கொள்வோம்' என்று அருளிச் செய்தான். இதனால் ஆழ்வார் கவலை மறந்து ஆனந்தக் கூத்தாடினார். பெரியாழ்வார் கனவிலே தோன்றிய அரங்கன், திருவரங்கக் கோயில் பரிசனங்கள் கனவிலும் தோன்றி, 'நீங்கள் இசைச் கருவிகள் முழங்க, குடை, கவரி, இரத்தினப் பல்லக்குடன் சென்று, திருவில்லிபுத்தூரில் வாழும் விஷ்ணுசித்தரின் திருமகளை அழைத்து வாருங்கள்' என்று கட்டளையிட்டார். அவர்களும் அவ்வாறே சென்று பெரியாழ்வாரைச் சந்தித்து இறைவனது கட்டளையைக் கூறினர். பெருமகிழ்ச்சியுற்ற ஆழ்வார் தம் மகள் கோதையுட்ன் திருவரங்கத்திற்குப் புறப்பட்டார்.

அப்போது பாண்டிய நாட்டை ஆண்டு வந்த ஸ்ரீவல்லப தேவர் என்னும் மன்னர் அச்செய்தி கேட்டு மிக்க மகிழ்ச்சி கொண்டார். தாமும் திருமண விழாவை உடனிருந்து சிறப்பாக நடத்திக் களிகூர விரும்பினார்; உடனே, தம் காவலர்களை ஏவி, திருவில்லி புத்தூரிலுள்ள பெரியாழ்வார் ஸ்ல்லத்தி லிருந்து திருவரங்கத்தில் உள்ள திருவரங்கன் கோயில்வரை உள்ள நெடுவழியை

20. மு.நூ., பா. 11:2
21. மு.நூ., பா. 11:3

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

அழகுபடுத்தி அலங்கரிக்குமாறு ஆணையிட்டார். மன்னன் ஆணைப்படி அவ்வழி முழுதும் செம்மைப்படுத்தப்பட்டது. பூப்பந்தல்கள் அமைக்கப்பட்டன; தோரணங்கள் கட்டப்பட்டன; வாழை, கமுகுகள் நாட்டப்பட்டன. மன்னர் தம் பரிவாரங்களுடன் பெரியாழ்வார் இல்லத்திற்கு வந்து சேர்ந்தார்.

புனித நீராடி, புத்தாடை உடுத்தி, புது மணப்பெண் கோதை அழகுப் பதுமையாக இரத்தின சிவிகையில் அமர்ந்தாள். ஒரு பக்கம் மன்னரும், மறுபக்கம் பெரியாழ்வாரும், ஊராரும் புடைசூழ மணப்பெண் கோதை பயணம் மேற்கொண்டாள். போகும் வழியில் வடபெருமான் கோவிலுக்குச் சென்று வழிபட்டுப் பயணத்தைத் தொடர்ந்தனர்.

திருவரங்கம் திருக்கோயில் வாயிலில், பூரண கும்ப மரியாதையுடன் வாழ்த்தொலி முழங்க, கோதை நாச்சியார் திருக்கோயிலினுள் நுழைந்தாள். பெரிய பெருமாள் மண்டபத்தை அடைந்ததும், கோதை நாச்சியார், திருவரங்கப் பெருமானின் திருவழகைக் கண்டு, நாணத்தால் முகம் சிவக்க நாயகனைப் பார்த்தாள்; பெரிய பெருமானின் பேரழகு, இரும்பை ஈர்க்கும் காந்தம் போல ஆண்டாளைக் கவர்ந்தது. அப்போது அருகே வரும்படி குரல் ஒலித்தது. உடனே ஆண்டாள் அன்னமென நடந்து, திருமாலின் முன் சென்று நின்றாள். அப்போது அவள் உள்ளத்தில் ஆனந்தப் பேருணர்வு பெருகி நிறைந்தது. சற்று நேரத்தில் ஆண்டாள் நாச்சியார் ஒளிப்பிழம்பாக மாறித் திருவரங்கன் மார்பில் சென்று இணைந்தாள். இத்தெய்விகக் காட்சியைக் கண்ட பெரியாழ்வாரும் மன்னர் வல்லபதேவரும் ஏனையோரும் அரங்கநாதனையும் ஆண்டாளையும் வாழ்த்தினார்கள்.

பெரியாழ்வார் பெற்ற பேறு

திருவரங்கமுடையானுடன் தம் மகள் ஒன்றுபட்ட காட்சியைக் கண்டு இறும்பூது எய்தி நின்றார் பெரியாழ்வார். 'ஆழ்வீர், திருப்பாற்கடல் நாதன் போல் நீரும் நமக்கு மாமனா ராகிவிட்டீர். இனி, நீர் ஸ்ரீவில்லிபுத்தூருக்குத் திரும்பிச் செல்லலாம். உமது வழக்கப்படி இனியும் தொடர்ந்து எனக்குத் திருமாலைத் தொண்டு செய்து வாழ்வீராக. ஸ்ரீவில்லிபுத்தூரிலும் நாம் கோதையுடனேயே உறைவதாகக் கொள்ளலாம்' என்று அசரீரிக் குரல் மூலம் ஆண்டவன் பெரியாழ்வாருக்கு அருளிச்செய்தான். பெரியாழ்வாருக்கு, மாமனார் என்ற வகையில் தீர்த்தம்,

 CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

திருப்பரிவட்டம், திருமாலை, சடகோபம் முதலியவற்றைச் சாதிக்கச் செய்தான்.

ஒருபுறம் மகளைப் பிரிந்த துயரம், மறுபுறம் மகள் ஆண்டவனுடன் இரண்டறக் கலந்து விட்டதனால் ஏற்பட்ட பெருமிதம் ஆகிய உணர்வுகளுடன் பெரியாழ்வார் திருவில்லி புத்தூர் திரும்பினார். திருவில்லிபுத்தூரில் தமது இல்லத்தையே ஒரு கோயிலாக்கி, அங்குத் திருவரங்கனையும் ஆண்டாளையும் பிரதிட்டை செய்து தம் வாழ்நாளைக் கழித்தார்; பல்வேறு மலர்களுடன் ஆர்வம் என்பதோர் மலரையும் இட்டு எண்பத்தைந்து ஆண்டுக் காலம் வாழ்ந்திருந்து பேரானந்தப் பெரும்பதம் அடைந்தார்.

" ஒரு மகள் தன்னையுடையேன் உலகம் நிறைந்த புகழால்
திருமகள் போல வளர்த்தேன் செங்கண்மால் தான்கொண்டு போனான்
பெருமக ளாய்க்குடி வாழ்ந்து பெரும்பிள்ளை பெற்ற அசோதை
மருமக ளைக்கண் டுகந்து மணாட்டுப் புறஞ்செய்யுங் கொல்லோ! " [22]

என்னும் பாடல், அவருடைய பிரிவுத் துயரத்தை உணர்த்து வதாகும். இத்திருமொழியில் அமைந்துள்ள பத்துப் பாடல்களும், பெண்ணைப் பெற்றெடுத்துத் திருமணம் செய்து புகுந்த வீட்டிற்கு அனுப்பிவைக்கும் பெற்றோரின் இதய ஒலியாகவே ஒலித்துக் கொண்டிருக்கும் பெற்றியன ஆகும். [23]

ஆண்டாளின் இத்திருமண நிகழ்ச்சி, 'திவ்யசூரி சரித'த்தில் வேறொரு விதமாகக் கூறப்பட்டுள்ளதாகக் குறிப்பிடுகிறார் மு. இராகவையங்கார். அந்நிகழ்ச்சி வருமாறு:

'வித்துவானான விஷ்ணுசித்தர் தம் புத்திரியின் யவ்வன தசையையும், அவளுக்கு எம்பெருமானிடத்துள்ள அனுராகத் தையும் நன்றாக ஆலோசித்துப் பார்த்து, பாண்டிய தேசாதிபதியான வல்லபதேவன் எனும் தம் சிஷ்யனுடனும் புத்திரியுடனும், குருகை நகரத்தை அடைந்து அங்கு உறங்காப்புளியின்கீழ் ஜ்யேஷ்ட ராய்த் திருப்பாணாழ்வாரும் திருமங்கை மன்னரும் ஒழிந்த ஆழ்வார்கள் அனைவரும் புடைசூழ எழுந்தருளியிருந்த ஸ்ரீ சடகோபர்க்கும் ஏனை ஆழ்வார்களுக்கும் தண்டனிட்டு, தாம்

22. பெரியாழ்வார் திருமொழி. நாலா. பா. 300.

23. ஆண்டாளின் திருமண நிகழ்ச்சி பற்றிய வரலாறு பின்பழகிய பெருமாள் சீயர் குரு பரம்பரை, பிரதிவாதி பயங்கரம் அண்ணங்காராச்சார்ய சுவாமிகளின் திவ்வியார்த்த தீபிகை முதலியவற்றில் கூறப்பட்டுள்ளதாகும் என்பர்.
- மேற்கோள்: ந. சுப்புரெட்டியார், ஆழ்வார்களின் ஆரா அமுது. ப. 16.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

வந்த காரியம் ஆராய்ந்து அருளும்படிக்கு வேண்டிநின்றனர். அவரும் அர்ச்சாவதார எம்பெருமான்களில் சிறந்த வரனைத் தேடும் பொறுப்பிற்கு வல்லப ராஜனையும், மதுர கவிகளையும் நியமித்தனர். நடைபெற்ற சுயம்வரத்தில் கோதை, திருவரங்கச் செல்வனான அழகிய மணவாளனையே வரித்துத் திருமணம் புரிந்துகொண்டாள். மணக்கோலத்துடன் திருவரங்கம் போகும் வழியிலே திருமங்கை மன்னன் அவர்களைத் தம் வாள்வலியால் வழிமறித்து மந்திரோபதேசம் பெற்றாராம்'. [24]

ஆண்டாளின் திருமணம் குறித்துக் 'குரு பரம்பரை'யும், 'திவ்யசூரி சரித'மும் வெவ்வேறு விதங்களில் கூற, வடிவழகிய நம்பிதாசர் இவ்விரு வரலாற்றினின்றும் வேறுபட்டு, ஆண்டாளின் திருமணம் திருவில்லிபுத்தூரிலேயே நடைபெற்றதாகக் கூறுகிறார். அவர் கூறும் வரலாறு வருமாறு:

'ஆண்டாள் திருவரங்கத்தில் உறையும் அரங்கனிடம் மனத்தைப் பறிகொடுத்தாலும், பெரியாழ்வாரின் விருப்பப்படி பெருமானே திருவில்லிபுத்தூரில் தேவர்கள் எல்லாம் தொழுமாறு பங்குனி மாதம், உத்திர நட்சத்திரத்தில் ஆண்டாளைத் திருமணம் செய்துகொண்டார்' என்று ஆழ்வார்கள் வைபவத்தில் பேசப்படுகிறது. இதற்கான கதை ஒன்றையும் நம்பிதாசர் கூறுகிறார்.

'திருமண தினத்தன்று, திருவில்லி புத்தூரில், மணமகனான அரங்கப் பெருமான் முகூர்த்த நேரத்தின்போது வந்துசேரத் தாமதமான போது எல்லோரும் வருந்தி, இந்தச் செய்தியைக் கோதையிடம் சொன்ன போது, அவள் தன் தந்தையிடம், 'அஞ்ச வேண்டாம்' என்று ஆறுதல் கூறி, திருமாலுக்கு வாகனமான கருடனை அருகில் அழைத்து, 'நீ புறப்பட்டுச் சென்று திருவரங்கத்தி லுள்ள பெருமானை இந்தக் கணமே எழுந்தருளப் பண்ணிக் கொண்டு வருவாயேயானால், அப்பெருமானுடனும், என்னுடனும் ஒரே ஆசனத்தில் எங்கள் பக்கத்தில் வீற்றிருக்கக் கூடிய பெருமையை உனக்குத் தருவேன்' என்று கூற, கருடனும் கண நேரத்தில் பெருமானைத் தனது

24. மு. இராகவையங்கார், ஆழ்வார்கள் காலநிலை, பக் 68-69
25. தேவராஜன், மு.நூ., ப. 764

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

தோளிலே சுமந்து கொண்டு வர ஆண்டாள் திருக்கல்யாணம் இனிதே முடிந்ததாம். [25]

'கல்யாணம் முடிந்து அடியார்களுக்குச் சேவை சாதிக்கும் பொழுது, கருடனுக்குச் சொன்ன உறுதிமொழியை ஆண்டாள் நிறைவேற்றி, பெருமாளின் இடப்புறம் கருடனும், வலப்புறம் தானுமாய் நின்று தேவர்கள் தொழுமாறு அருளினாள். பெரியாழ்வாரின் வேண்டுகோளுக்கு இணங்க, பெருமான், ஆண்டாள், கருடன் ஆகிய மூவரும் சேர்ந்திருக்கும் அர்ச்சாவதார ரூபத்தை, திருவில்லிபுத்தூரில் இருக்கும்படி எம்பெருமான் அருளியதாகக் கூறுவர். ஸ்ரீ வடபத்ர சயனர் (பெருமாள்), பூமிப் பிராட்டியார் (ஸ்ரீ ஆண்டாள்), கருடாழ்வார் (பெரியாழ்வார்) அவதரித்த காரணத்தால் இந்த ஊரை 'மூப்புரி ஊட்டிய தலம்' என்று கூறுவர். [26]

ஆண்டாள் 'சூடிக் கொடுத்த நாச்சியார்' என்பதற்கேற்ப இன்றும் திருவில்லிபுத்தூரில் ஒவ்வொரு நாள் இரவும் ஸ்ரீ ஆண்டாளுக்கு சாத்தப்படும் மாலையை மறுநாள் காலை விசுவரூப தரிசனத்தின் போது மேளதாள வாத்தியத்துடன் பெரிய கோயிலுக்குக் கொண்டுபோய் வடபெருங் கோயிலுடைய வனுக்குச் சாத்துகின்றனர். இதேபோல், ஆண்டுதோறும் புரட்டாசி மாதம் ஸ்ரீ ஆண்டாள் சூடிக்களைந்த மாலையும், திருமேனியில் சாத்திய பரிவட்டமும் திருப்பதி ஸ்ரீ வேங்கடேசப் பெருமானின் பிரம்மோத்ஸவத்திற்கும், மூலவருக்கும் அனுப்பப்படுகின்றன. இந்த மாலையை அணிந்துகொண்டுதான் ஸ்ரீ வேங்கடாசலபதி கருடசேவை சாதிக்கிறார். இதைப் போலவே, சித்திரை மாதத்தில், சித்திரா பௌர்ணமியன்று மதுரை, திருமாலிருஞ்சோலை சுந்தரராஜப் பெருமாளுக்கும் ஆண்டாளுக்குச் சாற்றிய மாலையும் பரிவட்டமும் அனுப்பப்பட்டு எம்பெருமானுக்குச் சாத்தப்படுகின்றன என்பர். [27]

> " அஞ்சு குடிக்கொரு சந்ததியாய் ஆழ்வார்கள்
> தஞ்செயலை விஞ்சிநிற்கும் தன்மையளாய்ப் - பிஞ்சாய்ப்
> பழுத்தாளை ஆண்டாளைப் பத்தியுடன் நாளும்
> வழுத்தாய் மனமே மகிழ்ந்து " [28]

என்னும் மணவாள மாமுனிகளின் பாசுரம், ஆண்டாள் நாச்சியாரின் பெருமையை உணர்த்துவது ஆகும்.'

---

26. மு.நூ.,ப. 764
27. மு.நூ.,ப. 765
28. உபதேசரத்தினமாலை, திருப்பாவை வ்யாக்யானம்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

2. பாவை நோன்பும் திருப்பாவையும்

" மார்கழி நோன்பின் மூல வரலாற்றை அறிவதற்கு வேறு சில ஆதாரங்களும் உண்டாயினும், முற்கூறிய ஆண்டாளது திருப்பாவையும் வாதவூரரது திருவெம்பாவையுமே சிறந்த கருவிகளாகச் சொல்லலாம். "

– மு. இராகவையங்கார் *

தந்தை பெரியாழ்வாரைப் போலவே ஆண்டாளும் கவி பாடும் வல்லமை பெற்றவராக விளங்கினார். ஆண்டாள் அருளிச் செய்த இலக்கிய வகைகள் இரண்டு 1. திருப்பாவை – 30 பாசுரங்கள் கொண்டது; 2. நாச்சியார் திருமொழி - 143 பாசுரங்கள் கொண்டது. இவை இரண்டும், நாலாயிர திவ்யப் பிரபந்தத்தில் முதலாயிரத்தில் பெரியாழ்வார் திருமொழியை அடுத்து அமைக்கப் பெற்றுள்ளன. இவை இரண்டும் முத்திரைக் கவிகள்' ஆகும்.[1]

திருப்பாவை

திருப்பாவை, கண்ணனை அனுபவிப்பதற்கு உரிய ஓர் உபாயமாக மார்கழி நோன்பில் தொடங்கி, அத் தெய்வ அனுபவத்தைப் பெறுவதில் முடிகிறது. திருவில்லிபுத்தூரே திருவாய்ப்பாடியாகவும், அங்குள்ள பெண்களே கோபியர்களாகவும், தாமும் அவர்களுள் ஒருத்தியாகவும், வடபெருங்கோயிலே நந்தகோபர் திருமாளிகையாகவும், உள்ளே நிற்கிறவனே கண்ணனாகவும் பாவனை செய்து, ஆழ்ந்த பக்தியுணர்ச்சியோடு ஆண்டாள் பாடியதே திருப்பாவை ஆகும். பாவை நோன்பு மேற்கொள்வதிலிருந்து கண்ணனை அனுபவித்தல் வரையிலும்

---

* ஆராய்ச்சித் தொகுதி, ப. 187

1. 'முத்திரைக் கவிகள் : ஆசிரியர் பதிக இறுதியில் அல்லது பிரபந்த இறுதியில் தம் பெயரையும் பாசுர எண்ணிக்கையும் தோன்றுமாறு பாடப்பெறுபவை.' – ந. சுப்புரெட்டியார். ஆழ்வார்களின் ஆரா அமுது. ப.16.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

வளர்ந்துவருகின்ற ஓர் ஆன்ம வளர்ச்சியினைத் திருப்பாவையில் காணலாம். 'பாவை நோன்பு', 'நீராடல்' ஆகிய இரண்டுமே திருப்பாவையில் முதன்மை பெறுகின்றன.

பாவை நோன்பு

பாவை என்பது சங்க காலத்தில் 'பொம்மை' என்ற பொருளில் வழங்கி வந்தது. மகளிர் கடற்கரையில் மணலால் பாவை செய்து விளையாடும் பழக்கம் சங்க காலத்தே இருந்தது என்பதற்குப் பல பாடல்கள் சான்றாக உள்ளன.

" நேரிழை மகளிர் வார்மணல் இழைத்த வண்டல் பாவை "
(நற்றிணை, 191)

" வண்டல் பாவை வரிமணல் அயர்ந்தும் " (அகநானூறு, 330)

" நெய்தல் பரப்பில் பாவை கிடப்பி " (குறுந்தொகை, 114)

என வரும் பாடல் வரிகள், கடற்கரையில் நெய்தல் நில மகளிர் மணலால் பாவை செய்து விளையாடியதை உணர்த்துகின்றன.

பாவை என்ற சொல்லுக்குப் 'பதுமை', 'அழகிய உருவம்', 'கருவிழி', 'பெண்', 'குரவ மலர்', 'கூத்து', 'நோன்பு', 'இஞ்சிக் கிழங்கு', 'மதில்' எனப் பல பொருள்கள் வழங்கப்படுகின்றன. இவ்வனைத்துப் பொருள்களுக்கும் அடிப்படை, உருவ அமைப்பே எனலாம். பதுமை போன்று வேடமிட்டு ஆடிய கூத்து 'பாவைக் கூத்து' எனப்பட்டது. பாவை போல உருவத்தை அமைத்து நோன்பு நோற்ற காரணத்தால் அந்நோன்பு 'பாவை நோன்பு' என வழங்கப்பட்டது. இந்நோன்பினை அடிப்படையாகக் கொண்ட பாடல்களைப் 'பாவைப் பாடல்கள்' என வழங்கினர்.

மார்கழி நீராடலும் தைந்நீராடலும்

பாவை நோன்பிற்கு வேதத்தில் விதி இல்லை; ஆன்றோர் மேற்கொண்ட பழக்க வழக்கங்களே சான்று ஆகும். சங்க இலக்கியங்களில் தைந்நீராடல் பற்றிய குறிப்புகள் உள்ளன. தைந்நீராடலே பிற்காலத்தில் மார்கழி நீராடல் என மாறியது. வையைக் கரையில் கன்னிப் பெண்கள் நீராடி நோன்பு நோற்ற வழக்கத்தை 'அம்பாவாடல்' என நல்லந்துவனார் பரிபாடல் ஒன்றில் குறிப்பிடுகின்றார் (பரிபாடல், 11). 'தாயோடு ஆடப்படுதலின் இப்பெயர் பெற்றது' என இதற்கு உரை விளக்கம் செய்கிறார் பரிமேலழகர் (பரிபாடல், ப.127). 'தாயருகா நின்று தவத் தைந் நீராடுதல்' என வரும் தொடரைக் கொண்டு அவர் இவ்வாறு

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

பொருள் கூறுகிறார் எனலாம். நோன்பு நோற்போர் சிறுமியர் ஆதலின் அவர்கள் நீராடும்போது அவர்களுடைய தாயரும் அருகே நிற்பது இயல்பு. இதுபற்றித் 'தாயருகா நின்று' என்று கூறுகிறார் நல்லந்துவனார். 'அம்பாவாடல்' என்பதற்குத் 'தேவியின் பொருட்டு நிகழ்த்தப்படும் நீராட்டு' என்று பொருள் கூறப்படுகின்றது. 'அம்பா' என்பது தேவியைக் குறிக்கும்; மேலும், மார்கழி நோன்பு என்பது 'காத்தியாயினி வடிவத்தை அமைத்து வழிபடும் நோன்பு' என்று ஸ்ரீமத் பாகவதம் கூறுகிறது.

பெரியவாச்சான் பிள்ளையின் கருத்து

மார்கழி நோன்பு பண்டைக் காலத்தில் சிறந்து விளங்கியது என்பதற்கும், அதன் மூல வரலாற்றை அறிந்துகொள்வதற்கும் ஏற்ற கருவிகளாக விளங்குகின்றவை திருப்பாவையும், திருவெம்பாவையும் ஆகும். மார்கழி நோன்பிற்கு வேத விதியில்லை என்றாலும், ஆன்றோர் கைக்கொண்டு ஒழுகுவதே அதற்கு மூலம் என்பது பெரியவாச்சான் பிள்ளையின் கருத்து ஆகும். இக்கருத்தை வலியுறுத்த அவர், 'மேலையார் செய்வனகள்' என்று ஆண்டாள் அருளிச்செய்ததை எடுத்துக் காட்டுகிறார். மேலும், அவர் 'கோகுலத்துள்ள ஆயர்கள் மழை பெய்யாக் குறையை நீக்க வேண்டிக் கண்ணனைத் தலைமையாக நியமித்துத் தங்கள் பெண்களை மார்கழி நோன்பு நோற்கச் சொல்ல, அவர்கள் அதற்கியைந்து பெருமானையும் தோழிமார்களையும் அதி காலையில் துயிலுணர்த்தி அழைத்துக்கொண்டு, யமுனை நதியில் மார்கழி நீராடி, நோற்று, கண்ணபிரானை நாயகனாகப் பெறும் தங்கள் மனோரதத்தை அடையப் பெற்றவர்கள் என்பதே ஆண்டாள் அருளிய திருப்பாவையின் வரலாறு' என்று கருதுகிறார்.[2] ஆனால், அவர் தம் கருத்துக்கு ஆதாரம் எதையும் குறிக்கவில்லை.

மு. இராகவையங்காரின் விளக்கம்

ஸ்ரீமத் பாகவதம் தசமஸ்கந்தம் 22-ஆம் அத்தியாயத்தில், கண்ணன் கோபியர் ஆடைகளைக் கவர்ந்த கதையைக் கூறும் தொடக்கத்தே மார்கழி நோன்பு பற்றிய செய்திகள் கூறப்படுகின்றன என எடுத்துரைக்கிறார் மு. இராகவையங்கார். அச்செய்திகள் வருமாறு :

''அரசனே! கோகுலத்துள்ள பெண்கள் ஏமந்த ருதுவின் முதல் மாதத்தில் (மார்கழியில்) காத்யாயனீ பூஜையாகிய

2. திருப்பாவை தனியன் வ்யாக்யானம், ப.18

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

விரதத்தைத் தொடங்கி ஹவிஸ்ஸைப் பூஜித்துக்கொண்டு அதனை நடத்தி வந்தார்கள். அருணோதயத்தில் அவர் எழுந்திருந்து யமுனா நதியில் ஸ்நானம் பண்ணி ஈர நுண்மணலால் காத்யாயனீ தேவியின் உருவத்தைச் சமைத்து, சந்தனம், மலர், தூபம், தளிர், பழம் இவற்றாலும் சிறந்த நைவேத்யங்களாலும் அத் தேவியைப் பூஜித்தனர். 'காத்யாயனீ! ஏ மகாமாயே! மகாயோகினி! ஈசுவரீ! உன்னை வணங்குகின்றோம்; எங்களுக்கு நந்தகோபர் மைந்தனாகிய கண்ணனை நாயகனாக அருள்வீராக' - என்ற இந்த மந்திரத்தை ஜபித்தவர்களாய் அவர்கள் கண்ணனைத் தியானித்துக் கொண்டு ஒரு மாச காலம் பூஜை செய்து விரதத்தை விடாமல் நடத்திவந்தனர். அக்கோப கன்னியர் ஒருநாள் யமுனாநதியில் ஸ்நானஞ் செய்தற்காக அருணோதயத்தில் எழுந்திருந்து அவரவருடைய தோழிமார்களின் பெயரைச் சொல்லிக் கூப்பிட்டு ஒருவருக்கொருவர் கையைக் கோத்துக்கொண்டும் கிருஷ்ண சரிதங்களைப் பாடிக்கொண்டும் நடந்து சென்றனர். அப்பெண்கள் யமுனாநதியின் ஒரு பக்கஞ் சேர்ந்து அவ்விடத்தே, வழக்கப்படி தங்கள் ஆடைகளை அவிழ்த்து வைத்துவிட்டுக் கண்ணன் சரித்திரங்களைக் கானஞ் செய்து கொண்டு நீரில் விளையாடு வாராயினர். பரமயோகிகளுக்கும் யோகியும் ஸர்வஜ்ஞனுமாகிய கண்ணபிரான் கோப கன்னியர் அங்ஙனம் நீர் விளையாட்டு நிகழ்த்துவதறிந்து, அப்பெண்களின் விரதபலத்தை அளிப்பதற்காகத் தம் நண்பர்கள் சூழ அவ்விடஞ் சென்றார்'' என்றும், ''சென்ற பெருமான் கரையிலிருந்த அம்மகளிர் துகில்களையெல்லாங் கவர்ந்துகொண்டு பக்கத்திலிருந்த கடம்ப மரத்திலேறி நிற்க, நீராடி முடிந்த பெண்கள், 'ஆடையின்றி வாடையின் மெலிந்து, கையைக் கொண்டு மெய்யது பொத்திக்' கண்ணனிடம் தங்கள் துகில்களைத் தருமாறு பிரார்த்தித்த போது, பெருமான் அவர்கள் அன்பைப் பல வகையாகவுஞ் சோதித்து, முடிவில் அவரவர் துகில்களை அளித்துச் 'சகிகளாகிய நீங்கள் எந்த நோக்கத்தைக் கொண்டு காத்யாயனீ விரதத்தை நடத்தினீர்களோ அந்த மனோரதம் இன்றிரவில் என்னுடன் கூடி விளையாடுவதால் நிறைவேறும்; எல்லாரும் கோகுலம் செல்லுங்கள்'' என்று நியமித்தருளினார் என்றுங் கூறப்படுகின்றன.[3]

இப்பாகவதச் செய்திகளையும் பெரியவாச்சான் பிள்ளை கூறும் திருப்பாவை வரலாற்றையும் இணைத்து நோக்குமிடத்து, நாடு வளங்குன்றிய போது மழை பெய்யவும், உத்தம நாயகர்களை

3. மு. இராகவையங்கார், 'மார்கழி நோன்பாகிய தைந்நீராடல்.' ஆராய்ச்சித் தொகுதி, பக். 187-188.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

அடைந்து இம்மை நலமெய்தவும் வேண்டிக் கன்னிப் பெண்கள் காத்தியாயினி தேவியைக் குறித்து மார்கழி மாதம் முழுவதும் நோற்பதும், அதன் பொருட்டு அவர்கள் வைகறையில் துயிலெழுந்து ஒருவரையொருவர் உறக்கத்தினின்றும் எழுப்பிச் சென்று ஆற்றை அடைந்து நீராடித் தேவியின் படிமம் அமைத்துப் பூசை செய்வதும் பண்டைய மரபு என்பது பெறப்படும்.

'எம்பாவாய்' என்ற தொடர் உணர்த்தும் உண்மை

பாவைப் பாசுரங்களின் ஈற்றில் வரும் 'எம்பாவாய்' என்ற தொடர் ஈர நுண்மணலால் அமைக்கப்பட்ட தேவியின் உருவத்தைக் குறிப்பதாகக் கொள்ளலாம். ஏனெனில், பாவை என்பது 'கொல்லிப் பாவை' என்புழிப் போல் ஈண்டுப் பெண் தெய்வத்தின் படிமையைக்' குறிப்பதாகும்.

" நம் பாவைக்குச் செய்யும் கிரிசைகள் " (பா.2)
" நம் பாவைக்குச் சாற்றி நீராடினால் " (பா.3)
" பிள்ளைகள் எல்லாரும் பாவைக்களம் புக்கார் " (பா.13)

என வரும் திருப்பாவைத் தொடர்களிலும் படிமை ஒன்று வைத்து வணங்கும் குறிப்புத் தோன்றுதல் காணலாம். ஆனால், 'பாவை' என வரும் இடங்களிலெல்லாம் உரையாசிரியர்கள் 'நோன்பு' என்றே பொருள் கொண்டுள்ளனர்.

திருமால் பக்தியில் சிறந்த ஆண்டாள், காத்தியாயினி தேவி விரதத்தை மூலமாகக் கொண்டு திருப்பாவை பாடியது பொருந்துமா என்று சிலர் ஐயுறக் கூடும். கண்ணனைத் தம் நாயகனாக அடைவதற்குக் கோபியர் காத்தியாயினி தேவியை வணங்கிய செய்தி பாகவதத்தால் வெளியாகும்போது அக்கோபியர் செய்தியையே ஆண்டாளும் கொண்டு கூறினர் என்பதில் இழுக்கு ஒன்றும் இல்லை; கண்ணனைத் தன் நாயகனாக அடைய வேண்டி, 'உன்னையும் உம்பியையும் தொழுதேன்' எனக் காமனையும் அவன் தம்பியாகிய சாமனையுங்கூடத் தொழுத ஆண்டாள், காத்யாயினி தேவியை வணங்கி அப்பெருமானைப் பெற முயன்றதில் குற்றம் ஒன்றும் இல்லை என எடுத்துரைப்பார் மு. இராகவையங்கார்.[4]

நாடு வளங்குன்றியபோது மழை பெய்யவும், உத்தம நாயகர்களை அடைந்து இம்மை நலமெய்தவும் வேண்டிக் கன்னிப் பெண்கள் கைக்கொண்ட மார்கழி நோன்பானது, மறுமை கருதி அடியார்களால் பக்தியோடு பாடப் பெறும் பெருமையை அடைந்தது.

4. மு.நூ., ப. 189

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

நீராடல்

மார்கழி மாதத்தில் கொண்டாடப்படும் பாவை நோன்பில் நீராடல் இன்றியமையாத இடத்தினைப் பெறுகின்றது. ஆண்டாள் நாச்சியாரும் திருப்பாவையில், நீராடலைப்பற்றிப் பல பாடல்களில் எடுத்துரைக்கின்றார். (1, 2, 3, 13, 20, 26)

இதில் 2, 26 ஆகிய இரண்டு இடங்களில் மட்டுமே 'நீராட' என்று சொல் குளியலைக் குறிக்கும். மற்ற ஐந்து இடங்களிலும் கண்ணபிரானோடு சேர்ந்து கலந்திருக்கவேண்டும் என்ற பொருளிலும் அமைந்திருப்பதாக உரையாசிரியர் கூறுவர்.



கீசு கீசு எனத் தொடங்கும் பாசுரத்தின் விளக்கம்

'வடமொழியில் சம்ச்லேஷம் = சேர்க்கை; விச்லேஷம் = பிரிவு என்ற சொற்கள் உள்ளன. சம்ச்லேஷம் என்றாலே பகவத் சம்ச்லேஷம் (பகவானோடு கூடுகை) அல்லது கிருஷ்ண சம்ச்லேஷம் - கண்ணனோடு கலவியை விரும்பி அதை அடையும் உபயமாகவே நீராட்ட நோன்பு நடைபெற்றது'[5] என்பர்.

'திருப்பாவையில் துயிலுணர்ந்த சிறுமியர் தாமே தனித்துச் சென்று நீராடி, நோன்பு நோற்க எண்ணாமல் மற்றத் தோழியரையும் எழுப்பி, அவர்களையும் தம்முடன் அழைத்துச் செல்வது ஏன்?' என்பதற்குப் பெரியவாச்சான் பிள்ளை, 'தனித்துச் செய்ய முடியாத காரியத்திற்குத் துணையை நாடுவது மக்கள் இயல்பு. இறைவனின்

5. கே.ஏ. மணவாளன், ஆண்டாள், ப.24

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

அருள் வெள்ளத்தில் நீராடுவது எளிதன்று. தேவர்களுள்ளும் இறைவனைப் பற்றிய ஞானத்தை முற்றும் உணர்ந்தவர் இல்லை என்பர். இறைவனின் பேரருளின் ஆழமும் அகலமும் பரப்பும் வலக்கையும் இடக்கையும் அறியாத கோகுலச் சிறுமியர்க்கு வியப்பையும் அச்சத்தையும் விளைவிக்கக் கூடும். காகங்கள் உணவைக் கண்டு அதனை உண்ண விரும்பினாலும், அச்சத்தால் தன் இனமான காகங்களைத் துணைக்கு அழைத்து அவற்றுடன் சேர்ந்து உண்பது போலவே, இந்தப் பெண்களும் இறைவன் அருள் வெள்ளத்தில் மூழ்கித் திளைப்பதற்குத் தம் போன்ற தோழியர்களின் துணையை நாடுகிறார்கள்' என்று கூறப்படுகிறது.[6]

மார்கழி நீராடலா? தைந்நீராடலா?

திருப்பாவை 'மார்கழி நீராடல்' என்று குறிப்பிடுவதனைப் பரிபாடல் 'தைந்நீராடல்' என்று கூறுவதற்கு என்ன காரணம் என்பதையும் மு. இராகவையங்கார் தம் கட்டுரை ஒன்றில் விளக்கிக் கூறுகின்றார். அவர் கூறும் விளக்கம் வருமாறு:

'பரிபாடல் கூறுமாறு, மார்கழிப் பௌர்ணிமையிற் றொடங்குவதாகிய நீராட்டத்தைத் தைந்நீராடலென இங்ஙனம் முன்னோர் கூறியதன் காரணம் என்னெனிற் கூறுவேன். பௌர்ணமியும் திருவாதிரையும் மார்கழி மாதம் 15-ஆம் தேதியிலேனும் அதன் பின்பேனும் ஒன்றுசேர்வது இயல்பு. அமாவாசையோடும் பௌர்ணமியோடும் மாதங்கள் முடிவு பெறுவதால் முறையே அமாந்தம். பூர்ணிமாந்தம் என்னும் பெயர் கொண்ட இருவகை மாதமுறைகள் வழங்கி வருவனவற்றுள், பூர்ணிமாந்தம் என்ற முறைப்படி, மார்கழியிடையிற் பௌர்ணிமைக்குப் பின்வரும் மாதம் - மார்கழியின் பிற்பகுதியும் தையின் முற்பகுதியுமாமென்றும், அதனால் மார்கழி நீராட்டம் தைந்நீராட்டம் என்று இருவகையாகவும் அந்நீராடலைக் கூறுவது கூடுமென்றும் கூறுவர். அதனால், மார்கழியில் நிகழ்த்தப்படுவதாகத் தெளிவாய் அறியப்பட்டதைத் தைந்நீராடல் என்று பரிபாடல் முதலியவை வழங்குவதற்கு இதுவே காரணம் என்க. எனவே மார்கழி நோன்பு முற்காலத்தே பூர்ணிமாந்த முறைப்படி அனுஷ்டிக்கப்பட்டதால் வேண்டுமென்பதும், ஆயினும் ஸௌரமானப்படி தைம்மாதமும் அதனுடன் கலந்து வருதலால், 'தைந்நீராடல்' என்று அதற்குப் பெயர் வழங்கியிருத்தல் வேண்டுமென்பதும் பெறப்படுகின்றன.'[7]

---

6. தேவராஜன், வைணவமும் ஆழ்வார்களும், பக்.703-704
7. மு. இராகவையங்கார், மு.நூ., பக். 195-196.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

மலையாள நாட்டின் திருவாதிரைத் திருவிழா

தமிழ்நாட்டில் கடைப்பிடிக்கப்பட்டுவரும் பல விழாக்கள் மலையாள நாட்டிலும் இன்றும் வழங்கிவருகின்றன. இம்மார்கழி நோன்பு சிற்சில மாறுதல்களுடன் கொண்டாடப்படுவதாகத் திரு. கோபால பணிக்கர் 'மலையாளமும் அதில் வாழும் பழங்குடி மக்களும்' (Malabar and its Folk) என்னும் தம் ஆங்கில நூலில் குறிப்பிட்டுள்ளார்.

'மலையாளத்தில் நடைபெறும் முன்று முக்கிய உற்சவங்களிலே திருவாதிரை என்பதொன்றாம். அஃது அங்கே தனுர் மாஸத்தில் திருவாதிரை நாளிலே முறைப்படி நிகழும். இவ்வுற்சவம் பெண்களால்மட்டும் மிகுதியாகக் கொண்டாடப்படுகின்றது. உத்தேசம் ஒரு நாள் தான் அது விசேடமாக நடைபெறும். இவ்விழா, புராணத்துக் கூறப்பட்டபடி, காமனுடைய அழிவுக் காலத்தைக் காட்டுகிறதென்பது ஜனங்களின் அபிப்பிராயம்.... (காமனுடைய) துக்ககரமான கதையானது ஞாபகத்தில் வைக்கப்பட்டு முக்கியமாக ஸ்திரீகளால் வருஷத்துக்கொருமுறை விசேஷ உற்சவமாகக் கொண்டாடப்படுகிறது. குறித்த நாளுக்கு ஒரு வாரத்துக்கு முன்பாகவே இவ்வுற்சவம் தொடங்கப்பெறும். காலை நாலு மணிக்கே பெண்களெல்லாம் படுக்கை விட்டெழுந்து ஆசார முறைப்படி தடாகங்களில் ஸ்நானம் செய்வார்கள். அவருள்ளும், பாலப் பருவமுள்ள பெண்களே கூட்டங் கூட்டமாகச் சேர்ந்து நீராடுதல் அதிகம். அக்காலங்களில் எல்லோரும் தண்ணீருக்குள் மூழ்கி உற்சாகமாகப் பாடுவர். அப்பாட்டு, யாரேனும் ஒரு பெண்ணால் சுருதியை அனுசரித்து மன்மதனைக் குறித்து ஆரம்பிக்கப்படும். இந்தப் பாட்டு, பெண்கள் தம் கைகளால் தண்ணீரைத் தட்டுவதனால் உண்டாகும் ஒரு விசேஷ சப்தத்தை அநுசரித்து நிற்கும். அவர்கள் இடக்கையை முடித் தண்ணீர் மட்டத்திற்குக் கீழே ஜலத்தில் அமிழ்த்துக் கொண்டு வலது உள்ளங்கையைச் சாய்ப்பாக அடித்து இந்தத் தாளத்தை உண்டாக்குகின்றனர். இப்பெண்கள் பாடுங்கால முழுவதும் இவ்வாறு சத்தம் செய்யப்படும். இத்தகைய தாளத்துடன் ஒரு பாட்டு முடிந்ததும் மற்றவரும் அதனைப் பின்தொடர்ந்து பாடியும் சிறிது நேரம் இளைப்பாறி மறுபடியும் அதனைத் தொடங்கியும் இவ்வாறு முறை வைத்துக் குதூகலிப்பது வழக்கம். இவ்விதமாக அருணோதய காலம் வரை பெண்களெல்லாம் காலத்தைப் போக்கி உடம்பை நன்றாகத் துடைத்துக் கொண்டு சுத்தமும், மிக்க அலங்காரமுமுள்ள ஆடைகளை உடுத்தும், கண்களுக்கு அஞ்சனம் தீட்டியும், நெற்றிக்குறி தரித்துக்கொண்டும், தாம்பூல தாரணஞ் செய்தும் விளங்குவார்கள்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

பிறகு எல்லாப் பெண்களும் உற்சவத்தில் முக்கியமாக நடைபெறும் ஊஞ்சலாட்டத்தைத் தொடங்குவார்கள்.

'இவ்வாறு ஸ்நானம் செய்வதும் பாடுவதும் ஊஞ்சலாடுவதும் உற்சவக் கடைசி நாளோடு முடிவு பெறும். ஆனால், இக் கொண்டாட்டமானது இறுதி நாளில்தான் விசேடமாக நடைபெறுவதாம். உற்சவ முடிவில் காலையிலே எல்லாப் பெண்களும் ஸ்நானஞ் செய்த பிறகு கொஞ்சம் வெள்ளம் குடித்துவிட்டுப் பகலில் ஒரு பெரிய விருந்து நடத்துவார்கள். அவ்விருந்தில் உயர்ந்த மலைப்பழங்களும் சர்க்கரை கலந்த சீந்திற் பாயசமும் உண்ணப் படும். அஸ்தமனம் வரையிற் கொண்டாட்டமும் ஆடல் பாடல்களும் நடைபெறும். விஷு, ஓணம் என்ற திருவிழாக்களிற் புருஷர்கள் எவ்வாறு மாலையில் வந்திருப்பது அவசியமோ, அவ்வாறு இவ்வாதிரைத் திருவிழாவிலும் வந்திருத்தல் அவசியம். அப்படிச் செய்யத் தவறிய புருஷர் செயலை, தங்கள் ஸ்திரீகளை விட்டுப் பிரிந்து போவதற்கு அடையாளமாகக் கருதுவார்கள். மார்கழி மாதத்துப் பனியுறைப்பும் கீழ்க்காற்றின் குளிர் மிகுதியும் பெண்களின் மெல்லிய மேனிகட்கு மிக்க துன்பத்தைக் கொடுக்கக் கூடியதாயிருந்தும், இம்மகோற்சவத்தில், காலையில் நீராடுவதிலும், அந்நீராட்டத்தில் ஆடல் பாடல் நிகழ்த்துவதிலும் அதிக ஆனந்தத்தை அவர்கள் அடைகின்றனர். பனியின் உறைப்பால் காற்றில் இலை நடுங்குவது போலச் சரீரம் படபடத்துக் கொண்டிருந்தும், நீராடுகின்ற இக்கொண்டாட்டம் அவர்களுக்கு அதிக மன உற்சாகத்தை அளிக்கின்றது. மலையாள நாட்டில் நடக்கும் இக் கொண்டாட்டத்தைப் போல வேறு எவ்விடத்துங் காண்பதரிது.'' [8]

மலையாள நாட்டில் இன்றும் மார்கழி நீராடும்பொழுது தண்ணீர்த் தடாகத்தில் தண்ணீரில் பேரொலி எழுப்பிக் கொண்டு சேர நாட்டுப் பெண்கள் மூழ்கும் நிலையினையே மாணிக்கவாசகர் திருவெம்பாவையில்,

" மொய்யார் தடம்பொய்கை புக்கு முகேரென்னக்
கையாற் குடைந்து குடைந்துன் கழல்பாடி " (பா.11)

என்றும்,

" பொங்கு மடுவிற் புகப்பாய்ந்து பாய்ந்துநம்
சங்கஞ் சிலம்பச் சிலம்பு கலந்தார்ப்பக்
கொங்கைகள் பொங்கக் குடையும் புனல்பொங்கப்
பங்கயப் பூம்புனல் பாய்ந்து ஆடேலோர் எம்பாவாய் " (பா.13)

என்றும் கூறியிருக்கிறார் எனலாம்.

8. மு.நூ., பக்.201-202.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

மேலும், இவ்விழாவின் இறுதியில் மலையகத்து மகளிர் தம்மை ஆடை அணிகலன்களால் நன்கு ஒப்பனை செய்துகொண்டு, உற்றாரும் உறவினருமாக எல்லோரும் கூடியிருந்து விருந்துண்பதும், 'கூடாரை வல்லி' என்னும் அவ்விருந்தில் பாயசம் சிறப்பு உணவாகக் கொள்ளப்படுவதும் இன்றும் நடைபெறுவன வாகும். இக்காட்சியினையே, ஆண்டாள் நாச்சியாரும் (திருப்பாவை 27) குறிப்பிட்டுள்ளார்.

''மார்கழித் திருவாதிரையன்று 'அக்காரடலை' நிவேதனம் செய்வதற்கு என்று, முதல் இராஜராஜ சோழன் கோயிற்கு நிலங்கள் விட்டுள்ள செய்தி சாஸனத்தால் அறியப்படுகின்றது. (EP. Rep. 68 of 1914) இதனால் அக்காரடலை (அக்கார அடிசில் - சர்க்கரைப் பொங்கல்) அவ்வுற்சவத்திற்கு முக்கியமான தென்பது உணரப் படும். வைஷ்ணவர்க்குள் அது சிறப்பாக இன்றும் வழங்கப் படுகின்றது. திருவாதிரைக் களி எனச் சைவர்க்குள் வழங்குதலும் இத்தகையதேயாம்'' என்று குறிப்பிடும் மு.இராகவையங்கார், இவ்வொற்றுமைகள் காரணமாக, சங்கச் செய்யுட்களில் கூறப்பட்ட தைந்நீராடல் என்று கூறப்படும் விரதம் மார்கழி நோன்பினின்றும் வேறுபட்டது அல்ல என்பதை நிறுவுகிறார்.[9]

சயாமில் திருப்பாவை

தமிழ் இலக்கியத்தில பாவைப் பாடல்கள் பல நூற்றாண்டு களுக்கு முன்பே - பதினொன்றாம் பன்னிரண்டாம் நூற்றாண்டில் சோழர்களின் ஆட்சியின் போதே - கடல் கடந்து இரண்டாயிரம் மைல்களுக்கு அப்பால் உள்ள சயாம் நாட்டில் பரவின. சோழர்கள் கடாரம் சென்று தங்கள் வெற்றியை நிலைநாட்டிய போது தமிழர்கள் பலர் அங்கே குடியேறினார்கள். அவர்கள் வழியாகவே ஒன்பது நூற்றாண்டுகளுக்கு முன்பு பாவைப் பாடல்கள் அங்கே பரவின. ''சயாம் அரசாங்கத்தினால் பல நூற்றாண்டுகளாக ஒரு விழா கொண்டாடப்பட்டு வருகிறது. அந்த விழாவின் பெயர் 'த்ரியெம்பாவ - த்ரிபாவ' என்பது. பொருள் தெரியாமலே அந்த விழாவின் பெயரை அவ்வாறு வழங்கிக் கொண்டாடி வந்திருக்கிறார் கள். 'திருவெம்பாவை - திருப்பாவை' என்பதே அந்தப் பெயர். அந்த விழாவின் போது திருவெம்பாவைப் பாடல்களையும் திருப்பாவைப் பாடல்களையும் பொருள் தெரியாமல் சொற்களின் உருவம் சிதைத்து மந்திரம் போல் அங்கே பாடிவருகின்றனர். பாவைப் பாடல்கள் பழங்காலத்திலேயே அவ்வளவு செல்வாக்குடன்

9. மு.நூ. ப.203

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

வழங்கிவந்தன என்பதை இதனால் உணரலாம்.'[10] என்று குறிப்பிடுகிறார் மு.வரதராசன் ('சயாமில் திருப்பாவை' என்ற பெயரில் தெ.பொ.மீ. தனிநூல் எழுதியுள்ளார்).



வங்கக் கடல் கடைந்த மாதவனை என்பதன் விளக்கம்

சிறு பெண் குழந்தைகளின் பாவை விளையாட்டும், சங்க கால மக்களின் நீராடும் வேட்கையும் இணைந்து 'அம்பாவாடல்' என்னும் தைந்நீராடலாக - சமயச் சார்படையதாக - மாறியதைப் பரிபாடல் (பா.11) வழி அறிய முடிகின்றனது. "ஏழு எட்டாம் நூற்றாண்டில் உலக வழக்கில் சமயச் சார்பின்றியிருந்த பாவைப் பாட்டினைச் சமயங்கள் பலவும் தத்தம் சமயத்திற்கேற்பப் பாடத் தொடங்கின... அவ்வகையில் ஆண்டாள் வைணவ நெறிக்கேற்பத் திருப்பாவையையும், மாணிக்கவாசகர் திருவெம்பாவையையும் பாடினர் எனலாம். உலக வழக்கு இவ்வாறு இலக்கிய மரபாக மாறிய பின், பிற்காலத்தில் அந்த இலக்கிய மரபு உலக வழக்கில் பின்பற்றப் பட்டதை இன்று அறியலாம்.

10. மு. வரதராசன், தமிழ் இலக்கிய வரலாறு, ப.114. இது பற்றி டாக்டர் தெ.பொ.மீ. 'சயாமில் திருப்பாவை' என்று முன்பே நூல் எழுதியுள்ளார்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

3. திருப்பாவையில் வைணவக் கொள்கைகள்

" திருப்பாவை சாம கான சாரமாகும். மனமாயத்தில் உறங்கும் ஜீவாத்மாவைத் தட்டியெழுப்பிப் பரமாத்ம பத்தியில் ஊக்கும் காலைச் சங்க நாத மாகும். "

- யோகி ஸ்ரீ சுத்தானந்த பாரதியார். *

" அன்னவயல் புதுவை ஆண்டாள் அரங்கற்குப்
பன்னு திருப்பாவைப் பல்பதியம் - இன்னிசையால்
பாடிக் கொடுத்தாள் நற்பாமாலை பூமாலை
சூடிக் கொடுத்தாளைச் சொல் "

- உய்யக் கொண்டார் அருளிச் செய்த திருப்பாவைத் தனியன்.

பெரியாழ்வாரின் திருமகளாய் அவதரித்த ஆண்டாள் நாச்சியார் 'பிஞ்சிலே பழுத்தவள்' - அதாவது இளம்பருவத்திலேயே பக்தி மிகுந்து, இதன் விளைவாகப் பரபக்தி, பரஞானம், பரமபக்தி (பரனைக் காண ஆசைப்படுதல், அப்பரனைக் காண்டல், கண்ட பின்பு மேன்மேலும் அனுபவிக்க ஆசைப்படுதல்) வாய்ந்தவள். ஆதனால் தான் அனுபவித்த அனுபவத்தைத் திருப்பாவையில் வெளியிடுகிறாள். இதன் மூலம் உயிர்களுக்கும் இறைவனுக்கும் உள்ள தொடர்பையும் இறைவனுடன் உயிர்கள் கூடியிருத்தலே இன்பம் என்பதையும் இறைவனது அடியார்களுடன் கூடி வாழ்வதே சிறந்தது என்பதையும் உலகினர்க்கு எடுத்துக் கூறுகிறாள். இத்தகைய சிறப்பு மிக்க திருப்பாவையின் அமைப்பும் திருப்பாவையில் வெளிப்படும் வைணவக் கொள்கைகளும் பிற சிறப்புச் செய்திகளும் இவ்வியலில் ஆராயப்பட்டுள்ளன.

---

* எம்பாவாய், பக். 10-11.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

திருப்பாவை - பெயர்க் காரணம்

பாவை நோன்பு நோற்கத் தலைப்பட்ட ஆண்டாள் பாடிய முப்பது பாசுரங்களைக் கொண்டதே திருப்பாவைப் பிரபந்தம். ''திருப்பாவையின் ஒவ்வொரு பாசுரமும் 'எம்பாவாய்' என்று முடிவதாலும், மார்கழி நோன்பினைப் 'பாவை' என்னும் சொல்லாற் குறிப்பதாலும் 'திரு' என்னும் அடை சேர்ந்து இந்நூல் 'திருப்பாவை' என்னும் பெயர் பெற்றது'' எனக் குறிப்பிடுகிறார். ம.ராதாகிருஷ்ண பிள்ளை (உரிமையும் கடமையும், ப.2). திருப்பாவை முப்பதாம் பாசுரத்தில் 'கோதை சொன்ன சங்கத் தமிழ்மாலை முப்பது' என்னும் அடி காணப்படுகிறது. இதனைச் சுட்டிக்காட்டி, 'சங்கத் தமிழ் மாலை முப்பது' என்பதே இந்நூலுக்கு ஆசிரியர் இட்ட பெயர் என்பர். இக்கருத்துக்குச் சான்றாக 'இன்னா நாற்பது', 'கார் நாற்பது' என்றமைந்த பெயர்களையும் சான்றாகக் காட்டுவர் ரெ.திருமலை அய்யங்கார் (மு.நூ., பக். 30-31).[1]

ஆண்டாள் செய்த வேள்வி

பூமாதேவியின் அவதாரமாகக் கருதப்படும் ஆண்டாள் நாச்சியார், வராக அவதாரத்தின் போது, பூமாதேவியை ஹிரண்யாட்சனிடமிருந்து மீட்டு மூக்கின் மேல் வைத்துக் கொணர்ந்த போது, பூமாதேவி இறைவனிடம் முக்தி பெற வழிகள் கேட்டாளாம்; அப்பொழுது இறைவன் இட்ட கட்டளைகளை மூன்று முடிச்சுகளாக முடிந்து கொண்டாளாம். அவை,

1. 'அவன் திருவடியிலே புஷ்பத்தை இட்டு அர்ச்சிக்க வேண்டும்.
2. அவன் திருநாமத்தை உரக்கச் சொல்ல வேண்டும்.
3. அவன் திருவடியிலே ஆத்ம சமர்ப்பணம் பண்ண வேண்டும்'.

என்பனவாம்.[2] எனவே, ஆண்டாள் திருமாலுக்குப் பூமாலை, பாமாலை ஆகிய இரண்டினாலும் அருச்சனை செய்தாள்; இவ்விரண்டையும் இறைவன் திருவடியில் ஆத்ம சமர்ப்பணம் செய்து அரங்கனையே மணாளனாக அடைந்தாள் என்கிறார் முக்கூர் லக்ஷ்மி நரசிம்மாச்சார்யார். அவரது கருத்து வருமாறு:

''திருப்பாவை என்பது தமிழ்ப் பாசுரம் மட்டுமல்ல; இது ஒரு மஹாயஜ்ஞம் (யக்ஞம்). யஜ்ஞத்தில் ஹவிஸை நெய்யினால் சுத்தி

1. ம.பெ. சீனிவாசன், வைணவ இலக்கிய வகைகள், ப. 98
2. முக்கூர் லக்ஷ்மி நரஸிம்மாச்சார்யார், கோதையின் பாதை, ப. 20

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

பண்ணி அக்னியில் சேர்க்கிறோம். ஆண்டாளும் தன்னுடைய உடல், பொருள், ஆவி என்கிற ஹவிஸை ஆசார்ய அனுக்ரஹம் (பெரியாழ்வாரின் அனுக்ரஹம்) என்ற நெய் தடவி எம்பெருமான் வடபத்ரசாயியின் திருவடியில் சமர்ப்பிக்கிறாள்.

'ஆண்டாள் பண்ணிய திருப்பாவையின் முன்று பத்தும் முன்றும் கபால சாதனங்கள் என்றே சொல்லலாம். யக்ஞம் பண்ணும் போது ஒவ்வொரு கபாலத்தைச் சமர்ப்பிக்கும்போதும் திரிவிக்ரமனை மனத்தில் தியானம் பண்ணிக்கொண்டு ஹவிஸைச் சேர்க்க வேண்டும்.'

'முதல் பத்து பாசுரங்கள் ஒரு கபாலம். அதில் தன்னுடைய ஆத்மாவை வைத்துள்ளாள். முதல் பத்தில் ஓங்கி உலகளந்த உத்தமனை (பா. 3) (திரிவிக்ரமனை) மனத்தில் நினைக்கிறாள். அதுவே முதல் கபாலம்.'

'11லிருந்து 20க்கு 'அம்பரம் ஊடறுத்து ஓங்கி உலகளந்த உம்பர் கோமானே' (பா. 17) என்று திரிவிக்ரமனைத் தியானம் பண்ணுகிறார். இது இரண்டாவது கபாலம்.

'21லிருந்து 30க்குள் 'அன்று இவ்வுலகம் அளந்தாய் அடி போற்றி' (பா. 24) என்று திரிவிக்ரமனைத் தியானிக்கிறாள். இதுவே முன்றாவது கபாலம். திருப்பாவையில் முன்று இடத்தில் திரிவிக்ரமனைத் தியானித்து ஆத்ம சமர்ப்பணம் என்ற மஹா யஜ்ஞத்தை ஆண்டாள் செய்கிறாள்; நாம் மறுபடியும் பிறக்காத உயர்ந்த வழியைக் காட்டுகிறாள். மற்ற யஜ்ஞங்கள் செய்தால் மறுபடியும் பிறப்பு உண்டு. ஆனால் ஆத்ம சமர்ப்பணம் என்கிற யஜ்ஞத்தில் மறுபடியும் பிறப்பு இல்லை. இதுவே ஆண்டாள் செய்த தனுர்மாத மஹா யஜ்ஞம், நோன்பு' [3]

எனவே, திருப்பாவை ஒரு வேள்வி போன்றது. அதனால்தான் ஆண்டாள் போலும் நாச்சியாரைப் பதினொரு ஆழ்வாருக்கு இணையாக வைத்துக் கூறுவர் வைணவப் பெரியோர்.

ஆழ்வார்கள்தம் செயலை விஞ்சி நிற்கும் தன்மையள்

''தேக நலத்தில் சிரத்தையுடைய சாதாரண மனிதர்களை விட ஆத்ம சொரூபம் அறிந்த ரிஷிகள் பல மடங்கு உயர்ந்தவர்கள்.

3. மு. நூ. பக். 24-25

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

ரிஷிகளை விட ஆழ்வார்கள் பன்மடங்கு உணர்ந்தவர்கள். மற்றைய ஆழ்வார்களைவிடப் பெரியாழ்வார் எத்தனையோ மடங்கு உயர்ந்தவர். அந்தப் பெரியாழ்வாரை விட அவர் வளர்ப்பு மகளாம் ஆண்டாள் அநேக மடங்கு உயர்ந்தவள்'' என்று வியாக்கியானச் சக்கரவர்த்தி ஸ்ரீ பெரியவாச்சான் பிள்ளை விளம்புகின்றார். எத்தனை மடங்கு ஆண்டாள் ஆழ்வார்களினும் உயர்ந்தவள் என்பதனை அவர் குறிக்குமிடத்து,

" பர்வதப் பரமாணு வோட்டை வாசிபோரும் "

என்கிறார். அதாவது ஆண்டாள் மலை; மற்றவர் அவள் முன் தூசி என்று சிறப்பித்துச் சொல்கிறார்... மேலும் ஆழ்வார் குடி அனைத்திற்குமே இவள் ஒருத்தியே ஒரு தனிமகளாய்த் துலங்குகின்றாள்.

" அஞ்சு குடிக்கொரு சந்ததியாய் ஆழ்வார்கள்
தஞ்செயலை விஞ்சி நிற்கும் தன்மையளாய் "

என்று உபதேச ரத்தினமாலை (24) பகர்வது இக்கருத்திற்கு அரண் சேர்ப்பதாகும். [4]

திருப்பாவை சுட்டும் ஆன்ம வளர்ச்சி

பாவை நோன்பு மேற்கொள்வதிலிருந்து கண்ணனை அனுபவித்தல் வரையிலும் வளர்ந்துவருகின்ற ஓர் ஆன்ம வளர்ச்சியினைத் திருப்பாவை சுட்டுகின்றது என்பர் ஆன்றோர். ஸ்ரீ பராசரபட்டர், உபநிடதங்களில் கூறப்பட்ட பரமபதத்தை அடைவதற்கான வழியைத் திருப்பாவை கூறுவதாகக் கொள்வார். ஸ்ரீ வேதாந்த தேசிகர், திருப்பாவையை 'உபநிடதம்' என்றே உறுதியாகக் கூறுவார். [5]

திருப்பாவை - அமைப்பு

திருப்பாவை மூன்று பகுதிகளாக அமைந்துள்ளது. திருப்பாவையின் 1 முதல் 5 பாடல்கள் பாவை நோன்பின் சிறப்பைக் கூறுகின்றன; இப்பகுதி நூலின் உயிர்நிலை; நூற்பொருளைத் தெளித்துக் காட்டும் ஆடி போன்றது. 6 முதல் 15 வரையுள்ள பத்துப் பாடல்கள் உறங்குகின்ற தோழிமார்களை எழுப்புவதாக அமைந்துள்ளன. இவை, பாகவதர்களைப் பள்ளியுணர்த்துவ தாகவும், உள்ளுறைப் பொருளாக ஆழ்வார் பதின்மரை

4. சி. பாலசுப்பிரமணியன், ஆண்டாள், பக். 65-66.
5. தேவராஜன், வைணவமும் ஆழ்வார்களும், ப. 705

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

உணர்த்துவதாகவும் குறிப்பிடுவர். இது சுவாபதேசப் பொருள்; அஃதாவது உள்ளுறைப் பொருள். 'செல்வம், செயல், குணம் இவற்றில் பத்து வகைப்பட்ட ஆயர் சிறுமிகளை அஞ்ஞானத் துயிலிலிருந்து ஞான விழிப்பிற்குக் கொணர்வது வெளிப்படைப் பொருள் என்பர். 16 முதல் 21 வரை உள்ள பாடல்கள் கோயில் காப்பவன், வாயில் காப்பவன், நந்தகோபன், யசோதை, நப்பின்னை, கண்ணன், பலராமன் ஆகியோரைத் துயிலெழுப்பு வதாகவும், 22 முதல் 25 வரை உள்ள பாடல்கள் கண்ணனை எழுப்பிய பின் அவனது அருட்பார்வையை வேண்டி நிற்பதாகவும், இறுதியாக வரும் 26 முதல் 30 வரை உள்ள பாடல்கள் கண்ணனிடம் வேண்டுவனவற்றைக் கேட்பதாகவும் அமைந்துள்ளன. இம் முன்றாம் பகுதி ஆய மகளிரை எம்பெருமானின் கைங்கரியத்திற்குத் தகுதியுடையவராகச் செய்தல் ஆகும் என்பர்.[6]

திருப்பாவையின் முதற்பாடல்:

" மார்கழித் திங்கள் மதிநிறைந்த நன்னாளால்
நீராடப் போதுவீர்! போதுமினோ நேரிழையீர்
சீர்மல்கும் ஆய்ப்பாடிச் செல்வச் சிறுமீர்காள்
கூர்வேல் கொடுந்தொழிலன் நந்தகோபன் குமரன்
ஏரார்ந்த கண்ணி யசோதை இளஞ்சிங்கம்
கார்மேனிச் செங்கண் கதிர்மதியம் போல்முகத்தான்
நாராயணனே நமக்கே பறை தருவான்
பாரோர் புகழப் படிந்தேலோர் எம்பாவாய்"

"மார்கழித் திங்கள்" எனத் தொடங்கும் திருப்பாவையின் முதற் பாசுரத்திலேயே உபநிடதங்களின் ஆழ்பொருளை - மற்ற முப்பது பாசுரங்களின் பொருளை - மிகச் சுருக்கமாகக் கூறிவிடுகிறார் ஆண்டாள் நாச்சியார். 'மாதங்களில் நான் மார்கழியாக இருக்கிறேன்' என்று கண்ணபிரான் கீதையில் சொல்லியிருக்கிறார். மார்கழி மாதத்திற்கு 'மார்கசீர்ஷம்' என்று பெயர். 'மார்கம்' என்றால் 'வழி', 'சீர்ஷம்' என்றால் 'தலை'. வழிகளுக்குள்ளே உயர்ந்தது என்று பொருள். ஆண்டாள் காட்டிய உயர்ந்த வழி சரண்காகதி. அவசர லோகத்திலே ஓடிக்கொண்டிருகும் நம்மைப் போன்றவர்களுக்குச் சரணாகதியைத் தவிர வேறு உயர்ந்த உபாயம் இல்லை. இதைத் திருப்பாவையின் முப்பது பாசுரங்களில் ஆணித்தரமாக எடுத்துக்காட்டுகிறார் ஆண்டாள்". [7]

6. மு. நூ., ப. 20
7. முக்கூர் லக்ஷ்மி நரஸிம்மாச்சார்யார், மு. நூ., ப. 1.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

''சூரியோதயத்துக்குச் சற்று முன்புள்ள நேரம் பிரம்ம முகூர்த்தம் எனப்படுகிறது. ஆத்ம சாதனத்துக்கு அது சிறந்த வேளையாகும். மனிதர்களுடைய ஒரு வருஷம் தேவர்களுக்கு ஒரு நாள் ஆகும். தை மாதமாகிய உத்தராயண புண்ணிய காலம் அவர்களுக்குச் சூரியோதயம். அதிலிருந்து உத்தராயணம் ஆறு மாதம் அவர்களுக்குப் பகல். ஆடியிலிருந்து மார்கழி வரையில் தக்ஷிணாயனம் - அவர்களுக்கு அது இரவு. அதில் மார்கழி மாதம் விடியற்காலம் - தேவர்களது நாளில் பிரம்ம முகூர்த்தமாகிறது. இரவுப் பொழுதின் கடைசிப் பகுதியான 4 மணி முதல் 6 மணி வரையிலுள்ள 'பிரம்ம முகூர்த்தம்' என்பது மிக நல்ல வேளையாகக் கருதப்படுகிறது. அப்பொழுது செய்யும் தேவாராதனை, வந்தனை, வழிபாடு முதலியன மனத்தை நன்கு பண்படுத்த வல்லவைகளாகும். இங்ஙனம் மார்கழி மாதம் புலனடக்கம், கடவுள் வழிபாடு ஆகியவைகளோடு முழுதும் இணைக்கப் பட்டிருக்கிறபடியால் மாதங்களுள் தாம் மார்கழி மாதம் என்கிறார்'' [8].

இத்தகைய சிறப்புத் தோன்றும் மார்கழி மாதத்தில் நற்செயல்களை - நோன்பைச் - செய்வதற்குச் சிறந்தது வளர்பிறை என்பதால், 'மதி நிறைந்த நன்னாள்' என்று கொண்டாடுகின்றனர் ஆயர் சிறுமியர். பால் - நெய் முதலியவற்றால் சிறப்புற்றுத் திகழும் திருவாய்ப்பாடியில் கண்ணபிரான் வந்து பிறந்தமையால் 'சீர் மல்கும் ஆய்ப்பாடி' எனப்பட்டது. 'சீர்' என்று பகவானுடைய குணங்களைக் குறிப்பதாகக் கொண்டு 'பகவத் குணங்கள் வெள்ளமிடும் ஆய்ப்பாடி' என்றும் பொருள் கொள்ளலாம் என்பர் உரைகாரர்.

கண்ணனை மகனாகப் பெற்ற பின்பு அவனிடத்துள்ள அன்பு மிகுதியால் அவனுக்குத் தீங்கு செய்ய வருவாரைச் சீறிக் கொல்வதென்று எப்போதும் கூரிய வேலும் கையுமாக இருந்தமையால் நந்தகோபன் 'கூர்வேற் கொடுந்தொழிலன்' எனப்பட்டான்.

கண்ணபிரானது செயல்களைக் கண்ட களிப்பின் மிகுதியால் யசோதைக்குக் கண்கள் அலர்ந்து மிகுந்த அழகோடு விளங்குவதால் 'ஏராந்த கண்ணி' என அவளுக்கு அடைமொழி கொடுக்கப்பட்டது.

கண்ணனது முகத்தில் வீசும் ஒளிக்குக் கதிரவனும், குளிர்ச்சிக்குச் சந்திரனும் உவமையாக, 'கதிர்மதியம் போல் முகத்தான்' என்று கண்ணன் கூறப்பெற்றான்.

8. சி. பாலகப்பிரமணியன், மு. நூ., ப. 49

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

திருப்பாவையை உபநிடதம் என்று கூறும் வேதாந்த தேசிகர் இம் முதற்பாசுரத்திலேயே உபநிடதத்தின் சாரம் அமைந்துள்ளது எனக் குறிப்பிடுகிறார். அதாவது 'திருமாலே முழுமுதற் பொருள்; மற்றப் பொருட்கள் எல்லாம் அவனுடைய தனி உடம்பு; அந்தக் கார்மேனிச் செங்கண்ணே தியோர்களுக்குக் கதிரவனைப் போலவும், நல்லோர்களுக்கு மதியைப் போன்றும் இருக்கும்; எல்லா இன்பங்களையும் தருபவன் அவனே; அவனுக்குப் படிவதே புகழ் மற்றும் செல்வத்தினைத் தரும். நாராயணனைப் பணிவது என்பது சரணாகதித் தத்துவத்தின் அடிப்படையாகும்' என்கிறார் அவர். [9]

எந்த நூலிலும் முதல் பாடல், முதல் அத்தியாயம் முக்கிய மானது. அது சிறப்பாக அமைந்தால்தான் நூலை மேலே படிக்கவே தோன்றும். கம்ப நாடனின் 'உலகம் யாவையும்;' திருவாய்மொழியில் 'உயர்வற உயர்நலம்'; பெரியபுராணத்தில் 'உலகெலாம் உணர்ந்து'; பகவத் கீதையில் 'தர்ம க்ஷேத்ரே குரு க்ஷேத்ரே' - இவை கருத்துச் சிறப்பால் உயர்ந்து விளங்குபவை. அந்த வரிசையில் சேர்வதுடன் திருப்பாவை முப்பது பாடல்களின் சுருக்கமாய் அவற்றைச் சுட்டிக் காட்டும் சொற்றொடர்களுடனும் அமைந்த பாடல் இது.

'நாராயணனே நமக்கே பறை தருவான்' என்பது 'சிற்றஞ் சிறுகாலே' (29) பாடலைக் காட்டி நிற்கும்.

இப்பாடலில் நாராயணன் என்று குறித்ததால் எம்பெரு மானுடைய பரம், வியூகம், விபவம், அந்தர்யாமி, அர்ச்சை என்ற ஐந்து நிலைகளில் (வைகுந்தம், பாற்கடல், அவதாரம், மனத்துள் இருப்பு, ஆலய விக்கிரகங்கள்) பரவாசுதேவனாக வைகுந்தத்தில் இருக்கும் இருப்பை இப்பாடல் சுட்டிக் காட்டுவதாகவும் கூறுவர்.[10]

நோன்பின் போது செய்ய வேண்டியனவும் - விட வேண்டியனவும்

ஒரு சிறப்பான செயலைச் செய்யத் தொடங்கியவர்கள் அச்செயல் இனிது முடியும் வரை, சிலவற்றை விட்டுவிட வேண்டும் என்றும், சிலவற்றைக் கைக்கொண்டு ஒழுக வேண்டும் என்றும் மனத்தில் உறுதி கொள்வது உலகத்தில் காணப்படும் இயல்பு. அதற்கேற்ப, பாவை நோன்பு நோற்பதில் ஈடுபட்ட ஆயர் மங்கையர், தாங்கள் கைக்கொண்டு ஒழுகவேண்டியவற்றையும் விட்டுவிடவேண்டியவற்றையும் பற்றிக் கூறுகின்றனர்.

9. தேவராஜன், மு.நூ., ப. 705
10. பாரதி சுராஜ். திருப்பாவை விளக்கம், பக். 23-24

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

பாற்கடலுள் பையத் துயின்ற பரமனடி பாடுதல், நாட்காலே நீராடுதல், ஐயமும் பிச்சையும் ஆந்தனையும் கைகாட்டுதல் ஆகிய இம்மூன்றும் செய்யவேண்டியனவாக ஆயர் மகளிர் குறிப்பிடுகின்றனர்.

நெய்யுண்ணல், பாலுண்ணல், மையிட்டெழுதல், மலரிட்டு முடிதல், செய்யாதன செய்தல், தீக்குறளை சென்றோதல் ஆகிய ஆறும் விட்டுவிட வேண்டியவைகளாக நோன்பு நோற்கும் பெண்கள் கூறுகின்றனர்.

" வையத்து வாழ்வீர்காள்! நாமும்நம் பாவைக்குச்
செய்யும் கிரிசைகள் கேளீரோ பாற்கடலுள்
பையத் துயின்ற பரமன் அடிபாடி
நெய்யுண்ணோம் பாலுண்ணோம் நாட்காலே நீராடி
மையிட்டெழுதோம் மலரிட்டு நாம்முடியோம்
செய்யாதன செய்யோம் தீக்குறளை சென்றோதோம்
ஐயமும் பிச்சையும் ஆந்தனையும் கைகாட்டி
உய்யுமா றெண்ணி உகந்தேலோர் எம்பாவாய் "

(திருப்பாவை:2)

கண்ணபிரான் அவதரித்த ஆய்ப்பாடியில் பிறத்தலை விட மிகச் சிறந்த வாழ்வில்லை; ஆகவே ஆய்ப்பாடியில் பிறந்த பெண்களை, 'வையத்து வாழ்வீர்கள்' என்று விளிக்கின்றார் ஆண்டாள் நாச்சியார். 'உண்ணுஞ்சோறு, பருகுநீர், தின்னும் வெற்றிலையும் எல்லாம் கண்ணன்' என்று நம்மாழ்வார் கூறுவது போல எல்லா நுகர்ச்சிப் பொருளாகவும் உள்ள எம்பெருமானடி பாடுதலையே உண்ணுவதாக நினைக்கும் உறுதி கொண்டவர்கள் அவர்கள். ஆதலால், வேறு உணவில் விருப்பம் நீங்குமாறு, 'நெய்யுண்ணோம், பாலுண்ணோம்' என்கின்றனர். கண்ணனைக் காண்பதே கண்களுக்குப் பேறு; இப்பேறு வாய்க்குமுன் கண்களை 'மையிட்டெழுதோம்' என்றும், தலையை 'மலரிட்டு முடியோம்' என்றும் கூறுகின்றனர். நோன்பு நோற்பவர் தீய சொற்களைச் சொல்வதைத் தவிர்க்க வேண்டுமாதலால், 'தீக்குறளை சென்றோதோம்' என்று உறுதிப்பாடு எடுத்துக் கொள்கின்றனர்.

ஞானிகளுக்குத் தேவையான பொருளைத் தாமே வலியச் சென்று உரிய காலம் அறிந்து கொடுத்தல் ஐயம் ஆகும். தம்மிடம் வந்து யாசிப்பவர்களுக்கு உதவுதல் பிச்சையாகும். இவ் விரண்டையும் 'ஆந்தனையும் கைகாட்டி என்னும் தொடரால் குறிக்கின்றார் ஆண்டாள். மேலும், கொடுக்கிறவர்களுக்குச்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

சக்தியுள்ள அளவும், இனி, ஏற்கின்றவர்களுக்குச் சக்தியுள்ள அளவும் என்று கொண்டாலும் பொருந்தும். எவ்வளவு கொடுத்தாலும் 'நாம் என்ன கொடுத்துவிட்டோம்' என்று நெஞ்சத்தில் நினைக்க வேண்டும் என்பது 'கைகாட்டி' என்னும் சொல் நயத்தால் விளங்கும் என்பர் உரையாசிரியர்.

இப்பாசுரத்தில், ஆண்டாள், 'நாமும் நம் பாவைக்குச் செய்யும் கிரிசைகள் கேளீரோ' எனத் தொடங்கி, அடுத்த வரியிலேயே 'பையத் துயின்ற பரமனது அடியைப் பாடு'வதாகக் கூறுகிறார். பாவை வழிபாட்டில் 'பாவைத் தெய்வத்தின்' பெருமையைப் பாடுதலே மரபாக இருக்க, ஆண்டாள் தாம் அரங்கன் மேல் கொண்ட காதலால், அம்மரபினை ஒட்டுமொத்தமாகத் திருப்பாவையில் புறக்கணித்துவிடுகிறார். புறக்கணித்தது மட்டுமல்லாமல் அடுத்த பாசுரத்திலேயே, 'ஓங்கி உலகளந்த உத்தமன் பேர் பாடி, நாங்கள் நம் பாவைக்குச் சாற்றி நீராடினால், தீங்கின்றி நாடெல்லாம் திங்கள் மும்மாரி பெய்யும்' எனவும் கூறுகிறார். ஓங்கி உலகளந்தவனைப் பற்றிப் பாடி, அதைப் பாவைத் தெய்வத்திற்குச் சாற்றுவது எப்படிப் பொருத்தமாகும் என்பதைப் பற்றி ஆண்டாள் சிறிதளவும் சிந்தித்தார் இல்லை. ஆண்டாளின் உள்ளம் எப்போதும் கண்ணனைப் பற்றியே வட்டமிடுவதால் அவர் அதைப்பற்றிச் சிந்திக்கவில்லை. 'கண்ணனைத் தவிர வேறு எந்தக் கடவுளையும் நினைக்காத ஆண்டாளின் ஒருமுகமான பக்தியின் உயர்வு இதனால் துவக்கம் எய்துகிறது என்று சொன்னால் அது மிகையாகாது' என்பர் அறிஞர்.[11]

பாவை நோன்பினால் நாடு செழிக்கும்

'மாவலியிடம் வாமனனாய் மூன்றடி மண் கேட்டுப் பெற்ற அளவில் திரிவிக்கிரமனாக உயர்ந்த உத்தமனான திருமாலின் திருநாமங்களைப் பாடிப் பரவி இந்தப் பாவை நோன்பு நோற்று நீராடினால், நாடெல்லாம் மாதம் மூன்று மழை பொழியும்: நெற்பயிர்கள் ஓங்கி வளரும்; விளைந்த செந்நெற் பயிர்களில் நீர் மிகுதியால் கயல் மீன்கள் துள்ளி விளையாடும்; பூத்துள்ள குவளை மலர்களில், அழகிய வண்டுகள் உறங்கி மகிழும். பயிர் வளத்தால், செல்வ வளம் பெருகும்; பெரிய பசுக்கூட்டங்கள் எங்கும் நிறைந்திருக்கும். வள்ளல் தன்மையுடைய அவை, நிலைபெயராமல் ஒரே இடத்திலிருந்து, அவற்றின் காம்பு பற்றிக் கறக்க, குடம் குடமாகப் பாலைப் பொழிந்து கொண்டே யிருக்கும். இத்தகைய செல்வச் செழிப்பு என்றும் நீங்காது நிலைத்திருக்கும்' எனத்

11. தேவராஜன், மு.நூ., பக். 706-707

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

திருப்பாவையின் மூன்றாம் பாசுரத்தில் 'திருமால் நாமத்தை இனிதாகப் பாடி நோன்பு நோற்பதால் நாடெல்லாம் மழை பொழிந்து செல்வம் கொழிக்கும்' என எடுத்துரைக்கிறார் ஆண்டாள்.

திருப்பாவையில் வாமன அவதாரம் பேசப்பெறும் முதல் இடம் இது. உலகெல்லாம் தனதே என்று ஆணவம் கொண்டிருந்தான் மாவலி; அவனுக்காகக் குள்ள வடிவம் எடுத்தான் இறைவன்; வழங்கி வழங்கி உயர்ந்த அவன் கை மாவலிமுன் 'மூவடி மண் தா' என்று இரங்கி நின்று ஏந்தியது.

" என்னுடைய பாதத்தால் யான்அளப்ப மூவடிமண்
மன்னா தருகென்று வாய்திறப்ப "

என்று இந்நிகழ்ச்சியைப் பேசுவார் திருமங்கை ஆழ்வார்; தந்தான் மாவலி. ஓரடியால் பூமி, மற்ற அடியால் வானம். மூன்றாம் அடிக்கு இடமில்லாது போயிற்று; மாவலியின் தலையே இடம் ஆயிற்று. இந்த உலகில் அவன் திருவடி படாத பொருள் இல்லை என்று கூறும் அளவிற்கு உயர்ந்து எழுந்து ஓங்கி உலகளந்தான் திரிவிக்கிரமனாக வளர்ந்த வாமனன்; தனது திருவடித் தொடர்பு அனைவருக்கும் கிடைக்கும்படி அருள் செய்தான்; விண் சென்ற திருவடிக்குத் திருமஞ்சனம் செய்தான் பிரமன். அதுவே கங்கையாயிற்று என்பர். தன் காரியத்துக்காக அவன் வாமனனாக வந்து தானம் கேட்கவில்லை; தேவர்களுக்காக - பிறர் காரியம் செய்ய - தன்னைத் தாழ்த்திக்கொண்டான். வாயைத் திறந்து கேட்டான்; அதனாலே உயர்ந்தான்; ஓங்கினான்; உலகளந்தான்; உத்தமன் ஆனான்.

மார்கழி நோன்பின் கூறாக அந்த உத்தமன் பேர் பாடி வருகிறார்கள் ஆயர் சிறுமியர். இறைவன் உயர்ந்தவனா, அவன் நாமம் உயர்ந்ததா என்றால், அவனை விட அவன் நாமமே உயர்ந்தது என்பர் வைணவப் பெரியோர், 'கட்டிப் பொன் போலே அவன்; பணிப்பொன் போலே அவன் திருநாமம்' என்பது அவர்தம் கூற்று. அதனால், 'நாடினேன்; நாடி நான்கண்டு கொண்டேன் நாராயணா என்னும் நாமம்' (பெரிய திருமொழி, பா.1) என்று திருமங்கையாழ்வார் கூறுவது போன்றும், 'ஆடி ஆடி அகம் குழைந்து - இசை, பாடிப் பாடிக் கண்ணீர் மல்கி' (திருவாய்மொழி) என்று நம்மாழ்வார் பாடுவது போன்றும் ஆண்டாள் நாச்சியாரும் திருப்பாவை நூலைப் பாடிப் பாடிப் பரமன் நாமத்தைப் புனைந்துள்ளார்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

பரமன் அடிபாடி (2), உத்தமன் பேர் பாடி (3), வாயினால் பாடி(5), கேசவனைப் பாடவும் (7), பாடிப் பறை கொண்டு (8), முகில் வண்ணன் பேர்பாட (11), மனத்துக்கினியானைப் பாடவும் (12), கீர்த்திமை பாடி (13), பங்கயக் கண்ணனைப் பாடேலோர் எம்பாவாய், (14), மாயனைப் பாடேலோர் எம்பாவாய் (15), துயிலெழப் பாடுவான் (16), உன் மைத்துனன் பேர் பாட (18), திருத்தக்க செல்வமும் சேவகமும் யாம்பாடி (25), கோவிந்தா! உன் தன்னைப்பாடி (27) எனத் திருப்பாவையில் பரமன் பெயரைப் பலவாறு பாடுகிறார் ஆண்டாள்.

பாடிப் பாடிப் புனைந்த திருப்பாவையில் ஆண்டாள் போற்றிப் பரவும் திருமாலின் திருநாமங்களும் பெருமையும் வருமாறு:

நந்தகோபன் குமரன், யசோதை இளஞ்சிங்கம், கதிர்மதியம் போல் முகத்தான், நாராயணன் (1), பாற்கடலுள் பையத் துயின்ற பரமன் (2), ஓங்கி உலகளந்த உத்தமன் (3), ஊழி முதல்வன், பற்பநாபன் (4), மாயன், வடமதுரை மைந்தன், யமுனைத் துறைவன், ஆயர்குல அணிவிளக்கு, தாமோதரன் (5), வெள்ளத் தரவில் துயிலமர்ந்த வித்து (6), மூர்த்தி, கேசவன் (7), மாவாய் பிளந்தான், தேவாதி தேவன் (8), மாமாயன், மாதவன், வைகுந்தன் (9), புண்ணியன் (10), முகில் வண்ணன் (11), மனத்துக்கினியான் (12), புள்ளின் வாய் கீண்டான், பொல்லா அரக்கனைக் கிள்ளிக் களைந்தான் (13), சங்கொடு சக்கரம் ஏந்தும் தடக்கையன், பங்கயக் கண்ணான் (14), வல்லானை கொன்றான், மாற்றாரை மாற்றழிக்க வல்லான் (15), மணிவண்ணன் (16), ஓங்கி உலகளந்த உம்பர் கோமான் (17), மலர் மார்பன் (19), கலியே. செப்பமுடையாய், திறலுடையாய், விமலா (20), ஊற்றமுடையாய், பெரியாய், சுடரே (21), பூவைப் பூ வண்ணா (23), அன்றிவ்வுலகம் அளந்தாய், தென்னிலங்கை செற்றாய், சகடம் உதைத்தாய், கன்று குணிலா எறிந்தாய், குன்று குடையா எடுத்தாய் (24), ஒருத்தி மகன், நெடுமால் (25), கோவிந்தன் (28), மாதவன், செல்வத் திருமால் (30).

மழை பொழிய வேண்டுதல்

மார்கழி நோன்பு நோற்கும் காலத்தை முதற்பாட்டாலும், நோன்பு செய்யும் முறையை இரண்டாம் பாடலாலும், அதன் பயனாக மழை பொழியும் என்பதை மூன்றாம் பாடலாலும் கூறிய ஆண்டாள், அந்த மழை எப்படிப் பொழிய வேண்டும் என்பதை நான்காம் பாடலில் விளக்குகின்றார்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

'பெருங்கடலில் புகுந்து நீரை முகந்து, பேரொலி செய்து விண்ணில் ஏறி, ஊழி முதல்வனான திருமாலது திருமேனி போல உடல் கறுத்து, வலிமை பொருந்திய அழகிய தோள்களையுடைய பத்மநாபனது வலது கையில் உள்ள சக்கரம் போல ஒளி வீச வேண்டும்; இடது கரத்தில் உள்ள பாஞ்சசன்யம் என்ற சங்கு போல் இடி இடித்து முழங்க வேண்டும்; அவனது கரத்திலே உள்ள சார்ங்கம் என்ற வில்லிலிருந்து புறப்படுகின்ற அம்புகளைப் போல மழை பொழிய வேண்டும்; இம்மழை நாங்கள் உலகில் வாழச் செய்வதாய் இருக்க வேண்டும்; நாங்கள் மார்கழி நீராட்டத்தில் பங்கு பெறவும், நீர் நிலைகளில் தண்ணீர் நிரம்பி இருக்க வேண்டும்' என்கிறார் ஆண்டாள்.

மழையைப் பாடும்போதும் இறைவனின் நினைவே வருவதும், உவமைகளாக அவனது திருக்கரங்களில் உள்ள ஆயுதங்களே அமைவதும் இப்பாடலின் தனிச்சிறப்புகள் ஆகும். எம்பெருமான் நினைவால் ஆட்கொள்ளப்பட்ட ஆண்டாள் மழை வடிவிலும் மாலவனையே காண்கிறார்.

" ஆழிமழைக்கண்ணா! ஒன்றுநீ கைகரவேல்
ஆழியுள் புக்கு முகந்துகொடு ஆர்த்தேறி
ஊழி முதல்வன் உருவம்போல் மெய்கறுத்துப்
பாழியந் தோளுடைப் பற்பநா பன்கையில்
ஆழிபோல் மின்னி வலம்புரிபோல் நின்றதிர்ந்து
தாழாதே சார்ங்கம் உதைத்த சரமழைபோல்
வாழ உலகினிற் பெய்திடாய் நாங்களும்
மார்கழி நீராட மகிழ்ந்தேலோர் எம்பாவாய் " (4)

என்று மழையைத் திருமாலோடு, ஒப்புமை கூறும் திறன் அறிந்து இன்புறுதற்குரியது.

இதே போல் மணிவாசகர் இறைவியான அம்பிகையின் வடிவாக 'முன்னிக் கடலைச் சுருக்கி' என்ற திருவெம்பாவைப் பாடலைப் பாடியிருப்பது இங்கு ஒப்புநோக்கத்தக்கது. 'மேகமே, நீ அம்மையினது திருமேனி போல நீல நிறத்தோடு விளங்கி, அவளது இடை போல மின்னி, அவள்தன் திருவடிமேல் அணிந்த சிலம்பு போல ஒலித்து, அவளது அழகிய புருவம் போல வானவில்லிட்டு, அவளது திருவருளைப் போலப் பொழிவாயாக' என்பது அப்பாடற் கருத்தாகும்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

" முன்னி, கடலைச் சுருக்கி எழுந்து உடையாள்
என்னத் திகழ்ந்து, எம்மை ஆளுடையான் இட்டிடையின்
மின்னிப் பொலிந்து, எம்பிராட்டி திருவடிவேல்
பொன்அம் சிலம்பில், சிலம்பி, திருப்புருவம்
என்னச் சிலைகுலவி, நம்தம்மை ஆளுடையாள்
தன்னில் பிரிவுஇலா எம்கோமான் அன்பர்க்கு
முன்னி, அவள்நமக்கு முன்சுரக்கும் இன்அருளே
என்னப் பொழியாய் மழை; ஏல்ஓர் எம்பாவாய் "

(திருவெம்பாவை, பா.16)

கண்ணனைத் துதித்தால் பாவங்கள் நீங்கும்

திருப்பாவையின் ஐந்தாவது பாடலில் கண்ணனைத் தொழுதால் பாவங்கள் நீங்கும் என்கிறார் ஆண்டாள். 'கண்ணன் மாயச் செயல்களை உடையவன்; நிலைபெற்ற வடமதுரைக்குத் தலைவன்; தூய்மையும் பெருமையும் கொண்ட நீரையுடைய யமுனை நதித் துறைக்கு உரியவன்; ஆயர் குலத்தில் தோன்றிய அழகிய மங்கல விளக்குப் போன்றவன்; தாயாகிய தேவகியின் வயிற்றை விளங்கச் செய்தவன்; 'தாமோதரன்' என்று பெயர் பெற்ற கண்ணனை வழிபடும் நாம் தூய்மை யுடையராய் வந்து, நல்ல மலர்களைத் தூவி வணங்கி, வாயாரப் பாடி, மனத்தினால் அவனைத் தியானம் செய்ய, முன்னே செய்த பிழைகளும், இனிமேல் தன்னையறியாமல் செய்யக் கூடிய பாவங்களும் நம்மை நெருங்கா; தீயில் இட்ட பஞ்சு போல் அவை உருவிழந்து போகும். ஆகவே, அக்கண்ணனின் திருநாமங்களைச் சொல்லுங்கள்' என்று அழைக்கிறார் ஆண்டாள் நாச்சியார் :

" மாயனை மன்னு வடமதுரை மைந்தனைத்
தூய பெருநீர் யமுனைத் துறைவனை
ஆயர் குலத்தினில் தோன்றும் அணிவிளக்கைத்
தாயைக் குடல் விளக்கம் செய்த தாமோதரனைத்
தூயோமாய் வந்துநாம் தூமலர்தூ வித்தொழுது
வாயினாற் பாடி மனத்தினாற் சிந்திக்கப்
போய பிழையும் புகுதருவான் நின்றனவும்
தீயினில் தூசாகும் செப்பேலோர் எம்பாவாய் " (5)

திருப்பாவையில் வைணவக் கொள்கைகள்

இவ்விடத்தில் வைணவத்தின் மையமான தத்துவங்களைப் பற்றி அறிந்துகொள்ள வேண்டும். வைணவ நெறியில் யாவரும் ஏற்றுக் கொள்ளும் மையக் கொள்கைகள் ஐந்து உள்ளன.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

அவையாவன:

1. நாம் துய்த்தற்குரிய இறையியல்பு (எம்பெருமான் ஸ்வரூபம்)
2. இறையின்பத்தைத் துய்க்கும் உயிரிலக்கணம் (சீவாத்து மாவின் ஸ்வரூபம்)
3. இறைவனை அடைய ஒட்டாது குறுக்கிடும் தடைகள் (விரோதி ஸ்வரூபம்)
4. வீடுபேற்றிற்குரிய உபாயங்கள் (உபாய ஸ்வரூபம்)
5. இறுதி இலட்சியமாகிய பகவதனுபவம் (இறையனுபவத்தின் இயல்பு)

இவற்றை 'அர்த்த பஞ்சக ஞானம்' என்று உரைப்பர். முக்தியைப் பெற விருப்பம் கொண்டவன், அர்த்த பஞ்சகம் எனப்படும் இந்த ஐந்து வகையான ஞானங்களைப் பெறுதல் வேண்டும் என்பது தான் வைணவத்தின் மையக் கொள்கை ஆகும்.

இறையியல்பு

உண்மைமயமாதல் (ஸத்யத்வம்), அறிவு மயமாதல் (ஞானத்வம்), வரம்பின்மை (அநந்தத்வம்), இன்பமயமாதல் (ஆநந்தத்வம்), மாசின்மை (அமலத்வம்) என்னும் இயல்புகளும், தென்கலையார் மிகுதியாகக் குறிப்பிடும் எளிவருதல், இரங்குதல், அருள்பாலித்தல் (சௌலப்பியம், சௌசீல்யம், காருண்யம்) என்னும் பேரருட் குணங்களும் திருமாலின் திவ்விய குணங்களாகக் கூறப்பெற்றுள்ளன. ஞானம், சக்தி, பலம், ஐசுவரியம், வீரியம், தேஜசு என்னும் அறுவகைக் குணங்கள் இறைவனுக்குரியன என்னும் கருத்தில் 'பகவான்' (பகம் = 6) என்னும் திருநாமம் எழுந்தது என்பர்.

இறைவனின் ஐவகை நிலைகள்

திருமால் தாங்கியுள்ள திருவுருவங்களைப் பரத்துவம், வியூகம், விபவம், அந்தர்யாமி, அர்ச்சை என்று ஐந்தாகக் கூறுவர்.

பரத்துவம் - இறைவன் வைகுண்டத்தில் எழுந்தருளியிருக்கும் நிலை

வியூகம் - பாற்கடலில் பள்ளி கொண்டிருக்கும் நிலை

விபவம் - இராமன், கிருஷ்ணன் போன்ற அவதாரங்கள்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

அந்தர்யாமி - அவன் நமக்கு உள்ளும் புறமுமாக எழுந்தருளி யிருக்கும் நிலை

அர்ச்சை - திவ்ய தேசங்களில் காட்சியளிக்கும் மூர்த்திகள்.

தென்கலை வைணவப் பிரிவின் தலைவராகத் திகழ்ந்த பிள்ளை லோகாச்சாரியார் இவ் ஐவகைத் திருமேனிகளையும் பின்வருமாறு விளக்கியுள்ளார்.

''பூகத ஜலம் போலே அந்தர்யாமித்துவம் (பூமிக்குள் ஆழத்தில் கிடக்கும் நீர் போன்றது)-

ஆவர்ண ஜலம் போலே வியூகம் (அண்டத்திற்குப் புறத்தே பெருகிக் கிடக்கும் ஆவரண நீர் போன்றது)-

பாற்கடல் போலே வியூகம் (அண்டத்திற்கு உட்பட்டிருந்தும் கிட்டுதற்கு அரியது)-

பெருக்காறு போலே விபவங்கள் (எப்பொழுதோ வெள்ளமிட்டோடின பெருக்காறுகள்)-

அதிலே தேங்கிய மடுக்கள் போலே அர்ச்சாவதாரம் (பெருக்காறு வெள்ளமிட்டோடிய பொழுது அதிலே தேங்கி நின்ற நீர்நிலைகள் போன்றவை).

நீர்விடாய் மிக்குத் துடிக்கும் ஒருவனுக்கு முதல் நான்கு நிலைகளிலும் உள்ள நீர் உடனே பயன்படாது; மடுக்களில் உள்ள நீரோ உடன் விடாய் தீரப் பயன்படும். எனவே, ஐவகைத் திருமேனிகளில் திவ்விய தேசங்கள் ஆகிய திருக்கோயில்களில் எழுந்தருளியிருக்கும் மூர்த்தங்களே அன்பர்களின் ஆன்மிகத் தேவைகளைப் பெரிதும் நிறைவு செய்வன என்பதும், பக்தி மார்க்கமே திருவருள் பெறுவதற்கு உகந்த நெறி என்பதும் பிள்ளை உலகாசிரியரின் எண்ணம் எனலாம். [12]

திருப்பாவையில் ஒன்று முதல் ஐந்து பாசுரங்களில் இறை இயல்பை விளக்கியுள்ளார் ஆண்டாள். முதல் பாசுரத்தில், 'கார்மேனிச் செங்கண் கதிர் மதியம் போல் முகத்தான் நாராயணன் என்பதால் பரத்துவமும், இரண்டாவது பாசுரத்தில் 'பாற்கடலில் பையத் துயின்ற பரமன்' என்பதால் வியூகமும், மூன்றாவது பாசுரத்தில் 'ஓங்கி உலகளந்த உத்தமன்' என்பதால் விபவமும், நான்காவது பாசுரத்தில் 'ஆழிமழைக் கண்ணன்', 'ஊழி முதல்வன்', 'பாழியந் தோளுடைப் பற்பநாபன்' முதலியவற்றால் மீண்டும்

12. சோ.ந. கந்தசாமி, இந்தியத் தத்துவக் களஞ்சியம் - தொகுதி 3, பக். 193-194.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

பரத்துவமும், இரண்டாவது பாசுரத்தில் பகவானை மனத்தில் பாவித்துக் கொண்டிருக்கும் அந்தர்யாமித்துவமும், பாவைக்குச் செய்யும் கிரிசைகள் என்பவற்றால் அர்ச்சை ஆகிய இரண்டும் தெரிவிக்கப்படுகின்றன. ஐந்தாவது பாசுரத்தில்,

" மாயனை மன்னு வடமதுரை மைந்தனைத்
தூய பெருநீர் யமுனைத் துறைவனை
ஆயர் குலத்தில் தோன்றும் அணிவிளக்கைத்
தாயைக் குடல்விளக்கம் செய்ததாமோதரனை "

என்ற பகுதியால் மீண்டும் விபவமும் காட்டப் பெறுகின்றது. இவ்வைந்து பாசுரங்களும் இறையியல்பை நன்கு விளக்குகின்றன எனலாம்.

ஜீவாத்மாவின் ஸ்வரூபம் (ஆன்மாவின் இயல்பு)

இரண்டாவதாகக் கூறப்படுவது ஆன்மாவின் இயல்பு. இதைப் பற்றி அறியுங்கால் - நித்தியர், முத்தர், பத்தர், கேவலர், முமுட்சுகள் என்ற ஐந்து வகை ஆன்மாக்களைப் பற்றிய ஞானம் ஏற்படும். திருப்பாவையின் ஆறு முதல் பதினைந்து வரையான பாடல்களில் இது விளக்கம் அடைகின்றது. இவற்றுள் இறைவனை மறந்து, அவனை அடையச் செய்ய வேண்டிய முயற்சிகளையும் மறந்து கிடக்கும் ஆன்ம சொரூபமும், சீவர்கள் மாயையினால் பிரகிருதி நிஷ்டையில் உறங்கிக் கிடப்பதால் உபாய விரோதி சொரூபமும் தெரிவிக்கப் பெறுகின்றன. 'புள்ளரையன் கோயிலில் வெள்ளை விளிசங்கின் பேரரவம் கேட்டிலையோ' (6), 'கீசு கீசு என்று எங்கும் ஆனைச்சாத்தன் கலந்து பேசின பேச்சரவம் கேட்டிலையோ...', 'காசும் பிறப்பும் கலகலப்பக் கைபேர்த்து, வாச நறுங்குழல் ஆய்ச்சியர் மத்தினால், ஓசைப்படுத்த தயிரரவம் கேட்டிலையோ?' (7), 'கோது கலமுடைய பாவாய் எழுந்திராய்' (8), 'மாமீர் அவளை எழுப்பீரோ?' (9), 'பண்டொருநாள், கூற்றத்தின்வாய் வீழ்ந்த கும்பகருணனும் தோற்றும் உனக்கே பெருந்துயில்தான் தந்தானோ?' (10), 'எற்றுக்குறங்கும் பொருளே' (11), 'இனித்தான் எழுந்திராய் ஈதென்ன பேருறக்கம்?' (12), பள்ளிக் கிடத்தியோ பாவாய் நீ?' (13), 'எங்களை முன்னம் எழுப்புவான் வாய் பேசும் நங்காய் எழுந்திராய்' (14), 'எல்லே இளங்கிளியே இன்னம் உறங்குதியோ?' (15) என்பவற்றால் சீவாத்மாவின் உறங்குகின்ற விரோதி சொரூபம் காட்டப் பெறுகின்றது. [13]

13. ந. சுப்பு ரெட்டியார், மு.நூ. ப. 732

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

திருப்பாவை ஆறாவது பாசுரம் முதல் பதினைந்தாவது பாசுரம் முடிய, முதலாழ்வார்கள் முதல் ஆழ்வார்கள் பதின்மரையும் (ஆண்டாள், மதுரகவியாழ்வார் நீங்கலாக) துயிலெழுப்புவதாக, ஸ்ரீ வானமாமலை ஜீயர் உள்ளுறை கூறுவார் என்று சொல்லப்படுகிறது. ''ஏனைய ஆழ்வார்களை ஆண்டாள் துயில் எழுப்புதலை 'ஸ்வாபதேசம்' எனக் குறிப்பர். 'தன் யுக்தியினால் பெரியவர்களை நிர்ணயம் செய்வது' என்பது இதற்குப் பொருள். இவ்வாறு ஆண்டாள் செய்வதன் நோக்கம், பாவை பாடுவதால் தாம் அடையும் இன்பம் மற்றவர்களையும் சென்றடைய வேண்டும் என்ற நல்ல எண்ணமே'' ஆகும். [14] திருப்பாவைப் பாசுரங்களால் ஆழ்வார்களைத் துயிலெழுப்புவது எனக் கொள்வது மிகவும் செயற்கையான நயமாகத் தோன்றுகிறது. ஆயினும், வைணவ உலகம் அப்படித்தான் போற்றுகிறது.

'புள்ளும் சிலம்பினகாண்' எனத் தொடங்கும் ஆறாவது பாசுரத்தில் வரும் 'பிள்ளாய்' என்பது பிள்ளை என்பதன் விளி ஆகும். எல்லா உயிர்களையும் காத்தருளுந் தன்மை முதலான இறைவன் திருக்குணங்களை மறந்து கண்ணனைக் குழந்தையாகப் பாவித்துப் பாடி மகிழ்ந்தவராதலால் பெரியாழ்வார் 'பிள்ளை' என்னும் தகுதி பெற்றவராவர்.

'கீசு கீசு என்று' எனத் தொடங்கும் ஏழாவது பாசுரம், பெரியாழ்வாருக்கு அடுத்த முந்தினவரான குலசேகராழ்வாரைத் துயிலுணர்த்துவதாகும் என்பர்.

" பேய ரேயெனக் கியாவரும், யானுமோர்
பேய னேயவர்க் கும்இது பேசியென்
ஆய னே!அரங் கா! என்ற ழைக்கிறேன்
பேய னாயொழிந் தேனெம்பி ரானுக்கே "

(பெருமாள் திருமொழி, 3:8)

என்று தம்மைப் பேயராகச் சொல்லிக் கொண்டவர் குலசேகராழ்வார். மேலும் இவர், 'ஏர் மலர்ப் பூங்குழல்', 'ஆலைநீள் கரும்பு', 'மன்னுபுகழ்க் கௌசலைதன்' என்ற பதிகங்களில் பலவற்றைப் பெண்களின் தன்மையை அடைந்து பாடியுள்ளார். இக்காரணங்களால், 'பேய்ப்பெண்ணே', 'நாயகப் பெண் பிள்ளாய்' என்ற விளிகள் குலசேகராழ்வாரைக் குறிப்பனவாகக் கொள்ள இடந்தருகின்றன.

14. தேவராஜன், மு.நூ. ப. 732

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

'கீழ்வானம் வெள்ளென்று'எனத் தொடங்கும் எட்டாவது பாசுரம், குலசேகராழ்வாருக்கு அடுத்த முந்தினவரான நம்மாழ்வாரைத் துயிலுணர்த்துவது ஆகும். 'கோதுகலமுடைய பாவாய்' என்ற விளி நம்மாழ்வாரை உணர்த்துவதாகும். 'நானும் எம்பிரானிடத்துக் குதூகலங் கொண்டேன்; அவனும் என்னிடத்துக் குதூகலங் கொண்டான்' என்று அருளிச் செய்தவர் நம்மாழ்வார். மேலும் 'சூழ்வினையாட்டியேன் பாவையே' என்றும், 'என்பாவை போயினித் தண்பழனத் திருக்கோளூர்க்கே' என்றும் பல இடங்களில் தம்மைப் பாவையாகச் சொல்லிக்கொண்டவர் நம்மாழ்வார். அதனால் இவ்விளி நம்மாழ்வாருக்குப் பொருந்துவதாகும்.

'தூமணி மாடத்து' எனத் தொடங்கும் ஒன்பதாவது பாசுரம் நம்மாழ்வாருக்கு அடுத்த முந்தினவரான திருமழிசையாழ்வாரை உணர்த்துவதாகும். 'மாமான் மகளே' என்பது ஆண்டாளுக்கும் திருமழிசையாழ்வாருக்கும் உள்ள ஒருவகையான குலத் தொடர்பை உணர்த்தும் என்பர். ஆண்டாளும் (மகாலட்சுமியும்) திருமழிசைப் பிரானும் பிருகு குலத்தில் தோன்றியவர்கள். ஆண்டாள் கோபாலர் குலத்திற்கு வந்தது போலவே திருமழிசையாழ்வாரும் பிரம்பன் குடிக்கு வந்தவர் ஆவர். 'மாயமென்ன மாயமே' என்றும், 'மாயமாய மாக்கினாய் உன்மாயமுற்று மாயமே' என்றும் எம்பெருமானுடைய மாயங்களைப் பாடி மகிழ்ந்தவர் இவ்வாழ்வார். 'மாதவனை ஏத்தாதவர் ஈனவரே' என்றவரும் இவரே. ஆகவே, 'மாமாயன் மாதவன் வைகுந்தன் என்றென்றும் நாமம் பலவும் நவின்ற' ஆழ்வார் இவரென்பது பொருந்தும்.

'நோற்றுச் சுவர்க்கம் புகுகின்ற அம்மனாய்' எனத் தொடங்கும் பத்தாவது பாசுரம், திருமழிசையாழ்வாருக்கு அடுத்த முந்தினவரான பேயாழ்வாரை உணர்த்தும் என்பர். பொய்கையார், பூதத்தார், பேயார் ஆகிய இம்மூவரையும் ஒன்று சேர்த்து அனுபவிக்கக் கருதிய எம்பெருமான் ஒரு பெருமழையைக் காரணமாகக் கொண்டு திருக்கோவலூர் இடைகழியில் இம்மூவரையும் ஒன்றுசேர்த்தார். பொய்கையாரும் பூதத்தாரும் இரு விளக்கேற்றி இருளை அகற்ற, பேயாழ்வார், 'திருக்கண்டேன் பொன்மேனி கண்டேன்' என்று இறைவனை அனுபவித்தார். இதுவே இப்பாசுரத்தில் 'நோற்று' என்று குறிப்பதாகும். 'சுவர்க்கம்' என்பது அவர் அனுபவித்த ஆனந்தம்.

திருக்கோவலூர் இடைகழியில் பொய்கையார் முன்னே புகுந்து தாளிட்டுக் கொண்டார். பிறகு பூதத்தார் வந்து சேர, அவர்க்குப் பொய்கையார் வாசல் திறந்தார்; பிறகு வந்த பேயார்க்கு பூதத்தார்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

வாசல் திறந்தார். இப் பேயார்க்குப் பிறகு ஒருவரும் வராததால் வாசல் திறக்க வேண்டிய நிலை பேயார்க்கு ஏற்படவில்லை. ஆகவே 'வாசல் திறவாதார்' என்பது பேயாழ்வாரைக் குறிக்கின்றது.

'கற்றுக் கறவைக் கணங்கள்' எனத் தொடங்கும் பதினொன்றாவது பாசுரத்தில் வரும் 'குற்றமொன்றில்லாத கோவலர்தம் பொற்கொடியே' என்ற விளி பேயாழ்வார்க்கு முந்தினவரான பூதத்தாழ்வார்க்கு நன்கு பொருந்துவதாகும். ஏனெனில் 'கோல் தேடி ஓடுங் கொழுந்ததே போன்றதே, மால்தேடி ஓடும் மனம்' (நாலா 2208) என்கிற பாசுரத்தினால் தம்மை ஒரு கொடியாகச் சொல்லிக் கொண்டவர் இவர்.

'கனைத்திளங் கற்றெருமை' என்னும் பன்னிரண்டாவது பாசுரம், பூதத்தாழ்வாருக்கு முந்தினவரான பொய்கையாழ்வாரை உணர்த்துவது. உலக வழக்கில் 'தங்கை' என்று இலக்குமியையும், 'தமக்கை' என்று மூதேவியையும் சொல்வது உண்டு. இலக்குமி தாமரை மலரில் பிறந்தவள். அதே போல் பொய்கையாழ்வாரும் தாமரை மலரில் தோன்றியவர். இவ்வொற்றுமை கருதித் 'தங்காய்' என விளிக்கும் தகுதி படைத்தவராகிறார் பொய்கையாழ்வார். இப்பாசுரத்தில் வரும் 'நற்செல்வன் தங்காய்' என்ற விளி மதுரகவியாழ்வாரையும் உணர்த்துவதாகும் என்பர். 'நற்செல்வன்' என்பது நம்மாழ்வாரையும், அவர் திருவாய்மொழி அருளிச் செய்யும்போது, மதுரகவிகள் அவரது கையாக இருந்து பட்டோலை கொண்டவர் ஆதலால் இந்த விளி மதுரகவிகளை உணர்த்தும் என்பர்.

'புள்ளின் வாய் கீண்டானை' எனத் தொடங்கும் பதின்மூன்றாவது பாசுரத்தில் வரும் 'போது அரிக் கண்ணினாய்' என்னும் விளி, ஆண்டாளுக்கு அடுத்த தொண்டரடிப் பொடியாழ்வாரை உணர்த்துவதாகும். இவ்வாழ்வார் எம் பெருமானுக்கு மலர்த்தொண்டு செய்தவர். மலர்களைப் பறிப்பதிலேயே தம் கண்பார்வையைச் செலுத்தியவர். எனவே 'போது அரிக் கண்ணினாய்' என்ற விளி இவருக்குப் பொருந்துவதாகும்.

'உங்கள் புழைக்கடை' எனத் தொடங்கும் பதினான்காவது பாசுரம் தொண்டரடிப்பொடியாழ்வாருக்கு அடுத்த திருப்பாணாழ்வாரை உணர்த்தும் 'நங்காய்', 'நாணாதாய்', 'நாவுடையாய்' என்ற மூன்று விளிகளும் திருப்பாணாழ்வாருக்கு நன்கு பொருந்தும். 'நங்கை' என்பது குணபூர்த்தியைச் சொல்லுவது ஆகும். லோக

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

சாரங்க முனிவர் இவரைத் தோளின் மீது ஏறுமாறு வேண்ட, இவரும் எம்பெருமானை எண்ணி ஏறியது குணபூர்த்தியாகும். அவ்வாறு ஏறிய பொழுது இவர் செருக்குக் கொள்ளாமல் இருந்தார்; ஆகவே 'நாணாதாய்' என்பது இவரை உணர்த்தும். 'பாண்பெருமாள் பாடியதோர் பாடல் பத்தும் பழமறையின் பொருளென்று பரவுமின்கள்' என்று தேசிகன் இவரைப் புகழ்ந்துள்ளார். ஆகவே, 'நாவுடையாய்' என்பது இவருக்கு முற்றிலும் பொருந்துவதாகும்.

'எல்லே இளங்கிளியே' எனத் தொடங்கும் பதினைந்தாம் பாசுரம் திருப்பாணாழ்வாருக்கு அடுத்தவரான திருமங்கை யாழ்வாரை உணர்த்தும் என்பர். திருமங்கையாழ்வார், இரண்டு ஆய்ச்சியர்க்கு இடையே நடைபெறும் உரையாடல் வடிவத்தில் 'மானமரு மென்னோக்கி' என்ற பாசுரத்தை அருளிச் செய்தவர். இவரை உணர்த்தும் இப்பாசுரம், உரையாடல் போக்கில் அமைந்துள்ளது. இவர் 'கிளி போல் மிழற்றி நடந்து' என்றும், 'மென்கிளி போல் மிக மிழற்றும் என் பேதையே!' என்றும் பல பாசுரங்களில் தம்மைக் கிளியாகச் சொல்லிக் கொண்டவர். மேலும், சொல்லியதையே சொல்லுவது கிளியின் இயல்பு. அது போலவே, இவர் 'மாறன் பணித்த தமிழ் மறைக்கு மங்கையர்கோன் ஆறங்கம் கூற' என்றபடி நம்மாழ்வார் கூறியவற்றை ஒட்டியே தம் பாசுரங்களை அருளிச் செய்தவர். ஆகவே, 'இளங்கிளியே' என்ற விளி இவருக்குப் பொருந்துவதாகும் என்பர் உரைகாரர்.

'பரம ரகஸ்ய விசேஷார்த்தம்' - அதாவது திருப்பள்ளி யுணர்த்துதல் - எனப்படும் இச்செயலைத் தமக்கு முன்னதாக அவதரித்த பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார், திருமழிசையாழ்வார், குலசேகராழ்வார், நம்மாழ்வார், மதுரகவி யாழ்வார், பெரியாழ்வார் மட்டுமன்றி, தமது காலத்திற்குப் பின்பு அவதரிக்கப்போகும் தொண்டரடிப் பொடியாழ்வார், திருப்பாணாழ்வார். திருமங்கையாழ்வார் ஆகியோரையும் தமது அகக்கண்ணால் கண்டு, அவர்களையும் முன்று பாசுரங்களில் ஆண்டாள் அடையாளம் காட்டுவதாக ஆன்றோர்கள் கூறுவர். [15]

பகவத் சொரூபமாகிய இரட்சகத்துவம்

திருப்பாவையில் 16 முதல் 20 வரை உள்ள பாசுரங்கள் 'சம்சாரக் கடலில் மூழ்கித் தம்மை மறந்து கிடக்கும் சீவர்களை மறந்து பகவான்

15. மு. நூ., பக். 718 ஆழ்வார்களின் ஆரா அமுது 719

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

தன்னை அடைந்த நித்திய முத்தர்களிடையே மயங்கியவண்ணம் உறங்கிக் கிடப்பதை உணர்ந்து அவனை எழுப்புவதாக' அமைந்துள்ளவையாகும். [16]

கண்ணனைத் துயிலெழுப்ப விரும்பிய ஆயர் சிறுமிகள், நந்தகோபர் மாளிகைக்குச் சென்று கொடிகள் காணப்படுகின்ற தோரணங்களையுடைய வெளி வாசலைக் காப்பவனை (கோயில் காப்போன்) முதலில் எழுப்புகின்றனர். அடுத்து அரண்மனை உள்வாசலைக் காப்பவனை (வாயில் காப்போன்) எழுப்புகின்றனர். 'ஆயர் சிறுமியராகிய எங்கட்கு மணிவண்ணனாகிய மாயன் பறையைத் தருவதாக நேற்றே சொன்னான். எனவே தூய்மையுடன் வந்திருக்கின்றோம், உறக்கத்தை விட்டு எழுந்திருக்கும்படி திருப்பள்ளி எழுச்சி பாடவேண்டும்,' என்று வாயிற்காப்போனிடம் சொல்லுகிறார்கள் ஆயர் சிறுமியர். 'ஆசாரியனை முன்னிட்டுப் பெருமானைப் பற்றுதல் வேண்டும்' என்பது வைணவ நெறி. 'ஆசாரியனே மேலான தெய்வம்; ஆசார்யனே மேலான பயன்; ஆசார்யனே விரும்பப்படும் பொருள்; ஆசார்யனே மேலான செல்வம்' என்று கூறப்படுவதனால் 'ஆயர் சிறுமியர்களான பாகவதர்கள், கோயில் காப்பவனான ஆசார்யனை முன்னிட்டுக் கொண்டு இறைவனை அடைய முயல்கின்றனர்' என்பதைத் திருப்பாவையின் பதினாறாவது பாசுரம் உணர்த்துகின்றது.

பற்றுக்களை நீக்குதல்

கோயில் காப்பான், வாசல் காப்பான் ஆகியோரின் இசைவு பெற்று உள்ளே நுழைந்த சிறுமியர், அடுத்த பாடலில் நந்தகோபனையும், யசோதைப் பிராட்டியையும், கண்ண பிரானையும், பலராமனையும் துயிலெழுப்புகின்றனர். 'அம்பரம் ஊடறுத்து ஓங்கி உலகளந்த உம்பர்கோமானே உறங்காது எழுந்திராய், செம்பொற் கழலடிச் செல்வா, பலதேவா, உம்பியும் நீயும் உறங்கேல்' என்று எழுப்புகின்றனர். பின்னர்க் 'கந்தம் கமழும் குழலீ! கடைதிறவாய் என்று நப்பின்னைப் பிராட்டியையும் (18), 'குத்துவிளக்கெரியக் கோட்டுக்கால் கட்டில்மேல் மெத்தென்ற பஞ்ச சயனத்தின் மேலேறிக் கொத்தலர் பூங்குழல் நப்பின்னை கொங்கைமேல் வைத்துக் கிடந்த மலர்மார்பா வாய்திறவாய்' (19) என்று கண்ணபிரானையும், நப்பின்னைப் பிராட்டியையும் துயிலுணர்த்துகின்றனர்; 'மூப்பத்து மூவர் அமரர்க்கு முன்சென்று, கப்பம் தவிர்க்கும் கலியே! துயிலெழாய், செற்றார்க்கு வெப்பம் கொடுக்கும் விமலா! துயிலெழாய்' என்று

16. ந. சுப்புரெட்டியார், மு. நூ., ப. 23

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

கண்ணபிரானையும் கண்ணனைத் தந்தருளுமாறு நப்பின்னைப் பிராட்டியையும் துயில் எழுப்புகின்றனர். எங்கள் நோன்பு நிறைவேறுவதற்காக, ஆலவட்டமும், கண்ணாடியும் தந்து உன் கணவனை எங்களுடன் நீராட அனுப்ப வேண்டும்' என்று நப்பின்னையிடம் இறைஞ்சுகிறார்கள் ஆயர் சிறுமியர். 'உக்கம்' என்பது ஆலவட்டம் ஆகிய விசிறியைக் குறிக்கும். உக்கம் தருதல் என்பது அகப்பற்று, புறப்பற்றுக்களை நீக்குதல் - அதாவது நான், எனது என்ற அகங்கார மமகாரங்களை நீக்குதல் எனப் பொருள்படும். கண்ணாடி தருதல் என்பது ஆத்ம ஞான ஒளியைக் காட்டுதல் எனப் பொருள்படும். மனத்து இருள் அகன்று ஞான ஒளி உண்டானால் தான் இறைவனை அடைய முடியும் என்பதையே இது உணர்த்துகிறது.

துவய மந்திரத்தின் பெருமை

மேலும் இப்பாடல் 'பிராட்டியை முன்னிட்டுக்கொண்டு தான் பகவானை அடைய வேண்டும்' என்னும் உண்மையை உணர்த்துவதாகவும் கூறுவர்.

" ஸ்ரீமந் நாராயண சரணௌ சரணம் ப்ரபத்யே!
ஸ்ரீமதே நாராயணாய நம "

என்பது துவய மந்திரம் .... இதில் முதல் வாக்கியத்தால் 'பெரிய பிராட்டியாரை முன்னிட்டு, ஈசுவரனுடைய இரண்டு திருவடிகளையும் உபாயமாகப் பற்றுகின்றேன்' என்னும் பொருள் கிடைக்கின்றது. இரண்டாவது வாக்கியத்தால் 'பெரிய பிராட்டியாரும் ஈசுவரனுமான சேர்த்தியில் என்றும் கைங்கரியத்தைப் புரிவேனாக' என்னும் பொருள் கிடைக்கின்றது. அதாவது முதல் வாக்கியம் உபாயத்தையும், இரண்டாவது வாக்கியம் பலனையும் வெளியிடுகின்றன''[17] என்பர் வைணவப் பெரியோர்.

16 முதல் 20 வரை உள்ள திருப்பாவைப் பாடல்கள் இறைவனை எழுப்பி, அவனுடைய காக்கும் தன்மையை (இரட்சகத்துவத்தை) நினைவூட்டுவனவாக அமைந்துள்ளன.

பிரபத்தி ஆகிய சரணாகதித் தத்துவம்

திருப்பாவையில் 21 முதல் 25 வரை உள்ள பாசுரங்கள், ஆன்மாவின் கையற்ற நிலையையும், பிரபத்தி என்னும் சரணாகதித் தத்துவத்தையும் உணர்த்துவனவாக அமைந்துள்ளன.

17. ந. சுப்புரெட்டியார். வைணவமும் தமிழும். பக். 210-211.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

கையற்ற நிலை

'அடியாரைக் காப்பதில் ஆர்வம் உடையவனே! பகைவர்கள் உன்னிடத்தில் வலிமையை இழந்து உன் மாளிகையின் வாசலில் கதியற்று வந்து உன் திருவடிகளில் சரணாகதியாக வீழ்ந்து கிடப்பது போல நாங்கள் உன்னைப் போற்றிப் புகழ்ந்து கொண்டு உன் திருமாளிகை வாசலில் வந்து சேர்ந்தோம்' (21) என்பதனாலும், 'அங்கண் மா ஞாலத்து அரசர், தம் அகங்கார, மமகாரங்கள் அடங்கி வந்து உன் அரியணையின்கீழ்த் திரள் திரளாக இருப்பதுபோல நாங்களும் எங்கள் வருத்தமெல்லாம் தீரும்படி உன்னிடத்து வந்தடைந்தோம்' (22) என்பதனாலும் ஆன்மாக்களின் கையற்ற நிலை உணர்த்தப் பெறுகிறது. 'உலகப் பொருளின் மேல் ஆசை, உயிரின் மேல் ஆசை, உடலின் மேல் ஆசை, உயிருக்குச் சுதந்திரம் உண்டு என்ற அஞ்ஞானம் ஆகிய இவை அனைத்தும் களைந்த உயிரே இறைவனுடைய நிலையை உணர முடியும். அத்தகைய ஜீவாத்மாவே பகைவனுடைய அருள் நோக்குக்கு உரியது' என்பதை இப்பாடல்கள் உணர்த்துகின்றன.

" கிங்கிணி வாய்ச்செய்த தாமரைப் பூப்போலே
செங்கண் சிறுச்சிறிதே எம்மேல் விழியாவோ " (22)

என்று வேண்டிய ஆயர் சிறுமியருக்குக் கண்ணனாகிய சிங்கக் குட்டி காட்சி தருகிறது. மழைக் காலத்தில் குகையில் உறங்கிக் கிடக்கும் சிங்கம், அக்காலம் முடிந்ததை அறிவுற்றுத் தீவிழித்து, வேரிமயிர் பொங்க எப்பாடும் பேர்ந்து உதறி, மூரி நிமிர்ந்து, முழங்கிப் புறப்பட்டுப் போதருமாப் போலே, நீ உன் கோயிலினின்றும் புறப்பட்டுச் சீரிய சிங்காசனத்திலிருந்து எங்கட்கு அருள் புரிய வேண்டும் எனத் தாம் வந்த நோக்கத்தை எடுத்துக் கூறுகின்றனர் ஆயர் சிறுமியர்.

அடுத்து, 'அடி போற்றி, திறல் போற்றி, புகழ் போற்றி, கழல் போற்றி, குணம் போற்றி, வேல் போற்றி' என்று இறைவனைப் போற்றுதல் செய்து, 'என்றென்றுன் சேவகமே ஏத்திப் பறை கொள்வான் இன்று யாம் வந்தோம்' (24) என்றும், 'உன்னை அருத்தித்து வந்தோம்' (25) என்றும் பெண்கள் வேண்டுகின்ற நிலை பிரபத்தியாகிய சரணாகதியை உணர்த்துகிறது. இதுவே வீடுபேற்றிற்குரிய உபாயம் ஆகும்.

எம்பெருமான் தன் திருக்கலியாண குணங்களாகிற திருக்குளத்தில் மூழ்கிப் பேறு பெற்றுய்தற்குத் தவம், யோகம், யாகம் யாதும் இயற்றத் தேவையில்லை. நெஞ்சிற்கொண்ட

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

உறுதியே - கண்ணனை அடைய வேண்டும் என்ற ஆசைப்பெருக்கே - போதுமானதாகும். இதனையே பெரியோர் சேதனரை உய்விக்கும் சிறந்த கருவி என்றனர். அதாவது உலகோரைக் கடைத்தேற்றும் உயர்ந்த கருவியாகும். வைணவக் கோட்பாட்டின் உயிர்நிலை என்று வழங்கப்படுவதும் இதுவேயாகும். சிறுமியர் விளையாட்டின் மூலமாகவே இறையருளைப் பெறுவதற்காக இந்நூல் இயற்றப்பட்டது எனலாம்.

''எல்லாத் தருமங்களையும் விட்டுவிட்டு என்னையே சரணடைந்துவிடு. நான் உன்னை எல்லாப் பாவங்களினின்றும் விடுவிப்பேன். துக்கம் கொள்ளாதே'' என்பது பகவத் கீதையில் கண்ண பெருமானின் கூற்று. இதற்கேற்ப, சிறந்த நெறியாகிய பிரபத்தி நெறியையே துணையாகக் கொண்டு, அனைத்து உயிர்களையும் இறைவன்பால் ஆற்றுப்படுத்தும் முறையில் அமைந்துள்ளது ஆண்டாள் நாச்சியாரின் திருப்பாவை. இத்திருப்பாவையில் வைணவ சமயக் கருத்துக்கள் இலக்கியச் சுவையோடு தரப்பட்டுள்ளன.

இறையனுபவம்

நோன்புப் பயனான - பகவத் அனுபவம் ஆகிய - 'மோட்ச பிராப்தி' 26 முதல் 30 முடியவுள்ள பாசுரங்களால் உணர்த்தப் பெறுகின்றது.

கண்ணனைக் கண்டு, 'மாலே, மணிவண்ணா, ஆலின் இலையாய், நாங்கள் பெரிதாகப் பொன்னும் பொருளும் கேட்கவில்லை; மார்கழி நீராட்ட நோன்பிற்குத் தேவையான வற்றையே கேட்கப் போகிறோம்' என்று கூறிய ஆயர் சிறுமியர், மார்கழி நீராட்டத்திற்கு இருள் பிரியுமுன் செல்லும்போது உறங்குவோரை எழுப்பச் சங்குகள், புறப்பட்டுச் செல்லும்போது பறை, பறை கொட்டிக் கொண்டு புறப்படும் போது எதிரே நின்று திருப்பல்லாண்டு பாடத் திருப்பல்லாண்டிசைப்போர், மங்கள தீபம், புறப்பட்டுச் செல்லும்போது முன்னே பிடித்துக் கொண்டு செல்வதற்குக் கொடி, பனி தலைமேல் விழாதவாறு காப்பதற்கு விதானம் ஆகியவற்றை வேண்டுகின்றனர் (26).

கூடாரை வெல்லும் சீர்க் கோவிந்தா, உன்றன்னைப் பாடி யாம் பெறும் சம்மானம் - கையில் அணியும் சூடகம், தோளில் அணியும் தோள்வளை, தோடு, செவிப்பூ பாடகம் முதலியன. 'வையத்து வாழ்வீர்காள்'' என்று தொடங்கும் பாசுரத்தில் 'நெய்யுண்ணோம், பாலுண்ணோம்' என்று உறுதிப்பாடு எடுத்துக்கொண்ட ஆயர்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

சிறுமியர் நோன்பு நோற்று முடிப்பதனால், பாற்சோறு மூட நெய்பெய்து முழங்கை வழிவாரக் கூடியிருந்து மகிழவேண்டும் என்கின்றனர் (27).

அடுத்த பாடலில் ஆயர் சிறுமியர், 'அறிவொன்றும் இல்லாத ஆய்க்குலத்து உன்தன்னைப் பிறவி பெறுந்தனை யாம் உடையோம்... உன்றன்னோடு உறவேல் நமக்கு இங்கு ஒழிக்க ஒழியாது' (28) என்பதனால் தாம் பெற்ற பேற்றைக் குறிப்பிடுகின்றனர். 'எங்களைக் குற்றேவல் கொள்ளாமற் போகாது... நாங்கள் வந்தது இற்றைப் பறை கொள்வான் அன்று காண்; நாங்கள் நோன்பு என்ற ஒன்றை முன்னிட்டுக்கொண்டு வந்தோமேயன்றி, 'எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும் உன்றன்னோடு உற்றோமேயாவோம், உமக்கே நாம் ஆட்செய்வோம்' (29) என்பதனால் அவர்கள் மோட்சப் பிராப்தியான கைங்கரியம் வேண்டுவதை உணரலாம்'. [18]

திருப்பாவை உணர்த்தும் தத்துவம்

திருப்பாவையில் உணர்த்தப்படும் ஒரு தத்துவக் கருத்து வருமாறு:

அறிவுள்ள ஜீவாத்மா சேதனன் எனப்படுவான். இந்த ஜீவன் அணுவளவாகவும், ஆனந்த ஸ்வரூபமாகவும் நிற்பது. இது சரீரத்தைக் காட்டிலும் வேறுபட்டது; அழியாதது. இத்தகைய ஜீவாத்மாக்கள் பக்தர், முக்தர், நித்தியர் என்று மூன்று வகைப்படுவர். கர்ம பாசத்தால் கட்டுண்டு சம்சாரத்தில் உழல்பவர் 'பக்தர்' எனப்படுவர். உபாயத்தை அனுஷ்டித்து, மோட்சத்தை அடைந்தவர் 'முக்தர்' எனப்படுவர்; ஒருபோதும் கர்ம சம்பந்தம் இன்றி, நித்ய சூரிகளாய் நின்று எம்பெருமானை அனுபவிப்பவர்கள் 'நித்தியர்' என்றழைக்கப்படுவர். திருப்பாவையில் ஆண்டாள் பக்தர்களையும், முக்தர்களையும் தூக்கத்திலிருந்து எழுப்பி, எம்பெருமானைப் பணிந்து, ஆன்ம பலனை அறியும்படி வேண்டுகிறார். இப்பிரபஞ்சத்தில் உழன்று அலையாமல், பெருமானின் பாதங்களைப் பணிந்து வாழ்வதே ஆன்மா அடையும் பேறு என்பதனை அறிந்த ஆண்டாள், 'எற்றைக்கும் ஏழேழ்பிறவிக்கும் உன்றன்னோடு உற்றோமே யாவோம், உனக்கேநாம் ஆட்செய்வோம், மற்றை நங் காமங்கள் மாற்று' எனப் பெருமானை வேண்டுகிறார். [19]

---

18. ந. சுப்புரெட்டியார், ஆழ்வார்களின் ஆராஅமுது, பக். 24-25
19. தேவராஜன், மு. நூ., பக் 726 - 727

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

நீராடல் உணர்த்தும் கருத்து

'நீராடல்' எனத் திருப்பாவையில் குறிக்கப்பெறுவது ஒரு குறியீட்டு வழக்கு (Symbolic usage) என்பர். கலவியைப் பண்டைய இலக்கியங்களில் 'சுனையாடல்' எனக் குறியிட்டு வழங்குதல் மரபு. கண்ணனுடனான கலவியினைத்தான் (பரமாத்மா ஜீவாத்மாவுடன் ஐக்கியம் ஆதல்) நீராடல் எனக் குறிப்பிடுகின்றனர் எனத் திருப்பாவைக்கு உரை விளக்கம் செய்த பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராச்சாரியார் குறிப்பிடுகின்றார்.

''திருப்பாவை முதற்பாட்டில் 'நீராடப் போதுவீர் போமினோ' என்று நீராட வருகிறவர்களெல்லீரும் வாருங்களென்று அழைத்து, நாலாம் பாட்டில் மேகத்தையும் விளித்து 'நாங்களும் மார்கழி நீராட வுலகினில் பெய்திடாய்' என்று மழைபெய்ய நியமித்திருக்கிறாள்... இதுவே உண்மைப். பொருளாகில் இவர்களெல்லாருங் கூடி ஒரு பொய்கைக் கரைக்குச் சென்றிருக்க வேண்டும். நீராடுமிடம் பொய்கையன்றோ. இவர்கள் ஒரு பொய்கைக் கரையில் சென்று சேர்ந்ததாகத் திருப்பாவையில் ஒரு பாட்டிலுமில்லை. ஸ்ரீ நந்தகோபருடைய திருமாளிகைக்குச் சென்று அங்கு நப்பின்னை கொங்கைமேல் வைத்துக் கிடந்த மலர் மார்பனையுணர்த்தி நப்பின்னைப் பிராட்டியை யுணர்த்தி அவர்களைத் தோத்திரஞ் செய்து, சிற்றஞ்சிறுகாலை யெழுந்து இங்கு நாம் வந்தது எதற்காகவென்னில், உன்றன்னோடு உற்றோமேயாவோம் உனக்கே நாமாட்செய்வோ'மென்று விண்ணப்பம் செய்வதற் காகவே யென்று தலைக்கட்டியிருக்கிறார்கள். இப்படித் திவ்ய தம்பதிகளிடம் சென்று ஸேவிப்பதுதான் இவர்கள் தாம் கொண்ட மார்கழி நீராட்டமென்று நன்கு விளங்கிற்றாயிற்று. ஆகவே, 'நீராடப் போதுவீர்', 'நாங்களும் மார்கழி நீராட', 'குள்ளக் குளிரக் குடைந்து நீராடாதே உக்கமுந் தட்டொளியும் தந்துன் மணாளனை இப்போதேயெம்மை நீராட்டு', 'மாலே மணிவண்ணா மார்கழி நீராடுவான்' என்கிற பாசுரங்களில் ப்ரஸ்தாவிக்கப்பட்ட நீராட்டமானது தண்ணீரில் தோய்வதன்று என்றும், பகவத் ஸம்ஸ்லேஷத்தையும், ஆசார்ய குல அவகாஹனத்தையுமே நீராட்டமாகச் சொல்லிற்றென்றும் நிஷ்கர்ஷிக்கப் போதுமான ஔசித்யமுள்ளது. இதை மூவாயிரப்படியில் பெரியவாச்சான் பிள்ளையும், ஆறாயிரப் படியில் அழகிய மணவாளப் பெருமாள் நாயனாரும் ஸ்பஷ்டமாக விளக்கியுள்ளார்கள்.'' [20]

---

20. சி. பாலசுப்பிரமணியன், மேற்கோள் - மு.நூ., பக். 46-47

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

பிற சிறப்புச் செய்திகள்

திருப்பாவை ஜீயர்

''கிருஷ்ண பகவான்மீது காதல் கொண்ட கோபிகா ரமணீகளில் சிறந்தவள் ராதை என்பது வடநாட்டார் அபிப்பிராயம். பண்டைத் தமிழர்களோ ராதையின் ஸ்தானத்தை நப்பின்னை என்பவளுக்கு அளித்துக் கிருஷ்ண சரித்திரத்தைத் தங்களுக்குச் சொந்தமாக்கிக் கொண்டார்கள்''[21] என்பர் பி.ஸ்ரீ. அந்த நப்பின்னையைத் துயிலெழுப்பி, அவள் துணையை நாடுவதாக அமைகின்றது 'உந்துமத களிற்றன்' (18) எனத் தொடங்கும் பாசுரம். பிராட்டியை முன்னிட்டுத்தான் இறைவனை அடைய வேண்டும் என்பது வைணவ நெறி. பரமபதத்தில் இலக்குமியாக, வராக அவதாரத்தில் பூமிப்பிராட்டியாக, இராமாவதாரத்தில் சீதாப்பிராட்டியாக, கண்ணன் அவதாரத்தில் நப்பின்னையாக அவதாரம் எடுத்தாள் பிராட்டி. ஏழு எருதுகளை வென்று நப்பின்னையை மணந்தான் கண்ணன் என்பது கதை. கோவலனையும் கண்ணகியையும் அடைக்கலமாகப் பெற்ற மாதரி என்னும் இடைக்குல மடந்தை, அவர்கள் இருவரையும் கண்ணனாகவும் நப்பின்னையாகவும் நினைத்துப் பார்ப்பதாகச் சிலப்பதிகார ஆய்ச்சியர் குரவையும் எடுத்துக்கூறுகிறது.

இத்தகைய நப்பின்னைப் பிராட்டியிடம் 'கந்தம் கமழும் குழலி, நீதான் எங்களுக்குக் கண்ணனைக் காட்ட வேண்டும்; தாழ்ப்பாளைத் திறப்பாயாக. கோழிகள் எல்லாவிடங்களிலும் பரவிக் கூவுகின்றன. குருக்கத்திக் கொடிகள் பரவியுள்ள பந்தலின்மேல் உறங்குகின்ற குயிற்கூட்டங்கள் பலமுறை கூவுகின்றன. கண்ணனோடு விளையாடுவதற்குக் கருவியான பந்து பொருந்திய விரல்களை யுடையவளே! உன் கணவனான கண்ணபிரானுடைய திருநாமங்களை நாங்கள் புகழ்ந்து பாடும்படியாக, சிறப்புப் பொருந்திய அழகு மிகுந்த உன் கைவளையல்கள் ஒலிக்கும் படியாக நடந்து வந்து, செந்தாமரை மலர் போன்ற உன் கையினால். எங்கள் மீது மகிழ்ச்சி கொண்டு தாழ்ப்பாளைத் திறப்பாயாக' என்று வேண்டுகின்றனர் ஆயர் சிறுமியர்.

'' உந்து மதகளிற்றன் ஓடாத தோள்வலியன்
நந்த கோபாலன் மருமகளே ! நப்பின்னாய் !
கந்தம் கமழும் குழலீ ! நடைதிறவாய்
வந்தெங்கும் கோழி யழைத்தன காண்மாதவிப்

21. பி.ஸ்ரீ. திவ்யப் பிரபந்த சாரம், ப. 369

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

பந்தல்மேல் பல்கால் குயில்இனங்கள் கூவினகாண்
பந்தார்விரலி ! உன்மைத்துனன் பேர்பாடச்
செந்தாமரைக் கையால் சீரார் வளைஒலிப்ப
வந்து திறவாய் மகிழ்ந்தேலோர் எம்பாவாய் " (பா. 18)

இப்பாசுரம் எம்பெருமானார் இராமாநுசர் வரலாற்றில் இடம்பெற்றது. திருவரங்கத்தில் இராமாநுசர் பிட்சைக்கு எழுந்தருளும்போது எப்போதும் திருப்பாவை சொல்லிக் கொண்டே செல்வது வழக்கம். 'உந்துமத களிற்றன்' பாசுரத்தில் 'பந்தார் விரலி..; வந்து திறவாய்' என்ற அடிகள் சொல்லுகையில் அவ ரது ஆசாரியரான பெரிய நம்பிகள் திருமாளிகை வந்தது. கதவைத் திறந்து அத்துழாய் என்ற அவரது மகள் பிட்சை இட்டாள்; நப்பின்னையையே எண்ணிப் பாடிவந்த ஆசாரியர், வந்தவளை நப்பின்னையாகவே எண்ணி மூர்ச்சையாகி விட்டார். பயந்து உள்ளே சென்று தந்தை பெரியநம்பியிடம் தெரிவித்தாள் பெண். சூழ்நிலை மறந்து நப்பின்னையைத் தன் மகள் வடிவில் சீடன் கண்டிருக்கிறான் என்பதை உணர்ந்து 'ஒஹோ, உந்துமத களிற்றன் ஆகாதே' என்றாராம் பெரியநம்பி. இவ்வரலாற்றால், 'எம்பெருமானார் உகந்த பாசுரம்' என்று ஏற்றம் பெற்று விட்டது இப்பாசுரம். எம்பெருமானார் இராமாநுசரைத் 'திருப்பாவை ஜீயர்' என்றே போற்றுவர் வைணவப் பெரியோர்.

எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும் உன்றன்னோடு உற்றோமேயாவோம்

'சிற்றஞ்சிறுகாலே' எனத் தொடங்கும் திருப்பாவைப் பாசுரம் (29) தனிச்சிறப்புடையது. திருப்பாவையின் உயிர் மூச்சாக விளங்குவது; கண்ணனுக்கும் கோபியருக்கும் இடையே உள்ள உறவு, உயிரும் உடலும் போன்றது என்பதை உணர்த்துவது.

" சிற்றஞ் சிறுகாலே வந்துன்னைச் சேவித்து, உன்
பொற்றா மரையடியே போற்றும் பொருள்கேளாய்
பெற்றம் மேய்த்துண்ணும் குலத்திற் பிறந்து, நீ
குற்றேவல் எங்களைக் கொள்ளாமற் போகாது,
இற்றைப் பறைகொள்வான் அன்றுகாண் கோவிந்தா
எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும், உன்றன்னோடு
உற்றோமே யாவோம் உனக்கேநாம் ஆட்செய்வோம்
மற்றைநம் காமங்கள் மாற்றேலோர் எம்பாவாய் " (29)

காலைக் காட்சிகள் திருப்பாவையில் முன்பே கூறப்பட்டன. பறவைகள் எழுந்து கூட்டுக்குள்ளேயே சப்திக்கும் வேளை, திருமால் கோயிலில் சங்குகள் ஒலிக்கும் வேளைதான் சிற்றஞ் சிறுகாலை.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

இவ் அதிகாலைப் பொழுதில் எழுந்து, உன்னைப் 'பாதாதிகேசம்' வணங்கி, பொன்னாலான தாமரை போன்ற உன் திருவடிகளைப் போற்றும் பொருள் கேளாய் என்று விளித்து, விண்ணப்பிக்கத் தொடங்குகிறார்கள். அதனால் அவர்கள் கேட்பது பறை என்ற கருவி பற்றியதல்ல, திருவடிப் பேற்றினைத் தான் விரும்புகிறார்கள் என்பது புலப்படும். விசுவரூபம் எடுத்து நின்ற கண்ண பெருமானை, அவன் அடிகளைப் பற்றி மனத்தில் கட்டிப் போட்டானே சகாதேவன், அதுபோல், பிறவிப் பெருங்கடலை நீந்திக் கடக்க வேண்டும் என்றால், அவன் திருவடிகளைப் பற்றிக் கொள்வதுதான் சிறந்த வழி என்பதை உணர்ந்தவர்கள் அப்பெண்கள். அதனால்தான் நாங்கள் போற்றும் பொருள் - பறை - பயன் - குறிக்கோள் எல்லாம் உன் திருவடிதான். 'சிற்றஞ் சிறுகாலே வந்து உன்னைச் சேவித்து, உன் பொற்றாமரை அடிகளை வணங்கி நாங்கள் கோரும் வரம் இது' என்று தொடங்குகிறார்கள்.

'நாங்கள் மாடு மேய்த்து உண்ணும் ஆயர் குலத்தவர் என்பதால், உனக்குப் பணி செய்யத் தகுதியற்றவர் என்று எங்களை ஒதுக்கி விடாதே. நீயும் எங்கள் குலத்தில்தான் பிறந்திருக்கிறாய். அதனால் எங்களையும் வாழ்வித்தருள். உன்னைத் தவிர ஒருவரையும் நாடமாட்டோம். நாங்கள் வேண்டுவதெல்லாம் பொன், பொருள், செல்வங்கள் அல்ல; தொண்டுச் செல்வம்தான். சிறு சிறு பணிகளில் நீ எங்களை ஏவல் கொள்ள வேண்டும். இராமன், கடலின் மீது பெரிய அணை கட்டியபோது, ஓர் அணிலும் தன் பங்குக்குச் சின்னஞ்சிறு முதுகில் மண் சுமந்து கொட்டியதே, அது போலக் 'குற்றேவல்' எங்களைக் கொள்ளாமல் போகாது! கோவிந்தா, நாங்கள் வேண்டி வந்தது பறை என்ற வாத்தியத்தை அல்ல, எங்களது தந்தை, பாட்டன், முப்பாட்டன் - இப்படி இன்னும் ஏழேழு பிறவிகளிலும் உன்னோடு தொடர்புடையவர்கள் நாங்கள். இந்தப் பிறவியில் மட்டுமல்ல, இனி வருகின்ற ஏழேழ் பிறவிகளிலும் உன்னைச் சேர்ந்தவர்களாகவே - உன் அடியார்களாகவே - இருக்க விரும்புகின்றோம்; உனக்குப் பணி செய்வதே எங்களுக்குச் சுவையானது' என்கின்றனர்.

'எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும் உன்றன்னோடு உற்றோமேயா வோம், உமக்கே நாம் ஆட்செய்வோம்' என்ற அடிகளில் திருப்பாவையின் உட்பொருள் - சாரம் - சொல்லப்படுகிறது. அதாவது 'உறவுகள் அனைத்தும் இறைவன்தான்' என்பது இப்பாடலால் விளங்கும்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

" சேலேய் கண்ணியரும் பெருஞ்செல்வமும் நன்மக்களும்
மேலாத்தாய் தந்தையும் அவரே இனிஆவாரே "

என்று நம்மாழ்வாரும்,

" ஊரிலேன் காணிஇல்லை, உறவு மற்றொருவர் இல்லை
பாரில்நின் பாதமூலம் பற்றினேன் பரமமூர்த்தி "

என்று தொண்டரடிப் பொடியாழ்வாரும் இதனையே குறிப்பிடுகின்றனர்.

இப்பாசுரத்தில் எம்பெருமானை அடைவதற்கான தடைக் கற்களாக நிற்கும் சொரூப விரோதியும், பிராப்ய விரோதியும் ஆகிய குற்றங்கள் கழிந்தமை கூறப்படுவதாக உரையாசிரியர் விளக்குவர்.

'ஓம் என்னும் பிரணவத்தில், எம்பெருமானுக்கு மட்டுமே அடிமைப்பட்டிருப்பது ஆன்ம சொரூபம் என்று சொல்லப் பட்டிருக்கின்றது. இந்த ஆன்ம சொரூபத்துக்கு விரோதியை, 'சொரூப விரோதி' என்பர். இதையே சற்று விரிவாகச் சொல்வதென்றால், இறைவனுக்குமட்டுமே தொண்டு செய்யும் தன்மையைத்தான் 'ஆன்ம சொரூபம்' என்றழைப்பது வழக்கம். இவ்வாறு தொண்டு செய்யும் தன்மைக்கு விரோதியாகக் கருதப்படுவது, சேதனனின் 'யான், எனக்கு உரியன்' என்று நினைக்கும் அகங்காரமும், 'இப்பொருள் என்னுடையது' என்று எண்ணும் மமகாரமும் ஆகும். இவ்விரண்டும் நீங்கப் பெறுதலே 'சொரூப விரோதி கழிகை' என்று சொல்லப்படும்.

'பிராப்பியம்' என்பது பகவானுக்குக் கைங்கர்யம் செய்யும் போது, அவன் உகப்பிற்கு ஏற்ற வண்ணம் செய்தலாகும். பகவானின் உவப்பிற்குச் செய்யாமல், சேதனன் தனக்கு இன்பம் ஏற்படுவதற்காகக் கைங்கரியத்தினைச் செய்தால், அது 'பிராப்பிய விரோதி' என்று கருதப்படும். பிராப்பிய விரோதி கழிகையாவது 'மற்றை நம் காமங்கள் மாற்று' என்னும் ஆண்டாள் பாசுரத்தின்படி, பகவானுடைய உவப்பிற்கு மாறாக உள்ள விருப்பங்களைப் போக்க வேண்டும் என்று ஆண்டவனை வேண்டியிருத்தலாம். பிள்ளை லோகாச்சாரியர் இதனை, 'ப்ராப்ய விரோதி கழிகையாவது - மற்றை நம் காமங்கள் மாற்று என்றிருக்கை' என்று குறிப்பிடுவார்.

இப்பாசுரத்தில் இடம்பெற்றுள்ள 'கோவிந்தா' என்ற சொல்லின் மூலம், ஓம் என்ற பிரணவத்திலுள்ள அகாரார்த்தம் சொல்லப் பட்டதாகவும், 'உனக்கே'என்றதன் மூலம் உகாரார்த்தம் சொல்லப் பட்டதாகவும், 'நாம் என்றதன் மூலம் மகாரார்த்தம் சொல்லப்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

பட்டதாகவும் 'உன்றன்னோடு உற்றோமே யாவோம்' என்றதன் மூலம் நாராயணார்த்தம் சொல்லப்பட்டதாகவும், 'எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும்' என்றதன் மூலம் சதுர்த்தி சுர்த்தம் சொல்லப்பட்டதாகவும், மற்றை நம் காமங்கள் மாற்று' என்றதன் மூலம் 'நம' சப்தம் மற்றும் பிராப்ய விரோதி கழிகை ஆகியவை சொல்லப்பட்டதாகவும், 'பறை' என்றதன் மூலம், பெருமானின் உகப்புக்காக - புகலாக - செய்யப்படும் அடிமைத்தனத்தைக் குறிப்பதாகவும் உள்ளுறைப் பொருள் கொள்ளப்படுவதாக உரையாசிரியர்கள் கூற்றிலிருந்து தெரியவருகிறது.

''சிற்றஞ் சிறுகாலே'' எனத் தொடங்கும் இப்பாசுரம், ஸ்ரீ ஆண்டாளின் திருப்பாவைப் பிரபந்தத்தின் சிறப்பும் பெருமையும் வாய்ந்த பாசுரமாகக் கருதப்படுகிறது. விடியற்காலை நேரத்தில் எழுந்து, திருப்பாவையிலுள்ள முப்பது பாசுரங்களையும் அனுசந்திக்க முடியாவிட்டாலும், 'சிற்றஞ் சிறுகாலே' பாசுரத்தை மட்டுமாவது அனுசந்திக்குமாறு ஸ்ரீ பட்டர் அருளிச் செய்கின்றார். வைணவ சித்தாந்தங்கள் முழுதும் உள்ளடக்கியது இப்பாசுரம்'' [22] என்பார்.

நூற்பயன்

பாகவதத்தில் கோபியர் காத்யாயிணி விரதம் மேற்கொண்டனர் என்ற குறிப்பை வைத்து, தமது பக்தி நிறைந்த கற்பனையால் கவிதை நோன்பாகவே திருப்பாவையை அமைத்திருக்கிறார் ஆண்டாள் நாச்சியார். சங்கத் தமிழ் மாலையான திருப்பாவையைக் கற்றவருக்கு இறுதிப் பாசுரத்தால் பயன் சொல்லுகிறார் ஆண்டாள்.

ஆயிரம் தோள்களால் அலைகடல் கடைந்து தேவர்களுக்கு அமுதம் அளித்த பரமன், பாற்கடலினின்றும் அழகே வடிவாகக் கையில் மாலையுடன் வெளிப்பட்ட திருமகளைத் தம் திருமார்பில் தரித்த மாதவன், கண்ணனாக அவதரித்தான்; 'உலகத்துத் தீமையை அழிக்க நானே வந்திருக்கிறேன்' என்று காட்டுவானைப் போலக் 'கேசி' என்ற அசுரனை அழித்துக் கேசவனாக நின்றான். மலர்ந்த முகத்தோடும், பக்தி என்ற அணிகலனோடும் அவனைத் தேடிச் சென்ற ஆயர்பாடிச் சிறுமியர் அவனைக் காண்பதற்கும் அருளினான். அவனையே பரிசாக அவர்களுக்குத் தந்தான். என்ன கருணை! என்ன எளிமை! என்ன வண்மை! இந்த பக்தி நிறைந்த வரலாற்றை - அதைப்பாடிய இந்தத் திருப்பாவையை - பக்தியுடன் அன்றாடம் கூறுபவர்கள் சிவந்த திருக்கண்களையும், நான்கு

22. தேவராஜன், மு.நூ., பக். 751-752.,

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

திருத்தோள்களையும் உடைய செல்வத்திற்கு அதிபதியான திருமகளின் நாயகனாம் திருமாலின் திருவருளைப் பெறுவார்கள். இன்பத்திலேயே என்றென்றும் நிறைந்து இருப்பார்கள் என்று நூற்பயன் உணர்த்துகின்றார், ஆண்டாள் நாச்சியார்; தமக்குக் கிடைத்த பேறு இறைவன் அருளால் எல்லா உயிர்களுக்கும் கிட்ட வேண்டும் என்று மங்கள வாழ்த்து அருள்கிறாள். 'இறைவன் ஒருவனே புருஷன், உயிர்கள் பாவும் பெண்பாலர் போன்றவர்கள்' என்பது உபநிடதம், இக்கருத்தே திருப்பாவையின் உட்பொருளாய் அமைந்து உயிர்களாகிய பெண்கள் தங்கள் பக்தியின் விளைவால் பரபக்தி, பரஞானம், பரம பக்தி வாய்ந்தவர்களாய் இறைவனோடு கலத்தலைக் குறிக்கின்றது. அதனால் தான்,

" பாதகங்கள் தீர்க்கும், பரம னடிகாட்டும்
வேதம் அனைத்துக்கும் வித்தாகும் - கோதைதமிழ்
ஐயைந்தும் ஐந்தும் அறியாத மானிடரை
வையம் சுமப்பதுவும் வம்பு "

என்று திருப்பாவையின் சிறப்பைக் கூறுகிறது ஒரு தனிப்பாடல்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

4. திருப்பாவை - இலக்கிய நயம்

" உண்மையில், 'கோதை தமிழ்' வைஷ்ணவர்களுக்கு மட்டும் சொந்தமன்று. நமது தாய்மொழியை வளமும் வனப்புமுறச் செய்து வளர்த்துவந்த கவிதையில், கோதை தமிழுக்கும் ஒரு ஸ்தானமுண்டு என்று உறுதியாகச் சொல்லலாம். "

- பி. ஸ்ரீ. *

'பாவைப் பாட்டு' என்னும் இலக்கிய வகையில் முதலில் பூத்த மலர் திருப்பாவை. 'மார்கழித் திங்கள் மதி நிறைந்த நன்னாளில்' தொடங்கும் பாவை நோன்பு பற்றிய இவ் இலக்கிய வகை, சிறுமியர் விளையாட்டின் மூலமாகவே இறையருளைப் பெற முடியும் என்பதை எடுத்துக்காட்டுகிறது. இத்திருப்பாவையில் அமைந்த இலக்கிய நயத்தினை எடுத்துரைக்கும் வகையில் இவ்வியல் அமைந்துள்ளது.

ஆயர் மகளிரை விளித்தலும் இடித்துரைத்தலும்

திருப்பாவை, பாவை நோன்பு கொண்டாடும் ஆயர் மகளிர் ஒருவரையொருவர் துயில் எழுப்பிக் கொண்டு, இறைவன் நாமத்தைக் குழுவாகப் (Chorus) பாடும் பாவனையில் அமைந்துள்ளது. ஆயர்பாடிச் சிறுமியர்களின் மன இயல்பையும், பேச்சையும் சொல்லையும் போக்கையும் திருப்பாவையில் நன்கு படம்பிடித்துக் காட்டியுள்ளார் ஆண்டாள். விளையாட்டும் வேடிக்கையும் கலந்த சொற்களால் இடித்துரைத்துப் பேசுவதும், ஒருவரையொருவர் முன்னிலைப்படுத்தி விளித்துப் பேசுவதும், இடத்துக்கேற்றவாறு சொற்களைக் கையாள்வதும் ஆண்டாளின் திருப்பாவையில் காணப்படும் தனிச்சிறப்பு ஆகும்.

---

* திவ்யப் பிரபந்த ஸாரம், பக். 380 - 381

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

" நேரிழையீர் ... சீர்மல்கும் ஆய்ப்பாடிச் சிறுமீர்காள் " (பா. 1)

" வையத்து வாழ்வீர்காள் " (பா. 2)

" நாயகப் பெண்பிள்ளாய் ... தேசமுடையாய் " (பா. 7)

" கோது கலமுடைய பாவாய் " (பா. 8)

" நோற்றுச் சுவர்க்கம் புகுகின்ற அம்மனாய், அருங்கலமே " (பா. 10)

" குற்றம் ஒன்று இல்லாத கோவலர்தம் பொற்கொடியே ...
புற்றர அலகுல் புனமயிலே " (பா. 11)

" நற்செல்வன் தங்காய்! " (பா. 12)

" போதரிக் கண்ணினாய் " (பா. 13)

" நங்காய்! எழுந்திராய் " (பா. 14)

" எல்லே இளங்கிளியே " (பா. 15)

" பந்தார் விரலி " (பா. 18)

" திங்கள் திருமுகத்துச் சேயிழையாள் " (பா. 20)

என்றெல்லாம் பெண்களை விளித்துப் பேசும் பாங்கு திருப்பாவையில் இடம் பெறுகிறது.

விளித்துப் பேசுதல்மட்டு மன்றி, ஆழ்ந்த உறக்கத்தில் வீழ்ந்து கிடக்கும் ஆயர் சிறுமியரை இடித்துரைத்து எழுப்பும் தன்மையும் ஆண்டாளது திருப்பாவைப் பாடல்களில் காணப்படுகின்றது. சில சான்றுகள் :

" புள்ளும் சிலம்பினகாண்; புள்ளரையன் கோயிலில்
வெள்ளை விளிசங்கின் பேரரவம் கேட்டிலையோ?
பிள்ளாய்! எழுந்திராய் " (பா. 6)

" கீசுகீசென்றெங்கும் ஆனைச்சாத்தன் கலந்து
பேசின பேச்சரவம் கேட்டிலையோ? பேய்ப்பெண்ணே " (பா. 7)

" மாமீர்! அவளை எழுப்பீரோ? உம்மகள்தான்
ஊமையோ? அன்றிச் செவிடோ? அனந்தலோ?
ஏமப் பெருந்துயில் மந்திரப் பட்டாளோ? " (பா. 9)

" ... ... பண்டொருநாள்
கூற்றத்தின் வாய்வீழ்ந்த கும்ப கருணனும்
தோற்றும் உனக்கே பெருந்துயில்தான் தந்தானோ? ' (பா. 10)

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

" சிற்றாதே பேசாதே செல்வப் பெண்டாட்டிநீ
எற்றுக்கு உறங்கும் பொருள்? " (பா. 11)

" சினத்தினால் தென்னிலங்கைக் கோமானைச் செற்ற
மனத்துக் கினியானைப் பாடவும்நீ வாய்திறவாய்
இனித்தான் எழுந்திராய் ஈதென்ன பேருறக்கம் " (பா. 12)

" குள்ளக் குளிரக் குடைந்துநீ ராடாதே
பள்ளிக் கிடத்தியோ? பாவாய்! நீ நன்னாளால்
கள்ளந் தவிர்ந்து கலந்தேலோர் எம்பாவாய் " (பா. 13)

" எங்களை முன்னம் எழுப்புவான் வாய்பேசும்
நங்காய்! எழுந்திராய்! நாணாதாய்! நாவுடையாய் " (பா. 14)

இங்ஙனம் இயல்பான பேச்சு மொழியில் விளித்தும், இடித்தும், கிண்டலாகப் பேசியும் தோழியரை எழுப்பும் சொல்லாட்சித் திறம் ஆண்டாள் பாடல்களில் வெளிப்படுகின்றது.

இயற்கைப் புனைவு

இயற்கையோடு இயைந்து வாழும் வாழ்வு படைத்தவர்கள் நம் பழங்கால மக்கள். சங்க காலம் தொடங்கி இன்று வரை இயற்கையைப் பாடாத கவிஞர்கள் இல்லை என்றே கூறிவிடலாம்.

" நும்மினும் சிறந்தது நுவ்வை யாகுமென்று
அன்னை கூறினள் புன்னையது சிறப்பே
அம்ம நாணுதும் நும்மொடு நகையே " (நற்றிணை. 172)

என்று அஃறிணைப் பொருள்களைக் கூட உயிருள்ள பொருள்களாக - உடன் பிறந்தவர்களாக - கண்டது நம் இலக்கிய மரபு. முதல் தமிழ்க் காப்பியம் ஆன சிலப்பதிகாரத்திலும் 'திங்களைப் போற்றதும் ... ஞாயிறு போற்றுதும் ... மாமழை போற்றுதும்' என்று இயற்கையைப் போற்றித் தொடங்கப்பட்ட பாங்கினைக் காணலாம். இம்மரபையொட்டி, ஆண்டாள் பாடல்களிலும் இயற்கைப் புனைவு மிகச் சிறப்பாக அமைந்துள்ளது.

மழையை வேண்டுமிடத்தும், அதிகாலை நிகழ்ச்சிகளைக் கூறுமிடத்தும், நாள்தோறும் நிகழும் நிகழ்ச்சிகளைக் கூறுமிடத்தும் திருப்பாவையில் இயற்கைப் புனைவுகள் மிகச் சிறப்பாகப் படம்பிடித்துக் காட்டப்படுகின்றன.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

நான்காவது பாடலில், மழை பொழிய வேண்டும் என முகிலை வேண்டுமிடத்து, ஊழி முதல்வன் உருவம் போல் மெய்கறுத்து என்று கண்ணனுடைய திருமேனி நிறமும், அவன் கையில் உள்ள ஆழி போல் மின்னலும், வலம்புரி போன்று இடியோசையும், யாவரும் வாழ வளம் பெருக அவன் கை வில்லினின்று புறப்படும் அம்புபோல் மழையும் பொழிய வேண்டும் என்று பாடுகிறார் ஆண்டாள். இப்பாடலில் நாடு செழிக்க மழையாகப் பொழியும் இறைவனின் அருட்பண்பினை - இயற்கையில் இறைமைப் பண்பைக் காணும் இயல்பினைக் - காணலாம்.



பெண்கள் நோன்பு நோற்பது மழை பொழிந்து நாடு செழிக்க வேண்டும் என்பதற்காக. இதைக் கூறும் வகையில் மாதந்தோறும் மூன்று மழை பொழிவதால், செந்நெற் பயிர்கள் செழிப்பாக வளர்ந்து ஓங்கி நிற்கின்றனவாம்; அந்நெற்பயிர்களின் இடையே வயல்களில் தேங்கியிருக்கும் தண்ணீரில் மீன்கள் துள்ளி விளையாடுமாம்; அம் மீன்களின் உடல் உராய்வதால் வயல் வரப்புகளில் முளைத்திருக்கும் கருநெய்தற் பூக்கள் மலர்கின்றனவாம்; அம்மலர்களில் உள்ள தேனை உண்ட வண்டுகள் மயங்கி, அம் மலர்களிலேயே கண்ணுறங்குமாம்; இவ்வளவு செழிப்பு நிறைந்த இடங்களில் புல்மேயும் பசுக்கள், சீர்த்த முலை பற்ற, பால் வளம் பெருக்கெடுத்துக் குடம் நிறைக்குமாம்; அதனால் மக்கள் செல்வம் நிறையுமாம் என்று ஒரு தொடர் நிகழ்ச்சியாக மழையின் செழிப்பைப் பாடுகிறார் ஆண்டாள்:

" ஓங்கி உலகளந்த உத்தமன் பேர்பாடி
நாங்கள் நம்பாவைக்குச் சாற்றி நீராடினால்
தீங்கின்றி நாடெல்லாம் திங்கள்மும் மாரிபெய்து
ஓங்குபெருஞ் செந்நெல் ஊடு கயலுகளப்
பூங்குவளைப் போதில் பொறிவண்டு கண்படுப்பத்
தேங்காதே புக்கிருந்து சீர்த்த முலைபற்றி
வாங்கக் குடம்நிறைக்கும் வள்ளல் பெரும்பசுக்கள்
நீங்காத செல்வம் நிறைந்தேலோர் எம்பாவாய் " (பா. 3)

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

வைகறைப் பொழுது புலர்தல்

நோன்பு நோற்கும் நேரம் வைகறைப் பொழுது என்பதற்கேற்ப, வைகறைப் பொழுதில் நடைபெறும் நிகழ்ச்சிகள் ஒவ்வொரு பாடலில் ஒவ்வொரு விதமாகப் படம் பிடித்துக் காட்டப்படுகின்றன.

பறவைகள் இரை தேடுவதற்காக எழுந்து ஆரவாரம் செய்வதைப் 'புள்ளும் சிலம்பின காண்' (பா.6) என்று ஒரு பாடலில் எடுத்துரைக்கிறார் ஆண்டாள். அடுத்த பாடலில், 'கீசு கீசு என்று பரத்வாஜப் பறவைகள் (செம்போத்து என்றும் இதனைக் குறிப்பர்) குரலெழுப்பி, அவை ஒன்றுக்கொன்று பேசிக்கொள்ளும் அரவம் உன் காதில் விழவில்லையா? என்று தோழியை வினவுகிறாள் ஆண்டாள்.

" கீசு கீசு என்றுஎங்கும் ஆனைச்சாத்தன் கலந்து
பேசின பேச்சரவம் கேட்டிலையோ! " (பா. 7)

பறவையின் ஓசைகூட, பேசும் மொழியாகி, கவிதை நயம் பயப்பதை இப்பாடல் எடுத்துக்காட்டுகின்றது.

தோட்டத்தில் உள்ள குளத்தில் வைகறை நேரத்தில் மலரும் செங்கழுநீர்ப் பூக்கள் மலர்ந்து மணம் வீசி நிற்பதையும், இரவில் மலர்ந்த அல்லி மலர்கள் இதழ் கூம்பி நிற்பதையும் மற்றொரு பாடலில் காட்சி ஓவியமாக எடுத்துரைக்கின்றார் ஆண்டாள்:

" உங்கள் புழைக்கடைத் தோட்டத்து வாவியுள்
செங்கழுநீர் வாய்நெகிழ்ந்து ஆம்பல்வாய் கூம்பினகாண் " (பா.14)

மற்றொரு பாடலில் அதிகாலைப் பொழுதில் கோழிகள் கூவி அனைவரையும் எழுப்புவதையும், குருக்கத்திக் கொடி படரும் பந்தல்மேல் குயில்கள் பலமுறை கூவுவதையும் எடுத்துக் காட்டி வைகறை வருணனையை அமைத்துள்ளார் ஆண்டாள்.

" வந்தெங்கும் தோழி யழைத்தன காண் மாதவிப்
பந்தல்மேல் பல்கால் குயிலினங்கள் கூவினகாண் " (பா. 18)

அதிகாலைப் பொழுதில் நாள்தோறும் நிகழும் நிகழ்ச்சிகளையும் நயம்பட எடுத்துக் காட்டுகிறார் ஆண்டாள். காவி நிற ஆடை அணிந்த வெண்பல் தவத்தவர், தங்கள் திருக்கோயிலுக்குச் சங்கிடுவான் (கோயில் திறத்தல்) போதல் (பா. 14) பிள்ளைகள் பாவைக்களம் புகுதல் (பா. 13) போன்றவற்றையும் எடுத்துரைக்கிறார் ஆண்டாள்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

கோவலர்தம் வாழ்வியல்

அதிகாலை நிகழ்ச்சியை வருணிக்கும்போதே, கோவலர்தம் பழக்க வழக்கங்கள், அன்றாடம் அவர்கள் மேற்கொள்ளும் செயல்கள் முதலியனவும் படம் பிடித்துக் காட்டப்படுகின்றன.

மணம் வீசும் கூந்தலையுடைய ஆய்ச்சியர், கழுத்தில் அணிந்துள்ள அச்சுத் தாலியும், ஆமைத் தாலியும், (காசும் பிறப்பும்) கலகலப்பக் கைகளை மாற்றி மாற்றி மத்தினால் தயிர் கடையும் வழக்கத்தை,

" காசும் பிறப்பும் கலகலப்பக் கைபேர்த்து
வாச நறுங்குழல் ஆய்ச்சியர், மத்தினால்
ஓசைப்படுத்த தயிரரவம் கேட்டிலையோ " (பா. 7)

என்று எடுத்துக்காட்டுகின்றார் ஆண்டாள்.

கீழ்வானம் வெளுக்கும் அதிகாலைப் பொழுதில், எருமைகள் மேய்ச்சலுக்குப் புறப்படுகின்றன; அவற்றைக் காட்டுப் பகுதிக்கு அழைத்துச் செல்லுமுன்னம், தத்தம் வீடுகளின் முன்னே உள்ள பசும் புல் நிறைந்த தோட்டங்களில் சிறிது நேரம் மேயவிட்டு அழைத்துச் செல்கின்றனராம் ஆயர்கள். இவ்வாறு செய்வதற்குச் 'சிறுவீடு மேய்கை' என்று பெயர்; இவ்வாறு சிறு வீடு மேயச் செய்தல் ஆயர்தம் வழக்கம் என்பதனை,

" கீழ்வானம் வெள்ளென்று எருமை சிறுவீடு
மேய்வான் பரந்தன காண் " (பா. 8)

என்று எடுத்துக்காட்டுகிறார் ஆண்டாள். மேலும், 'ஏற்ற கலங்கள் எதிர்பொங்கி மீதளிப்ப, மாற்றாதே பால் சொரியும் வள்ளல் பெரும் பசுக்கள்' (பா. 21) என்றும், 'சீர்த்த முலைபற்றி வாங்கக் குடம் நிறைக்கும் வள்ளல் பெரும்பசுக்கள் நீங்காத செல்வம் நிறைந்து' (பா.3) என்றும், 'கனைத்திளம் கன்று எருமைகள் கன்றுக்கிரங்கி நினைத்து முலைவழியே நின்று பால்சோர, நனைத்தில்லம் சேறாக்கும்' (பா.12) என்றும் கோவலர்தம் வாழ்வியல் நிகழ்ச்சிகள், வள்ளல் பெரும்பசுக்களையுடைய அவர்தம் செல்வநிலை ஆகியன இயற்கைப் புனைவுடன் இணைந்து வருகின்ற நிலையினை ஆண்டாள் பாடல்களில் காணலாம்.

அணிநயம்

திருப்பாவையில் உவமை, உருவகம் முதலிய அணி நயங்கள் சிறப்பாக அமைந்து இலக்கியச் சுவையை மிகுவிக்கின்றன.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

கண்ணனது திருக்கண்களைச் செந்தாமரைக்கு உவமித்துச் 'செங்கண்' என்றும் 'பங்கயக் கண்ணான்' என்றும், கண்ணனது திருமேனியைக் 'கார்மேனி' என்றும் குறிப்பிடுகிறார் ஆண்டாள். 'கதிர்மதியம் போல் முகத்தான்' (பா.1) என்று கண்ணனது முகத்தில் வீசும் ஒளிக்குக் கதிரவனும், குளிர்ச்சிக்குச் சந்திரனும் உவமையாகக் கூறப்பட்டுள்ளன.

'உன்னை எதிர்த்த பகைவர்கள் உன்னிடம் தம் வலிமையை இழந்து உன் மாளிகையின் வாசலில் கதியற்று வந்து உன் திருவடிகளில் சரணாகதியாக வீழ்ந்து கிடப்பது போல, நாங்கள் உன்னை வந்து சேர்ந்தோம்' என்றும், 'இவ்வுலகையே ஆட்சி செய்த அரசர்கள் தங்களுடைய அகங்கார மமகாரங்கள் அடங்கி உன் அரியணையின் கீழே திரளாக வந்து கூடி இருப்பது போல், நாங்களும் உன்னிடத்து வந்தடைந்தோம்' என்றும் கூறுகிறார்கள் ஆயர் சிறுமியர்.

" மாற்றார் உனக்கு வலிதொலைந்துஉன் வாசற்கண்
ஆற்றாது வந்துஉன் அடிபணியுமாப்போலே போற்றியாம வந்தோம் "
(பா. 21)

" அங்கண்மா ஞாலத்து அரசர் அபிமான
பங்கமாய் வந்து நின் பள்ளிக் கட்டிற்கீழ்
சங்கம் இருப்பார் போல் வந்து தலைப்பெய்தோம் " (பா. 22)

என்றும் கூறும் ஆயர்சிறுமியர், இறைவனின் அருள்நாடி வருபவர்கள், இறைவனை முழுமையாகச் சரணடைதல் வேண்டும் என்பதை இங்கே அழகான உவமைகளாக வடித்துள்ளார் ஆண்டாள். இதன் மூலம் பிரபத்தி என்னும் முழுமையான சரணாகதித் தத்துவத்தையே உணர்த்திவிடுகிறார் அவர்.

கண்ணபெருமானது அருள் நிறைந்த கண்கள், திங்களும் சூரியனும் எழுவதைப் போல், பாதி மூடியும் பாதியளவு திறந்தவாறும் இருக்கும். கிண்கிணிச் சதங்கை போல - மலர்ந்தும் மலராத தாமரைப் பூப்போல் - சிறுச்சிறிதாகத் தங்கள் மீது படிய வேண்டும் என்று வேண்டுகின்றனர் ஆயர் சிறுமியர். திங்களும், சூரியனும் ஒரே காலத்தில் உதிப்பது என்பது நடைபெறாத ஒன்று. எனவே, இது இல்பொருள் உவமையாகும். இதனை,

" கிங்கிணி வாய்ச்செய்த தாமரைப் பூப்போல
செங்கண் சிறுச்சிறிதே எம்மேல் விழியாவோ
திங்களும் ஆதித்தியனும் எழுந்தாற்போல்
அங்கண் இரண்டும் கொண்டு எங்கள்மேல் நோக்குதியேல்
எங்கள் மேற்சாபம் இழிந்தேலோர் எம்பாவாய் " (22)

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

என்னும் பாடல் எடுத்துரைக்கின்றது. கண்ணனுடைய கண்கள் அடியவருடைய குற்றங்களை நினைத்துப் பாதி மூடியும், அவர்களுடைய கூக்குரலைக் கேட்டுப் பாதி திறந்தும் இருக்குமாம். ஆதலால் 'கிங்கிணிவாய்ச் செய்த தாமரைப் போல' எனக் கூறியது பொருத்தமேயாகும்.

உருவகம்

திருப்பாவையில் அமைந்துள்ள சில அழகிய உருவகங்கள் வருமாறு:

" யசோதை இளஞ்சிங்கம் "	(பா. 1)
" வெள்ளத்தரவில் துயிலமர்ந்த வித்து "	(பா. 6)
" அருங்கலமே "	(பா. 10)
" குற்றமொன்றில்லாத கோவலர்தம் பொற்கொடி "	(பா. 11)
" புற்றர வல்குல் புனமயில் "	(பா. 11)
" கொம்பனார்க் கொழுந்து, குலவிளக்கு "	(பா. 17)
" கப்பம் தவிர்க்கும் கலி "	(பா. 20)
" தோற்றமாய் நின்ற சுடர் "	(பா. 21)

முரண்தொடை

" செங்கழுநீர் வாய் நெகிழ்ந்து ஆம்பல்வாய் கூம்பின காண் "
" செங்கல் பொடிக்கூறை வெண்பல் தவத்தவர் "

என்னும் பாடல் வரிகளில் நெகிழ்ந்து, கூம்பின; செங்கல் - வெண்பல் என்னும் முரண் தொடைகள் அழகுற அமைந்துள்ளமையை அறியலாம்.

நாடகப் பாங்கு

திருப்பாவையின் நடுநாயகமான உயிர்ப்பாட்டு என்று கூறப்படுகின்ற - 'திருப்பாவை என்பது இப்பாட்டிறே' என்று அழகிய மணவாளப் பெருமாள் நாயனாரால் பாராட்டப் பெறுகிற - பதினைந்தாவது பாடல் ஓர் அழகிய நாடகக் காட்சி போன்று அமைந்துள்ளது.

நோன்பு நோற்கும் பெண்கள் கடைசியாகத் தோழி ஒருத்தியின் வீட்டு வாசலை நெருங்குகிறார்கள். 'எல்லே, இளங்கிளியே' என அழைத்து 'இன்னுமா உறக்கம்?' என்று வேடிக்கையாகக் கேட்கிறார்கள். இறைவனைப் பற்றி நினைத்துக் கொண்டே

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

இருக்கும் அவளுக்கோ அவ்வின்பம் சிதைகிறது. 'அடீ அம்மா, ஏன் இப்படிச் சில்லென்று கூச்சல் போடுகிறீர்கள். இதோ வந்து விட்டேன்' என்கிறாள் உள்ளே இருப்பவள். 'நீ வார்த்தையாடுவதில் வல்லவள். உன் கடுமையான சொற்களையும் உன் வாயையும் நெடுநாளாகவே நாங்கள் அறிவோம்' என்கிறார்கள் எழுப்ப வந்தவர்கள்.

'ஆமாம் நான்தான் வாயாடி. நீங்கள் மட்டும் என்னவாம், நீங்களும் தான் பேச்சிலே வல்லவர்கள்' என்று தொடங்கியவளுக்கு, 'அவர்களும் தம்மைப் போலவே கண்ணனைக் காணத்துடிக்கும் துடிப்பு மிக்கவர்கள் தானே' என்னும் எண்ணம் வருகிறது. 'கடவுள் மேல் காதல் கொண்ட இவர்களிடம் குற்றம் ஏது? இருந்தால் அது என்னுடைய குற்றமே' என்று எண்ணுகிறாள்; 'போகட்டும், நானே வாயாடியாக இருந்துவிட்டுப் போகிறேன். இப்போது என்ன செய்ய வேண்டுமாம் - 'வல்லீர்கள் நீங்களே, நானே தான் ஆயிடுக' என்கிறாள்.

'நீ உடனே எழுந்து வா, அதுதான் வேண்டும். நீ மாத்திரம் தனியாக இறைவனை அனுபவிக்க முற்படுவது முறையோ?' என்று வினவுகிறாள் வெளியே நிற்பவள்.

'அது சரிதான். ஆனால் எல்லோரும் வந்து விட்டார்களா?' என்கிறாள் உள்ளே இருப்பவள்.

'வந்து விட்டார்கள்; நீயே வந்து பார்த்து எண்ணிக்கொள்' என்கிறாள் வெளியே நிற்பவள்.

'சரி, சரி, விரைவில் வா; வல்யானை கொன்றானை, மாற்றாரை மாற்றழிக்க வல்லானை நாம் பாடுவோம்' என்கிறார்கள் மற்ற பெண்கள்.

இவ்வாறு உரையாடல் பாங்கில் அமைந்து நாடகத்தன்மை சிறந்து விளங்கும் அப்பாட்டு வருமாறு;

வெளியே நிற்பவர் : 'எல்லே! இளங்கிளியே! இன்னம் உறங்குதியோ?'

உள்ளே இருப்பவள் : 'சில்லென் றழையேன்மின் நங்கைமீர்! போதர்கின்றேன்!'

வெளியே நிற்பவர் : 'வல்லை உன் கட்டுரைகள் பண்டேயுன் வாயறிதும்!'

உள்ளே இருப்பவள் : 'வல்லீர்கள் நீங்களே, நானே தான் ஆயிடுக!'

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

வெளியே நிற்பவர் : 'ஒல்லைநீ போதாய், உனக்கென்ன வேறுடையை?'

உள்ளே இருப்பவள் : 'எல்லாரும் போந்தாரோ?'

வெளியே நிற்பவர் : 'போந்தார் போந் தெண்ணிக் கொள்!'

எல்லோரும் : 'வல்லானை கொன்றானை,
மாற்றாரை மாற்றழிக்க வல்லானை,
மாயனைப் பாடேலோர் எம்பாவாய்'

(பா. 15)

'நானே தான் ஆயிடுக' - இப்பாடலில் அமைந்துள்ள உயிரான வரி இது. அடியவர் ஏதேனும் குற்றஞ் சாட்டினால், குற்றம் சாட்டப் பெற்றவர், அவ்வடியாரின் திருவடிகளில் வணங்கி, 'இக்குற்றம் அடியேனுடையதுதான்; மன்னித்தருள வேண்டும்' என்று அக்குற்றத்தை ஏற்க வேண்டுமேயன்றிப் பிறர் மீது பழி கூறலாகாது. இதுதான் வைணவர்க்கு உரிய இலக்கணம். இராமன் கானகம் சென்ற கொடுமைக்குத் தான் காரணம் அல்லன் எனினும், மந்தரை, கைகேயி செய்த பிழை முழுவதையும் தன்மீது ஏற்றுக் கொண்டான் பரதன். இப்பண்பையே 'நானே தான் ஆயிடுக' என்னும் தொடர் குறிப்பதாகக் கூறுவர் பெரியோர்.

'சிங்கப் பாட்டு'

கண்ணனைத் துயிலெழுப்பித் தமக்கு அருள் புரிய வரவேண்டும் என்பதைக் கூறுமிடத்து, சிங்கம் எழுந்து வருகின்ற காட்சியை உவமையாகக் காட்டுகிறார் ஆண்டாள். 'மழைக் காலத்தில் மலைக்குகையில் படுத்துத் தூங்கிக் கிடக்கும் வீரம் செறிந்த சிங்கம், எழுந்து, தன் நெருப்புப் போன்ற சிவந்த கண்களைத் திறந்து, பிடரிமயிர் சிலிர்த்து, உடம்பை நான்கு பக்கங்களிலும் முறித்து, உதறிக் கொண்டு, கம்பீரமாக நிமிர்ந்து கர்ஜனை செய்து கிளம்பி வெளியில் வருவது போலக் கண்ணா! நீயும் உன் கோயிலிருந்து புறப்பட்டு வந்து சிறந்த வேலைப்பாடுகள் பொருந்திய அரியணையில் அமர்ந்து நாங்கள் வந்த காரியத்தை ஆராய்ந்து அருள வேண்டும்' என்கின்றனர் ஆயர்பாடி மகளிர்,

" மாரிமலை முழைஞ்சில் மன்னிக் கிடந்துறங்கும்
சீரிய சிங்கம் அறிவுற்றுத் தீவிழித்து
வேரிமயிர் பொங்க எப்பாடும் பேர்ந்துதறி
மூரி நிமிர்ந்து முழங்கிப் புறப்பட்டுப்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

போதருமா போலேநீ பூவைப்பூ வண்ணா! உன்
கோயில்நின் றிங்ஙனே போந்தருளிக் கோப்புடைய
சீரிய சிங்காசனத் திருந்து யாம்வந்த
காரியம் ஆராய்ந்து அருளேலோர் எம்பாவாய் " (பா. 23)

இப்பாடலைச் 'சிங்கப் பாட்டு' என்று அழைப்பார் பி.ஸ்ரீ. மென்மையான உணர்வுடைய பெரியாழ்வாரால் வளர்க்கப் பெற்ற கோதையின் கற்பனை. இங்கே கம்பீரமானதொரு சிங்கத்தை நம் கண்முன் கொண்டுவந்து நிறுத்துகிறது. சொல்லுக்குச் சொல் அழகு தோன்றும் பாடல் இது. தந்தை பெரியாழ்வார் சொல்லும் திருமால் அவதாரக் கதைகளைப் பலமுறை கேட்டு வளர்ந்தவர் ஆண்டாள். எனவே, நரசிம்ம அவதாரத்தை நினைவுகூர்ந்து இப்பாட்டைப் பாடியிருப்பாரோ ஆண்டாள் என்று எண்ணத் தோன்றுகிறது.

இறைவனின் நடையைக் காளை போன்ற நடை, யானையின் நடை, சிங்க நடை, புலியின் நடை - இவற்றுடன் பொருத்திப் பார்ப்பார்கள். காளையின் நடையில் உள்ள செருக்கு, யானையின் நடையில் உள்ள திமிர்ப்பு, சிங்க நடையின் அழகு, புலியின் உறட்டு, சிவிட்கை - இவை அத்தனையையும் எம்பெருமான நடையிலே கண்டு மகிழ்வார்கள் பக்தர்கள். திருவரங்கம் போன்ற ஆலயங்களில் 'ஒய்யார நடை' என்று உற்சவங்களில் இவற்றை; பக்தர்கள் கண்டு மகிழ நடத்திக் காட்டுவது இன்றும் வழக்கத்தில் உள்ளது. மேலும், தன்னைச் சரண் அடைந்த பக்தர்களைக் காத்தல் இறைவனுக்கு இயற்கையாகவே ஏற்பட்ட தர்மம். எனவே, 'கண்ணா, நீ எங்கள் அரசனாகச் சிம்மாசனத்தில் வீற்றிருந்து, எங்கள் குறைகளைக் கேட்க வேண்டும். அதுதான் முறை' என்பதையும் இப்பாடலின் மூலம் கண்ணனுக்கு உணர்த்துகின்றனர் ஆயர் சிறுமியர்.

இங்ஙனம் 'பட்டர் பிரான் கோதை சொன்ன சங்கத் தமிழ் மாலை முப்பதும்' இலக்கிய நயம் செறிந்து, படிக்கப் படிக்கத் தெவிட்டாத தமிழ் அமுதாக விளங்குகின்றன.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

5. நாச்சியார் திருமொழி - அமைப்பும் அழகும்

" திருமாலை மணம் செய்துகொள்வதாகக் கனாக் கண்டு பாடிய 'வாரணம் ஆயிரம்' என்ற பாடல் தென்கலை வைணவர்களின் திருமணத்தின்போது தவறாமல் ஒதப்படுகிறது. "

- மு. வரதராசன் *

ஆண்டாள் அருளிச் செய்த இரண்டாவது பிரபந்தம் நாச்சியார் திருமொழி ஆகும். இதனை முதல் ஆயிரத்தில் நான்காவதாக அமைத்திருக்கிறார் நாதமுனிகள். இத்திருமொழியில் 143 பாசுரங்கள் 14 பதிகங்களாக அமைந்துள்ளன. அவையாவன.

1. சிறுமியர் தைத்திங்களில் காமனை வழிபடல்
2. மாயனைத் தம் 'சிற்றில் சிதையேல்' எனல்
3. 'துகிலைப் பணித்தருள்' எனல்
4. கூடல் இழைத்தல்
5. குயிற்பத்து
6. மாயவன் தன்னைத் திருமணம் செய்த கனவைத் தோழிக்கு உரைத்தல்
7. வலம்புரிக்குக் கிடைத்த பேறு
8. மேகவிடு தூது
9. திருமாலிருஞ்சோலைப் பிரானை வழிபடல்
10. காதல் நோய் செய்த பரிசு
11. திருவரங்கத்துச் செல்வனைக் காமுறல்
12. கண்ணன் இருக்கும் இடத்துக் கொண்டு செல்க எனல்

---

* தமிழ் இலக்கிய வரலாறு. ப.121.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

13. கண்ணன் உகந்த பொருள் கொண்டு காதல் நோய் தணிமின் எனல்

14. விருந்தாவனத்துக் கண்ணனைக் கண்டமை

இவற்றுள் 4, 5, 6 - ஆம் திருமொழிகளில் பதினொரு பாடல்களும், மீதமுள்ள பதினொன்று பதிகங்களில் (1, 2, 3, 7, 8, 9, 10, 11, 12, 13, 14) பத்துப் பாடல்களும் அமைந்துள்ளன. ஆசிரிய விருத்தம், கலி விருத்தம், கொச்சகக் கலிப்பா ஆகிய யாப்பில் இப்பாடல்கள் அமைந்துள்ளன. ஒவ்வொரு பதிகத்தின் இறுதிப் பாடலிலும், அப்பதிகத்தைப் படிப்பவர் பெறும் பயன் வலியுறுத்திக் கூறப்பட்டுள்ளது.

காமனை வழிபடல்

கண்ணனை அடைய வேண்டும் என்ற விருப்பம் கொண்டு, மார்கழி மாதம் முழுவதும் நோன்பு நோற்கிறாள் ஆண்டாள் நாச்சியார். எனினும், கண்ணனைக் கூடும் பேறு அவளுக்குக் கிட்டவில்லை; கண்ணனின் பிரிவில் வருந்திய கோதை, எப்படியும் கண்ணனை அடைந்தே தீருவது என்று முடிவு செய்கின்றாள். தை மாதம் முழுவதும், கண்ணன் வருவான், வருவான் என எதிர்பார்த்துக் காத்திருக்கின்றாள்; கண்ணன் வரும் வழி மேல் விழி வைத்து, வரு வழி முழுதும் தரை மெழுகி, அதில் அரிசி மாவினால் செய்த வட்ட வடிவமான அழகான கோலத்தை இட்டு, மாசி மாதத் தொடக்க நாட்களில் நுண்ணிய மணலைக் கொண்டு அலங்காரம் செய்து வைத்து அவனது வரவிற்காகக் காத்திருக்கின்றாள். கண்ணன் வராமல் ஏமாற்றி விடுகின்றான். அதனால் மனந்தளர்ந்த கோதை, மன்மதனை வேண்டுகிறாள். ஏனெனில், அவன்தானே காதலர்களைச் சேர்த்து வைப்பவன்? திருப்பாவையில் கண்ணனோடு சேர்த்துப் பலராமனையும் வணங்கியதைப் போல், கண்ணனைப் பற்றத் துடிக்கும் ஆண்டாள், திருமொழியில் காமனையும், அவன் தம்பி சாமனையும் தனக்குத் துணைபுரியுமாறு வேண்டுகிறாள்; வழிபடுகிறாள். நாச்சியார் திருமொழிக்கு உரை செய்த 'வியாக்கியானச் சக்கரவர்த்தி' பெரியவாச்சான் பிள்ளை முன்னுரையில் இதற்கான காரணத்தை எடுத்துரைக்கின்றார் அவரது கருத்து வருமாறு:

''திருப்பாவையில் 'உன்றன்னைப் பிறவி பெறுந்தனைப் புண்ணியம் யாமுடையோம்' (28) என்று உபாயமாக எம்பெருமானைப் பற்றி, 'உனக்கே நாம் ஆட்செய்வோம்' (29) என்று அவன் உகப்புக்கான கைங்கர்யமே பேறு (பிராப்யம்) என்று

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

அறுதியிட்டு நின்றாள் ஸ்ரீ ஆண்டாள். எம்பெருமானிடமும் இவளைப் பெற வேண்டும் என்கிற ஆர்வம் கரை புரண்டிருந்தது. எனினும், பெருமான் இவளை ஏற்றுக்கொள்ளவில்லை. கர்ம, பக்தி யோகங்களில் ஒன்றையும் தான் பற்றாமையால் அவன் ஏற்கவில்லை என்று உணர்ந்தாள். அந்நிலையில் கலக்கம் அடைந்து, பிரிந்தாரைக் கூட்டி வைக்கும் மன்மதனைத் தொழுகின்றாள்''[1] மேலும், முற்காலத்தில் கன்னியர் தம் பன்னிரண்டாம் வயதில் காமன் நோன்பு கொள்ளும் வழக்கம் இருந்தது என்பதனையும் அறிய முடிகின்றது. இதனை,

" யாண்டீராறதில் எழில் காம னோன்பொடு " (நூ. 182)

என்னும் பன்னிருபாட்டியல் நூற்பா எடுத்துரைக்கின்றது. சீவகசிந்தாமணியில் சீவகனைத் திருமணம் செய்ய விரும்பி, சுரமஞ்சரி என்னும் பெண் காமநோன்பு நோற்ற செய்தி (பா.2057) இடம் பெற்றுள்ளது. பெருங்கதையிலும் உதயணனை அடைய விரும்பி, பதுமாபதி காமன் நோன்பு நோற்ற செய்தி கூறப்பட்டுள்ளது. (3:5:27-33) இம் முறையிலேயே, ஆண்டாளும் காமன் நோன்பை மேற்கொள்கிறாள்.

கண்ணனையே தன் கணவனாக வரித்து, நோன்பு நோற்கத் தலைப்பட்ட ஆண்டாள், வேறு தெய்வமாகிய மன்மதன் காலில் விழுந்து வணங்கலாமா என்ற கேள்வி இங்கு எழுகின்றது. இதற்கு விடையாகப் பெரியவாச்சான் பிள்ளை கூறும் கருத்து இங்குக் கருதத்தக்கது.

''இம் மன்மதனாகிய காமன் முன்பொருகால் பிரிந்து தவமியற்றி வந்த சிவபெருமானையும் பார்வதி தேவியையும் ஒருங்கே சேர்த்து வைத்த கதையைப் பெரியாழ்வார் சொல்லக் கேட்டவளாகையாலே, கண்ணனோடு கலவி கிடைக்காமல் ஆற்றாமையால் வருந்தும் தன்னையும் அக்கண்ணனோடு கூட்டுவிப்பன் என்று நம்பியே அக்காமன் காலில் விழுந்து வேண்டினாள்.''[2]

காமனை வழிபடும் காலம்

''தையொரு திங்களும்'' எனத் தொடங்கும் நாச்சியார் திருமொழியின் முதல் பதிகத்தில், காமனுக்கு மேற்கொள்ளும் நோன்பு முறைகள் கூறப்பட்டுள்ளன.

1. தேவராஜன், வைணவமும் ஆழ்வார்களும், ப. 753
2. மு.நூ., ப. 753

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

" தையொரு திங்களும் தரைவிளக்கித்
தண்மண்டலமிட்டு மாசி முன்னாள் " (நாலா. 504)

என்றும்,

" தெருவிடை எதிர்கொண்டு பங்குனிநாள்
திருந்தவே நோற்கின்றேன் காமதேவா " (நாலா. 509)

என்றும் அமையும் பாடலடிகள், தை, மாசி, பங்குனி ஆகிய முன்று மாதங்களில் காமனை வழிபடும் நோன்பு மேற்கொள்ளப்பட்டதை விளக்குகின்றன.

வழிபடும் முறை

மன்மதனை வழிபடும் ஆண்டாள், அவன் வரவேண்டிய இடங்களையும் வீதிகளையும் நுண்மணல் பரப்பி எழில்மிக்க கோலங்கள் இட்டு அலங்கரிக்கின்றாள்; கிழக்கு வெளுப்பதற்கு முன் நீர்த்துறையில் நீராடி, முள்ளும், எறும்பும் இல்லாத சுள்ளிகளை (சமித்துக்களை) எடுத்து நெருப்பிலிட்டு நோன்பு நோற்கின்றாள். காமனை மாத்திரமன்றி அவன் தம்பி சாமனையும் தொழுகின்றாள்; கடல்வண்ணன் ஆகிய கண்ணனின் பெயரை அம்புகளில் எழுதி அவன் மீது காதல் கொள்கின்றாள்; முக்காலங்களிலும் ஊமத்தை மலர்களையும் முருக்க மலர்களையும் கொண்டு அருச்சித்து வழிபாடு இயற்றுகின்றாள்.

கண்ணனை நினைத்துக் கொண்டே இருப்பதனால் காமதேவனின் பெயர் மறந்துபோகுமோ என்று எண்ணிய ஆண்டாள், சுவரில் காமனுடைய பெயரை எழுதி வைக்கின்றாள்; கறவ மீன் கொடிகளையும், குதிரைகளையும், சாமரம் வீசும் பெண்களையும், கரும்பு வில்லையும் அவனுக்குரிய பரிவாரங்களாகக் காட்டி வரைந்து வைக்கின்றாள். மேலும், காமனுக்கு விருப்பமான பசுங்காய், நெல், கரும்பு, வெல்லம், அரிசி, அவல் ஆகியவற்றைப் படைத்து, காம நூல் வல்லவரானவர் ஒதும் மந்திரத்தால் காமனை வழிபடுகின்றாள் ஆண்டாள்.

'அனங்கதேவா, உன்னையும் உம்பியையும் தொழுதேன்;' 'முயன்று உன்னை நோற்கின்றேன்', 'திருந்தவே நோற்கின்றேன் காமதேவா', 'மன்மதனே உன்னை வணங்குகிறேன்', 'தேசுடைத் திறலுடைக் காமதேவா, நோற்கின்ற நோன்பினைக் குறிக்கொள் கண்டாய்', 'தொழுது முப்போதும் உன்னடி வணங்கித் தூமலர் தூய்த்தொழுது ஏத்துகின்றேன்' என்றெல்லாம் தொழுகின்றாள்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

ஆண்டாள். இவ்வாறு தொழுவது எதற்காக என்பதை ஒரு பாசுரத்தில் உறுதிபட எடுத்துக்காட்டுகின்றாள் ஆண்டாள்:

" வானிடை வாழும் அவ்வானவர்க்கு
மறையவர் வேள்வியில் வகுத்த அவி
கானிடைத் திரிவது ஓர்நரி புகுந்து
கடப்பதும் மோப்பதும் செய்வது ஒப்ப
ஊனிடை ஆழி சங்கு உத்தமர்க்கு என்று
உன்னித்து எழுந்த என் தடமுலைகள்
மானிடவர்க் கென்று பேச்சுப்படில்
வாழகில்லேன் கண்டாய் மன்மதனே " (நாலா. 508)

அந்தணர்கள் வேள்வியின் போது தேவர்களுக்காகப் படைக்கும் அவியுணவை, காட்டிலே திரியும் நரி, அவ்வுணவின் அருகில் வந்து, முக்கால் முகர்ந்தும், காலால் இடந்தும் வீணாக்குவதுபோல் கண்ணபிரானுக்காகவே கிளர்ந்தெழுந்த என் கொங்கைகள் மானிடர்க்கு உரியனவாகப் பேசும் பேச்சொன்று இப்பூமண்டலத்தில் கிளம்புமேயானால், என்னுயிர் உடனே மாய்ந்துவிடும் என்று தன் உள்ளக் கிடக்கையை இப்பாசுரத்தில் வெளிப்படுத்துகிறாள் ஆண்டாள்.

மன்மதனை வழிபடுவதற்குரிய காரணம் என்ன என்பதையும் இப்பாசுரத்தில் தெளிவாக ஒவ்வொரு பாடலிலும் விளக்கி விடுகின்றாள் ஆண்டாள்.

" வேங்கடவற்கு என்னை விதிக்கிற்றியே " (504)

" புள்ளினை வாய்பிளந்தான் என்பது ஓர்
இலக்கினிற் புக என்னை எய்கிற்றியே " (505)

" வித்தகன் வேங்கட வாணன் என்னும்
விளக்கினிற் புக என்னை விதிக்கிற்றியே " (506)

" அவரைப் பிராயம் தொடங்கி என்றும்
ஆதரித்து எழுந்த என்தட முலைகள்
துவரைப் பிரானுக்கே சங்கற்பித்துத்
தொழுது வைத்தேன் ஒல்லை விதிக்கிற்றியே " (507)

" தேயம்முன் அளந்தவன் திரிவிக்கிரமன்
திருக்கைகளால் என்னைத் தீண்டும் வண்ணம்
சாய்உடை வயிறும் என்தட முலையும்
தரணியில் தலைப்புகழ் தரக்கிற்றியே " (510)

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

" கேசவ நம்பியைக் கால் பிடிப்பாள்
என்னும் இப்பேறு எனக்கு அருளு கண்டாய் " (511)

" மணிவண்ணற்கு என்னை வகுத்திடு " (512)

என்று வேண்டுகோள் விடுக்கும் ஆண்டாள், ஓர் அழகான உவமை வாயிலாக அக்காமதேவனுக்கே ஓர் எச்சரிக்கையும் விடுக்கின்றாள். 'உன்னை வணங்கிப் போற்றுகின்றேன். நான் கடல்வண்ணனுக்குப் பழுதில்லாமல் பணிசெய்து வாழப் பெறாவிட்டால் பலகால் அழுது தடுமாறி 'அம்மா' என்று கூப்பிட்டுத் திரிவனேல், அப்படி உன்னை அடைந்த என்னைத் துடிக்க விடுவதால் அக்குறை உன்மேல் ஏறும். இது ஓர் உழுகின்ற எருதை வேலை வாங்கிப் பின் அது தாங்கிய நுகத்துடியாலேயே தள்ளித் தீனியில்லாமல் அகற்றுவதற்கு ஒப்பாகும் என்கிறாள் : (512)

'சிற்றில் சிதையேல்' எனல்

திருமொழியின் இரண்டாம் பதிகம், சிறுமியர் மாயனைத் தம் 'சிற்றில் சிதையேல்' என வேண்டிக்கொள்ளும் போக்கில் அமைந்துள்ளது. ஆயர்பாடிச் சிறுமியர் தம் கைத்திறமெல்லாங் காட்டிச் சிற்றில் அமைக்கின்றனர். அதனைக் காலால் எற்றியுதைக்க வருகிறான் மாயன்; 'இச்செயல் அடாது, தகாது, எனவே மாயனே எங்கள் சிற்றிலை சிதையேல்' என்று கூறி அவனது அருளை வேண்டி நிற்கின்றனர்.

பங்குனிக் கடைநாள் - காமன் வரும் காலம் என்பதனால் காமன் நோன்பு நோற்கின்றனர் ஆயர் சிறுமியர் - தம் முதுகு நோவ நாள் முழுவதும் உழைத்துச் சிற்றிலை உருவாக்குகின்றனர்; வண்டல் நுண்மணலைக் கொண்டு, தம் கைகளால் அள்ளி அளைந்து சிற்றில் உருவாக்குகின்றனர். அச்சிற்றில், கண்டவர் கண்களைக் கவர்கின்றது. 'கள்ளமாதவா! கேசவா! நீ எங்கள் சிற்றிலை அழித்தாலும், அதற்காக உன்னை ஒன்றும் சொல்ல மாட்டோம். உன் முகத்தில் இருப்பவை அருட்கண்கள் அல்லவோ? யாதொன்றும் அறியாச் சிறுமியர் நாங்கள். மாமுகில் வண்ணா! உன்றன் பேச்சும் செய்கையும் எங்களை மையல் கொள்ள வைக்கின்றன. மதம் மிகு கசேந்திராழ்வானின் துயரைக் களைந்தவனே! அடியார் துயரைத் தீர்க்க வல்ல உன்னைப் பார்த்துக் காதலுற்ற எங்களைக் கடைக்கண்களால் பார்த்து நலிய வேண்டாம்; கடலில் இலங்கைக்குச் செல்ல அணைகட்டியவனே! வட்டமான வாயையுடைய சிறிய பானையோடு சிறு முறமும் மணலும் கொண்டு, விருப்பப்படி விளையாடும் எங்களுடைய சிற்றிலைச் சிதைப்பதனால் உனக்கு என்ன பயன்? கையால் தொட்டும், காலால்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

உதைத்தும் எங்களை வருத்தாதே. நெஞ்சு கசந்து போனால் கருப்புக் கட்டியும் சுவைக்காது என்பதை நீ அறிவாயே. சேது பந்தனம் கட்டி இலங்கைக்குச் சென்று அரக்கர்களை அழித்தவனாகிய நீ எங்கள் சிற்றிலைச் சிதையேலே' (514-523) என்று தமக்குத் தெரிந்த முறையில் எல்லாம் கூறி முறையிடுகிறார்கள் ஆயர்சிறுமியர். ஆயினும் கண்ணன் சிற்றிலை அழித்தான். இந்தப் போராட்டம் ஒருவாறு முற்றுப் பெற்று, கூடலில் முடிகிறது. 'எம்மைப் பற்றி மெய்ப்பிணக்கு இட்டக்கால் இந்தப் பக்கம் நின்றவர் என் சொல்லார்?' என்று சொன்னார்களாம் பெண்கள். அதாவது கண்ணா! நீ எங்களைத் தொடுவது மிகவும் இன்பமாகவே உள்ளது. உனது தொடுவுணர்வின்பம் எங்களுக்குப் புதுமையாக உள்ளது. ஆனாலும் அக்கம் பக்கம் உள்ளவர்கள் கண்டால் என்ன நினைப்பார்கள் என்றே அஞ்சுகின்றோம் என்கிறார்களாம்.

இதனை ''சம்ச்லேஷம் ப்ரவிருத்தமானபடி'' (புணர்ச்சி தொடங்கினபடி என்று பொருள்)[3] என்பர் பெரியவாச்சான் பிள்ளை. இப்படிக் கண்ணன் இப்பெண்களின் சிறுவிடுகளை மாத்திரம் சிதைக்கவில்லை. இவர்கள் சிந்தனையையும் சிதைத்து ஆட்கொண்டுவிட்டான் (நாலா. 522).

'ஆழ்வார்கள் ஆண்களாக இருந்தபடியால் பெண்ணுடை உடுத்து மின்னிடை மடவார்கள்' (திருவாய்மொழி 6-2) போன்ற திருவாய்மொழிகளில் ''என்னுடைய பந்தும் கழலும் தந்து போகு நம்பீ'' (எனது பந்தையும் அம்மானைக் காய்களையும் திருப்பிக் கொடுத்துவிட்டு உனக்கு விருப்பமான விடத்தே போய்ச் சேர்க நம்பீ என்பது பொருள்), ''ஒரு நான்று தடி பிணக்கே'' (ஒருகால் உன்னைத் தடியிட்டுத் தகர்க்கும்படியாகவும் நேர்ந்து விடும் என்பது பொருள்) என்றாற்போலச் சொல்லுவார்கள். இவற்றில் ஆண் சொருபம் தெரிந்து விடுகின்றது. இங்குப் 'பெண் பிள்ளை தனக்கு அதுக்கு மேலே மென்மை பிறந்து வார்த்தை சொல்லும் வீறுபாடு என்னே!' என்று நம்பிள்ளை இப்பாசுரங்களில் ஈடுபட்டு உருகுவாராம்'[4].

பிரளய காலத்தில் முற்றும் அழிந்துபோன உலகைக் காக்க, ஆலிலைமேல் கண் வளர்ந்து உலகைக் காத்த வரலாறு, ஆதிமூலமே என்றழைத்த கசேந்திராழ்வானுக்குக் கதி மோட்சம் அருளிய வரலாறு, இலங்கைக்குச் செல்லச் சேது பந்தனம் அமைத்து அசுரர்களை

3. ந. சுப்பு ரெட்டியார், மேற்கோள் - ஆழ்வார்களின் ஆரா அமுது. ப. 30
4. மேலது

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

அழித்த வரலாறு ஆகியன இப்பதிகத்தில் எடுத்தாளப்படுகின்றன. இம்மூன்று புராண வரலாறுகளுமே அடியவர்களின் துன்பம் தீர்க்க இறைவன் கொண்ட கோலங்கள், அதுபோல் எங்கள் மீதும் இரக்கம் காட்டி எங்களுக்கு அருள்புரிய வேண்டும் என்னும் குறிப்பு இப்பதிகத்தில் வெளிப்படுகின்றது.

பின்னாளில் தோன்றிய பிள்ளைத்தமிழ் இலக்கியத்திற்கு இப்பதிகம் முன்னோடியாக அமைந்து வளம் சேர்த்தது என்பது இதன் தனிச்சிறப்பு ஆகும்.

'துகிலைப் பணித்தருள்' எனல்

நாச்சியார் திருமொழியின் மூன்றாவது பதிகம், பாகவத நிகழ்ச்சி ஒன்றை அடியொற்றி அமைந்துள்ளது. 'ஆயர்குலப் பெண்களுக்குக் கண்ணனுடன் கூடல் ஏற்பட்டதை அறிந்த பெற்றோர்கள் அவர்களைப் பிரித்து நிலவறையில் அடைத்து வைத்தனர். கண்ணனைக் காணாத பெண்கள் உடல் மெலிந்தனர். மழையின்றி நாடும் வளங்குன்றியது. பசும்புற்கள் தழைக் காமையால் ஆவினங்களுக்கு மேய்ச்சல் குறைப்பட்டது. இதனால் வருத்தமுற்ற பெரியவர்கள், கன்னிப் பெண்கள் நல்ல கணவன்மாரை அடையவேண்டியும், மழை பொழியும் என்று கருதியும் நிலவறையில் அடைக்கப்பட்டிருந்த பெண்களை விடுவித்து, நோன்பு நோற்கப் பணித்தனர்.

ஆயர்குலப் பெண்கள் பொழுது புலரும் முன்பே, யமுனையாற்றில் நீராடுவதற்குப் புறப்பட்டனர்; அவர்கள் முன்பு கண்ணனோடு நீராடிக் களித்த பொய்கைப் பகுதிக்குச் செல்லாமல் வேறொரு துறையைத் தேர்ந்தெடுத்துச் சென்றனர். கண்ணன் இருளன்ன மாமேனியன் ஆதலால் அவர்கள் நிழலைப் பற்றிக்கொண்டு, சென்று, அவர்களுக்கு முன்னே பொய்கைக் கரை சென்று சேர்ந்தான். ஆய்ச்சியர்கள் அவன் வந்ததை அறியவில்லை. தம் வழக்கப்படி ஆடைகளையும் அணிகளையும் களைந்து கரையில் வைத்துவிட்டு நீரில் மூழ்குகின்றனர். இந்நிலையில் மாயக்கண்ணன் அவற்றையெல்லாம் வாரிச் சுருட்டிக் கொண்டு மிக விரைந்து குருந்த மரத்தின் மேலேறி மறைந்து நிற்கின்றான். நீராடி முடித்துக் கரையேறிய பெண்கள், தாம் வைத்துச் சென்ற ஆடைகளைக் காணாது திகைத்து நிற்கின்றனர்; குருந்த மரத்தின் இலைகள் சலசலத்த ஓசை கேட்டு நிமிர்ந்த பெண்கள் கண்ணனைக் கண்டனர். ''நாம் வந்த சுவடு அறிந்து இக்கள்வன் எப்படியோ

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

இங்கும் வந்து விட்டானே! நாமும் இவனைப் போற்றிப் புகழ்ந்து இவனிடமிருந்து ஆடைகளைப் பெற வேண்டும் என்று நினைத்து அக்கண்ணனை ஏத்திப் புகழ்ந்தும், வாழ்த்தியும், தாழ்த்தியும், சீறியும், வெறுத்தும் பேசி யாசித்தனர்; தங்களது ஆற்றாமையையும், அடைந்த அவமானத்தையும் வெளிப்படக் கூறி, முடிவில் அவனால் வழங்கப்பெற்ற தம் ஆடைகளைப் பெற்றுக் கரையேறினார்கள்'' என்பது அச்செய்தியாகும். இவ்விதம் ஆயர்குலப் பெண்கள் அடைந்த ஆற்றாமைத் துயரைத்தான் இப்பதிகத்தில் புலப்படுத்துகின்றாள் ஆண்டாள்.

'தோழியும் நானும் தொழுதோம், துகிலைப் பணித்தருளாயே, ஏழைமை ஆற்றவும் பட்டோம், இனி என்றும் பொய்கைக்கு வாரோம்' என்று கூறினார்களாம்.

'' கோழி யழைப்பதன் முன்னம் குடைந்துநீ ராடுவான் போந்தோம்
ஆழியஞ் செல்வனும் எழுந்தான் அரவணைமேல்பள்ளி கொண்டாய்
ஏழைமை யாற்றவும் பட்டோம் இனியென்றும் பொய்கைக்கு வாரோம்
தோழியும் நானும் தொழுதோம் துகிலைப் பணித்தருளாயே ''

(நாலா. 524)

'இங்கே என்ன நேர்ந்தது? நீ இந்தக் குளக்கரைக்கு எவ்வாறு வந்தாய்? துளசி மாலை அணிந்த தூயனே! மாயனே! எங்கள் நேரம் சரியில்லை. உன்னிடம் அகப்பட்டுக்கொண்டோம். காளிங்க நர்த்தனம் செய்த கண்ணபிரானே! வித்தகப் பிள்ளையே! நீ ஏறியிருக்கும் குருந்த மரத்திற் கொண்டுபோய் ஒளித்து வைத்திருக்கும் எங்கள் ஆடைகளையெல்லாம் எங்களுக்கு அளிக்க மாட்டாயா? 'குருந்திடைக் கூறை பணியாய்', 'பட்டைப் பணித் தருளாயே' என்றெல்லாம் வேண்டுகின்றனர். கண்ணன் இரக்கம் காட்டவில்லை; பெண்கள் மீண்டும் மீண்டும் ஆற்றாமையால் புலம்புகிறார்கள்.

'அந்தோ! இஃதென்ன இளமைக் கொடுமை! எங்கள் வீட்டார் பார்த்தால் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். நீ செய்யும் செயல் உன் தகுதிக்கு அடாத செயல், தகாத செயல் என்பதனை நீ கருத மாட்டாயா? கோதண்டம் எனும் வில்லால் வீரம் விளைவித்து இலங்கை மன்னன் இராவணனை அழித்த அழகனே! நீ வேண்டியவெல்லாம் தருவோம். எவரும் காணாத நிலையில் நாங்கள் ஊருக்குள் ஓடி விடுகின்றோம். அதற்கு வாய்ப்பாக நீ ஒளித்து வைத்திருக்கும் எங்கள் உடைகளை எங்களுக்குத் தந்து விடு' என்று வேண்டுகிறார்கள். என்ன வேண்டியும் கண்ணன்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

இசையவில்லை. எனவே, 'இரக்கமேல் ஒன்றும் இலாதாய்' என்று அவர்கள் கண்ணனை ஏசுகின்றனர். 'இலங்கையழித்த பிரானே, குரக்கு அரசாவது அறிந்தோம். குருந்திடைக் கூறை பணியாய்,' என்று எளியவர்க்காக வலியவர்களை அழித்து அவன் அருளிய திறத்தைப் பாராட்டித் தம் ஆடைகளை வேண்டுகின்றனர்; இதற்கும் கண்ணன் மசியவில்லை.

'நீர் நிலைகளில் கயல் மீன்களோடு, வாளை மீன்களும் சேர்ந்து எங்கள் கால்களைக் கடிக்கின்றன. அகன்று ஆழ்ந்த தாமரை மலர்களையுடைய தடாகத்திலே உள்ள தாமரைத் தண்டுகள் எங்கள் கால்களிற் பட்டு உரசி உறுத்துகின்றன; அதனால் விடத் தேள் கொட்டினாற்போல வருந்துகின்றோம்; நேரம் ஆக ஆகப் பலரும் நீர்நிலைகளை நோக்கி வரும் அரவம் கேட்கின்றது. ஊழி எல்லாம் உணர்பவனே! நீ நீதியல்லாதன செய்யலாமா? நீ இவ்வாறெல்லாம் வருத்தினாலும் நாங்கள் உன்னிடமே அன்பு அதிகம் கொண்டிருக்கிறோம். எனினும், எம் அன்னைமார் நீ செய்யும் விளையாடல்களைக் காணில் ஒப்பமாட்டார்கள். எங்கள் ஆடைகளைத் தந்து எங்கள் மானத்தைக் காப்பாற்றுவாயாக' என்றெல்லாம் ஆயர் சிறுமியர் வேண்டுவதாக இப்பதிகம் அமைந்துள்ளது.

இப்பதிகம் உணர்த்தும் உள்ளுறைப் பொருள் 'எம்பெருமான் திருவுள்ளம் பற்றினாலன்றி' எந்த ஒரு பலனும் சேதனனுக்குக் (உயிர்களுக்கு) கிட்டாது' என்பதையும் 'எம்பெருமானின் சம்மதமின்றி இப்பிரபஞ்சத்தில் ஓர் அணுவும் அசையாது' என்று வேதங்களில் விதிக்கப்பட்டிருப்பதையும் உணர்த்துவதும் ஆகும். மேலும், பெருமானின் இச்செய்கை, பரமாத்மா - ஜீவாத்மா தத்துவத்தை விளக்கிக் காட்டுவதாகவும் பொருள் கொள்வர். இத் திருமொழியின் இறுதியில், கண்ணன் கோபியர்களுக்கு ஆடைகளைத் தந்து இன்பம் அனுபவித்ததாகச் சொல்லப்படுகிறது. 'ஞானம் கைவரப் பெற்ற ஜீவாத்மா, பெருமானைக் கலந்து, பேரின்பம் அடைவதையே இது குறிக்கும்[5] என்பர்.

கூடல் குறி

மூன்றாம் திருமொழியில் துகில்களைக் கவர்ந்தும், திரும்பத் தந்தும் ஆயர்குலப் பெண்களுடன் விளையாடி மகிழ்ந்த கண்ணன், அவர்களை விட்டுப் பிரிகின்றான். கண்ணனை மீண்டும் காண விழைந்த அப்பெண்கள் கூடல் இழைத்துப் பார்ப்பதைத் திருமொழியில் நான்காம் பதிகம் எடுத்துரைக்கின்றது.

---

5. தேவராஜன். மு.நூ., பக். 767-770

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

கூடல் இழைத்தல் என்பது கண்ணை மூடிக்கொண்டு ஒரு வட்டம் போடக் கோடு தொடங்க, அக்கோட்டின் நீட்சி இரு முனைகளும் பிழையின்றி வட்டமாகப் போய்க் கூடி முடிவதாகும். அவ்வாறு தொடங்கிய கோடு ஒழுங்காக வட்டத்தில் போய் முடிந்தால் பெண்கள் தாங்கள் நினைத்தது நடக்கும் என்று முடிவு செய்வர்; வட்டத்தில் முடியவில்லையானால் கொண்ட எண்ணம் ஈடேறாது; பிழைபடும் எனக் கருதுவர்.

''வட்டமாகக் கோடிட்டு அதற்குள்ளே சுழி சுழியாகச் சுழித்து இரண்டிரண்டாகக் கூட்டிப் பார்க்கும் போது இரட்டைக் கணக்காக முடிவுற்றால் கூடுகை விளையும்; ஒற்றைக் கணக்காக முடிவுற்றால் கூடாமை என்று முடிவு செய்துகொண்டு குறி பார்ப்பதே கூடலிழைத்தல் என்பதாகும். இதையே 'சாருதாவ லோகநம்' என வடநூலார் கூறுவர். கூடல், கூடலிழைத்தல், கூடல் வளைத்தல், கூடற்குறி என்றெல்லாம் பல பெயர்களில் இச்செயல் கூறப்பட்டள்ளது''[6] என்றும் கூறுவர் அறிஞர்.

திருமழிசையாழ்வார் பாடலில் கூடல் இழைத்தல் பற்றிய செய்தி இடம் பெற்றுள்ளது. (நான்முகன் திருவந்தாதி 39) இம்மரபினை அடியொற்றி, கண்ணன் மீது மையல் கொண்ட ஆண்டாள் நாச்சியாரும், அக்கண்ணனை அடைய முடியுமா என்று அறிவதற்குக் 'கூடிடு கூடலே' எனக் கூடற்குறி பார்க்கின்றார்.

கூடல் இழைத்தல் என்னும் இப்பதிகத்தில், திருமால் கோயில் கொண்டருளும் பல திருத்தலங்களையும், திருமாலின் அவதாரச் சிறப்புக்களையும் ஒவ்வொரு பாடலிலும் எடுத்துரைக்கின்றார் ஆண்டாள். இப்பதிகத்தின் ஒவ்வொரு பாடலும், 'கூடிடு கூடலே' என முடிவு பெறுகின்றது.

'' தெள்ளியார் பலர்கைதொழும் தேவனார்
வள்ளல் மாலிருஞ்சோலை மணாளனார்
பள்ளி கொள்ளும் இடத்து இடிகொட்டிடக்
கொள்ளுமாகில் நீ கூடிடு கூடலே '' (நாலா. 534)

என்று முதற்பாடலில் திருமாலிருஞ்சோலையைச் சொன்ன ஆண்டாள் இரண்டாவது பாடலில் திருவேங்கடத்தையும் திருக்கண்ணபுரத்தையும் குறிப்பிடுகின்றார்:

---

6. கே.ஏ. மணவாளன், ஆண்டாள், ப. 52

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

" காட்டில் வேங்கடம் கண்ணபுர நகர்
வாட்டம் இன்றி மகிழ்ந்துறை வாமனன்
ஓட்டரா வந்துஎன் கைப்பற்றித் தன்னொடும்
கூட்டு மாகில் நீகூடிடு கூடலே " (535)

''எம்பெருமான் என்னோடு அணைய வேண்டும் என்று திருவேங்கடமலை, திருக்கண்ணபுரம் முதலிய திருப்பதிகளில் வந்து நிற்கின்றான்; எனக்கு இசைவு உண்டோ? இல்லையோ? என்று ஐயுற்றுத் தாமதித்து நிற்கின்றான் போலும்! அப் பெருமான் என்னுடைய அதிக ஆவலை நன்கு அறிந்து சடக்கென்று ஓடி வந்து என்னைத் தன்னோடே அணைத்துக் கொள்ளுமாறு விதிவாய்க்க வேண்டும்'' என்று எண்ணுகின்றார்.

இரண்டாம் பாடலில் வாமன அவதாரம் குறிக்கப்பெறுகின்றது. மூன்றாம் பாடலில் தேவகி, வசுதேவர் இடம் பெற்றுள்ளனர்; நான்காவது பாடலில், காளியன்மேல் நடம் புரிந்த பாதத்தினைப் புகழும் ஆண்டாளைப் பார்க்கிறோம்.

" ஆய்ச்சி மார்களும் ஆயரும் அஞ்சிடப்
பூத்த நீள்கடம்பு ஏறிப்புகப் பாய்ந்து,
வாய்த்த காளியன் மேல் நடமாடிய
கூத்தனார் வரில் கூடிடு கூடலே " (நாலா. 537)

இப்பாடலுக்கு உரையாசிரியர் தரும் விளக்கம் எண்ணி மகிழத்தக்கதாகும்.

''ஆயர்பாடியில் காளியன் என்னும் கொடிய நாகம் ஆநிரைகளையும் மக்களையும் மிகவும் வருத்தியது. காளியனின் கொட்டத்தையடக்கத் திருவுள்ளம் கொண்ட கண்ணன், அந்நாகத்தின் நஞ்சினால் எரிந்து உலர்ந்திருந்த கடம்ப மரம் ஒன்றின் மீது ஏறி, காளியன் இருந்த மடுவினுள் குதித்தான். கண்ணனுடைய திருவடிகள் தன்மேல் பட்டதும் அக்கடம்ப மரம் பூத்துப் பணைத்ததாம். ஆண்டாள் இதனைப் 'பூத்த நீள்கடம்பு' எனப் போற்றுகிறார். எரிந்து கரிந்து போன கடம்ப மரம் கண்ணனின் திருவடி பட்ட மாத்திரத்தில் எவ்வாறு பூத்துப் பணைக்கும் என்ற கேள்வி எழலாம். பணைக்கும் என்பதை'' ஓர் உதாரணம் காட்டி விளக்குகின்றனர் உரையாசிரியர்கள்.

அழிஞ்சில் எனப் பெயர் கொண்ட மரம் ஒன்று இருப்பதாகச் சொல்லப்படுகிறது. (இதை அங்கோல மரம் என்றும் அழைப்பர்), இம்மரத்தின் பழம் கீழே உதிர்ந்து கிடக்கும். அவ்வாறு உதிர்ந்து

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

கிடக்கும் நேரத்தில் வானத்தில் மின்னல் மின்னினால் அந்தக் கணத்திலேயே அப்பழமானது பழையபடி மரத்தில் ஒட்டிக் கொள்ளுமாம். அக்கணத்தில், மரத்தில் ஒட்டிக்கொண்ட அப்பழத்தை எடுத்து வந்து தைலமாக்கி ஒரு மாங்கொட்டையில் தடவித் தரையில் நட, அப்போதே அம்மாங்கொட்டை முளைத்து, ஒரு பெரிய மரமாகிக் காய்க்கத் தொடங்கும் என்று சொல்லப்படுகிறது. ''அப்படியிருக்க 'விஷ்ணுவினுடைய மேலான திருவடியில் அமுதம் வெள்ளமிடுகிறது' என்று வேதத்தால் சொல்லப்பட்ட பெருமானுடைய திருவடிபட்டு, பட்ட மரம் தளிர்க்கச் சொல்ல வேண்டுமோ? ஸ்ரீ ராமனின் திருவடியில் கல் (அகலிகை சாப விமோசனம் பெறல்) பெண்ணானால், கண்ணன் திருவடியால் கரிந்த கடம்பு பூக்கக் கூடாதோ?'' [7] என்று அருமையாக விளக்கம் உரைத்துச் செல்கின்றனர் உரையாசிரியர்.

மாட மாளிகைகள் நிறைந்த மதுரையை நாடிவந்து, தெருவின் நடுவே நடந்து, பின் கம்சனின் பட்டத்து யானையான குவலயாபீடத்தைக் கொன்ற வரலாறு ஐந்தாம் பாடலில் இடம் பெறுகின்றது.

மருதிடை சென்று முறித்த வரலாறு ஆறாம் பாடலில் கூறப்படுகின்றது. யசோதை ஒருநாள் கண்ணனைக் கயிற்றால் கட்டி, ஓர் உரலில் பிணித்துவிட, கண்ணன் அவ்வுரலை இழுத்துக்கொண்டு அங்கிருந்து இரட்டையாக நின்றிருந்த மருத மரத்தின் நடுவில் வர, அம்மரங்கள் இரண்டும் முறிந்து விழுகின்றன; முன்பு நாரத முனிவரது சாபத்தால் அம்மரங்களாய் மாறிய நளகாபரன், மணிக்கிரீவன் என்னும் குபேர புத்திரர்கள் இருவரும் சாபம் தீர்ந்தனர் என்பது வரலாறு. மரங்களாய் நின்ற குபேர புத்திரர்களைச் சாபத்திலிருந்து விடுவித்ததும், அம்மரங்களில் ஆவேசித்துக் கிடந்த அசுரர்களைக் கொன்றழித்த கண்ணனது திறமும் இப்பாடலில் கூறப்படுகின்றன.

வெறுக்கும் செயல் செய்த சிசுபாலன், வழியிடை நின்ற இரட்டை மருத மரங்கள், ஏழு எருதுகள், பகாசுரன், கம்சன் ஆகியோரை அழித்தவனாகிய கண்ணன் என்று கண்ணன் அவதாரப் பெருமை ஏழாம் பாடலில் எடுத்துரைக்கப்படுகின்றது. கன்றுகளை மேய்த்த கோபாலனைப் பற்றிய குறிப்பு எட்டாம் பாடலில், கூறப்படுகின்றது. அன்புடையார் மனத்தேதான் ஆண்டவன் தங்குவான் என்பதை ஆண்டாள் இப்பாடலில் உணர்த்துகின்றார்.

7. தேவராஜன், மு.நூ., பக். 770-771

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

குறள் உருவாய்ச் சென்று மாவலியிடம் மூன்றடி மண் கேட்டு, அவனை மண்ணுக்குள் அழுத்திய வரலாறு ஒன்பதாவது பாடலில் கூறப்படுகின்றது.

மதத்தையுடைய யானையாகிய கசேந்திராழ்வான் முதலையால் பற்றப்பட்டுத் துன்புற்று, 'ஆதிமூலமே' என்று அழைக்க, அதன் துன்பம் தீர்த்து ஆட்கொண்ட செய்தி பத்தாவது பாடலில் கூறப்படுகின்றது (543).

கண்ணன் ஆய்ச்சியர் நெஞ்சில் குழைந்திருக்கும் அழகன், குழகன் என்று அவன் மீது கொண்ட காதலை இப்பாடலில் வெளிப்படுத்துகின்றார் ஆண்டாள் நாச்சியார்.

பதிகப் பயன்கூறும் பதினோராவது பாடலில், ஊடுதல், கூடுதல், இன்பம் உணர்தல், புணர்தல் செய்துவந்த நிறைபுகழ் ஆய்ச்சியர் இழைத்த கூடலைக் குழற்கோதை பாடிய பாடல்களைப் 'பாடவல்லார்க்கு இல்லை பாவமே' எனக் கூறுகிறார் ஆண்டாள்.

குயில் பத்து

கூடற்குறி மூலம் உறுதியான முடிவு ஒன்றும் கிடைக்கப் பெறாத ஆண்டாள், அது அசேதனம் (அறிவற்றது) என்பதை உணர்ந்து, சேதனமான (அறிவுள்ள) குயிலை நோக்கி, 'எப்படியாவது அவன் என்னிடம் வந்து கூடும்படி கூவாய்' என்று வேண்டும் பாடல்கள் 'குயிற்பத்து' என்னும் ஐந்தாம் திருமொழியாக அமைந்துள்ளன. குயிலை விளிக்கும்போது, அக்குயிலின் இயற்கைச் சூழலை மிக அழகாகப் படம் பிடித்துக் காட்டுகிறாள் ஆண்டாள் :

" புன்னை குருக்கத்தி ஞாழல் செருந்திப்
பொதும்பினில் வாழும் குயிலே " (545)

" கள்அவிழ் செண்பகப்பூ மலர் கோதிக்
களித்து இசைபாடும் குயிலே " (546)

" போதுஅலர் காவிற் புதுமணம் நாறப்
பொறிவண்டின் காமரம் கேட்டுஉன்
காதலியோடு உடன்வாழ் குயிலே " (547)

" கொத்துஅலர் காவில் மணித்தடம் கண்படை
கொள்ளும் இளங்குயிலே! " (550)

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

" தேம்கனி மாம்பொழில் செந்தளிர் கோதும் சிறுகுயிலே " (552)

" பொங்கொளி வண்டு இசைக்கும் பொழில்வாழ் குயிலே " (553)

கண்ணனைக் காதலித்ததன் விளைவாகத் தன் கையில் உள்ள சங்கு வளையல்கள் கைகளை விட்டு நீங்கிவிட்டன என்பதை முதற்பாடலில் உணர்த்துகிறார் ஆண்டாள்.

" மன்னு பெரும்புகழ் மாதவன் மாமணி வண்ணன் மணிமுடிமைந்தன்
தன்னை உகந்தது காரண மாகஎன் சங்கிழக் கும்வழக் குண்டே...
புன்னை குருக்கத்தி ஞாழல் செருந்திப் பொதும்பினில் வாழும் குயிலே!
பன்னி எப்போதும் இருந்து விரைந்துஎன், பவளவா யன்வரக் கூவாய்! "
(545)

என்னும் பாடலில், 'தன்னை ஆசைப்பட்டவர்களுக்கு வளையிழந்து நிற்கைதான் பலன்,' என்று 'இப்படி ஒரு நியாயம் அவன் தந்த சாத்திரங்களுள் உண்டோ?' என்று குயிலை விளித்துக் கேட்கிறார். இத்துடன் நில்லாது, ஈற்றடியில், அக்குயில் செய்ய வேண்டியதையும் எடுத்துரைக்கின்றார். அதனால் அக்குயில் தன் காதலைத் தலைவனின் திருவுள்ளத்தில் படும்படி ஒரு முறை மட்டும் சொல்லி அமையாது, மீண்டும் மீண்டும் பலமுறை எடுத்துக்கூறி, அவன் விரைந்தே வந்து என்னுடன் கூடும்படியாகக் கூவுமாறு குயிலை வேண்டுகிறார்.

குயிலுக்குத் தன் தலைவனின் அடையாளங்களைக் கூறுவது போல், 'வெள்ளை விளி சங்கு இடக்கையிற் கொண்ட விமலன்' என்று இரண்டாம் பாடலில் குறிப்பிட்டு, 'என் வேங்கடவன் வரக் கூவாய்' (546) என்று பணிக்கிறார் ஆண்டாள். மற்றொரு பாட்டில், 'ஏ, குயிலே! என் துன்பம் மேலெழுந்தவாரியான துன்பம் அன்று. எலும்பையும் உருக்கவல்லது. பொறுக்கவொண்ணாத பெருந்துன்பம் இது. ஒரு நாளல்ல, இரு நாளல்ல, பல நாட்களாக ஒரு நொடிப்பொழுதும் உறங்க முடியாமல் தவிக்கின்றேன். 'துன்பக் கடல் புக்கு வைகுந்தன் என்பது ஓர் தோணி பெறாது உழல்கின்றேன். பொன் போன்ற மேனியனும் கருடக் கொடியை உடையவனுமாகிய என் நாயகளை வரக் கூவுவாய்'' என்று குயிலை வேண்டுகிறாள்.

'நான் வேண்டுவதை நீ செய்தால், நான் வளர்த்து வருகிற கோலக்கிளியை உன்னுடன் தோழமை கொள்ளச் செய்வேன்' என்கிறாள்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

இப்பாடல்களுக்கு உரை விளக்கம் வரைகின்ற உரையாசிரியர்கள், அருமையான விளக்கங்களைத் தந்துள்ளமை குறிப்பிடத் தக்கது.

'கண்ணன் என்பதோர் தோணி பெறாது' என்று ஆண்டாள் சொல்லாமல் 'வைகுந்தன் என்பதோர் தோணி பெறாது' என்று சொல்வதற்கு முக்கியக் காரணம் ஒன்று உண்டு. கண்ணன் உகந்தருளிய தலங்களுக்கே போய் அவனது அர்ச்சாவதாரத் திருமேனிகளைத் தீண்டி அணைத்தல், பேசி மகிழ்தல் முதலிய இன்பங்களைப் பெற முய்ன்றும் ஆண்டாளால் அவ்வாறு பெற முடியவில்லையாம். பிறகுதான் அக்கண்ணன் பிறந்து வாழ்ந்த காலமான விபவாவதாரமான நிலைக்குச் சென்றாளாம். (விபவம் - அவதாரம்) விபவாவதார கால நிலையோ அக்காலத்தே வாழ்ந்தார்க்கன்றிப் பிற்காலத்தவர்க்குக் கிட்டக் கூடியதல்ல, அனுபவிக்கக் கூடியதல்ல. எனவே, இதுவும் பயன்பட்டிலது. ஆகையால்தான், வைகுந்தனது இருப்பிடமான பரமபதத்தினை நினைத்து, இப்பொழுது கூவியழைக்கின்றாளென்பர்.... அப்படியிருந்தும், அவனுடன் கலவி கிடைக்காவிட்டாலும், காட்சி கூடக் கிடைக்கவில்லையே என்ற கவலை பிறந்தது அவளுக்கு. இங்கே ஒரு ஐயத்தைத் தோற்றுவித்தார் நம்பிள்ளை. அதாவது, வெகு தொலைவில் இருக்கும் வைகுந்தம் ஆண்டாளுக்கு அரிதாய் இருக்கலாம். ஆனால், அவள் பிறந்து வளர்ந்து வசித்துவரும் ஊரிலுள்ள எம்பெருமானைக் காண அவளுக்கு என்ன தடை என்பதே அது. இதற்கு நஞ்சீயர் என்ற ஆசாரியச் சிரேட்டர் கூறிய விடை மிகவும் நயமிக்கதொன்று. அதாவது: ''ஆண்டாள் ஸ்ரீவில்லிபுத்தூரிலே பிறந்து வளர்ந்து வருபவளாயினும், அவ்வூர்க் கோயிலிலே சென்று அப் பெருமானைச் சேவிப்பது அவளுக்கு அவ்வளவு எளிதான செயலல்ல. நாமெல்லாம் கோயிலுக்குப் போய் வந்தால் எந்த விதமான சித்தவிகாரமும் இன்றிக் கல்போல் போய்க் கல் போலவே திரும்பி வந்துவிடுவோம். குறியழியவே மாட்டோம். ஆண்டாளுடைய தன்மை அப்படிப்பட்டதன்று. அவள் உள்ளே புகுந்தவாறே, எம்பெருமானுடைய சீல குணத்தை அனுசந்தித்து அதிலே ஆழங்கால்பட்டு மயங்கி, பரதாழ்வானைப் போலே மோகித்துக் கிடப்பாளாய்த்து. இத்தன்மையினை உணர்ந்திருந்த உறவினர் இவளைக் கோயிலுக்கே போகவொட்டார்கள். இவளால் அவ்வூர்ப் பெருமானையும் கண்டு மகிழ முடியாமற் போனதனால் தான். 'வில்லிபுத்தூர் உறைவான்தன் பொன்னடி காண்பதோர் ஆசையினால், என்பொரு கயல் கண்ணிணை துஞ்சா' என்று இவள் பாடினாள்'' என்றாராம்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

இத்தகைய அனுபவம் நம்மாழ்வார் பாசுரத்திலும் காணப்படுகிறது. நம்மாழ்வார் ஆகிற பராங்குச நாயகிக்கு உற்ற நோயைப்பற்றிக் கூறும்போது, 'அநியாயமாய் இவளைக் கோவிலுக்கு அழைத்துப் போய், பெருமாளைச் சேவிக்கச் செய்து அதனால் சித்தவிகாரத்தை உண்டாக்கி அவன் வலையில் அகப்படுத்தி இழந்தீர்களே' என்று கூறப்பட்டுள்ளது. அதுபோல நாலுபேர் (ஊரார்) வசை கூறும்படி நேர்வதைக் காட்டிலும், இவளைக் கோவில்வழி செல்லவிடாமல் காத்துவைப்பதே இவளுக்குச் செய்யும் நன்மை என்று நினைத்துத் தாய் தந்தையர் இவளை அகத்தினுள்ளேயே அடக்கி வைத்திருப்பார்கள். அதனாலேதான் ஆண்டாள் 'வில்லிபுத்தூருறைவான்றன் பொன்னடி காண்பதோராசையினால் என் பொருகயல் கண்ணிணை துஞ்சா' என்று கூறுவது பொருத்தமேயாகும்' [8] என்பர்.

இறைவன்மீது கொண்ட மிகுதியான பற்றுக்கூட உலக வாழ்க்கைக்குத் தடையாக விளங்கிய தன்மையை ஆண்டாளின் இக்கூற்று உணர்த்துகிறது. 'முதலாழ்வார்கள் மூவருக்கும் வழங்கிய இயற்பெயர் மறைந்துவிடுகிறது. பொய்கை, பூதம், பேய் என்ற பெயர்கள் இவர்களுக்கு அக்காலச் சாதாரண மக்கள் வழங்கிய பெயர்களாக இருக்க வேண்டும். காரைக்காலம்மையாரும் பேய் எனப்படுகிறார். பக்தி இயக்கத்தைத் தொடங்கியவர்கள் பிறர் கண்களில் எவ்வாறு தென்பட்டார்கள் என்பதற்கு இது சான்று' [9] என்று ஆ. வேலுப்பிள்ளை கூறும் கருத்தும் இங்கு நினைவு கூரத்தக்கதாகும்.

மேலும், 'அத்தத்துவம் கடந்த தயாபரன் வருகிறான் என்று கூவினால் தம் தலையல்லது கைம்மாறாகத் தருவதற்கு வேறு ஒன்றும் இல்லை என்னும், அறத்தின் வசப்பட்ட செயல் ஆகும் அதுவே,' என்றும் குயிலை நோக்கிக் கூறுகிறார், ஆண்டாள்.

" தத்துவனைவரக் கூறிற்றி யாகில்
தலையல்லால் கைம்மாறி லேனே " (550)

" ஆழியும் சங்கும்ஒண் தண்டும் தங்கிய கையனைவரக் கூவில்நீ
சாலத் தருமம் பெறுதி " (551)

இப்பதிகத்தின் எட்டாம் பாடல் நயம் நிறைந்த ஒன்றாகும். ஆண்டாளின் சொல்லாடும் திறத்தினை அது எடுத்துக்காட்டுகிறது.

8. கே.ஏ. மணவாளன், மு.நூ., பக். 56-58
9. ஆ. வேலுப்பிள்ளை, தமிழ் இலக்கியத்தில் காலமும் கருத்தும், ப. 133

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

அப்பாடலில், 'பைங்கிளி வண்ணனாம் சிரீதரன் ஆகிய திருமாலின் பாசவலையில் சிக்குண்டு கிடக்கிறேன் நான்; இந்தச் சோலையிலே நீ வாழ விரும்பினாயானால், சங்கும் சக்கரமும் ஏந்தியவன் இங்கே வரும்படி கூவு, அல்லது பிரிவால் இழந்த என் பொன்வளைகளைக் கொண்டுவந்து கொடு. இவை இரண்டில் ஏதாவது ஒன்றை நீ கட்டாயம் செய்து தீரவேண்டும்' என்கிறாள் (553).

கண்ணன் இவளைப் பிரிந்ததனால் இவளது உடல் இளைத்துப் போய்க் கை வளையல்கள் கழன்று விழுகின்றன. இவளது கை வளைகள் கழலாமல் தங்க வேண்டுமானால் உடல் பூரிப்படையக் கண்ணன் இவளை அணைக்க வேணும். அதற்காக, அவன் இவள் அருகே வரவேண்டும். இப்படி இரண்டு காரியங்களும் ஒன்றாக இருக்க, அவன் வருதல் அல்லது கைவளை தருதல் என்று வேறுபடுத்தினாற்போல் கேட்பது சமத்காரம். இது 'மாம்பழமாவது மாங்கனியாவது வேண்டும்' என்பது போலுள்ளது. இதை ஒரு சமத்காரமான பேச்சாகப் பெரியோர் கருதினர்' [10]

அடுத்த பாசுரத்தில், தென்றலும், திங்களும் தன்னை வருத்துவதைக் கூறி, 'என்றென்றைக்கும் இச்சோலையில் நீ வாழ விரும்பினால் நீயும் என்னை மேலும் துன்புறுத்தாதே, நாராயணன் இன்று இங்கு வருவான் என்று கூவுவாயாக! இன்றேல் இங்கிருந்தும் உன்னை நிச்சயமாகத் துரத்துவேன்' என்று குயிலுக்கு எச்சரிக்கை விடுக்கின்றாள் ஆண்டாள் (554).

இவ்வாறு ''விண்ணுற நீண்டு அடி தாவிய மைந்தனை வேற்கண் மடந்தை விரும்பி, கண்ணுற என் கடல்வண்ணனைக் கூவு கருங்குயிலே'' என்று கேட்டுக்கொண்டமையே ஐந்தாம் பத்தாக உருக்கொண்டுள்ளது.

'தலைவன்மேல் காமுற்ற தலைவி அஃறிணைப் பொருள் களைத் தூதுவிடுவது கவிமரபில் சொல்லப்பட்டிருந்தாலும், பெரும்பாலும் பேசும் திறமை மிக்க குயில், அன்னம், கிளி முதலிய புள்ளினங்களையே தலைவி தூது அனுப்புவது வழக்கம். வைணவ சித்தாந்தத்தில் பறவைகளையே தலைவி தூது விடுவதற்கு உட்பொருள் உண்டு. 'ஆசார்ய ஹ்ருதயம்' (சூ. 150) இதனை, 'பகவத் விஷயத்தில் கொண்டு சேர்ப்போர் பறவைகளாகக் கொள்ளப் பெறுவர். பறவைகள் இரு சிறகுகளைக் கொண்டு பறக்கின்றன. ஞானம், அனுஷ்டானம் (ஒழுக்கம்) என்னும் இரண்டாலும் இறைவன் அடையப் பெறுகிறான். எனவே, இவை

10. கே.ஏ. மணவாளன், மு.நூ., பக். 59-60

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

இரண்டும் சிறகுகளாகக் கொள்ளப்படுகின்றன. அதற்கு உடலாக நின்று செயல்படுபவர்கள் ஆசாரியர்கள். 'வைணவ சித்தாந்தத்தில் ஆசார்யர்களுக்குப் பெரும் அந்தஸ்துத் தரப்படுகிறது. 'ஆசார்யனே மேலான தெய்வம், ஆசார்யனே மேலான சாதனம்; ஆசார்யனே உயர்ந்த மந்திரம்; ஆசார்யனே மேலான பலன்; ஆசார்யனே விரும்பப்படும் பொருள்; ஆசார்யனே மேலான செல்வம்; அத்தகைய ஆசார்யன் எந்தக் காரணத்தால் திருமந்திரத்தை உபதேசித்தானோ, அந்தக் காரணத்தால் அந்த ஆசார்யனே, ஆசார்யர்கள் அனைவரிலும் சிறந்தவனாவான் என்பது சாஸ்திரப் பிரமாணம்'' [11] என்பர்.

திருமணக் கனவைத் தோழிக்கு உரைத்தல்

காதலர் வாழ்வில் கனவு காண்பது என்பது ஒரு பொதுவான இயல்பு. தலைவன் தலைவிக்குக் கூற்று நிகழும் இடம் குறித்துப் பேச வந்தவிடத்து ''கனவும் உரித்தால் அவ்விடத்தான'' [12] என்று தொல்காப்பியம் எடுத்துரைக்கிறது. சங்க இலக்கியப் பாடல்கள் சிலவற்றில் காதல் கனவு குறித்த செய்திகள் இடம் பெற்றுள்ளன. திருக்குறளில் 'கனவுநிலை உரைத்தல்' என்றே ஓர் அதிகாரம் (122) அமைத்துள்ளார் திருவள்ளுவர். 'மனிதனின் கனவுகளில் சில முன் ஜென்மத்து மனப்பதிவுகள் என்றும், அந்த மனப்பதிவுகளை ஜீவன் சில நேரங்களில் நினைக்கிறது' என்றும் ஆதிசங்கரர் குறிப்பிட்டுள்ளார். அதேபோல் ஆண்டாள் நாச்சியாரும், முன்ஜென்மத்தில் தாம் பூமிதேவிப் பிராட்டியாக இருந்தபோது திருமாலைத் திருமணம் செய்துகொண்ட காட்சி நிழற்படம் போல் அவர் உள்ளத்திரையில் ஓட, அதனைத் தோழிக்கு எடுத்துரைத்தார்' என்பர். [13]

'மன்னு பெரும்புகழ் மாதவனிடம் சென்று, குயிலே... பன்னி... கூவாய்' என்று தூது அனுப்பியும், குயில் ஆண்டாளின் விருப்பப்படி கூவவில்லை. கண்ணபிரானும் முகம் காட்டவில்லை; இவளுக்கு அடியோடு முகங்காட்டாதொழியில் இவள் தரித்திருக்க மாட்டாள் என்று கருதிய கண்ணன், கனவில் திருமணக் காட்சியைக் காட்டுகின்றான்.

11. தேவராஜன், மு.நூ., ப. 772
12. தொல்காப்பியம், பொருளதிகாரம், பொருளியல், நூ. 3
13. தேவராஜன், மு.நூ., ப. 755

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

திருமணத் தொடக்கம் முதலாகக் காதலியைக் கைப்பிடித்தல் வரை நடைபெறும் நிகழ்ச்சிகளை ஆண்டாள் கனவில் கண்டு அனுபவித்தவற்றை அப்படியே தன் தோழிக்குக் கூறுவதாக அமைந்துள்ளது 'திருமணக் கனவை உரைத்தல்' என்னும் ஆறாம் திருமொழி.

" வாரணம் ஆயிரம் சூழ வலஞ்செய்து
நாரணன் நம்பி நடக்கின்றான் என்றுஎதிர்
பூரண பொற்குடம் வைத்துப் புறம் எங்கும்
தோரணம் நாட்டக் கனாக்கண்டேன், தோழீநான் " (556)

நாரணன் நம்பி தன்னை மணம் புரிவதாக நிச்சயித்து, ஆயிரக் கணக்கான யானைகள் சூழ ஊரை வலம் வருதல், நகர் முழுவதும் மக்கள் பூரணப் பொற்கும்பங்களை வைத்து வரவேற்றல், ஊரெங்கும் தோரணங்கள் நாட்டியிருத்தல் (556), நாளைக்குத் திருமணம் நிகழும் என்று உறுதி செய்தல், பாளைகளோடு கூடின பாக்கு மரங்களின் அலங்காரங்களை உடைய மணப்பந்தலின் கீழ் நரசிம்மன், மாதவன், கோவிந்தன் என்னும் திருப்பெயர்கள் பூண்ட ஓர் இளைஞன் உள்ளே நுழைதல் (557), இந்திரன் முதலான தேவர்கள் எல்லாம் இம் மண்ணுலகிற்கு வந்து, தன்னைத் திருமணப் பெண் என்று உறுதி செய்து, திருமணத்திற்கான ஏற்பாடுகள் செய்தல், நாத்தனார் திருமணப் புடைவையை உடுத்துதல், மணம் மிக்க மலர்களைச் சூட்டிவிடுதல் (558), பார்ப்பனர்கள் நான்கு திசைகளினின்றும் கொணர்ந்த புனித நீரைத் தலையில் தெளித்தல், மந்திரங்கள் ஓதுதல், கண்ணபிரானோடு தன்னை இணைத்துக் கையில் கங்கணம் கட்டுதல் (559), அழகிய இளம் பெண்கள் ஞாயிற்றின் ஒளி போன்ற ஒளி தரும் மங்கல விளக்கையும், பொற்கலசங்களையும் கையில் ஏந்திக்கொண்டு எதிரில் வர, வடமதுரை அரசர்பிரானார் கண்ணன் பாதுகைகளைச் சாத்திக் கொண்டு, தரைநிலம் அதிரும்படியாக எழுந்தருளால் (560), மத்தளங்கள் முழங்கவும், வலம்புரிச் சங்குகள் ஊதவும், மைத்துனன் முறையுடையவனான கண்ணபிரான், முத்துக்களையுடைய மாலைத் திரள்கள் தொங்கவிடப்பெற்ற பந்தலின்கீழ் வந்து தன் கைப்பிடித்தல் (561), நல்லபடி மறைகளை ஓதும் வைதிகச் செல்வர்கள் வேத மொழிகளைக் கூற, அந்தந்தக் கிரியைகளுக்கு இசைந்த மந்திரங்களைக் கொண்டு, பசுமையான நாணற்புல்லைச் சதுரமாக அமைத்து, வேள்விப் பொருள்களையிட்டுச் சடங்குகள் நிகழ்த்த, யானையைப் போன்ற செருக்குடைய கண்ணன் தன் கைப்பற்றித் தீயை வலம்வருதல் (562) இம்மைக்கும் ஏழேழ் பிறவிக்கும் பற்றாக இருக்கும் நாராயணன் ஆகிய கண்ணன்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

தாமரை போல் சிவந்த கையால் தனது கால்விரலைப் பிடித்து அம்மியின் மேல் எடுத்து வைத்தல் (563), அழகிய வில் போன்ற உருவத்தையும் ஒளி பொருந்திய முகத்தையும் உடையவர்களான தன் தமையன்மார் வந்து, நெருப்பை நன்றாகக் கொழுந்து விட்டு எரியச் செய்து, அந்த நெருப்பின் முன்னால் தன்னை நிறுத்தி, அரிமுகன், அச்சுதன் ஆம் கண்ணன் திருக்கையின் மேல் தன் கையை வைத்துப் பொரிகளை அள்ளிப்பரிமாறல் (564), குங்குமக் குழம்பை உடம்பெல்லாம் பூசி, குளிர்ந்த சந்தனத்தைத் தடவி, யானையின்மீது கண்ணனோடு கூடியிருந்து, திருமண விழாவினைக் கொண்டாடும் பொருட்டு அலங்கரித்த வீதியில் வலமாக வந்து, மணம் மிகுந்த நீரால் இருவரையும் திருமஞ்சனம் செய்வித்தல் (565) முதலான திருமணச் சடங்கு முறைகளைத் தம் கனவாக எடுத்துரைக்கிறார் ஆண்டாள்.

ஆண்டாளின் வாரணமாயிரம் பதிகத்தால் அக்காலத்திலும் கூட மணமகன் யானைமீது ஊர்வலமாக வருதல், புனித நீர் தெளித்துத் தூய்மை செய்தல், காப்புக் கட்டுதல், அம்மி மிதித்தல், தீவலம் வருதல், பொரியிடுதல் முதலிய சடங்குகள் வழக்கத்தில் இருந்தன என்பதை அறியலாம். இக்காலத்திலும் திருமாலடியார்களான வைணவர்கள் இல்லத்துத் திருமணங்களில் சீர் பாடல் என்றொரு சடங்கு நடைபெறுகிறது. அவ்வமயம் வாரணமாயிரம் என்று தொடங்கும் பதிகத்தை (பத்துப் பாட்டுக்களையும்) இனிமையாகப் பாடுவர். மணமக்கள் எதிரெதிரே அமர்ந்து மஞ்சள் பூசிய தேங்காய்களை உருட்டிவிட்டு விளையாடுவர். பாசுரங்களின் முடிவில் 'சீர்பாடிக் களிமின் களிப்போமே' என்று பாடி இரு பக்கத்து உறவினர்களின் பெயர்களைச் சொல்லி அறிமுகப்படுத்துவதும் காணப்படுகிறது. இம்மரபு இன்றும் பின்பற்றப்படுகிறது.

திருமாலையே மணம் புரிய வேண்டும், மற்ற மானிடர்க்கு என்று பேச்சு வந்தாலே உயிருடன் இருக்கமாட்டேன் (மானிடவர்க்கென்று பேச்சுப்படில் வாழகில்லேன்) என்று உறுதி கொண்டவளாக இருந்தமையால், ஆண்டாளின் ஆழ்மன எண்ணங்கள் இத்தகைய கனவுகளாக வெளிப்பட்டன எனலாம். 'ஆழ்மனத்தில் புதைந்து கிடக்கும் எண்ணங்களே கனவுகளாக வெளிப்படுகின்றன' என்று ஃபிராய்டு என்னும் அறிஞர் குறிப்பிடுவதும் இங்கு நினைவு கூரத்தக்கது.

வலம்புரிக்குக் கிடைத்த பேறு

வாரணம் ஆயிரம் சூழ வலம் வந்து, கண்ணனுடன் தமக்குத் திருமணம் நடப்பதாகக் கனவு கண்டார் ஆண்டாள் நாச்சியார்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

அப்போது அவனுடைய பவளம் போல் சிவந்த உதடுகளோடு தம் உதடுகளையும் பொருத்தி, அவனது வாய்ச்சுவையைப் பருக ஆசை கொண்டார்; துயிலுணர்ந்து கண் விழித்தபோது, நனவில் அவனது வாய்ச்சுவையை அவளால் உணர முடியவில்லை; சிந்தித்துப் பார்க்கிறாள். கண்ணனின் கையில் களித்திருக்கும் சங்கின் நினைவு வருகிறது ஆண்டாளுக்கு. கண்ணனின் வாயமுதத்தைப் பருகிக் களிக்கும் பேறு பெற்றது வெண்சங்கு அல்லவா? அதனால் அதையே கேட்கலாம் எனத் துணிகிறாள். இம்முறையில் ஆண்டாள் பத்மநாபன் கையில் பல காலமும் பிரியாமல் திகழும் பாஞ்ச சன்னியத்தை எம்பெருமானோடு சுற்றமாக்கிப் பேசுவதாக ஏழாம் திருமொழி அமைந்துள்ளது. இத்திருமொழி முழுவதும் உணர்ச்சிகளின் ஊற்றாய், கற்பனைகளின் வடிகாலாய் விளங்குகிறது.

'வெண்மையான சங்கே! யானையின் கொம்பை முறித்த கண்ணனுடைய பவளம் போன்ற இதழின் அமிழ்தையும் மணத்தையும் அறிந்திருக்கிறாய். அப்பெருமானின் திருவாய் கற்பூரம் போன்று மணக்குமோ? அல்லது தாமரை மலர் போன்று மென்மையான மணத்தைப் பரப்புமா? சொல்' (567) எனக் கேட்கிறாள்.

கண்ணன் கையில் குடியேறியிருக்கும் சங்கிற்குக் கற்பனை நயந்தோன்ற பல உவமைகள் தந்து விளக்குகிறார் ஆண்டாள்.

'வேனிற்கால முழுநிலவு பெரிய மலைக்குமேல் எழுந்தாற் போல், வடமதுரை மன்னன் வாசுதேவன் கையில் குடிபுகுந்து மேன்மை தோன்ற விளங்குகிறது வலம்புரிச்சங்கு' (569) என்றும்,

'கண்ணனது திருக்கையில் மதிமண்டலம் போல் இடைவிடாது இருக்கும் வெண்சங்கு அவன் காதில் ஏதோ மந்திரம் பேசுவது போல் இருக்கிறது' (570) என்றும்,

'சிவந்த கண்களையும், கறுத்த மேனியையும் உடைய கண்ணனது அழகிய கையின் மீதேறிய வலம்புரி அலர்ந்த செந்தாமரையில் படிந்து தேனைப் பருகும் அன்னம் போல், காணப்படுகிறது' (574) என்றும் சங்கின் தோற்றத்தினை அழகுற வர்ணிக்கிறார் ஆண்டாள் நாச்சியார்.

'நீ கடலில் பிறந்தாய்; பஞ்சசன அசுரனின் உடலில் வளர்ந்தாய், பின் எம்பெருமான் கையிலே குடி புகுந்து, கொடிய அசுரர்கள் துன்புற முழங்கினாய். நீ உகவாரை அழியச் செய்வது போல் உகப்பாரை வாழ்விக்க வேணுமன்றோ (568) என்று சங்கிற்கு ஓர் எச்சரிக்கையும் விடுக்கின்றாள் ஆண்டாள்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

'சங்கே! ஒரே கடலில் உன்னோடு கூடவே வாழ்கின்றவர் பலரை, இவர் இவர் இப்படி இப்படிப்பட்டவர் என்று நினைப்பவர்கள் இலர். நீ மட்டும் கண்ணனுடைய திருவாயின் அமுதத்தைப் பல காலமாகப் பருகுகிறாய், நீயே பேறுடையாய்' (571) என்றும்,

'வலம்புரிச் சங்கே! வெகு தொலைவு சென்று புண்ணிய தீர்த்தங்களைத் தேடிச் சென்று புனித நீராடும் தொல்லையே படாமல், இரட்டை மருத மரத்தை முறித்த கண்ணனுடைய கையின் மீதேறி, அங்கே கண்ணனுடைய வாயிலுள்ள நீர்த்துறையிலே படிந்து நீராடும் பேறு பெற்றிருக்கிறாய்' (572) என்றும் சங்கு அடைந்த பேற்றினைச் சிறப்பித்துக் கூறுகிறார் ஆண்டாள். அவ்வாறு கூறிவரும்பொழுதே மற்றொரு செய்தியும் அவருக்கு நினைவிற்கு வருகிறது.

திருவாய்ப்பாடிப் பெண்கள் சங்கின்மீது பொறாமை கொண்டமை அவள் நினைவிற்கு வருகிறது. ஏனென்றால், 'சங்கு உண்பது உலகளந்தவன் வாயிலுள்ள அமிழ்தம்; சங்கு படுப்பது கடல் நிறப் பெருமானின் திருக்கையில். அதனால் பெண் குலத்தார் அனைவரும் அதன்மீது பெருங்குறை கூறுகிறார்கள். இப்படி அவர்கள் வருந்த முறையற்ற செயலைச் செய்கிறாயே! என்கிறாள்: (574)

" உண்பது சொல்லில் உலகு அளந்தான் வாயமுதம்;
கண்படை கொள்ளில் கடல்வண்ணன் கைத்தலத்தே;
பெண்படை யார்உன்மேல் பெரும்பூசல் சாற்றுகின்றார்;
பண்பல செய்கின்றாய், பாஞ்ச சன்னியமே " (574)

'பதினாறாயிரம் தேவிமார் கண்ணனுடைய வாயமுதைப் பருக விரும்பி எதிர்பார்த்திருக்கும்போது, பற்றுடைய எல்லாரும் பொதுவாக உண்ண வேண்டிய பெருமானது வாயமுதை நீ தேன் உண்கிறாற்போல் உண்டால் மற்றவர்கள் உன்னோடு வம்பிட மாட்டார்களா?' (575) என்றும் அப்பெண்களுக்காகப் பரிந்து சங்கைப் பழித்தும் பேசுகிறாள்.

இவ்வாறு பாஞ்சசன்னியத்தைப் பத்மநாபனோடும் சுற்றம் ஆக்கி அச்சங்கை விளித்தும், போற்றியும், எச்சரித்தும், பழித்தும் பேசும் கோதை தமிழ் ஈரைந்தும் ஆய்ந்து ஏத்த வல்லவர் பரமனுடன் நெருங்கி இருப்பர் எனப் பதிகப் பயன் கூறி முடிக்கிறார் ஆண்டாள்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

மேகவிடு தூது

ஒருவர் தம் கருத்தை இன்னொருவருக்குத் தெரிவிக்க இடையே பிறிதொருவரை அனுப்புவது தூது எனப்படும். அரசர்கள் பகையரசரிடத்துத் தூது அனுப்புவதும், புலவர்கள் வள்ளல் களிடத்துத் தூது அனுப்புவதும், தலைவர்கள் தலைவியரிடத்தும், தலைவியர் தலைவரிடத்துந் தூது அனுப்புவதும் இயல்பு என்பதைப் பழந்தமிழ் இலக்கியங்கள் எடுத்துரைக்கின்றன.

வேங்கட மலையின் உச்சிமீது படர்ந்திருக்கும் மேகங்களைப் பார்க்கின்றாள். அம்மலை முழுவதும் படிந்து ஆகாயத்தை மறைத்து நிற்கும் மேகங்களின் அழகு, அவற்றின் நிறம் எல்லாம் அவளுக்குக் கண்ணனை நினைவூட்டுகின்றன. எனவே, அவ்வேங்கடவனிடம் தூது செல்லுமாறு மேகத்தை வேண்டுகின்றாள். நாச்சியார் திருமொழியின் எட்டாம் பத்து, மேகவிடு தூதாக அமைந்துள்ளது.

திருப்பதி மலையப்பன்

'மேகங்களே! விண்ணிற்கு மேலாப்பு விரித்தாற்போல் வான வீதி செல்லும் வனப்புடைய மேகங்களே! உங்களோடு வேங்கடத்து எம்பெருமானும் வந்தானோ! என் கண்களிலிருந்து கண்ணீர் பெருகி முலைக் குவட்டின் வழியே இழிகின்றது. பெண்ணின் பெருமையைப் பீடழிக்கும் நிலை அவனுக்குப் பெருமை சேர்க்காதே' (577) என்று ஆற்றாமை மீதூரப் புலம்புகின்றாள்.

அடுத்த பாடலில், மேகங்களைப் புகழ்ந்து பாடுகிறாள். 'விலையுயர்ந்த முத்துக்களையும் பொன்னையும் ஒருவரும் வேண்டாமல் இருக்கும்போதே வள்ளன்மையால் நீங்கள் பொழிகின்றீர்களே! அத்தகைய இரக்க குணமுடைய நீங்கள், எனக்காக எனது விரக வேதனையை அத் திருவேங்கடத்துப் பெருமானிடம் எடுத்தியம்பலாகாதா? காமத் தீ என் புறவுடம்பு முழுவதையும் எரித்துவிட்டு என்னுள்ளேயும் புகுந்து எரிக்க முற்பட்டு விட்டதே! தென்றற் காற்றும் அக்காமத் தீயை மிகுவித்துத் துன்புறுத்துகின்றதே; அந்தோ! இனி யான் என் செய்வேன்' (578) என்று செய்வதறியாது திகைப்பதாகக் கூறுகிறாள்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

மூன்றாவது பாடலில், எம்பெருமானைப் பிரிந்த துக்கத்தினால் தன் உடல் ஒளி மாறி, நிறமிழந்து, வளை கழன்று, மனந் தளர்ந்து, உறக்கம் ஒழிந்து, பலவாறாய்ச் சீர் குலைந்து தடுமாறி நிற்பதைக்கூறி, 'என் ஆகத்து இளங் கொங்கை நாள்தோறும் வேங்கடவனின் பொன்னாகம் புல்குதற்கு விரும்புகின்றன; இவ்விழைவையாவது அவரிடத்தே போய் அறிவியுங்கள்' என்கிறாள் (579).

தன் நிலையை 'உலங்குண்ட விளங்கனிபோல் உள் மெலிவதாக' ஓர் அழகிய உவமை வாயிலாகவும் எடுத்துரைக் கின்றாள் ஆண்டாள் நாச்சியார். உலங்கு உண்ட விளங்கனியாவது, விளாம் பழங்களுக்கு ஏற்படும் ஒருவித நோயால் பழத்தின் மேலோடு அப்படியே இருக்க, அதன் உட்பகுதி முழுதும் தின்னப்பட்டு வெறுங்கூடாகி விடுவது. இதனை 'யானைத்தீ - வேழம் உண்ட விளங்கனி' என்றும் கூறுவர். அது போல ஆண்டாள், தன் உடல் கூடு போல் புறத்தே தோன்றினாலும், அகம் முழுவதும் எரிக்கப்பட்டுவிட்டதாக கூறுகிறாள்.

" சலங்கொண்டு கிளர்ந்தெழுந்த தண்முகில்காள்! மாவலியை
நிலங்கொண்டான் வேங்கடத்தே நிரந்தேறிப் பொழிவீர்காள்,
உலங்குண்ட விளங்கனிபோல், உள்மெலியப் புகுந்துஎன்னை
நலங்கொண்ட நாரணற்குஎன் நடலைநோய் செப்புமினே " (582)

ஆண்டாள் பாடும் மற்றொரு பாடல், அவள் நிலையை நன்கு படம் பிடித்துக் காட்டுகிறது. கண்ணபிரான் தன்னை வந்து அணைவான் என்று நம்பி அலங்கரித்திருந்தாளாம். அந்த அலங்காரம் அழியும்படி ஒரு நாளாகிலும் அவன் வந்து என்னை அணைப்பானாகில் என் ஆவி உடலில் தங்கும், இல்லையேல் நீங்கும், இது திருவேங்கடத்தானின் திருவடிகளின்கீழ்த் தான் வைக்கும் விண்ணப்பம் (583) என்று வேண்டுகோள் விடுக்கின்றாள். இப்பாசுரத்திற்குப் பெரியவாச்சான் பிள்ளை கூறும் உரை விளக்கம் மிகவும் நயமுடையது. அவ்விளக்கம் வருமாறு:

''இவளுடைய பரிப்புக்கெல்லாம் ஒரு நாள் அணைந்தால் போதுமோ? உழியெல்லாம் அணைந்து கிடந்தாலும் திருப்தி பெற மாட்டாத தன்மையன்றோ இவளது; என்னில் 'என் ஆவி தங்கும்' என்ற சொல் நலத்தை நோக்க வேணும் என்கிறார். அதாவது ஒரு நாள் அணைத்தல் போகத்துக்குப் போதாதாம். பிராண ரக்ஷணத்துக்கு மட்டும் (உயிரைக் காக்க மட்டும்) போதும் என்கிறாள் என்பது கருத்து. உயிர் தரிக்க ஒரு நாளைக்கு அணைப்பது; போகம்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

சிறக்கப் பலநாள் அணைப்பது என்பது இப்பாடலின் உட் பொருள்'' [14] என்பர்.

மேலும் எம்பெருமானைப் பிரிந்து வருந்தும் நிலையை மற்றோர் உவமையால் விளக்குகிறார் ஆண்டாள் நாச்சியார். ''மழைக் காலத்தில் எருக்கஞ் செடியில் பழுத்த இலைகள் உதிர்வது போல் ஒடிந்து விழுகின்ற நிலையில் இருக்கின்றேன்'' என்கிறார்.

'' நீர் காலத்து எருக்கின் அம்பழ இலைபோல், வீழ்வேனை
வார்காலத்து ஒருநாள் தம்வாசகம் தந்தருளாரே '' (584)

இவ்வாறு தளர்ந்து வருந்தும் எனக்கு ஒரு நாளாகிலும் ஒரு சொல்லாகிலும் வழங்காரோ? என்று வினவுகிறாள். ''ஒரு கொழு கொம்பிலே சேர்த்துப் படரவிட வேண்டிய கொடியைத் தரையிலே விட்டுவைப்பது, அதைக் கொலை செய்தற்கு ஒப்பாகும். அது போலப் பருவம் வாய்ந்து பரிதவிக்கும் என்னைத் தன் மேல் படரவிடாமல் தரையில் வீச வதைப்பானாகில் இவனும் கொடியவனன்றோ! அப்படிப் பெண் என்றும் பாராமல் வாட்டி வதைக்கும் ஒருவனை உலகத்தார் போற்றுவார்களா?'' என்று மிக்கும் சினத்துடன் கேட்கிறாள் (585).

திருமாலிருஞ்சோலைப் பிரானை வழிபடல்

'சிந்துரச் செம்பொடி' எனத் தொடங்கும் ஒன்பதாம் பத்து, திருமாலிருஞ்சோலை எம்பெருமானை காதல் கொண்ட தலைவியின் கூற்றாக இப்பதிகம் அமைந்துள்ளது.

''திருமாலிருஞ்சோலை காண்போர் கண்ணுக்குக் குளிர்ச்சியும், உள்ளத்திற்கு மகிழ்ச்சியையும் தருவதாக அமைந்துள்ளதாம். மலைத்தலம் என்பதால் அங்கு இயற்கைக் காட்சிகள் களிநடம் புரிகின்றன. கார்காலத்தில் மலரக் கூடிய மலர்கள் மலர்ந்திருக்கின்றன. சிந்துரச் செம்பொடியினை எங்கும் தூவி இறைத்தது போன்று இந்திரகோபப் பூச்சிகள் எங்கும் பரவிப் பறக்கின்றன. முல்லைக் கொடிகள் பூத்துக் குலுங்கி அழகுடைய ஒளிச் சிரிப்பை நினைவூட்டுகின்றன. கார்க்கொள் பிடாக்கொடிகள் சிரிப்பது போல் மலர அக்காட்சியைக் கண்டு என்னால் பொறுக்க இயலவில்லை. சுந்தரத் தோளன் காதல் வலையினின்றும் நான் பிழைப்பேனோ? தோழி! அவன் தோள் மாலை செய்யும் இடரை யாரிடம் சொல்வேன்?'' என்று தோழியிடம் தலைவி புலம்புகின்றாள் (587, 588).

14. கே.ஏ. மணவாளன், மு.நூ., ப. 66

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

கருவிளை மலர்களையும், காயா மலர்களையும் விளித்து, 'நீங்கள் எம்பெருமான் திருமேனி நிறத்தை நினைப்பூட்டுகின்றீர்கள். எனக்குப் பிழைக்கும் வகை சொல்லுங்கள். திண்ணிய திருத்தோள் அழகர் வீட்டினுள் புகுந்து என் வளையல்களை வலிந்து கொண்டு போவது முறையோ? (589) என்று முறையிடுகிறாள் தலைவி.

'பசிய சோலையில் வாழ் குயில்கள், மயில்கள், அழகிய காக்கணம் பூக்கள், இனிய களாப்பழங்கள், காயாம்பூக்கள் ஆகிய ஐந்தும் ஐம்பெரும் பாதகர்களாய் - இறையோடு நம்மைச் சேரவொட்டாமல் தடுக்கும் பாதகர்கள்போல் - திருமாலிருஞ்சோலை அழகரது நிறத்தினை நினைவூட்டுகின்றனவாம் (590) :

'உயர்ந்த மலர்ச் சோலைகள் சூழ் திருமாலிருஞ்சோலையில் உள்ள மலர்கள்மேல் தங்கிடும் வண்டுகள் நின்ற கோலமாய் இருக்கின்ற திருமாலின் திருவுருவைப் போல் காட்சியளிக் கின்றனவாம். அவ்வாறே அங்கிருக்கும் சுனைகளும், அச்சுனைகளில் உள்ள தாமரை மலர்களும் அவனை நினைவூட்டுகின்றனவாம். எனவே அவற்றை விளித்து, 'எனக்கு ஓர் அடைக்கலம் சொலலுங்கள்' (591) என்று தம் ஆற்றாமையை வெளிப் படுத்துகிறார் ஆண்டாள்.

ஒருவரைத் தன்வயப்படுத்துவதற்குச் சாம, பேத, தான, தண்டம் என்னும் நான்கு முறைகளில் ஏதேனும் ஒன்றைக் கடைப்பிடிப்பது உலக வழக்கு. இங்கு ஆண்டாள் நாச்சியார், திருமாலிருஞ்சோலை அழகரை வயப்படுத்தத் தான முறையைக் கைப்பிடிக்க முனைகிறார். 'மணம் கமழும் பொழில்கள் நிறையப் பெற்ற திருமாலிருஞ்சோலை எம்பிரானுக்கு அடியேன் நூறு மிடாக்களில் வெண்ணெயை நிறைத்து வாழ்த்தினேன்; நூறு மிடாக்களில் சர்க்கரைப் பொங்கலும் அளித்தேன். அழகர் இன்று எழுந்தருளத் திருவுள்ளம் பற்றுவரோ? அழகர் இன்றைக்குப் படையலைப் பெற்றால், அவன், அடியேனுடைய நெஞ்சில் குடி புகுந்தால் ஒரு தடாவுக்கு நூறு ஆயிரம் மிடாக்களை வழங்குவேன். அவன் விரும்பும் அனைத்தும் செய்வேன்' என்கிறார் ஆண்டாள்.

" நாறு நறும்பொழில் மாலிருஞ் சோலை நம்பிக்குநான்
நூறு தடாவில் வெண்ணெய் வாய்நேர்ந்து பராவி வைத்தேன்
நூறு தடா நிறைந்த அக்கார அடிசில் சொன்னேன்
ஏறு திருவுடையான் இன்றுவந்து இவை கொள்ளுங் கொலோ? "
(592)

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

" இன்று வந்து இத்தனையும் அமுது செய்திடப் பெறில், நான்
ஒன்று நூறாயிரமாக்கொடுத்துப் பின்னும் ஆளும் செய்வன்;
தென்றல் மணம் கமழும் திருமாலிருஞ்சோலை தன்னுள்
நின்றபிரான் அடியேன் மனத்தே வந்து நேர்படிலே " (593)

'வாய் நேர்ந்து பராவி வைத்தேன்' என்று அருளிச் செய்திருப்பதனால் மனத்தால் நினைத்து வாயினால் சொல்லிப் படைத்தாள் என்று தெரிவதால் மானசீக பூசை என்றும், வாசிக கைங்கர்யம் என்றும் பெரியோர் கூறுவர். தனக்கு, சிரத்தையுடன் அர்ப்பணிக்கப்படும் பொருள் எள்ளளவு - தினையளவாயினும் அதை மிகப் பெரிய அளவினதாகக் கருதி ஏற்பவன் எம்பெருமான். இதை அறியாதவளா ஆண்டாள்; அவள் ஏன் இத்தனை பெரிய அளவில் படைக்க முன்வருகிறாள் என்ற கேள்வியை எழுப்பி, அதற்கு விடையையும் தெரிவித்துள்ளனர் உரையாளர்கள். 'ஆண்டாள் தம் மனத்தால் ஆய்ப்பாடிச் சிறுமியாக மாறித்தானே கண்ணனைக் காதலிகிறாள். அவ் ஆய்ப்பாடியில் ஆநிரை மிக்கிருப்பதால் வெண்ணெயும் ஏராளம் இருக்கும். மாலிருஞ் சோலையில் எம்பெருமானுக்குப் படைக்கும் நூறு தடா வெண்ணெய் ஆய்ப்பாடியின் ஒரு குடத்துக்குச் சமமே என்றுரைத்தனர்.' [15]

ஆண்டாளின் இப்பிரார்த்தனை பிற்காலத்தில் இராமானுசரால் நிறைவேற்றப்பட்டதும் வரலாறு காட்டும் உண்மை. 'எம் பெருமானார் (இராமாநுசர்) நாச்சியார் திருமொழி காலட்சேபம் நடத்தும் பொழுது இப்பாசுர அளவில் வரும்பொழுது, 'ஆண்டாளுடைய எண்ணம் சொல்லளவில் நின்றதேயொழிய, செயலில் முடிந்ததாக இல்லை; அதனை நாம் தலைக்கட்ட வேண்டும்' என்று அப்போதே புறப்பட்டுத் திருமாலிருஞ்சோலை மலைக்கு எழுந்தருளி நூறு தடா நிறைந்த வெண்ணெயும் நூறு தடா நிறைந்த அக்கார அடிசிலும் அழகருக்கு அமுது செய்வித் தருளினார். அங்கிருந்தவாறே ஸ்ரீவில்லிபுத்தூருக்கும் எழுந்தருளி, ஆண்டாளை வணங்கி நிற்க, தன் நினைவறிந்து இவர் ஆற்றிய செயலுக்கு மனமுகந்து 'நம் அண்ணரே!' என்று சொல்லி அர்ச்சாவதார சமாதியையும் கடந்து ஏழடி நடந்து உடையவரைத் தழுவிக்கொண்டாள் என்று பெரியோர் பணிப்பர். இதுபற்றியே இராமனுசருக்குக் 'கோயில் அண்ணன்' (கோயில் - திருவரங்கம்) என்ற திருப்பெயரும் ஏற்பட்டது. இதுபற்றியே வைணவ உலகம்

15. மு.நூ., ப. 89

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

இவரை, ஆண்டாள் வாழித் திருநாமத்தில், 'பெரும்பூதூர் மாமுனிக்குப் பின்னானாள் வாழியே! என்று குறிப்பிட்டு வாழ்த்துகின்றது'. [16]

'கரிக்குருவிக் கூட்டங்கள் காலையில் எழுந்திருந்து, திருமாலிருஞ்சோலைமலைத் தலைவனை, துவாரகை மன்னனை, ஆலிலையில் வளர்ந்த ஆண்டவன் மொழியினைச் சொல்லு கின்றன. எம்பெருமான் வருகை மெய்யாகுமா? (594) என்று எண்ணுகிறாள் ஆண்டாள். அவளுடைய எதிர்பார்ப்புப் பொய்த்துவிடுகிறது. 'கோங்கு மலர் பூக்கின்ற மாலிருஞ்சோலை மலையில் கொன்றைமேல் தொங்கும் பொன் மாலைகளுக்கு நிகராக நானும் வீணாகக் கிடக்கின்றேன். பவளவாய் வைத்து ஊதும் சங்கொலியும் சார்ங்க வில்லின் நாணோசையும் நெருங்குவது என்றைக்கோ?' என்னும் ஏக்கம் அவளை மீண்டும் சூழ்ந்து கொள்கிறது. இப்பதிகத்தின் கருத்து ஆழ்ந்து சிந்தித்தற்குரியது.

" கோங்கு அலரும் பொழில் மாலிருஞ் சோலையிற் கொன்றைகள்மேல்
தூங்குபொன் மாலைகளேடும் உடனாய் நின்று தூங்குகின்றேன்
பூங்கொள் திருமுகத்து மடுத்து ஊதிய சங்கு ஒலியும்
சார்ங்கவில் நாண்ஒலியும் தலைப்பெய்வது எஞ்ஞான்று கொலோ? "
(595)

இப்பாடலில் திருமாலுக்கு உகந்ததல்லாத கொன்றை மலர் போல, நான் தொங்கிக் கொண்டிருக்கின்றேன் என்கிறாள் ஆண்டாள். கொன்றை மலர்களால் சிவபெருமானையோ, இதர தெய்வங்களையோ பூசிப்பது மரபு. 'இச்சோலைமலையோ, திருமாலாகிய அழகருக்கேயுரிய மலை. இங்கு மலரும் கொன்றை மலருக்கு ஒருவிதப் பயனும் இல்லை. அவை அங்கேயே தரையில் விழுந்து வீணாவது போலவே, இம்மலையப்பனை நம்பி வாழும் என்னுடைய பிறப்பும் வாழ்வும் வீணாகுமோ' என்று ஐயுற்றுப் பாடியிருக்கிறாள்... இப்பாடலில் சங்கொலியையும் நாணொலி யையும் கேட்பது எந்நாளோ என்று ஆண்டாள் கூறியிருப்பதற்குக் காரணம், ''சங்கொலியாலே, ருக்மணிப் பிராட்டியும், வில்லொலி யாலே சீதாப்பிராட்டியும் வாழ்ச்சி பெற்றாற் போல யான் வாழ்ச்சி பெறுவேன் என நினைத்து, ஏக்கத்தில் கூறியதாகவும் பொருள் கொள்ளலாம்''[17] என்பர்.

16. ந. சுப்பு ரெட்டியார். மு.நூ., பக். 43-44
17. கே.ஏ. மணவாளன். மு.நூ., பக். 70-71

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

இங்ஙனம் தலைவன் வரவை எதிர்பார்த்துக் காத்திருக்கும் தலைவியின் மன உணர்வுகளை - பிரிவாற்றாமையை - முல்லை நிலக் கருப்பொருள் பின்னணியில் இத்திருமொழியில் கூறப் பட்டுள்ளமையை அறியலாம். 'பாட்டு என்பது அனுபவத்தையே சொற்களாக மாற்றித் தரும் மொழி பெயர்ப்பாகும், என்று ஆபர்குரோம்பி என்னும் திறனாய்வாளர் குறிப்பிடுவது போல,[18] கண்ணனைச் சேரத் துடிக்கும் ஆண்டாளின் அனுபவங்களே இங்குக் கவிதையாகியுள்ளமையை உணரலாம்.

காதல் நோய் செய்த பரிசு

'கார்க்கோடல் பூக்காள்' எனத் தொடங்கும் பத்தாம் திருமொழியும், காதலனைப் பிரிந்த காதலியின் கூற்றுக்களாகவே அமைந்துள்ளன. முல்லை நிலம் ஆதலின் கார்காலத்தில் பலவகை மலர்கள் மலர்வதுண்டு. கார்க்கோடல் மலர்கள், மேல் தோன்றிப் பூக்கள், கோவைக்கனி, முல்லை மலர், பாடும் குயில்கள், கானமாமயில்கள், மழை, கடல் ஆகிய இயற்கைப் பொருள்களைக் கண்டு, அவை திருமாலோடு ஒப்புமை உடையனவாய் - திருமாலை நினைவூட்டுவனவாய் - அமைந்திருக்கும் தன்மையினை எடுத்துக் கூறிப் புலம்புகின்றார் ஆண்டாள்.

கார்க்கோடல் மலர்கள் அவன் வண்ணத்தையும், தோன்றி மலர்கள் சங்கின் ஒளியையும், கோவைக்கனி அவன் வாய் அழகையும், முல்லை மலர்கள் அவன் முறுவலையும், மயில்கள் அவன் நடனத்தையும் நினைவூட்டி, அல்லல் தருவதாகப் பாடுகின்றார் ஆண்டாள். 'கறுத்த கார்க்கோடல் மலர்களே! உம்மைப் போர்க் கோலஞ் செய்து என்மேல் பாயும்படி அனுப்பிய கடல்நிறக் கண்ணன் எங்கேயிருக்கிறான்? நீங்கள் என்னை நலிவதால்; துன்புற்ற நான் யாரிடத்தில் போய் முறையிடுவது? திருத்துழாய் மாலையை விரும்பி, அவன் பின்னால் ஓடுகின்ற நெஞ்சையுடைய நான் அதனை எங்ஙனம் பெறுவேன்' என்று புலம்புகின்றாள் :

" கார்க்கோடல் பூக்காள் கார்க்கடல் வண்ணன் என்மேல் உம்மைப்
போர்க்கோலம் செய்து போர விடுத்தவன் எங்கு உற்றான்?
ஆர்க்கோ இனிநாம் பூசல் இடுவது? அணிதுழாய்த்
தார்க்கு ஓடும் நெஞ்சந் தன்னைப் படைக்கவல்லேன், அந்தோ! "
(597)

என்னும் பாடலில் வரும், உம்மைப் போர்க்கோலம் செய்து போர விடுத்தவன்' என்பதற்கு, 'இந்திரசித்தைக் கொல்வதற்கு இராமபிரான்

18. "Poetry is the translation of experience into language' - Aber Crombie, The idea of Great Poetry, p. 20. மேற்கோள் : மு. வரதராசன், இலக்கியத்திறன், ப. 102.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

இளைய பெருமாளை (இலக்குவனை) ஆயத்தஞ் செய்து அனுப்பியது போலத் தன்னை மூடிப்பதற்காக இம்மலர்களை நிறமுட்டியனுப்பினான் போலும்' [19] என்பர்.

அடுத்து முல்லை மலர்கள் பூத்துக் குலுங்கும் காட்சியைக் காண்கிறார் ஆண்டாள். கண்ணனின் இளமுறுவல் நினைவுக்கு வருகின்றது. 'முல்லைக் கொடியே! கோடல் பூக்களுக்கும் மேல் தோன்றிப் பூக்களுக்கும் கோவைக் கொடிக்கும் ஒருவாறு தப்பிப் பிழைத்தோம் என்று மகிழ்ந்தேன். நீ உன் மலர்ச்சியைக் காட்டி என் மகிழ்ச்சியைக் கெடுத்தாயே, இது நியாயமா? உன் காலில் விழுந்து உன்னை வேண்டிக் கொள்கிறேன். என்னை வருத்தாதே' என்கிறார்.

" முல்லைப் பிராட்டி! நீ உன் முறுவல்கள் கொண்டு எம்மை
அல்லல் விளைவியேல், ஆழி நங்காய்! உன் அடைக்கலம்
கொல்லை அரக்கியை மூக்கு அரிந்திட்ட குமரனார்
சொல்லும் பொய்யானால், நானும் பிறந்தமை பொய் அன்றே "
(600)

'முல்லைப் பிராட்டியே! உனக்கு நாங்கள் அடைக்கலம், சூர்ப்பணகையை மூக்கரிந்தவர் சொல்லும் பொய்த்து விடுமேயானால் நான் பிறந்தது கூடப் பொய்யேயாகி விடும்' என்று புலம்புகிறார் ஆண்டாள்.

இப்படி எந்தப் பக்கம் நோக்கிலும் ஏதேனும் ஒரு மலர் அல்லது ஒரு பொருள் கண்முன் தோன்றிக் காதலனை நினைவுபடுத்துகிறதே என்று ஆண்டாள் தம் கண்களை மூடிக் கொண்டாராம். அப்போதும் கூட அருகில் உள்ள சோலையில் குயில்கள் பாடும் ஓசை அவருடைய வேதனையை மிகுவித்தனவாம்; அதனால் வெகுண்ட கோதை.

''பாடுகின்ற குயில்களே! திருவேங்கட மலையையுடைய பெருமான் என்பொருட்டு ஒரு வாழ்வு கொடுத்தால் அப்போது இங்கே வந்து பாடுங்கள். கருடக் கொடியுடை எம்பெருமான் அன்பாதரவுடன் என்னைச் சேர்வானாகில், உம்மை அழைத்துப் பாட்டுகளைக் கேட்போம்'' (601) என்று குயில்களை நோக்கிச் சினந்து கூறுகிறாள்.

அடுத்து மயில்களை விளித்து, 'மயில்களே! குடக்கூத்தாடிய கோபாலன் என் உடைமையை எல்லாம் பறித்தான்; இனி என்முன்

19. கே.ஏ. மணவாளன், மு.நூ., ப. 72

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

கூத்தாடி என்னை வருத்தும் செயல் உங்களுக்குத் தகுமோ?' (603) என்று வினவுகிறாள். மழையை விளித்து, 'மழையே! மேலே மண்ணைப் பூசி உள்ளே மெழுகை உருக்கி ஊற்றினாற் போல என்னை அணைத்து, உள் உயிரை உருக்கி அழிப்பவராய், திருவேங்கட மலையிலே நிற்கும் அழகிய பெருமானை என் நெஞ்சிலே வைத்து இன்புற நான் அணைக்கும்படி, என்னை அவரோடே நெருக்கி வைத்துப் பொழிய வல்லாயோ?' (604) என்று கேட்கிறார். கடலை விளித்துத் தம் துன்பத்தையெல்லாம் நாகணையானிடம் சென்று கூறுமாறு பணிக்கிறார்:

இவ்வாறு தம் விரகவேதனையை வெளிப்படுத்திப் புலம்பும் தலைவியைத் தோழிமார் தேற்ற, தோழிகளையே தேற்ற முனைந்து விடுகிறார் ஆண்டாள். 'அம்மான், ஆழிப்பிரான்' என்று சொல்லக் கூடிய என் காதலன் எனக்காக என் வேண்டுகோளுக்காக என் முன்னே வராவிட்டாலும் என் தந்தையார் அழைத்தால் வந்தே தீருவார்; வராமல் இரார். அவர் நாகணைமீது அமர்ந்த பரமராயிருந்தாலும் பெரியாழ்வாரிடத்தில் அடங்கி நடப்பவர். தந்தை அழைத்தால் ஓடோடி வருவார், அப்போது எளிதாகவே அவரை நாம் பற்றிவிடுவோம்' என்று தோழியருக்கு ஆறுதல் கூறுதல்போல் தம்மையும் தேற்றிக்கொள்வதாகத் திருமொழியின் இறுதிப் பாசுரம் அமைகின்றது.

" நல்ல என்தோழி! நாகணைமிசை நம்பரர்
செல்வர் பெரியர்; சிறு மானிடவர் நாம் செய்வதென்?
வில்லிபுதுவை விட்டுசித்தர் தங்கள் தேவரை
வல்ல பரிசு வருவிப்பரேல் அது காண்டுமே " (606)

திருவரங்கத்துச் செல்வனைக் காமுறல்

ஆண்டாள் திருவேங்கடத்தில் உறையும் திருவேங்கட நாதனையும், திருமாலிருஞ்சோலை மலையில் எழுந்தருளியுள்ள திருமால் அழகரையும் பாடினார். அவர்கள் இருவரும் அருள் புரியவில்லை. எனவே, அவர் தம் நெஞ்சத்தினைப் பெரிதும் பிணித்துக் கவர்ந்த திருவரங்கத்து உறையும் அம்மானைக் காணும் கருத்துடையவராய் ஆகிறார். 'திருவரங்கத்துச் செல்வனைக் காமுறல்' என்னும் பதினோராம் திருமொழியில், அப்பெருமானை நினைந்து நினைந்து, மகிழ்ந்து மகிழ்ந்து, நெகிழ்ந்து நெகிழ்ந்து, உணர்வுகள் பொங்கிப் பெருகப் பாடல்களைப் பாடியுள்ளார்.

'ஏந்திழையீர், நான் உகந்து அணிந்துள்ள என்கை வளைகள், தாம் உகந்து தம் கையில் ஏந்தியிருக்கிற சங்கோடு ஒவ்வாதோ? கொடிய முகங்களையுடைய பாம்பணைமேல் உறங்கும்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

திருவரங்கர் என் முகத்தை இரக்கத்தோடு நோக்குகின்றாரில்லையே, அந்தோ, அந்தோ' (607) என்று அரற்றுகின்றார் ஆண்டாள்.

திருவரங்கநாதன் தனக்கு அருளாவிடினும், அரங்கன் அழகில் அள்ளுறித் தித்திக்கப் பேசுகிறாள் ஆண்டாள். 'என்னரங்கத்து இன்னமுதர், குழலகர், வாயழகர், கண்ணழகர், திருநாபிக் கமலத்தழகர். ஆனாலும் 'கழல்வளை' என்று இடுகுறியாற் பெயர் பெற்ற கைவளையை அவர் 'கழன்றொழிகிற வளை' என்று காரணப் பெயர் பெற்ற வளையாக ஆக்கிவிட்டாரே' என்று வருந்துகின்றாள்:

" எழிலுடைய அம்மனைமீர் என்னரங்கத்து இன்னமுதர்
குழலழகர் வாயழகர் கண்ணழகர் கொப்பூழில்
எழுகமலப் பூவழகர் எம்மானார் என்னுடைய
கழல்வளையைத் தாமும் கழல்வளையே யாக்கினரே " (608)

ஆண்டாளின் ஆற்றாமையை வெளிப்படுத்தும் இப்பாடல் தமிழ் மொழிக்கே சிறப்பாக விளங்கும் 'ழ'கரம் மிகுதியாக இடம்பெற்று சொல்லழகுக்கு ஓர் எடுத்துக்காட்டாய் இலங்குவதாகும். ஈற்றடியில், 'கழல்வளையைக் கழல் வளையே யாக்கினரே' என்ற தொடரும் நயம் பயப்பதாகும்.

'செங்கோல் உடைய திருவரங்கர், என் கைவளை கொண்டு தம் குறைகளெல்லாம் தீர்ந்து நிறைவு பெறுவாரோ?' என்று ஏங்குகிறார்.

'வாமன வடிவில், அழகிய கையால் பிச்சை ஏற்று அன்று உலகளந்த இந்த உத்தம புருஷர், நீர்த் தாரை ஏந்திப் பெற்ற பிச்சையிலே குறையுண்டாகில், அக்குறை தீர்க்க என் கையால் தீர்த்துக் கொள்ள வேண்டுமென்று விரும்பினால், மகாபலியின் யாக பூமிக்கு நடந்தே சென்றதைப் போல இத்தெரு வழியாக என் விட்டு வாசலில் நடந்து காட்டி, என்னையும் மகிழ்விக்கலாகாதோ' என்று வினவுகிறாள் (609, 610).

'காவிரியின் திருவரங்கர் எல்லாப் பொருள்களிலும் ஊடிருந்து, ஒருவர்க்கும் கைப்படாமல் நான்மறையின் சொற்பொருளாய் நின்றவர்'. என் மெய்ப்பொருளைக் கொள்ளை கொண்டாரே' (612) என்றும், 'திண்ணார் மதில்சூழ் திருவரங்கச் செல்வனார், சீதைமேல் ஆசை மேலிட்டு உண்ணாமலும் உறங்காமலும் வருந்தி, அலை கடலிடை அணை கட்டி இப்படித் தாம் அடைந்த தாழ்ச்சியை எல்லாம் மறந்துபோய், தாம் செய்த பெருமைகளையே எண்ணுகின்றார் (613) என்றும், 'முன்னொரு நாள் பாசிபடர்ந்து கிடந்த நிலமகட்காக அழுக்கேறின உடலில், நீர் ஒழுக நிற்கும் மானம் இலாப் பன்றி வடிவெடுத்தவர் என்றும்,

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

அரக்கர் முன்பு பேசிய பேச்சுக்கள் நெஞ்சினின்று நீக்கப் பார்த்தாலும் நீங்காவே' (614) என்றும், 'திருமண முயற்சிகளைச் செய்து, மணப்பெண் ருக்மணியைக் கைப்பிடிக்க உறுதியாய் நினைந்திருந்த சிசுபாலன் அவமானமுற, அம்மணப் பந்தலில் ருக்மணியைக் கைப்பிடித்தவன் விரும்பி இருக்கும் ஊர் திருவரங்கமாம்' (615) என்றெல்லாம் விரக வேதனையில் திருமாலின் - திருவரங்கனின் - அவதாரச் சிறப்புகளைக்கூடப் பழித்துப் பேசுகிறார். அவ்வாறு கூறுமிடத்தும், அவளையும் அறியாமல் அவள் திருவரங்கன் மீது கொண்டிருக்கும் அன்பே - காதலே - வெளிப்படுகிறது.

" நல்லார்கள் வாழும் நளிர்அரங்க நாகணையான் " (611)

" எப்பொருட்கும் நின்று ஆர்க்கும் எய்தாது நான்மறையின்
சொற்பொருளாய் நின்றார் " (612)

" தேசு உடைய தேவர் திருவரங்கச் செல்வனார் " (614)

" செங்கோல் உடைய திருவரங்கச் செல்வனார் " (609)

என்று அமையும் பாடல் அடிகள் இதனை உணர்த்தி நிற்கின்றன.

இவ்வளவு கூறியும் கண்ணனது அருட்பார்வை கிட்டவில்லை. தலைவனைப் பிரிந்து தவிக்கும் தலைவியின் கூற்றாகப் பாடி வந்த பாடல்களில் இறுதிப்பாட்டில் பதிகப்பயன் கூறும் வழக்கத்தை ஆண்டாளிடம் காணலாம். அதனையும் மீறி, ஆண்டாளின் தன்னுணர்ச்சி மீதூர, பதிகத்தின் இறுதிப் பாடலில், 'பெருமை மிகுந்த அரங்கநாதர் தம் வாயால் அருளிச் செய்த மொழியை என் தகப்பனார் விட்டுசித்தர் கேட்டிருப்பர்; 'தம்மை உகப்பாரைத் தாம் உகப்பர்' என்றும் 'பழமொழி தம்மிடத்திலேயே பொய்யானால், அதற்கு மேல் இனிச் சாதிப்பார் யார்?' என்று விரகவேதனையின் உச்சத்தில் நின்று புலம்பும் நிலையைக் காண்கிறோம்.

கண்ணன் இருக்கும் இடத்துக் கொண்டு செல்க எனல்

'மற்று இருந்தீர்கட்கு' எனத் தொடங்கும் அடுத்த பதிகமும், ஆண்டாளின் அளவு கடந்த காதலால் கண்ணனைப் பெற இயலாமல் தவிக்கும் தவிப்பினை உணர்த்துவதாய், 'இனி என்னைக் கண்ணபிரான் இருக்கும் இடத்துக்கே கொண்டுபோய் என்னைச் சேர்த்துவிடுங்கள்' என்று வெளிப்படையாகக் கூறுவதாய் அமைகின்றது. இத்திருமொழியின் ஒவ்வொரு பாடலிலும் அக்கண்ணன் உறையும் இடம் ஒன்று கூறப்படுவது இப்பதிகத்தின் சிறப்பு ஆகும்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

காதலனான கண்ணனை இப்போதே அடைய வேண்டும் என்று வருந்திக்கிடக்கும் தலைவியை நோக்கித் தோழியரும் அன்னையரும் ஆறுதல் கூறுகின்றனர். 'நீ பொறுத்திடு' என வேண்டுகின்றனர். 'என் நிலை உங்களால் அறிய முடியுமோ? மாதவன்பால் மிக்க ஆசை கொண்டிருக்கிற எனக்கு, நீங்கள் சொல்வதெல்லாம் ஊமையும் செவிடனும் கூடிப் பேசிக் கொள்வது போல வீணானது. பெற்ற தாய் தேவகியை விட்டு, வேறொரு தாயாகிய யசோதையின் விட்டில் வளர்ந்தவனும், மற்களத்திலே மல்லர் வந்து சேர்வதற்கு முன் களம் அடைந்தவனும் ஆகிய கண்ணனுடைய மதுரை நகரில் என்னைச் சேர்த்துவிடுங்கள்' (617). என்கிறாள் ஆண்டாள்.

'இனி வெட்கப்பட்டு ஒரு பயனும் இல்லை, ஊரில் எல்லோரும் என் நிலையை அறிந்துகொண்டார்கள். கால தாமதம் இன்றி வேண்டியவற்றைச் செய்து, பிரிவினால் ஏற்படும் துன்பத்திற்குக் கூடுகிற மருந்து பெற்றால், இந்நோயானது தலைமடங்கும்; ஆகையால், என்னைக் காக்க விரும்பினால், ஆய்ப்பாடிக்கே என்னைக் கொண்டுபோய்ச் சேர்த்துவிடுங்கள்' (618) என்கிறார் ஆண்டாள் நாச்சியார்.

'தந்தை, தாய், சுற்றத்தார் என்று எல்லோரும் இருக்கும் போது, அவர்களையெல்லாம் புறக்கணித்துவிட்டு ஒரு பெண்பிள்ளை, தானே புறப்பட்டுப் போனாள் என்றால் ஊரார் பழிப்பார்கள்; அப்படிப் பழி விளைவதற்கு முன்பே, கண்ணன் உறையும் நந்தகோபர் வீட்டில் என்னைக் கொண்டுபோய் நள்ளிரவில் விட்டு விடுங்கள்' என்கிறார்.

தம் அழகும் அங்கங்களும் அந்த கோவிந்தனுக்கே உரியவை என்று அறுதியிட்டுக் கூறுகிறார் (620).

'தாய்மார்களே! என் நோய் எப்படிப்பட்ட அறிவர்களுக்கும் அறிய முடியாதது. காளிங்க மடுவின் கரையிலிருந்து கடம்ப மரத்தின் மேல் ஏறிக் காளிய நாகப் படத்தின் மேலே ஒரு கூத்தாடப் பெற்ற மடுவின் கரையிலே என்னைக் கொண்டு போய்ப் போடுங்கள். நீலக்கடல் நிறத்தனான கண்ணன் தன் திருக்கைகளினால் தடவினால் இந்த நோய் தீர்ந்துவிடும்' என்கிறார் (621).

அடுத்த பாடலில், கண்ணன் உவந்து உறையும் தலமான 'பக்தவிலோசனம்' என்னும் தலம் கூறப்படுகின்றது. பக்தம் - அன்னம், சோறு; விலோசனம் - பார்வை; சோறு பார்த்திருக்கும் இடம். 'யமுனைக் கரையில் இருடிகள் 'ஆங்கிரஸ' என்னும் வேள்வியை நடத்திய இடம் இது' என்று கூறப்படுகிறது.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

கண்ணன் மகிழ்ந்து உறையும் பல இடங்களில் ஒன்றாகப் 'பக்த விலோசனம்' என்னும் தலம், இப்பதிகத்தில் இடம் பெற்றுள்ளது.

" வேர்த்துப் பசித்து வயிறு அசைந்து
வேண்டு அடிசில் உண்ணும்போது ஈதுஎன்று
பார்த்திருந்து நெடுநோக்குக் கொள்ளும்
பக்தவிலோசனத்து உய்த்திடுமின் " (622)

என்கிறார் ஆண்டாள்.

அடுத்த பாடலில், என் நோய் தீரவேண்டு மெனில் கண்ணனின் திருத்துழாய் மாலையைக் கொண்டுவந்து சூட்டுங்கள்; இல்லையேல் 'பலராமன் பிரலம்பாசுரனைக் கொன்று வென்ற இடம் பாண்டீரம் என்னும் ஆலமரத்தடி - அங்கு என்னைக் கொண்டு போய்ச் சேர்த்துவிடுங்கள்' என்று தலைவியாகிய ஆண்டாள் தோழியரை வேண்டுகிறார்.

பலராமன் பிரலம்பாசுரனைக் கொன்ற வரலாறு

வரையென - அசுரன் வளர்ந்தான்; பலராமன், தன் பிடியில் கிட்டினான் என்று கிளர்ந்தான். சில விநாடிகள் சென்றவுடன், பெரு வெளியில் பலராமனைச் சுமந்தபடி பறக்க ஏலாது - தன் பருத்த உடல் தளர்ந்தான்! ஆம்! அசுரனை அழிக்க அவன் தோள்கள் மேல் அமர்ந்திருந்த முகுந்தனின் முத்தோன் முடிவு கட்டினான்; உருத்திர மூர்த்தி போல் உக்கிரம் மேவி - அசுரனின் உச்சந்தலையில் - அவனது உயிர் கலங்குமாறு குட்டினான்; வாசவனின் வச்சிராயுதம் போலவும், அவ் இந்திரன் ஏவிய இடியேறு போலவும் அந்தக் குட்டு அசுரன் தலையில் இறங்கியது; ஒரேழு நாடியும் ஒரு சேர ஒடுங்க - ஓர் அவசநிலை எய்தி அவன் அறிவு கிறங்கியது! பத்து எண்ணுவதற்குள், பிரலம்பன் மண்டை பிளந்து மண்மிசை வீழ்ந்தான்; அவன் ஆக்கை ரத்தத்தில் அவனே தன் அடிமுடி தோய ஆழ்ந்தான்!... 'அண்ணா! உன் ஆற்றலை என் சொல்வேன்?' என்று பலராமன் உச்சியைப் பரந்தாமன் முகர்ந்தான்; எஜமானனால் மெச்சப் பெறும் ஏவலன் போல் அனந்தனின் அம்சமான பலராமன் நாணி ஒரு பக்கமாய் நகர்ந்தான்!'[20] இதனை ஆண்டாள்,

" வண்ணம் திரிவும் மனக் குழைவும்
மானம் இல்லாமையும் வாய் வெளுப்பும்
உண்ணல் உறாமையும், உள்மெலிவும்
ஒதநீர் வண்ணன் என்பான் ஒருவன்

20. வாலி, கிருஷ்ண விஜயம் - பிரலம்பாசுரன் வதம், ஆனந்த விகடன், 16.05.04, பக். 115-117

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

தண்ணந் துழாய்என்னும் மாலை கொண்டு
சூட்டத் தணியும்; பிலம்பன் தன்னைப்
பண்அழியப் பலதேவன் வென்ற
பாண்டிவடத்து என்னை உய்த்திடுமின்" (623)

சங்க இலக்கியத்தில் 'இயற்பழித்து மொழிதல்' என்னும் துறை இடம் பெற்றுள்ளது; தலைவனைப் பிரிந்து வாடும் தலைவியின் ஆற்றாமைத் துன்பத்தைப் போக்குவதற்காக, வேண்டுமென்றே தலைவனின் இயல்புகளைப் பழித்துப் பேசுவாள் தோழி. அதைப் பொறுக்க முடியாமல், உடனே தன் தலைவனின் இயல்பை மிகுவித்துக் கூறத் தொடங்கிவிடுவாள் தலைவி. இது 'இயற்பட மொழிதல்' ஆகும். இதைப் போன்று ஒரு பாடல் இப்பதிகத்தில் இடம் பெற்றுள்ளது.

'கண்ணன் கன்றுகளின் திரளை மேய்ப்பதையே தொழிலாகப் பெற்றவன்; காட்டிலேயே தங்கி வாழும் ஆயர் இனத்தில் பிறந்தான்; வெண்ணெய் திருடிப் பிடிபட்டு உரலிலே கட்டப்பட்டான்' என்று கூறி இகழ்ந்து பேசுகிறார்கள் தோழியர். அவர்களை நோக்கித் தலைவி, 'இனியாகிலும் நீங்கள் கற்ற கல்விகளைப் பேசி என்னிடத்தில் வசவு கேட்டுக்கொள்ளாமல், பசுக்கள் பிழைக்கும்படி பெருமழையைத் தடுத்துக் குடையாகக் கண்ணனால் தூக்கிய கோவர்த்தன மலையின் அருகே என்னைச் சேர்த்துவிடுங்கள்' என்கிறாளாம் தலைவி. மேலும் 'நான் வளர்த்த கிளி கூட்டில் இருந்தபொழுதெல்லாம் 'கோவிந்தா! கோவிந்தா! (624) என்று கூவி அழைக்கும். உணவு கொடாமல் துன்புறுத்தினேனாகில், உலகளந்த பெருமானே!' என்று உரக்கக் கூவும். இவ்வுலகில் இவள் என்ன ஆனாளோ என்னும் பெரும்பழியைப் பெற்று இவள் ஏன் தனி வழி போனாள் என்பதால் உங்கள் பெயரைக் கெடுத்துக்கொண்டு ஒருவரும் தலை கவிழ்ந்து நிற்க வேண்டாம்; உயர்ந்த மாடங்கள் சூழ்ந்து விளங்கும் துவாரகையில் என்னைச் சேர்த்துவிடுங்கள்' (625) என்கிறார்.

'மதுரை முதல் துவாரகை வரை சொல்லப்பட்ட சில திவ்ய தேசங்களில் தம்மைக் கொண்டு சேர்க்குமாறு கூறும் அழகிய சொல்மாலைத் திருமொழியை ஓதவல்லார்க்கு வாழும் இடம் வைகுந்தமாம்' (626) என்று பதிகப் பயன் கூறி நிறைவு செய்கிறார் ஆண்டாள். இப்பதிகப் பாடல்களில் தலைவியின் உணர்வுகள் பொங்கிப் பெருகும் அவலநிலை உணர்த்தப்படுவதை அறியலாம்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

கண்ணன் உகந்த பொருள் கொண்டு
காதல்நோய் தணிமின் எனல்

'கண்ணன் என்னும் கருந்தெய்வம்' எனத் தொடங்கும் பதின்மூன்றாம் திருமொழி, ஆண்டாள் நாச்சியார் உற்ற காதல் நோயின் உச்சத்தைக் காட்டுவதாய் அமைகின்றது.

குலசேகராழ்வார், திருவேங்கட மலையில் கோனேரி வாழும் குருகாய்ப் பிறக்க வேண்டும் என நினைத்தார்; இல்லையேல் திருவேங்கடச் சுனையில் மீனாய்ப் பிறக்க எண்ணினார். வேங்கடக் கோன் தாம்பூலம் உமிழும் பொன் வட்டிலாய்ப் பிறக்க மனம் பற்றினார்; பண்பகரும் வண்டினங்கள் பண்பாடும் வேங்கடத்தில் செண்பக மரமாய் நிற்க வேண்டும்; எம்பெருமான் ஈசன் எழில் வேங்கட மலைமேல் தம்பகமாய் நிற்கும் தவத்தை அவாவினார்; வண்டினங்கள் பண்பாடும் வேங்கடத்துள் பொற்குவடாகத் திகழத் திருவுளங் கொண்டார்; தேனார் பூஞ்சோலைத் திருவேங்கட மலைமேல் கானாறு ஆகப் பாயும் கருத்துக் கொண்டார்; வெறியார் தண்சோலைத் திருவேங்கட மலை மேல் நெறியாய்க் கிடக்கும் நிலையினை நீள நினைந்தார்; 'படியாய்க் கிடந்து உன் பவளவாய் காண்பேனே' என்று துள்ளிவரும் உவகைப் பெருக்கோடு உரைத்தார். இறுதியாகச் 'செம்பவள வாயான் திருவேங்கடம் என்னும் எம்பெருமான் பொன்மலைமேல் ஏதேனும் ஆவேனே' என்று குறிப்பிட்டார். (பெருமாள் திருமொழி, நாலா 677-686).

இம்முறையிலேயே ஆண்டாள் நாச்சியாரும், அச்சுதன் அணியும் பொருள்கள் ஏதேனும் கொண்டு தம் அவலத்தைப் போக்க வேண்டும் என்று தம்மைச் சுற்றியுள்ளோரைப் பார்த்துப் பேசுகின்றாள்.

கண்ணன் என்னும் கருந் தெய்வத்தின் காட்சியிலே பழகிக் கிடக்கிறாராம் ஆண்டாள் நாச்சியார். 'புண்ணில் புளியைச் சொரிந்தாற் போல, என்னைப் பற்றிப் புறம் பேசுகிறீர்கள். பெண் பிறந்தாருடைய வருத்தத்தை அறியாத கண்ணனுடைய திருவரையில் சாத்திய பொன்னாடையைக் கொண்டு வந்து என் காதல் நோய் தீரும்படியாக என்மேலே வீசுங்கள், அதுபோதும்' என்கிறாளாம் தலைவி.

" கண்ணன் என்னும் கருந்தெய்வம் காட்சி பழகிக் கிடப்பேனைப்
புண்ணிற் புளிப்பெய்தாற்போலப் புறம்நின்று அழகு பேசாதே
பெண்ணின் வருத்தம் அறியாத பெருமான் அரையிற் பீதக
வண்ண ஆடைகொண்டு என்னை வாட்டம் தணிய வீசீரே " (627)

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

இப்பாடலில், 'அரையிற் பீதக ஆடையைக்' கொண்டு தம்முடைய வாட்டம் தணிவிக்குமாறு வேண்டுகிறார். மேலே கிடக்கும் உத்தரீயம் கூடாதோ? கூடாது. 'ஆண்டாள் கண்ண பிரானுடைய ஸ்வேத பரிமளத்திலே மிகவும் ஆசை கொண்டவள் காணும்; மேலிட்ட உத்தரீயத்தில் இது விசேஷமாகக் கிடைக்காது; திருவரையிற் பீதாம்பரத்தில்தான் அம்மீது ஆசைதீரக் கிடைக்கும் என்று 'அரையிற் பீதக ஆடை கொண்டு' என்கின்றாள்' என்று பட்டர் அருளிச் செய்கிறார் என்பர்.[21]

'பால் பாயும் ஆலிலையிலே கண் வளரும் பெருமானது வலையில் அகப்பட்டுள்ள என்னை, வேற்படையால் துளைத்தாற் போல் கடுமையாக உங்களுக்குத் தோன்றினபடி யெல்லாம் பேசாமல், கோலால் ஆநிரைகளை மேய்த்து, திருக்குடந்தையிலே அறிதுயில் கொள்பவனாய், குடக்கூத்தாடின கண்ணனுடைய குளிர்ந்த திருத்துழாய் மாலையைக் கொணர்ந்து என் குழலில் சூட்டுங்கள்' (628) என்று அன்னையரிடம் வேண்டுகிறார். 'அவன் மார்பில் அணிந்த வனமாலையை வஞ்சியாது தருவானாகில், அம்மாலையைக் கொணர்ந்து, என்னுடைய மார்பிலே வெப்பம் தீருமாறு புரட்டுங்கள்' என்கிறார் (629); 'கண்ணன் காதலால் துன்புறுத்த, அதனால் நலிவடைந்து நொந்து கிடக்கின்ற எனக்குத் தேறுதல் சொல்வார் யார் உண்டு? தெவிட்டாத அமிழ்தனின் திருவாயில் ஊறிக் கிடக்கிற எச்சிலைக் கொண்டு வந்து நான் பருகும்படி செய்து என் இளைப்பினைப் போக்குங்கள்' என்று (630) தம் தாயாரிடம் ஏங்கி உரைக்கிறார் ஆண்டாள்.

'அழுதாலும் தொழுதாலும் தன் அழகிய வடிவைக் காட்ட மாட்டான்; அஞ்சேல் என ஒரு சொல்லும் சொல்லாதவன்; இப்படிப் பல வகைகளிலும் புறக்கணிக்கின்ற அவனை மறந்தாவது இருக்கலாமென்றால் அதுவும் முடியவில்லை; என் மனத்திலே தோன்றி நெருங்கியணைத்து முன்னும் பின்னும் சூழ்ந்து கொண்டு என்னை மாய்க்கிறான்; அந்தோ! யான் என் செய்வேன். யான் உயிர் வாழ வேண்டுமானால், பசுக்களின் பின்னே, கண்ணன் ஊதிக் கொண்டு வரும் புல்லாங்குழலின் துவாரங்களில் உண்டாகிற நீரைக் கொணர்ந்து என் முகத்தில் தடவிக் குளிர்ச்சியை ஊட்டுங்கள்' (631) என்கிறார் ஆண்டாள். 'அவன் கிடைக்காவிட்டாலும் அவன் வாயினின்று ஊறும் நீராவது கிடைக்காதா' என்று கூறும் வரிகளில் ஆண்டாளின் விரக வேதனையை உணர முடிகின்றது.

21. ந. சுப்பு ரெட்டியார், மு.நூ., ப. 46

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

'மரியாதைகளெல்லாம் மட்டுப்பட்டுக் கிடக்கிற இவ் வுலகத்தில் நந்தகோபன் மகன் என்ற பெயருடன் இரக்கமற்றவனாய், கொடியவனாய் விளங்கும் கண்ணனாலே அபலையான நான் மிகவும் துன்பப்பட்டு, இப்படி, அப்படி அசைவதற்கும் இயலாமல் உள்ளேன். அவ்வாறு ஆயின பின்னை அக்கண்ணபிரான் திருவடி பட்டு மிதித்த இடத்தில் உண்டான பாத தூளியையாவது கொண்டு வந்து என் உடம்பிலே பூசுங்கள். என் மார்பகங்கள் அவன் திருத்தோள்களைத் தழுவவே துடிக்கின்றன. அக்கொங்கைகளை அழகியதாகவும் கற்பகக் கிளை போன்றதாகவும் உள்ள திருத்தோள்களோடு அழுத்தி அணைத்துக் கட்டி விடுங்கள்' என்று தம் துன்பத்தை - ஆற்றாமையைப் புலப்படுத்துகிறார் ஆண்டாள்.

அடுத்த பாடலில் காதல் முறுகி நின்ற நிலையில், 'உள்ளுக் குள்ளேயே கரைந்து நைந்து போகிற என்னைப்பற்றி இருக்கிறாளா இறந்து விட்டாளா?' என்றும் கேளாதவனாய் என்னை முற்றும் கொள்ளை கொண்டவனும் பெண்கள் திறத்திலே பொல்லாங்கு செய்பவனுமான கண்ணபிரானை ஒருகால் நான் காணப் பெற்றேனேயாகில் பயனற்றதான இந்த மார்பகங்களை வேர் முதலோடே பற்றிப் பிடுங்கி அந்தக் கண்ணனுடைய மார்பிலே எறிந்து விட்டு என் துக்கத்தைப் போக்கிக் கொள்வேன்' என்கிறார் ஆண்டாள்.

" உள்ளே யுருகி நைவேனை உளளோ இலளோ என்னாத
கொள்ளை கொள்ளிக் குறும்பனைக் கோவர்த் தனனைக் கண்டக்கால்
கொள்ளும் பயனொன் றில்லாத கொங்கை தன்னைக் கிழங்கோடும்
அள்ளிப் பறித்திட் டவன்மார்பில் எறிந்தென் அழலைத் தீர்வேனே "
(634)

என்று மிக்க வேதனையோடு பேசுகிறார் ஆண்டாள்.

ஆண்டாளுக்கிருந்த இந்த விரக வேதனையின் உச்சக் கட்டம் போல், திருமங்கையாழ்வார் நாயகி பாவத்தில் பாடிய பெரிய திருமடலில் உள்ள சில வரிகள் இங்கு ஒப்பு நோக்கத்தக்கன (பெரிய திருமடல்: 91-95).

திருமங்கையாழ்வார் பெண் பாவனையில் பாடினார்; ஆண்டாளோ பெண்ணாகவே இருந்து பாடுகிறார்.

ஆண்டாள், தம் விரக வேதனையின் உச்சத்தில், கண்ணனைக் 'கொள்ளை கொள்ளி' என்றும், 'குறும்பன்' என்றும், 'பெண்ணின்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

வருத்தம் அறியாத பெருமான்' என்றும் பழித்துப் பேசுகிறாள்; கண்ணனை அடைய முடியாத வெறுப்பில் 'அவன் தன் செம்மையுடைய மார்பில் என்னைச் சேர்த்துக் கொண்டாலும் நல்லது; ஒருவேளை என்முகத்தைப் பார்த்து மெய்யே சொல்லி, 'நீ எனக்கு வேண்டாம் போ' என்று தள்ளி விட்டமை தோன்ற விடை கொடுப்பானாகில் அது மிகவும் நல்லது' என்கிறார் ஆண்டாள்.

விருந்தாவனத்துக் கண்ணனைக் கண்டமை

நாச்சியார் திருமொழியின் இறுதிப் பதிகமாக அமைவது, 'பட்டி மேய்ந்து ஓர் காரேறு' எனத் தொடங்கும் பதினான்காம் திருமொழி. இது கண்ணன் விருந்தாவனத்தே ஆண்டாளுக்குக் காட்சி தந்தமையினைப் பகர்வதாகும். இத்திருமொழியின் சிறப்பு, முன்னிரண்டு அடிகள் வினாவாகவும், பின்னிரண்டு அடிகள் அவ்வினாவிற்கு விடையாகவும் நாடக உரையாடல் போன்று அமைந்துள்ளமை ஆகும்.

'கண்ணன் என்கிற கருத்த காளை, காவல் இல்லாமல் விருப்பம் போல் திரிந்துகொண்டு, பலராமனுக்கு ஒப்பில் தம்பியாய், மகிழ்ச்சிக்குப் போக்கு வீடாய்ப் பலவகைக் கொண்டாட்டங்களுடன் இப்படி வரப் பார்த்தீர்களோ?' என்று ஆண்டாள் அவ்வழி வந்தவர்களைக் கேட்க, அதற்கு அவர்கள் 'தனக்கு விருப்பமான பசுக்களை வயிறார மேய்த்து மடக்கித் தண்ணீர் குடிப்பித்து மகிழ்வுடன் குழலூதி விளையாடி நிற்பதை விருந்தாவனத்திலே கண்டோம்' என விடையிறுக்கிறார்களாம்.

" பட்டி மேய்ந்து ஓர் காரேறு பலதேவற்கு ஓர் கீழ்க்கன்றாய்
இட்டீறு இட்டு விளையாடி இங்கே போதக் கண்டீரே?
இட்டமான பசுக்களை இனிது மறித்துநீர் ஊட்டி
விட்டுக் கொண்டு விளையாட விருந்தாவனத்தே கண்டோமே "

(637)

இவ்வாறே வினா - விடையாக இப்பதிகத்தின் பாடல்கள் அமைந்து விளங்குகின்றன.

'நான் வருந்தும்படியாக என்னைப் பிரியவிட்டுப் போய்த் திருஆய்ப்பாடியில் இருந்து மகிழ்கின்றவன், பவளவாயில் வெண்ணெயின் மணம் கொண்டவன், இளம் காளை போன்றவன், பசுக்களைக் காக்கும் கண்ணனைக் கண்டீரோ?' என்று வினவ, 'மின்னலும் முகிலும் சேர்ந்தாற்போலே தன் தோழன்மாரோடு கூடித் திருமேனியில் துழாய்மாலை தவழ்ந்தாட விருந்தாவனத்தே கண்டோம்' என்று விடையிறுக்கிறார்களாம் அங்கு இருந்தவர்கள்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

இவ்வாறு தலைவி வினவும் வினாக்களில், கண்ணன், 'அன்பே வடிவான குணக்கடல், மாதவன், நீலமணியினை ஒத்தவன். சார்ங்க வில்லைப் போலப் புருவ வட்டங்களை உடைய அழகன், வெளுத்த வலம்புரியை உடையவன், திரு ஆழியான், உலங்களைப் படை என்று நான்முகன் முதலானவர்களை உண்டாக்கின குளிர்ந்த மலர் உந்தி வீட்டை உடையவன், திருவிளையாடல்களைச் செய்யும் மாசற்றவன் என்று கண்ணனைப் பாராட்டுவதும், அவன் அழகைச் சிறப்பித்துக் கூறுவதும் இடம் பெறுகின்றன. ஆயினும் 'இரக்கம் என்பதையே அறியாமல் குறும்புகள் செய்பவன், உருவம்போல உள்ளமும் கறுத்தவன், தன்னை விரும்பினாரைப் பிரிந்து துன்பம் கொடுப்பவன்' எனக் கண்ணனைப் பழித்துக் கூறும் செய்திகளும் இப்பதிகத்தில் இடம் பெறுகின்றன.

" மாதவன் என்மணியினை வலையிற் பிழைத்த பன்றிபோல்
ஏதும் ஒன்றும் கொளத் தாரா ஈசன்தன்னைக் கண்டீரே?
பீதக ஆடை உடை தாழ, பெருங்கார்மேகக் கன்றே போல்
வீதி ஆரவருவானை விருந்தாவனத்தே கண்டோமே "

(நா.லா.041)

என்னும் பாடலில் பெருமான், தனக்கு முகம் காட்டாமல் காலம் தாழ்த்திய செயலை ஆண்டாள், 'வலையில் பிழைத்த பன்றி போல்' (14-5) என்று உதாரணம் காட்டுகிறார். வலையில் சிக்காத பன்றியைச் சிக்க வைக்கலாம். ஆனால், வலையில் சிக்கித் தப்பிப் போன பன்றியை மறுபடியும் வலை வைத்துப் பிடிக்க முடியாது. எம்பெருமான் எப்பொழுதும் பக்தியாகிய வலையில் எளிதில் அகப்படுபவன். எனினும், சேதனர்களின் பக்தியைப் பரமபக்தியாக வளர்க்கும் பொருட்டே பக்தியாகிய வலையில் எளிதில் சிக்காமல் காலம் கடத்துகிறான். ஆண்டாளின் பக்தி பரம பக்தியாகப் பரிமளித்தபின், நேரில் சேவை சாதித்துப் பிராட்டியைத் தன்னுள் ஐக்கியப்படுத்திக் கொள்கிறான். ஆண்டாள் அருளிச் செய்த நாச்சியார் திருமொழியில் காணக் கிடைக்கும் உள்ளுறைப் பொருளும், பக்தி, பரம பக்தியாகப் பரிமளிப்பதே'[22] என்பர்.

தலைவி கேட்கும் வினாக்களுக்கு, அங்கிருந்தவர் கூறும் விடைகளில், கண்ணனைக் கார்மேகக் கன்று, யானைக் கன்று, கதிரவன், தாரா கணங்களால் பெருகு வானம் எனப் பலவாறாக் வருணிக்கும் பாங்கு மிகச் சிறப்பாக அமைந்துள்ளது.

22. தேவராஜன், மு.நூ., ப. 779

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

" மேலால் பரந்த வெயில்காப்பான் வினதை சிறுவன் சிறகுஎன்றும்
மேலாப்பின் கீழ் வருவானை விருந்தாவனத்தே கண்டோமே "
(639)

" போர்த்த முத்தின் குப்பாயப் புகர்மால் யானைக் கன்றேபோல்
வேர்த்துநின்று விளையாட விருந்தாவனத்தே கண்டோமே "
(640)

" உருவு கரிதாய்முகம் செய்தாய் உதய பருப்பதத்தின்மேல்
விரியும் கதிரே போல்வானை விருந்தாவனத்தே கண்டோமே "
(642)

" அருத்தித் தாரா கணங்களால் ஆரப்பெருகு வானம்போல்
விருத்தம் பெரிதாய் வருவானை விருந்தாவனத்தே கண்டோமே "
(643)

" களிவண்டு எங்கும் கலந்தாற்போல் கமழ்பூங் குழல்கள்
தடந்தோள்மேல்
மிளிர நின்று விளையாட விருந்தாவனத்தே கண்டோமே "
(644)

நாச்சியார் திருமொழி 'தையொரு திங்களும்' எனத் தொடங்கும் முதல் திருமொழி முதல் 'கண்ணன் என்றும் கருந் தெய்வம்' எனத் தொடங்கும் பதின்மூன்றாம் திருமொழியளவும், ஆண்டாள் பட்ட வருத்தமெல்லாம் தீரும்படி பதினான்காம் திருமொழியில் கண்ணபிரான் காட்சி கொடுப்பதாக நிறைவு பெறுகின்றது. கஜேந்திரன் என்னும் யானையரசன் பொய்கையில் முதலையின் வாயில் அகப்பட்டு நெடுநாள் துடித்து, பிறகு பெருமானுடைய காட்சியைப் பெற்றுத் துயர் தீர்ந்து மகிழ்ந்தது. அதுபோல், ஆண்டாளும், நெடுநாள் பட்ட விரக தாபம் தீர்ந்து மகிழ்ந்தாள் என்பதை நாச்சியார் திருமொழியின் இறுதிப் பாடல் எடுத்துரைக் கின்றது.

" பருந்தாள் களிற்றுக்கருள் செய்த பரமன் தன்னைப் பாரின்மேல்
விருந்தா வனத்தே கண்டமை விட்டுசித்தன் கோதைசொல்
மருந்தா மென்றுதம் மனத்தே வைத்துக் கொண்டு வாழ்வார்கள்
பெருந்தா ளுடைய பிரானடிக்கீழ்ப் பிரியா தென்றும் இருப்பாரே "
(646)

இங்ஙனம் நற்பேறு பெற்ற விட்டுசித்தன் மகள் கோதை சொன்ன சொல்லைச் சிந்திப்பவர்கள், இவ்வுலகில் எஞ்ஞான்றும்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

எம்பெருமான் இணையடிக்கீழ்த் தங்கும் பேற்றினைப் பெறுவர் என்னும் நூற்பயனுடன் நாச்சியார் திருமொழி நிறைவுறுகின்றது.

'பள்ளமடை'

நாச்சியார் திருமொழியில் அமைந்துள்ள பதினான்கு பதிகங்களும் அகப் பொருட் கூறுகளைப் பெற்று, நாயக - நாயகி பாவனையில் அமைந்துள்ளன. நாயக - நாயகி பாவனையில் பாடிய பிற ஆழ்வார்கள், நாயன்மார்கள் போன்றோர் ஆண்களே யாதலின் தங்களைப் பெண்களாகப் பாவித்துக் கொண்டு பாடல்கள் புனைந்தனர். ஆண்டாளுக்கோ எனில், அத்தகைய நிலைமை வேண்டுவதன்று. ஓர் ஆண், பெண் வேடம் போடுவதைக் காட்டிலும், பெண்ணே பெண்வேடம் புனைந்து நிற்றல் என்பது இயற்கையாய் இலங்கும். எனவே, நாயகிகளாகத் தங்களைப் பாவித்துப் பாடல்கள் புனைந்த ஆழ்வார்களைவிடப் பெண்ணாகவே பிறந்த ஆண்டாள், கண்ணனைக் கணவனாக எண்ணி உள்ளங் கலந்து உறவாடி மகிழ்ந்தமை பாராட்டத் தக்கதாக விளங்குகிறது. இதனால்தான் பிற ஆழ்வார்கள் திருமால்மீது கொண்ட ஆரா அன்பினை 'மேட்டுமடை' என்றும், ஆண்டாள் அணி அரங்கன்பாற் செலுத்தின அன்பினைப் 'பள்ளமடை' என்றும் பெரியோர் பகர்வாராயினர்.

''புருஷன் புருஷனைக் கண்டு காமுறுவதிற் காட்டில், ஸ்திரீ புருஷனைக் கண்டு ஸ்நேஹிக்கை பள்ளமடையாகையாலே ஆழ்வார்களுடைய பக்தியைக் காட்டில் பதின்மடங்கு அதிகமான அன்பை உடையவளாயிருப்பாளிவள். பதின்மருடைய ஞானமும் ஸ்த்ரீதனமாக இவள் பக்கலிலேயிறே குடி கொண்டது; பத்துப் பேர்க்கு ஒரு பெண் பிள்ளையிறே'' [23] என்று வைணவப் பெரியார் ஜகந்யாசார்யர் குறிப்பிடுவது முற்றிலும் பொருத்தமானதேயாகும்.

தமிழ்ப் பற்று

'தமிழோடு இசைபாடல் மறந்தறியேன்' என்னும் அப்பர் பெருமானின் வாக்கிற்கு ஏற்ப, பக்தி இயக்கக் காலத்தில் தமிழும் இசையும் ஒன்றிணைந்து நின்ற நெறியைக் காண்கிறோம். ஆண்டாள் நாச்சியாரும், திருப்பாவை, நாச்சியார் திருமொழி ஆகிய படைப்புக்களில், தம் தமிழ்ப் பற்றினைப் புலப்படுத்தியுள்ளார். திருப்பாவையின் இறுதிப் பாடலில் 'சங்கத்தமிழ்மாலை முப்பது' எனத் தமிழோடு இணைத்துக் கூறும் ஆண்டாள், இம்முப்பது

23. திருப்பாவை வ்யாக்யானம், ப. 16

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

பாடல்களும் தப்பாமல் பாடுபவர்க்குத் திருமாலின் அருள் கிட்டும் என்றும் எடுத்துரைக்கின்றார். அதே போல், தாம் பாடிய நாச்சியார் திருமொழியில் ஒவ்வொரு பதிகத்தின் இறுதிப் பாடலிலும் தமிழைச் சிறப்பித்தும், தமிழை விரும்பும் திருமாலைச் சிறப்பித்தும் அவர் பாடியிருக்கக் காணலாம். அவை வருமாறு:

" பொருப்பன்ன மாடம் பொலிந்து தோன்றும்
புதுவையர் கோன்விட்டு சித்தன் கோதை
விருப்புடை இன்தமிழ் மாலை வல்லார்
விண்ணவர் கோன்அடி நண்ணுவாரே " (நாலா.513)

" வேத வாய்த் தொழிலாளர்கள் வாழ்வில்லி புத்தூர் மன்விட்டு சித்தன் கோதை வாய்த்தமிழ் வல்லவர் குறைவுஇன்றி வைகுந்தம் சேர்வரே " (நாலா. 523)

" பொன்இயல் மாடங்கள் சூழ்ந்த புதுவையர்கோன் பட்டன் கோதை
இன்னிசையால் சொன்னமாலை ஈரைந்தும் வல்லவர் தாம்போய்
மன்னிய மாதவனோடு வைகுந்தம் புக்கு இருப்பாரே" (நாலா. 533)

" கூடலைக் குழற்கோதை முன்கூறிய
பாடல் பத்தும் வல்லார்க்கு இல்லை பாவமே " (நாலா.544)

" பண்உறு நான்மறையோர் புதுவைமன்னன் பட்டர்பிரான் கோதை சொன்ன
நண்உறு வாசகமாலை வல்லார் நமோ நாராயணாய என்பாரே' (நாலா. 555)

" தூய தமிழ்மாலை ஈரைந்தும் வல்லவர்
வாயும் நன்மக்களைப் பெற்று மகிழ்வரே " (நாலா. 556)

" ஏய்ந்த புகழ்ப் பட்டர்பிரான் கோதைதமிழ் ஈரைந்தும்
ஆய்ந்து ஏத்த வல்லார் அவரும் அணுக்கரே " (நாலா. 576)

" போகத்தில் வழுவாத புதுவையர்கோன் கோதைதமிழ்
ஆகத்து வைத்து உரைப்பார் அவர் அடியார் ஆகுவரே " (நாலா. 586)

" சுந்தரனைச் சுரும்புஆர் குழற்கோதை தொகுத்து உரைத்த
செந்தமிழ் பத்தும் வல்லார் திருமாலடி சேர்வர்களே " (நாலா. 596)

" பொன்இயல் மாடம் பொலிந்து தோன்றும்
புதுவையர்கோன் விட்டுசித்தன் கோதை
இன்னிசையால் சொன்ன செஞ்சொல்மாலை
ஏத்தவல்லார்க்கு இடம் வைகுந்தமே " (நாலா. 626)

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

கோதை தமிழ் ஆகத்து வைத்து உரைப்பார் - கோதை இன்னிசையால் சொன்ன செஞ்சொல் மாலை ஏத்த வல்லார் மண்ணுலகில் நன்மக்களைப் பெற்று மகிழ்வர்; திருமால் அடியார் ஆகுவர்; திருமாலடி சேர்வர்; அவருக்குப் பாவம் இல்லை; ஒரு குறைவும் இன்றி வைகுந்தம் சேர்வர்.

ஆண்டாள் - கற்பனைப் பாத்திரமா?

'ஆண்டாள் என்று ஒருத்தி இருந்ததில்லை. பெரியாழ்வார், தாமே தம்மைப் பெண்ணாகப் பாவித்து, 'கோதை' என்ற பெயருடன் அருளிச்செய்தவைதாம் 'திருப்பாவை' 'நாச்சியார் திருமொழி ஆகிய இரண்டு பிரபந்தங்களும்' என்னும் கருத்து உடையவர் மூதறிஞர் இராஜாஜி. ''காதலின் படுவேகத்தைக் குறிக்கும் பெரியாழ்வார் திருமொழிப் பகுதியே நாச்சியார் திருமொழி என்று வழங்கப்பெற்று நாளடைவில் கோதை நாச்சியார் ஓர் உண்மையான பெண்மணியாகவும், வேறொரு பக்த மணியாகவும் கருதப் பெற்றிருக்க வேண்டும்' என்னும் கருத்துக் கொண்டவர் இராஜாஜி என்பதைப் பி.ஸ்ரீ. ஆசார்யா எடுத்துரைக்கிறார்.[24] 1946-ஆம் ஆண்டு 'திரிவேணி' என்ற இதழில் ஆங்கிலத்தில் எழுதிய கட்டுரையில் இக் கருத்தினை ராஜாஜி குறிப்பிட்டிருந்தார். உடனே, அண்ணங்கராச்சாரியார் சுவாமிகள், அதை மறுத்துக் கட்டுரை வெளியிட்டு, ஆண்டாள் என்ற ஒருவர், உண்மையாகவே இப்பூவுலகில் வாழ்ந்ததைச் சான்றுகளுடன் நிறுவினார் என்றும், அதற்குப் பிறகு இராஜாஜியே அதனை ஏற்றுக்கொண்டார் என்றும் தெரிய வருகிறது.[25]

பெரியாழ்வார், ஆண்டாள் இருவரின் பாடல்களையும் ஒப்பு நோக்கித் தம் கருத்தினை எடுத்துரைக்கிறார் பேராசிரியர் சி. பாலசுப்பிரமணியன். அவர் கூறும் கருத்து வருமாறு:

''இவ்விருவரும் பாடிய பாடல்களில் சில இடங்கள், சொற் றொடரால் கருத்தால் ஒன்று போல இருப்பது உண்மை

'' மற்றொருவற் கென்னைப் பேசவொட்டேன்
மாலிருஞ்சோலை யெம்மாற் கல்லால்''

(பெரி. திருமொழி. 3:4:5:23)

என்பர் பெரியாழ்வார்.

---

24. பி.ஸ்ரீ. ஆசார்யா, பெரியாழ்வார் ப. 95

25. தேவராஜன், மு.நூ., பக். 783-784

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

" மானிடவர்க்கென்று பேச்சுப்படில்
வாழகில்லேன் கண்டாய் மன்மதனே" (நாச். திரு. 1:5:3-4)

என்பர் ஆண்டாள். இவ்வாறு இன்னும் ஒன்றிரண்டு கூற்றுகள் ஒத்து வருகின்றன. இவற்றைக் கொண்டு ஒரு கருத்தினை நிலை நிறுத்துவதற்கில்லை. காரணம் என்னவெனில், பெருமனங்கள் உலக சிந்தனையிலும், இறை நினைப்பிலும் ஒன்று போல நினைக்கும் வாய்ப்புப் பெற்றவை. 'Great minds think alike' என்றபடி இதைக் கொள்ளலாம்.

இன்னும் தூய நெறி நின்ற பெரியாழ்வார் வளர்த்தெடுத்த பெண்கொடி என்பது பல விடங்களில் பரக்கக் காணப்படுகின்றது. 'தீயின்றிப் புகையில்லை' யெனவே, வளர்த்தெடுத்த மாண்பினாலேயே 'விட்டுசித்தன் உடைய கோதை' என்னும் பொருளில் 'விட்டுசித்தன் தன்கோதை' எனத் தொகையாகக் குறிக்கப்படுகின்றது. மேலும், ஆண்டாள் பெரியாழ்வாரைக் குறிக்குமிடத்தெல்லாம் படர்க்கையினாலேயே வைத்துப் பேசுவதை நோக்கலாம்.

" வில்லிபுதுவை விட்டுசித்தர் தங்கள் தேவரை
வல்லபரிசு வருவிப்பரேல் அது காண்டுமே " (10:10:3-4)

" செம்மையுடைய திருவரங்கர் தாம்பணித்த
மெய்ம்மைப் பெருவார்த்தை விட்டுசித்தர் கேட்டிருப்பர் "
(11:10-1-2)

என வரும் இடங்களை நோக்கும்போது, பெரியாழ்வாரே இவற்றைப் பாடியிருப்பின் இவ்வாறு படைக்க வேண்டியதில்லை.

மேலும், 'பெரியாழ்வார் திருமொழியின் 'பாவனை' நிலைக்கும் ஆண்டாள் பாடல்களின் 'பாவனை' நிலைக்கும் இடையே ஆணுக்கும் பெண்ணுக்கும் உள்ள மன வேறுபாடுகள் தெற்றெனத் தெளியப்படுகின்றன. பெரியாழ்வாரின் இறையன்பு பாடுபட்டுத் தேடியது. ஆண்டாளின் இறைக் காதலோ புதையலெடுத்த பெருநிதியம் என்னும் பொருள் பொதிந்ததாகும்' என்பர் பி.ஸ்ரீ. ஆசார்யர். (கோதை அல்லது காதல் வெள்ளம். ப. 104).

ஆகவே, கருத்து வெளிப்பாடு, பாவித்துப் பேசுதல், உணர்வு வெளியீடு, இருவேறு நிலைகளில் இருந்து அவரவரின் இயல்புக் கேற்ப (ஆண், பெண்) பாக்கள் இயற்றல், உணர்த்தும் திறன் ஆகியவற்றைக் கொண்டு பார்க்கும்போது, பெரியாழ்வாரின்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

கற்பனைப் பாத்திரமல்ல ஆண்டாள்; தனியொரு ஒப்பற்ற ஓர் உன்னத, தனிநிலை ஆழ்வாரே என்று உறுதி செய்யலாம்'' என்பர்.[26]

சூடிக் கொடுத்த சுடர்க்கொடி

ஆண்டாள் சூடிக் கொடுத்த மாலைகளே வடபத்திரசாயி - வடபெருங் கோயிலுடையான் ஆர்வத்துடன் அணிந்து இன்புறுவ தற்குக் காரணமாக இருந்தமையின், பெரியோர் இவரைச் 'சூடிக் கொடுத்த சுடர்க்கொடி' என அழைத்தனர்.

திருப்பாவை என்னும் நூலைப் பாடியருளிய திருவுடைமையால் இவரைச் 'செல்வியார்' என்றும் வழங்கினர். 'நாச்சியார்' என்றும் நவிலப் பெற்றார். நாச்சியார் என்ற சொல் 'தலைவியார்' என்றும் பொருள் படுவதாகும். உலக உயிர்களுக்கும் உயிர்களின் உள்ளுறையும் இறைவனுக்கும் இவரே தலைவியாவார்.

அருளே வடிவாக உருவெடுத்திருக்கும் ஆண்டாள் அம்மையார், மக்களிடம் பரிவு கொண்டு இறைவனுக்கே பரிந்துரை (புருஷகாரம்) செய்வதாகக் குறிப்பிடுவர். ஆண்டாள் தம் பெண்மைக் குணங்களிற் பெருமை பீறிட நிற்கும் அன்பு என்னும் அருங்குணத்தால் உலகத்தைத் தம் வயப்படுத்தி உயிர்களைத் திருத்தி அமைக்கிறார் என்பதாகும். இதுபற்றியே பிள்ளை லோகாச்சாரியார்,

'' சேதனனை அருளாலே திருத்தும்
ஈஸ்வரனை அழகாலே திருத்தும் ''

என்று ஸ்ரீவசன பூஷணத்தில் குறிப்பிடுகிறார் என்பர். தன்னிடம் நிறைந்தொளிரும் ஆன்ம அழகால் திருவரங்கப் பெருமானைத் தம்பால் இழுக்கிறார். இவர் பாடிய நூலும், இவர் பெயரை ஒட்டியே 'நாச்சியார் திருமொழி' என அமைந்தது.

'ஆண்டாள்' - எதை ஆண்டாள்? தம் புலன்களை, மனத்தை ஆண்டாள். ஜீவாத்மாவைப் பரமாத்மா கண்ணனிடம் லயிக்கும்படி ஆண்டாள். எம்பெருமானையும் ஆளும் திறமை பெற்றிருந்தவர் ஆனதனால் 'ஆண்டாள்' எனப் பெயர் பெற்றார்.

---

26. சி. பாலசுப்பிரமணியன், ஆண்டாள், பக். 37-38

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

முடிவுரை

"....'கோதை' என்னும் பிள்ளைத் திருப்பெயர் கொண்டு, சூடிக் கொடுத்த சுடர்க்கொடியாக வளர்ந்து, திருப்பாவை பாடியருளிய செல்வியராகத் திகழ்ந்து, நாச்சியார் திருமொழி நவின்ற நாச்சியாராய் நிறைவு பெற்று, வைணவ உலகில் என்றும் 'ஆண்டாள்' என்னும் திருப்பெயரால் அழைக்கப் பெறுபவராய் விளங்குகின்றார் என்பது ஒருதலை."

- சி. பாலசுப்பிரமணியன்*

பக்தி இலக்கிய உலகில் இருபெருஞ் சுடர்களாக விளங்கும் சிறப்புப் பெற்ற பெண்மணிகள் இருவர். ஒருவர் - காரைக்கால் அம்மையார். மற்றவர், ஆண்டாள். முன்னவர், இறைவனாலேயே 'அம்மையே' என அழைக்கப்பெற்ற பெருமைக்கு உரியவர்; சைவமும் தமிழும் தழைத்தோங்கப் பிரபந்தங்கள் அருளியவர். பின்னவர், இறைவனையே காதலனாக வரித்து அவனுடன் இரண்டறக் கலக்கும் பேறு பெற்றவர். 'சூடிக் கொடுத்த சுடர்க்கொடியார்' எனச் சிறப்பிக்கப்பெறுபவர்; வைணவமும் தமிழும் தழைத்தோங்கப் பிரபந்தங்கள் படைத்துத் தந்தவர்.

ஆண்டாள் நாச்சியாரின் பிறப்பும் வளர்ப்பும் - வாழ்வும் வாக்கும் - தனித்தன்மை வாய்ந்தவை. அவர் திருவில்லிபுத்தூரில் அவதரித்தவர்; பூமிதேவியின் அவதாரமாகப் பூவுலகில் தோன்றியவர்; பெரியாழ்வார் கண்டெடுத்த ஞானப் பூங்கொடி. வைணவ ஆழ்வார்கள் பன்னிருவருள் ஆண்டாள் ஒருவரே பெண்மணி ஆவார்; 'மானிடவர்க்கென்று பேச்சுப்படில் வாழகில்லேன்' என்று கூறியபடியே கடைசிவரை வாழ்ந்தும் காட்டி, தம் பக்தித் திறத்தால் திருவரங்கநாதனையே பற்றாகப் பற்றியவர் அவர். 'சிறுமுதுக்குறைவி'யாக விளங்கிய அவரைப் 'பிஞ்சாய்ப் பழுத்தாள்' என்று அழகுறச் சுட்டுவர் மணவாள மாமுனிகள்.

---

* ஆண்டாள், ப.151.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

ஆண்டாள் இயற்றிய திருப்பாவைப் பாடல் ஒன்றில் இடம்பெறும் தொடர் 'வெள்ளி எழுந்து வியாழம் உறங்கிற்று' என்பது. இதனைக் கொண்டு அவரது காலத்தை 716-ஆம் ஆண்டின் திருவாடிப்பூர நாள் என உறுதிப்படுத்துவர் பேரறிஞர் மு. இராகவையங்கார்.

திருமாலையே ஆட்கொண்ட காரணத்தால் 'ஆண்டாள்' என்றும் திருமாலுக்கு உரிய மலர் மாலையைத் தாம் சூடிக் கொண்டு அழகு பார்த்துப் பின்னர் இறைவனுக்குக் கொடுத்தது காரணமாகச் 'சூடிக்கொடுத்த நாச்சியார்'. 'சூடிக் கொடுத்த பொற்கிளி', 'சூடிக்கொடுத்த சுடர்க்கொடியார்' என்ற சிறப்புப் பெயர்களால் சுட்டப் பெற்றவர் கோதையார். அவரைக் கண்டெடுத்து வளர்த்த பெரியாழ்வார் 'பெருமை மிகும் ஆண்டாளைப் பெற்ற பிரான்' எனச் சிறப்பித்துப் பேசப்பெற்றார்; முடிவில் 'தொடை சூடிக் கொடுத்தாளைத் தொழும் அப்பன்' என்னும் நிலையை அடைந்தார்.

'சூடிக்கொடுத்த சுடர்க்கொடி'யாம் ஆண்டாள் நாச்சியார், பக்தி உலகிற்குப் பாடிக் கொடுத்த பனுவல்கள் இரண்டு. ஒன்று, திருப்பாவை; மூப்பது பாசுரங்கள் கொண்டது; பாவை நோன்பின் விளக்கமாக அமைவது. மற்றொன்று, நாச்சியார் திருமொழி; 143 பாசுரங்களால் அமைந்தது. ஆண்டாள் நாச்சியாரின் ஆழ்ந்த இறைக் காதலைப் புலப்படுத்துவது.

திருப்பாவை என்பது தமிழ்ப் பாசுரம் மட்டுமன்று; அது ஒரு பெருவேள்வி; அருநோன்பு, சாதாரண மனிதர்களைவிட, ஆழ்வார்கள் உயர்ந்தவர்கள்; 'ஆழ்வார்கள்' என்ற சொல்லுக்கே 'இறைவன் குணங்களில் ஆழ்ந்து ஈடுபட்டவர்' என்று பொருள். மற்ற ஆழ்வார்களைவிடப் பெரியாழ்வார் எத்தனையோ மடங்கு உயர்ந்தவர். அந்தப் பெரியாழ்வாரைவிட அவரது வளர்ப்பு மகளான ஆண்டாள் பல மடங்கு உயர்ந்தவள் என்பது வைணவச் சான்றோர்களின் கருத்து. 'ஆண்டாள் மலை; மற்றவர் அவள் முன் தூசி' எனச் சிறப்பித்துக் கூறுவது வைணவ மரபு. மேலும், ஆழ்வார்குடி அனைத்திற்குமே ஒரு தனி மகளாய்த் துலங்குபவள் ஆண்டாள் ஒருவரே ஆவார். 'அஞ்சு குடிக்கொரு சந்ததியாய் ஆழ்வார்கள் தஞ்செயலை விஞ்சி நிற்கும் தன்மையளாய்' என்னும் ஆன்றோர் வாக்கு இவ்வகையில் குறிப்பிடத்தக்கது.

ஆண்டாள் அருளிய திருப்பாவைக்குப் பிறிதொரு தனிச் சிறப்பும் உண்டு. பாவை நோன்பு மேற்கொள்வதிலிருந்து

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

கண்ணனை அனுபவித்தல் வரையிலும் வளர்ந்துவருகின்ற ஓர் ஆன்ம வளர்ச்சியைத் திருப்பாவை புலப்படுத்தி நிற்கின்றது. திருப்பாவையின் முப்பது பாசுரங்கள் வாயிலாக ஆண்டாள் நாச்சியார் உணர்த்தி யிருக்கும் உயரிய வழி - தத்துவம் - பிரபத்தி எனப்படும் சரணாகதி ஆகும். 'மார்கழித் திங்கள் மதிநிறைந்த நன்னாளால்' எனத் தொடங்கும் திருப்பாவையின் முதற் பாசுரம் சிறப்பானது; திருப்பாவையின் சாரமாக விளங்குவது. 'எல்லே இளங்கிளியே இன்னம் உறங்குதியோ' எனத் தொடங்கும் பாசுரம் (15) திருப்பாவையின் உயிர்ப்பாட்டு எனக் கருதத் தக்கது; உரையாடல் பாங்கு சிறப்பாக அமைந்தது. 'உந்துமத களிற்றன்' (18) எனத் தொடங்கும் திருப்பாவைப் பாசுரம் இராமானுசர் வரலாற்றில் இடம் பெற்றது; 'எம்பெருமானார் உகந்த பாசுரம்' என ஏற்றம் பெற்றது. ஸ்ரீ வைஷ்ணவத்தின் வளர்ப்புத் தாய் எனப் போற்றப்படும் இராமானுசர்க்கு ஆண்டாளின் திருப்பாவையில் மிகுந்த ஈடுபாடு இருந்தது. அதனால் அவர் 'திருப்பாவை ஜீயர்' என்று புகழப்பட்டார்.

'மாரிமலை முழைஞ்சில் மன்னிக் கிடந்துறக்கும்' எனத் தொடங்கும் திருப்பாவைப் பாசுரம் (23) கம்பீரமான ஒரு சிங்கத்தை நம் மனக்கண் முன்னே கொண்டு வந்து நிறுத்தும் ஆற்றல் வாய்ந்தது; 'சிங்கப் பாட்டு' எனச் சான்றோரால் சிறப்பிக்கப் பெறுவது. 'சிற்றஞ் சிறுகாலே' எனத் தொடங்கும் பாசுரம் (29) திருப்பாவையின் உயிர் மூச்சாகத் திகழும் உயிர்ப்பான வைணவக் கொள்கைகளை உள்ளடக்கியது.

திருப்பாவையில் 'அர்த்த பஞ்சக ஞானம்' என அழைக்கப் பெறும்வைணவ சமயக் கொள்கைகள் ஐந்தும் சிறப்பாக இடம் பெற்றுள்ளன. பரத்துவம், வியூகம், விபவம், அந்தர்யாமி, அர்ச்சை என்னும் இறைவனின் ஐந்து நிலைகளும் திருப்பாவையில் ஆண்டாள் நாச்சியாரால் அழகுறப் படம்பிடித்துக் காட்டப் பெற்றுள்ளன. மேலும், இறை இயல்பு, ஆன்மாவின் இயல்பு, வீடு பேற்றிற்கு உரிய உபாயம். இறையனுபவத்தின் இயல்பு முதலான வைணவக் கொள்கைகளும் திருப்பாவைப் பாசுரங்களில் தெளிவாக விளக்கப்பெற்றுள்ளன. 'திருப்பாவையில் ஆண்டாள் நாச்சியார் பக்தர்களையும் முக்தர்களையும் தூக்கத்திலிருந்து எழுப்பி, எம்பெருமானைப் பணிந்து, ஆன்ம பலனை அறியும்படி வேண்டுகிறார்' எனத் திருப்பாவைக்குத் தத்துவ விளக்கம் கூறுவாரும் உளர். இதே போல் 'நீராடல்' எனத் திருப்பாவையில் குறிக்கப்பெறுவது குறியீட்டு நிலையில் இறைவனுடன் கலத்தலே ஆகும் என்பர் அறிஞர்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

திருமால் எடுத்த அவதாரங்கள் பத்து. இவற்றுள் ஆண்டாள் நாச்சியாரின் மனத்தைப் பெரிதும் கவர்ந்து நிற்பது கண்ணன் அவதாரமே ஆகும். திருப்பாவை, திருவெம்பாவைப் பாடல்களை ஆங்கிலத்திலே மொழிபெயர்த்துள்ள அறிஞர் நார்மன் கட்லரும் இக்கருத்தினை உறுதி செய்துள்ளார். கண்ணன் அவதாரத்திற்கு அடுத்த நிலையில், இராம அவதாரமும் வாமன அவதாரமும் குறித்து ஆண்டாள் நாச்சியார் தம் பாசுரங்களில் சிறப்பாகப் பாடியுள்ளார்.

தத்துவ விளக்கத்திற்கு இணையாகத் திருப்பாவைப் பாசுரங்களில் சிறப்பிடம் பெற்றிருக்கும் பிறிதொரு கூறு இயற்கைப் புனைவு ஆகும். மழைக்காட்சிகளும், புலர்காலைப் பொழுதின் வருணனைகளும், ஆயர்களின் அன்றாட வாழ்க்கை நிகழ்ச்சிகளின் பதிவுகளும் இவ்வகையில் குறிப்பிடத்தக்கவை.

ஆண்டாள் பாடியருளிய பிறிதொரு பிரபந்தம் நாச்சியார் திருமொழி. பக்திச் சுவை நிரம்பிய பாடல்களின் தொகுதி அது. கண்ணன் வாழ்ந்த காலத்தில் கோபிகளுள் தாமும் ஒருவராகப் பிறந்து கண்ணனின் பேரழகை நேரில் கண்டு அனுபவிக்கும் பாக்கியத்தைப் பெறவில்லையே என்ற கவலை ஆண்டாளை வருத்தியதால் - வில்லிபுத்தூரைக் கோகுலமாகவும் தம்மைக் கோபிகளுள் ஒருவராகவும் பாவித்துப் பாடிய அவருடைய திருமொழி கற்பனையுலகில் கண்ணனை அடைவதற்கு அவர் பட்ட பாடெல்லாம் திரண்டு உருப்பெற்றது போலக் காணப்படுகின்றது. ஆண்டாள் நாச்சியார் பாடிய திருப்பாவை, நாச்சியார் திருமொழி என்ற இரு பிரபந்தங்களும் கரைபுரண்டு ஓடும் காதல் வெள்ளத்தில் பற்றுக்கோடின்றித் தவிக்கும் அவர்தம் அனுபவங்கள் பொதிந்துள்ளமையின், தமிழ் இலக்கியத்தில் அவை சிறப்பிடம் பெற்று விளங்குவனவாயின. 'இறைவனிடத்தில் அடியார் கொண்டுள்ள அன்பை நாயகி பாவத்தில் அமைத்துப் பாடிய பெரியார் பலருளர். எனினும், பெண்ணாகப் பிறந்து தம்மை இறைவனுக்கு நாயகியாகப் பாவித்துத் தமிழிற் பாடிய புலவர் ஆண்டாளன்றி வேறு யாருமிலர்''[1] என்னும் ஆன்றோர் வாக்கு உண்மை; வெறும் புகழ்ச்சி இல்லை.

ஏனைய ஆழ்வார்களின் பக்திக்கும் ஆண்டாள் நாச்சியாரின் பக்திக்கும் இடையில் காணலாகும் நுண்ணிய வேறுபாட்டினை அறிஞர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். 'ஸம்ஸாரத்திலே உறங்குகிறவர்களை எழுப்பி எம்பெருமான் தானே தன்னைக் காட்டக்

1. வி. செல்வநாயகம், தமிழ் இலக்கிய வரலாறு, பக். 95-96.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

கண்டார்கள் ஆழ்வார்கள். இவள் (ஆண்டாள்) தானே சென்று, எம்பெருமானை எழுப்பித் தன் குறையை அறிவித்தாள். ஆகவே, அவர்களிலும் இவள் விலக்ஷணை.... புருஷன், புருஷனைக் கண்டு ஸ்நேகிப்பதிலுங்காட்டில் ஸ்தீ, புருஷனைக் கண்டு ஸ்நேகிக்கப் பள்ளமடையாகையாலே, ஆழ்வார்களிற் காட்டில் எம்பெருமான்பக்கம் பரமபக்தியுடையவளான ஆண்டாள்''[2] என்னும் 'வியாக்கியானச் சக்கரவர்த்தி' பெரியவாச்சான் பிள்ளையின் கூற்று இவ்வகையில் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது. இங்ஙனம் பள்ளமடையாக இறைவன்பால் பரமபக்தி கொண்டிருந்த ஆண்டாளின் திருப்பெயரானது தமிழ் இலக்கிய உலகில் என்றென்றும் நிலைத்து நிற்க வல்ல தவப்பெயர் ஆகும்.

பேராசிரியர் தெ.பொ. மீனாட்சி சுந்தரனார் தமிழ் இலக்கிய வரலாறு குறித்து எழுதிய ஆங்கில நூலில் ஆண்டாளைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கும் ஓர் அரிய கருத்துடன் இந்நூல் நிறைவு பெறுவது பொருத்தமாக இருக்கும். ஆண்டாளின் பெருமைக்குப் பெருமை சேர்க்கும் அக்கருத்து வருமாறு:

''இறைவன்பால் அளப்பரிய அன்பும் ஆழ்ந்த காதலும் கொண்டு வாழ்ந்து, அவனைத் தன் கணவனாக அடைய வேண்டும் என்று எண்ணி, தன் எண்ணத்தில் உறுதியாக இருந்து, அடைந்தும் காட்டிய ஆண்டாளின் வாழ்க்கை பெண்களுக்குமட்டு மன்று. இறைவனை அடையத் துடிக்கும் - போராடும் - ஆண்களுக்கும் போற்றத்தகுந்த ஒரு வாழ்க்கைப் பாடம் ஆகும்.''[3]

2. மு. வரதராசன், மேற்கோள் - தமிழ் இலக்கிய வரலாறு. ப. 121.

3. "A lady by her devoted love and affection for God and marrying God Himself as her husband is an admirable lesson indeed for men to strive and attain God". Prof. T. P. Meenakshi Sundaran, History of Tamil Literature, P. 87

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

குலசேகர ஆழ்வார்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

குலசேகர ஆழ்வார்

பொருளடக்கம்

1.	ஆழ்வார்களுக்கு முற்பட்ட வைணவம்	-	1
2.	ஆழ்வார்களும் அவர்தம் அருட்பாக்களும்	-	11
3.	குலசேகர ஆழ்வார் வரலாறும் காலமும்	-	18
4.	குலசேகரரின் பெருமாள் திருமொழி	-	42
5.	அணியரங்கத்து அமுதம்	-	44
6.	அழுத கண்ணீரும் அரங்கன் கோயில் திருமுற்றமும்	-	51
7.	அருட்பித்தும் மருட்பித்தும்	-	59
8.	ஏதேனுமாகேனோ எம்பெருமான் திருமுன்னர்	-	66
9.	மற்றோர் துணையின்றி மாலுக்கே மையலாகி	-	75
10.	பொய்யனுக்கே போனதென் நெஞ்சு	-	84
11.	தாயழுத கண்ணீர்	-	94
12.	தாலாட்டும் தமிழ்	-	105
13.	தாயான தந்தை	-	112
14.	சூத்திரம் ஆகிய மகா காவியம்	-	123

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

குலசேகர ஆழ்வார்

1. ஆழ்வார்களுக்கு முற்பட்ட வைணவம்

மனிதனின் அக இருளைப் போக்குவதற்குத் திருவருள் பெற்ற மெய்யறிவாளர்கள் அவ்வப்போது தோன்றி, தாம் கண்ட - அனுபவித்த - மெய்ப் பொருளியலை வெளிப்படுத்தி வந்திருக்கின்றனர். கால தேச வர்த்தமானங்களுக்கேற்ப அப்பேரருள் பெற்ற தவச் செல்வர்கள் மனித வர்க்கத்திற்கு உண்மைகளை உணர்த்தி வந்திருக்கின்றனர். அங்ஙனம் உணர்த்தப்பெற்ற மெய்யியல்களில் வைணவச் செந்நெறியும் ஒன்றாகத் திகழ்கின்றது.

விஷ்ணுவைப் பரம்பொருளாகக் கொண்டு வழிபடுகின்றவர் 'வைணவர்' எனப்படுகின்றனர். இவ்வைணவ நெறியில் அனுபூதி மான்களாகத் திகழ்ந்தவர்கள் 'ஆழ்வார்கள்' எனப்பட்டனர். இறையருள் அனுபவத்தில் ஆழங்கால்பட்டு, அப்பெரும் பொருளை அனுபவித்தவர்கள் ஆழ்வார்கள். அப்பெரு மக்களின் அருளிச்செயல்கள் 'நாலாயிர திவ்யப் பிரபந்த'மாகத் தொகுக்கப் பெற்றிருக்கின்றன. சைவத் திருமுறைகளைப் போலத் தமிழர் செய்த தவப் பயனாய்க் கிடைத்திருப்பது இத்திவ்வியப் பிரபந்தம். பக்தி இயக்கம் கொடுத்த விலை மதிக்க முடியாத செல்வங்களில் ஒன்று இத்திவ்வியப் பிரபந்தம்.

கி.பி. ஏழாம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்து பத்தாம் நூற்றாண்டு வரையிலான காலத்தை நாம் பக்தி இயக்கம் தோன்றி வளர்ந்து முதிர்ந்த காலமாகக் கொள்கின்றோம். இக்கால கட்டத்திலேயே சைவ நாயன்மார்களும், வைணவ ஆழ்வார்களும் தோன்றித் தமிழையும் தமிழ்ச் சமூகத்தையும் ஆன்மிக வளம் உடையனவாக ஆக்கித் தந்தார்கள்.

பக்தி இயக்கத்தின் வித்துக்களாகவும், நாயன்மார்களும் ஆழ்வார்களும் தோன்றுதற்குரிய காரணிகளாகவும் இருந்தவை

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

சிவன் மற்றும் திருமால் வழிபாடுகளாம். இவற்றுள் சிவ வழிபாடு என்பது மிகத் தொன்மையதாய், ஆரப்பா, மொகஞ்சதாரோ முதலான தொன்மையான திராவிட நாகரிகத்துடன் தொடர்புபடுத்திப் பேசப் பெறுகின்றது. திருமால் வழிபாடு தொல்காப்பியத்திலும் சங்க நூல்களிலும் குறிக்கப்பெறும் பழமையும் சிறப்பும் உடையது.

தமிழரின் பழம்பெரும் நூலாகிய தொல்காப்பியம் 'பொருள்' என்பதற்கு விளக்கம் கூறுகின்ற போது அதனை முதல், கரு, உரி என மூவகைப்படும் பகுப்பினதாகக் கூறும். இவற்றுள் முதல். என்பது நிலத்தையும் காலத்தையும் குறித்து நிற்கக் 'கரு' என்பது நிலத்திற்குரிய 'தெய்வம்' முதலானவற்றைக் குறிக்கின்றது. இவ்விளக்கத்திற் கேற்ப முல்லை நிலத் தெய்வம் மாயவன் என்பதனை அறிகின்றோம்.

மாயவனாகிய கண்ணன் ஆய்ப்பாடியில் ஆயரிடையே வளர்ந்து பல லீலைகள் புரிந்து ஆயர்தம் குலக் கொழுந்தாய் - வழிபடு தெய்வமாய் விளங்கியவனாதலின், ஆனிரை மேய்த்து வாழும் முல்லை நிலத்தவர் தெய்வமெனக் கொள்ளுதல் தகுவதே!

இங்ஙனமே 'குன்றுதோறாடும் குமரன்' எனப் போற்றப் பெறும் குறிஞ்சிக் கிழவனான முருகவேளைக் குறிஞ்சிக்குரிய தெய்வமாகக் கொள்ளுதலும், நன்னீர் நல்கும் மேகங்களின் தலைவனும் யோகங்களில் மூழ்கி நிற்கும் தேவர்களின் மன்னனுமாகிய இந்திரனை மருத நிலத் தெய்வமாகக் கொள்ளுதலும், கடல் தெய்வமாக நூல்களில் சிறப்பித்துக் கூறப் பெறும் 'வருணனை' நெய்தல் நிலத் தெய்வமாகக் கொள்ளுதலும் ஏற்புடையதே. இந்நானிலத் தெய்வங்களில் முருகவேள் தவிர ஏனையோர் வடபுலத்தோரால் மிகுதியும் வழிபடப்பெற்றுத் தென்புலம் வந்த தெய்வங்களாவர். எனினும் இந்திரன், வருணன் என்போரைப் புறந்தள்ளிவிட்டுத் திருமால் வழிபாடே சிறந்து வளர்ந்தது.

தொல்காப்பியத்தை அடுத்து வருகின்ற சங்க இலக்கியங்களில் திருமால் வழிபாடு சிறந்தோங்கி நிற்பதைக் காணலாம். பத்துப் பாட்டுள் ஒன்றான திருமுருகாற்றுப்படை, ''புள்ளணி நீள்கொடிச் செல்வன்'' (அடி 181) என்பதன் மூலம் திருமாலின் கருடக் கொடியினையும், ''நாற்பெருந் தெய்வத்து நன்னகர் நிலைஇய, உலகம் காக்கும் ஒன்றுபுரி கொள்கை'' (அடி 160-61) எனக் குறிப்பதன் மூலம் அப்பெருமானின் காத்தற் சிறப்பினையும் பேசுகின்றது. மற்றொரு பாடலாகிய பெரும்பாணாற்றுப் படை, ''இருநிலங் கடந்த திருமறு மார்பின், முந்நீர் வண்ணன் பிறங்கடை''

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

(அடி 29-30) எனத் திருமால் மார்பில் ஸ்ரீவத்சம் அணிந்துள தனையும், ''அவ்வயின், அருந்திறல் கடவுள் வாழ்த்தி'' (அடி 390-91) என அப்பெருமான் காஞ்சியம்பதியில் கோயில் கொண்டுள்ளதனையும், ''காந்தளஞ் சிலம்பில் களிறு படிந்தாங்குப் பாம்பணைப் பள்ளி அமர்ந்தோன்'' (அடி 372-73) என அக்கடவுள் அனந்த சயனனாயிருத்தலையும் அழகாக விளக்குகின்றது.

மாவலிச் சக்ரவர்த்தி மூன்றடி மண்ணை நீர் வார்த்துக் கொடுத்த அளவில் வளர்ந்த திருவிக்கிரமப் பெருமானை,

'' நனந்தலை உலகம் வளைஇ நேமியொடு
வலம்புரி பொறித்த மாதாங்கு தடக்கை
நீர்செல நிமிர்ந்த மாஅல்..... '' (அடி 1-3)

என முல்லைப்பாட்டு ஓவியமாகத் தீட்டுகின்றது.

எட்டுத்தொகை நூல்களும் திருமால் பற்றிய குறிப்புக்களைத் தருகின்றன. அவற்றுள் பரிபாடல் ஆறு நெடும் பாடல்கள் மூலம் அப்பெருமானைச் சிறப்பித்துப் பேசுகின்றது. ஆழ்வார் பாடல்களுள் காணும் அரும்பொருட் சிறப்புகளும், ஆசாரியர்கள் வகுத்த அற்புதத் தத்துவக் கோட்பாடுகளும் அவர்களுக்குப் பன்னூறு ஆண்டுகளுக்கு முன்பெழுந்த பரிபாடலில் பொதிந்து கிடக்கும் அருமையைக் காணுகின்றோம். எடுத்துக்காட்டாக,

'' தீயினுள் தெறல்நீ! பூவினுள் நாற்றம்நீ!
கல்லினுள் மணியும்நீ! சொல்லினுள் வாய்மைநீ!
அறத்தினுள் அன்புநீ! மறத்தினுள் மைந்துநீ!
வேதத்து மறைநீ! பூதத்து முதலும்நீ!
வெஞ்சுடர் ஒளியும்நீ! திங்களுள் அளியும்நீ!
அனைத்தும்நீ! அனைத்தின் உட்பொருளும்நீ! ஆதலின்
உறைவும் உறைவதும் இலையே.....
.....
பிறவாப் பிறப்பிலை பிறப்பித்தோர் இலையே! '' (3-63-72)

என்ற கடுவன் இளவெயினனார் பாடலைக் கூறலாம்.

ஆன்மாக்களுக்கு அருள் பாலிக்கும் இறைவனின் நிலைகளைப் பரம், வியூகம், விபவம், அந்தர்யாமி, அர்ச்சை என ஐந்து நிலைகளில் வைத்துப் பேசுவது வைணவம்.

பரிபாடலின் மூன்றாம் பாடல்,

'' செங்கண் காரி! கருங்கண் வெள்ளை
பொன்கண் பச்சை! பைங்கண்மால்! '' (வரி 81-82)

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

என விவரிக்கின்றது. இதனுள் சிவந்த கண்களையும் கரிய உடம்பினையும் உடைய வாசுதேவன், கரிய கண்களையும் வெண்ணிற உடம்பினையும் உடைய சங்கருடணன், செம்பொன் மேனியை உடைய பிரத்யும்நன், பசிய மேனியை உடைய அநிருத்தன் என நான்கு வியூக நிலைகளும் அவற்றின் நிறங்களுடன் குறிக்கப்படுகின்றன. இதனைப் பிற்காலத்து வந்த திருமழிசைப் பிரான் தமது திருச்சந்த விருத்தத்தில்,

" பாலின்நீர்மை செம்பொனீர்மை பாசியின்ப சும்புறம்
போலுநீர்மை பொற்புடைத்த டத்துவண்டு விண்டுலாம்
நீலநீர்மை யென்றிவைநி றைந்தகாலம் நான்குமாய்
மாலினீர்மை வையகம்ம றைத்ததென்ன நீர்மையே " (பா. 44)

என விதந்து கூறுகின்றமையைக் காணுகின்றோம்.

கலித்தொகையில் பலராமனைப் பற்றியும், திருமால் பற்றியும் குறிப்புக்கள் மிகுதியும் இடம் பெற்றுள்ளன. பாகவதக் கதைகள் சிலவும் குறிக்கப் பெறுகின்றன. 'மல்லரைச் சாய்த்த மால்' எனவும் (பா. 52) 'குதிரையை வாய் பகுத்திட்டுப் புடைத்த மாயோன்' எனவும் (பா. 103) 'புகழ் நேமித் திருமறுமார்பன்' எனவும் (பா. 104) குறிக்கப்பெறுகின்ற திருமால், அரும்பொருள் இசை கேட்டு அறிதுயிலில் ஆழ்ந்திருக்கும் காட்சியை,

" அரும்பொருள் மரபின்மால் யாழ்கேளாக் கிடந்தான்போல்
பெருங்கடல் துயில்கொள்ளும் வண்டுஇமிர் நறுங்கானல் "
(பா. 123)

எனப் படம் பிடித்துக் காட்டுகின்றார் 'முல்லைக் கவி' பாடிய நல்லந்துவனார். அப்பெருமானின் திருவடிகளைத் தலையினால் தொட்டுச் சத்தியம் செய்கின்ற வழக்கம் இருந்ததென்பதனை,

"மலையொடு மார்புஅமைந்த செல்வன் அடியைத்
தலையினால் தொட்டு உற்றேன் சூள்" (பா. 108)

என்ற பகுதி விளக்குகின்றது. இதனால் மக்களிடையே திருமால் வழிபாடு எத்தகைய சிறப்பினைப் பெற்றிருந்த தென்பதனை அறிய முடிகின்றது.

அகநானூற்றில் ஓரிரு சுவையான செய்திகள் இடம் பெறுகின்றன. அவற்றுள் ஒன்று கண்ணனின் ஆயர்பாடி விளையாடலைக் குறிக்கின்றது. யமுனையில் ஆய மகளிர் நீராடுகின்றனர். அப்பொழுது அங்கு வந்த கண்ணன் அம்மகளிரின்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

துகில்களைக் கவர்ந்துகொண்டு அருகிலிருந்த குருந்த மரத்தின்மேல் ஏறி நிற்கின்றான். அவ்வளவில் அவ்வழியே பலராமன் வருதல் கண்டு நீராடும் மகளிர் நாணி நிற்க, கண்ணபிரான் மூத்த நம்பி காணாவண்ணம் குருந்த மரத்தின் கிளைகளை வளைத்து அம்மகளிர்க்கு மறைப்பை உதவி அருளினான் (பா. 59).

இன்னொரு நிகழ்ச்சி! வேறு இராமாயணங்களில் இடம் பெறாதது! தமிழகத்திலும் பிற்காலங்களில் வழக்கற்றது! இராமன் இலங்கை மேல் படை கொண்டு சென்றபொழுது கோடிக்கரையில் நின்று தன் படைத் தலைவர்களோடு ஆலோசனை நடத்துகின்றான். ஆலோசனை ஓர் ஆலமரத்தின்கீழ் நடைபெறுகின்றது. அப்பொழுது அவ்வாலில் தங்கியிருந்த பறவைகள் இரைச்சலிடுகின்றன. ஆலோசனைக்கு இடையூறாக இருந்த அவ்விரைச்சலை இராமன் தன் ஆணையால் அடக்குகின்றான் (பா. 70).

இவ்வரிய குறிப்புக்களோடு மேலும் இரு செய்திகள் அகநானூற்றில் இடம் பெற்றுள்ளன. அவற்றுள் ஒன்று, திருவரங்கத்தில் கொண்டாடப்பெற்ற பங்குனி உத்திர விழா. இதனை உறையூர் முதுகூத்தனார் என்ற புலவர் குறித்துச் செல்லுகின்றார் (பா. 137). திருமாலின் பத்து அவதாரங்களில் ஒன்று பரசுராமாவதாரம். இதனை, மதுரை மருதன் இளநாகனார் குறித்துள்ளார் (பா. 220). இவைகளிலிருந்து திருமால் அவதாரக் கதைகள் தமிழகத்தில் பெரிதும் வழங்கி வந்ததோடு அவை மக்களின் வழிபாட்டிற்குரியனவாகவும் இருந்திருக்கின்றன என அறிகிறோம்.

புறநானூற்றுள் திருமாலைப் பற்றிய சிறந்த இரு செய்திகள் இடம் பெற்றுள்ளன. அவற்றுள் முதலாவது அசுரர் மறைத்த ஞாயிற்றைத் திருமால் மீட்டு உலகிருளை நீக்கினான் என்பது. சோழ நாடு பகைவரால் கைப்பற்றப்பட்டு நலிவெய்திய பொழுது சோழிய ஏனாதி திருக்கண்ணன் என்பவன் அப்பகை இருள் மாய வெற்றியாகிய கதிரவனைக் கொணர்ந்த செயலுக்குத் திருமாலின் செயல் உவமையாகக் கூறப்படுகின்றது (பா. 174).

பிற்காலத்தில் மறைந்துபோன இக்கதைக் குறிப்பினைக் கூறுகின்றவர் மாறோக்கத்து நப்பசலையார் என்ற புலவராவார்.

புறநானூற்றில் இடம் பெறும் இரண்டாவது குறிப்பு இராமாயண நிகழ்ச்சியாகும். ஊன்பொதி பசுங்குடையார் என்ற புலவர் சோழன் செருப்பாழி எறிந்த இளஞ்சேட்சென்னியைப்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

பாடிப் பரிசில் பெறுகின்றார். அவற்றுள் அரசரும் செல்வரும் அணியத் தக்க அணிகலன்களும் இருந்தன. அவற்றைப் பெற்ற புலவரின் வறிய சுற்றத்தார் அவ்வணிகலன்களை எவ்வெவ்வுறுப்பில் அணிய வேண்டுமென்பதை அறியாது தடுமாறினராம். இதனைக் கூற வந்த புலவர், இராவணன் சீதையை எடுத்துப் போகும்போது அடையாளத்திற்காக அவள் வீசிய அணி கலன்களை எடுத்த குரங்குகள் அவற்றை அணிய வேண்டிய உறுப்புக்களில் அணியாமல் எப்படித் தடுமாறினவோ அங்ஙனம் தம் சுற்றத்தார் தடுமாறினர் என்கிறார் (பா. 378). சீதை தன் அணிகலன்களைக் கழற்றி எறிந்த செய்தியைச் சுக்கிரீவன் இராமனிடம் கூறுவதாகக் கம்பன் குறிப்பிடுகிறான் (கம்.கிட்.6-3).

அடுத்துத் தொகை நூல்களில் ஒன்றான நற்றிணையில் கடவுள் வாழ்த்துப் பாடலே திருமாலைப் பற்றியதாக அமைந்து விடுகின்றது. பிற்காலத்தில் விரிவாகப் பேசப்படுகின்ற வைணவத்தின் சிறந்த தத்துவக் கூறுகள் இப்பாடலில் பொதிந்துள்ளமை நமக்கு வியப்பையும் மகிழ்வையும் ஒருசேர நல்குகின்றன. இப்பாடலைப் பாடியவர் பாரதம் பாடிய பெருந்தேவனார். கண்ணபிரானின் அவதார மகிமை கூறும் பாரதத்தைத் தமிழில் செய்தவராகையால் இப்பெரும் புலவர் செய்த பாடலில் சிறந்த பொருண்மை பொதிந்திருப்பது வியப்பன்று.

வேத முதல்வனாய், எல்லாவற்றிற்கும் முதற்காரணனாய், எல்லாவற்றுள்ளும் அந்தர்யாமியாய், எல்லாவற்றையும் தன்னுள் அடக்கிக் காப்பவனாய்த் திருமால் நிற்கும் நிலையினை இப்பாடல் விளக்குகின்றது. இதனைப் பிரதிபலிப்பது போல், திருமங்கை ஆழ்வாரின் திருப்பாசுரம் (6.6.3) அமைவதைக் காண்கிறோம். ஆழ்வார் விளக்குகின்ற சரீர - சரீரி பாவனையையே பெருந்தேவனாரும் அவருக்கும் முன்பே கூறியிருப்பது திருமால் வழிபாட்டின் செம்மையை அக்கால கட்டங்களில் இருந்தவாறே விளக்குவதாக அமைகின்றது.

களங்காய்க் கண்ணி நார்முடிச் சேரலைக் காப்பியாற்றுக் காப்பியனார் பாடுவதாக அமைவது பதிற்றுப்பத்தின் நான்காம் பத்து. இதன் முதற் பாடலிலேயே திருமால் வழிபாடு சிறப்புற் றிருந்தமையைக் கவிஞர் அழகுபடக் கூறுகின்றார்.

'குன்றுகளை உடையதும் கடலை ஆடையாக உடையதுமான இவ்வுலகின் மாந்தர் பலரும் தம் கைகளை உயர்த்தித் தம் குறைகளைக் கூறிக் கதறும் ஆரவாரம் நான்கு திசைகளிலும்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

ஒலிக்கின்றது. புனைவமைந்த தெளிந்த ஓசையை உடைய மணியை அடிப்பவர் 'கல்லென்ற' ஒலியை எழுப்புவர். உண்ணா விரதமிருந்த மக்கள் நீராடி வழிபாடியற்ற வருவர். அழகிய தாரினை அணிந்ததும் திருமகள் பொருந்தியதுமான மார்பினையும், ஒளி கொண்ட சக்கரப் படையினையும், துளசி மாலை அணிந்த சிறப்பினையும் உடையவன் திருமால். செல்வனாகிய அப்பெரு மகனை வணங்கிய பின்னர் அம்மக்கள் நெஞ்சம் நிறைவு பெற்றவராகத் தாந்தாம் வாழும் ஊர்களுக்குத் திரும்பிச் செல்வர்' (4:1-10). பல்வேறு ஊர்களிலிருந்தும் வேண்டுதலின் பொருட்டுத் தலைநகரிலிருந்த திருமாலின் கோயிலுக்கு மக்கள் பெருந்திரளாக வந்து அக்காலத்தில் வழிபாடியற்றி யிருக்கின்றனர் என்பதை அறிகிறோம்.

இரட்டைக் காப்பியங்கள் எனப் போற்றப்படுகின்ற சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகியவையும் திருமால் வழிபாடு குறித்த பல செய்திகளை நமக்குத் தருகின்றன. சிலப்பதிகாரத்தில் இடம் பெற்றுள்ள ஆய்ச்சியர் குரவைக் கூத்தினுள் பாடும் பாடல்கள் முதிர்ந்த பக்தி இலக்கியப் பாடல்களாகவே காட்சியளிக்கின்றன. கண்ணனின் மாயக் குழலிசையை மனங் கொள்ள நினைக்கின்றாள் ஒருத்தி. எனவே, தன் தோழியை விளித்து 'அந்த மாயன் நம்மிடம் இன்று வந்தால் அவனிடமிருந்து குழலிசையைக் கேட்கக் கூடுமல்லவோ' என வினவுகிறாள்.

" கன்றுகுணிலாக் கனியுதிர்த்த மாயவன்
இன்றுநம் ஆனுள் வருமேல் அவன்வாயில்
கொன்றையந் தீங்குழல் கேளாமோ தோழீ

பாம்பு கயிறாக் கடல்கடைந்த மாயவன்
ஈங்குநம் ஆனுள் வருமேல் அவன்வாயில்
ஆம்பலந் தீங்குழல் கேளாமோ தோழீ

கொல்லையஞ் சாரற் குருந்தொசித்த மாயவன்
எல்லைநம் ஆனுள் வருமேல் அவன்வாயில்
முல்லையந் தீங்குழல் கேளாமோ தோழீ! "

வாக்குக்கும் மனத்திற்கும் எட்டாதவன் இறைவன். அதாவது நம் கருவி கரணங்களின் தேடுதலுக்கு எட்டாதவனாய்-பக்குவப்பட்ட ஆன்மாக்களுக்குத் தானே எளிவந்து தோன்று பவன் அவன்! இந்த எளிவந்த தன்மையை - 'சௌலப்பியத்தைச்' - சிலப்பதிகார ஆய்ச்சியர் குரவைப் பாடல்கள் பேசுகின்றன.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

'இது என்ன மாயம்! பரம்பொருள் இவனென்றே அறுதியிட்டு அமரர் கணம் தொழுதேத்தும்படியாகத் தனக்குப் பசியென ஒன்றுமில்லாத பெருமான் உலகனைத்தையும் உண்டான். அப்படி உலகனைத்தும் உண்டவாய் ஆய்ச்சியர் வீடு புகுந்து வெண்ணெய் திருடி உண்ட வாய் என்பது பெரும் மாயமன்றோ! மூவுலகையும் அளந்த எம்பெருமானின் திருவடிகள் இரண்டும் நாடு நகரின்றி நாடோடிகளாய் நலிந்து நின்ற பாண்டவர்க்குத் தூதாய் நடந்தன என்றால் இந்த மாயம் மருட்கை யாகின்றதே' என ஆய்ச்சியர் குரவைக் கவிதைகள் பேசுகின்றன. மாயவன் சீர் கேளாத செவியும், அவன் பேரழகைக் காணாத கண்ணும், அவன் திருவடிகளை 'நாராயணா' எனத் துதித்து ஏத்திப் போற்றாத நாவும் பயனற்றனவாம்.

" மூவுலகும் ஈரடியான் முறைநிரம்பா வகைமுடியத்
தாவியசே வடிசேப்பத் தம்பியொடுங் கான்போந்து
சோவரணும் போர்மடியத் தொல்லிலங்கை கட்டழித்த
சேவகன்சீர் கேளாத செவியென்ன செவியே
திருமால்சீர் கேளாத செவியென்ன செவியே!

பெரியவனை மாயவனைப் பேருலகம் எல்லாம்
விரிகமல உந்தியுடை விண்ணவனைக் கண்ணும்
திருவடியும் கையும் திருவாயும் செய்ய
கரியவனைக் காணாத கண்ணென்ன கண்ணே
கண்ணிமைத்துக் காண்பார்தம் கண்ணென்ன கண்ணே!

மடந்தாழு நெஞ்சத்துக் கஞ்சனார் வஞ்சம்
கடந்தானை நூற்றுவர்பால் நாற்றிசையும் போற்றப்
படர்ந்தா ரணமுழங்கப் பஞ்சவர்க்குத் தூது
நடந்தானை ஏத்தாத நாவென்ன நாவே
நாராயணா வென்னா நாவென்ன நாவே! "

இப்பாடல்களில் திருவிக்கிரம அவதாரம், இராமாவதாரம், கிருஷ்ணாவதாரம் முதலான அவதாரச் சிறப்புக்களும், கண்டு மகிழத்தக்க அர்ச்சாவதாரமும் கூறப்படுகின்றன.

இரட்டைக் காப்பியங்களில் மற்றொன்றான மணிமேகலையில் ''சமயக் கணக்கர்தம் திறங் கேட்ட காதை''யில் பல்வேறு சமய வாதிகளிடையே ''வைணவ வாதியும்'' இடம் பெறுகின்றான்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

"காதல்கொண்டு கடல்வண்ணன் புராணம்
ஓதினன் நாரணன் காப்பென்று ரைத்தனன்"

என்பது அவன் கூறும் வாசகம். இங்குக் "காதல் - கொண்டு கடல்வண்ணன் புராணம் ஓதினன்" என்பதிலிருந்து அவன் அவனது தெய்வத்திடம் ஆழ்ந்த அன்புடையவனாக இருந்தமை புலப்படுகின்றது.

உலகப் பொதுமறை எனப் போற்றப்பெறுகின்ற திருக் குறளில்,

"மடியிலா மன்னவன் எய்தும் அடியளந்தான்
தாஅய தெல்லாம் ஒருங்கு" (610)

"தாம்வீழ்வார் மென்தோள் துயிலின் இனிதுகொல்
தாமரைக் கண்ணான் உலகு" (1103)

என்ற குறள்களில் திருமாலின் உலகளந்த செயலும், அவன் வீற்றிருக்கும் வைகுந்தமும் குறிக்கப் பெறுகின்றன. திருக்குறளோடு வைத்துப் பதினென்கீழ்க்கணக்கு நூல்கள் என்பவற்றுள்ளும் திருமாலைப் பற்றிய குறிப்புக்களைக் காண்கின்றோம். அவற்றுள் திரிகடுகம் என்ற நூலின் காப்புச் செய்யுளில், திருமாலின் உலகளந்த செயல், குருந்தம் சாய்த்த செயல், சகடம் உதைத்த செயல் ஆகியவை குறிக்கப்பெறுகின்றன. நான்மணிக்கடிகை என்ற நூலின் கடவுள் வாழ்த்துப் பாடலே திருமால் குறித்ததாகும்.

"பொருகடல் வண்ணன் புனை மார்பின்தார்" எனக் கார் நாற்பது என்ற நூலும், "தொல்மாண் குழாய் மாலையானைத் தொழலினிதே" என இனியவை நாற்பது என்ற நூலும், "மல்லர்க் கடந்தான் நிறம்போன்று இருண்டெழுந்தது கார்" என ஐந்திணை ஐம்பது என்ற நூலும் திருமாலைக் குறிக்கின்றன.

பதிற்றுப்பத்தின் ஏழாம் பதிகம் செல்வக் கடுங்கோவாழி யாதனை "மாயவண்ணனை மனனுறப் பெற்றவன்" எனக் குறிக்கின்றது. இளம்பெருவழுதி என்ற பாண்டியன் திருமாலிருஞ் சோலைத் திருமாலிடம் பக்தி உடையவனாக இருந்தமையைப் பரிபாடல் வாயிலாக அறிய முடிகின்றது.

இங்ஙனம் ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே தமிழ்ச் சமூகத்தில் உயர்ந்த இடத்தைப் பெற்றிருந்த வைணவம் சங்க காலத்தின் பின்பு தமிழகத்தில் ஏற்பட்ட ஆட்சி மற்றும் சமய மாற்றங்களால் சைவத்தைப் போலவே தாழ்வுற்று நின்றது.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

அவைதிக மதங்களென்றும், நீரிசுவர மதங்களென்றும் கூறப் பெற்ற சமண பௌத்த மதங்கள் தமிழகத்தில் தலை நிமிர்ந்து நின்றன. அவற்றுள்ளும் சமணம் மிகுந்த ஆதிக்கம் பெற்றிருந்தது.

புதுவதாகப் புகுந்த சமண பௌத்தக் கொள்கைகளை ஆவலோடு ஏற்ற தமிழ்ச் சமுதாயம் தனது புதிய மோகம் கழிந்ததும், தனது முந்தைய இறை நெறிக்கே திரும்புதற்குரிய சந்தர்ப்பத்தை எதிர்பார்த்து நின்றது. இவ்வளவில் பக்தி இயக்கமும் முகிழ்த்தெழுந்தது. இதனைத் தொடங்கி வெற்றி பெற்ற பெருமை திருநாவுக்கரசருக்கும், திருஞானசம்பந்தருக்குமே உரியது. பல்லவன் மகேந்திரவர்மனைச் சைவனாக்கியதன் விளைவாகத் தமிழகத்தின் வடபகுதியைத் திருநாவுக்கரசரும், பாண்டியன் நெடுமாறனைச் சைவனாக்கியதன் விளைவாகத் தமிழகத்தின் தென்பகுதியைத் திருஞானசம்பந்தரும் பழந்தமிழ்ச் சமய மரபுகளுக்கு மீட்டனர். சைவமொன்றே தனித்து நின்று போராடி வென்றதெனலாம்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

2. ஆழ்வார்களும் அவர்தம் அருட்பாக்களும்

திருமாலின் கல்யாண குணங்களிலே ஆழ்ந்து, அப்பெருமானின் சீர் பாடிச் சிறப்பெய்தியவர்கள் ஆழ்வார்கள் எனப்பட்டனர். இப்பெருமக்களைப் பன்னிருவர் எனவும், ஆண்டாள் நாச்சியார், மதுரகவியார் ஆகிய இருவரையும் விடுத்துப் பதின்மர் எனவும் கூறும் மரபுகள் உண்டு. எனினும் பன்னிருவர் என்பதே பெருவழக்காகும்.

ஆழ்வார்களின் கால நிலை பற்றிப் பல ஆய்வுகள் நிகழ்ந்துள்ளன. பொதுவாக அவர்களைக் கி.பி. 6-ஆம் நூற்றாண்டுக்கும் கி.பி. 9-ஆம் நூற்றாண்டுக்கும் இடைப்பட்ட காலத்தினராகக் கொள்ளலாம். ஆட்சியாளர்களும், அவர்களைச் சார்ந்தவர்களும் மக்கள் மொழியாகிய தமிழைப் புறந்தள்ளி வடமொழிக்கு எல்லாவித வாய்ப்புக்களையும் அளித்துவந்த காலத்தில் நாயன்மார்களைப் போலவே ஆழ்வார்களும் அதனை ஆண்டவனைப் போற்றிப் பாடுதற்குரிய அரிய ஊடகமாகக் கொண்டனர்.

இருண்ட காலத்திலிருந்து வீழ்ச்சியுறத் தொடங்கிய தமிழ் மொழியும் தமிழ்ப் பண்பாடும் இன்றளவும் தொடரவே செய்கின்றது. இது குறித்துப் பேராசிரியர் ஔவை. துரைசாமிப் பிள்ளை அவர்கள் தமது, ''சைவ இலக்கிய வரலாறு'' என்ற நூலில், ''இக்காலத்தில் வாழ்ந்த வேந்தர்களும், வேதியர்களும், மடத் தலைவர்களும், சமயப் பணியாளரும் பிற செல்வர்களும், வடமொழி நமது நாட்டில் வளம் பெறப் பரவுவதற்கு முயன்றுள்ளனரேயன்றி நாட்டு மொழி வளம் பெறுதற்கு முயற்சி யொன்றும் செய்தாரல்லர். பெரும் செல்வ நிலையங்களாய்ச் சிறந்து வந்த கோயில்களிலும் தமிழ் பயிலுவதற்கு இடம் வகுக்கப் பட்டதாகத் தெரியவில்லை. தமிழ்நாட்டில் தமிழ்மொழி செல்வாக்கிழந்து சிறப்புக் குன்றிய காலம் இந்தக் காலமாகும். இந்தக்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

காலத்தில் வீழ்ந்த செந்தமிழ் இருபதாம் நூற்றாண்டின் செம்பாதி கழிந்தும் தலையெடுத்து நாட்டவருடைய அரசியல், வாணிகம், சமயம் என்பன முதலிய துறைகளில் சிறந்த இடம் பெற்று, இலக்கிய வளம் பெறும் நிலைமையினைப் பெறாதாயிற்று.'' என மனம் வருந்தி எழுதுகின்றார்கள். ஆராய்ச்சிப் பேரறிஞர் சதாசிவப் பண்டாரத்தார் அவர்களும் தமது ''பாண்டியர் வரலாறு'' எனும் நூலில், ''அரசாங்க மொழி, வேறொரு மொழியாகப் போய்விடவே, நம் தாய்மொழியாகிய தமிழ் ஆதரிப்பாரற்று வீழ்ச்சி எய்தியது. தமிழ்க் கலை, தமிழர் நாகரிகம், பிற சிறந்த பண்புகள் ஆகிய எல்லாம் சிதைந்தழிந்துபோயின. தமிழ்நாட்டில் முன்னோர்களால் நிறுவப் பெற்று இடையீடின்றி நடைபெற்றுவந்த அறச் செயல்கள் பலவும் அழிக்கப்பட்டுப்போயின. பௌத்தம் சமணம் ஆகிய பிற சமயங்களும் பிற மொழியில் எழுதப்பெற்ற நூல்களும் அரசாங்கத்தின் பேராதரவு பெற்று விளங்கின'' என அக்காலத்தைச் சித்தரிக்கின்றார்.

இங்ஙனம் வேற்று நாட்டவரும், மொழியினருமாகிய களப்பிரர்களும் பல்லவர்களும் புகுத்திய வடமொழி, ஆல்போல் தழைத்தோங்கியது. பின் வந்த பாண்டியர்களும் சோழர்களும் கூட வடமொழி வல்லாரை வட தேயத்திலிருந்து பெருந்திரளாகக் கொணர்ந்து அவர்களுக்குப் பொன்னையும் பொருளையும் வாரிக் கொடுத்து வளப்படுத்தினர். இறையிலி நிலங்களையும் ஊர்களையும் காணிக்கையாக்கினர். கோயில்கள் வடமொழி கற்கும் கூடங்களாயின. அங்ஙனம் கற்போருக்கு அனைத்துச் சலுகைகளும் வழங்கப்பட்டன. ஆனால், தமிழ் கற்பதற்கு நாட்டு மக்கள் அனுமதிக்கப்பெறவில்லை. தாய்ப்பாலோடு கலந்துண்ட தமிழைப் புறக்கணிக்கும் நன்றி கொன்ற செயலைப் பல மன்னர்கள் நாணாமல் செய்தனர். இத்தகு இழிதகைமை தம் நாகரிகம், பண்பாடு, மொழி ஆகியவற்றைக் குறைத்து மதிப்பிடும் மனப் போக்கு - தமிழ்ச் சமூகத்தையும் பற்றிக்கொண்டு இன்றளவும் விடுவதாயில்லை.

சமண, பௌத்த மதங்களின் வளர்ச்சியால் தமிழ் இசையும் கூத்தும் நலிந்துபோகவும், வடமொழி ஆதிக்கத்தால் தமிழே தாழ்ந்து நிற்கவுமான இக்காலகட்டத்தில் நாயன்மார்களும் ஆழ்வார்களும், இசைத் தமிழையும், இயற்றமிழையும் இறைவனையே இசைவிக்கும் இனிய பாக்களாக்கித் தமிழகமெங்கும் பரப்பினர். நாயன்மார்களின் நற்றமிழுக்கு இறைவன் நர்த்தனமாடினான். ஆழ்வார்களின் அழகுத் தமிழில் அழகிய மணவாளன் ஆனந்தங்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

கொண்டான். வேத ஒலிகள் செய்ய முடியாத அருஞ் செயல்களை ஆழ்வார்களும் நாயன்மார்களும் தம் இசைப்பாக்களால் இயற்றிக் காட்டினர்.

ஆழ்வார்களில் முதலாழ்வார்கள் எனக் கூறப்பெறுகின்ற பொய்கையாழ்வார், பூதத்தார், பேயார் எனும் மூவரும் தொண்டை நாட்டைச் சார்ந்தவர்களாகக் குறிக்கப்பெறுகின்றனர். அவர்கள் கையாண்ட யாப்பு வெண்பாவாகவும், உணர்வில் சைவ வைணவ சமரசமுடையவர்களாகவும் இருப்பதைக் காண்கிறோம். எனவே, புகழ்பெற்ற முதல் மகேந்திர வர்மனின் தந்தையும், பரம வைணவனுமான சிம்மவிஷ்ணு எனும் பல்லவ மன்னன் காஞ்சியைத் தலைநகராகக் கொண்டு தொண்டை நாடு மற்றும் சோழ நாடுகளை உள்ளடக்கிய தமிழகத்தின் பகுதியைக் கி.பி. 615-வரை ஆட்சி செய்த காலமே இம்முதலாழ்வார்களின் காலமாதல் கூடும். எனினும், பேராசிரியர் சுப்பு ரெட்டியார் அவர்கள் தமது "வைணவமும் தமிழும்" என்ற நூலில் குறித்துள்ளபடி, கி.பி. 7-ஆம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியும் எட்டாம் நூற்றாண்டின் முற்பகுதியுமாக ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றதனையும் ஏற்று ஆராய்தல் வேண்டும்.

திருமழிசையாழ்வாரும் தொண்டை நாட்டில் உள்ள திருமழிசை எனும் திருத்தலத்தைச் சார்ந்தவராவார். இவர் முதலாழ்வார்களைச் சந்தித்தவர் எனக் குறிக்கப்பெறுவதால் அவ்வாழ்வார்கள் காலத்தவரே என்பதற்கு ஐயம் இல்லை. முதலாழ்வார்கள் காலம் மாறுமாயின் இவர் வாழ்ந்த காலமும் மாறுதலுக்குட்படும். இவரும் சிம்மவிஷ்ணுவின் காலத்தவர் என்றால், கி.பி. 615 வரை இருந்தவர் எனக் கொள்ளலாம். இவர் பல சமயங்களிலும் உழன்று இறுதியில் வைணவத்தைச் சார்ந்தவர் எனக் கூறுவர். இவரைச் 'சிவவாக்கியர்' என்ற சித்தரோடு சேர்த்துக் குழப்புவர். ஊன்றி உணர்வார்க்கு அவரினின்றும் இவர் வேறானவர் என்பது தெளிவாகும். முதல் ஆழ்வார் மூவரின் அருளிச்செயல்களை முதல் மூன்று திருவந்தாதிகளாகக் கொள்வர். திருமழிசையாரின் அருளிச் செயல்களைத் 'திருச்சந்தவிருத்தம்' 'நான்முகன் திருவந்தாதி' என இரு பகுதிகளாகக் கொள்வர். இவர் மிகுந்த சமயவாதங்களில் ஈடுபட்டார். இதனை,

> " அறியார் சமணர் அயர்த்தார் பௌத்தர்
> சிறியார் சிவப்பட்டார்"

என்ற வரிகளால் அறியலாம் என்பர். இவரை வீரவைணவர் எனலாம்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

திருமங்கை ஆழ்வார் இரண்டாம் நந்திவர்ம பல்லவ மன்னன் நென்மேலி, மண்ணை முதலான இடங்களில் நிகழ்ந்த போர்களில் பாண்டிய மன்னன் அரிகேசரி பராங்குச மாறவர்மனை வெற்றி கொண்ட செய்தியைத் தமது கச்சிப் பரமேசுவர விண்ணகரப் பதிகத்திற் பாடியிருக்கின்றார். எனவே, இவரது காலம் பல்லவ மன்னனின் ஆட்சிக் காலமாகிய கி.பி. 710 - கி.பி. 775-ஆம் ஆண்டுகளுக்குட்பட்டதாம். இவரது அருளிச் செயல்கள், பெரிய திருமொழி, திருக்குறுந் தாண்டகம், திருநெடுந் தாண்டகம், திருவெழுகூற்றிருக்கை, சிறிய திருமடல், பெரிய திருமடல் என ஆறு பிரபந்தங்களாம். திருமாலை, திருப்பள்ளி எழுச்சி ஆகிய இரு பிரபந்தங்களை அருளிச்செய்த தொண்டரடிப்பொடி ஆழ்வாரும் திருமங்கை ஆழ்வாரின் சம காலத்தவர் எனக் கொள்வர் ஆய்வாளர். இங்ஙனமே 'பெருமாள் திருமொழி' எனும் பிரபந்தத்தை அருளிச் செய்த குலசேகர ஆழ்வாரும் இக்காலத்தினரே எனப் பேராசிரியர் மு. இராகவய்யங்கார் முதலானவர்கள் கொள்கின்றனர்.

திருப்பாணாழ்வார் 'முதலாழ்வார்கள் காலத்தவர்' எனவும், தொண்டரடிப் பொடியாழ்வார் காலத்தவர் எனவும் ஆய்வாளர்கள் இருவேறு கருத்துக்களைக் கூறுகின்றனர். உண்மை காண மேலும் ஆய்வு தேவை. இவ்வாழ்வார் திருவரங்கப் பெருமான்மீது பாடிய பத்துப் பாசுரங்கள் கொண்ட 'அமலனாதிபிரான்' என்ற பிரபந்தம் நாலாயிரத்தில் முதலாயிரத்தில் இடம் பெற்றுள்ளது.

பெரியாழ்வார் எனும் விஷ்ணு சித்தர் பாண்டியன் நெடுஞ் சடையன் பராந்தகன் காலத்தவர் (கி.பி. 765-790) எனவும் சீமாறன் சீவல்லபன் (கி.பி. 835-862) காலத்தவர் எனவும் அறிஞர் இருவேறு கருத்துகளைக் கூறுகின்றனர். இவர் அருளிச்செய்தவை திருப்பல்லாண்டு, பெரியாழ்வார் திருமொழி எனும் இரு பிரபந்தங்களாகும். இவர்தம் திருமகளாராகக் கருதப் பெறும் கோதை நாச்சியார், திருப்பாவை, நாச்சியார் திருமொழி எனும் இரு பிரபந்தங்களை அருளிச் செய்துள்ளார். பெரியாழ்வார் காலமே இப்பெருமாட்டியின் காலமுமாகும்.

வைணவப் பெருமக்களில் மிகச் சிறப்பாகப் போற்றிக் கொண்டாடப் பெறுபவர் நம்மாழ்வார். காரிமாறன், சடகோபன், வகுளாபரணர், பராங்குசன் என்ற பெயர்களும் இவருக்கு உண்டு. இவரது அருளிச்செயல்கள் திருவாய்மொழி, திருவாசிரியம், திருவிருத்தம், திருவந்தாதி என நான்கு பிரபந்தங்களாகத் திகழ்கின்றன. இப்பிரபந்தங்கள் முறையே சாமவேதம், யசுர்வேதம்,

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

இருக்குவேதம், அதர்வண வேதங்களின் சாரம் என அறிஞர் கூறுவர். இவ்வாழ்வாரை அவயவியாகவும் ஏனைய ஆழ்வார்களை அவயவங்களாகவும் கூறும் மரபு உண்டு. இவர் வாழ்ந்த காலம் கி.பி. 9-ஆம் நூற்றாண்டின் முற்பகுதி எனக் கூறுவர். இவரின் தலைமைச் சீடராகத் திகழ்ந்தவர் மதுரகவி ஆழ்வார். இவர் தம் ஆசானின் அருகில் இருந்து சுமார் நாலரை ஆண்டுகள் அவர் வெளிப்படுத்திய திருவாய்மொழியை ஓலையில் எழுதினார் என்பர். குருபரம்பரைப்படி நம்மாழ்வார் முப்பத்தைந்து ஆண்டுகள் இவ்வுலகில் இருந்தாரென அறிகின்றோம். அதன்பின் ஐம்பது ஆண்டுகள் மதுரகவியாழ்வார் இவ்வுலகில் இருந்து தம் ஆசானின் அருட்பாடல்களையும் அரும்புகழையும் பரப்பிவந்தார் எனக் கூறுவர். மதுரகவியார், ''கண்ணிநுண் சிறு தாம்பு'' எனும் பதினொரு பாசுரங்கள் கொண்ட பிரபந்தத்தைத் தம் குருநாதர்மீது அருளிச் செய்தார். இது நாலாயிரத்தில் முதலாயிரத்தின் இறுதியில் சேர்க்கப்பட்டுள்ளது.

பன்னிரு ஆழ்வார்களின் பிரபந்தங்களும், திருவரங்கத் தமுதனார் இயற்றிய இராமானுச நூற்றந்தாதியும் இணைந்த தொகுப்பைத் தற்போது நாலாயிர திவ்வியப் பிரபந்தம் என வழங்கி வருகின்றோம். இதனை முதலில் தொகுத்துக் கொடுத்தவர் நாதமுனிகள் என்ற ஆசாரியர் ஆவார். இவர் வீரநாராயண புரத்தில், சொட்டைக் குலத்தில் பிறந்த ஈச்சுவர முனிகளின் மைந்தராவார்.

நாதமுனிகள் தமக்குக் கிடைத்த பாசுரங்களை நான்கு தொகுதிகளாக்கினார். ஒவ்வொரு தொகுதியிலும் ஏறத்தாழ ஆயிரம் பாடல்கள் இடம் பெற்றன. இவற்றை இசைப்பா, இயற்பா என மேலும் இரு பெரும் பிரிவுகளாகச் செய்து, அவற்றுள் 'இசைப்பா'வில் முன்று தொகுதிகளும் இயற்பாவில் ஒரு தொகுதியும் இடம் பெறுமாறு செய்தார். இசைப்பாவில் முதலாயிரம், பெரிய திருமொழி, திருவாய்மொழி ஆகியவை அடங்கியுள்ளன. இயற்பாவில் பத்துப் பிரபந்தங்கள் இடம் பெற்றுள்ளன.

இசைப்பாவின் முதலாயிரத்தில் பெரியாழ்வார் திருமொழி 473-ம்; ஆண்டாள் நாச்சியார் திருமொழி 143-உடன் திருப்பாவை 30 பாசுரங்களும்; குலசேகரப் பெருமானின் பெருமாள் திருமொழி 105 பாசுரங்களும்; திருமழிசைப் பிரானின் திருச்சந்த விருத்தங்கள் 120-ம்; தொண்டரடிப் பொடியாழ்வாரின் திருமாலையின் 45 பாசுரங்களுடன் அவருடைய திருப்பள்ளி எழுச்சியின் 10-பாசுரங்களும்; திருப்பாணாழ்வாரின் அமலனாதி பிரான்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

பாசுரங்கள் 10-ம்; மதுர கவியாழ்வாரின் கண்ணிநுண் சிறுதாம்பின் பாசுரங்கள் 11-ம் ஆக ஒன்பது பிரபந்தங்களுக்கு 947 பாசுரங்கள் தொகையாகின்றன.

இசைப்பாவின் இரண்டாம் தொகுதி திருமங்கை ஆழ்வாரால் அருளிச் செய்யப் பெற்ற பெரிய திருமொழி ஆகும். இதனுள் பெரிய திருமொழியின் 1054 பாசுரங்களும், திருக்குறும் தாண்டகத்தின் 20 பாசுரங்களும், திருநெடுந்தாண்டகத்தின் 30 பாசுரங்களும் ஆக மூன்று பிரபந்தங்களுக்குமாகப் பாசுரங்கள் 1134 ஆகின்றன. இனி, இசைப்பாவின் மூன்றாம் தொகுதியாக இடம் பெறுவது நம்மாழ்வாரின் திருவாய் மொழியாகும். இதில் 1102 பாசுரங்கள் அடங்கியுள்ளன. எனவே, இசைப்பாவில் இடம் பெற்றுள்ள 13 பிரபந்தங்களுக்குமாகப் பாசுரங்கள் (947 + 1134 + 1102) 3183 எனத் தொகையாகின்றது.

இனி இயற்பாவைக் காண்போம். இதனுள் முதலாழ்வார் மூவரின் திருவந்தாதிகள் முன்றனுக்கும் 300 பாசுரங்களும், திருமழிசையாரின் நான்முகன் திருவந்தாதியில் உள்ள 96 பாசுரங்களும், நம்மாழ்வாரின் திருவிருத்தப் பாசுரங்கள் 100-உடன், திருவாசிரியம்-7, மற்றும் பெரிய திருவந்தாதி 87 பாசுரங்களும், திருமங்கை ஆழ்வாரின் திருவெழுகூற்றிருக்கை, சிறிய திருமடல், பெரிய திருமடல் ஆகிய மூன்று பிரபந்தங்கள் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு பாசுரமாக 3 பாசுரங்களும் ஆக இயற்பாவில் இடம் பெற்றுள்ள பாசுரங்களின் மொத்தம் 593 எனவாகின்றன.

மேற்கண்டவாறு இசைப்பாவின் 3183 பாசுரங்களையும் இயற்பாவின் 593 பாசுரங்களையும் கூட்டிய தொகை 3776 எனவாகி 4000 என்ற தொகைக்கு 224 பாசுரங்கள் குறைந்து உள்ளன. இந்நிலை நாத முனிகள் காலத்தியதா என்பதை அறிய முடியவில்லை. பிற்காலத்தில் திருவரங்கத்தமுதனார் இராமானுசர்மீது பாடிய 'இராமானுச நூற்றந்தாதி' இயற்பாவுடன் சேர்க்கப்பெற்றது என்பதனைக் 'கோயிலொழுகு' என்ற நூல்வாயிலாக அறிகின்றோம். முதலாயிரத்தில் 'கண்ணிநுண் சிறுத்தாம்பு' என்ற நூல் எங்ஙனம் அடியாராகிய நம்மாழ்வாரைப் பாடியதாக அமைகின்றதோ அங்ஙனமே இராமானுச நூற்றந்தாதியும் இயற்பா இறுதியில் வைத்து ஓதப்பெறுவதாயிற்று.

இருபத்து மூன்று பிரபந்தங்களுக்கு 3776 என்ற எண்ணிக்கை கொண்ட பாசுரங்களில் சிறிய திருமடல், பெரிய திருமடல் என்பவற்றை முறையே 38 பாசுரங்களாகவும், 80 பாசுரங்களாகவும்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

கொள்ளப் பாசுரங்களின் தொகை 3892 ஆகின்றது. (3774 + 118) இத்துடன் இராமாநுச நூற்றந்தாதியின் 108 பாசுரங்களையும் கூட்ட 4000 என்ற தொகை (3892 + 108) பூர்த்தியாகின்றது.

மேற்கண்டவாறு நாலாயிரம் என்ற எண்ணிக்கையைச் சரி செய்வதற்காக திருமடல்களைப் பாசுரங்கள் 118 என வலிந்து கொள்ள வேண்டுவதில்லை என்பது அறிஞர் கருத்து. இது குறித்துப் பேராசிரியர் சுப்பு ரெட்டியார் அவர்கள், ''யாப்பிலக்கணப்படி திருமடலை ஒரே பாட்டாகக் கொள்வதே பொருத்தம். காரணம் ஒவ்வொன்றும் ஒவ்வொரு கலிவெண்பாவாலான பிரபந்தம். ஆகவே, திவ்வியப் பிரபந்தத்தின் பாசுரங்கள் 3776 என்றும் இராமாநுச நூற்றந்தாதிப் பாசுரங்கள் சேர்ந்து அகத் தொகை 3884 ஆகின்றது என்றும் அறியக் கிடக்கின்றது. இத் தொகை மிகுதி பற்றி நாலாயிரம் என்றே வழங்கப்பெறுகின்றது என்று கொள்ளலே ஏற்புடைத்து. நாலாயிரத்துக்குச் சில பாசுரங்கள் குறையினும் கூடினும் நாலாயிரம் என்று கொள்ளலே ஏற்புடைத்து'' எனத் தமது 'வைணவமும் தமிழும்' என்ற நூலில் கூறியிருப்பதை அறிஞர் மனங் கொளல் வேண்டும்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

3. குலசேகர ஆழ்வார் வரலாறும் காலமும்

ஆழ்வார்களுக்குள் அரசராயிருந்து ஆழ்வாரானவர் இருவர். ஒருவர் திருமங்கை ஆழ்வார் மற்றவர் குலசேகர ஆழ்வார். திருமங்கையாழ்வார் தொடக்கத்தில், சோழ மண்டலத்திலிருந்த 'திருவாலிநாடு' என்ற சிறுபகுதிக்குத் தலைவராகவும் சோழ மன்னனின் படைத் தலைவர்களுள் ஒருவராகவும் இருந்து அடியார் ஆனவர். ஆனால், குலசேகரரோ பேரரசராயிருந்தவர். திருமால் பித்துக்கொண்டு அரசையே துறந்தார். அவர்தம் வாழ்வு பற்றிய செய்திகள் சுவையானவை. அவர்தம் காலம் பற்றியவை ஆராய்தற்குரியவை.

குலசேகர ஆழ்வார் வாழ்க்கை வரலாறுபற்றிப் பொதுவாகக் கூறப்படும் செய்திகளைப் பார்ப்போம். இவர் சேரநாட்டில் கொல்லி நகரைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்துவந்த 'திடவிரதன்' என்னும் அரசனின் மகன். இவர்தம் தாய் நாதநாயகி. திடவிரதன் தம்பதியருக்குத் திருமாலின் அருளால் பிறந்தவர் குலசேகரர். இவர் மாசி மாதம் புனர்பூச நட்சத்திரத்தில் திருமாலின் 'கௌத்துவ மணியின்' அம்சமாகத் தோன்றியவர். குருபரம்பரைப்படி இவர் கலி 28-ஆவது ஆண்டில் (கி.மு. 3075) பிறந்தார் என்பர். சிறு வயதிலேயே அரசுரிமையை வெறுத்துத் திருவரங்கம் சென்று திருக்கோயிற் பணியில் ஈடுபட்டிருந்தார் எனக் கூறுவர்.

குலசேகரர் அரசராக இருந்த காலத்தும் சிறந்த திருமாலடியாராகவே இருந்தார். ஒரு சமயம் ஒரு பௌராணிகர் இராமாயணத்தை இவர் முன்னர்ச் சொல்லிக் கொண்டிருக்கும்போது 'ஜனஸ்தானத்தில்' இராமபிரானைக் கரதூடணர் பதினாயிரக் கணக்கான அரக்கர்களுடன் வந்து வளைத்துக்கொண்டதை உணர்ச்சிப் பெருக்குடன் விவரித்தார். கேட்டுக்கொண்டிருந்த குலசேகரர் தம் நிலை மறந்தார். தமக்கு முன்னால் கூறப்படுவது

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

கதை என்பதையும் மறந்தார். இராம பிரானைப் பதினாயிரக்கணக்கான அரக்கர் வளைத்துக்கொண்டனர் என்ற எண்ணமொன்றுமே நின்றது. பிரானின் தனிமையும் அரக்கரின் தொகையும் ஆழ்வார் நெஞ்சத்தில் அனலை மூட்டியது. 'எம்பிரான் தனித்து நிற்பதோ' என்ற ஏக்கம் எழுச்சியை ஊட்டியது. எழுந்தார்! வில்லும் வாளும் ஏந்தி, 'எம்பிரானுக்குத் துணையாவேன்' எனப் புறப்படத் தயாரானார். புராணம் கூறிவந்தவர் நிலைமையை உணர்ந்தார். விரைவாக 'இராமபிரான் தனித்து நின்றே அனைவரையும் கொன்றொழித்து எம்பிராட்டியையும் இளைய பெருமாளையும் காணப் புறப்பட்டார்' எனக் கூறிக் கதையைத் தொடர்ந்தார். அடியாரும் ஆவேசம் அடங்கி அகம் மகிழ்ந்து கதையைக் கேட்கத் தொடங்கினார்.

மேற்கண்ட நிகழ்ச்சிக்குப் பிறகு இராமாயணம் கூறி வந்தவர் குலசேகரரின் மனநிலை அறிந்து அவர் உணர்ச்சி வசப்படா வண்ணம் கதையைக் கூறி வந்தார். ஆனால், இறைவன் திருநோக்கை அறிந்தவர் யார்? ஆழ்வாரின் பெருமையை அகிலம் அறியச் செய்ய வேண்டும் என்று அரங்கன் திருவுள்ளம் கொண்டான் போலும். ஒருநாள் இராமாயணம் கூறிவந்தவர் வர முடியாத நிலை ஏற்பட்டது. எனவே, அவருடைய மகன் அன்று கதை கூற வந்தார். இவர், முன்னம் நடந்ததை அறியாதவராகலின் கதையை விரிவாக உணர்ச்சியுடன் கூறி வரலானார். இராவணன் சீதாபிராட்டியார் கதறிக் கண்ணீர் வடிக்குமாறு இரக்கமின்றி எடுத்துச் செல்லுகின்றான். இப்பகுதியை விரிவாகப் பிரவசனம் செய்யலானார். குலசேகரர் பிராட்டியாரின் துயரை மனங் கொண்டார். எம்பெருமானும், இளைய பெருமாளும் இல்லாத நேரத்தில் இந்த அடாத செயலைச் செய்த இராவணன்மேல் சீற்றம் பொங்கியது. தாம் யுத்தசன்னத்த ரானார். படைகளையும் புறப்படக் கட்டளையிட்டார். அரசரின் வார்த்தைக்கு மறு வார்த்தையுண்டோ? அனைவரும் செய்வதறியாது திகைத்தனர். அரசரின் அருகு சென்று பேசப் பயந்தனர். எனவே, அவரைப் பின்தொடர்ந்தனர். பக்தி பிரவாகத்தில் தம்மை மறந்திருந்த மன்னர் இலங்கையை நோக்கிக் கடலில் நடக்கத் தொடங்கினார். அப்பொழுது ஓர் அதிசயம் நிகழ்ந்தது. இராமபிரான் சீதா பிராட்டியாரோடும் தோன்றினார். ஆழ்வாரைத் தழுவிக் கொண்டார். தாம் இராவணாதி அரக்கரைக் கொன்று சீதையை மீட்டு வந்த விவரத்தைக் கூறியருளினார். தெளிவு பெற்ற மன்னர் தம் இருப்பிடம் திரும்பினார்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

அரசரின் அரவணையான் பற்றைக் கேள்வியுற்ற அடியார் கூட்டம் அரண்மனையில் பெருகலாயிற்று. அரசரின் அன்றாடக் கடமைகள் புறக்கணிக்கப்பட்டன. அரசவைக்குப் பதில் அடியார் அவை கூடியது. அரங்கனின் அவதார மகிமைகள் பேசப்பட்டன. அருளாளனைப் பற்றிய ஆடலும் பாடலுமாக அரண்மனை அடியார் திருக்கூட்டத்திற்கு அடையாக் கதவமுடைய தாயிற்று. அமைச்சர்களும் ஆன்றோர்களும் கூடிச் சிந்தித்தனர். எவ்வகையிலாவது அடியார் குழுவிலிருந்து அரசரைப் பிரிக்க வேண்டும், அப்பொழுதுதான் அரசர் ஆட்சிக்குரிய கடமைகளைச் செய்வார் - செய்விக்கலாம் என முடிவு செய்தனர். அதற்கென ஒரு திட்டம் வகுத்தனர். நாட்டின் நலன் கருதி அதனைச் செயல்படுத்தவும் துணிந்தனர். ஒரு பெரும் நன்மைக்காகச் சிறிய பொய்ம்மைகள் செய்வது தீதில்லை எனத் தீர்மானித்தனர். ஆனால், நடந்ததென்ன? அடியார் பெருமையே அகிலம் அறிய அரங்கேறியது.

அரண்மனையில் சிறந்த செல்வங்களுள் ஒன்றாக ஓர் அரதன மாலை இருந்தது. அதனை அரசவை தீர்மானித்தபடி ஒளித்து வைத்தனர். அது களவு போய்விட்டதாக அனைவர்க்கும் அறிவிக்கப் பெற்றது. அரசரும் அறிந்தார். அவ்வளவில் அமைச்சர் சிலர் அரசரை அணுகினர். அரதன மாலைக்களவு பற்றிப் பேசினர். அரண்மனைக்கு வந்து போகும் அடியவரில் யாரோ ஒருவர்தான் களவினைச் செய்திருக்க வேண்டும்; எனவே, அடியார் குழு அரண்மனைக்கு வருதலைத் தவிர்க்க வேண்டும் என விண்ணப்பித்தனர். அரசர் அதிர்ந்தார். அடியார் திருக்கூட்டம் திருட்டுக் கூட்டமாவதெப்படி? அப்படி இருக்கவே முடியாது. எம்பெருமானின் இன்னருள் வேண்டி அவனை அனவரதமும் நினைந்திருக்கும் மனத்தில் உலகியல் பற்றுவதெங்ஙனம்? அதிலும் ஓர் அற்பப் பொருளைத் திருட நினைவெழுமா? அப்படி அடியார் கூட்டத்தை நினைப்பதே மகா பாவம்! ஆனால், இதனை உலகிற்கு உணர்த்துவது எங்ஙனம்? அரசர் சிந்தித்து ஒரு முடிவெடுத்தார். முடிவைக் கேட்ட அமைச்சர்களும் ஆன்றோர்களும் நடுங்கினர். செய்வதறியாது திகைத்தனர்.

அடியார்களின் நேர்மையை நிலைநாட்டுவதற்காக அரசரே சத்தியம் செய்ய முன் வந்தார். அதுவும் சாதாரணமாகவல்ல! பசியோடு குடத்தில் இட்டு வைத்த பாம்புகளைத் தொட்டுச் சத்தியம் செய்வதாகக் கூறினார். இறைவன் அடியவர்கள் தவறு செய்யார்! அப்படியாதேனும் நடந்திருந்தால் அதற்குரிய தண்டனையைத்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

தாமே ஏற்பதுதான் நியாயம். ஏனென்றால், அவர்தானே அடியார்களை அரண்மனைக்குள் அனுமதித்தது! அமைச்சர்கள் 'மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல்' என்ற பழமொழிக்கேற்ப நின்றனர். பாம்புகளை இட்ட குடம் வந்தது. அரசர் தம் திருக்கரத்தினைக் குடத்தினுள் வைத்தார். அனந்தாழ்வான் அழகிய மணவாளனின் குடையும் பாயுமல்லவாக வன்றோ சேவை செய்கின்றான்! அவன்வழிவந்த அரவங்கள் அடியார் திருக் கரத்தினைத் தீண்டவும் வல்லவோ? ஆழிப்படையானுக்கு அடிமைத்திறம் பூண்ட அரசர் பெருமானின் செயல் அமைச்சர்களின் மனத்தை உருக்கியது. அடியற்ற மரம் போல் அவர் காலடியில் வீழ்ந்து கதறினர். உண்மையை ஒளிக்காமல் உரைத்தனர்.

குலசேகரர் அமைச்சர்களைக் கோபித்துக் கொள்ளவில்லை. ''உண்டியே, உடையே உகந்திடும் மெய்யில் வாழ்க்கையை மெய்யெனக் கொள்ளும்'' இவ்வையகத்தோடு இசைந்து போவது இனி முடியாதென முடிவு செய்தார். அருட்பித்துக் கொண்டிருக்கும் தமக்கும் பொருட்பித்துக் கொண்டிருக்கும் இவ்வுலகியலுக்கும் ஒட்டுறவென்பது இயலாததென உணர்ந்தார். 'ஐயனே! அரங்கா!' என்று அழைத்து அப்பெருமானின் திருவடிகளை நாடிப் பெறும் இன்பமே இன்பம் என முடிவு செய்தார். தமது முடிவின்படி தம் மகளுக்கு முடி சூட்டினார். 'இளை' எனும் பெயர் பூண்ட தம் மகளை இறைவனுக்கே திருமணம் செய்துகொடுத்தார். தாம் துறவு பூண்டார்! குடப் பாம்பில் கை விட்டதனை மணக்கால் நம்பிகள்,

> '' ஆரம் கெட்டபரன் அன்பர்கொள் ளாரென்று அவர்களுக்கே
> வாரங் கொடுகுடப் பாம்பிற்கை யிட்டவன் மாற்றலரை
> வீரங் கெடுத்தசெங் கோற்கொல்லி காவலன் வில்லவர்கோன்
> சேரன் குலசே கரன்முடி வேந்தர் சிகாமணியே ''

எனப் புகழ்ந்து பாடுகின்றார். இனி, மேற்கண்ட செய்திகளைப் பற்றிச் சிந்திப்போம்.

குலசேகரர் சேர மரபைச் சேர்ந்த பெரு வேந்தர் எனப் பிறர் கூறுகின்றனரே தவிர அவர் தம்மைப் பற்றி ஓரிடத்தும் கூறிக் கொள்ளவில்லை. அப்பெருமான் பாடிய பெருமாள் திருமொழிப் பாசுரங்களில் தம்மை, 'கொல்லி காவலன்' 'கூடல் நாயகன்' 'கோழிக்கோன்' (பெருமாள்.திரு.2.10) எனவும், 'கொங்கர் கோன்' (பெ.தி.3.9) எனவும் கூறுகின்றமையைக் காண்கிறோம். இவரைச் சேர மன்னர் எனப் பிறர் கூறுவது எவ்வளவிற்குப் பொருந்துமென்பது தெரியவில்லை.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

இவர் தம் மகளைத் திருவரங்கர்க்கு மணம் முடித்தார் எனக் 'கோயிலொழுகு' 'திவ்ய சூரி சரிதம்' ஆகியவை கூறுகின்றன. இதைப் பற்றிப் பேராசிரியர் தெ.பொ. மீனாட்சி சுந்தரனார் அவர்கள் தமது குலசேகரர் என்ற நூலில், ''கன்னி கழியாதே காலமாய் விட்டது கண்டு இவ்வாறு கட்டி விட்டனரோ என்பதை உயர்ந்தோரையே கேட்டறிதல் வேண்டும்'' (பக். 17) என எழுதுகின்றார்கள். நம்மைப் பொறுத்தவரை தெ.பொ. மீ அவர்களை விட உயர்ந்தவர்கள் யார் இருக்கின்றார்கள்? சான்றோர் தம் கருத்தைப் பிறர் மனம் நோகா வண்ணம் எடுத்துரைக்கும் இயல்பிது. அதுவும் சமயம் பற்றிய நம்பிக்கைகளைக் குறித்துக் கருத்துக்களை இவ்வண்ணமே கூறுவர்.

இனி, குலசேகரர் இராமாயணக் கதையைக் கேட்டு இரு முறை உணர்ச்சி வசப்பட்ட வரலாறு எவ்வளவிற்கு உண்மை என்பதைச் சிந்திப்போம். குலசேகரப் பெருமானுடைய பாசுரங்களில் மிகவும் விஞ்சி நிற்பது இராம பக்தியாகும். ஓர் அரச குடியில் பிறந்து அரசாண்ட குலசேகரரைச் சக்ரவர்த்தித் திருமகனாக அவதரித்த பெருமான், பிறர் துயர் போக்கத் தாம் பெருந்துன்பங்களை ஏற்றுக் கொண்ட தியாகம் பெரிதும் கவர்ந்திருக்க வேண்டும். தேவியோடும் தம்பியோடும் கான் போந்து பட்ட துயரம் கல் நெஞ்சையும் கரைக்கும் தன்மையதன்றோ? அப்புருஷோத்தமன் எளிவந்தோரையும் இன்னலுற்றோரையும் உறவுகளால் உதறப் பெற்று உதாசீனப்படுத்தப் பெற்றோரையும் உற்றாராக, உடன் பிறப்பாகக் கொண்டு அன்பு செலுத்தியமை ஆழ்வார் நெஞ்சில் ஆழப் பதிந்திருக்க வேண்டும்.

அதன் வெளிப்பாடே 'கண்ணபுரத்தொளிர் காகுத்தன் தாலாட்டு' (பெ.தி.8) 'தனயன் கான்புகத் தசரதன் புலம்பல்' (பெ.தி.9), இராமாயணக் கதைச் சுருக்கம் (பெ.தி. 10) முதலான பாசுரங்கள். இத்தகு அன்பு வலையில் அகப்பட்டிருக்கும் அடியார் அவ்விராம சரிதங் கேட்டபொழுது உணர்ச்சி வசப்பட்டுத் தம்மை மறந்தார் எனக் கொள்வது ஏற்புடையதே. பேரன்பினில் காரண காரியம் தேடுவது பேதைமையே! இராம சரிதங் கேட்டுக் குலசேகரர் தம்மை மறந்து அழுதிருக்கலாம்; ஆர்ப்பரித்து எழுந்து ஆயுதங்களைக் கூட எடுத்திருக்கலாம். பக்தி என்னும் பித்துக் கொண்டவரிடம் இம்மெய்ப்பாடுகள் நிகழ்ந்தன எனக் கூறுவதில் உண்மை உண்டு. ஆனால், அவர் படை திரட்டிக் கொண்டு கடலில் இறங்கினார் எனக் கூறுவது, கூறுகின்றவரின் ஆர்வத்தினால் எழுந்த மிகை உரை எனவே படும்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

குலசேகரர் அடியார் பொருட்டுக் குடப் பாம்பில் கை விட்டுச் சத்தியம் செய்தார் என்ற செய்தி பெரும்பாலும் உண்மையாகவே இருக்க வேண்டும். ஏனெனில், பிற்காலச் சோழர் காலத்திலிருந்து இன்றுவரை ஒரு மெய்ம்மையை நிலைநாட்டச் சத்தியம் செய்கின்றவர்கள் கொதிக்கும் எண்ணெயில் கை விட்டும், பழுக்கக் காய்ந்த இரும்புக் கம்பிகளைக் கையில் எடுத்தும் சத்தியம் செய்துள்ளனர். சோழர் காலத்திய கல்வெட்டுச் சான்றுகள் இதனை உறுதிப்படுத்துவதுடன் இந்நூலாசிரியர் நேரிற் பார்த்த சாட்சியாகவும் உள்ளார். எனவே, குலசேகரர் சத்தியம் செய்த முறை நம்புவதற்குரியதே.

அடியார்களுக்கும் தமக்கும் வேற்றுமை உண்டாகுமாறு செய்ய முயன்ற அமைச்சர் முதலானவருடைய செயலின் பின்னணியை அரசர் உணர்ந்திருப்பார். தம்முடைய தெய்வப் பித்து நடைமுறை அரசு கடமைகளைப் பெரிதும் பாதித்தமை அவருக்கு நன்கு விளங்கி யிருக்கும். அரங்கனுக்கு அடிமை பூண்டு அவனது ஆட்சிக்குட்பட்ட பிறகு அதற்குப் புறம்பாகத் தாமும் ஓர் ஆட்சியை நடத்துவது இயலாதென்பதை நன்கு உணர்ந்துகொண்டார். அரங்கனின் அருளில் ஆழ்ந்து பித்தும் பேயுங் கொண்டவர் போல் அவர் நடந்து கொள்வது உலகத்தார்க்கு நகைப்பிற்குரியதே! அதேபோல் பிறந்த பயன் உணராப் பேதை மானிடக் கும்பலும், கானலும், கனவும் போன்றுள்ள இந்தப் பொய் மாயப் புவன வாழ்க்கையைப் போற்றிக் களிக்கின்ற அதன் புலனற்ற செயலும் அரசர்க்கு நகைப்பிற் குரியதாயிற்று. இதனை,

> " பேய ரேயெனக் கியாவரும் யானுமோர்
> பேய னேயெவர்க் கும்இது பேசியென்
> ஆய னே!அ ங்கா!என் றழைக்கின்றேன்
> பேய னாயொழிந் தேனெம் பிரானுக்கே! "
>
> (பெருமாள்.தி. 3-8)

என அருமையாகப் பாடுகின்றார் அரசர். இத்தகு மனநிலையை இக்குடப்பாம்புச் சத்தியத்தின் பின்பே அவர் பெற்றிருக்க வேண்டும். இதுவே அவர் துறவேற்றுதற்குரிய பின்னணியாகவும் அமைந்திருக்கக் கூடும். ஒத்து வராத ஒன்றை உதறிவிடுவது உயர்ந்தோர் செயலாகும்; குலசேகரரின் உலகியல் வாழ்வு குறித்து நாம் அறிவது இவ்வளவே!

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

குலசேகரரின் காலம்

குலசேகரர் தம்மைக் 'கொல்லிகாவலன்' 'கூடல்நாயகன்' 'கோழிக்கோன்' 'கொங்கர்கோன்' - என நான்கு நாடுகளைத் தொடர்புபடுத்தித் தம் பாசுரங்களில் கூறிக் கொள்ளுகின்றார். வறிதே தம்மை யாரும் இங்ஙனம் பெருமைப்படுத்திக் கொள்ளார். அதுவும் ஆழ்வார் வாக்கில் பொய்ம்மை இருப்பதற்கிடமில்லை. இங்ஙனம் இவர் செல்வாக்கோடு இருந்த காலத்தைக் கி.பி. 600க்கு முன்பிருந்த களப்பிரர் காலமாகிய இருண்ட காலத்திலோ கி.பி. 890-க்குப் பிறகு வளர்ந்த சோழப் பேரரசு காலத்திலோ வைத்துக் கணிக்க முடியாது. எனவே, கி.பி. 600-லிருந்து கி.பி. 890 வரையிலான தமிழக வரலாற்றுப் பின்புலத்தை நன்கு ஆராய்ந்து பார்த்தால் குலசேகரர் வாழ்ந்த காலத்தைக் கணக்கிடலாம். இவரது ஆயுட்காலம் 67 ஆண்டுகள் என மூவாயிரப்படி குருபரம்பரை குறிப்பிடுகின்றது.

தமிழகத்தைப் பொறுத்தவரை மேலே குறிப்பிட்ட கி.பி. 600க்கும் கி.பி. 890க்கும் இடைப்பட்ட காலத்தில் இரு பேரரசுகளே இருந்தன. வடக்கே பல்லவர்களும், தெற்கே பாண்டியர்களுமாக ஆட்சி செய்தனர். இந்தக் காலகட்டத்தில் சேர மன்னர்கள் யாரும் குறிப்பிட்டுக் கூறும்படியாகப் பெருவேந்தராக இருந்ததற்குரிய சான்றுகள் இல்லை. எனவே, நான்கு நாடுகளின் நாயகமாகக் கூறிக் கொள்ளும் குலசேகரரரைச் 'சேர மன்னர்' எனக் கொள்வோரின் கூற்று வலிமையற்றதாகின்றது. குலசேகரர்கூடத் தம்மைச் 'சேரலன்' என்றோ 'வஞ்சியர்கோன்' என்றோ கூறிக்கொள்ளவில்லை என்பதையும் கருத்தில் கொள்ளவேண்டும். இப்படி இருக்க, இவரைச் சேரர் குடிச் செம்மலாகக் கூறுவது ஏன் என்பது ஆய்விற்குரியது.

பல்லவர் அரச மரபைச் சிறப்புறத் தொடங்கி வைத்தவன் சிம்ம விஷ்ணு (கி.பி. 575-615) எனும் மன்னனாவான். இவன் காஞ்சியைத் தலைநகராகக் கொண்டு தொண்டை நாடு, சோழ நாடு ஆகியவற்றை ஆட்சி செய்தான். இவன் சிறந்த வைணவன். இவன் காலத்தில் தான் முதல் மூவர்கள் மூவரும், திருமழிசையாரும் வாழ்ந்ததாகச் சில அறிஞர்கள் கூறுவர். இவனுக்குப் பின் ஆட்சியேற்ற இவன் மகன் முதலாம் மகேந்திரவர்மன் (கி.பி. 615-630). இவன் சமணனாக இருந்தவன். இவனைச் சைவனாக மாற்றியதன் மூலம் திருநாவுக்கரசர் பெருமான் வடதமிழகம் முழுவதையும் சமண சமயத்தின் பிடியிலிருந்து விடுவித்தார். இவனுக்குப் பின் முதலாம் நரசிம்மவர்மன் (கி.பி. 630-668) பட்டமேற்றான். பெருவீரனான

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

இவன் காலத்திலேதான் பரஞ்சோதியார் என்ற சிறுத்தொண்ட நாயனாரும், திருஞான சம்பந்தப் பெருமானுடன் சேர்ந்து சைவம் சிறக்கப் பணிபுரிந்தனர். இப்பல்லவ மன்னனின் மகன் இரண்டாம் மகேந்திரன் (கி.பி. 668-670) சிறிது காலமே ஆட்சி செய்து இறந்தான்.

முதலாம் நரசிம்மவர்மன், இரண்டாம் மகேந்திரன் ஆகிய இப்பல்லவ மன்னர்கள் காலத்தில் பாண்டிய நாட்டைச் சடையவர்மன் சேந்தன் செழியன் (கி.பி. 625-640) மாற வர்மன் அரிகேசரி என்ற நின்றசீர் நெடுமாறன் (கி.பி. 640-670) ஆகியோர் ஆட்சி செய்து வந்தனர். இவர்களுள் மாறவர்மன் அரிகேசரியைச் தான் திருஞானசம்பந்த மூர்த்திகள் சமண சமயத்திலிருந்து சைவ சமயத்திற்கு மாற்றியருளினார். அதற்குப் பெருந்துணையாக இருந்தவர்கள் பாண்டிமாதேவி மங்கையர்க்கரசியாரும், பாண்டி நாட்டு அமைச்சர் குலச்சிறையாருமாவர். இதன் மூலம் தென்தமிழகம் சமண சமயப் பிடியினின்றும் மீண்டது. மேற்குறிப்பிட்ட பல்லவ பாண்டிய மன்னர்களின் காலத்தில் சேர சோழ நாடுகள் இவர்களின் ஆட்சிக்குட்பட்ட சிற்றரசுகளாகவே இருந்தன. எனவே, இக்காலத்தில் (கி.பி. 600-670) குலசேகரர் தனியரசு செலுத்தி வாழ்ந்திருக்க வாய்ப்பில்லை.

மேற்குறிப்பிட்ட காலத்திற்குப் பிறகு பல்லவ நாட்டை முதலாம் பரமேசுவரவர்மன் (கி.பி. 670-685), இராசசிம்மன் என்ற இரண்டாம் நரசிம்மவர்மன் (கி.பி. 686-705), இரண்டாம் பரமேசுவரவர்மன் (கி.பி. 705-710) ஆகியோர் ஆட்சி செய்தனர். இவர்கள் அனைவரும் சிறந்த சிவபக்தராயும் பெருவேந்தராகவும் இருந்தனர். சைவராயினும் வைணவ சமயத்தையும் பாதுகாத்துப் பல திருமால் ஆலயங்களையும் உருவாக்கினர். இவர்கள் காலத்தில் பாண்டிய நாட்டில் கோச்சடையன் ரணதீரன் (கி.பி. 670-710) என்ற பாண்டிய மன்னன் ஆட்சி செலுத்திவந்தான். வேள்விக்குடிச் செப்பேடுகள் மூலம் "இவ்வேந்தன் சேர நாட்டையும் சோழ நாட்டையும் கருநாடக தேயத்தையும் கொங்கு நாட்டையும் கைப்பற்றித் தனக்குத் திறை செலுத்துமாறு செய்திருத்தல் வேண்டும் என்பது நன்கறியக் கிடக்கின்றது." இதனால் இக்கால கட்டத்திலும் குலசேகரர் சேரப்பெரு வேந்தராயிருந்து ஆட்சி நடத்தியிருக்க வாய்ப்பில்லை.

பல்லவ நாட்டில் கி.பி. 710 முடிய ஆட்சி செய்த இரண்டாம் பரமேசுவர வர்மனுடன் சிம்ம விஷ்ணுவின்வழி வந்த மன்னர் பரம்பரை அற்றுப் போய்விடுகின்றது. எனவே, சிம்மவிஷ்ணுவின் தம்பியான பீமவர்மனின்வழி வந்த இரணியவர்மனின் மகன்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

இரண்டாம் நந்திவர்ம பல்லவ மல்லன் (கி.பி. 710-775) ஆட்சிக் கட்டிலேறினான். பரம வைணவனான இம்மன்னன் நீண்ட காலம் ஆட்சி செய்தான். இவனைக் காசக்குடிப் பட்டயம் 'அரிசரணபரன்' எனவும், தண்டன் தோட்டப் பட்டயம் 'முகுந்தன் திருவடிகளைத் தவிர வேறு ஒன்றிற்கும் அவன் தலை வணங்கவில்லை' எனவும் கூறுகின்றன. இம்மன்னன் ஆட்சி செய்த இக்காலத்தில் பாண்டிய நாட்டை மாறவர்மன் அரிகேசரி பராங்குசன் ஆட்சி செய்து வந்தான் (கி.பி. 710-765). இப்பாண்டிய மன்னன் சிறந்த சிவபக்தன் என்பதை வேள்விக்குடிச் செப்பேடுகளால் அறிகின்றோம். இவனுக்கும் பல்லவ மல்லனுக்கும் தொடர்ந்து பல போர்கள் நடந்தன. சிலவற்றில் பாண்டியனும் சிலவற்றில் பல்லவனும் வெற்றி பெற்றிருக்கின்றார்கள். பல்லவன், 'மண்ணை', 'கருவூர்', 'நென்மேலி' முதலிய இடங்களில் பாண்டியனை வென்ற செய்தியைத் திருமங்கை ஆழ்வார் தமது திருப்பரமேச்சுர விண்ணகரப் பதிகத்தில் கீழ்க்கண்டவாறு குறிப்பிடுகின்றார்.

1. நிரந்தவர் மண்ணையில் புண்ணுகர் வேல்நெடு
வாயி லுகச்செரு வில்முனநாள்
பரந்தவன் பல்லவர்கோன் பணிந்தபர
மேச்சுர விண்ணக ரம்மதுவே.
(2.9.3)

2. உலகுடை மன்னவன் தென்னவனைக் கன்னி
மாமதிள் சூழ்கரு வூர்வெருவப்
பலபடை சாயவென் றான்பணிந் தபர
மேச்சுர விண்ணக ரம்மதுவே.
(2.9.7)

3. விடைத்திறல் வில்லவன் நென்மெலியில் வெரு
வச்செரு வேல்வலங் கைப்பிடி
படைத்திறல் பல்லவர் கோன்பணிந் தபர
மேச்சுர விண்ணக ரம்மதுவே.
(2.9.8)

சிறந்த வைணவனாயிருந்த பல்லவ மல்லனின் வெற்றியை அவன் காலத்தில் வாழ்ந்தவரான திருமங்கை ஆழ்வார் இங்ஙனம் பாடியதை அப்பல்லவ வேந்தனுடைய உதயேந்திரச் செப்பேடுகளும் (Indian Inscriptions Vol. II. No. 74) உறுதி செய்கின்றன. இப் போர்களெல்லாம் கொங்கு நாடு, சோழ நாடு ஆகியவற்றின் மேலாண்மை குறித்த போர்களே. இவற்றிற்காக இருபெரு வேந்தர்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

போராடிக்கொண்டிருந்த காலத்தைத் தம்மைக் 'கொங்கர்கோன்' 'கோழிக்கோன்' எனக் கூறிக் கொள்ளும் குலசேகரர் சேர வேந்தனாக வீற்றிருந்த காலம் எனக் கொள்ள முடியுமா?

இரண்டாம் நந்திவர்ம பல்லவ மல்லனுக்குப் பின் அவனுடைய மகன் தந்திவர்மன் (கி.பி. 775-825) பல்லவ நாட்டின் அதிபதி ஆனான். இவனும் தந்தையைப் போலவே சிறந்த வைணவனாக இருந்தான். ''இவன் செந்தர்மரைக் கண்ணனான திருமாலின் அவதாரமானவன்'' எனப் பட்டயங்கள் பகர்கின்றன. இவனுடைய தந்தையான பல்லவ மல்லனின் ஆட்சிக் காலத்திலேயே பாண்டிய நாட்டின் அரியணை ஏறியவனான நெடுஞ்சடையன் பராந்தகன் (கி.பி. 765-790) இத்தந்திவர்மனின் காலத்திலும் வலிமைமிக்க மன்னனாயிருந்தான். இவனே புகழ் பெற்ற வேள்விக்குடிச் செப்பேடுகளையும், சீவரமங்கலச் செப்பேடுகளையும், ஆனைமலை, திருப்பரங்குன்றம் முதலானவிடங்களில் கிடைத்துள்ள கல்வெட்டுக்களையும் வெளியிட்டவனாவான். இவைமட்டும் கிடைத்திருக்கவில்லையென்றால் தமிழகத்தின் வரலாறு இருண்ட காலத்தில் மட்டுமல்லாமல் அதற்குப் பின்பும் இருண்டே இருந்திருக்கும்.

நெடுஞ்சடையன் பராந்தகன், ஆயிரவேலியயிரூர், புகழியூர் முதலான இடங்களில் அதியமானைப் போரில் புறங்கண்டான். மேலும் அதியனுக்கு உதவ வந்த சேரனையும் பல்லவனையும் வென்று துரத்தினான். 'தோல்வியுற்ற கொங்கர் கோமானைக் களிற்றொடும் பிடித்துவந்து மதுரையில் சிறைவைத்துக் கொங்கு நாட்டைத் தன்னடிப்படுத்திக் 'கொங்கர்கோன்' எனப் புகழப் பெற்றான். 'சோழ நாட்டையும் காவிரியின் தென்கரையிலுள்ள பெண்ணாகடத்தில் நிகழ்ந்த போரில் பல்லவனை வென்று கைக் கொண்டான்' என வேள்விக்குடிச் செப்பேடுகள் கூறுகின்றன. (Epigraphia Indica Vol. XVII. No. 16)

பாண்டிய மன்னர் அனைவரும் சைவராயிருக்க, இவன்மட்டும் வைணவ சமயப் பற்று மிக்குடையவனாயிருந்தான். இவன் காலத்தில் கொங்கு நாடு, சேர நாடு, சோழ நாடு ஆகியவை பாண்டியரின் ஆட்சிக்குட்பட்டிருந்தமையைத் தெளிவான வரலாற்றாதாரங்கள் தெரிவிக்கின்றன. எனவே, இக்காலத்தில் குலசேகரர் தனிப்பெருஞ் சேர மன்னராக இருந்தார் எனக் கூற வாய்ப்பில்லை.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

தந்திவர்மன் காலத்தில், நெடுஞ்சடையன் பராந்தகனுக்குப் பிறகு, இரண்டாம் இராசசிம்மன் (கி.பி. 790-792) முதலாம் வரகுணன் (கி.பி. 792-835) ஆகியோரும் பாண்டிய மன்னராக இருந்தனர். இவர்களுள் இரண்டாம் இராச சிம்மனைப்பற்றிச் சின்னமனூர்ச் செப்பேடுகள் பெயரை மட்டும் குறிக்கின்றனவே தவிர வேறு செய்திகள் எதுவும் இவனைக் குறித்துக் குறிப்பிடவில்லை. மிகக் குறுகிய காலமாகிய இரண்டாண்டுகள் மட்டும் இவன் அரியணையில் இருந்திருக்கின்றான். இவனுக்குப் பின்பு வந்தவனே வரகுண மகாராசன் எனக் கூறப்படுகின்ற முதலாம் வரகுணன். இவன் சிறந்த சிவபக்தன். மணிவாசகப் பெருமான் இக்காலத்தில் வாழ்ந்தவரெனக் கூறுவர். இவனையே வாதவூரடிகள் தமது திருச்சிற்றம்பலக் கோவையாரில், "வரகுணனாந்தென்னவன்" (306) எனவும், "மயலோங் கிருங்களியானை வரகுணன்" எனவும் குறித்துச் செல்லுகின்றார். "பெரிய அன்பின் வரகுண தேவர்" எனப் பட்டினத்தடிகள் பாராட்டுகின்றார். நம்பியாண்டார் நம்பியும் கோயிற்றிருப் பண்ணியர் விருத்தத்தில் இவ்வரகுணனைப் பாராட்டிப் பேசுகின்றார்.

வரகுணனைக் "கொற்றவர்கள் தொழு கழற் காற்கோ வரகுண மகாராசன்" எனச் சின்னமனூர்ச் செப்பேடுகள் புகழ்வதற்கேற்பச் சோழ நாடு மட்டுமல்லாமல் பல்லவ நாட்டின் தென்பகுதியையும் தனதாக்கிக் கொண்டான். சேர நாடும் கொங்கு நாடும் இவன் ஆணைக்குட்பட்டிருந்தன எனக் கூற வேண்டுவதில்லை. எனவே, கி.பி. 600 தொடங்கி இவ்வரகுண மகாராசன் வாழ்ந்த கி.பி. 835 வரை குலசேகரர், கொங்கு நாடு, சோழ நாடு, பாண்டிய நாடு ஆகியவற்றைத் தன்னடிப்படுத்து ஆண்ட சேர மன்னராக இருந்திருக்க முடியாது! கி.பி. 835லிருந்து கி.பி. 890 வரையிலான காலத்தில் இருந்திருக்க முடியுமா என ஆய்வது இன்றியமையாததாகின்றது.

பாண்டியன் வரகுண மகாராசனின் மகன் சீமாறன் சீவல்லபன் (கி.பி. 835-862) தன் தந்தைக்குப் பின் ஆட்சிக்கட்டில் ஏறினான். இவனுக்கு ஏகவீரன், பரசக்கர கோலாகலன், அவனிபசேகரன் என்ற பட்டப் பெயர்கள் உண்டு. இவனைச் சிற்றண்ணவாயில் கல்வெட்டொன்று "பார்முழுதாண்ட பஞ்சவர்குலமுதல் - ஆர்கெழுவைவேல் அவனிபசேகரன் - சீர்கெழு செங்கோல் சீவல்லவன்" எனப் புகழ்கின்றது. இம்மன்னன் விழிஞத்தில் சேரனையும், குடமூக்கில் சோழன், பல்லவன் முதலானோரையும் வெற்றிகொண்டான் எனச் சின்னமனூர்ச் செப்பேடுகள்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

உணர்த்துகின்றன. மேலும் இவன் காலத்தில், இவன் தந்தை வரகுண மகாராசன் காலத்திலேயே முடிசூடியவனும் இவனைத் தெள்ளாற்றுப்போரில் வெற்றி கண்டு இவன் ஆட்சிக்குட்பட்டிருந்த தொண்டை மண்டலத்தை மீட்டுக் கொண்டவனுமாகிய மூன்றாம் நந்திவர்மன் (கி.பி. 825-850) பல்லவ மன்னனாக ஆட்சி செய்து வந்தான்.

மிகுந்த ஆற்றல் சான்ற மன்னனாயிருந்த பாண்டியன் சீமாறன் சீவல்லபனையே தெள்ளாற்றுப் போரில் வெற்றி கொண்டதனால் மூன்றாம் நந்திவர்மனின் பத்தாம் ஆட்சி ஆண்டு முதல் வெளியிடப்பட்ட எல்லாக் கல்வெட்டுக்களிலும் இவன் "தெள்ளாறு எறிந்த நந்திவர்மன்" என்றே குறிக்கப்படுகின்றான். சிறந்த சிவபக்தனாயிருந்த இவனைச் சுந்தரமூர்த்தி சுவாமிகள்,

" கடல் சூழ்ந்த உலகெல்லாம் காக்கின்ற பெருமான்
காடவர்கோன் கழற்சிங்கன் அடியார்க்கும் அடியேன்"

எனத் திருத்தொண்டத் தொகையில் சிறப்பித்துப் பாடுகின்றார். மேலும், இவனுக்குக் கப்பம் கொடாது எதிர்த்த சோழனுக்குத் துணை வந்த பாண்டியன், சேரன் ஆகியோரை வெற்றி கொண்டான் என்ற செய்தியைத் தேவாரமும், நந்திக்கலம்பகமும் கீழ்க்கண்டவாறு விளக்குகின்றன:

"மண்ணுலகம் காவல் பூண்ட
உரிமையால் பல்லவர்க்குத் திறைகொடா
மன்னவரை மறுக்கஞ் செய்யும்
பெருமையாற் புலியூர்ச்சிற் றம்பலத்தெம்
பெருமானைப் பெற்றா மன்றே"

சுந்தரர் தேவாரம், கோயில் - 4

" தம்பியர் எண்ணமெல்லாம் பழுதாக
வென்ற தலைமான வீரதுவசன்
செம்பியர் தென்னர் சேர ரெதிர்வந்து
மாயச்செரு வென்ற பாரிமுடிமேல்."

நந்திக் கலம்பகம், செய் - 81

மேற்குறிப்பிட்ட செய்திகளால் பல்லவப் பேரரசும், பாண்டியப் பேரரசும் சேர, சோழ, நாடுகளை யார் வசப்படுத்திக் கொள்வது என்ற போட்டி காரணமாகவே போரிட்டுக் கொண்டன என்றால் குலசேகரர் சேர மன்னராயிருந்து, 'கூடல்நாயகன்', 'கோழிக்கோன்' எனக் கூறிக் கொள்ளுமளவிற்குப் பெருமை பெற்றிருந்தது எங்ஙனம் சாத்தியமாகும்?

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

தெள்ளாறெறிந்த நந்திவர்மனுக்குப் பின்பு அவன் மகன் நிருபதுங்கவர்மன் (கி.பி. 850-880) பல்லவ மன்னனானான். இவன் ஆட்சியின் முதற்பகுதியில் மேற்குறிப்பிட்ட பாண்டியன் சீமாறன் சீவல்லபனும், பிற்பகுதியில் அவன் மகன் இரண்டாம் வரகுணனும் (கி.பி. 862-880) ஆட்சி செய்தனர். இவர்கள் காலத்திலும் ஆதிக்கப் போட்டி காரணமாகப் பெரும் போர்கள் நிகழ்ந்தன. அவற்றுள், குடமூக்கில் நடந்த போரும், அரிசிலாற்றங்கரைப் போரும் குறிப்பிடத்தக்கன. இவற்றுள் முதற் போரில் பாண்டியனும், இரண்டாவது போரில், அதாவது அரிசிலாற்றங்கரைப் போரில் பல்லவனும் வெற்றி பெற்றனர். இத்தொடர் போர்களால் இரு வல்லரசுகளுமே தளர்வெய்தின. இறுதியாகத் திருப்புறம்பியம் என்ற இடத்தில் ஏறத்தாழக் கி.பி. 880-ல் நடந்த போரில் பல்லவ பாண்டியப் பேரரசுகள் வீழ்ந்தன. அவற்றின் வீழ்ச்சியில் பிற்காலச் சோழப் பேரரசு தளிர்த்தது. எனவே, கி.பி. 600-லிருந்து தொடர்ந்து கி.பி. 880 வரையிலான காலகட்டத்தில் எந்தச் சேர மன்னனும் தன்னைக் 'கொங்கர்கோ', 'கோழிக்கோன்', 'கூடல்நாயகன்', 'கொல்லிகாவலன்' .எனக் கூறிக்கொள்ளுமளவிற்குச் சிறப்புடையவனாக இருந்திருக்க முடியாது! அங்ஙனமாயின் குலசேகரர் யார், அவர் வாழ்ந்த காலம் யாது - என்ற வினாக்களுக்குக்கு விடைதான் யாது?

பொதுவாக நம் முன்னோர்கள் வரன்முறையாக நிகழ்ச்சிகளைப் பதிவு செய்து வைக்க வேண்டும் என்ற 'வரலாற்று உணர்வு' இல்லாதவர்கள். ஆனால், தமக்குக் கிடைத்த சிறு செய்திகளை வைத்துக்கொண்டு நம்ப முடியாத கதைகளை உருவாக்குவதில் வல்லவர்கள். இந்த வல்லமையும், வடபுலப் புராணக் கதைஞர்களின் மூலமே இவர்களுக்குக் கிடைத்திருக்கின்றது. இதனைச் சங்க கால நூல்களையும் பிற்கால நூல்களையும் ஒப்பிட்டுப் பார்த்துத் தெரிந்துகொள்ளலாம். வேத மதத்தை எதிர்த்துப் புரட்சி செய்த சமண பௌத்தங்கள் அவ்வேத மதத்தவர் புராணப் புனைவுகளைப் போன்றே தாமும் புனை கதைகள் பலவற்றை உருவாக்கினர். இங்ஙனம் போட்டி போட்டுக் கொண்டு உருவாக்கிய கதைக் கூறுகளோடே அவை தென்னாடு புகுந்தன. இருண்ட காலத் தமிழகம் அவற்றை எதிர்கொண்டது. இத்தகு கதைகளுக்குப் பழக்கப்படாத தமிழ் மக்கள் அவற்றை வியப்புடனும் ஆர்வத்துடனும் ஏற்றுக்கொண்டனர். கதை கேட்பவர்கள் குழந்தைகளைப் போன்ற ஆர்வமுடையவரானால் கதை சொல்லுபவரின் உற்சாகத்திற்குக் கேட்க வேண்டுவதில்லை.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

எப்படியோ உள்ளதை உள்ளவாறு அழகுபடுத்திக் கூறும் சங்ககால மரபு அழிந்து, உள்ளதை ஒன்றுக்குப் பத்தாய் உருப்பெருக்கிக் கூறும் கதை மரபு தமிழர்களை 'விடுதல் அறியா விருப்பினர்' ஆக்கியது. இதனைப் பிற்காலத்தெழுந்த காப்பியங்கள், புராணங்கள் மூலம் நன்கறியலாம்.

இத்தகு கதைப் புனைவுகளை வாழ்ந்து மறைந்த சான்றோர் வரலாற்றிலும் காணலாம். அவை வரலாறுகளென்றே பிற்காலப் பெரியவர் பலரும் பேசுவதையும் எழுதுவதையும் காண்கிறோம். எடுத்துக்காட்டாக வள்ளுவர், ஔவையார், கம்பர், ஒட்டக்கூத்தர் முதலானவர்களைப் பற்றிய கதைகளைப் பார்க்கலாம். சிறந்த வாழ்வு வாழ்ந்து சிறப்பானவற்றை உலகுக்குக் கொடுத்துச் சென்ற அவ்வுயர்ந்த பெருமக்களைச் சிறுமைப்படுத்துகின்ற வகையிலும் இப்புனைவுகள் அமைந்துவிடுவதுண்டு. சில பெரியவர்கள் தத்தம் சாதி, சமயங்களை உயர்த்திக் காட்ட வேண்டுமென்பதற்காக இத்தகு புனைவுகளைப் புகுத்துவதும் உண்டு. எங்ஙனமோ நமது வரலாறு, காலப்புழுதியாலும் கற்பனைக் குப்பைகளாலும் மூடப்பட்டுக் கிடக்கின்றது. அப்புழுதியையும் குப்பைகளையும் சிறிது விலக்கிவிட்டுக் காணுகின்றவையும் வரலாற்று ஊகங்களாகவே அமைந்துவிடுகின்றன. அத்தகு ஊகமே நமது குலசேகரப் பெருமானின் வரலாற்றிலும் முன்வைக்கப்பெறுகின்றன.

ஆழ்வார்களின் அருளிச்செயல்களின் மூலம் கிடைக்கின்ற உண்மையான ஆதாரங்களைத் தவிர அவர்களின் வாழ்க்கையைப் பற்றிப் பேசுகின்ற பிற ஆதார நூல்கள் அனைத்தும் பெருமளவு கற்பனைகளுக்கே இடந்தந்திருக்கின்றன. எனவே, அறிஞர் அவற்றிலிருந்து எவற்றை எடுப்பது, எவற்றை விடுப்பது என்பதில் விழிப்போடு இருக்கவேண்டும். எடுத்துக்காட்டாகக் குருபரம்பரையின்படி குலசேகரர் கலி 28-ஆவது ஆண்டாகிய பிரபவ ஆண்டில், மாசித் திங்களில், வளர்பிறை பன்னிரண்டாம் நாளில் கேரள இளவரசராகக் கொல்லி நகரில் பிறந்தார் எனக் கொள்ள வேண்டும். ஆனால், இங்குக் குறிக்கப்படுகின்ற கலி - 28ஆம் ஆண்டு என்பது கிறித்து பிறப்பதற்கு முற்பட்ட காலத்தைக் குறிக்கும். இஃது எப்படிப் பொருந்தும்? இனி, தவறாகக் குறிக்கப்படும் ஆண்டில் குறிக்கப்படும் மாதம், நாள் முதலானவை எப்படிச் சரியாக இருக்க முடியும்?

குலசேகரரின் பெற்றோர் குறித்த செய்தியும் எந்த அளவிற்கு உண்மையானது? அவரின் தந்தையார் பெயர் ''த்ருடவ்ரதன்''

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

என்பதாகவும், தாயார் பெயர் ''நாதநாயகி'' என்பதாகவும் கூறுகின்றனர். சேர மன்னர்களின் மரபு குறித்த பட்டியலில் இப்படி ஒரு பெயர் இருப்பதாகத் தெரியவில்லை. இங்ஙனம் மரபு வழியில் குறிப்பிடப்படாத ஒரு மன்னரின் மகனாகத் தோன்றிய குலசேகரர் என்ற சேர மன்னர், கி.பி. 600லிருந்து கி.பி. 890 வரையிலான காலகட்டத்தில் பல்லவப் பேரரசும் பாண்டியப் பேரரசும் வீறு பெற்று நின்ற போது எந்தச் சந்தர்ப்பத்தில் கொல்லி, கொங்கு, கோழி, கூடல் ஆகியவற்றிற்குத் தலைவராக இருந்தார்? எப்பொழுதும் இருந்ததில்லை என்பதை மேலே கண்டோம். அப்படியானால் குலசேகரர் என்ற கனிவுமிக்க அரச ஆழ்வார் யார்? அவர் சேரர் மரபைச் சேர்ந்தவர் அல்ல. அவர் பாண்டிய மரபைச் சார்ந்த ஒரு மன்னர்! இந்த ஊகத்திற்கான சான்றாதாரங்களைக் காண்போம்.

களப்பிரர் காலம் அல்லது இருண்ட காலத்தின் இறுதியாகிய கி.பி. 600லிருந்து கி.பி. 900 வரையிலான 300 ஆண்டுகளில் கி.பி. 700லிருந்து கி.பி. 800 வரையிலான 100 ஆண்டுகள் வைணவ சமயத்தின் பொற்காலமாகும். கி.பி. 550லிருந்து கி.பி. 615 வரை அதாவது பல்லவ மன்னனும் சிறந்த வைணவனுமான சிம்ம விஷ்ணுவின் ஆட்சி முடியும்வரை தொண்டை நாடு வைணவ வாழ்வில் சிறந்திருந்தது. அக்காலத்தில்தான் முதலாழ்வார்களும் திருமழிசையாரும் வாழ்ந்திருந்தனர். அதன் பிறகு கி.பி. 615-ல் ஆட்சிக்கு வந்த சிம்ம விஷ்ணுவின் மகன் மகேந்திரவர்மனைத் திருநாவுக்கரசர் சைவனாக மாற்றினார். இங்ஙனம் மாற்றம் பெற்ற பல்லவர்மரபு இரண்டாம் பரமேசுவரவர்மன் (கி.பி. 705-710) ஆட்சி முடியும்வரை சைவ சமயஞ்சார்ந்த மன்னர்களைப் பெற்றிருந்தது. சிம்மவிஷ்ணு தொடங்கிவைத்த இந்த அரச மரபில் அவனைத் தவிர அனைவரும் சைவர்களாகவே இருந்தனர்.

சிம்மவிஷ்ணுவின் மரபு முடிந்து இரணியவர்மன் வழி வந்த பல்லவ மன்னர்களில் முதலாமவனாக ஆட்சியைத் தொடங்கிய இரண்டாம் நந்திவர்ம பல்லவமல்லனும் (கி.பி. 710-775) அவன் மகன் தந்திவர்மனும் (கி.பி. 775-825) பரம வைணவர்களாயிருந்தனர். இரண்டாம் நந்திவர்மனின் காலத்தில் தான் திருமங்கை ஆழ்வார் வாழ்ந்தார் என்பதனை முன்பே கண்டோம். இவ்வாழ்வார்பெருந்தகையின் உடன் வாழ்ந்தவர்களாகத் திருப்பாணாழ்வாரும் தொண்டரடிப்பொடி ஆழ்வாரும் அறிஞர் பெருமக்களால் தகுந்த காரணங்களோடு ஏற்றுக் கொள்ளப்பெறுகின்றனர். இனி, மீந்திருக்கும் ஐந்து ஆழ்வார்களின் காலம் பற்றிப் பார்ப்போம்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

பாண்டியன் கடுங்கோனால் (கி.பி. 575-600) தொடங்கப் பெற்ற பாண்டிய மன்னர் மரபில் மாறவர்மன் அரிகேசரி என்ற நின்றசீர் நெடுமாறன் (கி.பி. 640-670) மட்டும் சமணனாயிருந்தான். இவனைத் திருஞானசம்பந்தப் பெருமான் சைவனாக்கினார் என்பது வரலாறு. இவனுக்குப் பின் வந்த மன்னர்களில் முதலாம் இராசசிம்ம பாண்டியன் (கி.பி. 710-765) என்ற அரிகேசரி பராங்குசமாறவர்மன் சிறந்த சிவபக்தன். ஆனால், இவன் மகன் நெடுஞ்சடையன் பராந்தகன் (கி.பி. 765-790) பரம வைணவனாக இருந்தான். இதனைப் ''பரம வைஷ்ணவன் தானாகி நின்றிலங்கு மணி நீண்முடி நிலமன்னவன்'' எனச் சீவரமங்கலச் செப்பேடுகள் புகழ்ந்து கூறுவதனால் அறிய முடிகின்றது. இவன் வைணவனாக இருந்தமைக்கான காரணத்தைச் சதாசிவ பண்டாரத்தார் அவர்கள் தமது ''பாண்டியர் வரலாறு'' என்ற நூலில் கீழ்க்கண்டவாறு குறிப்பிடுகின்றார்: ''அத்தகைய நிலையை இவன் அடைந்திருந்தமைக்குக் காரணம், இவன் ஆட்சிக் காலத்தில் வைணவ சமயகுரவருள் ஒருவராகிய பெரியாழ்வார் பாண்டிய நாட்டில் வாழ்ந்துகொண்டிருந்தமையே யாம். இவன் அவ்வாழ்வாரிடத்தில் பெரிதும் ஈடுபட்டு வைணவனாக மாறியிருத்தல் வேண்டும் என்பது திண்ணம். ஆகவே, அப்பெரியார் இவனுக்கு ஞானகுரவராக இருந்திருத்தலும் கூடும். இவன் அதியமானது கொங்கு நாட்டைக் கைப்பற்றிய பிறகு அங்குள்ள காஞ்சிவாய்ப் பேரூர்க்குச் சென்று, அவ்வூரில் திருமாலுக்குக் குன்றமன்னதோர் கோயில் எடுப்பித்தானென்று அச்செப்பேடுகள் உணர்த்துவதும் ஈண்டு அறியத்தக்கது. அன்றியும், இவனுடைய வேள்விக்குடிச் செப்பேடுகளின் இறுதியில் வைணவ தர்ம சுலோகங்கள் வரையப்பெற்றிருத்தல் இவன் அச்சமயத்தின்பால் வைத்திருந்த பெரும் பற்றினைத் தெள்ளிதிற் புலப்படுத்தும் எனலாம்'' (பக் 51-52).

நெடுஞ்சடையனுக்கு முன்பும் பின்பும் ஆட்சி செய்த பாண்டிய மன்னர்கள் சைவ சமயத்தின் மீது பெரும் பற்றுடையவராயிருக்க, இவன்மட்டும் வைணவனாக இருந்தமைக்குப் பெரியாழ்வாரின் தொடர்பைத்தவிர வேறு காரணம் இருக்க முடியாது. அவ்வாழ்வார் பெருமானின் பரந்தாமன் மேற்கொண்ட பக்திப் பரவசம் இவனையும் பற்றி கொண்டதென்பதனை ஏற்றுக்கொள்ளலாம். மேலும், எத்தெய்வம் பரத்துவமுடையதென அறிதற்குப் பொற்கிழிப் பரிசுப் போட்டி நடத்தியவன் இவனேயாதல் வேண்டும். இப்போட்டியில் வென்ற ஆழ்வார் அரசனின்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

மனத்தையும் வெற்றி கொண்டார் எனலாம். இப்பொற்கிழிப் போட்டியில் வென்ற பெரியாழ்வார் பாண்டிய மன்னனிடமிருந்து 'பட்டர்பிரான்' எனும் பட்டத்தையும் பெற்றார். இச்செய்திகளையெல்லாம் பாண்டிய பட்டர் அருளிச் செய்த கீழ்க்கண்ட செய்யுட்கள் விளக்குகின்றன.

" மின்னார் தடமதிள் சூழ் வில்லிபுத்தூ ரென்றொருகால்
சொன்னார் கழற்கமலம் சூடினோம் - முன்னாள்
கிழியறுத்தா னென்றுரைத்தோம் கீழ்மை யினிற்சேரும்
வழியறுத்தோம் நெஞ்சமே வந்து."

" பாண்டியன் கொண்டாடப் பட்டர்பிரான் வந்தானென்(று)
ஈண்டிய சங்க மெடுத்தோத - வேண்டிய
வேதங்க ளோதி விரைந்து கிழியறுத்தான்
பாதங்கள் யாமுடைய பற்று."

இங்ஙனம் பொற்கிழிப் பரிசும், 'பட்டர்பிரான்' என்ற பட்டமும் நல்கிய பராந்தக நெடுஞ்சடையன் ஆழ்வாரைத் தன் குருவாகவும் ஏற்றான் எனல் பொருந்துவதே. பெரியாழ்வார் காலம் இதுவாகவே, ஆண்டாள் நாச்சியாரின் காலமும் இதுவே ஆதல் பெறப்பட்டது.

நெடுஞ்சடையன் வைணவனாக இருந்தது போலவே அவனுடைய சுற்றத்தாரில் சிலரும் வைணவராக இருந்தனர் எனக் கல்வெட்டுக்களால் அறியக் கிடக்கின்றது. அப்படிப்பட்டவர்களில் அவனுடைய அமைச்சர்களான மாறன்காரியும், மாறன்எயினனும் குறிப்பிடத்தக்கவர்கள். இவர்களுள் முதலாமவன் மதுரைக்கு அருகில் உள்ள ஆனைமலையில் திருமாலுக்கு ஒரு கற்றளி அமைத்து, அதில் நரசிங்கப் பெருமானைக் கி.பி. 770-ல் எழுந்தருளுவித்தான். அக்கோயிலுக்கு அருகிலேயே பிராமணர்களுக்கு ஓர் அக்கிராகரமும் அமைத்துக் கொடுத்துள்ளான். நெடுஞ்சடையனின் ஆட்சிக் காலத்து முதற் பகுதியில் அமைச்சனாக இருந்த இவன் "மதுரகவி" எனும் சிறப்புப் பெயரை உடையவன். 'மதுரகவி' எனும் இவ்வைணவச் செல்வனே நம்மாழ்வாரைச் சந்தித்தபின்பு மதுரகவியாழ்வாராக மலர்ந்திருக்க வேண்டும். கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்தைச் சேர்ந்தவர் நம்மாழ்வார் என அறிஞர் முடிவு செய்வதால் நெடுஞ்சடையன் காலத்திய மாறன்காரியே மதுரகவியாழ்வார் எனக் கொள்ளலாம்.

இதுவரை பதினோரு ஆழ்வார்களின் காலம்பற்றிய நிர்ணயத்தை, அவர்களின் திருவாக்குகளாகிய அகச்சான்றுகளைக்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

கொண்டும், அரச மரபுகளைக் கொண்டும், ஆய்வாளர் கருத்துக்களோடு இணைத்தும் பார்த்தோம். இனிக் குலசேகரர் குறித்துக் காண்போம். குலசேகரர் குறித்து எம். சீநிவாசய்யங்கார் தமது நூலில், (Tamil Studies) "மருமக்கள்தாய முறையில் கேரள அரசிற்கு உரிமை பெற்ற ஓர் பாண்டிய அரசராக இருந்திருக்கக்கூடும் என்றும், சேர நாட்டில் இவர் பாண்டிய குலசேகரப் பெருமாள் என வழங்கப்பட்டார்" என்றும் எழுதுவார். இவருடைய இக்கருத்தினில், 'குலசேகரர் பாண்டிய மரபினர்' என்பதை நாம் ஏற்றுக்கொள்ளலாம். அங்ஙனம் ஏற்றுக்கொள்ளும்போது அதற்குரிய காரணிகளைக் கூறுவது அவசியமாகின்றது.

முதலில் ஆழ்வார் பாடல்களிற் காணும் அகச்சான்றுகளைக் காண்போம். தம்முடைய பாசுரங்களின் திருக்கடைக்காப்புப் பகுதியிலேயே குலசேகரர் தம்மைக் கொல்லிகாவலன், கூடல்நாயகன், கோழிக்கோன், கொங்கர்கோன் எனக் குறிப்பிட்டுக் கொள்கிறார். இவ்வாழ்வார் திருவாக்குகளில் நாம் ஐயப்பட வேண்டுவதில்லை. அவற்றை அப்படியே ஏற்றுக்கொண்டால், இத்தகுதிகளைத் தம்மீது ஏற்றிக் கூறிக்கொள்ளக்கூடியவர் எந்த மன்னர் மரபைச் சார்ந்தவராதல் கூடும்? சேர மரபைச் சேர்ந்தவராகாமையை முன்பே கண்டோம். பல்லவரும் ஆகார்! ஏனெனில், அவர்கள் என்றும் கூடலைக் கைப்பற்றிக் கூடல் நாயகரானதில்லை. சோழ மன்னர் மரபைப் பற்றிப் பேச வேண்டுவதே இல்லை. ஏனெனில், சோழ நாடும் கொங்கு நாடும் பாண்டியரிடமும் பல்லவரிடமும் மாறி மாறி அடிமைப்பட்டுக் கிடந்தன. என்றால், ஒரு பாண்டியன் தான் தன்னை இவ்வாறு கூறிக் கொள்ளவியலும். அதிலும் ஆழ்வார் ஆதற்குரிய அளவு பக்தியுடையவர்தான் இங்ஙனம் கூறவியலும். பாண்டியமரபில் இத்தகு வைணவ பக்தியுடையவன் ஒரே ஒருவன்தான்! அதாவது நெடுஞ்சடையன் பராந்தகன்! ஆனால், அவன் மன்னனாகப் பாண்டிய நாட்டை 25-ஆண்டுகள் ஆட்சி செய்து பல வெற்றிகளை ஈட்டிய பெருமன்னன். தன்காலத்தில் தன்மரபை வரலாற்று ஒளியில் நிறுத்திய வேள்விக்குடிச் செப்பேடுகளையும் சீவரமங்கலச் செப்பேடுகளையும் பல கல்வெட்டுக்களையும் வெளியிட்டவன். முழுமையாக அரசாண்டவன். ஆனால், குலசேகரர் அரசாட்சியைத் துறந்தவராகவல்லவா பேசப்படுகின்றார்?

குலசேகரர் தம் பாசுரங்களில் தம்மைக் "கொன்னவிலும் கூர்வேலை" உடையவரெனவும், "கொல்நவிலும் வேல்வலன்"

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

எனவும், ''கூரார்ந்த வேல்வலவன்'' எனவும் குறித்துக் கொள்வதுடன், ''கொற்றவேல் தானையை'' உடையவரெனவும், ''கொல்லியலும் படைத்தானைக் கொற்ற ஒள்வாள் கோழியர்கோன்'' எனவும், ஒரு பெரும்படைக்குத் தலைவராக இருந்தமையையும் கூறுகின்றார். அத்துடன் தம்மை நான்கு இடங்களில் (1, 8, 9, 10) ''குடைக்குலசேகரன்'' எனக் கூறுவதன் மூலம் தான் குடைநிழலிருந்து அரசாண்ட கோமான் என்பதையும் குறித்திருக்கின்றார். இவற்றையெல்லாம் நுணுகிப் பார்த்துப் பாண்டிய மன்னர்களின் மரபுத் தொடரையும் பார்க்கும் போது கி.பி. 790லிருந்து 792-வரை ஆட்சி செய்த இரண்டாம் இராசசிம்ம பாண்டியனே குலசேகரர் எனப் புகழ்பெற்ற ஆழ்வாராய் இருத்தல் கூடும் என முடிவு செய்ய இடமுண்டு. இது குறித்து மேலும் சில கருதுகோள்களைக் காண்போம்.

இரண்டாம் இராசசிம்ம பாண்டியனைப் பற்றிச் சதாசிவ பண்டாரத்தார் தமது ''பாண்டியர் வரலாறு'' என்ற நூலில் கீழ்க்கண்டவாறு குறிப்பிடுகின்றார்: ''சின்னமனூர்ச் செப்பேடுகள் இவன் பெயரை மாத்திரங் கூறுகின்றனவேயன்றி, இவனைப் பற்றிய செய்திகளை உணர்த்தவில்லை. எனவே இவன் ஆட்சிக்காலம் மிகச் சுருக்கமாய் இருந்திருத்தல் வேண்டும்; அன்றியும் இவன் காலத்தில் வரலாற்றில் குறிக்கத்தக்க நிகழ்ச்சிகள் இல்லாமலும் இருக்கலாம். இவன் கி.பி. 790 முதல் 792 வரை இரண்டாண்டுகள் ஆட்சி புரிந்திருத்தல் வேண்டுமென்பது சில ஏதுக்களால் உணரக் கிடக்கின்றது. இவன் மாறவர்மன் என்ற பட்டம் புனைந்து அரசாண்டவன்'' இங்ஙனம் எழுதும் பண்டாரத்தார், இவனை ''நெடுஞ்சடையனின் புதல்வன்'' எனக் குறித்திருப்பதும், இவனை அடுத்து ஆட்சிக்கு வந்த வரகுண மகாராசனை இவ்விரண்டாம் இராசசிம்மனின் மகன் எனக் குறித்திருப்பதும் சரியல்ல என எண்ணத் தோன்றுகின்றது. (பக். 55)

இரண்டாம் இராசசிம்மனை நெடுஞ்சடையனுக்கு மகன் என்பதைக் காட்டிலும் உடன்பிறந்தான் எனக் கொள்வதே பொருந்தும். இராசசிம்மனும் நெடுஞ்சடையனும் பெரியாழ்வார் என்ற குருநாதரின் வைணவச் சீடர்கள். இவர்களில் நெடுஞ்சடையன் ஆட்சிப் பொறுப்பை ஏற்றதும் இராசசிம்மன் அவனது நெருங்கிய அரச சுற்றங்களில் ஒருவனாய் இருந்து அவ்வேந்தனது போர் வெற்றிகளுக்குக் காரணனாய்ப் படை நடத்திச் சென்று, பல்லவர்களிடமிருந்து சோழ நாட்டின் சில பகுதிகளையும் கொங்கு நாட்டையும் வெற்றி கொண்டிருக்க வேண்டும். இவ்வெற்றிகளை

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

எல்லாம் சீவரமங்கலச் செப்பேடுகள் கூறுகின்றன. படை நடத்திச் சென்றவர் யாராக இருப்பினும் வெற்றியும் தோல்வியும் அரசனைச் சாருமாகையால் அம்மரபை ஒட்டி நெடுஞ்சடையன் பெற்ற வெற்றிகளாக அவை கூறுப்படுகின்றன. இவ்வெற்றிகளில் மகிழ்ந்த மன்னன் அதனைத் தக்க வைத்துக் கொள்வதற்காகப் புதிதாய்ப் பிடிபட்ட நாடுகளை இராசசிம்மனே கவனித்துவர ஏற்பாடு செய்திருக்க வேண்டும். ஏனென்றால், சேரனை விழிஞத்தில் வென்றதன்பின் இம்மன்னன் தனது தென்திசை வெற்றிகளை நிலைநிறுத்தற் பொருட்டுக் கரவந்தபுரம் என்ற இடத்தில் ஒரு கோட்டை அமைத்துப் பெரிய நிலைப்படை ஒன்றை நிறுத்தி இருந்தான் என்பதனைக் கல்வெட்டுக்கள் (S.I.I., Vol. VII, No 431) காட்டுகின்றன.

சோழ நாட்டின் உறையூரிலிருந்து அதனைப் பாதுகாத்து வந்ததுமட்டு மல்லாமல் கொங்கு மன்னனின் வீழ்ச்சிக்குப் பிறகு அப்பகுதியைக் கவனிக்கும் பொறுப்பும் இராசசிம்மனைச் சார்ந்ததாயிற்று. கொல்லிமலையை உள்ளடக்கிய இக்கொங்குப் பகுதியைக் கவனித்துவந்தமையாலேயே, இராசசிம்மனுக்குக் 'கொல்லிகாவலன்' 'கொங்கர்கோன்' என்ற சிறப்புக்கள் சேர்ந்தன. சங்ககாலச் சேர மன்னர் மேற்குக் கடற்கரை நகரங்களான வஞ்சி, தொண்டி முதலானவற்றைத் தலைநகராகக் கொண்டு இரு கிளைகளாகப் பிரிந்து ஆட்சி செய்தனர். சற்றுப் பிற்பட்ட காலத்தில் இரும்பொறை வம்சத்தைச் சேர்ந்த மூன்றாவது கிளை தோன்றியது. அக்கிளையைச் சார்ந்த கருவூர் ஏறிய ஒள்வாள் கோப்பெருஞ்சேரன் இரும்பொறை என்ற மன்னன் கொங்கு நாட்டுக் கருவூரைத் தலைநகராகக் கொண்டு ஆட்சியைத் தொடங்கினான். எனவே, கொங்குக் கருவூரும் சேரர் தலைநகராயிற்று. இது 'கொல்லிநகர்' எனவும் பெயர் பெற்றது. இதனை, ''கொல்லிமலைக்கு அண்மையில் உண்மை பற்றிக் கருவூருக்கு இப்பெயரும் ஏற்பட்டது'' என்பது இராகவையங்கார் அவர்களின் கருத்தாகும்.

குலசேகரர் பாடிய திருத்தலங்களில் திருவேங்கடம் தவிர ஏனைய, திருவரங்கம், திருக்கண்ணபுரம், தில்லைத் திருச்சித்திரக்கூடம், வித்துவக்கோடு ஆகிய நான்கும் சோழ நாட்டிலேயே அமைந்துள்ளவை. அவர் இத்தலங்களுக்குப் பலகாலும் சென்று வழிபட்டிருக்க வேண்டும். அதற்கு அவர் சோழ நாட்டிலேயே பல ஆண்டுகள் இருந்தவராதல் வேண்டும்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

இதனாலும் இரண்டாம் இராச சிம்மனாகக் குலசேகரர் இருந்திருக்க வாய்ப்புண்டு என்பது உறுதிப்படுகின்றது. 'வித்துவக்கோடு' என்பது கொங்குக் கருவூர்ப் பெருமாள் கோயிலின் ஒரு பகுதியே' என ரா. ராகவையங்கார் அவர்களும், மு. இராகவையங்கார் அவர்களும் ஆய்ந்து நிறுவியுள்ளனர்.

தம் வைணவச் சீடர்களாகிய நெடுஞ்சடையன், இராசசிம்மன் ஆகிய இருவரில் முதலாமவன் பெரிதும் அரச காரியங்களில் ஈடுபட்டிருக்க, இராசசிம்மன் அரச காரியங்களுக்கு அப்பால் பெருமாள்பால் பேரன்பு கொண்டு கசிந்துருகும் தன்மையனராய் இருத்தல் கண்டு பெரியாழ்வார் தமது திருமாலிருஞ்சோலைப் பதிகத்துள் அவனுடைய பட்டப் பெயரை வைத்துப் பாடுகின்றமையைக் காண்கிறோம். நெடுஞ்சடையனுக்குப் பின்பு குறுகிய காலம் அரசு வீற்றிருந்த இராசசிம்மன் மாறவர்மன் என்ற பட்டப் பெயர் கொண்டிருந்தான்.

" மன்னர் மறுக மைத்துனன் மார்க்கொரு தேரின்மேல்
முன்னங்கு நின்று மோழை யெழுவி[illegible] நவன்மலை
கொன்னவிற் கூர்வேற் கோன்நெடு மாறன்தென் கூடற்கோன்
தென்னன்கொண் டாடும் தென்திரு மாலிருஞ் சோலையே"

பெரியாழ்வார் திருமொழி, 4.2.7

என்பது பெரியாழ்வார் பாசுரம். இதில் குறிக்கப்பெறும் மாறன் இரண்டாம் இராசசிம்மனேயாம். நெடுஞ்சடையன் இப்பட்டம் புனைந்தவனல்லன். அவனுக்கு முற்பட்ட அரிகேசரிபராங்குச மாறவர்மனோ சிறந்த சிவபக்தன். இரண்டாம் இராசசிம்மனுக்குப் பின்பு பட்டம் ஏற்ற வரகுண மகாராசன் சடையவர்மன் எனப் பட்டப் பெயர் கொண்டவன் மட்டுமல்லாமல் "பெரிய அன்பின் வரகுண தேவர்" எனப் பட்டினத்தடிகளாலேயே பாராட்டப்பெற்ற சிவநேசன். எனவே, ஆழ்வார் தமது பாசுரத்தில் குறிப்பிட்டிருப்பது இரண்டாம் இராசசிம்மனையேயாம். இதுவே குலசேகரர்தான் இரண்டாம் இராசசிம்மனாக இருந்தவர் என்பதற்குப் போதிய ஆதாரமாகின்றது. மேலும் குலசேகரப்பெருமான் தம் பாசுரங்களில் பயன்படுத்திய இரு சொற்களைப் பெரியாழ்வார் கையாண்டிருக்கின்றார். அவை, "கொன்னவிலும் கூர்வேல்" (பெருமாள் திருமொழி, 4.11) "கூடற்கோமான்" (பெருமாள், 6.10) என்பன. இவற்றை மேற்காட்டிய பாசுரத்தில் "கொன்னவிற் கூர்வேல்" எனவும் "கூடற்கோன்" எனவும் கையாண்டிருப்பதைக் காணலாம்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

'' 'குலசேகரப் பெருமாள்' என்ற பெயருடைய பாண்டிய இளவரசர், தமது அண்ணன் நெடுஞ்சடையன் இறந்த பிறகு மாறவர்மன் இரண்டாம் இராசசிம்மன் என்று பட்டாபிஷேகப் பெயரேற்று ஆட்சியில் அமர்ந்தார். தமது ஆழ்ந்த இறையன்பிற்கு அரசாட்சி இடையூறாக இருப்பதை உணர்ந்து தமது அரச பதவியைத் துறந்து அடியார் பணிக்கும் அரங்கன் பணிக்கும் தம்மை ஆட்படுத்திக்கொண்டு பல திவ்விய தேசங்களைத் தரிசித்திருந்து இறுதியில் பாண்டிநாட்டு மன்னார்கோயிலில் இயற்கை எய்தினார்'' என இங்ஙனம் குலசேகரரின் இறுதிக் காலத்தை விவரிக்கலாம்.

'குலசேகரர்' என்ற பெயருடைய பாண்டிய இளங்கோ, சிறந்த வைணவச் செல்வராயிருந்தமையால் 'குலசேகரப்பெருமாள்' என மக்களால் அழைக்கப்பெற்றிருக்கலாம். இப்பெயர் அரசேற்ற காலத்தில் மகுடாபிஷேகப் பெயராய் ஏற்ற இரண்டாம் இராசசிம்மமாறவர்மன் எனப்பட்டுப் பட்டயங்கள் முதலானவற்றில் இடம்பெற, இறைவனைப் பாடிய இலக்கியத்தில் மட்டும் மாறாமல் நின்றது. இனி, இவரைச் சேரர்குலத்தோடு சேர்த்திக் கூறியமைக்குரிய காரணங்களைக் கூறலாம். ஒன்று - இவர் சேர நாட்டின் ஒரு பகுதியாயிருந்த கொங்குநாட்டைப் பாதுகாத்த 'கொங்கர்கோமான்' ஆனதால் இப்பெயர் பெற்றிருக்கலாம். இரண்டாவது - மேற்குறித்த காரணத்தையே அடிப்படையாகக் கொண்டு, சைவத்தில் ஒரு சேரமான் பெருமாள் இருப்பது போல வைணவத்திலும் ஒரு சேரமான் இருந்தார் எனக் காட்டும் முயற்சியாக இவரைச் சேரராக்கியிருக்கலாம். எப்படியோ வரலாற்று உணர்வற்ற ஒரு சமூக அமைப்பில் வல்லவர் வழங்கியவை வரலாறாகி விடுகின்றன.

குலசேகரர் பாண்டிய மரபைச் சேர்ந்தவர் என்பதற்கு இன்னுமொரு ஆதாரமாகக் ''குலசேகரன்'' என்ற பெயரையே குறிப்பிடலாம். இப்பெயர் பாண்டிய மன்னர்களைத் தவிரப் பிற மன்னர் பரம்பரையில் காணுதல் அரிதாம். எடுத்துக்காட்டாக இக்குலசேகரருக்குப் பிறகு இப்பெயரைப் பல பாண்டிய மன்னர்கள் கொண்டிருந்தனர். எடுத்துக்காட்டாக 1) சடையவர்மன் குலசேகரப் பாண்டியன், 2) முதல் சடையவர்மன் குலசேகரன், 3) இரண்டாம் சடையவர்மன் குலசேகரன், 4) முதல்மாறவர்மன் குலசேகரன், 5) இரண்டாம் மாறவர்மன் குலசேகரன், 6) சடையவர்மன் குலசேகரன் (1395-1401), 7) குலசேகரன் மாவலிவாணராயன், 8) சடையவர்மன் குலசேகரன் (1429-1473), 9) சடையவர்மன் பராக்கிரம குலசேகரன் (1543-1552), 10) நெல்வேலிமாறன் என்ற

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

குலசேகரன் (1552-1565), 11) வரகுணராம குலசேகரன் (1613 கி.பி), 12) வரகுணராமபாண்டிய குலசேகரன் (1748) இங்ஙனம் பன்னிருவர் வரலாற்றில் இடம் பெற்றுள்ளனர். மேற்குறிப்பிட்டவர்களில் முதல் ஐந்து குலசேகரர்கள் கி.பி. 1162-லிருந்து கி.பி. 1346 வரை அரசாண்டவராவர்.

இனி, ''முகுந்தமாலை'' எனும் வடமொழி நூலொன்றினைக் குலசேகரர் செய்ததாகக் கூறுவர். உண்மையில் இதைச் செய்தவர் 'குலசேகரவர்மா' எனும் சேர மன்னர் ஆவார். இவர் ஒருவர்தான் பாண்டியர் அல்லாத அரச மரபொன்றில் ''குலசேகரர்'' என்ற பெயருடையவராய் உள்ளார். நுணுகி ஆராய்ந்தால் இவர் பாண்டிய நாட்டிலிருந்து மருகமக்கள்தாய முறையில் கேரள அரசிற்குரிமை பூண்ட ஒரு பாண்டிய அரசராயிருக்கலாம். முகுந்தமாலை குலசேகரரின் நூல் அல்ல என்பதற்குச் சான்று, அந்நூலைப் பற்றித் திவ்வியசூரியோ, ஆறாயிரப்படிக் குருபரம்பரையோ, அல்லது வேறு குருபரம்பரைகளோ ஏதும் கூறவில்லை. மேலும் இதனைத் திவ்வியப் பிரபந்த உரைகளில் எடுத்தாளாதது மட்டுமல்லாமல் திருக்கோயில்களில் திருவிழாக் காலங்களில்கூட எடுத்தோதப் பெறுவதில்லை. நாதமுனி முதலான ஆசிரியப் பெருமக்கள் இதனை ஆழ்வாரின் அருளிச்செயலாகக் கொள்ளவில்லை. மேலும் கிருஷ்ண பக்தியைப் பேசும் முகுந்தமாலையை இராம பக்தியில் தம்மை மறந்த குலசேகரர் செய்தார் என்பது நம்பும்படியாக இல்லை.

மேற்கூறிய குலசேகரரைப் பற்றிய முடிவானது, கிடைத்த வரலாற்று ஆதாரங்களையும், அறிவுசான்ற ஆய்வுரைகளை நூல்களாகச் செய்து கொடுத்துள்ள பெருமக்களின் கருத்துக்களையும், ஆழ்வார்களின் அருளிச்செயல்களையும் ஒருங்குவைத்து ஒப்புநோக்கிப் பெற்றதாகும். கடந்த காலத்தின் இருளில் துழாவிக் கருத்துக் கரங்களால் பற்றியவை மாணிக்கங்களாகவும் இருக்கலாம், வெறும் மாக்கல்லாகவும் போய்விடலாம். எனினும், இந்த முயற்சி இன்னொரு தேடுதலைத் தரலாம். எந்தத் தேடுதலும் பயனளிக்காமல் போனாலும், எல்லையற்ற பரம்பொருளை இதயம்பற்றி, இன்தமிழாக்கித் தந்துள்ள ஆழ்வார் பாசுரங்களெனும் அமுதம் பருக வல்லார்க்கு அகவிருள் போகுமன்றோ? அகவிருள் போயொழிந்தால் ஆழ்வாரின் பேச்சைக் கேட்டு அவரை இன்னார் என்று நாம் அறுதியிட்டு உணரலாமல்லவா?

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

4. குலசேகரரின் பெருமாள் திருமொழி

குலசேகரப் பெருமாள், இப்பேருலகையெல்லாம் தன்னுதரத் தடக்கிப் பேணும் பெரிய பெருமாளைப் போற்றிப் பரவிய பதிகங்களைப் பெருமாள் திருமொழி எனக் கூறுவர். இதன் பெருமை யைத் திருவரங்கத்தமுதனார் தமது இராமானுச நூற்றந்தாதியில்,

" கதிக்குப் பதறிவெங் கானமும் கல்லும் கடலுமெல்லாங்
கொதிக்கத் தவஞ்செய்யுங் கொள்கையற் றேன்கொல்லி காவலன்சொல்
பதிக்குங் கலைக்கவி பாடும் பெரியவர் பாதங்களே
துதிக்கும் பரமன் இராமா னுசனென்னைச் சோர்விலனே " (பா.14)

எனப் பாடுகின்றார். 'குலசேகரப் பெருமாளின் சொற்களைப் பதிய வைத்திருக்கும் கவிகளைப் பாடுகிற பெருமை உடையவர் களுடைய திருவடிகளையே தோத்திரம் செய்யும் எவரினும் மேம்பட்டவர் இராமானுசர்' என இப்பாடலில் குறிப்பதன் மூலம் குலசேகரர் பாசுரங்களின் பெருமையையும், அவற்றைப் பாடுபவரின் பாதங்களைத் துதிக்கும் பரமன் இராமானுசன் என்றதால் உடையவரின் பெருமையையும் ஒரு சேர உயர்த்தி விடுகின்றார் அமுதனார்.

இப்பிரபந்தத்தில் இராமாவதாரம், கிருஷ்ணாவதாரம் ஆகிய எம்பெருமானின் விபவ நிலையினையும், அர்ச்சையில் அரங்கத்து அழகனையும், திருவேங்கடத்துத் திவ்யனையும், தில்லைத் திருச்சித்திரகூடத்துத் தேவதேவனையும், திருவித்துவக்கோட்டு அம்மானையும் ஆழ்வார் மங்களாசாசனம் செய்துள்ளார். இவற்றுள் இராமாவதார வைபவத்தைத் திருக்கண்ணபுரத்தெம் பெருமான் மீதேற்றித் தாலாட்டாகத் தருகின்றார். இவ்வாறு திருவரங்கத்தை மூன்று திருமொழிகளாலும் ஏனைய திருவேங்கடம், திருச்சித்திரக் கூடம், திருவித்துவக்கோடு, திருக்கண்ணபுரம் ஆகியவற்றை ஒவ்வொரு திருமொழியாலும் ஆக ஏழு திருமொழிகளால் ஐந்து திவ்விய தேசங்களை ஆழ்வார் பாடி யருளுகின்றார்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

இராமாவதாரத்தைத் தாலாட்டாகவும், தயரதன் புலம்பலாகவும், இராமாயணக்கதைச் சுருக்கமாகவும் மூன்று திருமொழிகளிலும், கிருஷ்ணாவதாரத்தைத் தேவகி புலம்பலாகவும் ஆய்ச்சியர் ஊடி அமலனை எள்கி உரைத்தலாகவும் இரண்டு திருமொழிகளிலும் ஆழ்வார் வாக்காக அனுபவிக்கின்றோம். இத்திருமொழிகளில் 1,4,7,8,9,10 ஆகிய ஆறு திருமொழிகள் தனித்தனியே பதினோரு பாசுரங்களையும், 2,5,6 ஆகிய மூன்று திருமொழிகள் பப்பத்துப் பாசுரங்களையும், மூன்றாம் திருமொழி மட்டும் ஒன்பது பாசுரங்களையும் கொண்டு, பெருமாள் திருமொழியின் மொத்தப் பாசுரங்களின் எண்ணிக்கை நூற்று ஐந்தாக உள்ளது. இவற்றுள், 1,7,10 ஆகிய மூன்று திருமொழிகள் எண்சீர் ஆசிரிய விருத்தமாகவும்; 6,9 ஆகிய இரண்டும் அறுசீர் ஆசிரிய விருத்தமாகவும், 2,3 ஆகிய இரண்டும் கலிவிருத்தமாகவும்; 4,5,8 ஆகிய மூன்றும் தரவு கொச்சகக்கலிப்பாவாகவும் யாப்பமைதி பெற்றுள்ளன.

மேற்கண்ட திவ்விய தேசங்களைத் தவிரத் தனிப் பாசுரங்களில் திருவயோத்தியாகிய இராமபிரானின் அவதாரத்தலத்தினை எட்டாந் திருமொழியில் 6,7 ஆகிய இருபாசுரங்களிலும், பத்தாம் திருமொழியில் 1,8 ஆகிய இருபாசுரங்களிலும் ஆக நான்கு பாசுரங்களில் ஆழ்வார் குறிக்கின்றனர். இங்ஙனமே வியூகப் பெருமானின் திருப்பாற்கடலை இரண்டாம் திருமொழியில் எட்டாம் பாசுரத்திலும், நான்காம் திருமொழியில் நான்காம் பாசுரத்திலும் குறிப்பிடுகின்றார். அர்ச்சாவதாரத்தை அனுபவிக்கும்போதும் ஏனைய வியூக, அவதார நிலைகளை இணைத்திருப்பது குலசேகரப் பெருமானின் திருவுள்ளம் திருமாலைப் பற்றி நின்ற பாங்கினை விளக்குகின்றது. இவ்வருமையைக் குறிக்கும்முகத்தான் ஸ்ரீவேதாந்த தேசிகர் தமது தேசிகப் பிரபந்தத்துள் (பா.40) 'துய்ய குலசேகரன்' எனக் குறிப்பிடுகின்றார். இங்ஙனமே ஸ்ரீமணவாள மாமுனிகள் தமது உபதேச ரத்தின மாலையுள் (பா.13)

" கொல்லி நகர்க்கோன் குலசேக ரன்பிறப்பால்
நல்லவர்கள் கொண்டாடும் நாள்"

எனக் கூறிச் சிறப்பிக்கின்றார். வாழித் திருநாமப்பாடலும் 'செஞ் சொல் மொழி நூற்றஞ்சும் செப்பினான் வாழியே' எனப் பெருமாள் திருமொழியைச் 'செஞ்சொல்மொழி' எனச் சீர்கூட்டிப் பேசும்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

5. அணியரங்கத்து அமுதம்

வெள்ளை அணையில் ஒரு கருமணி

பெருமாள் திருமொழி, அணியரங்கத்து அமுதமாய் ஆழ்வாரை ஆட்கொண்ட அழகிய மணவாளனைப் பாடுவதாக முதல் திருமொழியில் தொடங்குகின்றது. ஆற்றிடைக்குறையில் கண் வளரும் கருமணியைக் கோமளத்தைக் கண்டு கண்கள் களி கொள்ளும் நாள் எதுவோ என ஏங்குகின்றார் ஆழ்வார். ஆயிரம் பணாமுடிகளை உடைய ஆதிசேடன் என்னும் அணிவிளக்கும் உயர்வெள்ளை அணையை மேவி, பொன்னியென்னும் புனித நதி அலைக்கரத்தால் அடி வருட அவ்வரங்கத்தமுகன் கண் வளருகின்றான். அப்பெருமானுக்கு அணையாகும் பாக்கியத்தைப் பெற்ற ஆதிசேடனின் நஞ்செல்லாம் மாணிக்கங்களாகி அவனது ஆயிரம் சிரங்களின் நெற்றிகளிலெல்லாம் இருள் இரிந்தோட ஒளிர்கின்றனவாம். நிலக்கரி வைரக்கல்லாகும் நேர்த்தியைப் போல - அரங்கனுக்குப் பணி செய்யும் அரவரசனின் நஞ்சும் நாகரத்தினங்களாகிப் புறவிருளைப் போக்குவதைப் போல - அப்பெருமானைப் பணிந்தேத்தும் பக்குவர்களின் அறியாமை இருளகன்று அவனது அருளென்னும் அமுதம் அவர்களின் அகமெல்லாம் திகட்டாமல் தித்திக்குமன்றோ?

காயாம்பூ மலர்ப்பிறங்கல்

அணையாகக் கிடந்து அரங்கத்தமுகனைத் தாங்குவது மட்டுமன்றி, அப்பெருமானின் ஆயிரந்திருநாமங்களையும் தன் ஆயிரம் நாவுகளால் சொல்லித் துதிக்கின்றானாம் அந்த அரவரசனாகிய அனந்தன். அப்படிக் கிடந்தும் துதித்தும்கூட அந்நாகத்தின் நச்சழல் வெளிப்படவே செய்கின்றது. அதுவும் செந்தீயாக வெளிப்படுகின்றது! ஆனால், எதுவாயினும் எம் பெருமான் சன்னிதானத்தில் தன்னியல்பு கெட்டுத் தண்ணருளின்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

வசப்படுமன்றோ? நாகம் உமிழ்ந்த செந்தீயும் 'வியாத மலர்ச் சென்னி விதானமாகி' எங்கும் பரந்து நிற்கின்றது. அதன்கீழ்க் காயாம்பூ மலர் வண்ணன் கண்வளர்கின்றான். இக்காட்சியைக் கண்டு நெஞ்சம் நெகிழ, நிலை கொள்ளாமல் அப்பெருமான் முன்னிருக்கும் மணத்தூணைப் பற்றி நின்று வாயார நான் வாழ்த்தும் நாள் என்றோ என ஏங்குகின்றார் ஆழ்வார்.

மலர்க்கமலக் கொப்பூழ்

அரவரசனாகிய அனந்தாழ்வான் மட்டுமா அரங்கத்து அழகனை வாழ்த்துகின்றான்? ஈதோ எம்பெருமானின் நாபிக் கமலத்தில் வீற்றிருக்கும் நான்முகனும் தன் நான்கு நாவுகளினாலும் வாழ்த்துதற்குரிய வார்த்தைகளைத் தேர்ந்தெடுத்துத் துதிக்கின்றான். அம்மட்டோ, அப்பிரமதேவன் எல்லாப் பக்கங்களிலும் எம்பெருமானின் எழிற்கோலத்தைக் காண்பதற்கு நான்கு திருமுகங்களை உடையவனாக இருக்கின்றான். இங்ஙனம் இவன் தடையின்றித் துதிக்கவும், காணவும் திருநாபிக் கமலத்தில் இருக்கும்படியாக அணி அரங்கத்து அரவணையில் பள்ளி கொண்டிருக்கின்றான் அரங்கன். அப்பெருமானின் திருவடிகளில் மலர்களிட்டு அடியவர்களோடு சென்று அணுகுவது எப்பொழுது? அந்த நாள் என்று வரும்?

தமிழினின்பப் பா

ஆயர் குலத்தின் அணிவிளக்காய்த் திகழ்ந்தான் அவன். எளியவன் பெற்ற பெருஞ்செல்வம் போல ஆயர்குலத்தில் அவன் இருந்தான். எளியவன் பெற்ற செல்வம் வலியவன் கண்ணை உறுத்துமன்றோ? தொட்டிலில் கிடந்த நாளிலிருந்து இக்குழந்தைக்குத்தான் எத்தனை சோதனை! ஆனால், சோதனைகளுக்கெல்லாம் சோதனையாக இருப்பவனன்றோ இந்த மாயன்? இதனை உணராமல் உறுபகை உறுத்து நின்றது. இப்பொழுது குதிரை வடிவாய் ஒரு கொடியவன்! வாயால் குதறுவதற்கு வாய் திறந்து வந்தான் அவன்! என்ன ஆயிற்று? இந்தச் சின்னக் கைகளுக்குள் இவ்வளவு ஆற்றலா?! வாய் திறந்து வந்த குதிரையின் வாய் பிளக்கப் பெற்றது. அரிய செயலை எளிதாக முடித்து இக்குழந்தை மகிழ்கிறது. மண்ணகத்து மடமைதான் மருள்கொண்டதென்றால், விண்ணகத்து வேந்தனுக்கு விவரம் வேண்டாமா? ஆயர்களும் பசுக்களுமா இவன் எதிரிகள்? அவர்களுக்கிடையே ஆனந்தமாக ஆடிப் பாடித் திரியும் அற்புதக் குழந்தையை இவன் அடையாளங் காணவில்லையா? "இந்த ஆயர்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

குடியை அழித்துவிடுவேன்'' என ஆங்காரங்கொண்டு முழங்குகின்றான். அவன் ஆணவத்தின் ஆர்ப்பரிப்பாய் மேகங்கள் முழங்கின. ஊழிக்காலப் பேய் மழை அந்த ஆயர் பாடியை ஆக்கிரமித்தது. ஆனாலுமென்ன! அந்த அற்புதக் குழந்தையின் பூங்கையின் ஒற்றை விரலில் கோவர்த்தனமலை குடையாகியது. தேவர் தலைவனின் திறல் ஒடுங்கியது. அக் குழந்தையே ஆயர்க்குமட்டு மல்லாமல் அமரர்க்கும் தலைவன் என்று உணர்ந்தான்.



திருவரங்கம் - பெரிய பெருமாள்

ஆயர்க்கும் அமரர்க்கும் தலைவனை, அருந்தமிழாய், ஆரியமாய் நிற்பவனை, ஆன்றவிந்தடங்கிய அருந்த வத்தோர் ஒயாதே உள்ளுவதால் உள்ளிருக்கும் உள்ளானை, திருவரங்கத் தரவணையில் பள்ளி கொள்ளும் தேவாதி தேவனை நாத்தழும்பேற வாழ்த்த வேண்டாமா? நறுமலர் கொய்து அவன் திருவடி தூவி மனம் குவிந்து நிற்பதன் புறவடிவாய்க் கைகள் குவிந்து நிற்க வேண்டாமா? அந்த நாள் என்று? ஆழ்வார் அகங்கரைந்து ஆருயிர் ஏங்க வினவுகிறார்.

" மாவினைவாய் பிளந்துகந்த மாலை வேலை
வண்ணனை என்கண்ணனை வன்குன்ற மேந்தி
ஆவினையன் றுயக்கொண்ட ஆய ரேற்றை
அமரர்கள்தந் தலைவனையந் தமிழி னின்பப்
பாவினையவ் வடமொழியைப் பற்றற் றார்கள்
பயிலரங்கத் தரவணையில் பள்ளி கொள்ளும்
கோவினைநா வுறவழுத்தி யென்றன் கைகள்
கொய்ம்மலர்தூ யென்றுகொலோ கூப்பு நாளே! " *(1-4)*

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

என்பது பாசுரம்! கடல்போலும் வண்ணத்தை உடைய அவனை "என் கண்ணன்" என்று உரிமை கொண்டாடுகின்றார் ஆழ்வார்! அது மட்டுமா? ஆயர்பாடியில் எளிவந்தவனாய் அவ்வாயச் சிறாரோடும் கன்றுகாலிகளோடும் திரிந்த அந்தக் கருணையைத் தமிழின் இன்பப் பாவாகக் காண்கின்றார் ஆழ்வார். ஆனால், அவன் ஆரியத்திலும் இருப்பது போல அமரர்க்கும் தலைவனாவான் என்கிறார்.

யாழிசையும் மறைநூலும்

திருவரங்கம் அருட்செல்வமும் பொருட்செல்வமும் நிறைந்த பொலிவை உடையது. பூலோகவைகுந்தம் எனக் கூறலாம். வைகுந்தவாசனே அங்கு வந்து தன் பைந்நாகப் பாய்விரித்துப் படுத்துக் கிடக்கின்றான் என்றால், அத்திருவரங்கத்திற்குத் திருமகள் சம்பந்தத்திற்குக் குறைவேது? மணிமாட மாளிகைகள் மல்கியுள்ளன. மதிளரங்கத்தரவணையில் மணிவண்ணன் பள்ளி கொண்டிருக்கின்றான். அப்பெருமானின் இன்னருளை இணையில்லா இன்னிசையை யாழோடு கூட்டித் தும்புருவும் நாரதனும் பாடிப்பரவிக் கொண்டிருக்கத் தன் நான்கு முகங்களாலும் பிரமதேவன் நான்கு வேதங்களை ஓதி வழிபட்டுக்கொண்டிருக்கின்றான். இத்தகு அரிய காட்சியைக் காணாத கண்ணென்ன கண்? கண்டால்மட்டும் போதுமா? அவன் கழலிணைகளில் பூமாலை புனைந்து தமது முடிபொருந்த வணங்க வேண்டும் என்கிறார் குலசேகரர்.

திருவரங்கம் - நம்பெருமாள்

நிலைநின்ற தொண்டர்

முடிபொருந்த வணங்கினால்மட்டும் போதுமா? உள்ளம் உருகவும் வேண்டும். பிரமன் உள்ளிட்ட தேவர்குழுவும், அரம்பையர் முதலான தேவ மாதர்களும் தெளிந்த ஞானத்தை உடைய முனிவர்குழாமும் ஒருவர்க்கொருவர் நெருக்கித் தள்ளிக்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

கொண்டு மலர்களை வாரி இறைத்தபடி அப்பெருமானைக் காண வந்து சேர்வதற்கான இடமாகவன்றோ திருவரங்கத் திருக்கோயில் விளங்குகின்றது? அக்கோயிலிடத்தே அனந்தாழ்வான்மீது கண்வளருகின்றான் கடல்வண்ணன். அப்பெருமானுடைய கமலக்கண்களையும் ஒண்மதி போன்ற திருமுகத்தின் திருவழகையும் கண்டுகொண்டு உள்ளம் உருக நிற்க வேண்டும். அந்த நாள் என்று வரும் என்பது ஆழ்வாரின் ஏக்கம்.

கொடுமையும் வஞ்சனையுமற்ற மாசில்லா மனமும், பிரபஞ்ச வாழ்வுப் பின்னலிலேயே பிடிபடவைக்கும் வன்மையான புலன்களை அடக்கித் தொடர்ந்துவரும் துன்பங்களைத் துறக்கும் தெளிவும் கொண்டு, ஐந்து கால வழிபாடியற்றி எல்லை இல்லாத் தொன்னெறியிடத்தே ஊன்றி நிற்பவர் திருமாலடியார்கள். அத்தகு தொண்டர்தம் மனத்தகத்து மன்னிநிற்கும் மாயம் வல்ல பெருமானை, அழகே வடிவாக அரவணையில் பள்ளி கொண் டிருக்கும் அருளாளனைக் கண்ட கண்கள் கசிந்துருகுமன்றோ? அங்ஙனம் கசிந்துருகிக் கண்ணீர் மல்க எந்நாள் நிற்பது?

இன்பக் கலவி

ஆழிசூழ் உலகமெல்லாம் காக்கின்ற கண்ணாளன் அவன்! அவனே ஆழியான். அப்படி இருக்க, அப்பெருமான் கண்வளருங் காலத்து இந்தச் சார்ங்கம் என்ற வில்லும், பாஞ்ச சன்னியம் என்ற சங்கும், பகைவரைப் பதைக்கச் செய்யும் ச ரிசனச் சக்கரமும், கௌமோதகித் தண்டும், நந்தக வாளும், கடுவேகக் கருடனும் எதற்காகப் புறஞ்சூழ்ந்து நிற்கின்றன? அவன் உறங்குகின்றான் என நினைந்து உறுகாவலாயினவோ? அவன் உறங்கிவிட்டால் உலகேது, உயிர்வர்க்கமேது? உறக்க மென்பது ஒய்ந்த உயிர்களுக்கல்லவா? அவனோ தன்வயமாகித் தானே உலகேழும் ஆகும் தயாமூல மன்றோ? அவை அவனுக்குக் காவலாக நிற்கவில்லை! அவனது ஆணையாக நிற்கின்றன! அகிலத்துக்குக் காவலாக நிற்கின்றன.

நன்னீர் ஆற்றிலும் குளத்திலும் களித்து வாழ்கின்ற மீன்கள் திருவரங்கத்துக் கழனிகளிலும் உலாவிவருகின்றன. கழனிகளைச் சூழ்ந்துள்ள செழும் சோலைகள். சோலைகளின் நடுவிலே திருக் கோயில்! திருக்கோயில் அரவணையில் அவன்! அவனைக் கண்டு கலவி பெற வேண்டுமென்கின்றார் ஆழ்வார். 'ஐந்து பேரறிவும் கண்களே கொள்ள, அளப்பருங் கரணங்கள் நான்கும் சிந்தையேயாக'த் திருமாலை, மாயோனைத் தித்திக்கும் பெரும்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

பதத்தை அனுபவிக்க வேண்டுமாம். அவன் மதிமுகம் கண்ட கண்களும், மாண்புகழ் கேட்ட காதுகளும், அவன் திருப்புயத்து மலர்மாலை நாற்றத்தை நுகர்ந்த மூக்கும், அவன் திருநாமத்தை இமைப்பொழுதும் நில்லாமல் ஏத்தும் நாவும், அவன் திருவடிகளில் படிந்து பணிந்து உற்றறியும் தலையும் என ஐந்து பொறிகளின் வாயிலாகப் பெறும் ஐம்புலனின்பக் கலவியை ஆழ்வார் அவாவி நிற்கின்றார்! அந்த நாளுக்காக ஏங்குகின்றார். வள்ளுவப் பெருமான்,

" கண்டுகேட்டு உண்டுயிர்த்து உற்றறியும் ஐம்புலனும்
ஒண்டொடி கண்ணே உள " (குறள் - 1103)

எனக் காதலனுக்குக் காதலியிடத்தே ஐம்புல இன்பம் அனுபவிக்கக் கிடைப்பதாகக் கூறுகின்றார். அடியாருக்கோ ஐம்புல இன்பக் கலவி ஆண்டவனிடத்தே கிடைக்கிறதாம்!

" கோலார்ந்த நெடுஞ்சார்ங்கம் கூனற் சங்கம்
கொலையாழி கொடுந்தண்டு கொற்ற வொள்வாள்
காலார்ந்த கதிக்கருடன் என்னும் வெற்றிக்
கடும்பறவை இவையனைத்தும் புறஞ்சூழ் காப்பச்
சேலார்ந்த நெடுங்கழனி சோலை சூழ்ந்த
திருவரங்கத் தரவணையில் பள்ளி கொள்ளும்
மாலோனைக் கண்டின்பக் கலவி எய்தி
வல்வினையேன் என்றுகொலோ வாழு நாளே! " (1-8)

என்பது பாசுரம். இன்பக்கலவிக்கு வல்வினை தடையாகின்றதாம். தமக்கும் தலைவனுக்கும் இடையே தடையாக நிற்பது தமது வினையாம்! இந்த வினைக்கேடு என்று ஒழியும், எம் பெருமானைக் காண்பது என்று - ஏங்குகின்றது அடியாரின் அன்பு நெஞ்சம்!

கண்ணீரின் மழை

இறையனுபவத்தைப் பெறும் பேறு முழுமையாகக் கிடைக்காதவரை தமது மனக்காதலில் நிறைவு பெறாதவர்கள் தொண்டர்கள். எனவே, அப்பேற்றைப் பெறுதற்குக் குழாங்களாகக் கூடிப் பெருமானின் பேரருட் பெருமைகளை யெல்லாம் பாடிப் பரவுகின்றனர். அங்ஙனம் பாடப்பாடப் பெருமானின் எளிவந்த தன்மையும், இன்னருளால் ஏழை உயிர்க்குற்றங்களைக் குணமாக் கொண்டு அளிசெய்யும் அருளுடைமையும் அவ்வடியார் தம் மனத்தை நெக்குருகச் செய்கின்றன. நெஞ்சம் நெக்குவிட, நினைந்துருகிக் கண்ணீர் மழை சோர அப்பெருமானை ஏத்திப்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

போற்றுகின்றனர். அக்கூட்டத்துள் நம் ஆழ்வாரும் சங்கமிக்க வேண்டுமென்றார்! சேர்ந்து அவ்வடியார்களைப் போலவே போராழி அம்மானைக் கண்டு அன்பால் நெகிழ்ந்து பூதலத்தில் கிடந்து புரள வேண்டுமாம்.

தென்திசை நோக்கிய திருமுகம்

வானகமும் வானவரும் மண்ணகமும் மனிதர்களும் உய்ந்து போதற்காகவும், உடல் துன்பமும் உளத் துயரும் அகன்று போக - சோர்வில்லாச் சுகம் வளர அகம்மகிழும் தொண்டர்கள் வாழவும் திருநோக்கமுடையவ னாகிய திருவரங்கன் தென்திசை நோக்கிப் பள்ளி கொண்டுள்ளான். அவ்வணியரங்கன் திருமுற்றத்து அடியவர்கள் அவனைப் பாடும் ஆனந்தத்தோடு பெருங்குழு வாய்த் திரண்டிருக்கின்றனர். அக்குழுவோடு இசைந்து, உலகியல் உயர்வுதாழ்வுக ளற்று ஒன்றாயிருந்து உத்தமன் பேர்பாடும் நாள் எந்த நாள்?

நடைவிளங்கு தமிழ்மாலை

''ஆறிடும் மேடும் மடுவும் போலாம் செல்வம்'' எனச் செல்வம் ஒரு வழிநில்லாமையை உணர்த்துகின்றார் ஒரு புலவர். அத்தகைய மணல் திடர்கள் நிறைந்த பொன்னிப் பேராற்றின் இடையில் திருவரங்கத்து அரவணையில் பள்ளி கொண்டுள்ளான், கடல் போலுங் கருந்திருமேனி அம்மான். அப்பெருமானைக் கண்ணாரக் கண்டுகக்கும் காதலால் நடைவிளங்கு 'தமிழ்மாலை' பத்தையும் நவில்கின்றார் ஆழ்வார். அத்தோடு தம்மை, 'வெண்கொற்றக் குடையினையும், வீரம்மிக்க தானையையும், வெற்றி பொருந்திய ஒள்ளிய வாளினையும் உடைய மதுரையார் மன்னன், கொடைக் குணம் உடைய குலசேகரன்' என அறிமுகம் செய்து கொள்ளுகின்றார்.

இத்திருமொழியைத் திருவரங்கத்தைக் காணாமலேயே, காணவேண்டும் என்னும் அவாவோடு ஆழ்வார் பாடியிருக்கின்றார் எனச் சிலர் கூறுகின்றனர். அங்ஙனம் கொள்ளாமல் திருவரங்கத்தைப் பலகால் பார்த்து வணங்கியவர், அரசியல் காரணமாக இடையில் போய்வரமுடியாத பிரிவு நிலையில் பாடியருளியது எனக் கொள்ளுதலே பொருந்துவதாகும்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

6. அழுத கண்ணீரும் அரங்கன் கோயில் திருமுற்றமும்

அரங்கனை அகம் நெகப் பாடிய குலசேகரர், அவன் அடியாரைப் பாடும் திருமொழியே இரண்டாம் திருமொழி. இத்திருமொழியைக் கி.பி.1088-இல் அரசு புரிந்த குலோத்துங்க சோழனது 18-ஆவது ஆட்சி ஆண்டில் கோயிலில் பாடுமாறு ஏற்பாடு செய்த ஒரு சாசனம் (S.I.I.VOL.III No.70) கிடைத்துள்ளது. இதன் சிறப்பினை விளக்குவதற்கு இச்சாசனத்தை எடுத்துக் காட்டாகக் கூறுவர்.

மால்கொள் சிந்தையர்

தேனீக்கள் மலர்களின் வண்ணத்தையும் மணத்தையும் கொண்டு தேனிருக்கும் இடந்தேடி எடுக்கின்றன. ஆனால், தென்னரங்கன் எனும் தேன் 'வாக்குமனாதீத கோசரன்'! அதாவது, வாக்குக்கும் மனத்துக்கும் எட்டாமல் எட்டும் தேடரும் தேன். அப்பெருமான் திருமாது வாழ்கின்ற துளசிமாலை அணிந்த மார்பினன். புருஷகார பூதையாகிய தாயார் உடனிருப்பதால் தானே வந்து தண்ணளி செய்வான். அங்ஙனம் தண்ணளி பெற்றவர்கள் அப்பெருமானை வாழ்த்தி அவனிடத்துப் பித்தேறிய சிந்தையராய் ஆடிப் பாடி அவனை அழைத்து அயர் வெய்துவர். அம் மெய்யடியார்கள் திருக்கூட்டத்தைக் காண்பதே கண்பெற்ற பயன் அன்றோ? இறைவன் பொருட்பித்துக் கொண்டவர்க்குப் பொய்யனாகியும் அருட்பித்துக் கொண்டவர்க்கு அமுதமாயும் இருப்பவன்.

அருளமுதை உண்ட ஆனந்தபரவசத்தால் அவர்கள் ஆடிப் பாடுவர். உலகியல் பித்துடையவர்க்கு இந்த அருட்பித்துப் பிடிபடாது. அருட்பித்துடையாரைத் தரிசிப்பது ஆண்டவனைத் தரிசிப்பதற்கொப்பாகும். எனவேதான், ஆழ்வார் 'அடியார்கள் தம் ஈட்டம் கண்டிடக் கூடுமேல் அது காணும் கண் பயனாவதே' எனக் கூறுகின்றார்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

தொண்டரடிப்பொடி

இதழ்விரிந்த தாமரையில் இனிதிருப்பவள் எம்பிராட்டியாகிய திருமகள். அப்பெருமாட்டியே எல்லா உயிர்களுக்கும் தாயாகையால் அவளைத் தழுவி முயங்குகின்றான் எம்பெருமான். அச்செயல் எல்லா உயிர்களுக்கும் அருள்பாலிக்கும் செயல். தாங்கரும் துயருற்றுத் தன்னைச் சரணடைகின்றவரை இறைவன் கைவிடுவதில்லை. வஞ்சனையற்ற நெஞ்சோடு தன்னைச் சோதனை செய்பவர்களைக்கூடத் தாங்கிக்கொள்பவன் அவன். இராமாவதாரத்தில் தன்னைச் சரணடைந்த சுக்கிரீவனின் மனநிறைவுக்காக, மிகப் பெரும் மராமரங்களை ஓரம்பினால் துளைத்துக்காட்டி ஆட்கொண்டான். அவனுக்கு அரசபதவியையும் தேடித்தந்தான்! கிருஷ்ணாவதாரத்திலோ ஆயர் பாடியில் அவ்வாயர்களோடு ஆயனாய்க் கன்றுகாலிகளை மேய்த்து வந்தான் மகாப் பிரபுவான அப்பெருமான். தன்னைச் சரணடைந்த எளியவர்களுக்காக அவனது எளிவந்த தன்மையை நினைந்து அடியார் பெருமக்கள் ஆடிப்பாடி அரங்கனே எனவழைத்து நெக்குருகுகின்றனர். அத்தகு தொண்டர் அடிப்பொடியாகிய துகளில் தோய்வதைக் காட்டிலும் கங்கை நீரில் தோய்தல் வேண்டுமென்னும் அவா உயர்வானதோ? இல்லை என்கிறார் குலசேகரப் பெருமாள்.

" தோடு லாமலர் மங்கை தோளிணை தோய்ந்ததும் சுடர்வாளியால்
நீடு மாமரம் செற்ற தும்நிரை மேய்த்ததும்மிவை யேநினைந்து
ஆடிப் பாடி அரங்கா! வோ!என் றழைக்கும்தொண்ட ரடிப்பொடி
ஆட நாம்பெறில் கங்கைநீர்குடைந் தாடும் வேட்கையென் னாவதே! "

(2-2)

என்பது அப்பாசுரம். இதனுள் இடம்பெறும் தொண்டரடிப் பொடி என்ற சொல் தொண்டரடிப் பொடி ஆழ்வாரைக் குறிப்ப தென ஒருசார் அறிஞரும், குறியாதென ஒருசார் அறிஞரும் ஆய்வுகளை நிகழ்த்தியுள்ளனர். தமக்குச் சற்று முன்போ அன்றித் தமது காலத்திலோ வாழ்ந்த அவ்வாழ்வாரை நினையாமல் குலசேகரர் இச்சொல்லைப் பெய்திருக்கலாம் என்று மற்றொரு சார் அறிஞர் வினவுகின்றனர். இச்சொல்லின் அருமையை அனுபவித்த விப்பிர நாராயணர் எனும் ஆழ்வார் தம்மை இச்சொல்லாலேயே அழைத்துக் கொண்டார். ஆகவே, அவரும் நம் குலசேகரர் காலத்தவராகவோ சற்றுப் பிந்தியவராகவோ வாழ்ந்திருக்க வேண்டும் என்றும் சிலர்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

கருத்துக் கூறுகின்றனர். எது எப்படி இருப்பினும் பாடலின் நேர்பொருளில் 'தொண்டர்களின் பாதத் துகள்' என்று பொருள் கொள்ளவே வேண்டும்.

பொன்னியாறாய்ப் பொங்கும் கண்ணீர்

நப்பின்னையின் தந்தை அவளை மணக்க ஏழு எருதுகளை அடக்க வேண்டுமென்ற நிபந்தனை இட்டிருந்தார். அப் பிராட்டியின் அன்புக்காக அவற்றின் வலியடக்கினான் கண்ணனாக! இரண்யாட்சன் எனும் கொடியவன் பூமியையே பாயாகச் சுருட்டிக் கடலில் ஒளித்தான். அவனை அழித்துப் பூமியைத் தன் கோட்டால் குத்தி எடுத்துவந்தான் வராகமாக! சீதா பிராட்டியை எடுத்துச் சென்ற இராவணனைக் குலத்தோடும் கொன்றொழித்தான் இராமனாக! தேவர்களின் துயர்தீர்க்க மாவலியின் திறலடக்க மண்ணளந்தான் திருவிக்கிரமனாக! இங்ஙனம் அறந்தலை நிறுத்திய அற்புதங்களே அவதாரங்கள். எளியவர்க்காக வலியவரை வாட்டி நீதியை நிலைநாட்டியவையே அவதாரங்கள். உயிர் வர்க்கங்களெலலாம் உய்தி பெற உடன் நின்று உதவி, மெலியதை வலியது வதைக்கும் போதெல்லாம் தன்னுடைய தண்ணளியால் தானே இறங்கிவந்து நின்ற தயாவை நினைக் கின்றனர் மெய்யடியார்கள். அவர்களின் நெஞ்சங்கள் விம்மித முறுகின்றன. அவனது அருளை நினைந்து நினைந்து நெக்குருகுகின்றனர். கண்களிலிருந்து காவிரி போல் கண்ணீர் வழிந்தோடித் திருவரங்கனின் திருக்கோயில் முற்றம் சேறாகின்றது. தொண்டர்தம் திருவடிபட்டுச் சேறான குழம்பைத் தம் சென்னியில் சந்தன நறுஞ்சாந்தாய் அணிவேன் என்கிறார் ஆழ்வார். இந்த அன்பை நாமும் ஆராதிப்போம்.

நாத் தழும்பும் மெய்த் தழும்பும்

இதுவென்ன இப்படியும் ஒரு பிள்ளையா? எவ்வளவு கொடுத்தாலும் கொடுத்ததில் ஆர்வங்காட்டாது தானே திருடித் தின்னுகின்றதே! இந்தச் சின்னத்திருடன் திருடுவது என்னவோ தயிரும் பாலும் வெண்ணெயுந்தான். அவை என்ன ஆயர் பாடியில் கிடைக்காத சரக்கா? அதுவும் அவன் வீட்டில் இல்லாததா? யசோதை கொடுக்கத்தான் மாட்டாளா? அதெல்லாம் இல்லை; இந்தச் சின்னத் திருடனுக்குத் திருடுவதில்தான் இன்பம்! ஒருநாள் இந்தத் திருட்டு அரங்கேறிக் கொண்டிருந்தது. வரிசையாகக் கலங்கள். ஒன்றில் தண்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

தயிர், ஒன்றில் கட்டி வெண்ணெய், மற்றொன்றில் பதமான இளம் சூட்டில் பால்; எல்லாக் கலங்களிலும் இவனின் தளிர்க் கைகள் புகுந்து வெளிவருகின்றன. ஒருவாய் தயிர், ஒருவாய் வெண்ணெய், ஒருவாய் பால் என இப்படி எல்லாவற்றையும் மாறி மாறி அவசர அவசரமாக உண்டுகொண்டிருக்கிறான். உரியவள் உள்ளே வந்து விடுகிறாள்! குழந்தை விழிக்கிறான்! தப்பித்து ஓட வழியில்லை. ஓடினாலும் அவள் விடுவளாகத் தெரியவில்லை! ஊரையே உதவிக்கழைத்தாவது பிடித்துவிடுவாள்! அவ்வளவு கோபம் அவளுக்கு! இருக்காதா பின்னே! ஒன்றும் கிடைக்காமல் பட்டினி கிடந்தவன்போலப் பால், தயிர், வெண்ணெய் என எல்லா வற்றையும் ஒருசேர உண்டிருக்கிறானே! உண்டது கொஞ்சம், கொட்டி வீணாக்கியது அதிகம். பிள்ளை நடுங்குகின்றான்! நடுக்கமா அது? அத்தனையும் பாசாங்கு! அவளுக்குத் தெரியும் இந்தத் திருடனின் நடிப்பெல்லாம்! கயிற்றை எடுக்கிறாள். கால்களுக்குத் தளையிடுகின்றாள்! பிறகு தோள்கள் இரண்டையும் பிணைக் கின்றாள். விட்டால் ஓடிவிடுவானே!

பிறகு பிடிப்பது சிரமம்! கொஞ்ச நேரங்கழித்து வந்து கழுத்தைக் கட்டிக்கொண்டு கொஞ்சுவான்! பிறகு தண்டிக்க முடியாது! எனவே, இப்பொழுதே இந்தத் திருடனைக் கட்டிவிட வேண்டுமென்று கட்டுகின்றாள். பாலும், தயிரும், வெண்ணெயும் ஒழுகிய வாயும் மார்பும் அப்படியே இருக்கக் கட்டுகிறாள். குழந்தை சோகமாக நிற்பதுபோல் பாவனை செய்கிறான். இப்படி நடித்தால்தான் இன்னும் சிறிதுநேரத்திற்குக் கூடத் தாங்காமல் அவளே வந்து அவிழ்த்துவிடுவாள்! ஆனாலும் இப்பொழுது நிற்கின்றான். அவன் யார்? அகிலாண்டகோடி பிரமாண்ட நாயகனல்லவா? ஆக்கவும்; அளிக்கவும், அழிக்கவும் வல்ல அலகிலா விளையாட்டுடையவ னல்லவா? அவனையன்றோ 'கண்ணிநுண் சிறு தாம்பினால்' யசோதை கட்டியிருக்கின்றாள்! அதுவும், 'தோடுலா மலர்மங்கை தோளிணை தோய்ந்த தோள்களை' யன்றோ கட்டி இருக்கிறாள்!

இந்த லீலா வினோதத்தை நினைத்துப் பார்க்கிறார் குலசேகரர்! ''எம்பிரான், என்னரங்கன்'' என அவர் நெஞ்சு விம்முகின்றது. சிற்றுயிர்க்கு உற்ற துணையான இந்தச் சேவகனை அன்றோ அவனுடைய அடியார்கள் நாத்தழும்பேற ''நாரணா, நாரணா'' என்றழைத்தபடி விழுந்து விழுந்து இடையறாது வணங்குவதால் மெய் தழும்பேறவும் பெறுகின்றனர். இங்ஙனம் இன்புறும் தொண்டர்களின் சேவடிகளை நெஞ்சார வாழ்த்துகின்றார் மன்னர்பிரான்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

" தோய்த்த தண்டயிர் வெண்ணெய் பாலுடனுண்ட லும்உடன் றாய்ச்சி
ஆர்த்த தோளுடை யெம்பி ரானென் னரங்க னுக்கடி யார்களாய்
நாத்த ழும்பெழ நார ணாவென் றழைத்து மெய்தழும் பத்தொழுது
ஏத்தி இன்புறும் தொண்டர் சேவடி யேத்தி வாழ்த்துமென்று நெஞ்சமே "
(2-4)

என்பது அப்பாசுரம். அரங்கத்தம்மானை நெஞ்சகம் கொண்டதால் அவன் அடியார்களை உச்சிமேல் கொள்கின்றார் ஆழ்வார்.

நினைக்கச் சிலிர்க்கும் நெஞ்சம்

நப்பின்னையை மணக்கவேண்டுமாயின் ஏழு கொலை எருதுகளை வெல்ல வேண்டும். முயற்சியின்றி, போராட்டமின்றிக் கிடைக்கின்ற எதுவும் மதிப்பைப் பெறுவதில்லை.. போராடிப் பெறுவதையே உலகம் புகழ்கின்றது. கண்ணன் நப்பின்னை காதலுக்குத் தடையாக ஏழு எருதுகள். அவற்றை வென்றாக வேண்டும். அவனுக்கு அது ஒரு பொருட்டில்லை! கோவர்த்தன மலையே அவன் கையில் குடையாகும்போது இந்த எளிய பிராணிகள் எம்மாத்திரம்! அவன்தன் அற்புதங்களை ஆயர்பாடி அடிக்கடி மறந்து போமாறு செய்துவிடுகின்றான் அவன். எனவேதான், இந்த எருதுகளை அவன் முன் அவிழ்த்து விட முடிவு செய்தான் நப்பின்னையின் தந்தை! முடிவைக் கூற வேண்டுமோ? ஏழு எருதுகளும் கொம்புகளை இழந்து குதித்தோடி விட்டன. பிறகென்ன? கோலாகலமான திருமணந்தான்.

பூமியில் பொய்ம்மைகள் மனித ஆற்றலுக்கு விஞ்சிப்போய் விடுமானால் அவன் புறப்பட்டு வருகிறான். அப்படித்தான் ஆயர் சிறுவர்களை அம்மடுவில் இருந்த 'காளிங்கன்' என்னும் கரும் பாம்பு மிரட்டிவந்தது. கொடுமை எப்பொழுதும் போர்ச் சன்னத்தமாகவே இருக்கும். 'காளிங்கனும்' அப்படியே இருந்தது. மடுவில் பாய்ந்து அதன் மமதையை அடக்கினான் கண்ணன். இத்தகு ஏற்றமிகு செயல்களைச் செய்த எம்பெருமான், கல்லால் இயன்று ஒளிமிகுந்த திண்ணிய பெரிய மதில்களால் சூழப்பெற்ற திருவரங்கத்துக் கோயிலுக்குள் அர்ச்சாவதார அரங்கனாகப் பள்ளி கொண்டிருக்கின்றான். அவன், கருமேகமொன்று வில்தாங்கி நின்றது போன்ற திருக்கோலத்துடன் அடியவர் நெஞ்சகம் சிலிர்க்குமாறு அவருள் நிறைகின்றான். அத்தகைய அடியார் நினைவில் தம் நெஞ்சம் சிலிர்க்கிறதென்கிறார் ஆழ்வார்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

தீதில் நன்னெறி

சீமந் நாராயணன் சத்தியம், ஞானம், அனந்தம், ஆனந்தம் ஆகியவற்றின் சொரூபமாக இருப்பவன். இடமும் காலமும் அவனைக் கட்டுப்படுத்துவதில்லை. மூன்று வித சேதந, அசேதந, பரிணாம ரூபமான விகார தோசங்கள் அவனுக்கில்லை! தனக்கு ஒப்பாரும் மிக்காருமில்லாத அப்பெருமான் ஞானம், சக்தி, பலம், ஐசுவரியம், வீரியம், தேஜஸ் எனும் திருக்கலியாண குணங்களோடு வாத்சல்யம், சௌலப்பியம், சௌசீல்யம் முதலான எண்ணற்ற குணங்களை உடையவன். அவனே சித்து, அசித்துகளில் நுட்பமாய் நிறைந்து, முதற்காரணமாய், பிறகு அவனே அவற்றை உலகங்களாய் உருவாக்கச் சங்கற்பிக்கும் போது நிமித்தகாரணமாய் நிற்கிறான். பிரபஞ்சத்தைக் காரியமாக்கிக் கலந்து நின்று செயற்படும்போது துணைக்காரணமாய் விளங்குகின்றான்.

இத்தகு இறைவன் தனக்கெனத் தோற்றமும் முடிவுமற்றவன். எல்லாமாகவும் அற்புதமாகவும் இருக்கின்றான். தேவாதி தேவன் அவன்! அப்பெருமானின் பாத மாமலர் சூடும் பக்தி இல்லாதவர்கள் பாவிகள்!

பகுத்து உணரத் தெரியாத உயிர்களுக்கிடையில் பகுத்துணரும் பண்பினைப் பெற்றவன் மனிதன். அதனால் பெறுகின்ற பயனை அறியாதவர்களாய்ப் பாவமே செய்துழல்கின்ற மனிதர்கள் பலர், தமக்கு இறைவன் கொடுத்துள்ள நற்பேறுகளை அனுபவித்துக் கொண்டு, அவனிடத்து நன்றி இல்லாதவர்கள் பாவிகள். அவர்கள் திருந்தி நல்வழிப்பட வேண்டும். அவர்களுக்குத் 'தீதில் நன்னெறி'யாகிய பிரபத்தி நெறி காட்டப்படவேண்டும். எம்பெருமானுக்கு அவர்களை ஆளாக்க வேண்டும் என்ற இவ்வுணர்வோடு திருவரங்கத்தம்மானைக் காதல் செய் தொண்டர்கள் எங்கணும் சுற்றித் திரிகின்றனர். அவர்களின் உயர்பணியும் உத்தம பக்தியும் அரசர் பெருமானை ஆட்கொண்டதால் அம்மெய்த் தொண்டர்களைத் தமக்கு வருகின்ற எப்பிறப்பாயினும் அப்பிறப்பில் மறவாமல் அவர்களுக்குத் தம் மனம் காதல் செய்யும் எனக் கசிந்துருகுகின்றார்.

சுடர்சேரும் நெஞ்சினரைக் சூழும் என் நெஞ்சு

'ஆதியும் அந்தமுமில்லா அரும்பெரும் சுடராக நிற்கும் அம்மான், அர்ச்சா மூர்த்தியாக அரங்கனாகப் பள்ளி கொண்டிருக் கின்றான். அப்பெருமானுடைய திருமேனி மேகத்திரள் போன்றது. முத்துப்போலும் தண்ணொளியுடைய புன்னகையை உடையவன்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

அவன். பவளம்போலும் சிவந்த வாயழகையும், ஆரங்கள் சேர்ந்த மார்பினையும் உடையவன் அவன். அத்தகு அரும் பெரும் சுடரானவனை இடையறாமல் நினைக்கும் நெஞ்சினராய் அன்பு மிகுதியால் கசிந்தழும் கண்ணீரை உடைய அன்பரின் பாதமலர்களுக்கு அன்புடையதாகும் என் நெஞ்சு என்கிறார் ஆழ்வார்.

தொண்டர் வாழ்வு

அரசர்க்கரசராயிருந்து அனுபவித்து வரும் ஒருவர் அரங்கனைப் பாடி, ஆண்டியாய் ஊர் தோறும் திரிவதற்கு ஆசைப்படுவ துண்டோ? அப்படி ஒரு வாழ்வுக்கு ஆழ்வார் மால் கொள்கின்றார். அரங்கனைப் பாடித் திரிவதில் அவ்வளவு ஆனந்தமா? அந்த ஆனந்த அனுபவம் ஆழ்வாரையும் ஆட்கொண்டுவிட்டது. ஆனந்தப் பேரூற்றாய் இருக்கும் அரங்கன் எப்படிப்பட்டவன்? அவன் திருப்பாற்கடலில் பள்ளி கொண்டிருப்பவன்; திருத்துழாய் மாலை அணிந்த, வரைப்பெருந்திருமார்பை உடையவன்; செந்தாமரை மலர்போலும் அழகிய கண்களை உடையவன்; கண்டாரை மயக்கும் கட்டழகன்; கேட்பாரையும் நெஞ்சுருக வைப்பவன். இத்தகையவனுக்கு மையல் கொண்டு அவன் திருநாமங்களையும் திருப்புகழ்களையும் சொல்லி ஆடிப்பாடிப் பித்துற்றுத் திரியும் அடியார் போல வாழ்வதற்குப் பித்தாகின்றது என் நெஞ்சு என்கிறார் ஆழ்வார்.

" மாலை யுற்ற கடற்கி டந்தவன் வண்டு கிண்டு நறுந்துழாய்
மாலை யுற்ற வரைப்பெ ருந்திரு மார்ப னைமலர்க் கண்ணனை
மாலை யுற்றெழுந் தாடிப் பாடித் திரிந்த ரங்கனெம் மானுக்கே
மாலை யுற்றிடும் தொண்டர் வாழ்வுக்கு மாலை யுற்றதென்
னெஞ்சமே! "(2-8)

என்பது பாசுரம். இதில் 'மாலை' என்னும் ஒரு சொல் திரும்பத் திரும்ப வந்து கவிதைச் சுவை மீதூரும்படி செய்வது காணத் தக்கது.

பித்தராவார் யார்?

உலகில் ஒவ்வொருவரும் தம்மைத் தாமே தெளிவுள்ளவராகக் கருதிக் கொள்கின்றனர். ஆனால், பெரும்பாலும் உண்மை வேறாக இருக்கின்றது. "யாம் அறிவுடையோம், தெளிவுடை யோம்" எனக் கூறிக்கொள்ளும் பலரும் உலகில் நில்லாதனவற்றிற்கே தம் வாழ்நாளை வறிதாக்கிக் கொள்ளுதலைக் காணுகின்றோம். அவர்கள் பொருளுக்காகவும், புகழுக்காகவும், போகங்களுக்காகவும் பெரும்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

போராட்டங்களை நடத்தவும் செய்கின்றனர். உறவென்றும், பகையென்றும், உற்றார் என்றும் பெற்றார் என்றும் உலகில் உள நாள் வரை ஓயாது உழல்கின்றனர்! கானல் நீரை உண்மையென நம்பிக் கானகத்தில் கால் கடுக்க ஓடும் கடமாப் போல வாழ்நாள் முழுவதும் வறிதாக்குகின்றார்.

அரங்கனை அடியார் தம் அனுபவப்பொருளாகக் காட்டும் ஆழ்வார் கூறுகின்றார்: 'ஆனந்தக் கண்ணீர் இடைவிடாது சொரியவும், உடல் மயிர்க் கூச்செறியவும், நெஞ்சு தளர்ந்து நின்று களைத்துப் போய்க் கைகூப்பி நின்ற நிலையில் நில்லாமல் ஆடிப்பாடி வணங்கி வாழ்த்தி, என் தந்தையும் தலைவனுமாகிய அரங்கனுக்கு அடியாரானவர் அவனுக்கே பித்தராயினர்! இங்ஙனம் பித்தரானவர் உலகவர் கூறுவது போலே பித்தர்களல்லர். அவர்களைப் பித்தர்கள் எனக் கூறுவோரே முற்றும் பித்தர்கள்:

" மொய்த்துக் கண்பனி சோர மெய்கள் சிலிர்ப்ப ஏங்கி இளைத்துநின்று
எய்த்துக் கும்பிடு நட்ட மிட்டெழுந்(து) ஆடிப் பாடி இறைஞ்சியென்
அத்த னச்ச னரங்க னுக்கடி யார்க ளாகி அவனுக்கே
பித்த ராமவர் பித்த ரல்லர்கள் மற்றை யார்முற்றும் பித்தரே! " (2-9)

என்பது பாசுரம். அரங்கனுக்கு ஆளாகி அன்பு பெருகி ஆனந்தக கூத்தாடும் அடியவர் உலகியலாருக்குப் பித்தரைப் போலக் காட்சி தருவதால் அவ்வடியாரைப் பார்த்து நகைக்கிறார்களாம்!

உலகின் நிலையாமையை உணர்ந்து, பிறந்ததன் பயனை அறிந்து, பிறப்பறுக்கத் துணிந்து, பெருமாளைச் சரணடைந்த வர்களைப் பித்தரென வறிதே வாணாளைப் போக்கி மடியும் மனிதர் கூறி நகை செய்வாராயின் அவர்களன்றோ முற்றிலும் பித்தராய்ப் பிதற்றுவோர்?

இன்தமிழ் மாலை

அலர்மேல் மங்கை மணாளனாகிய அரங்கனின் அடியார்களின் எல்லை இல்லாத அடிமைத் திறத்தினில் என்றும் மனம் வைத்துள்ள கொல்லிகாவலன், கூடல் நாயகன், கோழிக்கோன் குலசேகரன் சொன்ன இன் தமிழ் மாலை இதய பூர்வமாக ஓதி உணர்பவர்கள் அடியார்க்கும் அடியாராகி ஆத்மானுபவத்தை அடைவார்களென்று அருள் வழி நின்று ஆழ்வார் அருளிச் செய்துள்ளார்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

7. அருட்பித்தும் மருட்பித்தும்

பெருமாள் திருமொழியில், முன்றாம் திருமொழி, ஆழ்வார் உலகவாழ்க்கையில் தமக்கிருந்த உவர்ப்பினைக் கூறுவதாக அமைகின்றது. உலக போகங்களெல்லாம் உண்மைபோலிருந்து பொய்ம்மையாய்ப் போய்விடும் உண்மையை ஆழ்வார் உணர்கின்றார். அதற்காக உழலும் வாழ்வும் பொருளற்றது. அவர் அரசரல்லவா? பெரும் போர்களைத் தலைமையேற்று நடத்தியிருப்பார்! நாடு நகரங்களுக்காகவும் பொன் பொருளுக்காகவும் மனிதர்கள் ஒருவரோடு ஒருவர் அடித்துக்கொண்டு மாள்வதைக் கண் முன்னால் காணும் வாய்ப்பு அவருக்கு இருந்தது. நிலையற்றவைகளுக்காக நிலையற்ற மனிதன் போராடிப் புண்படுவதை அவர் கண்முன் கண்டார். அதில் தாமும் பங்கு பெறுவதை உணர்ந்தார். அரசவாழ்வினால் இது தவிர்க்க முடியாததாயிற்று! போர்க்களப் படுகொலைகள் ஒரு புறம்; பொய்ம்மையான அரச போகங்கள் மற்றொரு புறம்; இவை இரண்டிலும் இருக்கும் பொருளற்ற தன்மையைப் புரிந்து கொண்டார்.

குலசேகரர்க்கு நிதரிசனமான உண்மை புலப்பட்டபோது அவர் பெற்றிருந்த வைணவக் கல்வியால், வைணவ மெய்யடியார்கள் வழிகாட்டினர். திருமங்கை மன்னரும், பெரியாழ்வாரும், ஆண்டாளும், தொண்டரடிப்பொடியாரும் நடத்திய வைணவ வாழ்வின் அருமையை உணர்ந்தார். அவர்கள் வழி நின்ற மெய்யடியார்கள் ஆனந்த பரவசராய் ஆடிப் பாடி மகிழ்வதைக் கண்டார். இயல்பாகவே எம்பெருமான்மீது அவருக்கிருந்த ஈடுபாடும் சேர்ந்து கொண்டது. தெண்ணீர்ப் பொன்னித் திருவரங்கப் பெருங்கோயில் தீஞ்சுடர் அவரை ஆட்கொண்டது. கொங்கர் கோமானாய், கொல்லி காவலனாய், கோழிவேந்தனாய்க் கூடலிலிருந்து கோலோச்சிய அவருக்கு அரண்மனையைவிட

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

அரங்கமே பிடித்தது. மதுரையிலிருந்து திருவரங்கம் தொலைவி லிருந்ததால் அரண்மனையே திருவரங்கம் ஆகியது! அடியார் கூட்டம் பெருகியது. ஆடலும் பாடலும் ஆட்சிக் கடமைகளை அகற்றின. அரங்கனின் பித்து அடியாரைமட்டுமல்லாமல் அரசரையும் பிடித்து ஆட்டியது. அமைச்சர் கூறியவற்றைக் காட்டிலும் அடியார் கூறியவை அரசருக்கு வேத வாக்குகளாயின. அமைச்சர்களும், அரச சுற்றமும் முகஞ்சுழித்தனர். அரசர் 'மனநிலை சரியில்லாத' மன்னராயினார்.

உலகவர் முன்னர் உண்மையான பக்தி பேய் ஏறிய பிறழ் மனநிலையாகப் பேசப்பட்டிருக்கும். இந்நிலையில் அடியாரை அரண்மனையை விட்டு ஓட்டுதற்கான அரதனமாலைக் களவுச் சூழ்ச்சி அரங்கேறி யிருக்க வேண்டும். அப்பொழுதுதான் அரவடங்கிய குடத்தில் கைவிட்டு அரசர் சத்தியம் செய்திருக்க வேண்டும். ஆணையிட வேண்டிய அரசர் உண்மையை நிலை நாட்டத் தாமே சத்தியம் செய்ய வேண்டிய எளியநிலை ஏற்பட்டு விட்டதென்றால் அப்பொழுதிருந்த அரசுச் சூழல் எப்படி இருந்திருக்க வேண்டுமென்பதை நாமே உய்த்துணரலாம். சத்தியம் செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டபின் அரசர் அரியாசனத்தில் அமரும் விருப்புடையராய் இருந்திருக்க முடியாது. அடியவர்களை அரண்மனையை விட்டு அகற்றத் தொடங்கிய சூழ்ச்சி அரசரையும் அடியாராக்கி அவர்களுடன் போகவைத்து விட்டது. அப்பொழுது பாடப்பட்டதாக இத்திருமொழி இருக்க வேண்டும். அரச போகத்தை விட்டு அரங்கனின் போகத்துள் ஆழ்ந்த அரசரின் மனநிலையை இத்திருமொழி நன்கு எடுத்துக் காட்டுகின்றது.

பொய்யும் மெய்யும்

பொய்யை மெய்யாகக் கொள்வாருண்டோ? 'உண்டு' என்பதுதான் உலகில் பெரும்பான்மை. உலகவரில் மிகமிகப் பெரும்பான்மையோர் கடந்து போன எண்ணற்ற காலங்களிலும், நிகழ்விலும் பொய்யை மெய்யெனவே கொண்டு வாழ்ந்தனர் - வாழ்கின்றனர்; இனியும் வாழ்வர். இது ஓர் அற்புத மாயம்! கண்முன்னால் இருப்பவை கனவாய்க் கழிவதைக் கண்டும், காணாத வாழ்க்கையையே மக்கள் மகிழ்வோடு வாழ்கின்றனர்!

அரிய பொருளொன்றனைக் கையில் வைத்திருக்கும் சிறு குழந்தையிடம் அற்பமான பொம்மையொன்றினைக் காட்டிப் பொருளை மெதுவாக வாங்கிக் கொள்வது போல இந்த நாடகம்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

நடக்கின்றது. இதனைப் ''பொய்த் தன்மைத்தாய மாயப் போர்வையை மெய்யென் றெண்ணும் வித்தகத்தாய வாழ்வு'' என விவரிப்பார் சுந்தரமூர்த்தி சுவாமிகள். இத்தகைய உலகவாழ்வோடு தம்மால் இசைந்து போக முடியவில்லை என்கிறார் ஆழ்வார்.

'மெய்ம்மை இல்லாத வாழ்க்கையை மெய்யெனக் கொள்ளு கின்றது இந்த வையகம். இதனோடு இசைந்து கூடிவாழ்தல் என்னால் இயலாதது! ஐயனே! அரங்கா! என்று அனவரதமும் அவன் திருநாமத்தைக் கூறும் பேறு பெற்றுப் பித்துடையனாக இருக்கின்றேன்' எனப் பேசுகின்றார் ஆழ்வார்.

'' மெய்இல் வாழ்க்கையை மெய்யெனக் கொள்ளுமிவ்
வையந் தன்னொடும் கூடுவ தில்லையான்
ஐயனே! அரங்கா! வென்றழைக் கின்றேன்
மையல் கொண்டொழிந் தேனென்றன் மாலுக்கே! '' (3-1)

என்பது பாசுரம்.

மாரனார் வரிவெஞ்சிலை

மாரனாகிய மன்மதன் அழகியவன்தான்! அவன் கைக் கொண்டிருக்கும் கட்டமைந்த கரும்புவில்லும் அழகியதுதான். ஆனால், அந்த அழகன் அழகிய வில்லைக் கொண்டு செய்கின்ற காரியந்தான் அடாதது! கொடியது! காமமென்னும் கடுமடுவில் தள்ளுவது! பிறந்து பிறந்து இளைக்கும் உயிர்வர்க்கத்தை மீண்டும் மீண்டும் பிறவிக்கே கொண்டு செல்வது! ஐம்புல இன்பத்துள் ஆழ்த்தி அச்சிற்றின்பமே பேரின்பமாகக் கருதி உயிர்கள் போகத்தில்-மயக்கத்தில் வீழ்ந்து கிடக்க வகை செய்வது! உடலின் ஆட்சி உயிர்மேல் செல்லுமாறு செய்து உயிர் அறிவை மழுங்கவைப்பது! உலகெலாம் இந்த மாரனார் வரிவெஞ்சிலைக்கே ஆளாகிப் பணி செய்வதாகக் கூறுகின்றார் ஆழ்வார். அருள் வடிவாக நின்று ஆருயிர்களை உய்விப்பதற்காகக் கனிந்துவரும் இறை இன்பத்திற்கெதிராகப் போர் தொடுக்கிறான் இந்த மன்மதன். இந்தப் போரில் பெரும்பாலும் அவனே வெற்றி பெறுகின்றான்.

முத்தாரம் ஒளிரும் திருமார்பை உடைய அரங்கன் சர்வ வியாபியாய் அனைத்திலும் இருப்பவன். நீர்போலும் தண்ணளி யுடையவன் நாரணன். அப்பெருமான் விருப்பு வெறுப்பற்றவன். பந்த பாசங்களில் பற்றாதவன். நரகாசுரனை அழித்ததால் அவன் நராந்தகன். இத்தகைய பெருமானுக்கு உடல், பொருள், ஆவி ஆகிய

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

அனைத்தையும் கொடுத்துப் பித்தான பின் மன்மதனுக்குத் துணைபோகும் உலகவரோடு எங்ஙனம் கூடுவது?

" மார னார்வரி வெஞ்சிலைக் காட்செய்யும்
பாரி னாரொடும் கூடுவ தில்லையான்
ஆர மார்வ னரங்க னனந்தன்நல்
நார ணன்நர காந்தகன் பித்தனே " (3-3)

என்பது பாசுரம். புலனின்பங்களாகிய பொய்ம்மைகளை மெய்ம்மையாகக் கொள்ளும் உலகவரோடு அருளின்பமாகிய ஆன்மலாபத்தை அடைந்தவர்கள் இசைந்து போவதெங்ஙனம்?

தாமரைத் திருவின் தங்கமணாளன்

உயிர்வர்க்கங்களுக்கு நான்கு வகையான பசிகளுண்டு! அவை: வயிற்றுப் பசி, உடற் பசி, அறிவுப் பசி, ஞானப் பசி என்பன. இவற்றுள் வயிற்றுப் பசியும், உடற் பசியும் எல்லா உயிரினங்களுக்கும் பொதுவானவை. அறிவுப் பசியும் ஞானப் பசியும் மனிதர்க்குச் சிறப்பானவை! இங்ஙனமே இப்பசிகளுக்காகத் தேடுதல் என்பதும் உயிர்களின் பொதுச்செயலாக அமைகின்றது. முதலிரு பசிகளுக்காக எல்லா உயிர்களும் தேடுதலை மேற்கொள்ளப் பின்னிரண்டு பசிகளுக்குத் தேடுதலை மேற்கொள்பவர் மனிதரே! ஆயினும், உலகியல் வாழ்வில் பெரும்பான்மையான மனிதர்கள் முதலிரு பசிகளை ஏனைய உயிர்களைப் போல நிறைவு செய்வதிலேயே நின்றுவிடுகின்றனர். சிலர் மூன்றாவதாகிய அறிவுப் பசியை முன்னிட்டுத் தேடுகின்றனர். ஆனாலும் இத்தேடுதல் மனிதனின் புறத்தேவைகளையே பூர்த்தி செய்தது. இதனால் மனிதனின் புறத்தேவைகள் மிகுந்தன. அவற்றைப் பெறுதற்கான போட்டிகள் - போர்கள் மனிதனின் அகத்தையும் புறத்தையும் ஆக்கிரமித்தன. புலனின்பங்களே முதன்மைப்பட்டன.

ஞானப் பசி கொண்ட சிலர் தமக்கும், தாம் வாழ்கின்ற பிரபஞ்சத்திற்கும் மூலமாக இருப்பதனைத் தேடினர். அங்ஙனம் தேடித் தெளிந்த ஞானத்தை உலகிற்கு வழங்கினர்.

ஆதியாகவும், எளிவந்த ஆயனாகவும், அர்ச்சாவதார அரங்கனாகவும், அந்தாமரைத் திருவின் அழகிய மணவாளனாகவும் விளங்குகின்ற அம்மானுக்கு ஆளாகி - அவனுக்கே பித்தாகி நிற்கின்றார் ஆழ்வார். ஆனால், உலகவரோ தீமையில்லாத பிரபத்தியாகிய பெருநெறி தம் முன் இருக்கவும், அவ்வழிச் சென்று

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

உயர்ந்த பொருளை அடைய வேண்டும் என்னும் சீரிய நோக்கமின்றி உறுதிப் பொருளை அடைவதற்குப் புறம்பான நெறி நின்று அதுவே நியாயமென்று பேசியும் எண்ணியும் வருகின்ற பேதை மனிதர்கள்! இவர்களோடு ஒத்து வாழ்வதெப்படி? தம்மால் இயலாதெனக் கூறுகின்றார்.

" தீதில் நன்னெறி நிற்கஅல் லாதுசெய்
நீதி யாரொடும் கூடுவ தில்லையான்
ஆதி ஆய னரங்கன் அந்தாமரைப்
பேதை மாமண வாளன்றன் பித்தனே - " (3-5)

சித்தம் தவிர்த்த செங்கண்மால்

தகுதி என்பது எதைப் பொறுத்தது? உலகியலில செல்வம், கல்வி, அறிவு, ஆண்மை, அதிகாரம், வயது, அழகு என எவ்வளவோ நிலைகளில் தகுதியை நிர்ணயித்துக் கூறலாம். ஆனால், அது முடிவானதாக இருக்க முடியாது. ஏனெனில், ஒன்றை உயர்ந்தது என முடிவு செய்த பிறகு அதனினும் மேம்பட்டது வரலாம். வரக்கூடிய வாய்ப்புண்டு. மேலும், மேற்கூறிய தகுதியை நிர்ணயிக்கும் கூறுகள் இவ்வளவினதென அளவிட்டுக் கூற - எல்லை வகுக்க முடியாதவை.. காலத்தாலும் இடத்தாலும் பாதிக்கப்படக் கூடியவை! ஆனாலும், மனிதர்கள் தங்களுக்குள் இவை போன்றவற்றின் அடிப்படையில் தகுதிகளை நிர்ணயிக்கவே செய்கின்றனர். அதற்காகப் போராடுகின்றனர்! அதனால் பெறுகின்ற கோபம், பொறாமை, அவமானம், ஆதங்கம் என எத்தனையோ உணர்ச்சிகளுக்காட்பட்டுத் தடுமாறுகின்றனர். ஓயாத கவலைகளினால் உள்ளுடைந்து வாடி உயிர் விடுகின்றனர். இத்தகையவரோடு கூடி வாழ முடியாதென்கிறார் குலசேகரர். அம்மட்டோ! உலக வாழ்வில் ஈடுபட்டுத் தான தர்மங்களைச் செய்து, நல்வினைகளைச் சேர்த்து, அப்புண்ணியப் பயனாய்ப் பெறுகின்ற மேலுலக வாழ்வையும் அவர் ஒரு பொருட்டாக மதிக்கவில்லை! அதனால் பயனென்ன? புண்ணியப் பயன் தீர்ந்தவுடன் மண்ணுக்குத் திரும்ப வேண்டுமே!

'அமரர்க்குத் தம்பிரானாய்த் திருவரங்கத் திருக்கோயிலில் எம்பிரானாய் எழுந்தருளியிருக்கும் திருவரங்கன் இம்மைக்கு மட்டுமோ, எழுமைக்கும் பற்றாவான்! அங்ஙனம் பற்றாக நிற்கும் பரமனுக்கு அவ்வெழுமையிலும் மாலாகி நிற்கும் மனமுடையேன்' எனக் கூறும் ஆழ்வார் 'இங்ஙனம் எனைப் போல் மால் கொண்ட

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

மனத்தவரோடன்றிப் பிறரோடு சேர்ந்திருக்க முடியாது' என்க கூறுகின்றார். அத்தனே! அரங்கா! என அவன் திருநாமங்களைச் சொல்லிச் சொல்லி அவனுக்கே பித்தனாய் ஆயினமையின், அவன் அடியாரல்லாதவரோடு சேர்ந்திருக்க ஒருப்படும் மனத்தை என்னிடமிருந்து அகற்றி அருள்பாலித்திருக்கின்றான்' என விம்மிதம் உறுகின்றார் குலசேகரர்.

" எத்திறத்திலும் யாரொடும் கூடுமச்
சித்தந் தன்னைத் தவிர்த்தனன் செங்கண்மால்
அத்த னேஅரங் காவென் றழைக்கின்றேன்
பித்த னாயொழிந் தேனெம்பி ரானுக்கே! " (3-7)

என்பது அப்பாசுரம். அடியாரின் பலவீனத்தையும் அவருடைய சித்தத்தின் ஆளுமையையும் கருத்தில் கொண்டு அவரைக் காப்பாற்றும் கடப்பாடும் கருணையும் கொண்டு அச்சித்தத்தை அவரிடமிருந்து அகற்றிவிட்டானாம் அரங்கன்!

தனிப்பெரும் பித்து

மனித உடம்பின் தாங்குதிறன் ஓர் எல்லைக்குட்பட்டது. கடின உழைப்பிலும், நெடிய நடையிலும், பருத்த சுமையிலும் உடல் களைத்துப் போதலை உணர முடியும். இவையெல்லாம் புறத் தாக்கங்கள். அகமாறுதல்களும் உடலைப் பாதிக்கின்றன. பெரும் மகிழ்ச்சி, பெரும் துயரம், பேரச்சம், பெருஞ்சினம் முதலான உணர்வுக் கூறுபாடுகளும் உடல் நிலையில் மாறுதல்களை உண்டாக்குகின்றன. இவை தவிரப் பெருந்தீனி, போதைப் பொருள்கள், நோய், காலச்சூழல், இடச்சூழல் முதலானவும் உடல் நிலையைப் பாதிக்கின்றன. இவையெல்லாம் பொதுவாக எல்லா மனிதருக்கும் ஏற்படக் கூடியவை. ஆனால், ஆன்ம அனுபவம் பெற்றவர்களுக்கு ஏற்படும் மெய்ப்பாடுகள் வியப்பானவை.

உயிராற்றல் பெருகப் பெருகப் பேரின்ப நிலை ஏற்படுகின்றது. அந்த ஒப்பற்ற ஆன்மிகக் களிப்பை உடலில் ஏற்படும் மாற்றங்கள் காட்டிக் கொடுக்கின்றன. ஆன்மா அருள்வயப்பட்டிருக்கும்போது உடம்பின் புறச் செயல்கள் உலகவர்க்கு விளங்காமற் போவதால் ஆன்ம ஞானிகளை அவர்கள் பித்தும் பேயும் கொண்டவர்கள் என நினைந்து ஒதுங்கி விடுகின்றனர்.

ஆயனே! அரங்கா! எனப் பெரிய பெருமாளின் திருநாமங்களை இடையறாது பித்துப் பிடித்தவர்போல் ஓதிக் கொண்டிருப்பதைக்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

கண்டு அடியார்களைத் தவிர அனைவரும் அரசருக்கு மனநிலை பிறழ்ந்து விட்டதாகக் கருதினர். அப்படிப் பேசவும் செய்தனர். சிலர் அரசருக்குப் பேய் பிடித்துவிட்டதாகப் பேசினர். இதையெல்லாம் உலகியல் பேய் பிடித்தவரின் பேச்சு என அரசர் ஒதுக்கித் தள்ளினார். இருப்பினும் அரசைத் துறந்து வெளியேற வேண்டிய அவசியம் ஏற்பட்டுவிட்டது (3-8).

இனி இறுதிப் பாசுரத்தில், 'அரங்கன் அடியிணை தங்கும் சிந்தைத் தனிப்பெரும் பித்தனாய்க் கொங்கர் கோன் குலசேகரன் சொன்ன இத்திருமொழி வல்லார்க்குத் தீங்கொன்றும் வாராது' எனக் கூறி முடிக்கின்றனர்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

8. ஏதேனுமாகேனோ எம்பெருமான் திருமுன்னர்

பெருமாள் திருமொழியின் நான்காம் திருமொழி திருவேங்கட நாதனைப் பற்றியது. நின்ற திருக்கோலத்தில் நெடிய மால் காட்சி தரும் நெஞ்சைக் கவரும் மலை அது! அரசர் பெருமான் தமது அருட்கவியால் அதனை மங்களாசாசனம் செய்கின்றார். வைணவப் பெருமக்கள் சிலா ரூபத்திலிருக்கும் எம்பெருமான்களை அர்ச்சாவதாரமென்று கொள்ளுவர்.

பக்திநெறி நின்று பரமனை அனுபவித்த ஆழ்வார்களும் நாயன்மார்களும் திருக்கோயில் வழிபாட்டிலேயே திளைத்தவர்கள்.

சரீர, சரீரி பாவனை, அதாவது, சேதநமும், அசேதநமும் இறைவனின் திருமேனி என்ற கொள்கை - வைணவத்தின் அடிப்படையாகும். எனவே, எங்கும் நிறைந்திருக்கும் அவனைத் திருக்கோயில்களில் சிறப்பாக அர்ச்சாவதாரமாகக் காணுகின்றனர். அர்ச்சையில் ஆண்டவன் அடியவருக்கு அண்மையில் இருக்கிறான். இதனை, ''பூகத (பூமிக்குள் இருக்கும்) ஜலம் போலே அந்தர் யாமித்வம்; ஆவரண (அண்டத்தின் புறத்துள்ள) ஜலம்போலே பரத்துவம்; பாற்கடல்போலே வியூகம்; பெருக்காறு போலே விபவம்; அதில் தேங்கின மடுக்கள் போலே அர்ச்சாவதாரம்'' என விளக்குவார் பிள்ளை லோகாச்சாரியார். இறைவனின் ஐந்து நிலைகளில் பரம், வியூகம், விபவம், அந்தர்யாமித்துவம் எனும் நான்கினை எளிய உயிர்கள் பற்ற முடியாதாகையால் அவன் அர்ச்சாவதாரமாக அளிசெய இரங்கி வருகின்றான். அந்நிலையில் அவனைப் பற்றிப் பிடித்துப் பரகதிக்கு வழிதேடுவது எளிதாகின்றது.

சேஷத்துவம் (அடிமை) என்பதே ஆன்மாவின் சொரூபமாகும். எனவே, சேதநன் ஆகிய ஆன்மா இறைவனுக்குச் செய்யும் அடிமைத்தொழில் வாசிகம், காயிகம் என இருவகைப்படுகின்றது.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

இதில், வாசிகம் என்பது இறைவனை அநுபவிக்கும் போது அவனுடைய திருப்புகழ்களை இசையோடு பாடுவதாகும். காயிகம் என்பது இலக்குவனைப் போல உடலினால் அருகிருந்து சேவை செய்தலாகும். இவற்றுள் எதனை மேற்கொளினும் மனம் ஒன்றி நிற்பது மிகவும் இன்றியமையாததாகும். எல்லாவிடங்களிலும் எல்லாப் பொருள்களிலும் இறைவனின் இருப்பை உணரக்கூடிய பக்குவம் வாராமல் செய்யும் செயல்கள் பொருளற்றன.

அன்பின் நிறைவு என்பது தன்னை இழத்தலாகும். இதனை, ''எல்லாமற என்னை இழந்த நிலம்'' என்பார் அருணகிரிப் பெருமான். கோப்பெருஞ்சோழன் வடக்கிருந்து உயிர்விட முடிவு செய்து தனக்கருகில் தன் ஆருயிர் நண்பர் பிசிராந்தையாருக்கும் ஓர் இடம் ஒதுக்கும்படி கூறுகின்றான். ஆனால், அருகிருந்தோர், 'கேட்டுத் தெரிந்து கொண்டதன்றிப் பார்த்துப் பழகிய பழக்கம் கூட இல்லையே; இந்நிலையில் இவர் இறப்பதற்காக வடக்கிருக்கும்போது பாண்டிய நாட்டைச் சார்ந்த பிசிராந்தையார் இப்பொழுது உயிரை விடுவதற்காக உடன் வந்து அமருவாரா' என ஐயப்படுகின்றனர். அப்பொழுது அம்மன்னன் கூறிய சொற்கள், அன்பில் தன்னை இழத்தல் என்பதற்குப் பொருளாக உலகவர்க்கு உணர்த்திய பிரகடனமாகும்.



'' கேட்டல் மாத்திரை அல்லது யாவதும்
காண்டல் இல்லாது யாண்டுபல கழிய
வழுவின்று பழகிய கிழமையர் ஆயினும்
அரிதே தோன்றல்! அதற்பட ஒழுகலென்று
ஐயம் கொள்ளன்மின் ஆரறி வாளீர்!
இகழ்விலன் இனியன் யாத்த நண்பினன்
புகழ்கெட வருஉம் பொய்வேண் டலனே!
தன்பெயர் கிளக்கும் காலை 'என்பெயர்
பேதைச் சோழன்' என்னும் சிறந்த
காதற் கிழமையும் உடையன்.... '' (புறம்-216)

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

என்பது அப்பாடல். பிசிராந்தையாரைப் பார்த்து, ''உங்கள் பெயர் என்ன?'' என யாராவது கேட்டால், அவர் எப்பொழுதும் தம் நண்பராகிய மன்னரையே நினைத்துக் கொண்டிருப்பதால் தமது பெயருக்குப் பதிலாக மன்னன் பெயரைக் கூறி விடுவாராம்! முன்பின் பார்த்திராத இந்த வியத்தகு நண்பர்கள் அன்பினால் தம்மை ஒருவரில் ஒருவர் இழந்துவிட்டமையால், 'நட்பு என்பதற்கு இவர்களைக் காட்டிலும் சிறந்த எடுத்துக்காட்டாக இலங்குவார் யாருமில்லை' எனும்படி இலக்கியத்திலும் இடம் பெற்றுவிட்டனர். இத்தகுநிலை இறையன்பாகப் பரிணமிக்கும்போது ஆண்டாள் நாச்சியார்ரும், மீராபாயும் நம் அகக்கண் முன் தோன்றுகின்றனர். 'தம்மை மறந்துதம் நாமம் கெட்டுத்' தம் இறைவரின் பாதமலர்களில் தலைப்பட்டவர் களல்லவா இப்பெருமாட்டிகள்?

மேலே காட்டியவாறு 'தம்மை இழந்து தம் நாமம் கெட்டுத்' தம் இறைவரில் கரைந்து போனவர்களே ஆழ்வார்கள். குலசேகரப் பெருமான் தம்மை இறையருளில் கரைத்துக் கொண்டமையைத் திருவேங்கடவன் விஷயமாக அருளிய நான்காந் திருமொழியிலும் இந்நிலை நன்கு விளங்கும்.

குருகும் மீனும்

அன்பு செலுத்துவதற்குக் காரணம் கூற முடியுமா? காரணம் கூற முடியுமானால் அவ்வன்பு உண்மையானதாக, ஆழ்ந்ததாக இருக்கவியலாது! அதற்கு ஒரு நோக்கம் இருக்கிறது! காரணமும், நோக்கமுமில்லாமல் அன்பு செலுத்துவதே ஓர் ஆனந்த அனுபவ மானால் அத்தகைய அன்பே இயல்பானது. உலகியல் காரணங் களுக்கு அப்பாற்பட்டு உணருகின்ற அன்பும் அத்தகையதே! ஆன்மாவுக்கு இத்தகைய அன்புதான் இறைவன்மேல் ஏற்படு கின்றது.

குலசேகரப் பெருமாள் வேங்கடவனைத் தரிசிக் கிறார். உள்ளமும் உடலும் குளிர்கின்றன! ஒவ்வொரு கணமும் அவன் திருவடித் தாமரையை ஒடிப் பற்றிக் கொள்ளும் தவிப்பு. ஓட்டி நின்று உயிர் உருகப் பற்றிப் பிடிக்க வேண்டுமென்ற



திருப்பதி திருமலையில் உள்ள திருக்குளம்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

பரிதவிப்பு. பரந்தாமனைப் பாதாதிகேசமாக அனுபவிக்கவேண்டும்! ஆனால், உலகியல் உந்துகின்றது! மனிதர், சம்பிரதாயங்களும் குறுக்கிடுகின்றன! காலம் கணக்குப் பேசுகின்றது! பதவி தடையாகின்றது! இந்தப் பாழில் தவிக்கும் பயனற்ற பயணத்தின் பொருள்தானென்ன? இன்றைக்கு மட்டுமா? சன்ம சன்மாந்திரங்களாக இந்தத் தடைகள்! எத்தனை உடல்கள், எத்தனைப் பிறவிகள்; எல்லாம் இவனை அனுபவிக்கத் தடையாகவே நின்றன. நிற்கின்றன! நின் திருவடிகளுக்கு அடிமை பூண்டு கிடவாமல் வினைத் தொடர்பால் விடாது பற்றி நிற்கும் உடலோடு கூடிய பிறவிகளை யான் விரும்பவில்லை! ஆன்மாக்களைக் கடைத் தேற்றும் வெற்றியைக் கொண்டாடி முழங்கும் சார்ங்கத்தை இடத்தில் கொண்டு எழுந்தருளி இருக்கும் வேங்கடவா! நீ எழுந்தருளி இருக்கும் இத்திருவேங்கடத்தை விட்டு அகலாதிருக்கக் கோனேரி எனும் திருக்குளத்தில் வாழும் ஒரு குருகாகப் பிறக்கவேண்டும்.

குருகாகப் பிறப்பதும் ஒரு கோணல் பிறப்புத்தான்! இறகுகள் இருப்பதால் பறக்கத் தோன்றும்! குளத்தில் வாழ்வதால் உன்னை மறந்து மீன்களைத் தேடச்சொல்லும்! ஏன் மீனாகவே பிறந்து விட்டால் என்ன? தேனார் பூஞ்சோலைத் திருவேங்கடச் சுனையிலேயே இருக்கலாமல்லவா? ஆமாம், அதுதான் சரி! குறையாத செல்வத்தை உடையதும், அரம்பை மாதர் சூழ விருப்பதுமாகிய வானாளும் செல்வமோ அல்லது இந்த மண்ணகத்து அரசாட்சியோ வேண்டவில்லை! நின் திருக்குளத்து மீனாய்ப் பிறக்கும் விதியை உடையவனாக மாட்டேனோ? இப்படியெல்லாம் குலசேகரர் எண்ணிப் பார்க்கிறார். எப்படியாவது திருவேங்கடத்தில் இருப்பதற்கு வழி செய்தாக வேண்டும்.

"ஆனாத செல்வத் தரம்பையர்கள் தற்சூழ
வானாளும் செல்வமும் மண்ணரசும் யான்வேண்டேன்
தேனார்பூஞ் சோலைத் திருவேங் கடச்சுனையில்
மீனாய்ப் பிறக்கும் விதியுடையே னாவேனே" (4-2)

என்பது ஆழ்வாரின் ஆதங்கத்தைக் கூறும் அருந்தமிழ்ப் பாசுரம்.

பொன்வட்டிலும் செண்பக மரமும்

அன்புடையார் அருகிலேயே இருக்க வேண்டும் என விரும்புவது அன்பின் இயல்பு. அதற்காக எவ்விதத் தியாகத்தையும் செய்ய அது தயங்குவதில்லை.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

குருகாகவும், மீனாகவும் பிறந்தேனும் திருவேங்கடமலையில் இருக்கவேண்டும் என எண்ணிய ஆழ்வாரின் அன்பு அப்படிப் பிறப்பதால் என்ன பயன் என எண்ணிப் பார்க்கின்றது. குருகும், மீனும் குளத்திலிருப்பதால் என்ன பயன்? என் கோமளத்தை யன்றோ காணவேண்டும்! உருத்திரனும், பிரமனும், இந்திரனும் நெருக்கிக்கொண்டு வைகுண்ட நாதனைக் காண்பதற்காக நீள்வாசல் புக முயன்றாலும் உட்புகுந்து காணுதற்கரியவனாக, ஒளி வட்டஞ் சூழப் பெற்ற சக்கரப்படையை உடைய பெருமான் விளங்குவான். அப்பெருமான் தம்பலம் உமிழும் பொன்வட்டில் தாங்கும் பணியாளனாக இருந்துவிட்டால் உட்புகுந்து அவனைக் கண்டுவிடலாம். இந்தப் பணி எளிய பணிதான்; ஆனால் இன்றியமையாத பணி. உட்போவதற்கு எல்லோரும் வழி விட்டொதுங்குவர். எம்பெருமானுக்குச் செய்யும் பணி எப்பணியாயினும் அதற்கு ஈடுண்டோ? எனவே, அப்பணி ஏற்று அவன் திருமுன்னர் ஏகுவதற்கு உரியேனாவேனே! முடிவு செய்கிறார் ஆழ்வார்!

பொன்வட்டில் தாங்கி உட்புக நினைந்த ஆழ்வாருக்கு, 'அவ்வைகுண்ட வாசன் திருமலையில் அர்ச்சாவதாரமாகவன்றோ எழுந்தருளி உள்ளான்' என்ற உண்மை நினைவுக்கு வருகின்றது. எனவே 'பொன்வட்டில் பணி பொருந்துவதாக இல்லை! எனினும் ஒண்பவளங்களைக் கரைசேர்த்தபடி உலவும் அலைகளை உடைய பாற்கடலில் அறிதுயில் கொள்ளும் மாயம் வல்ல பெருமான் அவன். அவனுடைய திருவடிகளைக் காணவேண்டுமானால் வண்டினங்கள் பண்பாடும் வேங்கடவனைக் கண்டு அப்பெருமானின் கழலிணைகளைக் காண்பதே வழி! அதற்கு என்ன செய்யலாம்? அவன் திருவடிவை அணி செய்யும் செண்பகப் பூக்களாக மாற வேண்டும்! இல்லை! இல்லை! அப்பூக்களைப் பலகாலும் கொடுக்கின்ற செண்பக மரமாகவே மாயவனின் மலைமேல் நிற்கும் திருவுடையேனாவேன்' எனக் கசிந்துருகும் ஆழ்வாரின் திருப்பாசுரம்:

> " ஒண்பவள வேலை உலவுதண் பாற்கடலுள்
> கண்துயிலும் மாயோன் கழலிணைகள் காண்பதற்குப்
> பண்பகரும் வண்டினங்கள் பண்பாடும் வேங்கடத்துச்
> செண்பகமாய் நிற்கும் திருவுடையே னாவேனே! " (4-4)

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

தம்பமா பொற்குவடா?

திருவேங்கடவன் சன்னிதானத்தில் ஏதாக இருந்தால் அவனைப் பிரியாதிருக்கலாம் என எண்ணிய குலசேகரர், குருகு, மீன், பணியாள், செண்பக மரம் என ஒவ்வொன்றாகக் கற்பித்துப் பார்க்கின்றார். இவற்றுள் எதுவும் என்றும் பிரியாதிருக்க வேண்டும் என்ற குறிக்கோளை நிறைவேற்றுவதாக இல்லை! இவை உயிர்ப்பொருள்கள். இவற்றிற்குக் காலக்கெடு உண்டு! மூப்பும், தளர்ச்சியும், மரணமும் உண்டு! என்றால் பிரியாமல் இருப்பது, எப்படி? அசேதநமாக இருந்து விட்டால்? அப்பொழுது பிரிவுக்கு இடமில்லை! அப்படியே கிடந்தவாறே கிடக்கலாம்! எம்பெருமான் திருமுன்னர் ஏதாகக் கிடந்தாலென்ன?

'அரச பதவிக்கும் அதிகாரத்திற்கும் சான்றாக இதோ நான் இவர்ந்து வந்திருக்கும் மதகளிறு! இதன் மேலிருந்து நடாத்தும் பெருஞ்செல்வப் பின்னணியும், இப்பொழுதிருக்கும் அரச செல்வமும் எனக்கு விருப்பத்தைத் தரவில்லை! எம் பெருமானாகவும் சர்வேசுவரனாகவும் இலங்குகின்ற வேங்கடவன் மலையின் மேல் அவன் திருக்கோயில் யானையைக் கட்டும் தூணாக (தம்பமாக) நிற்கும் தவத்தை உடையேனாவேன்' எனத் தமது விருப்பத்தை இன்னமுதப் பாசுரமாக்குகின்றார்.

" கம்பமத யானைக் கழுத்தகத்தின் மேலிருந்து
இன்பமரும் செல்வமும் இவ்வரசும் யான்வேண்டேன்
எம்பெருமான் ஈசன் எழில்வேங் கடமலைமேல்
தம்பமாய் நிற்கும் தவமுடையே னாவேனே! " (4-5)

இப்பாசுரம் குலசேகரரைப்பற்றிய வரலாற்றுக்குப் பயன் படுமாறு சில செய்திகளைக் கொண்டிருப்பதைக் காணலாம். 'இவ்வரசும் யான் வேண்டேன்' என்ற விடத்து 'இவ்வரசு' என்ற முன்னிலைச் சுட்டு குலசேகரர் அரசராக இருக்கும்போதே திருவேங்கடம் வந்திருக்க வேண்டும் என்பதைக் காட்டுகின்றது. மேலும் அக்கால நிலைமைப்படி இவர் களிறூர்ந்து சென்றே திருவேங்கடத்தை அடைந்திருக்க வேண்டும்.

''யானைக் கழுத்தகத்தின் மேலிருக்கும் இன்பமும் செல்வமும் இவ்வரசும் யான் வேண்டேன்'' எனும்போது குலசேகரர் தாம் அனுபவித்து வந்தவைகளைச் சுட்டிக் கூறுதலைக் காணலாம். 'தம்பம்' என்பதற்குத் தூண். கட்டுத்தறி என்பதே பொருள். இதுவும் ஆழ்வார் கண் முன்னாற் கண்டது தான்! தம் யானைகள் கோயில்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

யானைகளோடு கட்டுத்தறியில் தூணில் பிணிப்பதைப் பார்த்திருக்க வேண்டுமல்லவா? 'இத்தகு தம்பமாகவேனும் நான் இத் திருவேங்கடத்தில் இருக்கக்கூடாதா' எனப் பக்திப் பித்துக் கொண்ட அடியார் நினைப்பதும் பாடுவதும் இயல்புதானே. மேலும் அடுத்த பாடலில் 'கற்றூண்' பற்றிய சிந்தனையின் தொடர்பாகவன்றோ 'பொற்குவடு' போந்திருக்க வேண்டும். வரலாற்று ஆதாரங்களைத் தேடி அலைபவர்கள் இப்பாசுரத்தை அலட்சியம் செய்துவிட முடியாது.

இனி, உயிர்ப் பொருள்களின் உறுதியற்ற தன்மையை உணர்ந்த குலசேகரப் பெருமான் அசேதநப் பொருள்களாகப் பெரிய பெருமாளின் மலையில் கிடக்க நினைத்துத் 'தம்பமாக' நிற்பதைக் கற்பித்துப் பார்க்கிறார். இந்தக் கற்றூணாக நிற்பதைக் காட்டிலும், ''மின்னலைப் போலும் நுண்ணிடைச்சியரான உருப்பசி, மேனகை முதலான தேவபோகந் தருகின்ற மாதர்களோடு அவர்களுடைய ஆடலையும் பாடலையும் மதியாத தாம், 'தென்னதெனா' வென வண்டினங்கள் ஒலிக்கும் திருவேங்கடத்தில் தனக்குத் தானே ஒப்பாக வல்லதொரு பொன்மயமான சிகரமாய் என்றும் நீங்காமல் நிற்கும் பேறு பெறக் கூடாதா'' எனக் கருதிப் பார்க்கின்றார். திருவருளில் கிடந்து திளைப்பதோர் திவ்வியமான ரசானுபவம் இத்திருப் பாசுரங்களில் திகழ்வதை உணரவல்லார் உணர்வர்.

கானாறும் கவின் நெறியும்

'வெறும் மலைக்குவடாய், உணர்வற்று ஆண்டாண்டு தோறும் யார்க்கும் பயன்படாமல் கிடந்து பயனென்ன? அப்பனுடைய திருமலையில் வாழுகின்ற உயிர்களுக்குப் பயன்படுமாறு அத்திருமலையில் அருவியாய்க் குதித்தாடி ஓடையாய்ச் சலசலத்து ஒரு சிறு சிற்றாறாய் ஓடினாலென்ன? வானகத்து மதிபோல வையகத்தில் காட்சி தரும் வெண்கொற்றக்குடைக் கீழிருந்து மன்னவர்க்கு மன்னவனாய் மதிப்போடு வீற்றிருக்கும் விருப்பம் எனக்கில்லை! அதைவிடத் தேனார் பூஞ்சோலை செழித்தோங்கிச் சிற்றாறாய்த் திருமலையில் திகழ்வதற்கே கருத்துடையே னாகின்றேன்' எனக் கனிந்த ஆழ்வாரின் திருவுள்ளம் அப்பொழுதும் நிறைவு பெறவில்லை. மேலும் நினைக்கின்றார்.

'பிறையேறிய சடையானாகிய உருத்திரனும், பிரமனும், இந்திரனும் தத்தமக்கிருக்கின்ற குறைகளை நிறைவு செய்கின்றனர். அவர்தம் குறைமுடிக்கும் மறையாகினான் பெருமான். அத்தகைய

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

பெரும்பொருள் திருக்கோயில் கொண்டிருக்கின்ற நறுநாற்றமும், தண்மையும் கொண்டிருக்கின்ற சோலையை உடைய திருமலையில், அடியார்கள் தம் குறை நினைந்து அவற்றை நீக்கியருள வேண்டி எம்பெருமானிடம் வந்துபோகும் வழியாகக் கிடக்கும் நிலையுடையேன் ஆவேன்' என எண்ணுகின்றார். மழை பொய்த்த காலத்தில் மலையாறு வற்றிவிடும். அத்தகு குறையுடைய ஒன்றாக இருப்பதைக் காட்டிலும் அடியார்க்குப் பயன்படும்-ஐயனிடம் கொண்டு சேர்க்கும் சிறுவழி சிறந்ததல்லவா?

அடியார்க்குப் பயன்படும் வழி வானத்தமரர்க்குப் பயன் படுமோ? பயன்படாது! எல்லோர்க்கும் பயன்படுமாறு என்ன வாகலாம்? 'அவன் திருமுன்னர்ப் படியாய்க் கிடந்தால் அடியாரும் வானவரும், அரம்பையரும் இடைவிடாமல் ஏறிச் செல்வார் களல்லவா? இதைவிடப் பெரிய பாக்கியம் ஏது? துன்பந் தருகின்ற கொடிய வினைகளைத் தீர்த்தருளும் திருமாலே! நெடியோனே! திருவேங்கடமுடையானே! நின் திரு முன்னர்ப் படியாய்க் கிடந்தால் நின் செம்பவளத் திருவாயினழகையும் காண்பேனாவேன்' என நைந்துருகும் ஆழ்வாரின் திருப்பாசுரம்:

" செடியாய வல்வினைகள் தீர்க்கும் திருமாலே
நெடியோனே! வேங்கடவா! நின்கோயி லின்வாயில்
அடியாரும் வானவரும் அரம்பையரும் கிடந்தியங்கும்
படியாய்க் கிடந்துன் பவளவாய் காண்பேனே! " (4-9)

ஆழ்வாரின் திருவுள்ளம் உணர்ந்த சான்றோர்கள் இப்பாசுரக் கருத்திற்கேற்பத் திருமால் கோயில்களில் அமைந்துள்ள கருவறைப் படியைக் 'குலசேகரப் படி' எனக் கூறி வருகின்றனர்.

ஏதேனுமாவேனோ எனும் இனிய தமிழ்ப் பா

பொன்னாசை, பெண்ணாசை, மண்ணாசை என மூவாசையே உலகியல் போகங்களாகப் பேசப்பெறுகின்றன. அநித்தியமான இந்த ஆசைகளுக்குட்பட்டு ஆன்மபோதத்தை அழித்துக்கொள்வோர் பலர். உலகியலின் எல்லாவித இன்ப, துன்பங்களும் போராட்டங்களும், இயக்கங்களும் இவற்றின் அடிப்படையிலேயே எழுகின்றன. உலகியல் வெற்றி தோல்விகளும் இவற்றை வைத்தே கணிக்கப் பெறுகின்றன. ஆனால், இவற்றைத் துச்சமாக மதித்துத் தூக்கி எறிந்த பெருமக்களையும் வரலாறு கண்டிருக்கின்றது. அத்தகு மேன்மக்களுள் நம் குலசேகரப் பெருமானும் ஒருவர்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

'திருவேங்கடவனைக் கண்ட கண்கள் மற்றொன்றும் காணா மயக்க நிலை எய்தின. இவனைப் பிரிந்து சென்று பெறுகின்ற வாழ்க்கையென்ன? உண்டியே உடையே என ஓயாது போராடும் அற்ப மானுடம் போல் அழிந்துபோவதோ - அட, இந்த உலகியல் ஆட்சியும், அரசும் மாட்சியும் கிடக்கட்டும்! ஒரு குடைக்கீழ்த் தேவருலகை ஆளும் செல்வமும், தெவிட்டாத மையலுக்கு ஆராத சுகமளிக்கும் அழகு மடந்தையாம் உருப்பசியின் உயர்நிலம் உண்ணும் ஒரு வாய்ப்புக் கிடைத்தாலும், உதறித் தள்ளிவிட்டு, ஓடோடி வந்துனது உயர் மலையின் மீதேறித் தெண்டனிட்டு நின்றுனது திருவாய் அழகு கண்டு திருவடிக்கே சரணாகி ஏதேனும் ஒருபொருளாய் இங்கிருக்க மாட்டேனோ' என ஏங்குகின்றார் ஆழ்வார்.

" உம்ப ருலகாண்டு ஒருகுடைக்கீழ் உருப்பசிதன்
அம்பொற் கலையல்குல் பெற்றாலும் ஆதரியேன்!
செம்பவள வாயான் திருவேங்கட மென்னும்
எம்பெருமான் பொன்மலைமேல் ஏதேனும் ஆவேனே " (4-10)

இத்தகு பாசுரங்களின்பின் எவர் பத்தர் என்றறிய இலக்கண மொன்றை இறுதிப் பாசுரத்தில் இயம்புகின்றார்.

நிலைபெற்ற தண்ணிய சாரலை உடைய திருவேங்கடவன் பொன்னியலும் சேவடிகளைக் காண்பதற்காக அத்திருமலைக்குச் சென்று இறைஞ்சிக் கொன்னவிலும் கூர்வேல் குலசேகரரால் கூறப்பட்ட இத்தமிழ் மாலை பத்தையும் உணரவல்லார் பாங்குடைய பத்தராவர் என்பது ஆழ்வார் வாக்கு.



CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

9. மற்றோர் துணையின்றி மாலுக்கே மையலாகி...

இறையருளில் தோய்ந்து, அவனுக்கே தம்மை அர்ப்பணித்து, அவன் பணியே செய்ய விரும்பும் அருளாளர்கள் உலகியலோடு ஒத்து வாழ முடிவதில்லை. உலகவர் முன்பு அவர்கள் பித்துடையார் போல் தோன்றுதல் இயல்பு. எனவேதான் கடந்த காலங்களில் பல ஆன்மிகத் தலைவர்கள் கொடுமையான முறைகளில் மக்களால் தண்டிக்கப்பெற்றார்கள். நம் குலசேகரப் பெருமானும் 'மெய்யில் வாழ்க்கையை மெய்யெனக் கொள்ளும் இவ்வையந் தன்னொடும் கூடுவதில்லை யான்' என உலகியலோடு தம்மால் ஒத்துப்போக முடியாத நிலையினை மூன்றாம் திருமொழியில் கூறியதைக் கண்டோம். இனி நாம் காணவிருக்கும் ஐந்தாம் திருமொழி, அவ்விதம் உலகியலோடு ஒத்துப் போகாமையால் தமக்கு ஏற்பட்ட துன்பத்தினை இறைவனிடம் முறையிடுவதாகக் கொள்ளலாம்.

வித்துவக் கோட்டு அம்மான் விஷயமாக அருளப்பட்டிருக்கும் ஐந்தாம் திருமொழி அரசர் ஆழ்ந்த மனவருத்தப்பட்டிருந்ததனைக் காட்டுகின்றது. இக்கருத்தைப் பலர் ஏற்காமல் போகலாம். ஆனாலும் அதுதான் உண்மை! சமகாலச் சமூகத்தின் பாதிப்பிற்குள்ளாகாமல் சீவன்முக்தர்கூட இருத்தல் இயலாது. சைவத்தில் திருநாவுக்கரசரும், மாணிக்கவாசகரும், காரைக்கால் அம்மையாரும் இவர்களைப் போன்ற இன்னும் பலரும் வைணவத்தில் திருமழிசையார், திருப்பாணர், தொண்டரடிப் பொடியார் முதலான ஆழ்வார் பெருமக்களும் பிற்காலத்தில் இராமானுஜப் பெருமானும் சமகாலச் சமூகத்தால் எங்ஙனம் பாதிக்கப்பட்டனர் என்பதனை வரலாறு நமக்குக் கூறுகின்றது. உலகெங்கிலும் இதே நிலைதான்! எனவே, குலசேகரரும் சமகாலச் சமூகத்தால் அடைந்த மனவருத்தத்தை வித்துவக் கோட்டம்மானிடம் முறையிடுவதன் மூலம் வெளிப் படுத்துகின்றார் எனக் கூறுவது மிகையுமன்று, தவறுமன்று.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

கலைஞர்களைச் சமகாலச் சமுதாயம் பாதிக்கவே செய்யு மென்பதனை இலக்கிய வரலாற்றாசிரியர்களும், திறனாய் வாளர்களும் சான்றுகளுடன் விளக்கி யிருக்கின்றனர். குலசேகரர் அரசர் பதவியைத் துறந்த செயல் சாதாரணமானதன்று. அவர் கண்முன்னால் தாம் மிகவும் மதித்துப் போற்றுகின்ற அடியார் பெருமக்கள் அலட்சியப்படுத்தப்பட்டிருப்பர். அதனால் எம்பெருமானிடம் எல்லையற்ற ஈடுபாடு கொண்டிருந்த ஆழ்வாரின் மனம் என்ன பாடுபட்டிருக்குமென்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். இறைவனடியாராக இருந்த பலர் மன்னர்களாயிருந்து ஆட்சி செய்யவில்லையா? சோழன் கோச்செங்கணான் சைவம் வைணவம் ஆகிய இருநெறி நின்றவர்களாலும் பாராட்டப்பட வில்லையா? குலசேகரர் அரசைத் துறக்கவேண்டிய நிர்ப்பந்தம் என்ன? தம்மால் நேசிக்கப் பெற்ற அடியாருக்காக ஒருமாமன்னர் சத்தியம் செய்யவேண்டிய நிர்ப்பந்தம் வரக் காரணம் யாதாக இருக்கும்? நுணுகிப் பார்த்தால் அரசியல் சிக்கலாகவே இருக்க வேண்டும். இவருக்கு அடுத்து ஆட்சிக்கு வந்த வரகுண மகாராசனை ஆட்சியில் அமர்த்த விரும்பிய ஒரு பின்னணி குலசேகரரை ஆட்சியைத் துறக்க வைத்திருக்க வேண்டும். கொங்கர்கோவாகவும், கொல்லிக் கோனாகவும், கோழிக் கோனாகவும் இருந்து பாண்டியன் நெடுஞ்சடையன் காலத்தில் அவனுடைய பிரதிநிதியாக ஆட்சியில் பங்கேற்றிருந்த வரையில் எல்லாம் இயல்பாய் இருந்திருக்கின்றது.

அதன்பின் நெடுஞ் சடையன் இறந்ததன் பின் கி.பி. 790 - முதல் கூடலார்கோனாகக் குலசேகரர் ஆயினபின் பிரச்சினை உருவாகி, வளர்ந்து, குலசேகரர் அரசைத் துறந்து வெளியேற வேண்டிய நிலை ஏற்பட்டது. அக்காலத்திய தமிழக வரலாற்றையும், பாண்டிய மன்னர்களின் வரலாற்றையும் ஊன்றி நோக்கினால் இவ்வுண்மை புலப்படும். ஆட்சியைத் துறந்த மன்னர்பிரான் அடியாராகவே வாழ்ந்து அமரரானார். இவர் திருநாடு அலங்கரித்த ஊர் பாண்டிய நாட்டிலுள்ள மன்னார்கோயில். இது திருநெல்வேலி மாவட்டத்து அம்பாசமுத்திர வட்டத்தில் உள்ள ஓர் ஊர். இதற்கு அடையாளமாக இவ்வூர் ராஜேந்திரசோழ விண்ணகரத்தில் குலசேகரருக்கெனத் தனிக்கோயில் ஒன்றும் உள்ளது.

மேற்போந்த வரலாற்றுப் பின்னணியை உணராத அறிஞர் குலசேகரரைச் சேரமன்னர் என்று கருதி, அவர் பாண்டி நாட்டில் வந்து அமரரானது ஏன் எனக் குழப்பிக் கொண்டிருக்கின்றனர். இவை

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

எப்படி இருப்பினும், இவ்வித்துவக்கோட்டுத் திருமொழியில் முன்றாம் திருமொழியைப் போலவே ஆழ்வாரின் தனிப்பட்ட வாழ்வின் பின்னணி உணர்வுகள் இடம் பெற்றுள எனக் கொள்வதில் பெரும் தவறு ஒன்றும் நேர்ந்துவிடாது. இனி இவ்வித்துவக்கோடு என்பது சேர நாட்டில் உள்ளதா சோழ நாட்டில் உள்ளதா என்ற சர்ச்சையும் நடைபெற்று வருகின்றது. இராகவ ஐயங்கார் அவர்களின் கருத்துப்படி தற்பொழுதுள்ள கரூரில் இவ்வித்துவக்கோடு இடம் பெற்றுள்ளதாகக் கொள்வது பொருத்தமானதாகும்.

தாயும் தாரமும்

'மணமலர்கள் நிறைந்துள்ள சோலைகளாற சூழப் பெற்ற வித்துவக்கோட்டில் எழுந்தருளியிருக்கும் அம்மானே! உலகியல் வாழ்வு எனக்குத் தருகின்ற துயரத்தை, அடியான் இவன் என்று ஆதரித்து, அதனை வாராமல் தடுக்க வேண்டும்! ஏனென்றால், நின் திருவடிகளையன்றி எனக்கு வேறு புகலிடமில்லை!' தாய் அருகிலிருப்பதால் குழந்தை ஆடுகின்றது, ஓடுகின்றது, துள்ளிக் குதிக்கின்றது. அவள் அதனை எச்சரிக்கிறாள்! ஆனால், குழந்தையோ விளையாட்டு மகிழ்ச்சியில் எதனையும் கவனிக்கவில்லை! வீழ்ந்து விடுகின்றது! அடிபலம்! அழுகின்றது! ஆனால் தாயோ வேண்டுமென்றே கவனிக்காமல் இருக்கிறாள்! தான் அத்தனை கூறி எச்சரித்தும் இப்படி விழுந்து விட்டானே என்ற சிறு கோபம்! பாராமுகமாக இருக்கிறாள்! 'சிறிது அழட்டும்! அப்பொழுதுதான் புத்தி வரும்!' எனத் திரும்பி நின்று கொள்கிறாள். குழந்தைக்கு அடிபட்ட வருத்தம் ஒருபுறம். அம்மாவின் அலட்சியம் ஒருபக்கம்! அதன் ஆற்றாமையும் அழுகையும் மிகுதிப்படுகின்றன. தாயின் சேலைத் தலைப்பைப் பிடித்துக்கொண்டு ஓயாமல் சத்தமிட்டு அழுகின்றது! அவள் ஆதரவாகத் தடவிக் கொடுக்க வேண்டும்! 'அழாதே' என்று



திருமலை ஸ்வாமி

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

ஆறுதல் சொல்ல வேண்டும்! அதுவரைக்கும் அது அழும்! அதற்கு ஒரே புகலிடம் அவள்தான்.

குழந்தை விழுந்ததற்குத் தாய் பொறுப்பல்ல! குழந்தையின் வினையே காரணம். இருப்பினும் தாய் ஆறுதல் சொல்லியாக வேண்டும். ஏனென்றால், அவளே அதற்கு அனைத்துமாக இருக்கிறாள்! இந்தக் குழந்தைபோல் இருக்கிறேன் என்றார் குலசேகரர்! 'தாயாகி நின்ற நீ தண்ணளி செய்யாவிட்டால் நான் போவது எங்கே!'

" தருதுயரம் தடாயேலுன் சரணல்லால் சரணில்லை
விரைகுழுவு மலர்ப்பொழில்சூழ் விற்றுவக்கோட் டம்மானே!
அரிசினத்தால் ஈன்றிதா யகற்றிடினும் மற்றவள்தன்
அருள்நினைந்தே அழுங்குழவி யதுவேபோன் றிருந்தேனே! " (5-1)

இப்பாசுரத்தில் 'தருதுயரம்' என்பதற்கு, 'இறைவன் தருகின்ற துயரம்' எனப் பொருள் கொள்வது பொருந்தாது. ஆன்மாவின் வினைத் தொடர்பே துன்பங்களைத் தரும்! விளையாடும் குழந்தை விழுந்து அடிபடுவதைப்போல! 'நான் உனக்கே சரணானபின் எனக்கு வருகின்ற துயரங்களைத் தடுக்கலாம், ஆறுதலடைவிக் கலாம்! ஏனெனில், எனக்கு வேறு புகலிடமில்லை!'

'வானாளாவிய மதிலால் சூழப்பட்டிருக்கும் வித்துவக் கோட்டில் எழுந்தருளி யிருக்கும் அம்மானே! கண்டவர்கள் இகழக் கூடிய காரியங்களைக் கணவன் செய்தாலும் அவனையன்றி வேறு ஆடவரை மனத்தாலும் நினையாத நற்குல மகளாகிய மனைவியைப் போல், நீ என்னை அடிமையாய் ஏற்றுக் கொண்டு ஆளாவிட்டாலும் நான் உன்னுடைய திருவடிகளையே பற்றி நிற்பேன்' என்பது இரண்டாம் பாசுரத்தின் பொருள் 'நினது திருவுளம் என்னை இன்னும் அடிமையாக ஏற்றுக் கொள்ளாவிட்டாலும் நான் உன்னையே இறுகப் பற்றிக் கொண்டிருக்கின்றேன்' என்கிறார் ஆழ்வார். முதற்பாசுரம் 'மார்ச்சால நியாய'த்திலும், (அதாவது பூனை தன் குட்டிகளை வாயாற் கௌவி எடுத்துக் காப்பதுபோல நீ என்னைக் காக்க வேண்டும் என்ற பொருளிலும்) இரண்டாவது பாசுரம் 'மர்க்கட நியாய'த்திலும் (அதாவது குரங்கு எப்படித் தாவிக் குதித்துச் சென்றாலும் அத்தாயை

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

விடாது பற்றி நிற்பது போல நான் உன்னைப் பற்றி நிற்கிறேன் என்ற பொருளிலும்) அமைந்துள்ளமை அறிந்து மகிழ்தற்பாலது.

மன்னனும் மருத்துவனும்

'மீன்கள் விரும்பிப் புகுந்துறையும் நீண்ட வயல்களால் சூழப்பெற்ற வித்துவக் கோட்டம்மானே! நீ என்பால் இரங்கி அருள் நோக்கமின்றி இருந்தாலும் நான் நினது அருளை வேண்டியே நின்னைப் பற்றியுள்ளேன்! வேறு பற்றுக்கள் யாதும் எனக்கில்லை! குடிகளின் குறைகளை அறிந்து அவற்றைப் போக்கிப் புரக்க வேண்டுமென்ற எண்ணமின்றி இருக்கும் மன்னவன் ஆட்சியில், பல்வேறு சிரமங்களையும், துயரங்களையும் அனுபவிக்கும் குடிமக்கள் அம்மன்னவனின் செங்கோல் ஆட்சியையே எதிர்நோக்கி வாழ்வதுபோல நானும் வாழ்கின்றேன்' என ஆழ்வார் ஓர் அருமையான உவமையைக் கூறித் தம் உளக்கிடக்கையை மூன்றாம் பாசுரத்தில் கூறியருள்கின்றார்.

'மருத்துவன் ஒருவன் ஒரு நோயாளியின் நோயைப் போக்குவதற்காகக் கத்தியால் அறுத்துச் சுட்டுச் சிகிச்சை அளிக்கின்றான். இதற்காட்பட்ட நோயாளியோ தன்னைக் கத்தி கொண்டறுத்துச் சுட்டமைக்காக வெறுக்காமல் தன் நோயைக் குணப்படுத்திய அம் மருத்துவன்பால் பேரன்பு கொள்ளுகின்றான். அதுபோல, நின் மாயப் பெருலீலைகளால் எனது பிறவி நோயை அறுப்பதற்குப் பல விதமான துயரங்களை என் வினைகளுக்கேற்றவாறு தந்தருள்கின்றாய்! வித்துவக் கோட்டம்மானே! நீ என்னை ஆளாக ஏற்று அருள்செய்கின்ற தன்மையையே யான் என்றும் பார்த்திருப்பேன்' என்பது நான்காம் பாசுரம்.

" வாளால் அறுத்துச் சுடினும் மருத்துவன்பால்
மாளாத காதல்நோயா ளன்போல் மாயத்தால்
மீளாத் துயர்தரினும் விற்றுவக்கோட் டம்மா!நீ
ஆளா உனதருளே பார்ப்ப னடியேனே " (5-4)

உலகியலில் தாம் படும் துயரங்களெல்லாம், தம்மைத் தம் வல்வினைப் பந்தங்களிலிருந்து மீட்டு உய்விக்கும் இறை அருளின் செயல்பாடே என்பதை இப்பாசுரத்தின் வழி ஆழ்வார் வெளிப் படுத்துகின்றார். நோயின் கடுமைக்கேற்பச் சிகிச்சையும்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

மாறுபடுகின்றது. நோயாளியின் விருப்பத்திற்கேற்ப அல்லாமல் நோயின் தன்மைக்கேற்பவே மருத்துவன் சிகிச்சையளிப்பான். அதை அவன் நோயாளியைக் கேட்டும் செய்வதில்லை. நோய் நீக்குதலே மருத்துவரின் குறிக்கோளாகின்றது.

மாப்பறவையும் மலர்ச் சிரிப்பும்

ஐந்தாம் திருமொழியில் ஆழ்வார் கூறும் உவமைகள் அற்புதமானவை. தமிழிலக்கியப் பரப்பில் இப்படி ஒரு பதிகம் முழுவதும் பொருளும் உவமையும் பொருந்தி, கற்பவர் மனத்தைக் கவர்ந்திழுப்பதுமட்டு மல்லாமல் அரிய பெரும் பொருளை அறிவிக்கும் பாடல்களை அதிகம் காணவியலாது. இவை திட்டமிட்டுப் பாடியவை அல்ல! அருளால் வெளிப்போந்த அற்புதத் தமிழ்! ஆழ்வார் திருவுளத்தெழுந்த அன்பு மலர்களால் ஆண்டவனுக்கு அர்ப்பணிக்கப்பெற்ற அழகிய தமிழ்!

ஐந்தாம் பாசுரம் பிரபஞ்சப் பாழில் இறைவன் ஒருவனே ஆன்மாவின் பற்றுக்கோடாக இருப்பவன் எனக் கூறுகின்றது. ஆழ்வார் கூறுகின்றார்: ''வெம்மையான சினக் கண்களை உடைய குவலயாபீடம் எனும் களிற்றினை அழித்த வித்துவக் கோட்டம்மானே! கடல் நடுவே கப்பலின்கண் இருந்த பறவை தன் முயற்சியால் கரைசேர நினைத்துப் பறந்தது! எத்திசையில் பறந்தாலும் எதிரேற்கும் கரையில்லை! இடையிடையே தங்குதற்கோ ஏதும் வசதி இல்லை! மேலே எல்லையற்ற பெருவானம்! கீழே ஆழ்ந்தகன்று அலைவீசி ஆர்ப்பரிக்கும் கரைகாணாப் பெருங் கடல். பறந்து சலித்த பறவை திரும்ப வந்து கப்பலின் கொடி மரத்தே பழையபடி உட்கார்ந்து கொண்டது! எம்பெருமானே இப்பறவையைப் போலத்தான் நானும். உன்னை விட்டு எங்குப் போய் உய்வேன்? இவ்வுலகியலில் எதைஎதையோ தேடி அலைந்து சலித்து உன் இணையடி மலர்களிலேயே வந்து அடைக்கலம் புகுந்துள்ளேன்' இதனை

> '' வெங்கட்டிண் களிறடர்ந்தாய்! விற்றுவக்கோட் டம்மானே!
> எங்குப்போ யுய்கேன்உன் இணையடியே யடையலல்லால்
> எங்கும்போய்க் கரைகாணாது எறிகடல்வாய் மீண்டேயும்
> வங்கத்தின் கூம்பேறும் மாப்பறவை போன்றேனே! '' (5-5)

எனக் கூறுகின்றது பாசுரம்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

ஆறாம் பாசுரம் ஆன்ம மலர்ச்சிக்கு அருளே காரணம் என்பதை விளக்குகின்றது. ஆழ்வார் அருளாளனைப் பார்த்து வேண்டுகின்றார்: 'வித்துவக் கோட்டம்மானே! நெருப்பும் வெம்மையுடையதேனும் தாமரைமலர் அதற்கு மலர்வதில்லை. அருகில் நெருங்கினாலோ கருகி, வதங்கி அழியுமே அல்லாது மலராது. ஆனால், தொலைவிலிருப்பதும் எல்லார்க்கும் பொதுவில் நிற்பதுமாகிய சூரியனைக் கண்டவுடன் அம்மலர் மலர்கின்றது. அதுபோல நின் திருவருள் என்னுடைய கொடிய துயர்களைத் தீர்க்காவிடினும் நின் எல்லையற்ற திருக்கல்யாண குணங்களுக் கல்லாமல் வேறொன்றனுக்கும் என் அகம் நெகிழ மாட்டேன்'

" செந்தழலே வந்தழலைச் செய்திடினும் செங்கமலம்
அந்தரஞ்சேர் வெங்கதிரோற் கல்லா லலராவால்
வெந்துயர்வீட் டாவிடினும் விற்றுவக்கோட் டம்மாஉன்
அந்தமில்சீர்க்கு அல்லால் அகங்குழைய மாட்டேனே " (5-6)

என்பது பாசுரம்.

பசும்பயிரும் தொடுகடலும்

ஏழாவது பாசுரம் இறைவனுக்கும் ஆன்மாவிற்கும் இடையே யுள்ள தவிர்க்க முடியாத பந்தத்தினை விளக்குவதாக அமைந் துள்ளது. ஆழ்வார், தாம் அனுபவித்துவருகின்ற துயரத்தை இறைவன் தீர்த்துவைக்கவில்லை எனப் பாசுரங்கள்தோறும் கூறுவதுபோலவே இப்பாசுரத்திலும் கூறுகின்றார்: 'வித்துவக் கோட்டம்மானே! எவ்வளவு காலத்திற்கு வானம் மழை பெய்யாமல் பொய்த்துப் போனாலும் பசிய பயிர்கள், மை மேகங்கள் மழை பொழிவதற்காகத் திரண்டு வருவதனையே பார்த்திருக்கும். அவைபோல, என்னுடைய மெய்த் துயரத்தை நீ போக்கவில்லை. ஆனாலும் என் சித்தத்தை உன்னிடமே அடியேன் வைத்திருப்பேன்' என்பது பாசுரப் பொருள். 'வானம் பொய்த்துவிட்டால் மண்ணில் பசும் புல்லின் தலை காண்பது கூட அரிது' (குறள் 16) எனக் கூறுவார் வள்ளுவர். ஆழ்வாரோ மண்ணில் முளைத்து வளர்ந்த பயிரைப் பற்றிப் பேசுகின்றார். மண்ணகத்து உயிர் வாழ்க்கை என்பது வானகத்து அருளையே நம்பி இருக்கின்ற தென்கின்றார்.

எட்டாவது பாசுரம் ஆன்மப் பயணம் இறைவனை அடைவதிலேயே முடிவடைகின்ற தென்பதனை விளக்குகின்றது.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

'கார்முகில் வண்ணனே! வித்துவக்கோட்டம்மானே! நீர் திரண்டு ஆறுகளாகிப் புறப்பட்டுப் பலவாறு பரந்தோடினாலும் இறுதியில் கடலில்தான் கலக்கின்றன. வேறு புறத்தில் நிற்பதில்லை. அங்ஙனமே என்னுள் புகுந்து என் இதயங்கலந்த நின் திருக் கல்யாண குணங்களில் ஈடுபட்டு நின்னருளில் புகுந்து நிற்பதைத் தவிர வேறு எனக்குப் புகலிடம் இல்லை' என்பது ஆழ்வார் வாக்கு. இதனை,

" தொக்கிலங்கி யாறெல்லாம் பரந்தோடித் தொடுகடலே
புக்கன்றிப் புறம்நிற்க மாட்டாத மற்றவைபோல்
மிக்கிலங்கு முகில்நிறத்தாய்! விற்றுவக்கோட் டம்மாஉன்
புக்கிலங்கு சீரல்லால் புக்கிலன்காண் புண்ணியனே " (5-8)

எனப் பாசுரம் இசைக்கின்றது. வினைத் தொகுதிகளினால் சேதநனாகிய ஆன்மா பல பிறவிகளில் பரந்து திரிகின்றான். எனினும் இறைவனின் திருவருளால் ஈர்க்கப்பெற்று அத் திருவருளே பற்றுக்கோடாகக் கொண்டு, அவன் ஏவியபடி நடந்து, அவனால் தரிக்கப் பெற்று அவனுக்கு அடிமையாகின்றான். அவனது கைங்கரியத்தில் ஆழ்ந்து போகின்றான். ஆழ்வார், தாம் அனுபவிக்க வேண்டிய வினைத் துயர்களை எம்பெருமான் தீர்த்து அளி செய்யாவிட்டாலும், அவனையே பற்றி நிற்பதல்லால் தம்மால் ஆவதொன்றுமில்லையென்கிறார். அவனது மாயாலீலையில் நடப்பனவற்றை ஏற்றுக்கொண்டு, 'பாரில் அவன் பாதமூலமேயன்றி வேறு ஒரு பற்றுமற்று நிற்கும் நிலையைக்' குலசேகரப் பெருமாள் இப்பாசுரங்களில் வெளிப்படுத்துகின்றார்.

நண்ணும் செல்வமும் நண்ணா நரகமும்

மக்கள் நிலையில்லாத செல்வத்தைத் தேடி நிலைத்த செல்வ மான இறைவனைத் தேடாதொழிகின்றனர். 'நில்லாதனவற்றை நிலையின என்றுணரும் புல்லறி'வின் ஆளுமையே இதற்குக் காரணம். ஒன்பதாம் பாசுரம் நிலைத்த செல்வமான இறைவனைப் பற்ற வேண்டுமென்பதை விளக்குவதாக அமைகின்றது. ஆழ்வார் கூறுகின்றார்: 'மிகுந்த ஒளியை உடைய சக்கரப் படையை உடைய வித்துவக்கோட்டம்மானே! உன்னையே செல்வமாக நினைத்து வேறு செல்வங்களை நினையாத ஒருவனுக்கு அவன் வேண்டாத அச்செல்வங்கள் தாமே வந்து சேர்வதைப்போல, மாயா லீலையினால் என்னை வேண்டாது நீ இருப்பினும் நான் உன்னையே வேண்டி அடியானாக நிற்பேன்.' இதனைப் பாசுரம்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

" நின்னையே தான்வேண்டி நீள்செல்வம் வேண்டாதான்
தன்னையே தான்வேண்டும் செல்வம்போல் மாயத்தால்
மின்னையே சேர்திகிரி விற்றுவக்கோட் டம்மா!
நின்னையே தான்வேண்டி நிற்ப னடியேனே "

என அழகுற விளக்குகின்றது. இறைவனைவிட உயர்ந்த செல்வம் என்ன இருக்கின்றது? 'வேண்டத்தக்கதை அறிபவன் அவன்; வேண்ட முழுவதையும் தருபவனும் அவனே!' அவனிடம் அற்பங்களை வேண்டுவார் உண்டோ? உண்டென்பதே உலகியல்! ஆனால், ஆழ்வார் அவனிடம் அற்பங்களை வேண்டுபவரல்லர்! அவனையே அவர் வேண்டி நிற்கின்றார்.

பத்தாம் திருமொழி, திருக்கடைக்காப்பு

'வித்துவக்கோட்டு அம்மானே! நீ என்னை விரும்பி ஏற்றுக் கொள்ளாவிடினும், வேறு யாரும் எனக்குப் பற்றாவார் இன்மையால், நின்னையே பற்றினேன் என்று அப்பெருமானின் பாதமலர்களை விரும்பிக் கொற்றவேல்தானைக் குலசேகரன் சொன்ன நற்றமிழ் பத்திலும் வல்லவராவாரை நரகம் என்றும் நண்ணாதாகும்' என்பது அதிற் கூறப்படும் பொருள். வித்துவக் கோட்டு அம்மான் வேண்டுதலாக எழுந்துள்ள இப்பத்துப் பாசுரங்களும் பொருட்சிறப்பால்மட்டு மன்றி உவமை நலத்தால், சொற்செறிவால், பாவிகத்தால், சந்தத்தால், உணர்வுச் சிறப்பால், உயர்நிலையில் ஒளிர்கின்றன எனில் மிகையாகாது.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

10. பொய்யனுக்கே போனதென் நெஞ்சு

ஆறாம் திருமொழி, 'ஆய்ச்சியர் ஊடி அமலனை எள்கியுரைத்தல்' என்பதாகக் கண்ணபிரானின் காதல் வினோதங்களைக் காட்டுகின்றது 'கண்ணனென்னுங் கருந்தெய்வக் காட்சி பழகிக் கிடக்கும்' ஆய்ச்சியரின் அனுபவ உரைகளாக இத் திருமொழி இலங்குகின்றது. தம்மை ஆய்ச்சியராக, அதுவும் இளம்பெண்ணாகப் பாவித்துக் கொண்டு ஆழ்வார் இப்பாசுரங்களைப் பாடியிருக்கின்றார். பொதுவாக, ஆழ்வார்களின் நாயக-நாயகி பாவப் பாடல்கள் அற்புதமானவை. தாம் உணராத ஒன்றை எவ்வளவு முயன்று எழுதினாலும் படைப்பாளர் தோற்றுவிடுவர். ஆழ்வார்களின் பாடல்களில் இத்தகு குறையை நாம் காணவியலாது. அதற்குக் காரணம், அவர்கள் தம் இறைவனிடம் கொண்ட ஆழ்ந்த காதலுணர்வே. இத்தகு பாவிக உணர்வை இராமகிருஷ்ண பரமஹம்சரின் வாழ்க்கையைத் தெரிந்து கொள்வதன் மூலம் உணரலாம்.

பெண்மை, ஆண்மை என்ற உணர்வுகளெல்லாம் மனத்தைப் பொறுத்ததே. ஆணின் உடலில் பெண் மனத்தையும், பெண்ணின் உடலில் ஆண் மனத்தையும் உருவாக்கமுடியும். பயிற்சியின் தீவிரமே இதைச் சாதிக்கவல்லது. உலகியலாருக்கு வெறும் சிலையாகத் தெரிவது பக்தனுக்குத் தெய்வமாகவே தோன்றும். ஆழ்வார்களுடையவும், நாயன்மாருடையவுமான அனுபவங்களே அவர்தம் பாசுரங்களாயின. அவ்வனுபவ உணர்வை அனுபவிக்கும் வாசகனே அப்பாசுரங்களின் முழுமையை அனுபவிக்க முடியும். சொற்கள் வெறும் வரிவடிவங்களே. வரி வடிவங்கள் மூலம் சொற்களைத் தெரிந்து, பின்பு அச்சொற்கள் குறிக்கும் பொருளை அறிந்து, அதன்பின்பு, அப்பொருளை அனுபவித்துச் சொற்களாக வெளிப்படுத்தியவரின் அனுபவத்தைத் தம்முள் ஏற்பவர்தாம் அச்சொற்களின் மூலம் வெளிப்படுத்தப்பட்ட பொருளை உணர முடியும்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

தலைவலியைத் தம் வாழ்வில் அனுபவியாத ஒருவருக்குத் தலைவலியைப் பற்றி எவ்வளவு வர்ணித்துச் சொன்னாலும் அதனை முழுமையாகப் புரிந்துகொள்ள முடியாது. பிறந்தவுடன் தாயை இழந்து வளர்ந்தவர்கள், தாயன்பின் தன்மையை வார்த்தைகளால் எவ்வளவு விவரித்துச் சொன்னாலும் புரிந்து கொள்ள முடியாது! தமது மொழியன்றித் தாம் அறியாத மொழி ஒன்றன் வரி வடிவங்கள் ஒருவருக்கு வெறுங்கோடுகளாகவன்றோ தெரியும்? இங்ஙனமே நமக்குக் கோயில்களில் சிலையாகத் தெரிவனவெல்லாம் ஆழ்வார்களுக்கும் நாயன்மார்களுக்கும் தாம் வழிபடும் இறைவர்களாகத் தெரிகின்றன.

இத்தகு பெரும் பேறு பெற்ற அருளாளர்களில் ஒருவரே நம் குலசேகரரும். கண்ணபிரானையும், இராமபிரானையும் காதலி யாகவும், தாயாகவும், தந்தையாகவும் நின்று காணும் காட்சி களையே அப்பெருமானின் திருமொழிகளாகக் காணுகின்றோம்.

சிறந்த நடிகனொருவன் தான் நடிக்கின்ற பாத்திரத்திற்கேற்பத் தன்னை உருவாக்கிக்கொள்வது போலக் காதல் வயப்பட்ட ஆய்ச்சியராக, தேவகியாக, தாலாட்டுப் பாடும் தாயாக, தனயன் மேல் பேரன்பு கொண்ட தயரதனாக ஆழ்வார் தம்மை உருவாக்கிக் கொள்ளும் ஒப்பற்ற தன்மையை அவ்வத் திருமொழிகளை ஒதி உணரலாம். ஆறாந் திருமொழி, கண்ணன்மேல் காதல் கொண்டு, கலவியின் பின் அக்கள்வன் பல பெண்களின் பெண்மையைக் கவர்ந்த தன்மையை உணர்ந்து ஊடி உரைக்கும் ஆய்ச்சியரின் உரைகளாய் அமைந்துள்ளது. ஒவ்வொரு பாசுரமும் ஓர் ஒப்பற்ற ஓவியமாக உள்ளங்கவர் தமிழாக உருவாக்கப்பட்டிருத்தலைக் காணலாம்.

கண்ணபிரானுடைய அவதாரமகிமைகள் வடநாட்டிலிருந்து தமிழகம் வந்தபோது பெரும் தத்துவார்த்த நிலையினைப் பின்னணியாகப் பெற்றன. அப்பெருமானுடைய லீலைகள் மாயாவினோதங்களாயின. சீவான்மாக்களை உய்விக்கும் செயல்களாக அவை சிறப்புப் பெற்றன. எனவே, ஆய இளம் மகளிர் பலரோடு அவன் கலவி இன்பம் நுகர்ந்தான் எனக் கூறுவதெல்லாம் ஆன்மக் கலப்பெனவே கொள்ளத்தக்கன.

சீவான்மாக்கள் இறைவனை இருநிலைகளில் பற்றுகின்றன. முதல்நிலை அவன் அருளை, அவனை அடையும் உபாயமாகக் கொள்ளுதல். அதாவது புருஷகார பூதையாக விளங்குகின்ற

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

பிராட்டியை முன்னிட்டுக் கொண்டு அவனைப் பற்றும் நிலை. அதற்கு எடுத்துக்காட்டாக இலங்குபவர் ஆண்டாள் நாச்சியார்.

" செப்பன்ன மென்முலைச் செவ்வாய்ச் சிறுமருங்குல்
நப்பின்னை நங்காய்! திருவே! துயிலெழாய்
உக்கமுந் தட்டொளியுந் தந்துன் மணாளனை
இப்போதே யெம்மைநீ ராட்டேலோ ரெம்பாவாய் "

(திருப்பாவை -20)

எனும் திருப்பாவைப் பாசுரம் இதனை விளக்கும். இனி இரண்டாம் நிலை அவன் அருளை வேண்டாது உலகியல் இன்பங்களை வேண்டுதல். இதற்கு எடுத்துக்காட்டாக இலங்குபவள் சூர்ப்பணகை!

ஆய்ச்சியரின் நிலை, ஆண்டாளின் நிலை! ஆன்மக் கலப்பை உடற் கலப்பைக் கூறுவதன்மூலம் கண்ணனின் காதல் லீலைகளுக்கு விளக்கம் கூறுகின்றனர் எனலாம். சுருங்கக் கூறின், ஆழ்வார்கள் நாயக - நாயகி பாவத்தில் பரந்தாமனைத் தாங்கள் அனுபவித்த வண்ணமே ஆய்ச்சியர் கண்ணன் தொடர்பையும் காணுகின்றனர்.

அவதாரங்களுள் மக்களை மிகவும் கவர்ந்த அவதாரங்கள் இராமாவதாரமும், கிருஷ்ணாவதாரமும் ஆம். உலகின் புகழ் பெற்ற இதிகாசங்களுள் தலைசிறந்தனவாகப் போற்றப்பெறும் இராமாயணமும், மகாபாரதமும் இவ்விரு அவதாரங்களை மையமாகக் கொண்டே படைக்கப் பெற்றுள்ளன. இந்திய நாட்டின் ஆன்மிக மற்றும் பண்பாட்டுக் கூறுகளை இவ்விதிகாசங்கள் உலகுக்குக் கூறிய வண்ணம் ஒளிர்கின்றன. இவ்விரு அவதாரங்களின் அடிப்படையில் இந்தியக் கலைஞானங்கள் எவ்வளவோ உயரங்களை எட்டியுள்ளன. வேறு இதிகாசங்களின் நாயகர்கள் பெரும்பாலும் பெறாத பேறு இவ்விரு அவதாரங்களையும் மக்கள் வழிபடு தெய்வங்களாக ஏற்றுக்கொண்டமை யாகும். இந்திய மக்களின் ஆன்மிகத் தேடல்களுக்கு இவ்விரு பாத்திரங்களும் பெருந்துணை புரிந்திருக்கின்றன.

இவ்விரு பாத்திரங்களும் ஒரே தெய்வத்தின் இரு அவதாரங்களாயினும் அவை இருவேறு நோக்கங்களைக் கொண்டவை. இராமாவதாரம் உயர்ந்த குறிக்கோள்களை நிலை நிறுத்திப் பின்பற்றக் கூடிய ஒழுகலாறுகளை உணர்த்துவதாக அமைந்தது. உலகில் ஒரு மனிதன் எப்படிச் சிறந்த மனிதனாக வாழ்வது என்பதனை வாழ்ந்து காட்டியவன் இராமன். எனவே, அவனைப் புருஷோத்தமன் எனப் பாராட்டிக் கூறுவர்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

கிருஷ்ணாவதாரம் இராமாவதாரத்துக்கு நேர் முரணானது. இராமாவதாரம், மண்ணுலகமும் விண்ணுலகமும் படும் துயரத்தைப் போக்குவதற்காக; 'அறம் வெல்லும் பாவம் தோற்கும்' எனும் சத்தியத்தை நிலைநாட்டுவதற்காக - ஒரு மாமன்னன், பெருந் தவத்தோன் ஒருவனைக் கொண்டு செய்த பெருவேள்வியின் பயனாக, அப்பெருவேந்தனின் ஒப்பற்ற மகனாக - சக்கரவர்த்தித் திருமகனாகத் தோற்றம் பெறுகின்றது. மனித வேடந்தாங்கி அதற்கேற்ப மனிதனாகவே நடந்துகொள்கின்றது. கிருஷ்ணாவ தாரம் இருகூறுகளை உடையது. முதற்கூறு, சிறையில் பிறந்து ஆயர்பாடியில் ஒளிந்து வளர்ந்து, பல லீலா விநோதங்களைக் காட்டிக் கம்சனை வதைப்பதோடு முடிகின்றது. இரண்டாவது கூறு, துவாரகை நகரில் சகல சௌகரியங்களோடு வாழ்ந்து, அத்தினாபுரத்தில் ஏற்பட்ட பங்காளிப் பகையில் தலையிட்டு இரு பக்கத்தாரையும் அழித்துத் தானும் தன் குலத்தோடு அழிந்தது.

கம்சன், தன் சகோதரியின் எட்டாவது கர்ப்பப் பிள்ளையால் தனக்கு அழிவு என்பதைக் கேட்ட பிறகுதான் தன் உயிரைக் காப்பாற்றிக்கொள்ளப் பல செயல்களில் ஈடுபடுகின்றான். அவனுக்கு விதிக்கப்பட்டிருந்த இந்த விதியினை நிறைவேற்று கின்றான் கண்ணன். இதுபோலவே பூமாதேவியின் பாரத்தைக் குறைக்கப் பாரதப் போரை நடத்தி முடிக்கின்றான். இவ்விரு செயல்களுக்கும் அவன் சூத்திரதாரியாக இருக்கின்றான். கர்மாவை நிறைவேற்றும் கர்த்தா அவன். இராவணர்கள் தோன்றுவது அருமை. ஆனால், தன் உயிருக்குப் போராடும் கம்சர்களும் பங்காளிப் பகைவர்களும், ஆசைகளினாலும் பொறாமைகளினாலும் உருவாக்கும் போர்க்களங்களும் அப்போர்க்களங்களின் பின்னணிகளில் உருவாகும் பொய்ம்மை, சூது, வஞ்சகம், முதலான தீமைகளும் என்றும் உலகில் இருந்துகொண்டே யிருக்கின்றன. இவற்றை நடத்தும் சூத்திரதாரி கண்ணன்!

சுருங்கக் கூறவேண்டுமானால் உடலோடு கூடி, உலகில் பிறப்பெடுத்த ஆன்மா உய்தி பெற வேண்டிய உபாயத்தைக் கற்றுக்கொடுப்பது இராமாவதாரம். புருஷன் என்றால் ஆன்மா என்பது பொருள். உத்தமமான புருஷன் புருஷோத்தமனாகின்றான். உலகில் ஒருவர் எப்படி வாழவேண்டுமென்பதனைக் கற்றுக்கொடுப்பது இராமாவதாரம்! அவ்வவ்வான்மாக்களின் உள் நின்று அவற்றை அவற்றின் கர்மப் பலன்களை உண்பிக்கச் செய்பவன் அவன், அவனின்றி எச்செயலும் இல்லை! எல்லாப் போராட்டங்களையும் அவனே முன்னின்று நடத்துகின்றான்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

வெற்றி தோல்விகளைக் கர்ம பலா பலன்களாகத் தருகின்றான். உலகம் எனும் குருச்சேத்திரத்தில் ஒவ்வோர் ஆன்மத்தேரையும் ஓட்டிப் போராடவைப்பவன் அவனே! இவ்வுண்மைகளைப் புரிந்துகொண்டால் கிருஷ்ணாவதாரத்தின் செயல்பாடுகளைப் புரிந்துகொள்ள முடியும். கடவுள் எப்படி இருப்பான் என்பதைக் காட்ட வந்தது கிருஷ்ணாவதாரம். ஆன்மா எங்ஙனம் உயர்வடைய வேண்டுமென்பதை உணர்த்த வந்தது இராமாவதாரம்.

குலசேகரர், இறைவன் மனிதனாக மண்ணில் நடந்து பட்ட சிரமங்களாகிய எளிவந்த தன்மையிலும், கண்ணபிரானாக வந்து விளையாடிய லீலா விநோதங்களிலும் ஈடுபட்டவர். இந்த அடிப்படையில் ஆறாந் திருமொழியைப் பார்க்கவேண்டும்.

பொய்யாற் புலர நின்றாள்

'கண்ணபிரானே! இந்த ஆயர் பாடியில் அழகிய மலர்களை அணிந்த நறுமணம் மிக்க கூந்தலையுடைய இடையர் குலப் பெண்கள் எத்தனையோ பேர் உனக்கு வேண்டியவர்கள் இருப்பதை அறிவேன். அதனால் உன் மார்பைத் தழுவ வேண்டும் என்ற ஆசையொன்றும் எனக்குப் பெரிதாக இல்லை! இருந்தும் உன் பொய்யான வார்த்தைகளைக் கேட்டு, நீ பொய்யன் என்பதை அறிந்திருந்தும், அவற்றை நம்பிவிட்டேனே! நம்பி, நீ குறியாகச் சொன்ன யமுனைக் கரையின் ஓரத்திலிருந்த அந்தப் பெரிய மணல்திட்டின் அருகில் நின்றிருந்தேன்! மழை போன்று பனி கொட்டியது! உடம்பைத் துளைப்பது போன்ற பனிக் குளிர்! அதில் உடம்பு நடுங்கியது! உள்ளமோ, இப்படி நான் நின்று தவிப்பதைப் பார்த்துவிடுவார்களோ என்று கூசியது. பொழுது புலரும் வரையிலும் இங்ஙனம் காத்திருந்தேன்! நீ வரவில்லையே' எனக் கண்ணனைக் கண்ட போது கோபித்துக்கொண்டாள் ஒரு பெண்!

கண்ணனுக்கு வேண்டிய பெண்கள் எத்தனையோ பேர் இருப்பதை இவள் அறிவாளாம்; அதனால் அவன் மார்பைத் தழுவும் ஆசையொன்றும் இவளுக்கு இல்லையாம்; அம்மட்டோ! அவன் பொய்யன் என்பதையும் அறிவாளாம், இப்படியெல்லாம் இருந்தும் யமுனைக் கரையில் கொட்டும் பனிக்குளிரில் இரவெல்லாம் நின்றிருந்தாளாம்! இப்படி இவள் பேசுவதற்கும் செயலுக்கும் ஏதாவது தொடர்புண்டா! கண்ணன் மேல் கொண்ட காதலன்றோ தெரிகின்றது.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

தயிரா கடைந்தாய்?

'தாமோதரனே! எனது வீட்டின் கீழ்ப்பக்கத்திலுள்ள வீட்டிலிருப்பவள் அந்தக் கயல்விழியாள். அவள் தனியாகத் தயிர் கடைந்துகொண்டிருப்பதைக் கண்டு, 'நானும் உன்னுடன் விரைந்து தயிர் கடைவேன்' எனக் கூறிக்கொண்டு திருட்டுப் பார்வை பார்த்தபடி அவள் அருகே சென்றாய். வண்டுகள் மொய்க்கும் மலர்க் 'கூந்தல்' அவிழ்ந்து அசையவும், ஒளி பொருந்திய முகம் வேர்க்கும்படியாகவும், சிவந்த இதழ்கள் துடிக்கும்படியாகவும் நீ தண் தயிர் கடைந்த விதத்தை நான் அறிவேன்' எனக் கூறி ஓர் ஆய்ச்சி கண்ணனைப் பார்த்துச் சிரிப்பதாக அமைந்தது இரண்டாம் பாசுரம்.

மாயமும் வளருமோ

'இரு மருதமரங்களை வீழ்த்திய வித்தகனே! மலர்களை நிரம்பச் சூடிய கரிய கூந்தலை உடைய பெண் ஒருத்தியைக் கடைக் கண்ணால் பார்த்துக் காமத்தை வளர்த்தாய்; இன்னொருத்தியிடம் மனம் ஒன்றியவன் போல் அவள் நெஞ்சம் நெகிழப் பார்த்தாய்; இவர்கள் இப்படி இருக்கவே, மற்றொருத்தியிடம் பெரும் காதல் கொண்டிருப்பவனைப்போலப் பேசினாய் உன்னுடைய கள்ளம் உணராத பேதைப் பெண் ஒருத்தியிடம் அவளைச் சந்திப்பதாகக் கூறி ஒரு குறியிடம் குறித்துப் பொய் சொன்னாய்; இத்தனை பொய் மாயங்களையும் செய்து, அப்பெண்களை நம்ப வைத்து விட்டு, சுருண்ட கூந்தலை உடைய இளம் பெண் ஒருத்தியிடம் கலவி இன்பங்கொண்டாய்! அவளுக்கும் நீ உண்மையுடையவனாய் இருக்கப்போவதில்லை! நீ வளர வளர உன்னுடைய கள்ளமும் கபடங்களுமாகிய மாயையும் வளருகின்றதே' - இங்ஙனம் ஓர் ஆய்ச்சி சலித்துக்கொள்வதாக அமைந்தது மூன்றாம் பாசுரம்.

" கருமலர்க் கூந்த லொருத்தி தன்னைக் கடைக்க ணித்து
ஆங்கோர் ஒருத்தி தன்பால்
மருவி மனம்வைத்து மற்றொ ருத்திக் குரைத்தொரு பேதைக்குப்
பொய்கு றித்துப்
புரிகுழல் மங்கை யொருத்தி தன்னைப் புணர்தி யவளுக்கும்
மெய்ய னல்லை!
மருதி றுத்தாய்! உன்வளர்த் தியூடே வளர்கின்ற தாலுன்றன்
மாயை தானே! " **(6-3)**

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

என்பது அவ்வழகிய பாசுரம். ஆன்மாக்களின் பக்குவநிலைக் கேற்பத் திருவருள் கைகூடும் என்பது பாசுர உட்பொருள்.

போகத் தூது

'தாயாகிய யசோதையின் முலைகளில் உனக்கு வேண்டிய பாலமுதம் இருக்கவும் அதனை விடுத்துத் தவழ்ந்தும், தளர் நடை நடந்தும் சென்று பூதகி எனும் பேய்ப்பெண்ணின் முலைகளில் வாய் வைத்து நஞ்சை உண்டாய்! 'இதனால் பித்தன் இவன்' என்று பிறர் ஏசப் பெயர் கொண்டாய்! காதல் மிகக் கொண்டு உனக்காகக் காத்திருந்தேன் நான்! ஆனால் நீயோ நான் தூதாக அனுப்பிய என் பணிப் பெண்ணோடு மிருதியான போகத்தை நன்கு அனுபவித்தாய்! அந்தச் செய்கையும் உன் தீம்புகளுக் கேற்றதுதானே' என ஓர் ஆய்ச்சி கண்ணனை ஏசி உரைப்பதாக அமைவது நான்காம் பாசுரம்.

இப்பாசுரம் மறக்கருணை, அறக்கருணை எனும் இறைவனின் இருவிதக் கருணைகளை விளக்கிநின்றது. ஆன்மாக்கள், இறையருளோடு முரண்பட்டுப் பகைகொண்டும், அவ்வருளோடு ஒன்றி நின்று பக்தி செலுத்தியும் உய்கின்றன. இராவணாதி அரக்கர்கள் இராமபிரானுடைய அம்புகளுக்கிலக்காகி மேல்நிலை அடைந்தது போலவே, விடண, சுக்கிரீவர்கள் அன்பு செலுத்தி அவன் அருளுக்காட்பட்டனர். அன்பே உருவான யசோதைத் தாயின் மார்பில் வாய்வைத்துப் பாலுண்ட பாலகன், தன்னைக் கொல்லவந்த பாதகியின் மார்பிலும் வாய் வைத்து உண்டான். அவன் வேண்டுதல் வேண்டாமை அற்றவன்!

தூதாக அனுப்பியவளுடன் போகம் துய்த்தான் என்பது ஆச்சாரியனாகத் தனது அருளை ஆருயிர்களுக்கு எடுத்தியம்ப வல்லவனை ஆட்கொண்டான் என்பதன் குறிப்பாகும்!

அங்கேயே நட

'கண்ணா! நீ இங்கு எதற்கு வந்தாய்? உன் களவையெல்லாம் நான் பார்த்துக்கொண்டுதான் இருந்தேன்! மின்னற் கொடிபோன்ற இடையை உடைய ஒருத்தியை அணைத்தபடி என்னுடைய வீதிவழியாகப் போனாய்! மிக்க இருள் பரவிக்கொண்டிருந்த நேரமது! பொன்னொத்த பீதாம்பரத்தாலே யாரும் அறியாமலிருக்க வேண்டி முக்காடிட்டபடி நீ அவளை அழைத்துப் போனாய்! அதுவுமன்றி நீ அழைத்துப் போகின்றவளுக்குத் தெரியாதபடி,

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

கண்ணில் தென்பட்ட வேறொருத்தியைக் கடைக் கணித்து நோக்கி, 'இன்னவிடத்துக்கு வா' எனக் குறியிடத்தைக் காட்டிக் கையால் சைகையும் செய்தாய்! இருள் செறிந்திருந்தாலும், நீ முக்காடிட்டு மறைத்துக் கொண்டு போனாலும் நான் பார்த்துக்கொண்டுதான் இருந்தேன்! அந்தப் பெண்ணை விட்டு விட்டு எதற்காக என்னிடம் வந்தாய்? இனிமேலும் நீ அங்கேயே நடப்பாயாக' எனக் கண்ணனின் களவுகளையெல்லாம் பார்த்துக்கொண்டிருந்த பெண்ணொருத்தி அவன் தன்னிடம் வந்தபோது கூறுவதாக இவ்வைந்தாம் பாசுரம் அமைகின்றது.

அஞ்ஞான இருளிலும் அவனுக்கு ஆட்பட்ட ஆன்மா அவனை அடையாளங் காண முடியுமென்பதை இப்பாசுரம் விளக்குகின்றது.

இரவில் பிரிந்தவன் நீ!

'மல்லர்களைப் போராற்றி வென்ற தோள்களை உடைய கண்ணபிரானே! கொடிய வினைச்சியான என்னை, நான் தூங்கத் தொடங்கியவுடன், எனக்கு இனிமையாய் இருந்த அணை மீதே விட்டுவிட்டுப் போய்விட்டாய். அங்ஙனம் போன அந்த இரவும் அதற்கு மறுநாளும் எல்லாப் பெண்களையும் மருவி வந்தாய்! அப்படிப்பட்ட நீ என்னருகில் எதற்காக வந்தாய்? எம்பெருமானே! நீ எழுந்து அவர்களிடமே செல்வாயாக' - இங்ஙனம் ஆய்ச்சி ஒருத்தி, தான் ஏமாந்து தூங்கிய பொழுதைப் பயன்படுத்திக் கொண்டு பிரிந்து போய்ப் பல பெண்களோடாடி வந்த கண்ணனைக் கோபித்துக் கொள்கிறாள்! இப்பொருளுடைய ஆறாவது பாசுரம்:

" மற்பொரு தோளுடை வாசு தேவா! வல்வினை யேன்
துயில் கொண்ட வாறே
இற்றை இரவிடை யேமத் தென்னை இன்னணை
மேலிட்ட கன்று நீபோய்
அற்றை இரவுமோர் பிற்றை நாளும் அரிவை யரோடு
அணைந்து வந்தாய்!
எற்றுக்கு நீயென் மருங்கில் வந்தாய் எம்பெரு மான்!
நீ எழுந்தருளே! " (6-6)

உலகபோகங்களாகிய படுக்கையை இனிதாகக் கொண்டு அறியாமை இருளில் மூழ்கும் ஆன்ம சாதகர்களை, இறைவன், அவர்கள் அத்துயிலினின்றும் எழும் வரை நீங்கிவிடுகிறான் என்பதை இப்பாசுரம் இயம்புகின்றது.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

புள்ளுவம் பேசாதே போ!

''நச்சரவையும் நற்படுக்கையாகக் கொண்டவனே! உன் மாயப் பேச்சில் மயங்கி ஏமாந்த பழைய பெண்ணல்ல நான்! நீ மகிழ்ந்து செல்லும் மைதீட்டிய ஒளி பொருந்திய கண்களை உடைய பெண்களல்ல நான்! அத்தகையவர்களோடு தங்கிவிட்டு எம்முடைய சேரிப்பக்கம் வருவதை விட்டுவிடு! அழகிய ஆடையினையும், திருமுகத்தையும், சிவந்த கோவைக்கனி போன்ற இதழ்களையும், அழகிய முடியினையும் கண்டு ஈடுபட்டு உன் பொய்ம்மையில் மயங்கி ஒருநாள் பட்டபாடே போதும்! இனியும் வஞ்சகமான வார்த்தைகளைப் பேசி இங்கு நில்லாமல் நீ உகந்து செல்லும் பெண்களிடமே போவாயாக' - இப்படி ஓர் ஆய்ச்சி ஊடிப் பேசுவதாக அமைவது ஏழாம் பாசுரம்.

அனவரதமும் அவன் அருளைப் பிரியாமலிருப்பதையே அருளை அனுபவித்த ஆன்மா விரும்புகின்றதென்பதை இப்பாசுரம் உள்ளீடாகக் கொண்டுள்ளது.

இன்னும் ஒருநாள் நீ என் கை அகப்பட்டால்

'என்னை இவ்விடத்திற்கு வாவென்று குறியிடம் கூறினாய்! நானும் வந்தேன்! ஆனால் கள்வனே நீ என்ன செய்தாய்? முல்லைப் பந்தலின் நிழலிலே நீண்ட நேரமாகக் காத்திருந்த ஒருத்தியோடு கூடிக் குலாவினாய்! என்னைக் கண்டவுடன் கலங்குவது போலப் பாசாங்கு செய்து நழுவிவிட்டாய்! பொன்னிற ஆடையைக் கையில் பிடித்துக் கொண்டு என்னைக் கண்டு அச்சமடைந்தவனைப் போல் பொய்யாக நடித்து நீ போனாலும், இன்னுமொருநாள் என் கையகப்படும்படி நீ வராமலா போகப் போகிறாய்? அப்பொழுது என் கோபத்தை யெல்லாம் தீர்த்துக்கொள்வேன்' - கண்ணனிடம் ஏமாந்தவள் 'இன்னொரு நாள் வா' உன்னைப் பார்த்துக் கொள்கிறேன்' எனக் கறுவுவதாக அமைவது எட்டாம் பாசுரம்.

இறையனுபவம் கையகப்படுவதுபோற் காணப்படினும் காலங்கனிந்த போதன்றிக் கை கூடாதென்பதை இவ்வெட்டாம் பாசுரம் உட்பொருளாகக் கொண்டுள்ளது.

எங்களுக்கொருநாள் குழலூத லாகாதோ!

''மங்கலமான நல்ல வனமாலையானது மார்பில் விளங்கித் தோன்ற, மயிலிறகுகளையும் அணிந்து, அழகிய ஆடையினை இடையில் உடுத்து வந்தாய்! பூங்கொத்துக்களையும் காதுகளில்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

செறியச் சூடிக்கொண்டிருந்தாய்! தேன் மலர்களைச் சூடிய கூந்தல்களை உடைய பெண்களோடு குழைந்தபடி குழலூதி வந்தாய்! இனிமையாக இருந்தது! எங்களுக்கொரு நாள் வந்து குழலூதப்படாதோ? அப்படி ஊதினால் அதிலிருந்து இன்னிசை வெறி வராதோ'' கண்ணனை அணையவேண்டுமென்ற கருத்துடையாளொருத்தி இப்படி மறைமுகமாக அவனுக்கு அழைப்பு விடுவதாக அமைவது ஒன்பதாம் பாசுரம்! இனிமையான அப்பாசுரம்:

" மங்கல நல்வன மாலை மார்வி லிலங்க மயில்தழைப் பீலி சூடிப்
பொங்கிள வாடை அரையிற் சாத்திப் பூங்கொத்துக் காதிற்
புணரப் பெய்து
கொங்கு நறுங்குழ லார்க ளோடு குழைந்து குழலினி தூதி வந்தாய்
எங்களுக் கேயொரு நாள்வந் தூதவன் குழலின் இன்னிசை
போத ராதோ? "
(6-9)

ஆன்மானுபவம் என்பது அருளோடு கூடிய அகப்புணர்ச்சி யாகும். உரிய பக்குவம் வருகின்றவரை அது கிடைப்பதில்லை என்பது இப்பாசுரத்தின் உட்கருத்தாகும்.

இன்தமிழ் மாலை

'கண்ணபிரான்மீது காதல் கொண்ட இளமையான ஆயர் குடிப்பெண்கள் எல்லிப் பொழுதில் இன்ப மயக்கத்தில் ஊடி எள்ளி உரைத்த உரைகளைக் கொல்லி நகர்க்கிறைவனும், கூடற் கோமானுமாகிய குலசேகரன் யாத்த இன்தமிழ் மாலை பத்தையும் கூறுவார்க்குத் துன்பமில்லை' என ஆழ்வார் திருக்கடைக்காப்புச் செய்கிறார். இதில் புருஷகார பூதையான திருமகளை உள்ளிட்டுக் கொண்டு பேசுவதைக் காணலாம். ஒருத்திக்குக் கணவனாக இருக்கின்ற ஒருவனைப் பிற பெண்கள் விரும்புவதாகக் காட்டுவது உலகியல் காதலுக்கும் தமிழ் அறத்திற்கும் தக்கதன்று. ஆனால், அதுவே இறையருள் நயந்த ஆன்மிக உலகிற்கு ஏற்புடையதாகின்றது. இறைவியோடு சேர்ந்து நிற்கும் இறைவனை விரும்புவதே ஆன்மாவின் உய்திக்கு உறுதி பயக்கும். எனவே, அவ்வுறுதி பயக்கும் உரைகளைக் கூறுவதால் இவ்வாறாந் திருமொழி இன்தமிழ்மாலை எனவாயிற்று. இதனை ஓதுவதனாலேயே துன்பந் தொலைந்துவிடும் என்பது ஆழ்வாரின் அருள்வாக்கு.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

புள்ளுவம் பேசாதே போ!

''நச்சரவையும் நற்படுக்கையாகக் கொண்டவனே! உன் மாயப் பேச்சில் மயங்கி ஏமாந்த பழைய பெண்ணல்ல நான்! நீ மகிழ்ந்து செல்லும் மைதீட்டிய ஒளி பொருந்திய கண்களை உடைய பெண்களல்ல நான்! அத்தகையவர்களோடு தங்கிவிட்டு எம்முடைய சேரிப்பக்கம் வருவதை விட்டுவிடு! அழகிய ஆடையினையும், திருமுகத்தையும், சிவந்த கோவைக்கனி போன்ற இதழ்களையும், அழகிய முடியினையும் கண்டு ஈடுபட்டு உன் பொய்ம்மையில் மயங்கி ஒருநாள் பட்டபாடே போதும்! இனியும் வஞ்சகமான வார்த்தைகளைப் பேசி இங்கு நில்லாமல் நீ உகந்து செல்லும் பெண்களிடமே போவாயாக' - இப்படி ஓர் ஆய்ச்சி ஊடிப் பேசுவதாக அமைவது ஏழாம் பாசுரம்.

அனவரதமும் அவன் அருளைப் பிரியாமலிருப்பதையே அருளை அனுபவித்த ஆன்மா விரும்புகின்றதென்பதை இப்பாசுரம் உள்ளீடாகக் கொண்டுள்ளது.

இன்னும் ஒருநாள் நீ என் கை அகப்பட்டால்

'என்னை இவ்விடத்திற்கு வாவென்று குறியிடம் கூறினாய்! நானும் வந்தேன்! ஆனால் கள்வனே நீ என்ன செய்தாய்? முல்லைப் பந்தலின் நிழலிலே நீண்ட நேரமாகக் காத்திருந்த ஒருத்தியோடு கூடிக் குலாவினாய்! என்னைக் கண்டவுடன் கலங்குவது போலப் பாசாங்கு செய்து நழுவிவிட்டாய்! பொன்னிற ஆடையைக் கையில் பிடித்துக் கொண்டு என்னைக் கண்டு அச்சமடைந்தவனைப் போல் பொய்யாக நடித்து நீ போனாலும், இன்னுமொருநாள் என் கையகப்படும்படி நீ வராமலா போகப் போகிறாய்? அப்பொழுது என் கோபத்தை யெல்லாம் தீர்த்துக்கொள்வேன்' - கண்ணனிடம் ஏமாந்தவள் 'இன்னொரு நாள் வா' உன்னைப் பார்த்துக் கொள்கிறேன்' எனக் கறுவுவதாக அமைவது எட்டாம் பாசுரம்.

இறையனுபவம் கையகப்படுவதுபோற் காணப்படினும் காலங்கனிந்த போதன்றிக் கை கூடாதென்பதை இவ்வெட்டாம் பாசுரம் உட்பொருளாகக் கொண்டுள்ளது.

எங்களுக்கொருநாள் குழலூத லாகாதோ!

''மங்கலமான நல்ல வனமாலையானது மார்பில் விளங்கித் தோன்ற, மயிலிறகுகளையும் அணிந்து, அழகிய ஆடையினை இடையில் உடுத்து வந்தாய்! பூங்கொத்துக்களையும் காதுகளில்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

செறியச் சூடிக்கொண்டிருந்தாய்! தேன் மலர்களைச் சூடிய கூந்தல்களை உடைய பெண்களோடு குழைந்தபடி குழலூதி வந்தாய்! இனிமையாக இருந்தது! எங்களுக்கொரு நாள் வந்து குழலூதப்படாதோ? அப்படி ஊதினால் அதிலிருந்து இன்னிசை வெறி வராதோ'' கண்ணனை அணையவேண்டுமென்ற கருத்துடையாளொருத்தி இப்படி மறைமுகமாக அவனுக்கு அழைப்பு விடுவதாக அமைவது ஒன்பதாம் பாசுரம்! இனிமையான அப்பாசுரம்:

" மங்கல நல்வன மாலை மார்வி லிலங்க மயில்தழைப் பீலி சூடிப்
பொங்கிள வாடை அரையிற் சாத்திப் பூங்கொத்துக் காதிற்
புணரப் பெய்து
கொங்கு நறுங்குழ லார்க ளோடு குழைந்து குழலினி தூதி வந்தாய்
எங்களுக் கேயொரு நாள்வந் தூதவன் குழலின் இன்னிசை
போத ராதோ? "
(6-9)

ஆன்மானுபவம் என்பது அருளோடு கூடிய அகப்புணர்ச்சி யாகும். உரிய பக்குவம் வருகின்றவரை அது கிடைப்பதில்லை என்பது இப்பாசுரத்தின் உட்கருத்தாகும்.

இன்தமிழ் மாலை

'கண்ணபிரான்மீது காதல் கொண்ட இளமையான ஆயர் குடிப்பெண்கள் எல்லிப் பொழுதில் இன்ப மயக்கத்தில் ஊடி எள்ளி உரைத்த உரைகளைக் கொல்லி நகர்க்கிறைவனும், கூடற் கோமானுமாகிய குலசேகரன் யாத்த இன்தமிழ் மாலை பத்தையும் கூறுவார்க்குத் துன்பமில்லை' என ஆழ்வார் திருக்கடைக்காப்புச் செய்கிறார். இதில் புருஷகார பூதையான திருமகளை உள்ளிட்டுக் கொண்டு பேசுவதைக் காணலாம். ஒருத்திக்குக் கணவனாக இருக்கின்ற ஒருவனைப் பிற பெண்கள் விரும்புவதாகக் காட்டுவது உலகியல் காதலுக்கும் தமிழ் அறத்திற்கும் தக்கதன்று. ஆனால், அதுவே இறையருள் நயந்த ஆன்மிக உலகிற்கு ஏற்புடையதாகின்றது. இறைவியோடு சேர்ந்து நிற்கும் இறைவனை விரும்புவதே ஆன்மாவின் உய்திக்கு உறுதி பயக்கும். எனவே, அவ்வுறுதி பயக்கும் உரைகளைக் கூறுவதால் இவ்வாறாந் திருமொழி இன்தமிழ்மாலை எனவாயிற்று. இதனை ஓதுவதனாலேயே துன்பந் தொலைந்துவிடும் என்பது ஆழ்வாரின் அருள்வாக்கு.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

11. தாயழுத கண்ணீர்

தாயன்புக்கு நிகரானது ஏதாவதுண்டா? 'எதுவுமில்லை!' என எல்லோருமே பதில் கூறுவர்! அதற்கு ஒரு காரணம் உண்டு! சிந்தித்துச் செயல்படுபவன் மனிதன். ஏனைய உயிர் வர்க்கங்கள் சிந்தித்துச் செயல்படுவதில்லை. எனினும், எவ்விதத்தில் அவை மனிதனைவிடத் தாழ்ந்தவையாய் இருப்பினும் - தாயன்பைப் பொறுத்தவரை அவை மனிதனை விடத் தாழ்ந்தவையாய் இல்லை! மனிதரின் தாயன்புகூட ஒருவிதத்தில் ஏதோ ஓர் எதிர்பார்ப்பை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது! ஆனால், ஏனைய உயிர்களோ எவ்வித எதிர்பார்ப்புமின்றி அன்பு செலுத்துகின்றன. அவை தம் குழந்தைகளைக் கண்ணுங் கருத்துமாகப் பேணுவதைக் காண்பவர் நெஞ்சம் நெகிழ்வர். எனவேதான், 'சச்சிதானந்த சொரூபி'யான இறைவனை 'அம்மை அப்பனாகக்' கொண்டு அடியார்கள் அன்பு செய்கின்றனர்.

வைணவம், எம்பெருமானின் திருவருள் கூறுகளாகப் பெரிய பிராட்டி, பூமிப் பிராட்டி, நீளாதேவி என மூன்று தேவிகளை அவனுக்குக் கற்பித்தது. பெரிய பிராட்டியைப் 'புருஷகார பூதை' எனப் போற்றியது. 'சேஷபூதன்' எனப்படும் 'அடிமைசொரூப'மான 'சேதந'னாகிய ஆன்மாவிடத்துப் பாராமுகமாக இருக்கின்ற எம்பெருமானைத் தகவுரை கூறி ஆற்றுப்படுத்துபவள் அப்பெருமாட்டி! அதனால் அவளைத் 'தாயார்' என வைணவ உலகம் கூறும். 'நீரிலே நெருப்புக் கிளருமாப் போலே குளிர்ந்த திருவுள்ளத்திலே அபராதத்தால் சீற்றம் பிறந்தால் பொறுப்பிப்பது இவளுக்கே' என்பது பிள்ளைலோகாச்சாரியாரின் விளக்கம். திருமகள் எம்பெருமானின் செல்வமாகத் திகழ்பவள்; அச் செல்வத்தை விளைவிப்பவள் பூமிப்பிராட்டி; அதனை அனுபவப் பொருள் ஆக்குபவள் நீளாதேவியாகிய ஆயர் மடமகள்! மேன்மைக்கும் புருஷகாரத்திற்கும் தனித்தனியே அமைந்திருக்கும்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

இம்மூப்பெரும் பிராட்டியரும் அவனுடைய அருளுருவங்கள் தாயாம் தயாவுடையவன் இறைவனாகலின் அவனே வைணவ நெறிப்படி எல்லாவற்றிற்கும் முதற் காரணனாகிறான்!

இறைவனின் அவதாரங்கள் நோக்கம் கருதி நிகழ்ந்தவை. ஒவ்வோர் அவதாரமும் அதன் நோக்கத்தை உள்ளடக்கியே நிகழ்ந்துள்ளது. கிருஷ்ணாவதாரம் ஏனைய அவதாரங்களினின்றும் சற்று வேறுபட்டது. கிருஷ்ணன் சிறைக்கைதிகளாயிருந்த வசுதேவருக்கும் தேவகிக்கும் மகவாகப் பிறந்தான். பிறக்கும் போதே பகைச் சூழலில் பிறந்தான்! எனவே, பகைக்குத் தப்பி வாழ வேண்டிய நிலை! பிறந்த குழந்தையே பேசிற்று! அங்ஙனம் பேசுதற்குரிய தகுதியைக் காட்டத் தன்னுடைய நான்கு திருக்கைகளைத் தாய் தந்தையருக்குக் காட்டித் தன் அவதார நிலையைத் தெளிவுபடுத்தியது. என்ன செய்யவேண்டு மென்பதைத் தந்தையாகிய வசுதேவருக்குக் கூறித் தேவையான உதவிகளைச் செய்து ஆயர்பாடியில் தன்னை அடைக்கலப்படுத்திக் கொண்டது. அங்கு 'ஏரார்ந்த கண்ணி யசோதையின் இளஞ்சிங்க மாக' வளர்ந்தது! பெற்றவள் காணாத நலன்களை வளர்த்தவள் அனுபவித்தாள். கிடைத்தற்கரிய அந்நலன்களை இழந்த பெற்றவள் பரிதவித்தாள். தனக்குரிய செல்வம் தனக்குப் பயன்படாமல் பிறர் அனுபவிக்கப் பயன்படுமானால், அந்த ஆற்றாமையை - துயரத்தைப் பட்டவர்க்கன்றி மற்றவர்க்குத் தெரிய வாய்ப்பில்லை!

தங்கையின் எட்டாம் கருவில் பிறக்கும் குழந்தை தாய் மாமனாகிய கம்சனைக் கொல்லும் என்பது விதி. அந்த விதியை மெய்ப்பிக்கத் தேவகியின் வயிற்றில் கண்ணன் கருவிலிருந்து பிறந்தான். எட்டாம் கருவென்ன? எல்லாக் கருக்குழந்தைகளையும் அழித்துவிட முடிவு செய்த மூடனான கம்சனின் செயலால் எல்லாக் குழந்தைகளையும் இழந்த தேவகி, எட்டாவதாகப் பிறந்த கண்ணனையும் இன்னொருத்தி வளர்க்க எடுத்துக் கொடுக்க வேண்டியவளானாள். என்ன பாடுபட்டிருக்கும் அத்தாய் மனம்? ஒன்றாவது தப்பிப் பிழைத்துத் தந்தை பேர் சொல்ல வேண்டாமா? ஒப்பி அனுப்பினாள் அந்த உலகளந்த மாயக்காரனை! ஆயர்பாடியில் அவன் செய்த லீலா வினோதங்கள் எண்ணத் தொலையாதவை! எந்தத் தாயும் விம்மிதமுறுவாள்! ஆனால், இவளுக்குக் கொடுத்துவைக்கவில்லையே! இதோ, இன்றவனைக் காணுகின்றாள்! இளைஞனாய்க் காணுகின்றாள்! என்ன பயன்? எடுத்து மடியிருத்த முடியுமா? ஒக்கலில் சுமக்க முடியுமா? ஒடிவரும் பிள்ளையை உச்சிமோக்க முடியுமா? பால்நிலாக் காட்டிப்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

பாற்சோறு ஊட்ட முடியுமா? தோள்பிடித்து மடியேறி அவன் துள்ளும் அழகைக் காண முடியுமா? மடியிருத்தி முலை உண்ணக் கொடுக்க முடியுமா? என்ன செய்ய முடியும் அவள்? எண்ணிப் பார்க்கிறாள்! இழந்த இனிமைகளை எண்ணிப் பார்க்கிறாள்! இன்றவை கிடைக்குமா? இனி அவை இனியவை கிடைக்குமா? ஏங்குகிறாள் தேவகி! யசோதை பெற்ற பெரும் பேற்றைத் தான் சுமந்து பெற்றும் தானடைய முடியவில்லையே எனத் தவிக்கிறாள்.

இத்தாயின் தவிப்பை வார்த்தைகளால் வடிக்க முடியுமா? முடியும் என்கிறார் குலசேகரர்! தாமே தேவியாகித் தவிக்கின்றார்! 'தானே உலகேழும் ஆயானை, அச்சுதனைப்' பண்சுமந்த பாக்களாக்குகின்றார். தாயழுத கண்ணீரைத் தமிழாக்கிக் காட்டு கின்றார்! 'எப்படித்தான் அன்று அத்தேவகி அழுதிருப்பாள்?' என்று எண்ணுவார்க்கு 'இப்படித்தான் அழுதிருப்பாள்' என்றழுது காட்டுகின்றார்.

திருவினை இல்லாத் தாய்

'ஆலையிலிட்டு ஆடுதற்கேற்ப முதிர்ந்து வளர்ந்துள்ள கரும்பு போன்றவன் கண்ணன்! அழகிய தாமரை போலும் அகன்ற கண்களை உடையவன் அவன்! கடலின் நிறம் போன்ற நிறத்தை உடையவன்! யானையின் இளங்கன்று போன்றவன். இனிய நறுமணமிக்க நீண்ட குழலை உடைய அவன் என் மகன்! இத்தகு சிறப்புக்களையெல்லாம் பலகாலும் வாய்நிறையச் சொல்லிச் சொல்லி அவனுக்குத் தாலாட்டுப் பாடும் திருவினை இல்லாதவ ளாகித் தாயிற் கடையாயின தாயாகிவிட்டேனே' எனத் தேவகி புலம்புவதாகத் தாலாட்டுப் பாடுகின்ற குலசேகரப் பெருமானின் பக்திப் பிரவாகத்தை ஏழாம் திருமொழியின் முதற் பாசுரமாகக் காண்கின்றோம்.

" ஆலை நீள்கரும் பன்னவன் தாலோ!
அம்புயத் தடங்கண் ணினன் தாலோ
வேலை நீர்நிறத் தன்னவன் தாலோ!
வேழப் போதக மன்னவன் தாலோ!
ஏல வார்குழல் என்மகன் தாலோ!
என்றென் றுன்னையென் வாயிடை நிறையத்
தாலொ லித்திடும் திருவினை இல்லாத்
தாய ரிற்கடை யாயின தாயே! " (7-1)

குழந்தையின் கொள்ளை அழகைக் கண்ணால் அருந்திக் களிகொள்ளும் தாயின் இதயம் தாலாட்டாக விம்மி வெளிப்படும்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

அத்தகைய ஆனந்தத்தை அனுபவிக்கக் கொடுப்பினை இல்லாத் தாயாகிவிட்டேனே எனத் தேவி ஏங்குகின்றாள். பெற்ற குழந்தைகள் ஏழையும் பிறந்தபொழுதே இழந்தமையால் தாலாட்டுப் பாடமுடியாதவள், பிறந்து உயிரோடு இருக்கும் குழந்தைக்கும் தாலாட்டுப் பாட முடியாத அவலம் இப்பாசுரத்தில் வெடிக்கின்றது.

நீர் முகிற் குழவி

'மேலாடை விரிப்பில், நீருண்டு கருத்த மேகக் குழந்தை போல அவன் கிடக்கின்றான். கருத்த புறத்தையும், செந்தாமரை போல் செம்மையும் மென்மையும் சிறந்த அடிப்புறப் பாதத்தையும் உடைய சின்னஞ்சிறு கால்களை முடக்கிக்கொண்டுள்ளான். அழகிய சிறுத்த விரல்களை யெல்லாம் உள்ளங்கையில் அடங்குமாறு மூடிப் பிடித்துக்கொண்டுள்ளான்.

கூர்மையவாய், மையுண்ட, செந்தாமரை மலரையொத்த கண்களால் தொட்டிலின் மேற்கட்டியில் தொங்கவிடப்பட்டிருக்கும் பொருள்களில் ஒன்றைப் பொருந்தப் பார்த்துக்கொண்டுள்ளான். இத்தகு பள்ளி கொண்டருளும் அழகைக் கண்டு அனுபவிக்கப் பெறாத பாவியானேன்! அந்தோ! கண்ணா நின் பேரழகொன்றையும் துய்க்கப்பெறாது கெட்டொழிந்தேன்! கெட்டொழிந்தேன்!' இவ்வாறு கண்ணனாகிய அழகிய சிறு முகில் போன்ற குழந்தை படுத்துக் கிடக்கின்ற பேரழகைக் காணப்பெறாது தேவகி வருந்துவதாக இரண்டாம் பாசுரம் இனிதே அமைகின்றது. கை முடிக் கால் குறுக்கி, மேல் கட்டியில் தொங்கும் பொருளைக் குழந்தைமை வியப்போடு பார்த்துக் கிடக்கும் கோலத்தைத் தாய்மைத் தவிப்போடு விவரிக்கும் பாங்கு அற்புதமானது.

நந்தன் பெற்றனன் நல்வினை

'தொடர்ந்து வருகின்ற உறவு முறையினையும், நிறைந்த அன்பினையும் உடைய மகளிர் பலர், உன்னைத் தத்தம் தொடைகளில் இருத்திக்கொண்டு; 'என் அப்பா! என் குலத்துக்கோர் பெருஞ்சுடரானவனே! கார்மேகக் காரேறே! உன் தந்தை யார் என்று காட்டு பார்க்கலாம்' என வினவ, நீ உன்னுடைய சிவந்த சிறுவிரலால் சுட்டியும், கடைக்கண்ணால் குறிப்பித்தும் காட்டப் பெற்ற பேற்றினை நந்தகோபர் பெற்றார். அந்தப் பேற்றினை நல்வினையில்லா வாசுதேவர் பெற்றாரில்லையே!' என்த் தேவகி புலம்புவதாக அமைவது மூன்றாம் பாசுரம்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

வாழ்வில் மக்கள் பெறுகின்ற இன்பங்களில் குழந்தைப் பேறும் ஒன்று. அப்பேற்றினைப் பெற்றோர் அச் சிறு குழந்தையர் தம் சிறுசிறு செயல்களில் தம் நெஞ்சு நெகிழ்ந்த இன்பத்தைப் பெறுகின்றனர். குழந்தையின் அறிவு விளக்கத்திற்கான முதற் கட்டச் செயல்பாடுகளில் பெற்றோர் பெரிதும் மகிழ்கின்றனர். வாழ்வில் இயல்பாக நடைபெறும் நிகழ்ச்சிகளை நுட்பமாகப் பார்ப்பவர்கள் அவற்றில் பொதிந்துள்ள வாழ்வியல் கூறுகளை அறிந்து அனுபவிக்கின்றனர். அத்தகைய அனுபவத்தை இப்பாசுரம் நமக்குத் தருகின்றது.

அளவிலாப் பிள்ளைமை இன்பம்

'கண்ணா! மகிழ்வூட்டுகின்ற முழுமதி போன்ற முகமும், திண்ணிய கைகளும், மார்பும், தோள்களும், தளிரும் மலர்களும் சூடிய கருங்குழலும், பிறை போன்ற புருவமும், தாமரை மலர் போன்ற கண்களும் கொண்டு நிற்கும் உனது இளமை மிளிரும் தோற்றத்தை இன்று என் கண்களால் பருகி மகிழ்வேனாயினும், 'இவள் ஒரு தாய்' என அனைவரும் நினைத்தற்கேதுவாய்க் குழந்தையைப் பேணி வளர்க்கும் இன்பமாகிய அளவில்லாத பிள்ளைமை இன்பத்தையும் இழந்த பாவியான எனது ஆவியானது நிற்குமாறு யாது' எனத் தேவகி வருந்துவதாக வருவது நான்காம் பாசுரம்.

" களிநி லாவெழில் மதிபுரை முகமும்
கண்ணனே! திண்கை மார்பும் திண்டோளும்
தளிர்ம லர்க்கருங் குழல்பிறை யதுவும்
தடங்கொள் தாமரைக் கண்களும் பொலிந்த
இளமை இன்பத்தை யின்றென் கண்ணால்
பருகு வேற்கிவள் தாயென நினைந்த
அளவில் பிள்ளைமை யின்பத்தை இழந்த
பாவியேனென தாவி நில்லாதே! " (7-4)

தாய்மையின் கனிவு முழுமையும் பச்சை மண்ணாகக் கிடக்கும் சிசுவை உருவாக்குவதிலேயே வெளிப்படும். வளர்ந்து பெரிதாக ஆகக் குழந்தை தாயைவிட்டு விலகிச் செல்கிறது. அதனுடைய உலகம் விசாலமாகிறது. ஆனால், அது அவளையே ஆதாரமாக - உலகமாகப் பற்றிக் கிடக்கும்போது அதனைப் பேணுவதில் அவள் பெறுகின்ற இன்பம் மகத்தானது. அதற்கு இணையாக எதனையும் கூறவியலாது. பத்துமாதம் சுமந்த பொறுமையும் ஈனும்போது ஏற்படும் நோவும் இதயத் தருகில் பாலாகச் சுரந்தல்லவா

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

இதமளிக்கின்றது? ஆண்மகன் அறியா இந்தப் பொறுமைக்கும் நோவுக்கும் பரிசாகக் குழந்தை வாய் வைத்து முலையுண்ணும் போது ஏற்படும் சிலிர்ப்பை இறையருள் அவளுக்குக் கொடுத்திருக்கின்றது. சிசுவாய்க் கிடந்து, குழந்தையாய்த் தவழ்ந்து, சிறுபிள்ளையாய் நடக்கும் வரைக்கும் தாய் அதனை உருவாக்க எடுத்துக்கொள்ளும் சிரமம் இன்பங் கலந்து இனிப்பது. கண்ணனின் வளர்ந்த இளமை கண்டு தாய் மனம் களிப்படைந்தாலும், அவனை உருவாக்கும்போது கிடைக்கும் அளவில்லாத பிள்ளைமை இன்பத்தை இழந்துவிட்டதற்குத் தேவி புலம்புகிறாள்.

வளர்க்கும் இன்பத்தை இழந்தமைக்கு வருந்தினாலும், தன்னைப் 'பாவி' எனக் கூறிப் புலம்புமளவிற்கு என்ன வந்தது என்ற வினா எழுகிறது! தேவகி குழந்தைகளைச் சுமந்தாளே தவிர எதனையும் வளர்க்கும் பேறு பெறவில்லை. சுமக்கும் போது வயிற்றில் உருவாவது இவள் வசத்தில் இல்லை! சில பெண்கள் தசைக்கட்டிகளையும், ஊன் பிண்டங்களையுங் கூடச் சுமக்கின்றனர். ஆண்கூடத் தசைக்கட்டி வயிற்றில் வந்தால் சுமக்கிறான். எனவே, சுமையைக் காட்டிலும் பிறந்த பின் குழந்தையின் வளர்ச்சியில் இவளின் பங்கிருக்கின்றதே, அதுதான் இவளுக்குத் 'தாய்' எனும் தகுதியைத் தருவது. தேவகி வெறும் சுமையாளாக இருந்தாளே தவிரத் 'தாய்' எனும் தகுதியை முழுமையாகப் பெறும் பேறு கிடைக்கவில்லை. அது மட்டுமா, சுமந்து பெற்றபின் அவற்றை உடனே பிரிந்த அவலம் அவளுடையது. தெய்வத்தைச் சுமந்தாளே, அதையாவது வளர்க்கக் கொடுத்துவைத்தாளா? ஒரு பெண் இத்தகைய இன்னல்களை அனுபவிக்க வேண்டியிருந்தால் அவள் தன்னைப் 'பாவி' என நொந்துகொள்ளாமல் வேறு என்ன கூற முடியும்?

தெய்வநங்கை யசோதை

'கண்ணனென்னும் காரெழில் குழந்தை தனது நெற்றிச் சுட்டி அசைய வந்து மணிவாயைக் குவித்து முத்தம் தருகின்றது! குழந்தையின் வடிவில் அதன் தந்தையின் தோற்றத்தைக் கண்டு தாயுள்ளம் குதூகலிக்கின்றது, குளிருகின்றது! விரலைச் சிவந்த வாயிடைச் சேர்த்து வைத்துக்கொண்டு, வெகுளிபோல் நின்று அக் குழந்தை கூறும் மழலை உரை இன்பந் தருவது. இவையெல்லாம் குழந்தையை ஈன்ற தாய் பெறும் இன்பங்கள்! ஆனால், இவற்றைப் பெற வேண்டிய தேவகி பெறவில்லை! கண்ணனைப் பெறாத யசோதை பெற்றாள். இங்ஙனம் நினைந்து தேவகி புலம்புவதாக

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

ஐந்தாம் பாசுரம் அமைகின்றது. தன் வினைக் கொடுமையால் பெற முடியாததைப் புண்ணியவதியான யசோதை பெற்றதை எண்ணித் ''தெய்வ நங்கை யசோதை'' என்கிறாள் தேவகி. தெய்வத்தைக் குழந்தையாக வளர்த்தவளை வேறு எப்படி அழைப்பது? தெய்வக்குழந்தையைக் கொஞ்சியும், கெஞ்சியும், கண்டித்தும், தண்டித்தும், மடியில் வைத்துச் சீராட்டியும் வளர்க்கும் பாக்கியம் பெற்றவளைத் 'தெய்வ நங்கை' என எண்ணாமல் வேறு எப்படி எண்ணுவது? தன்னுடைய குறையையும், யசோதையின் நிறைவையும் எண்ணி ஏங்குகிறாள் தேவகி.

அடிசிலின் மிச்சில்

தண்மையான தாமரை மலர் போன்ற அழகிய கண்களைப் பெற்றவன் கண்ணன்! எனவே, 'தண்ணந்தாமரைக் கண்ணனே! கண்ணா!' என அழைத்து, 'நீ தவழ்ந்து, பின்பு மெல்ல எழுந்து, தளர்நடையாகச் சென்று, செம்மண் புழுதியாடி, அக்கோலத் தோடே வந்து என் மார்பிலே அணையும்படியான பேற்றினை யான் பெற்றிலேன்! அந்தோ! அழகிய சிவந்த சிறு விரல்கள் அனைத்தாலும் வாரி வாயிலிட்டு உண்டு எச்சிற்பட்டு எஞ்சிய உன் உணவை உண்ணும் பாக்கியம் எனக்குக் கிடைக்கவில்லையே! ஓ! எத்தகைய கொடிய வினையை உடையவள் நான்! இத்தகைய கொடுவினையாட்டியை என் தாய் எதற்காகப் பெற்றாளோ' எனத் தேவகி புலம்புவதாகக் காட்டுவது ஆறாவது பாசுரம்.

'' தண்ணந் தாமரைக் கண்ணனே! கண்ணா!
தவழ்ந்தெ ழுந்து தளர்ந்ததோர் நடையால்
மண்ணிற் செம்பொடி ஆடிவந் தென்றன்
மார்பில் மன்னிடப் பெற்றிலே னந்தோ!
வண்ணச் செஞ்சிறு கைவிர லனைத்தும்
வாரி வாய்க்கொண்ட அடிசிலின் மிச்சில்
உண்ணப் பெற்றிலேன் ஓ!கொடு வினையேன்
என்னை என்செய்யப் பெற்றதெம் மோயே! '' (7-6)

குழந்தையின் அழுக்கை ஒரு பொருட்டாகத் தாய் எண்ணுவதில்லை! அழுக்கையும் அழுக்கின்மையையும் குழந்தை அறிவதில்லை! அவ்வறியாமை அதன் இயல்பு. அன்னை அழுக்கோடு வந்தணையும் குழந்தையைத் தானும் தழுவிக்கொள்கிறாள். அழுக்கைக் காட்டிலும் அன்போடளாவிய அணைப்பு இன்ப கரமானது. தாய் ஏற்றுக்கொள்ளுகின்றாள்! அழுக்கைக் கழுவிச் சீராட்டுகின்றாள்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

அழுக்கை நீக்கிப் பிறப்பறுக்கும் பெருமான் போலத் தாயும் தன் குழந்தையின் அழுக்கெல்லாம் அகற்றி அதன் ஆரோக்கியத்தைப் பேணுகின்றாள். அந்தப் பேறு தனக்குக் கிடைக்கவில்லையே என்பது தேவகியின் ஏக்கம்.

தாயின் உணவைத் தனக்கும் உணவாகக் கொண்டு அவள் வயிற்றில் குழந்தை வளர்ந்ததால், தான் வேறு குழந்தை வேறு என்கின்ற உணர்வு அவளுக்கு அவ்வளவு எளிதில் வந்துவிடுவ தில்லை! குழந்தை வளர்ந்து அவள் கட்டுப்பாட்டை விட்டுப் போகும்போதுதான் அவளுக்கு அவ்வுணர்வு வரத் தொடங்கு கின்றது. அதுவரைக்கும் குழந்தையை மனோரீதியாகத் தன்னி லிருந்து அவள் வேறுபடுத்துவதில்லை. எனவே, குழந்தை உண்டு மிஞ்சியது அவளுக்கு அமிழ்தமாக இனிக்கிறதாம்.

இழந்தேன் இழந்தேனே

ஏழாந் திருமொழியின் மூலம் குலசேகரப் பெருமானின் உலகியல் அனுபவமும், உடையவனை அனுபவிக்கும் ஆனந்தமும் எங்ஙனம் ஒன்றாகக் கலந்துள்ளன என்பதை உணரமுடியும். இத்திருமொழியின் ஏழாம் பாசுரம் இதனை நன்கு விளக்குவதாக அமைகின்றது. ஓர் இளம் தாய் தன்னுடைய குழந்தையை மடியில் கிடத்தி முலை கொடுக்கின்றாள். கொடுப்பதால் தாய் பெறுகின்ற இன்பத்தையும் பெறுவதால் குழந்தை பெறுகின்ற இன்பத்தையும் அவளைப் போல இன்னொரு தாயால்தான் உணர முடியுமே தவிர ஓர் ஆண்மகன் உணருவதென்பது அரிது! ஆனால் இவ்வரிய செயலைக் குலசேகரர் செய்திருக்கின்றார். தாம் உணர்ந்ததைத் தாய் வேடமிட்டு - இல்லை, தாயாகவே மாறித் தமிழாக்கித் தருகின்றார்.

" குழகனே! என்றன் கோமளப் பிள்ளாய்!
கோவிந் தாவென் குடங்கையில் மன்னி
ஒழுகு பேரெழில் இளஞ்சிறு தளிர்போல்
ஒருகை யாலொரு முலைமுகம் நெருடா
மழலை மென்னகை இடையிடை யருளா
வாயி லேமுலை இருக்கவென் முகத்தே
எழில்கொள் நின்திருக் கண்ணிணை நோக்கந்
தன்னை யும்மிழந் தேனிழந் தேனே! " (7-7)

என்பது அவ்வழகிய பாசுரம்!

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

தொல்லை இன்பத்து இறுதி

'வெண்ணெயைக் குடத்தில் இருக்கின்ற அளவும் கையை விட்டு அளைந்து எடுத்து உண்கின்ற குவிந்த இளந்தளிர்த் தாமரை போன்ற கையும், அது கண்டு அழகிய சிறு தாம்பினால் அடிக்க வரும் அன்னையைக் கண்டு அஞ்சி நிற்கும் நிலையும், வெண் தயிர் தோய்ந்த சிவந்த வாயும், அழுவதும், பின் பயந்து பார்க்கின்ற அந்தப் பார்வையும், அழகிய சிவந்த உதடுகளின் நெளிப்பும், பாசாங்குத் தொழுகையும் ஆகிய இவற்றைக் கண்டு அனுபவித்த யசோதை பேரானந்தத்தின் இறுதி கண்டவளே யன்றோ' என யசோதை கண்டு அனுபவித்திருக்கக் கூடிய கண்ணனின் வெண்ணெய்க் களவுக் கோலத்தை நினைந்து மறுகுகிறாள் தேவகி.

யசோதை பெற்ற இன்பத்தைத் 'தொல்லை இன்பத்து இறுதி' எனப் பாசுரம் பகர்கின்றது. தொல்லை எனும் சொல் பழமையைக் குறிப்பது. பழமையான இன்பமாக இருப்பவன் எம்பெருமானே! இன்பமே அவனுடைய வடிவம். அவனை அனுபவிப்பதே ஆன்மா பெறும் ஆனந்தம். அத்தகு ஆனந்தத்தின் இறுதி, அதாவது எல்லை, இவ்வெண்ணெய் தொட்டுண்டு நின்று பயந்து பாசாங்கு செய்யும் பாலகனே! இவனன்றோ அனைத்தையும் உண்டு உமிழும் பரந்தாமன்! இவனைப் பரமபதத்தில் காணினும் இந்தத் திருக்கோலத்தில் காணமுடியுமா? வைகுந்தம் சென்று கண்டாலும் இந்த வஞ்சகச் சிறு திருடனைக் காண முடியுமா? யசோதைக்குக் கிடைத்த காட்சி யோகர்களுக்கும், சித்தர்களுக்கும், ஞானிகளுக்கும், தேவாதி தேவர்களுக்கும், திருமகள் முதலான தேவியர்க்கும் கிடைக்காத காட்சி! அவள் ஒருத்திக்கே கிடைத்த அற்புதக் காட்சி! அதனால், 'தொல்லை இன்பத்து இறுதி' எனப் பேசப்பெறுகின்றது.

" முழுதும் வெண்ணெய் அளைந்துதொட் டுண்ணும்
முகிழி ளஞ்சிறு தாமரைக் கையும்
எழில்கொள் தாம்புகொண் டடிப்பதற் கெள்கும்
நிலையும் வெண்தயிர் தோய்ந்த செவ்வாயும்
அழுகையும் அஞ்சி நோக்கும் அந்நோக்கும்
அணிகொள் செஞ்சிறு வாய்நெளிப் பதுவும்
தொழுகை யுமிவை கண்ட யசோதை
தொல்லை இன்பத்து இறுதி கண்டாளே " (7-8)

என்பது எட்டாம் பாசுரம்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

உண்டெனில் அருள்வாய்

குழந்தைக் கண்ணனை வளர்ப்பதில் பெறும் இன்பத்தை இழந்ததாக வருந்திய தேவகி, அவன் செய்யும் பிள்ளை விளையாடல்களை நினைந்து உருகி இனியும் அவைபோல் காணமுடியுமாகில் காட்டியருள்க என வேண்டுவதாக ஒன்பதாம் பாசுரம் அமைகின்றது. அப் பால விளையாடல்களை வரிசைப் டுத்துகிறாள் தேவகி. 'கோவர்த்த மலையைக் குடையாய்ப் பிடித்ததும், அழகாகக் குரவையாடியதும், கன்றாக வந்த அசுரனைச் சுழற்றி விளாமரமாய் நின்ற அசுரனை வீழ்த்தியதும், காளிங்கன் என்னும் கரும்பாம்பின்மீது நடனம் ஆடியதும் ஆகிய உன்னுடைய இப்பிள்ளை விளையாடல்களுள் ஒன்றனையும் என் கண்ணாரக் கண்டு களித்தேனில்லை! இனி அத்தகைய விளையாடல்களைக் காணுதற்குரிய வாய்ப்பிருந்தால் அருள் செய்வாயாக'.

முலை சுமந்தாய்

கண்ணனைக் கண்ட தேவகி, அவன் தன்னிடம் முலையுண்டு வளராமையை எண்ணி வருந்துவதைக் கூறுவது பத்தாம் பாசுரம். தாய்மை உணர்வுடைய எந்தப் பெண்ணாவது குழந்தையை முலை உண்ண வைத்துக் கொல்ல நினைப்பாளா? அப்படி நினைத்தொரு வஞ்ச மனத்துப் பேய்ப்பெண் கண்ணனை அணுகினாள். வஞ்சகர்க்கு வஞ்சகனான அவனோ அப்பூதகியின் உடம்பு வற்றவும், நார் போன்ற நரம்புகள் கருகி உதிரும்படியாகவும் அவளுடைய நஞ்சு தோய்ந்த முலையைச் சுவைத்து அவளுக்கு அருள் செய்து வளர்ந்தான். கம்சனுடைய வாழ்நாளைக் கவர்ந்துண்ட காளமேகம் அவன்! இத்தகு தகுதிகளை யெல்லாம் கூறி வாழ்த்திய தேவகி கண்ணனது தெய்விக நிலை உணர்ந்ததால் தனக்கினி வேறு புகலிடம் இல்லை எனப் பேசுகின்றாள்.

தான் வயிற்றிற் சுமந்து பெற்றாலும் அவன் தராதலங் களுக்கெல்லாம் தலைவன் என்பதைத் தேவகி உணர்ந்தாள். வாழ்நாட்களில் பெரும்பகுதி சிறையில் கழிந்துவிட்டன. பெற்ற பிள்ளைகளில் இவன் ஒருவனைத் தவிர அனைத்தையும் அண்ணன் எனவிருந்த அரக்கன் கொன்றொழித்தான்! இனி முதுமையும் மரணமும்தானே! இத்தனை நாள் உயிர் சுமந்து வாழ்ந்தாயிற்று! இனி அவனைத் தவிர அடைக்கலமாவார் யார்? தாய்க்குரிய முழுமையை அடையாத தான், தன் தனயனிடம்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

செல்லுகின்றன. கண்ணன் செல்லும் வழியெல்லாம் அவனது அறமாகிறது! ஆனால், இராமன் அறத்தின் வழியில், தான் நடப்பவனாகின்றான். இராமனின் அழுகையும் சிரிப்பும் சினமும் உண்மையாக இருந்தன! கண்ணனிடம் அவை பொய்ம்மை யானவையாகக் காட்சியளிக்கின்றன. கண்ணனை எவ்வித உணர்வுகளும் பந்தப்படுத்துவதில்லை! எவ்வித உறவுகளும் பந்தப்படுத்துவதில்லை!

இராமனின் உறவுகளுக்கு வரும் இன்பதுன்பங்கள் அவனைப் பாதிக்கின்றன. சிலசமயம் அதற்காகத் தன்னை அழித்துக் கொள்ளவும், உலகை அழிக்கவும் அவன் தயாராகி விடுகின்றான்! சுருங்கக் கூறின், இராமனிடம் மனிதக் கூறுகள் அதிகம்! கண்ணனிடம் தெய்வக் கூறுகள் அதிகம்! இராம பிரானிடம் காணப்பெறும் இம்மனிதக் கூறுகளே குலசேகரரை மிகவும் ஈர்த்திருக்கவேண்டும். எனவே, அவன் வாழ்வோடு ஆழ்வார் ஒன்றிவிடுகின்றார்.

இராமபிரானை அரசியல் சூழ்நிலைகள் பாதித்ததுபோலவே ஆழ்வாரையும் அரசியல் சூழ்நிலைகள் பாதித்திருக்கவேண்டும். அப்பிரான் ஆட்சியைத் துறந்து கானகம் சென்றதுபோலவே ஆழ்வாரும் தமது ஆட்சியைத் துறந்து அரவணையான் அடியாரொடு செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டிருக்க வேண்டும்! 'அவர், ஆண்டவன்மேல் ஏற்பட்ட பக்தி காரணமாகவே அரசைத் துறந்தார்' என அவரது வரலாற்றை எழுதுவோர் பலரும் எழுதியுள்ளனர். ஆனால், பாண்டியன் நெடுஞ்சடையனுக்குப் பிறகும், சிறந்த சிவபக்தனான வரகுணமகாராசன் பட்டமேற்பதற்கு முன்பும் இருந்த குறுகியகாலம் இவரது ஆட்சிக் காலமாகவும், அப்பொழுதுதான் அடியார்க்காக இவர் அரவுப் பானையில் கைவிட்டதும், ஆட்சியைக் கைவிட்டதும் நிகழ்ந்தன என்றால், இவர் ஆட்சியைத் துறந்த செயலுக்கு ஒரு நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கவே வேண்டும் எனக் கொள்வதில் தவறில்லை!

திருக்கண்ணபுரத்தில் எழுந்தருளி யிருக்கும் திருமால் அழகனைத் தரிசித்தபோது அப்பெருமானின் இராமாவதாரச் செயல்களெல்லாம் ஆழ்வாரின் நினைவிலெழுந்து நெகிழ வைக்கின்றன. கண்ணபுரத்தானைக் கைக்குழந்தையாகக் காணு கின்றார். தாயான நெஞ்சம் தழுதழுக்கிறது. இராமாவதாரத்தில் பெருமான் பட்ட சிரமங்களை யெல்லாம் எண்ணிப் பார்த்து, அவன் இளைப்பாற - துயில்கொள்ள, இன்தமிழால் தாலாட்டுப்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

பாடுகின்றார். தாலாட்டு என்பது நாவசைவும், பாடலுமாகக் குழந்தை துயில்கொளத் தாய் பாடுவதாகும். மிகச் சிறு சிசுவுக்குத் தாலாட்டுப் பாடுவதில்லை! கையூன்றித் தவழத் தொடங்கும் பருவத்திலிருந்து குழந்தையைத் தொட்டிலிலிட்டுத் தாய் தாலாட்டுப் பாடுவது உலகியல். இதனை இலக்கிய உலகிற்கு ஏற்றிய பெருமை ஆழ்வார் பெருமக்களையே சாரும். இதன் வளர்ச்சியைப் பிற்கால இலக்கிய வடிவமான பிள்ளைத்தமிழில் தாலப்பருவத்தில் காணுகின்றோம்.

தாலாட்டின் சந்தம் குழந்தைக்கு இனிமை பயந்து துயில் கொள்ள வைக்கின்றது. ஆனால், அதன் பொருள் பாடுகின்ற தாயைப் பொறுத்தது. அவள் மனத்தைப் பாதித்தவற்றைக் கூடத் தாலாட்டில் ஏற்றிவிடமுடியும். தாலாட்டும் ஒப்பாரியும் தமிழ்ப் பெண்களின் மனக்கருத்தை அறியும் வாயில்களாகக் கொள்ளலாம். இசையின் அடித்தளத்தில் இயல்பாய்ப் பெண்களின் வாயிலிருந்து வந்த இப்பாடல்கள் இலக்கியத் தரம் வாய்ந்தவை. வாழ்வோடு மிக நெருக்கமுடையவை. இவற்றின் இனிமையிலும், இயல்பிலும் தம் மனத்தைப் பறிகொடுத்த ஆழ்வார்கள் தம் ஆராதனைக்குரிய அருளாளனைப் பாடும் பாசுரங்களாக்கினர். பெரியாழ்வாரின் கண்ணன் தாலாட்டு நெஞ்சையள்ளும் நிறைவுடையது.

" மாணிக்கங் கட்டி வயிரம் இடைகட்டி
ஆணிப்பொன் னாற்செய்த வண்ணச் சிறுதொட்டில்
பேணி உனக்குப் பிரமன் விடுதந்தான்
மாணிக்குறளனே! தாலேலோ வையமளந்தானே! தாலேலோ "

என்பது பெரியாழ்வார் பாசுரம். இதனைப் பின்பற்றியே குலசேகரப் பெருமானும் கண்ணபுரத்தொளிர் காகுத்தனைப் பாடுகிறார் எனலாம்.

கண்டவர்தம் மனம்வழங்கும் கருணை

'இராமபிரானைத் திருவயிறு வாய்க்கப்பெறாதிருந்தால் கௌசலையை யார் நினைவு வைத்திருப்பார்கள்? எத்தனையோ பேரரசிகள் போல் இவளும் வாழ்ந்து முடிந்திருப்பாள். ஆனால், அப்பெருமானைச் சுமக்கும் பெரும்பேறு பெற்றாள். என்றும் பொன்றாத புகழை அதனால் சுமந்தாள். அவனைச் சுமந்த வயிறு மணிவயிறல்லவா? அம்மணி வயிற்றிருந்து உதித்துத் தென்னிலங்கையின் மாமன்னன் இராவணனின் முடிகளைச் சிதறடித்தவன் நீ! செம்பொன்னாலியன்று அழிவின்மையை

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

உடைய நான்கு மதில்களால் சூழப்பெற்றதாகிய திருக்கண்ண புரத்தில் எழுந்தருளி யிருக்கும் நீலமணி போன்ற பெருமானே! எனக்கு இன்னமுதமாயிருக்கும் இராகவனே! இன்துயில் கொள்வாயாக!' என முதல் பாசுரத்தில் மொழிந்த ஆழ்வார், இரண்டாம் பாசுரத்தில்,

" புண்டரிக மலரதன்மேல் புவனியெல்லாம் படைத்தவனே!
திண்டிறலாள் தாடகைதன் உரமுருவச் சிலைவளைத்தாய்!
கண்டவர்தம் மனம்வழங்கும் கணபுரத்தென் கருமணியே!
எண்டிசையும் ஆளுடையாய்! இராகவனே! தாலேலோ! " (8-2)

என அப்பெருமானின் செயல்களைச் சிறப்பித்துப் பாடுகின்றார்.

ஏமருவும் சிலைவலவன்

'மணம்மிக்க கரிய கூந்தலை உடைய கௌசலையின் குலம் விளங்க வந்த செல்வக் குழந்தை அவன்! பெரும்புகழ் தங்குதற் கேற்ற சனக மன்னனின் மருகன் அவன்! தசரதச் சக்கரவர்த்தியின் திருமகன் அவன்! கங்கையைக் காட்டிலும் புனிதமான தீர்த்தங் களை உடைய திருக்கண்ணபுரத்தில் விளங்கும் கருமாணிக்கம் போன்றவனே அவன்! அடியார் குலத்திற்கு இன்னமுதமாய் விளங்குபவன் அவன்!' என இங்ஙனம் மூன்றாம் பாசுரத்தில் விவரித்துக் கூறி, 'அத்தகைய இராகவனே கண்வளர்க' எனத் தாலாட்டுகின்றார் ஆழ்வார்.

இராகவனை மகவாகப் பெற்றதனால் கௌசலையின் குலமும், அவனை மருகனாகப் பெற்றதால் சனக மன்னனின் குலமும், அவனை மகனாகப் பெற்றதால் தசரதனின் சூரியகுலமும், அவனை வழிபடும் பேறு பெற்றதால் அடியார் குலமும் சிறந்தன எனக் கூறும் இப்பாசுரம்.

நான்காம் பாசுரத்தில், 'தாமரைமேல் பிரமனைப் படைத்த வனே! தசரதனுக்கு முதல் மகனாய்ப் பிறந்தவனே! மைதிலியின் மணவாளனே! வண்டினங்கள் காமரம் என்னும் இசை பாடுகின்ற திருக்கண்ணபுரத்தில் கோயில் கொண்டிருக்கும் நீலமணி போன்றவனே! அம்புகள் பொருந்தும் சார்ங்கம் எனும் வில்லைக் கையாளும் வல்லவனே! இராகவனே! இன்துயில் கொள்வாயாக' எனத் தாலாட்டுப் பாடுகின்றார் ஆழ்வார்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

அற்றவர்கட்கு அருமருந்து

பாராளும் பெரும்செல்வத்தைப் பரதாழ்வானுக்குக் கொடுத் தருளியவன் இராமபிரான். அப்பெருமான் என்றும் பொன்றா அன்பினனான இளையபெருமாளோடு மனிதர் தங்கி வாழ்தற்கரிய காட்டுவாழ்க்கையை மேற்கொண்டான்! வீரத்திரு தங்கிய வரைபோன்ற மார்பை உடைய அவன், திருக்கண்ணபுரத்தில் எழுந்தருளியுள்ள நீல மணிவண்ணன். 'மாலையோடு கூடிய சிறந்த திருமுடியினை உடைய தசரதராமனே! கண்வளர்க!' என ஐந்தாம் பாசுரத்தில் இறைவனை வேண்டுகின்றார் ஆழ்வார். இராமபிரான் கானகம் புறப்பட்டபோது ஊரும் உறவும் அவனைத் தொடர்ந்து சென்றன. அவனில்லாத அயோத்தி வாழ்வதற்கேற்ற நகரமாக அவர்கள் கருதவில்லை! மாறாக, அவன் போய்த் தங்கவிருக்கும் கானகம் வாழ்வதற்குரிய இடமாக நினைத்துப் பின் தொடர்ந்தார்கள்! இரவோடு இரவாக அவர்கள் அறியாமல் அவன் செல்ல வேண்டியதாயிற்று!

இராமபிரானின் அன்புக்கு ஏங்கிய அயோத்தி, ஆழ்வாரின் அகத்தை நெகிழ்வித்தது. அந்நிகழ்ச்சியைக் கூறி ஆறாம் பாசுரத்தைப் பாடுகின்றார்.

" சுற்றமெல்லாம் பின்தொடரத் தொல்கானம் அடைந்தவனே!
அற்றவர்கட் கருமருந்தே! அயோத்திநகர்க் கதிபதியே!
கற்றவர்கள் தாம்வாழும் கணபுரத்தென் கருமணியே!
சிற்றவைதன் சொற்கொண்ட சீராமா! தாலேலோ! " (8-6)

அயோத்தி நகருக்கு அதிபதியான அப்பெருமான் நினைத் திருந்தால் கைகேயி பெற்ற வரத்தைக் கால் தூசாக்கி யிருக்கலாம்! மன்னனும், மக்களும், மறையவர்களும், மாமுனிவன் வசிட்டனும், மைந்துடைய தம்பி இலக்குவனும் அனைவரும் அவனுக்கே பின்பலமாக நின்றனர். ஆருயிர்ப் பரதனும் அதற்கு உடன்படுவான் என்பதும் அவனுக்குத் தெரியும்; இருப்பினும் தன் சிற்றன்னை கூறியதனையே, கட்டளையாக ஏற்றுக்கொண்டு, கானகம் சென்று கடுந்துயர் ஏற்றவனல்லவா? அவன் சீராமன்! அவன், கற்றவர்கள் - அவனைக் கற்றவர்கள் வாழுகின்ற திருக்கண்ணபுரத்தில் எழுந்தருளியிருக்கும் கருமாணிக்கம்! அப்பெருமான் கண்வளர்கவெனத் தாலாட்டுகின்றார் குலசேகரர்! பெருமானின் உயிர்களை வசீகரிக்கும் தன்மையையும், உலகபந்த மற்றவரை உற்றவராகக் கொண்டு வீடு பேறளிக்கும்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

வித்தகத்தையும் திருக்கண்ணபுரத்தில் அர்ச்சாவதாரமாய் வந்தருள் செய்கின்ற சிறப்பையும் இவ்வாறாம் பாசுரம் அழகாகக் காட்டுகின்றது.

கலைவலவர்தாம் வாழும் கண்ணபுரம்

இறைவனுடைய செயல்களை அளவிட முடியுமா? அல்லது அவன் செயல்களுக்குரிய காரண காரியங்களை ஆராயமுடியுமா? பிரளய காலத்தில் வான்புறக் கடலின் பேரலைகளுக்கிடையே ஓர் ஆலிலை மிதந்தது! அதனைத் தந்த மரமும் மற்றப் பகுதிகளும் என்னவாயின? இந்த ஓர் இலைமட்டும் மிதந்தது! அதன்மேல் ஓர் அற்புதக் குழந்தை துயின்றுகொண்டிருக்கின்றது. அப்பேரலைக் கடலில் ஓர் இலை மிதப்பதே விந்தை, அதற்குமேல் அதன்மேல் ஒரு குழந்தை படுத்திருப்பது அதைவிட விந்தை! இந்தக் குழந்தை சாதாரணக் குழந்தையல்ல! உலகையெல்லாம் விழுங்கிவிட்டு இப்படிப் படுத்திருக்கிறது! இவற்றிற்கெல்லாம் நாம் காரண காரியங்களை ஆராய முடியுமா? 'சில்வாழ்நாள் பல்பிணிச் சிற்றறி'வுடைய நமக்கு வல்லமை ஏது? ஏழாம் பாசுரம் இந்த ஆலிலைப் பிள்ளையின் அருஞ்செயலைக் கூறியே தொடங்கப் பெறுகின்றது.

திருக்கண்ணபுரத்தில் ''கருமாணிக்கமாகக் கண்வளர்கின்றான்.'' அவன் கண்வளர்கவெனத் தாலாட்டிய ஆழ்வார், அவன் அணை கட்டிக் கடல்கடந்து அரக்கர்களின் அருநகரை அழித்ததைக் கூறும் எட்டாம் பாசுரத்தைத் தொடங்குகின்றார்.

> '' மலையதனா லணைகட்டி மதிளிலங்கை யழித்தவனே!
> அலைகடலைக் கடைந்தமரர்க் கமுதருளிச் செய்தவனே!
> கலைவலவர் தாம்வாழும் கணபுரத்தென் கருமணியே!
> சிலைவலவா! சேவகனே! சீராமா! தாலேலோ! '' *(8-8)*

'மலைகளினால் அணைகட்டிப் பெரிய மதில்களால் சூழப்பெற்ற இலங்கை நகரை அழித்தவன் அவன்! அவனே அலைகடலைக் கடைந்து அமுதமெடுத்து அமரர்க்கு நல்கியவன். அவன் சிலைவலவன்! சேவகன்! சீராமன்! அப்பெருமான் கலைகளில் வல்லார் வாழும் கண்ணபுரத்துக் - கருமாணிக்கமாவன்' அவன் கண்வளர்கவெனத் தாலாட்டுகின்றார் ஆழ்வார்.

'தசரதன் அரசர்க்கரசன். ''அவன் தளையவிழும் நறுங்குஞ்சியை'' உடையவன்! 'வாய்மை யும் மரபும் காத்து மன்உயிர் துறந்த வள்ளல்'. கண்ணகி வழக்கில், ''வளைந்த

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

செங்கோலைத் தன்னுயிர் கொடுத்து நிமிர்த்தி, மரபையும், நீதியையும் நிலைநிறுத்திய பாண்டிய மன்னனைப் போல், கொடுத்த வாக்கிற்காக உயிர் கொடுத்த உத்தமன்! அவனைத் தொடர்ந்து வரும் அவன் மூத்த மகன் அவனைப்போல் குடிகாக்கும் கோமானாக இருக்க வேண்டாமா? இருந்து காட்டியவன் இராகவன்!'' அதனால் ஆழ்வார் தமது ஒன்பதாம் பாசுரத்தில் அப்பிரானைத் 'தயரதன் தன் குலமதலாய்' எனப் பாராட்டுகின்றார்.

திசைகள் ஒன்றிற்கொன்று எதிராய் - முரணாய் உள்ளவை! அவற்றைப் படைத்ததைப் போலவே தேவர்களையும் அவர்க்கு முரண்பட்ட அசுரர்களையும் படைத்துள்ளான். அதுமட்டுமா? யாவரும் வந்து அடிபணியத் துயிலுகின்றான்! விழித்திருப்பவரை அல்லவா பணிய வேண்டும்? தூங்குபவரைப் பணிந்து ஆவதென்ன? அதுவும் அவன் தன்னைச் சுற்றிலும் ஆற்றுநீர் அரணாக ஓட, அதனிடையே - அரங்கத்தில் துயில்கின்றான்! அரங்கத்தில் துயில்பவனே காவிரிபாயும் கண்ணபுரத்துக் கருமணியாகவும் வந்து காட்சி கொடுக்கின்றான். பகைவர்க்கு வெம்மை தருகின்ற கணைதொடுக்கும் வில்லைக் கையாள்வதில் அவன் கை தேர்ந்தவன்! அத்தகைய இராகவன் இன்துயில் கொள்ளுமாறு தாலாட்டுப் பாடுகின்றார் ஆழ்வார்.

இன்தமிழ் மாலை

இறுதியாகத் தமது பதினோராவது பாசுரத்தில் திருக்கடைக் காப்பாக ஆழ்வார் அமைத்துள்ளார். 'அழியாத நன்மா மதில்கள் புடை சூழ்ந்த கண்ணபுரத்துக் காகுத்தன் திருவடிகளின்மேல் தாலேலோ என்று கூறிய தமிழ்மாலை இனிமையுடையவை. அவற்றைக் கொலைத் தொழில் புரிகின்ற வேற்படையினையும், கொற்றக் குடையையும் உடைய சூலசேகரனாகிய யான் கூறியுள்ளேன். இப்பத்துப் பாசுரங்களையும் உணர்ந்து பாட வல்லவர்கள் பாங்கமைந்த பக்தர்களாவர்' எனக் கூறுகின்றார்.

எட்டாம் திருமொழி முழுவதிலும் திருக்கண்ணபுரத்தில் எழுந்தருளியுள்ள கருமாலழகனைக் கண்ணாரக் கண்டு அனுபவித்த ஆழ்வார் தாயாகித் தாலாட்டுப் பாடுகின்றார்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

13. தாயான தந்தை

அன்பின் மிகுதி தந்தையைத் தாயாக்கி விடும்! 'தந்தை' 'தாய்' என்ற வேறுபாடுகளெல்லாம் புறஉடலைப் பொறுத்தவையே! அன்புக்கும் ஆன்மாவுக்கும் ஆண் பெண் பேதமில்லை! அன்பே ஆன்மாவையும் ஆண்டவனையும் இணைக்கும் பாலம். 'அன்பை உள்ளீடாகக் கொள்ளாத வாழ்க்கை வன்பாலை நிலத்தில் வற்றல் மரம்தளிர்த்தாற் போன்றதே' என்பது வள்ளுவம். மேலும் 'அன்பின் வழியது உயிர்நிலை' எனத் தெளிவுபடுத்துகின்றார் வள்ளுவர். 'அன்பே சிவம்' எனத் திருமூலர் அன்பையே ஆண்டவனாகக் கூறிவிடுகின்றார். இன்னும் எத்தனையோ சான்றுகளைக் காட்டிக்கொண்டே போகலாம். இங்கு நோக்கம் அதுவல்ல. அன்பின் வழிப்பட்டு வதைக்குள்ளான தசரதன் தன் மகனைக் காட்டிற்கு அனுப்பியதற்காக நொந்து புலம்புவதாக அமைவது ஒன்பதாம் திருமொழி. இத்திருமொழி, தாய் போல் தந்தை புலம்புவதாக அமைந்துள்ளது. ஆழ்வார் தயரதத் தாயாகத் தாமேயாகிப் பாடும் பாசுரங்கள் இவை.

இராமாவதாரம் இராவண வதத்திற்கே என்றாலும், மேலும் பல அறங்களை வலியுறுத்தவும் பயன்படுகின்றது. அறத்தின் நாயகனாக இராமபிரான் அமைகின்றான். நல்ல மைந்தன், நல்ல சகோதரன், நல்ல கணவன், நல்ல நண்பன், நல்ல எதிரி, நல்ல மன்னன் என எத்துணை உறவுமுறைகள் இருக்கின்றனவோ அத்தனைக்கும் இராமன் எடுத்துக்காட்டாக விளங்குகின்றான். காப்பிய இலக்கணங் கூறுகின்ற ''தன்னேரில்லாத் தலைவன்'' அவன். உலகக் காப்பிய நாயகர்களிலேயே மிக மிடுக்கான தோற்றம் அவனுடையது. அவனை ஒப்பாரும் மிக்காருமான நாயகர் இலர். அவன் புருஷோத்தமன். அவனுடைய வாழ்வில் எல்லாவிதமான இன்பதுன்பங்களும் வந்து போகின்றன. வாழ்வின் எல்லாவிதமான போராட்டங்களுக்கும் அவன் ஈடு கொடுக்கின்றான். அவனுடைய

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

தியாகமும், சீலமும், நேயமும், எளிவந்த தன்மையும், வீரமும், அவனைச் சூழ்ந்திருந்த பாத்திரங்களை மட்டுமல்லாமல் காலங்காலமாக வைணவ மெய்யடியார்களையும் ஈர்த்துத் தன்பால் எல்லையற்ற ஈடுபாட்டை வைக்குமாறு செய்துவிடுகின்றன.

கர்மபந்தங்களுள் சிக்கித் தடுமாறும் மனிதர்களுக்குள்ளே கர்மத் தொடர்பற்ற கடவுள் தானும் ஒருமனிதனாய் நடமாடி, வாழ்வின் எல்லாவித ஏற்றத் தாழ்வுகளிலும் தானும் ஒரு பாத்திரமேற்று நடித்த நாடகம் அற்புதமானது. அதனை மகாகவிகளான வால்மீகியும் கம்பனும் காப்பியங்களாக்கிச் சாகாவரம் பெறுவித்தனர்; தாமும் பெற்றனர். குலசேகரர் வரலாற்றில் அவர் இராமாயணக் கதை நிகழ்ச்சியில் ஈடுபட்டு எப்படித் தம்வசம் இழந்து உணர்ச்சிவசப்பட்டார் என்பதனைச் சற்றுமிகையாகச் சித்திரித்திருந்தாலும் உண்மையின் கூறு இல்லாமல் போகாது. ஆழ்வார் இராமகாதையில் மிகவும் ஈடுபட்டவர் என்பதை அவர்தம் பாசுரங்களே பகருகின்றன. ஒருவேளை இப்பாசுரங்களின் உணர்ச்சிகரமான போக்கைக் கண்டபின்புகூட அவர் இராமாயணங் கேட்கையில் இதைச் செய்தார் அதைச் செய்தார் எனக் கற்பித்தும் அவரது வாழ்க்கையோடு சேர்த்திருக்கலாம். எப்படி இருப்பினும், ஆழ்வாரின் நெஞ்சம் இராமகாதையில் தன்னை இழந்து நின்றது என்பதுமட்டும் மறுக்கமுடியாத உண்மை.

இராமபிரானுடைய அருமைகளையெல்லாம் ஆழ்வார் அவற்றில் ஆழ்ந்து உணருகின்றார். இப்படிப்பட்ட திருமகனைப் பெற்ற தந்தை அவனுடைய இடர்களுக்கெல்லாம் தான் காரணன் என்பதை உணரும்போது அவரின் மனம் என்ன பாடுபட்டிருக்கும் என்பதைத் தாம் தயரதனாகவே நின்று, உணர்ந்து, தவிக்கிறார். அத்தவிப்பே - ஆழ்ந்த ஈடுபாடே, எம்பெருமான் மேல் ஏற்பட்ட பக்திப்பிரவாகத்தோடு சேர்ந்து பாசுரங்களாக வெளிப் பட்டிருக்கின்றன. ஆழ்வாரின் மனம், தாய்மனம். அன்பினால் நைந்து போனது மட்டுமல்லாமல் உலகியல் போராட்டங்களில் ஏற்பட்ட விரக்தியும் சேர்ந்துகொண்டதோ என எண்ணும்படியாகத் திருமொழிகள் அனைத்திலும் ஒரு துன்ப நாதம் இழையோடுதலைக் காண்கிறோம். இதனை ஆழ்வாரின் 3, 4, 5 - ஆகிய திருமொழிகளை ஊன்றிப்படித்தால் உணரக்கூடும்.

பக்தியில் பண்பட்ட மனம், பாரிடத்தாரின் பண்பற்ற செயல்களைக் கண்டு வெறுக்கின்றது. பண்பே உருவான

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

இராமபிரான் பட்ட துயர்களை நினைத்து நெகிழ்கின்றது. அந்த நெகிழ்ச்சியின் விளைவுதான் தயரதனின் புலம்பலாக வெளிப்படு கின்றது. தாலாட்டும் புலம்பலும் பெண்மனத்திற்கு இதமானவை. பெண்மனம் கொண்ட ஆழ்வாரும் தயரதனைத் தாய்மை மனம் கொண்டவனாக்கிப் புலம்ப வைக்கின்றார். வருந்தும் மனத்தை வருடிக் கொடுப்பதுபோன்ற இசைத்தமிழ் இன்ப ஊற்றாய்ப் பொங்கித் ததும்புகின்றது. இத்தகு 'புலம்பல்' இலக்கிய உத்தி பின்வந்த காப்பிய ஆசிரியர்களுக்கும், பட்டினத்தார், பத்திரகிரியார் முதலான சித்தர்களின் ஞானப் புலம்பல்களுக்கும் அடித் தளமாகியதென்பது மிகையாகாது.

பொதுவாக நம்மைச் சார்ந்தவர்களுக்குத் துன்பம் வரும்போது அத்துன்பம் நம்மையும் பாதித்து வருந்தவைக்கின்றது. ஆனால், அத்துன்பத்திற்கு நம்முடைய தவறுதான் காரணமென்றால் - பாதிக்கப்பட்டவர்களின் துன்பத்தில் நாம் பங்கு கொள்வது மட்டுமல்லாமல் நம்மிடம் ஒரு குற்ற உணர்வும் சேர்ந்து கொள்கின்றது. பிறகு அக்குற்ற உணர்வே மிகுதிப்பட்டு நம்மை நலிய வைக்கின்றது; சில சமயம் இறப்புக்கும் வழி வகுத்துவிடுகின்றது! இந்நிலைதான் தயரதன் நிலையும்! இராமனுக்கு முடிசூட்டுவதற்கான காரியங்களைச் செய்துவிட்டு, பிறகு அந்தப்புரத்திற்குப் போய்க் கைகேயிடம் வரங்கொடுத்து, அம் முடிசூட்டு வைபவத்தைத் தானே நிறுத்துவதற்கேது வாகின்றான்! அதுமட்டுமல்லாமல் முடிசூட இருந்தவனைக் கொடிய கானகம் போகும்படியான கட்டாயத்தையும் உருவாக்கி விடுகின்றான். தயரதன் இராமனுக்கு நன்மை செய்யாமற் போனதுமட்டு மன்றி, தீமைக்கும் காரணமாகின்றான். இக்குற்ற உணர்வே இராமனின் பிரிவுத்துயரை இரட்டிப்பாக்குகின்றது. தன் தவறுகளால் விளைந்த இடர்களைத் தலைமேற்கொண்டு நடந்த தனயனின் தயாவை நினைத்து அவன் குமுறுகின்றான். இதனையே ஆழ்வார் புலம்பலாக வெளிப்படுத்துகின்றார்.

'நெடுங்கானம் படரப் போ'

இராமபிரானுடைய திருவடிகள், 'அற்றார்க்கு அருமருந்து போல்வன!' வலியற்றார்களுக்கு வலிமை சேர்ப்பன. அத்திருவடி களை வணங்கித் தமது வாழ்வளிக்கும் மன்னனாவான் என வளநகரமான அயோத்தி மக்கள் துதித்துப் போற்றி நிற்க, அரசேற்க நின்ற - ஏறத்தாழ அரியணையில் அமர்ந்துவிட்ட அவனைக் 'கொடிய கானகம் போ' எனக் கைகேயி கூறினாள்! 'உன்னை

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

ன்றவள் போன்ற அவளின் சொற்கேட்டு ஓ! என் இராமா! நன்மகனே! இவ்வுலகை நன்றாக ஆளவைத்தேன் நான்!' எனத் தயரதன் புலம்புவதாக அமைவது முதற்பாசுரம்:

" வன்தாளி னிணைவணங்கி வளநகரம்
தொழுதேத்த மன்ன னாவான்
நின்றாயை அரியணைமே லிருந்தாயை
நெடுங்கானம் படரப் போகு
என்றாளெம் இராமாவோ! உனைப்பயந்த
கைகேசி தன்சொற் கேட்டு
நன்றாக நானிலத்தை யாள்வித்தேன்!
நன்மகனே! உன்னை நானே! " (9-1)

எவ்வாறு நடந்தனை?

வெம்மை பொருந்திய தன்னுடை வாயுரை கேட்டதும் இராமன் எங்ஙனம் நடந்து சென்றிருப்பான் என எண்ணித் தயரதன் புலம்புவதாக வருவது இரண்டாம் பாசுரம்

" வெவ்வாயேன் வெவ்வுரைகேட் டிருநிலத்தை
வேண்டாதே விரைந்து வென்றி
மைவாய களிறொழிந்து தேரொழிந்து
மாவொழிந்து வனமே மேவி
நெய்வாய வேல்நெடுங்கண் நேரிழையும்
இளங்கோவும் பின்பு போக
எவ்வாறு நடந்தனை?எம் இராமாவோ!
எம்பெருமான் என்செய் கேனே! " (9-2)

'சக்கரவர்த்தித் திருமகன், அவனுக்குரிய நால்வகைப் படைகளும் சூழ ஓரிடத்திற்குப் போக வேண்டியவன்; இன்று அன்புக்குரிய மனைவியும் தம்பியுமே பின்வரப் போகின்றானே' என நினைந்து, தயரதன் துயரமடைகின்றான். தனது வாக்கே அவனை வனம் போக வைக்கின்றது! ஆனால், மனமோ அவனோடு நடக்கின்றது! போகவேண்டாம் எனக் கூற முடியாமலும் உடன்போக முடியாமலும் கிடக்கின்ற தனது நிலையை நினைந்து 'நான் என்ன செய்வேன்?' எனப் புலம்புகின்றான்.

'கல்லணைமேல் கண்துயிலக் கற்றனையோ'

ஒப்பற்ற திருமகன் அரண்மனையில் அம்சதூளிகா மஞ்சத்தில் கண்துயின்று பழக்கப்பட்டவன்; கானகத்தில் கருங்கற் பாறைகளில்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

இனிக் கண்துயில வேண்டும் என நினைத்துத் தயரதன் நெக்குருகுவதாக அமைவது மூன்றாம் பாசுரம்:

" கொல்லணைவேல் வரிநெடுங்கண் கௌசலைதன்
குலமதலாய்! குனிவில் ஏந்தும்
மல்லணைந்த வரைத்தோளா! வல்வினையேன்
மனமுருக்கும் வகையே கற்றாய்
மெல்லணைமேல் முன்துயின்றாய் இன்றினிப்போய்
வியன்கான மரத்தின் நீழல்
கல்லணைமேல் கண்துயிலக் கற்றனையோ
காகுத்தா! கரிய கோவே! " (9-3)

தன் குலத்தில் பிறந்து, தரணியாளும் தகுதியை இழந்து, தன்னால் துயரத்துக்குள்ளாகித் தருவனம் போக வேண்டிய நிலைக்குத் தள்ளப்பெற்ற தன் மகனைத் தன் குலத்தில் பிறந்தான் எனக் கூறுவதில் என்ன பெருமையுள்ளது? எனவே, 'கௌசலை தன் குலமதலாய்' என விளித்துத் தன் 'மனமுருக்கும் வகை கற்றாய்' எனக் கூறித் தயரதன் புலம்புகின்றான்.

நெஞ்சம் இருபிளவாய்ப் போகாதே நிற்கும்!

'இந்தப் பிள்ளை எப்படி நெஞ்சங்கவர்ந்து நிற்கின்றான்! வருக என அழைத்துப் பார்த்த பின்பு போகுமாறு கூறிய மறுகணமே அவனைப் பார்க்கவேண்டும் என்னும் ஆவல் உந்தத் திரும்ப வருக என அழைக்க வேண்டியுள்ளதே! 'மறுபடியும் மறுபடியும், இன்னும் வந்தொருகால் கண்டு போ' எனக் கூறி நெஞ்சம் விம்முகின்றதே! மலர் மகளாகிய திருமகள் போன்றவளும், மூங்கில் போலும் வனப்படைந்த தோள்களை உடையவளுமாகிய சீதை பொருட்டாகச் சிவபெருமானின் வில்லையே ஒடித்தவனே! என் மனமுருக நிற்கும் மகனே! இன்று விலங்குகள் திரியும் நெடுங்கானம் நீ போகவும் என் நெஞ்சம் இரு பிளவாய்ப் பிளந்து போகாமல் வலிதாக நிற்கும் நிலைமைதான் என்னே' எனத் தயரதன் புலம்புவதாக நான்காம் பாசுரம் அமைந்துள்ளது.

ஒருகணமும் பாராமல் இருக்க முடியாது எனத் தந்தை மனம் தவிக்கும்படியான தகவுடையான் இராமன். அத்தகைய பெருமகன் கானகம் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டு விட்டது! என்றால், தந்தையின் மனம் இரு பிளவாய்ப் பிளந்து போகாமல் நிற்கும் நிலைமைதான் யாதாகலாம்! தயரதனின் பெருந்துயரை வடித்துக் கூறுகின்றது இப்பாசுரம்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

அரும்பாவி சொற்கேட்ட அருவினையேன்

நம்பிக்கையே வாழ்க்கையை நலியவிடாமல் நடத்திச் செல்லுகின்றது. நம்பிக்கை இழக்கும்போது பலர் தம் உயிரையே மாய்த்துக்கொள்ளுகின்றனர். நாம் அன்பு செலுத்தி ஆதரவு காட்டிய அருமையுடையோர்களே நம்பிக்கைத் துரோகம் செய்வார்களாயின், அந்நன்றி கொன்ற செயல் நம்மை நலிய வைத்துவிடும். தயரதன் இத்தகு நிலைக்குத் தள்ளப் பெறுகின்றான். கைகேயி அவனுடைய பேரன்பிற்குப் பாத்திரமானவள். இராமனை வளர்த்த தாய் அவள்! இராமனின் முடிசூட்டு விழாவைத் தானே தன் அன்புக்குரியவளிடம் தெரிவிக்கும் ஆவலில் அவள் அந்தப்புரத்தினுள் நுழைகின்றான். அங்குக் கண்ட காட்சி அவனை நிலை குலைய வைத்துவிடுகின்றது. கூனியின் சூழ்ச்சியால் மனம் மாறிய கைகேயி இப்பொழுது இவனுக்கும் இராமனுக்கும் பகை மனத்தை யுடையவளாக மாறிவிட்டாள் என்பதை அவன் அறியவில்லை. எனவே, அலங்கோலமாகக் கிடந்த கைகேயிக்கு வேண்டுவதென்னென வினவுகின்றான். அவள் கேட்ட பின்புதான் தெரிந்தது தான் எத்தகைய வரங்களைக் கொடுக்கவேண்டு மென்பது. துடிக்கின்றான், பதைக்கின்றான். அவள், கால்களில் விழுகின்றான்! நாட்டைக் கொடுப்பதைக்கூட அவன் பெரிதாக நினைக்கவில்லை; இராமனைக் காட்டுக்கு அனுப்பும் செயல்தான் அவனை வதைக்கின்றது. தனக்கும் இராமனுக்கும் இத்தகைய பாதகத்தைக் கைகேயி நினைப்பாள் என அவன் எதிர்பார்க்க வில்லை! அவள் அன்பை முழுதும் நம்பினான்! அன்பு மனத்தில் தீமை விளைய முடியுமா? முடியும் என்பதற்கு உதாரணமாகிறாள் கைகேயி!

வானையும் மண்ணையும் வென்றவனாயினென்ன? நம்பிக்கை தகர்ந்து போம்பொழுது நலிகின்றான். இத்தகைய நலிவைப் பெற்ற தயரதன் கைகேயியை 'அரும் பாவி' என அழைப்பதாகக் காட்டுகின்றது, ஆழ்வாரின் ஐந்தாம் பாசுரம்:

" பொருந்தார்கை வேல்நுதிபோல் பரல்பாய
மெல்லடிகள் குருதி சோர
விரும்பாத கான்விரும்பி வெயிலுறைப்ப
வெம்பசிநோய் கூர இன்று
பெரும்பாவி யேன்மகனே! போகின்றாய்
கேகயர்கோன் மகளாய்ப் பெற்ற
அரும்பாவி சொற்கேட்ட அருவினையேன்
என்செய்கேன் அந்தோ யானே! " (9-5)

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

'பகைவரின் வேல்முனைபோல் பரற்கற்கள் பாதங்களைப் பதம் பார்க்கும் காடு! யாரும் விரும்பி வாழ அங்குச் செல்வதில்லை! கொடிய வெய்யிலும், மழையும், காற்றும், பசியும் வருத்தும்படியாகக் கொடிய வினைக்குற்றமுடையேனுடைய மகனே! நீ அங்குப் போகவேண்டியதாயிற்றே! பாவத்தையே கேகய நாட்டு மன்னன் மகளாய்ப் பெற்றிருக்கின்றானென்று உணராமல் நான் அவள் சொல்லைக் கேட்ட அருவினை யுடையவன்! அந்தோ நான் என் செய்வேன்?' எனப் புலம்புகின்றான் மன்னன்.

'அரும்பாவி சொற்கேட்ட அருவினையேன்' எனத் தயரதன் தேம்புவது அவலத்தின் உச்சம்! 'என் செய்வேன் அந்தோ!' எனத் தனக்குத் தானே பகையாகித் தனயனைத் தடுத்து நிறுத்தும் ஆற்றலின்மையைக் கூறித் தன்னிரக்கப்படுவதை ஆழ்வார் அற்புதமாகச் சித்திரித்திருக்கின்றார்!

'இழிதகையேன் இருக்கின்றேனே!'

'அப்பா என்று ஆர்வத்தோடு மகன் அழைக்கும் ஆர்வம் மிக்க சொல்லைக் கேளாமலும், அணிகலன்கள் என் மார்பில் அழுந்தும்படியாக மகனைத் தழுவி அந்த ஆனந்தத்தில் உச்சி மோந்து மகிழ்வடையாமலும், யானைபோல் பெருமிதம் தோன்ற அவன் நடந்து செல்லும் அழகைக் காணாமலும், தாமரை போன்ற அவன் முகத்தைப் பாராமலும் என் மகனைக் காட்டிற்கு அனுப்பிவிட்டு இழிதகையவனான நான் இன்னும் இருக்கின்றேனே' எனத் தயரதன் வருந்துவதாக இருப்பது ஆறாம் பாசுரம்.

தசரத ராமனைக் காட்டிலும் அறிவும், பண்பும் உடைய மைந்தன் உலகில் பிறந்ததுண்டோ? அத்தகைய மகனைப் பெற்றிருந்தும் தன் தகைமையைக் காப்பாற்றும் சொல்லும் செயலும் தன்னிடம் அற்றுப்போனமை தயரதன் உள்ளத்தை மிகவும் வருத்துகின்றது. தனக்கும் தன் மனைவிக்கும் இடையே இருந்த 'வரம் கொடுத்தல் வாங்குதல்' என்ற பிரச்சினையில் எவ்விதத் தொடர்புமற்ற தகைமைசால் மைந்தன் பாதிக்கப்படுகின்றான். அந்தப் பாதிப்பை அவன் பெருந்தன்மையோடு ஏற்றுக் கொள்ளுகின்றான். இவனுக்குப் பிள்ளையாகப் பிறந்த காரணத்தால் இவன் கொடுத்த வாக்கிற்காக இளைய மனைவியோடு சேர்ந்து பெரும் துன்பங்களை எதிர்கொள்ளும் நிலை இராமனுக்கு ஏற்பட்டு விடுகிறது. அதனை அவன் ஏற்றுக்கொண்ட பக்குவம், தயரதனை

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

எண்ணி எண்ணி அழ வைக்கின்றது. இறுதியில் உயிரை விட வைக்கின்றது.

'இது தகவோ ? '

'மலர்மணம் கமழும் குழலைப் புன்மையான சடையாகப் புனைந்தும், பூந்துகில் அணியும் இடையில் தருப்பையைக் கயிறாக்கிக் கட்டிய மரவுரியை அணிந்தும், அரசர்கள் அணிய வேண்டிய அணிகளை அணியாமல் அங்கங்கள் அவ்வவ் வழக்குகளினின்றும் மாற்றமடையப் பகைவர் அஞ்சும் தோளாற்றலுடைய என் மகன் - நான் இந்த வயதில் வானப் பிரஸ்தம் செல்ல வேண்டிய கானகத்திற்குத் தான் போகலாமா? தூய்மையான மறையறிந்து ஓதியவர்களே, சுமந்திரனே, வசிட்டனே! எனக்குத் தெரியச் சொல்வீர்களாக' எனத் தயரதன் தன் செயலுக்கு நாணிப் புலம்புவதாக ஏழாம் பாசுரம் இடம் பெறுகின்றது.

" பூமருவு நறுங்குஞ்சி புன்சடையாப்
புனைந்து பூந்துகில் சேரல்குல்
காமரெழில் விழலுடுத்துக் கலனணியா
தங்கங்கள் அழகு மாறி
ஏமருதோள் என்புதல்வன் யானின்று
செலத்தக்க வனந்தான் சேர்தல்
தூமறையீர்! இதுதகவோ? சுமந்திரனே!
வசிட்டனே! சொல்லீர் நீரே! " (9-7)

என்பது ஏழாம் பாசுரம்.

'என் பெற்றாய் கைகேசி ? '

'வேதம்வல்லாரிடமிருந்து வேதநூல் பயிற்சிபெற்ற இராமனையும், அவனை விட்டு நீங்காதவனாகிய தம்பி இலக்குவனையும், கிள்ளை மொழி போன்ற சொல் இனிமையும், மின்னற் கொடி போன்ற சிறுத்த இடையினையும், மென்மை யையும் உடையவளான என் மருகியையும் வனம்போகவைத்து, உன்னிடம் அன்புடைய உன் மகன் பழி கொள்ளுமாறு செய்து, என்னையும் உயிர் நீத்து வானடையும்படி செய்வதனால் நீ என்ன பெற்றாய் கைகேசி? ஏதோ பெரும்பயன் பெற்றவள்போல் இப்படி இனிதாக இருக்கின்றாயே!' இங்ஙனம் வரம்பெற்று வறிதான செயல்களைச் செய்து இறுமாந்து நின்ற கைகேயியைப் பார்த்துத் துன்பத்துழலும் தயரதன் பேசுவதாக வருவது எட்டாம் பாசுரம்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

" பொன்பெற்றா ரெழில்வேதப் புதல்வனையும்
தம்பியையும் பூவை போலும்
மின்பற்றா நுண்மருங்கில் மெல்லியலென்
மருகியையும் வனத்திற் போக்கி
நின்பற்றா நின்மகன்மேல் பழிவிளைத்திட்டு
என்னையும் நீள்வானிற் போக்கி
என்பெற்றாய்? கைகேசி! இருநிலத்தில்
இனிதாக இருக்கின் றாயே! " (9-8)

ஒரு செயலில் ஈடுபடும்போது, அதனால் ஏதாவதொரு பயன் கிடைக்க வேண்டும். எப்படியனும் இன்றிப் பழியும் கிடைக்குமானால் அச்செயலில் ஈடுபட்டார் மகிழ்வதற்கு ஏதுமில்லை! கைகேயியின் மகிழ்வு இப்படிப்பட்டது. தான் வளர்த்த தகவுடைய மகன் தம்பியொடும், மனைவியொடும் காடு போகவும், தன் கணவன் உயிர்போகவும், தான் பெற்ற மகனின் நற்பெயர்போகவும், பழி சூழவும் ஆன காரியம் ஒன்றனைச் செய்வதனால் அவள் பெறுவது என்ன? பழியும் பாவமும்தானே!

'ஏழ்பிறப்பும் மகனாவாய் '

'முன்பொருநாள், மழுப்படையை ஆயுதமாகக் கொண்ட வனும் சத்திரியர்க்குக் கூற்றுவனுமாகவிருந்த பரசுராமனின் கைச் சிலையையே அவன் தர வாங்கி, வளைத்து, நாணேற்றி, அவனுக்கு ஆற்றலாக அமைந்த தவத்தை முழுவதும் ஓரம்பினால் கவர்ந்தாய்! உன் தகுதியையும் உலகம் உன்னைப் போற்றி நிற்கும் அருமையையும், உன் பிரிவால் உனைப் பெற்றவள் படும் துயரத்தையும் ஒரு பொருட்டாக எண்ணாமல், என்னையும், யான் கொடுத்த வாக்கையும் பின்பற்றுதற்குரிய மெய்ம்மையாகக் கொண்டு வனம் போன என் ஐயா! இனி வரும் பிறவிகள் ஏழா யிருப்பினும் நின்னையே மகனாகப் பெறும் பேறு பெறுவேன்', எனத் தயரதன் கூறுவதாக வருவது ஒன்பதாம் பாசுரம்.

" முன்னொருநாள் மழுவாளி சிலைவாங்கி
அவன்தவத்தை முற்றும் செற்றாய்
உன்னையுமுன் னருமையையும் உன்மோயின்
வருத்தமும் ஒன்றாகக் கொள்ளாது
என்னையுமென் மெய்யுரையும் மெய்யாகக்
கொண்டுவனம் புக்க எந்தாய்!
நின்னையே மகனாகப் பெறப்பெறுவேன்
ஏழ்பிறப்பும் நெடுந்தோள் வேந்தே! " (9-9)

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

பரசுராமனைப் பகழி ஒன்றால் தோற்பித்தவன், பாரெல்லாம் போற்ற நின்ற பண்பாளன் - தன் ஒரு சொல்லைத் தலைமேற்கொண்டு கானகம் புகுந்தான்! 'குற்றமற்ற நான் ஏன் வனம் போக வேண்டும்' என்று ஒரு சொல் அப்பெருமான் கூறியிருப்பின் தசரதனுடைய நிலை என்ன? தசரதன் 'வாய்மையும், மரபுங்காத்த மன்னனா'வதற்கு, இவன் வனம் போன செயல் அல்லவா காரணம்! இவனும் இளையபெருமாளைப் போல உணர்ச்சி வசப்பட்டிருந்தால் என்ன ஆகும்? தொல்லைச் சூரியன் மரபு மீளாப் பழிபட்டிருக்கும்! இராமாயணமென்ற சரணாகதி வேதம் ஏது? இவ்வுலகில் அறத்தை நிலைநாட்ட வந்த நாயகனல்லனோ அவன்? தன் சொல்லைக் காப்பாற்றிக் கொடுத்த நன்மகனை நன்றியோடு நினைப்பது மட்டுமல்லாமல் இனி வரும் பிறவிகளிலும் இவனே மகனாக வேண்டுமென்று விண்ணப்பிக்கின்றான். 'இம்மைக்கும் ஏழேழ் பிறவிக்கும் பற்றாவா'னல்லவா அப் பரந்தாமன்!

'வானகமே போகின்றேன் '

'தேன் பிலிற்றும் மலர்களை அணிந்த கூந்தலை உடைய கௌசலையும், சுமித்திரையும் மனம் வருந்தும்படியாக, உடலும் கூனிப்போன கொடிய பணிமகளின் சொல்கொண்டு, இன்று உன் முடிசூட்டு விழாவிற்காக ஒப்பனை செய்யப்பெற்ற வளநகரான அயோத்தியைத் துறந்து கானகத்தையே நீ விரும்பிப் போய்விட்டாய்! மனுகுல மன்னர்களிற் சிறந்தவனே! நானும் நீ துறந்த வளநகரைத் துறந்து உயிர்நீத்து வானுலகையே மிக விரும்பிப் போகின்றேன்' எனத் தயரதன் இராமனைப் பிரிந்து உயிர் வாழ முடியாது என்பதைக் கூறுவதாக அமைவது பத்தாம் பாசுரம்:

" தேனகுமா மலர்க்கூந்தல் கௌசலையும்
சுமித்திரையும் சிந்தை நோவக்
கூனுருவின் கொடுந்தொழுத்தை சொற்கேட்ட
கொடியவள்தன் சொற்கொண்டு இன்று
கானகமே மிகவிரும்பி நீதுறந்த
வளநகரைத் துறந்து நானும்
வானகமே மிகவிரும்பிப் போகின்றேன்
மனுகுலத்தார் தங்கள் கோவே! " (9-10)

உலகில் ஒருவருக்கு மகிழ்ச்சியைத் தருகின்ற செயல் வேறொவருக்குத் துன்பத்தைத் தருவதாக அமையலாம்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

கைகேயியின் செயல் மற்ற இரு அரசியர்க்குமட்டும்மல்லாமல் கோநகர்க்கே கொடுஞ்செயலாக அமைந்தது. உடலில் கூனல் பொறுத்துக் கொள்ளக்கூடியது; ஆனால், கூனி உள்ளமும் கூனிப்போனவள். கொடு மனக் கூனி என்பான் கம்பன். அதுமட்டுமல்லாமல் அவள் ஒரு பணி மகள்; அவள் சொல்லை ஒரு பேரரசி ஏற்றுச் செயல்பட்டாள் என்றால் அதன் விளைவுகள் எத்தகைய சிறுமையை அவளுக்குக்கொடுத்தன என்பதைக் காண முடியும்.

சீரார்ந்த தமிழ் மாலை

'எல்லாத் திவ்விய குணங்களாலும் அழகுபெற்ற கரிய நெடுமால், இராமனாக அவதரித்து, அவ்வவதாரத்தில் அரசை இழந்து அடவி சென்றதனுக்காற்றாது அவனுடைய தந்தையான வெற்றிமாலை பொருந்திய மலை போன்ற பெரிய தோள்களை உடைய தசரத மன்னன் புலம்பிய புலம்பலைக் கூர்மை பொருந்திய வேற்படையில் வல்லவரும் உறையூருக்குத் தலைவருமான குலசேகரர் அருளிச் செய்த சிறப்பு மிக்க இப் பத்துப் பாசுரங்களையும் ஓதி உணரவல்லவர்கள் தீய வழியில் செல்ல மாட்டார்கள்' என்பது திருக்கடைக் காப்பாக அமைந்த பதினோராம் பாசுரமாகும்.

இசைக்கு இசைபவன் இறைவன். அதுவும் தமிழிசைக்குத் தன்னையே தருபவன் அவன். இந்த இயல்பை உணர்ந்த ஆழ்வார்கள் அவனைத் தமிழால் அர்ச்சித்தனர். அத்தகு அர்ச்சனைகளில் ஒன்றே இப்பாசுரமாகும். இதனைச் 'சீரார்ந்த தமிழ் மாலை' எனக் கூறுகின்றார் குலசேகரர்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

14. சூத்திரம் ஆகிய மகா காவியம்

சுந்தரமூர்த்தி சுவாமிகளின் 'திருத்தொண்டத்தொகை' சைவ சமயத்தில் பெரிய புராணம் எனும் விரிவைப் பெற்றது. இங்கு, குலசேகரப் பெருமானால் அருளிச் செய்யப் பெறுகின்ற பத்தாம் திருமொழி இராமாயணமென்னும் மகாகாவியத்தின் சுருக்கமாக அமைகின்றது. பெரிய யானையைச் சிறிய ஆடியில் காட்டுவது போல இராமாயண காவியம் முழுமையையும் பத்துப் பாசுரங் களாகச் சுருக்கிச் சொல்லிவிடுகின்றார் ஆழ்வார். மேலும் இராமாவதார வைபவம் பேசும் இத்திருமொழியைத் தில்லைநகர்த் திருச்சித்திரகூடத் திருமால்பரமாக்கிக் கூறியுள்ளார்.

குலசேகரர் வாழ்வில் இராமாயணக் காதை பெரும்பங்கு வகித்துள்ளதாகக் கூறலாம். அவருக்கு இராமாவதாரத்தின் மேல் ஏற்பட்ட ஈடுபாட்டை அவரது திருமொழி வாயிலாக நன்கு அறியலாம். அம் மகா காவியத்தை அவர் பன்முறை கேட்டு அனுபவித்திருக்க வேண்டும். அவ்வனுபவப் பிரவாகமே அருமையான பாசுர வடிவங்களைப் பெற்று மிளிர்கின்றது. அர்ச்சாவதார எம்பெருமான்களைப் பாடும்போதே ஆழ்வார் அப்பெருமானின் அவதார மகத்துவங்களையும் இணைத்துக் கொள்ளுகின்றார். அவற்றுள் இராமாவதாரச் சிறப்பைப் பாடுவதில் ஆழ்வார் ஆழங்கால்பட்டுள்ளார் எனலாம்.

கிருஷ்ணாவதார லீலைகள் கொஞ்சிக் குதித்து வரும் அருவிகளைப் போல இன்பகரமான இசையோடு இயைந்தவை; இளம் மனங்களைக் கொள்ளை கொள்வன. இராமாவதாரமோ ஆழ்ந்த பேராறு போல அமைதியும் கம்பீரமுமுடையது! ஆன்றோர்களை ஈர்த்துத் தன்வயமாக்க வல்லது. கிருஷ்ணனின் ஆயுதம் புல்லாங்குழல்! அந்த நாதத்திலேயே நானிலத்தை மயக்கும் மோகன வடிவம் அவன்! இராமபிரானோ கோதண்டம் எனும் வில்லை எப்பொழுதும் தாங்கி நிற்கும் கோதண்டராமன்! அவன்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

வில்லின் மணியோசை நண்பர்களுக்கு நன்மையையும், தீயவர்க்குத் தீமையையும் விளைவிப்பது. ஆழ்வார், மன்னர் பிரான் ஆகையாலும் வேலும், வாளும், வில்லும் அவரது வீரவாழ்வுக்குத் துணை நின்றன என்பதாலும் இராமாவதார நிகழ்ச்சிகள் அவரை மிகவும் ஆட்கொண்டிருக்கின்றன. உயிர்த் தொகுதிகளுக்காக அப்பிரான் பட்ட சிரமங்கள் அடியாரின் மனத்தைக் கனிவிக்கின்றன! அதன் விளைவே பாசுரங்கள்.

'நாட்டை நலியும் அரக்கரை மனிசர்க்கா நாடித் தடிந்திட்ட' நாதனை நாத்தழும்பேற வழுத்தினால் நற்கதி சேரலாம். இப்பேருண்மையை உணர்த்துவனவாக அமைந்தவையே இப்பாசுரங்கள். இவற்றை ஓதுவது இராம காதையை முழுவதும் ஓதுவதற்குச் சமம் அன்றோ?

உலகனைத்தும் விளக்கும் சோதி

அழகிய மதில்களால் சூழப்பெற்ற அயோத்தி என்னும் அணிநகரில் தோன்றிய சோதி அனைத்துலகையும் விளக்கும் சோதியாகும். கதிரவன் குலத்திற்கு ஓர் விளக்காய்த் தோன்றி விண்ணையும் மண்ணையும் உய்யக் கொண்ட வீரனாகிய சிவந்த கண்களை உடைய கருமுகில் போன்ற இராமனைத் திருச் சித்திரகூடத்தில் கண்குளிரக் காணும் நாள் எந்நாள் என முதற் பாசுரத்தில் இராமபிரான் சூரிய குலத்தில் அயோத்தி நகரில் தோன்றி மண்ணுக்கு விளக்காகி விண்ணுக்குக் காப்பாகி விளங்கிய தன்மையை ஆழ்வார் பாடுகின்றார்.

" அங்கண்நெடு மதிள்புடைசூ ழயோத்தி யென்னும்
அணிநகரத் துலகனைத்தும் விளக்கும் சோதி
வெங்கதிரோன் குலத்துக்கோர் விளக்காய்த் தோன்றி
விண்முழுதும் உயக்கொண்ட வீரன் தன்னைச்
செங்கணெடுங் கருமுகிலை இராமன் றன்னைத்
தில்லைநகர்த் திருச்சித்ர கூடந் தன்னுள்
எங்கள்தனி முதல்வனையெம் பெருமான் றன்னை
என்றுகொலோ கண்குளிரக் காணும் நாளே! " *(10-1)*

மூவாயிரவர் ஏத்தும் முதல்வன்

'சிவந்த தளிர்களுக்கிடையே வெண்மலர்கள் விளங்கித் தோன்றும் செழுமையான சோலைகளால் சூழப்பெற்றது தில்லை நகர்த் திருச்சித்திரகூடம். அங்கு அந்தணர்கள் மூவாயிரவர் ஏத்திப்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

பரவ அணிமணி ஆசனத்திருப்பவன் எம்பெருமான். அப்பெருமான் விசுவாமித்திரன் வேள்வி காக்க அவனுடன் சென்றபோது எதிர்வந்தெதிர்த்த தாடகை என்னும் அரக்கியை அவள் நெஞ்சைப் பிளக்கும் படியாகக் கணையொன்றேவி அவளைக் கொன்றான். மேலும் அத்தாடகையின் மக்களும் ஏனைய வீரர்களும் வந்து எதிர்த்தபோது அவ்வல்லரக்கர் உயிரை உண்டு முனிவனின் வேள்வியைக் காத்தருளினான் எனும் செய்திகளைத் தாங்கி நிற்பது இரண்டாம் பாசுரம்.

இறைஞ்சுவார் அடியிணையே இறைஞ்சினேனே!

'செவ்வரியோடிய கரிய நெடுங்கண்களை உடைய சீதையை மணப்பதற்காகச் சினவிடையோனாகிய சிவபெருமானின் வில்லை ஒடித்தான். பின் அப் பிராட்டியைத் திருமணம் செய்து அயோத்திக்குத் திரும்புங்கால் எதிர்ப்பட்ட பரசுராமனின் கட்டமைந்த வில்லினை வாங்கி வளைத்து அவ்விராமனின் தவ ஆற்றல் அனைத்தையும் அழித்து, சத்திரியர்க்கு அதுவரை பகைவனாயிருந்த அவனை வெற்றி கொண்ட வீரன் இராமபிரான். பகைவர் அஞ்சும் பெரிய மதிலையும் உயர்ந்த மாடங்களையும் உடையது தில்லைநகர்த் திருச்சித்திரகூடம். அங்கு எழுந்தருளியுள்ள, பகைவர்க்கு அச்சந்தரும் வில்லேந்திய இராம பிரானை வணங்குகின்ற அடியவர்களுடைய திருவடிகளையே நான் வணங்கினேன்' என ஆழ்வார் மூன்றாம் பாசுரத்தில் வைதேகி திருமணத்தையும், பரசுராமனின் கர்வ பங்கத்தையும் குறிப்பிடுகின்றார்.

" செவ்வரிநற் கருநெடுங்கண் சீதைக் காகிச்
சினவிடையோன் சிலையிறுத்து மழுவா ளேந்தி
வெவ்வரிநற் சிலை வாங்கி வென்றி கொண்டு
வேல்வேந்தர் பகைதடிந்த வீரன் றன்னைத்
தெவ்வரஞ்சு நெடும்புரிசை உயர்ந்த பாங்கர்த்
தில்லைநகர்த் திருச்சித்ர கூடம் தன்னுள்
எவ்வரிவெஞ் சிலைத் தடக்கை இராமன் றன்னை
இறைஞ்சுவார் இணைஅடியே இறைஞ்சி னேனே "(10-3)

இராகவனின் அடியார்க்கு அடியவராக வேண்டும் என்ற தமது அவ்வை ஆழ்வார் இத்திருப்பாசுரத்தில் வெளியிடுகின்றார். இம் மூன்றாம் பாசுரத்தோடு பால காண்ட நிகழ்ச்சிகள் முடிவுறுகின்றன.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

இருநில்த்தார்க்கு இமையவர் ஒவ்வார்

'கொத்தாக அலர்ந்த பூக்களைச் சூடிய சுருண்ட கூந்தலை உடையவள் கைகேசி! அவள் தசரதனிடம் கொண்ட வரத்தினால் பழமையான அயோத்தி நகரை விடுத்துச் சிறந்த பக்தனான குகனது உதவியால் கங்கையைக் கடந்து சென்று வனம் புகுந்தான் இராமபிரான். அங்குத் தன்னைத் தேடி வந்த பரதனுக்குத் தன் பாதுகைகளையும், அயோத்தி அரசையும் கொடுத்துச் சித்திரகூடம் எனும் மலையில் தங்கினான். அப்பெருமான் அர்ச்சாவதாரமாய்த் தில்லைத் திருச்சித்திரகூடத்தில் எழுந்தருளியுள்ளான். அப் பெருமானைக் கண்குளிரக் காணப் பெற்ற இந்நிலவுலகோர்க்கு இமையவர்கள் சிறிதும் சமமாக மாட்டார்கள்' என அயோத்தியா காண்ட நிகழ்ச்சிகளை ஆழ்வார் நான்காம் பாசுரத்தில் கூறுகின்றார்.

தவமுடைத்து இத் தரணி

பகைவருடைய வலிமையைத் தோற்பிக்கும் மலைபோன்ற தோள்களை உடைய விராதன் என்னும் அரக்கனை இராம இலக்குவர் கொன்றனர். தமிழ் முனிவனாகிய அகத்தியன் இராம பிரானுக்குக் கட்டமைந்த ஒரு வில்லைக் கொடுத்தான். மானின் பார்வையை வெல்லும்படியான பார்வை அழகுடையவளாய் உருமாறி வந்த சூர்ப்பணகையின் சொற்கேட்டுச் சீதை மேல் காதல் கொண்ட இராவணன் ஏவியதால் மாயமானாக வந்த மாரீசன் கொல்லப்பட்டான். இத்தகு சிறப்புக்களை உடைய இராமபிரானைத் தில்லைத் திருச்சித்திரகூடத்தில் கண்டு தலைவணங்கிக் கைகூப்பி வணங்கும் ஊற்றமுடையவர் இப்பூமியில் நடமாடுவதால் இப்பூமியானது பெரிய தவப்பேற்றினை உடையதாகும் என்பது ஆழ்வார் ஐந்தாம் பாசுரத்தில் கூறிய கருத்தாகும். இப்பாசுரத்தில் ஆரணிய காண்டத்தின் பெரும்பகுதி கூறப்பெற்றது.

இனிதமர்ந்த அம்மான்

'தனக்குச் செல்வமாகப் பொருந்திய சீதாபிராட்டியைப் பிரியப் பெற்று, வருத்தமெய்தி, பிராட்டிக்காக உயிர் கொடுத்த சடாயுவுக்கு வைகுந்தப் பிராப்தியைக் கொடுத்து, வாலியை அஞ்சி ஒளிந்து வாழ்ந்த சுக்ரீவனுடன் நட்புச் செய்து, அவன் வேண்டுதலால் வாலியைக் கொன்று, இலங்கையின் மன்னனாகிய இராவணன் செருக்கடங்கும்படி அனுமனால் இலங்கையை எரியூட்டுவித்த இராமபிரான் திருச்சித்திரகூடத்தில் இனிதமர்ந்த

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

அம்மானாக எழுந்தருளி யுள்ளான். அப்பெருமானுடைய திருவடிகளை வணங்குவாருடைய திருவடிகளையே வணங்குவேன் நான் என இவ்வாறாம் பாசுரத்தில் ஆரணிய காண்டத்தின் இறுதி, கிட்கிந்தா காண்டத்தின் முழுமை, சுந்தர காண்டத்தின் ஒரு பகுதி ஆகியவற்றைத் தொகுத்துக் கூறுகின்றார் ஆழ்வார்!

" தனமருவு வைதேகி பிரிய லுற்றுத்
தளர்வெய்திச் சடாயுவைவை குந்தத் தேற்றி
வனமருவு கவியரசன் காதல் கொண்டு
வாலியைக்கொன் றிலங்கைநக ரரக்கர் கோமான்
சினமடங்க மாருதியாற் சுடுவித் தானைத்
தில்லைநகர்த் திருச்சித்திர கூடந் தன்னுள்
இனிதமர்ந்த அம்மானை இராமன் றன்னை
ஏத்துவா ரிணையடியே ஏத்தி னேனே " (10-6)

அவதார நோக்கம் நிறைவேறிய நிலையில் திருச்சித்திரகூடத்தில் பெருமான் இனிதமர்ந்திருக்கின்றானாம். அப்பெருமானைக் கண்டு வணங்கி வருவாருடைய பாதங்களை வணங்கினாலே போதும் என்கிறார் ஆழ்வார். அடியார் பெருமையை அறிந்த ஆன்றோர் ஆழ்வாரின் இத்திருவாக்கின் பெருமையை நன்குணர்வர்.

அரசமர்ந்தான் அடிசூடும் அரசு

ஒலிக்கின்ற கடலின் வேந்தனாகிய வருணனை வாளி யொன்றால் வரவழைத்து, அவன் பணிய, அவ்வலை கடலை அணைகட்டிக் கரையேறி, அரக்கர்களுடன் அவர்க்கு அரசனான இராவணனையும் கொன்று, இலங்கை அரசை அவன் தம்பி வீடணனுக்குக் கொடுத்துச் சீதாபிராட்டியோடிணைந்த செல்வனாகிய இராமபிரான் தில்லைநகர்த் திருச்சித்திரகூடத்தில் எழுந்தருளியுள்ளான். அப்பெருமான் அடிசூடும் அரசை அல்லாமல் வேறு மற்ற அரசுகளை ஒரு பொருட்டாக எண்ணுவதில்லை என ஏழாம் பாசுரத்தில் இராவணவதம் கூறி முடிக்கின்றார்.

" குரைகடலை யடலம்பால் மறுக வெய்து
குலைகட்டி மறுகரையை அதனால் ஏறி
எரிநெடுவே லரக்கரொடும் இலங்கை வேந்தன்
இன்னுயிர்கொண் டவன்தம்பிக் கரசு மீந்து
திருமகளோ டினிதமர்ந்த செல்வன் தன்னைத்
தில்லைநகர்த் திருச்சித்ர கூடந் தன்னுள்
அரசமர்ந்தா னடிசூடு மரசை யல்லால்
அரசாக வெண்ணேன்மற் றரசு தானே! (10-7)

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

இப்பாசுரத்தின் இறுதி அடி ஆழ்வாரின் வாழ்க்கையைச் சுட்டுவதை, நுணுகிப்பார்ப்பவர் உணர்வர். அவன் அடிசூடும் அரசே - அரசு. மற்ற அரசையெல்லாம் அரசாக எண்ணேன் என்றது தாம் சிறிது காலம் ஆண்ட அரசினைக் குறிப்பதாகக் கொள்ளலாம்.

அமுதத்தை மதியோம்

'அழகிய மணிமாடங்களை உடைய அயோத்திக்குச் சென்று இராமபிரான் அரசேற்றுக்கொண்டான். பிறகு அங்குவந்த அகத்திய முனிவன் வாயிலாக இராவணாதியருடைய வரலாற்றைக் கேட்டறிந்தான். பிறர் சொற்கேட்டுக் காட்டிற்கு அனுப்பப் பெற்ற மிதிலைச் செல்வியாகிய சீதாபிராட்டி அங்கு வால்மீகியாசிரமத்தில் குழந்தையைப் பெற்றெடுத்தாள். பின்பு அம்முனிவன் அருளால் கிடைத்த மற்றொரு குழந்தையுடன் தன் குழந்தையையும் வளர்த்து வந்தாள். குச லவர்களாகிய அக்குழந்தைகள் தம் தந்தையின் சரிதத்தை வால்மீகியார் கற்பித்தபடி அயோத்தி அரசவைக்குச் சென்று கூறினர். இங்ஙனம் தன் சரிதத்தைத் தன் குழந்தைகள் மூலமாக இராமபிரான் கேட்டான். அத்தகு பெருமான் திருச்சித்திரகூடத்தில் எழுந்தருளியுள்ளான். அவன் சரிதையைக் கேட்கும் பேறு பெற்றால் இனிய அமுதத்தைக்கூட விரும்ப மாட்டோம் - இத்தகைய கருத்துக்களை ஆழ்வார் எட்டாம் பாசுரத்தில் இயம்புகின்றார்.

அயோத்தியில் சென்று இராமபிரான் அரசேற்றபின் நடந்த நிகழ்ச்சிகளைக் கூறும் உத்தர காண்டத்தின் செய்திகள் இவ்வெட்டாம் பாசுரத்தில் இடம் பெறுகின்றன.

உறுதுயரம் அடையோம்

பெருந்தவத்தினை உடைய சம்புகனை அவனிருக்குமிடம் சென்று கொன்று, சிறந்த மறையவனின் உயிரை மீட்டுக் கொடுத்து, அகத்திய முனிவன் கொடுத்த இரத்தின மாலையை அணிகலனாக ஏற்று அருளி - இலவணன் என்னும் அசுரனைத் தம்பி சத்துருக்கனால் கொல்வித்து, துர்வாசனுடைய சாபத்தால் திறல் விளங்கும் தம்பியாகிய இலக்குவனைத் துறந்து நின்ற பெருமான் திருச்சித்திரகூடத்தில் எழுந்தருளி உள்ளான். அப்பெருமானை மறவாத உள்ளமுடையோமாதலின் உறுதுயர மொன்றும் நாம் அடையோம் என ஒன்பதாம் பாசுரத்திலும் உத்தர காண்ட நிகழ்ச்சிகளைக் கூறுகின்றார் குலசேகரர்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

" செறிதவச்சம் புகன்றன்னைச் சென்று கொன்று
செழுமறையோன் உயிர்மீட்டுத் தவத்தோன் ஈந்த
நிறைமணிப்பூ ணணியுங்கொண்டு இலவணன் றன்னைத்
தம்பியால் வானேற்றி முனிவன் வேண்டத்
திறல்விளங்கும் இலக்குமனைப் பிரிந்தான் றன்னைத்
தில்லைநகர்த் திருச்சித்ர கூடந் தன்னுள்
உறைவானை மறவாத உள்ளந் தன்னை
உடையோம்மற் றுறுதுயர மடையோ மன்றே! " (10-9)

என்றும் நின்றான் அவன்-இவன்

தன்னடிச் சோதிக் கெழுந்தருளும் அந்த நாளில் அயோத்தியிலிருந்த அசையும் பொருள் அசையாப் பொருள் ஆகிய அனைத்தையும் பரமபதம் போகச் செய்தான்! வலிய அரவுகளுக்குப் பகையாகிய கருடனை ஊர்ந்து, அசுரர் பகை வென்று, தனது இலங்குமணித் திருக்கரங்கள் நான்கும் தோன்ற, விண்முழுதும் எதிர்வந்தழைக்கத் தன்னுடைய பரமபதத்தை மேவி ஆண்டு இனிது வீற்றிருந்த பெருமான், திருச்சித்திர கூடத்துள் என்றும் நமக்காக நின்றருளுபவனே என்பதனை உணர்ந்து எப்பொழுதும் - தொண்டர்களே - வணங்கி உய்வீர்களாக எனப் பத்தாம் பாசுரத்தில் பரமபதநாதனே நமது பக்கத்திலும் உளன் எனப் பகருகின்றார் ஆழ்வார்.

" அன்றுசரா சரங்களைவை குந்தத் தேற்றி
அடலரவப் பகையேறி யசுரர் தம்மை
வென்றுஇலங்கு மணிநெடுந்தோள் நான்கும் தோன்ற
விண்முழுது மெதிர்வரத்தன் தாம மேவிச்
சென்றினிது வீற்றிருந்த வம்மான் றன்னைத்
தில்லைநகர்த் திருச்சித்ர கூடந்தன்னுள்
என்றும்நின்றா னவனிவனென் றேத்தி நாளும்
இறைஞ்சுமினோ வெப்பொழுதும் தொண்டீர் நீரே! "(10-10)

'அவனே இவன்' என்னும் தெளிவு ஏற்படும்வரை நமக்கு அஞ்ஞானம் தொலைவதில்லை! அவனே இவன் எனும் ஞானம் கைவரப்பெற்றால் இந்த ஞாலமெல்லாம் நாரணன்தன் விளையாட்டென்பதை நன்குணரக் கூடும். எல்லாக் கலைகளும், எல்லாச் சாத்திரங்களும், எல்லா ஆப்தவாக்கியங்களும் இந்த உண்மையை எடுத்தியம்பவே செய்கின்றன. எனினும், வினைப்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

பந்தம் நம் கை கால்களில் பூட்டிய விலங்குகளாய்க் கனக்கும்போது உண்மையைத் தேடி உய்வதற்கு நேரமேது?

நல்லியலின் தமிழ்மாலை

திருச்சித்திரகூடத்தில் வலிமை வாய்ந்த அனுமனோடு எம்பெருமான் எழுந்தருளியுள்ளான். அப் பெருமான் அளவற்ற சிறப்புக்களை உடைய தயரதனுக்கு மகனாக அவதரித்தது முதலாகப் பரமபதம் எழுந்தருளியது முடிய, 'கொல்லியலும் படைத்தானையையும் கொற்ற ஒள் வாளையும் உடைய கோழியர்கோன் குடைக் குலசேகரனாகிய நான் செய்த நல்லியலின் தமிழ்மாலையாகிய இவ்விராமாயணச் சுருக்கமாயமைந்த பத்துப் பாசுரங்களிலும் வல்லவர்கள் நாரணனுடைய நற்சீரடி நண்ணுவர்' என ஆழ்வார் தமது பதினோராவது பாசுரத்தைத் திருக்கடைக் காப்பாக அருளி, இதனாலாம் உறுதிப் பயனையும் கூறியருள்கின்றார்.

மகா காவியமாகிய இராமகாதையை ஒருவர் முழுமையாகக் கற்கக் காலம் பெரிதும் வேண்டும். அங்ஙனம் அரிதில் முயன்று கற்றுப் பெறுகின்ற பயனை, இப்பாசுரங்களைப் பாராயணம் செய்வதன் மூலமே பெறலாம்.

ஆழ்வார்களின் வாக்குகள் அனைத்தும் அவர்களை ஆட்கொண்ட அருளாளனின் வாக்குகளே! இவ்வுறுதி நமக்கு ஏற்படுமானால் 'எங்கெழிலென் ஞாயிறு எமக்கு' என இறுமாந்திருக்கலாம்.



CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

திருமங்கையாழ்வார்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

திருமங்கையாழ்வார்

பொருளடக்கம்

1. திருமங்கையாழ்வார் வரலாறு - 1

2. தனித்து நிற்கும் தகையாளர் - 24

3. ஆழ்வாரும் அகத்திணையும் - 52

4. பேருரையாளர்கள் கண்ட நயவுரைகள் - 63

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

திருமங்கையாழ்வார்

1. திருமங்கையாழ்வார் வரலாறு

பொன் கொழித்து மணி வரன்றும் பொன்னி நதி பாயும் சோழ நாட்டினை, ஆளும் வசதிக்காகப் பல உட்பிரிவுகளாகப் பிரித்து அன்றைய சோழப் பேரரசர்கள் ஆண்டார்கள். அப்படிச் சோழ வளநாட்டின் உட்பிரிவுகளில் ஒன்றாக இருந்ததுதான் திருவாலி நாடு. திருமங்கை என்பது அதன் தலைநகர். அந்த நகரின் பெயரே தம் பெயராகக் கொண்டவர் திருமங்கையாழ்வார்.

திருவாலி நாடு வடிவில் சிறிதாயிருந்தாலும் வளத்திற் பெரியதாய் இருந்தது. அந்த ஆலி நாட்டில் ஒரு சிற்றூருக்குத் திருக்குறையலூர் எனும் திருப்பெயர் வாய்த்திருந்தது. திருமகளின் வளம் குறையாமல் எஞ்ஞான்றும் செல்வச் செழிப்புத் ததும்பியிருந்ததால், திருமகள் என்றும் குறைவின்றி வாழ்ந்திருக்கும் ஊர் எனும் பொருளில் திருக்குறையலூர் என்னும் (திரு+குறை+அல்+ஊர்) பெயருடன் அவ்வூர் திகழ்ந்தது.

அத்திருவூரில் நான்காம் வருணம் எனக் கருதப்பட்ட வகுப்பில் கள்ளர்குடியில், சோழ மன்னனுக்குச் சேனைத் தலைவராயிருந்த ஆலி நாடர் என்பார்க்கும் வல்லித்திரு எனும் மங்கைநல்லாட்கும் மகவாகப் பிறந்தார் திருமங்கையாழ்வார்.

கலி பிறந்து முந்நூற்றுத் தொண்ணூற்றெட்டாவது ஆண்டில், கார்த்திகைத் திங்கள், கார்த்திகை நட்சத்திரத்தில், திருமாலின் சார்ங்கம் என்னும் வில்லின் அம்சமாகத் திருமங்கையாழ்வார் அவதரித்தார் என்று குருபரம்பரை கூறும்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

இவர் திருஅவதரித்த போதே நீலமேக வண்ணனான கண்ணன் எம்பெருமான் போன்று, கருநிறமுடையவராய் இருந்ததனால், இவருக்கு இவர் தந்தை 'நீலன்' என்று பெயரிட்டார்.

பிறக்கும்போதே குழந்தை 'திண்ணென்றிருந்ததனால், கண்ணப்ப நாயனாருக்கு அவர் தந்தை 'திண்ணன்' என்று பெயரிட்டதை இங்கு நினைவுகூரலாம்.

வளர்ந்து பிறகு, தமது குடிவழக்கத்திற்கேற்ப ஆயுதக் கல்விப் பயிற்சி பெற்று, அதில் தலைசிறந்து விளங்கினார்.

சோழ மன்னரிடம் தந்தையைப் போலவே சேனைத் தலைவர் பதவி பெற்றார். பல போர்களில் வெற்றிபெற்று எதிரிகளுக்கு எமனாய் விளங்கியதால், 'பரகாலன்' எனும் பெயரைப் பெற்றார்.

இவருடைய வீரத்தைப் போற்றிய சோழ மன்னன், தன் குறுநிலமாகிய திருமங்கை நாட்டிற்கு மன்னன் ஆக்கினான். தனக்குக் கீழே சிற்றரசனாய் இருந்து திருவாலி நாட்டை ஆண்டுவருமாறு முடிசூட்டினான். அதனால், 'திருமங்கை மன்னன்' என்னும் பெயர் பெற்றார்.

இயல், இசை, நாடகம் எனும் முத்தமிழ்த் துறையில் முறை போகிய உத்தமக் கவியாய் ஆசு, மதுரம், சித்திரம், வித்தாரம் எனும் நாலுகவியிலும் சிறந்து விளங்கி, நால்வகைப் பாக்களிலும் வல்லவராய் விளங்கினார், ஆதலால் 'நாலுகவிப் பெருமாள்' எனும் நாமமும் இவருக்கு வாய்த்தது.

இவர் திருவவதரித்த பெருமையை, வடிவழகிய நம்பிதாசர்,

"அருந்தமிழும் நான்மறையும் அந்தணரும் வீறுபெறத்
திருந்து நெறித் தொண்டர்அணி தேசம் எங்கும் சிறந்தோங்க
விருந்து அருந்தி விதுரனுடை வில்முறிப் பித்தவர் அருளால்
இருங் குறையலூர் நகரில் மண் முழுதும் ஈடேற,
ஆத்திபிறை அரவணிவார் அகம்படிமைக் குடியினிடைக்
கார்த்திகைக் கார்த்திகை தன்னில் கருணையிளம் கொழுந்தென்னப்
பூத்த உந்தி எழில்மாயன் பொன்னடியை எவ்வுலகும்
ஏத்த வைத்த பரகாலன் இருநிலத்தில் தோன்றினான்"

என்று போற்றுவார்.

அறம், பொருள், இன்பம், வீடு என்னும் புருடார்த்தங்கள் நான்கனுள் இன்பத்துறையே இவருக்கு மிக இனிக்கும் துறையாய் இலங்கியது.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

" உற்ற பெருமா மாயை உடையவனே ஊட்டுதலால்
சிற்றின்பப் பெருங்கடலில் செறிந்து ஆழம் சோதித்தார் "

என்று பாடுவார் வடிவழகிய தாசர்.

இவர் இவ்வாறிருக்க, இவர் வாழ்வில் பெருந்திருப்பத்தை யுண்டாக்கும் நிகழ்வொன்று நிகழ்ந்தது. திருவெள்ளக்குளம் (இன்றைய அண்ணன் கோயில்) என்னும் திருப்பதியில் அழகியதொரு தாமரைக்குளம் இருந்தது. அங்குத் தேவமாதர் பலர் வந்து நீர்விளையாடி மகிழ்ந்து செல்வது; வழக்கமாயிருந்தது.

சங்க காலத்திலேயே தேவமகளிர் இயற்கையெழில் கொஞ்சும் தமிழகப் பகுதிகளுக்கு வந்து, சுனைகளிலும் அருவிகளிலும் நீராடி மகிழ்ந்து சென்றதாகச் சங்கப் பாடல்கள் கூறுகின்றன.

" சூரல் பம்பிய சிறுகான் யாறே
சூரர மகளிர் ஆர் அணங்கினரே "
" எக்கர் நண்ணிய எம்ஊர் வியன்துறை
நேர் இறை முன்கை பற்றிச்
சூர்அர மகளிரோடு உற்ற சூளே " (குறுந் : 53)
(அரமகளிர் - தேவமகளிர்).

நீர்த்துறையில் தலைவன் தலைவியின் முன்கை பற்றி, அஞ்சத்தக்க அரமகளிரைச் சுட்டிச் சூளுரைப்பதுண்டு. சூளுரை தவறினால், அது செய்தாரைத் தெய்வம் வருத்தும் என்பது இக் குறுந்தொகை யடிகளின் பொருள்.

'விண்ணைத் தொடும் உயர்ந்த மலையிடத்தில் அரமகளிர் பந்தடித்து விளையாடிய இளைப்பு நீங்கக் குளிர்ந்த, தாழ்ந்த அருவியில் நீராடுவர்' (கலி 40 : 22-25). தமிழகத்துக்கும் தேவ மாதர்க்கும் உள்ள தொடர்பை இவைபோன்ற அடிகள் விளக்கி நிற்கும்.

இந்த மரபிற்கேற்பத் திருவெள்ளக்குளத்தின் தாமரைக் குளத்தில், 'திருமாமகள்' என்னும் பெயரையுடைய தேவமாது ஒருத்தி பிற தேவமாதர்களுடன் அன்று அங்கு வந்திருந்தாள். அவளுக்கு மானுட மகளிர் வேடந்தரிக்க மனத்தில் ஒரு விருப்பம் எழுந்தது. மானுட உருவெடுத்து அருகில் உள்ள மலர் வனத்தில் மலர் கொய்து கொண்டிருந்தாள். இவள் மானுட மகள் என்று கருதி, அவளை அழையாமல் மற்றைய தேவமகளிர் எல்லோரும் தேவஉலகு சென்றுவிட்டனர்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

தனித்து விடப்பட்ட அவளை, வைணவ மருத்துவர் ஒருவர் கண்டார். குமுத மலர் கொய்துகொண்டிருந்த அவளைக் கூட்டி வந்து, குழந்தையில்லாக் குறைதீர்க்க வந்தவள் என்று தம் மனையாட்டியிடம் தந்து, குமுதவல்லி என்று பெயரிட்டு வளர்த்து வந்தனர்.

முற்பிறப்பில் சுமங்கலை என்னும் பெயருடைய தேவப்பெண், முனிவர் ஒருவரின் விகாரமான தோற்றத்தைக் கண்டு நகைத்தாள். வெகுண்ட அம்முனிவர் அவளை மானுடப் பெண் ஆகுமாறு சபித்தார்.

'திருமாலின் சார்ங்க வில்லின் அம்சமாய்ப் பிறந்துள்ள பரகாலர் என்பவர், போர்க்கள வேள்வி செய்வதிலேயே மனமுடையவராய்ச் சோழ நாட்டில் உள்ளார். அவருக்கு மனைவியாகி, அவரை நல்லடியாராகத் திருத்திப் பணிகொண்ட பின் மீண்டும் நீ தேவநாட்டை யடையலாம்' என்று அம் முனிவர் சாபத்திற்குக் கழுவாயும் நல்கினார்.

அந்தச் சுமங்கலைதான், குமுதவல்லியாய், பரகாலர் வாழ்வில் நுழைகிறாள் என்னும் பழம்பிறப்புக்கதை ஒன்றும் இங்கு உண்டு.

இன்பத் துறையில் எளியராயிருந்த பரகாலர், குமுதவல்லியின் பேரழகைக் கேள்வியுற்று அவளையடைய விரும்பினார். குமுதவல்லியோ, உடலில் சங்கு சங்கரக் குறிபொறித்தல், திருமண் காப்பணிதல், திருவாராதனம் முதலிய வைணவ அடையாளங்கள் தாங்கியவரையே மணப்பேன் என்று கூறிவிட்டாள்.

பரகாலர் சங்குசக்கரம் பொறித்தல், திருமண் இடுதல் முதலிய அவள் வேண்டுகோளை நிறைவேற்றியவாறு சென்று, தம்மை உடனே திருமணம் செய்துகொள்ளுமாறு வேண்டினார்.

அவளோ, இன்னுமொரு நிபந்தனையுண்டு என்றாள். 'சொல்க. உடனே நிறைவேற்றுவேன்' என்றார் பரகாலர்.

'உடனே நிறைவேற்றுவது அன்று இது. ஓராண்டுக் காலம் நிறைவேற்ற வேண்டியது!' என்றாள் குமுதவல்லி.

'எதுவாயினும் நிறைவேற்றுவேன். ஆணையிடு' என்றார், பலருக்கு ஆணையிட்டுப் பழக்கப்பட்ட பரகாலர்.

'நாள்தோறும் 1008 பாகவதர்கட்கு ஓராண்டுக்காலம் அன்னமிட்டு, அடியார்களாகிய அவர்கள் உண்டு மிஞ்சியதை (சேடத்தை) யுண்டு, பாததீர்த்தத்தைப் புசிக்க வேண்டும்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

இதனை ஏற்றுச் சத்தியம் செய்தால் மணக்க இசைகிறேன்' என்றாள் குமுதவல்லி.

அவள் அழகின் ஆற்றலால், அதனால் அவருக்கு எழுந்த ஆராத வேட்கையால், 'அப்படியே'! என்று சத்தியம் உரைத்து, அவளைக் கைப்பிடித்துப் புதிய வாழ்வைத் துவங்கினார் பரகாலர்.

பாகவத உத்தமர்களுக்கு உணவளிப்பதற்காகத் தம் செல்வமனைத்தையும் செலவிட்டுத் தீர்த்தார். அது மட்டுமன்றி மன்னனுக்குச் செலுத்த வேண்டிய திறைப் பொருளையும் இதன் பொருட்டுச் செலவழித்துத் தீர்த்தார்.

மணிவாசகர் குதிரை வாங்கக் கொண்டுசென்ற பொருளை ஆலயம் அமைக்கவும், அடியாருக்கு அன்னமிடவும் அழித்ததை நினைவூட்டும் செயல் இது.

" காற்றில் ஏறி அவ் விண்ணையும் சாடுவோம்
காதற் பெண்கள் கடைக்கண் பணியிலே "

என்னும் மொழி பரகாலர் வாழ்வில் முழுக்க முழுக்க உண்மை யாயிற்று.

நாள்தோறும் 1008 அடியார்களுக்குச் சிறந்த விருந்து படைக்கப் பெரும் பொருள் செலவாயிற்று. அதனால் மன்னனுக்குச் செலுத்த வேண்டிய திறைப் பொருளைச் செலுத்த இயலாமற்போயிற்று. வரி தண்டுவாரிடம் இன்று, நாளை யென்று தவணை சொல்லி வந்தார் பரகாலர்.

பரகாலரைப் பிடித்துவருமாறு அரசன் ஆணை வந்தது. 'ஆடல்மா' என்னும் தம் அருமைக் குதிரைமேல் ஏறி, பிடிக்க வந்த அரசுப் படையைத் தோற்றோட வைத்தார் பரகாலர்.

பெரும்படை ஒன்றை மீண்டும் அனுப்பினான் வேந்தன். கடலைக் கடைந்த மந்தர மலைபோல், மன்னன் படைக் கடலைக் கலக்கினார் பரகாலர்.

இவர் வீரத்தைப் புகழ்ந்து, அருகழைத்த மன்னன் தன் படைகளைச் சுற்றி வளைத்து வஞ்சமாகச் சிறைப்படுத்தி, 'எனக்குரிய திறைப்பணத்தைமட்டும் தந்துவிட்டு விடுதலை பெற்றுச் செல்' எனக் கூறிச் சென்றுவிட்டான்.

அமைச்சன் இவரை ஒரு கோவிலில் சிறை வைத்தான். இவர் அங்கு மூன்று நாட்கள் உணவுண்ணாமல் வாடிக்கிடந்தார்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

இரங்கிய இறைவன், 'காஞ்சிக்கு வந்தால் வேண்டும் பொருள் தருகிறோம்' என்று இவர் கனவில் வந்து கூறி மறைந்தருளினான்.

காஞ்சி சென்ற இவருக்கு வேகவதியாற்றின் கரையில் நிதியிருக்கும் இடத்தை, மீண்டும் கனவில் தோன்றிக் காட்டியருளினான் இறைவன்.

புதையலில் கிடைத்த பெருநிதியில், கப்பப் பணத்தைச் செலுத்திவிட்டு, மீந்தவற்றை அடியார்களுக்கு அன்னமிட வைத்துக் கொண்டார்.



குமுதவல்லி - திருமங்கை ஆழ்வார்

பரகாலர் கனவில் புதையல் இருக்குமிடத்தை இறைவன் காட்ட, புதையலில் கிடைத்த நிதியில் பரகாலர் கப்பம் முழுதும் செலுத்திவிட்ட செய்தியை அமைச்சன் அரசனுக்கு அறிவித்தான்.

வியந்து போன வேந்தன், பரகாலரை வருவித்து, 'நிறை தந்த நித் முழுவதையும் இறையடியார்க்கே திருப்பித் தருகிறேன். அன்னமிடும் பணி தொடரட்டும்' என்று அளித்த நிதி முழுவதையும் அவரிடமே திருப்பியளித்துப் பிழை பொறுக்குமாறு பணிந்தான்.

அரசன் அளித்த பணமும், ஆண்டவன் அளித்த பணமும் அடியார் கூட்ட மிகுதியால் சிலநாட்களில் தீர்ந்து போயின.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

மேலும் மேலும் அடியார்க்கு அமுது படைக்கும் திருப்பணி தொடரவேண்டும் என்பது பரகாலர் திருவுள்ளம். ஈத்துவக்கும் பேரின்பத்தை அவரால் இழக்க இயலவில்லை.

ஈகைக்குப் பொருள் வேண்டும். 'பொருள் இல்லார்க்கு இவ்வுலகம் இல்லை' 'பொருளான் ஆம் எல்லாம்'. அந்தப் பொருள் ஈயாத செல்வரிடம் குவிந்து கிடக்கிறது. அவர்களோ யார்க்கும் கொடுப்பதில்லை. கெஞ்சினாலும் தருவதில்லை.

" ஈர்ங்கை விதிரார் கயவர்; கொடிறுடைக்கும்
கூன் கையர் அல்லாதவர்க்கு " (திருக்குறள் 1077)

வன்முறையால் தாக்குவார்க்கு அல்லாமல் இன்முறையால் கேட்பார்க்கு ஈரக் கைகளைக்கூடக் கயவர்கள் வீசார் என்பது வள்ளுவர் வாசகம்.

எனவே, தீய வழிகளில் பணத்தைக் குவித்து வைத்துக் கொண்டு எள்முனையளவும் ஈய மனம் இல்லாதவரிடம் உள்ள பணத்தை வலிய எடுத்துக் கொடுத்தலும் ஓர் அறமாகும் என்பது பரகாலரின் திருவுள்ளம் ஆயிற்று.

இவ்வுலகில் நற்செயல்புரிய இரண்டு வழிகள் உள்ளன. நன்னெறியிலேயே சென்று உலகுக்கு நற்பயன் விளைவிப்பது ஒருவழி. தீ நெறியிற் சென்றாவது உலகுக்கு நற்பயன் விளைவிப்பதும் மற்றொருவழி.

பரகாலர் இரண்டாம் நெறியைத் தேர்ந்தெடுத்தார். 'உலகுக்கு நற்பயன் விளைவிக்கும் செயலைச் செய்யாமல் நிறுத்த மாட்டேன் - நெறி எதுவாயினும்' என்று துணிந்தார்.

" பொய்ம்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்கும் எனின் "

என்ற வள்ளுவர் வாசகத்தின் உள்ளார்ந்த பொருளும் இதுவாதலை ஆழ்ந்து நோக்குங்கால் அறிதலாகும். ஆகவே, 'வழிப்பறி செய்தாவது அன்னமிடலைத் தொடர்வேன்' என்று கொடிய உலோபர், தீயோர் ஆகியோரின் செல்வங்களை வலிதிற் கவர்ந்தார்.

அறஞ்செய்யாது பொருளை ஈட்டிக் குவித்து வைத்து வீணே இறக்கின்றவர்கள், பொருளால் விளைகிற இம்மை, மறுமையெனும் இருமைப் பயன்களையும் இழந்தவர்கள் ஆகின்றனர்.

செல்வத்தைச் சேர்ப்போர், அதனை நுகர்வோர் இடையே தன்னலங் கருதாத ஓர் இடை உதவியாளராய்ச் சேவைபுரியப்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

பரகாலர் முடிவெடுத்தார். அறியாத தன் நாட்டு மக்களின் செல்வத்தை நல்வழிப்படுத்தி அவருக்கு நலம் செயல் அரசனின் கடமை என்று அவர் கருதியிருக்கக்கூடும்.

ஈயாத செல்வரிடம் கொள்ளை நிகழ்த்தினார்; வழிப்பறி செய்தார். இந்த வழியை அவர் தேர்ந்தபின், அதை முட்டின்றி நிறைவேற்ற, கொள்ளைத் தொழிலில் கைதேர்ந்த நால்வரைத் தமக்கு உதவியாளராகத் தேர்ந்தெடுத்துக்கொண்டார்.

அந்த நால்வரில் ஒருவன் நீர் மேல் நடப்பான். இவன் நீர் மேல் நடக்கும் வித்தை கற்றவன். கொள்ளை நடத்தத் தேர்வு செய்யப்பட்ட இடம் ஆறு, குளம், அகழி முதலிய நீர் நிலைகளால் சூழப்பெற்றிருப்பினும் நீர் மேல் நடப்பான் உதவி கொண்டு அங்கெல்லாம் கொள்ளை நிகழ்த்தினார் பரகாலர்.

இரண்டாமவன் பெயர் நிழலில் ஒதுங்குவான். இவன் ஒருவருடைய நிழலிலேயே அவருக்குத் தெரியாமல் ஒடுங்கிய வாறே சென்று, அவர் இருக்குமிடத்தையடையும் ஆற்றல் வாய்ந்தவன். இவனால், எத்தகைய கட்டுக்காவல் உடைய இடங்களையும் உரியவர் நிழலைப் பற்றிச் சென்று உள் நுழைந்து பொருள் பறித்துவர ஆழ்வார்க்கு இயலுவதாயிற்று.

மூன்றாமவன் தாழுதுவான். இவன் எத்தகைய தாழ்ப் பாளையும் ஊதியே திறக்கவல்ல வித்தையைக் கற்றவன். ஆகவே தாழிட்ட இருப்பிடங்களினுள் நுழைய இவன் உதவி பெரிதும் பயன்பட்டது.

நான்காமவன் தோலா வழக்கன். இவன் வழிப்பறி, கொள்ளை தொடர்பாக எத்தகைய வழக்குகள் வரினும் தன் வாதத் திறமையால் வெற்றியே பெறுபவன். ஆகவே, இந்த நால்வர் துணையுடன் பொருள்தேடி, அடியார் ஆராதனையை வெற்றிகரமாகச் செய்து வந்தார் பரகாலர்.

தமக்கென வாழும் நிலையை மறந்தார். என்ன நேரினும் பாகவதர்க்காகவே வாழ்வது என்ற இவர் திடசித்தத்தை யுணர்ந்த இறைவன் இத்தகையோரைக் காக்க எதிர்சூழல் புக்குத் திரியும் வழக்கமுடையவன் ஆதலின் - பிராட்டியும் தானுமாய் மணக் கோலம் பூண்டு, வழிபறிக்க இவர் ஒளிந்திருக்கும் காட்டுவழிப் பாதையில் ஆடையணியலங்காரக் கோலத்தில் வருகை புரிந்தான்.

திருவாலித் திருநகருக்கு அருகில், திருமணங் கொல்லையில், அரச மரத்தின் கீழே பதுங்கியிருந்த பரகாலர், தெய்வத் தம்பதியரின் விலை மதிப்பற்ற ஆடை அணிகலன்களை யெல்லாம் பறித்தார்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

மணமகன் காலில் இருந்த கணையாழி மோதிரத்தை மட்டும் கழற்ற இயலவில்லை. அதையும் பல்லாற் கடித்து இழுத்துக் கழற்ற முயன்றார். அம்மிடுக்கை நோக்கிய எம்பெருமான், 'நீ என்ன பெரிய கலியனோ?' (கலியன் - மிடுக்கன்) என்றார். அப்பொழுதிலிருந்து கலியன் என்னும் பெயரும் இவருக்கு உரியது ஆயிற்று.

அவ்வாறு அபகரித்த பொருள்களையெல்லாம் மூட்டையாகக் கட்டிப் பரகாலர் எடுக்க முயன்றார். மூட்டை அசையவில்லை.

பெருமிடுக்கரான அவருக்கு இது பெருவியப்புக்கு உரியதாயிற்று! 'இதைத் தூக்கிவிடுவாயோ?' என்ற பொருளில்தான் அந்த மணமகன் 'நீ பெருமிடுக்கனோ?' (கலியனோ) என்று கேட்டான்' என்பது பரகாலருக்கு அப்பொழுது புரிந்தது.

'இந்த மூட்டையை அசைக்க முடியாதவாறு என்ன மந்திரம் பண்ணினாய்? அதனை எனக்குச் சொல்லு!' என்று பரகாலர் தம்முடைய கையில் பிடித்த வாளையசைத்து மிரட்டும் பாணியில் இறைவனை நோக்கி வினாவினார். மணமகன் வடிவில் வந்திருந்த அழகிய மணவாளர் வாய் மலர்ந்தார். 'அந்த மந்திரத்தை உமக்குச் சொல்லுகிறோம். வாரும் அருகே!' என்றழைத்தார்.

வேதம் அனைத்திற்கும் வித்தான தாய், பிறவிப் பிணிகெடுக்கும் சஞ்சீவி மூலிகையாய், பரமபத வாயிலுக்குப் படிக்கட்டாய் அமைந்துள்ள எட்டெழுத்து மந்திரத்தை, வைணவ சமயத்தின் உயிர் நிலைச் சொற்றொடரை, பதரிகாசிரமத்தில் தமக்குத் தாமே நர நாராயணராய் உபதேசித்துக் கொண்ட நாராயண மந்திரத்தை ஆழ்வார் குறைதீர, அப்புண்ணியரின் செவியார அழகிய மணவாளர் ஓதியருளினார் - ஓம் நமோ நாராயண என்று.

ஓதியவுடன், கருமுகில் தாமரைக்காடு பூத்ததென, இருசுடர் இருபுறத்தேந்தி, ஏடவிழ் திருவொடும் பொலிய ஓர் செம்பொற் குன்றின்மேல் வருவபோல் கருடன்மேல் தோன்றினான் அந்த எட்டெழுத்து மந்திரத்திற்குரிய மூலமுதற் பொருளான பரமபத நாதன்.

இவ்வாறு வலிய வல்வழக்கிட்டு, மந்திர உபதேசம் பெற்றுக் கொண்ட பரகாலரின் அருமையைத்தான்,

" மாயோனை வாள் வலியால்
மந்திரங் கொள்வன் கலியன் "

என்று பாடி மகிழ்ந்தார் எம்பெருமானார். 'அவனோ பெருமாயன், அவனிடமிருந்து என்ன மாயஞ்செய்து, இவர் பிடுங்கினார்! ' என்று வியக்கிறார் உடையவர்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

இப்படி, எம்பெருமானிடத்தே திருமந்திர உபதேசம் பெற்றதாலும், அவனுடைய தெய்வத்திருவைக் கண்ணாரக் கண்டு சேவித்த களிப்பாலும் எம்பெருமானின் தேனேமலரும் திருப்பாதத்திருந்த கணையாழியைக் கழற்ற முயலுகையில் அந்தச் செந்தாமரைப் போதில் வாய் வைத்த திருவடி சம்பந்தத்தாலும், கலியனாயிருந்த பரகாலர் அந்தக் கணத்தில் தொடங்கி ஆழ்வாராய்ப் பரிணமித்தார்.

அவரிடத்திருந்த அஞ்ஞான இருள் அந்த விநாடி முதல் அகன்று ஒடிற்று. மயர்வற மதிநலம் உடையவராய் மலர்ந்தார். எம்பெருமானுடைய குண அழகையும் சொரூப அழகையும் பரிபூரணராய் நுகர்ந்து திளைத்தார்.

அந்தப் பரவசப் பரமானந்தப் பெருநிலையின் போக்கு வீடாக அவர் திருவாயிலிருந்து வெள்ளமெனப் பிரவாகம் எடுத்தன தீந்தமிழ்த் தெய்வப் பாசுரங்கள்.

அந்தத் தீந்தமிழ்ப் பிரவாகம்

" வாடினேன்; வாடி வருந்தினேன் மனத்தால்;
பெருந்துயர் இடும்பையில் பிறந்து
கூடினேன்; கூடி இளையவர் தம்மோடு,
அவர்தரும் கலவியே கருதி
ஓடினேன்; ஓடி உய்வதோர் பொருளால்,
உணர்வெனும் பெரும்பதம் தெரிந்து
நாடினேன்; நாடி நான் கண்டுகொண்டேன்
நாராயணா என்னும் நாமம்"

என்னும் திருப்பாசுரம் தொடக்கமாய்ப் புறப்பட்டது. அந்தப் பக்திப் பெருவெள்ளம் வடக்கே திருப்பதி வரை சென்று அலையடித்தது. தென்னாடெல்லாம் தீந்தமிழால் நனைந்தது.

'ஓம் நமோ நாராயணாய' என்னும் இந்த எட்டெழுத்து மந்திரத்துக்குள்ளே வாழும் பரமபதநாதனை, இவ்வுலகில் அவன் குடிகொண்டு வாழும் திருப்பதிகளுக்கெல்லாம் சென்று அப் பெருமானைச் சேவித்து, அத்தரிசனத்தின் போக்குவீடாயத் திருப்பாசுரங்கள் பாடி மகிழ்வதையே மீந்த தம் வாழ்நாட் பணியாய் மேற்கொண்டார் இந்த ஆழ்வார்.

அர்ச்சாவதார மூர்த்திகளின் வாழ் இடங்களாகிய திவ்விய தேசங்களையும், அவன்தான் அமர்வதற்காகப் படைத்துள்ள இயற்கைப் பேரழகுகளையும், அர்ச்சையில் அமர்ந்துள்ள

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

திருவிக்கிரகப் பெருமான்களின் குணஅழகையும், உருவ அழகினையும், சௌலப்பிய நேர்த்தியையும் 'உண்டியே, உடையே என்று ஓடும்' இவ்வையக மாந்தர்க்கு உணர்த்தி அவர்கள் இறைவனையடையும் திருநெறிநோக்கிப் பயணப் படுத்துவதையே தம் வாழ்நாள் குறிக்கோளாக வடிவமைத்துக் கொண்டார் திருமங்கையாழ்வார்.

அதனால், இவரைப்போல் திவ்விய தேசப் பெருமான்களிடம் ஆழங்காற்பட்டு, அதிகமான பாசுரங்களைப் பாடிய ஆழ்வார்கள் வேறு எவரும் இலர் எனும் பெரும்புகழ் இவரை வந்தடைந்தது. பாரததேசத்திலுள்ள அர்ச்சாவதாரத் தலங்களுக்கெல்லாம் வடக்கு எல்லையில் உள்ளதும், மானசரோவரம் எனும் கடல் போன்ற ஏரிக்கரையில் உள்ளதும், பரிமளவல்லி சமேதனாய், பரமபுருடன் என்னும் திருநாமத்தோடு அனந்த சயனனாய், எம்பெருமான் எழுந்தருளியிருக்கும் திருப்பிரிதியில் ஆழ்வார் தம் திருத்தல யாத்திரையைத் தொடங்கினார்.

பாண்டி நாட்டிலுள்ள திருக்கோட்டியூர்த் திவ்விய தேசப் பாசுரங்களோடு ஆழ்வார், தம் திவ்வியதேசத் திருத்தல யாத்திரையோடு நிறைவு செய்திருக்கிறார்.

திருமங்கையாழ்வார் இவ்வாறு இறைவனால் மயர்வற மதிநலம் அருளப் பெற்றபின், திவ்விய தேசங்கள் தோறும் சென்று எம்பெருமானை அநுபவித்து வருகையில், சோழநாட்டுத் திருப்பதிகளில் ஒன்றான சீர்காழிக்கு எழுந்தருளியபோது, இவர்தம் சீடர்கள் 'நாலு கவிப் பெருமாள் வந்தார்; அருள்மாரி வந்தார்; அரட்டமுக்கி வந்தார்; அடையார் சீயம் வந்தார்; ஆலிநாடர் வந்தார்; மங்கை வேந்தர் வந்தார்; பரகாலர் வந்தார்' என்று இவருக்குரிய விருதுப் பெயர்களை ஓதியவாறு சென்றார்கள்.

சீர்காழியில் வதிந்த ஞானசம்பந்தரை அழைத்துவரச் செய்து, அவரோடு உரையாடி மகிழ்ந்தார் என்றும், சம்பந்தர் 'உமக்கு இவ்விருதுகள் எல்லாம் தகும்' என்று பாராட்டி, வேல் ஒன்றைப் பரிசாகத் தந்தார் என்றும் குரும்பரம்பரைச் செய்திகள் கூறுகின்றன.

இச் செய்திகளால் திருமங்கையாழ்வார், திருஞான சம்பந்தருக்குச் சமகாலத்தவர் என்பது உறுதியாகின்றது.

ஆனால், இவ்வரலாறு பெரியபுராணத்தில் வரும் ஞான சம்பந்தர் புராணத்தில் இடம் பெறவில்லை.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

இவ்வாறு திவ்வியதேச யாத்திரையில் மன மகிழ்வு கொண்டிருந்த ஆழ்வாருக்குக் கோவில்களில் எல்லாம் பெரிய கோவிலாகிய திருவரங்கப் பெருங்கோயிலில் திவ்விய வாசம் புரியும் திருவரங்கச் செல்வனுக்குத் திருப்பணிகள் புரிய வேண்டுமென்ற வேட்கை மீதூர்ந்தது. அந்த வேட்கையை நிறைவேற்றினார். கண்டார் வியக்கும் அத்திருப்பணிகளை இன்றும் கிருவரங்கத்தில் நாம் காணலாம்.

திருவரங்கக் கோயிலுக்கு ஆழ்வார் புரிந்துள்ள திருப்பணிகள் ஒப்புயர்வற்றவை. உலகெல்லாம் போற்றத்தக்கவை: 'கோயில் ஒழுகு' என்னும் நூலில் ஆழ்வார் புரிந்தவையாகப் பதினொரு பணிகள் குறிப்பிடப்பட்டுள்ளன.

1. இராச மகேந்திரன் திருவீதியில் அத்யயன உற்வசத்திற்காக ஒரு நூற்றுக்கால் மண்டபம்.
2. குலசேகரன் திருவீதியினுடைய திருமதிலும் அங்குள்ள தெற்குக் கோபுரமும் வடக்குக் கோபுரமும்.
3. குலசேகரன் திருவீதியின் தென்மேற்கு மூலையில் ஒரு மண்டபமும், உலாவர ஒரு நடைபாதையும்.
4. தென்கிழக்கில் மடைப்பள்ளி.
5. நான்காம் திருவீதியில் மதில் - தெற்கு வடக்குக் கோபுரங்களுடன்.
6. நான்காம் திருச்சுற்றில் தென்மேற்கு மூலையில் கருவூலம் எனப்படும் சரக்கறை.
7. நான்காம் திருச்சுற்றில் வடக்குக் கோபுரத்தில் கோயில் கொண்டுள்ள அழகியசிங்க நயினாருக்குக் கோவிலும் விமானமும்.
8. நான்காம் திருச்சுற்றில் வடக்குப் பகுதியில் தானியக் களஞ்சியம்.
9. நான்காம் திருச்சுற்று - தெற்கு - வடக்காக நீண்ட உலாப்பாதை.
10. சந்திர புட்கரணிக் குளத்திலிருந்து வெளியழகியான் (திறந்த வெளிமுற்றம் வரை) ஒரு பெரிய பாதை (திருநடை மாளிகை).

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

11. கொள்ளிடக் கரையில் 'பாடிய வாயன் துறை' என்ற படித்துறையையும் அருகே ஒரு கோயிலையும் அமைத்தார் ஆழ்வார்... உள்ளே தசாவதாரச் சிலைகளையும் நிறுவியுள்ளார். இத்திருப்பணி நிகழும் போதே பெரிய திருமொழியில் இடம் பெற்றுள்ள தசாவதாரச் சிறப்புப் பதிகம் (11.4) பாடப் பெற்றிருக்க வேண்டும் என்பது அறிஞர்கள் கருத்து.

நான்காம் திருச்சுற்றின் வெளிமதிலை ஆழ்வார் அமைத்துக் கொண்டிருந்த சமயத்தில், சந்திர புட்கரணிக் குளக்கரையில் இருந்த தொண்டரடிப் பொடியாழ்வார் அமைத்த நந்தவனம் குறுக்கிட்டது. அந்த நந்தவனத்துக்கு இடையூறு செய்யாமல் சற்றே தள்ளி, திருமங்கையாழ்வார் திருமதிலையமைத்தார். இதனையறிந்த தொண்டரடிப் பொடியாழ்வார் மனம்மிக மகிழ்ந்து, அவர் அரங்கனுக்கு மலர் கொய்யப் பயன்படுத்துகிற கருவிக்கு 'அருள்மாரி' என்னும் திருமங்கையாழ்வார் திருப்பெயரை இட்டுச் சிறப்பித்ததாகக் குரும்பரம்பரைச் செய்திகள் கூறுகின்றன.

ஆழ்வார்கள் ஒருவருக்கொருவர் கொண்டிருந்த அன்பின் மேம்பாட்டை இவ்வரிய நிகழ்ச்சி புலப்படுத்துகிறது.

திருமங்கையாழ்வார் திருவரங்கத்தில் கோயில் திருப்பணிகளில் ஈடுபட்டிருந்தபோது, அவருக்குப் பெரும் பொருட்குறைபாடு ஏற்பட்டது.

அக்குறைபாட்டை நீக்க அவர் ஒரு முடிவு எடுத்தார். கொள்ளையடித்துத் ததியாராதன கைங்கரியம் செய்தது போலவே, கொள்ளையடித்துத் திருப்பணி செய்தாலும் தவறில்லை யென்று முடிவெடுத்தார்!

நாகைப் பட்டினத்தில் கடார மன்னன் கட்டியுள்ள புத்த விகாரத்தில், புத்தரின் விக்கிரகம் தங்கத்தில் சமைக்கப்பட்டது என்பதையறிந்த திருமங்கையாழ்வார் தம் தோழர் நால்வரின் உதவியோடு திருநாகையை யடைந்தார்.

புத்தர் சிலை தங்கத்தால் ஆனது ஆதலால் கள்வர்களால் களவாடப் படாமலிருக்க இயந்திர வடிவிலான சூத்திரம் ஒன்றைக் கொண்டு இலங்கைச் சிற்பியினால் அக்கோவிலை வடிவமைத் திருந்தான் கடார மன்னன்.

யாரேனும் அந்தப் புத்தர் சிலையைக் களவாடக் கருதி, புத்த விகார வாசலில் நுழைய முற்பட்டால், அங்கு மறைவாகப்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

பொருத்தப்பட்டுள்ள கோயில் மணி பேரொலி எழுப்பி, ஊர் மக்களைக் கூட்டிவிடும் என்று குருபரம்பரை கூறும்.

ஒரு சாதாரண வழிப்பயணி போல், நாகையில் தங்கியிருந்து புத்த விகாரத்தைச் அமைத்த இரகசியச் சூத்திரங்களை ஆராய்ந்தறிந்தார் ஆழ்வார்.

புத்த விகாரத்தின் உள்நுழைந்து சிலையை எடுக்கும் உபாயம் குறித்த இரகசியச் சூத்திரம், இலங்கையில் உள்ள சிற்பி ஒருவரிடம் இருப்பதையறிந்த ஆழ்வார் உடனே கப்பலில் இலங்கைக்குச் சென்றார். சிற்பியின் இருப்பிடத்தைக் கேட்டறிந்து அவர் இல்லம் அடைந்தார்.

இவர் அடைந்த பொழுது, சிற்பி உண்டு முடித்துத் தாம்பூலம் தரித்துக் கொண்டிருந்தார். தம் நண்பர்களோடு சிற்பியை நெருங்கிய ஆழ்வார் சிற்பியின் செவியிற்படுமாறு, 'நாகை விகாரையிலுள்ள கோயில் விமானத்தையுடைத்துக் கள்வர்கள் புத்தர் சிலையைக் களவாடிப் போய்விட்டனராம்; இதைக் கேட்டும் நாம் உயிரோடு இருக்க நேர்ந்திருக்கிறதே!' என்று வருத்தம் தோய்ந்த குரலில் கூறினார்.

இவ்வாறு ஆழ்வார் கூறியதைக் கேட்ட சிற்பி, அவரை அருகழைத்து நாகையில் நடந்தவை என்ன? என்று கவலைமேலிடக் கேட்டார்.

ஆழ்வார், தாம் நேரில் பார்த்தது போல், 'களவாடப்பட்டது புத்தர் சிலை; உண்மையே அது!' என்று சிற்பியிடம் உரைத்தார்.

'எவனோ ஒரு சிற்பி துரோகியாகியிருக்கிறான். விமான மகுட சூத்திரத்தை யாருக்கோ காட்டிக் கொடுத்திருக்கிறான். நான் மகர விசித்திரமாகக் கூட சிகரத்திலே இருந்து ஒருவருக்கும் தெரியாமல், கோமுகை விழுகிற இடத்தில் ஜலதாரையின் கீழ் உள்ள கல்லுக்குள்ளே ஒரு இரும்பு ஆணியில், விமான மகுடச் 'சங்கிலி சூத்திரத்'தை எழுதிவைத்திருந்தேன். எந்தப் பாவி இந்தச் சூத்திரத்தையறிந்து இத்தகைய களவைச் செய்து முடித்தானோ?' என்று சிற்பி புலம்பத் தொடங்கினார்.

புத்த விகாரக் கருவறைக்குள் நுழைய உரிய சூத்திரம் இருக்குமிடத்தை அறிந்துகொண்ட மகிழ்ச்சியோடு, ஆழ்வார் கப்பலேறி, இலங்கையிலிருந்து நாகை வந்து அடைந்தார்.

அன்றிரவே யாரும் அறியாத வண்ணம், புத்த விகாரையின் கோமுகியின் (கர்ப்பக்கிரத்திலிருந்து விக்கிரக அபிடேகப் பொருள்கள் வெளிவந்து விழும் இடத்திற்கு) கீழே மறைத்து

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

வைக்கப்பட்டிருந்த இரும்பாணிச் சங்கிலியைப் பிடுங்கி, அதில் மறைந்திருந்த இரகசியங்களையறிந்து கொண்டு, விமானத்தின் உச்சியை யடைந்தார். கர்ப்பக்கிரகக் கதவுக்குள் யாரும் உள் நுழைந்து விடமுடியாத வண்ணம் அக்கதவு இடைவிடாது சுழன்று கொண்டேயிருந்தது.

அந்தச் சுழற்சியை நிறுத்தினால்தான் உள்ளே நுழையலாம். சுற்றிச் சுற்றி வந்த ஆழ்வார், அந்த சுழலும் இயந்திரத்தின் அச்சு, கோபுரத்தின் உச்சியில் இருப்பதை அறிந்தார்.

அந்த அச்சுச் சுழல்வதை நிறுத்தினால் கதவு சுழலாது நின்று விடும். பிறகு உள்நுழைவது எளிதென உணர்ந்தார். ஆழ்வார் தம் கூர் மதியால் அச்சின் சுழற்சியை நிறுத்த ஓர் அரிய எளிய வழியைக் கண்டறிந்தார்.

இயந்திர அச்சுக்குள்ளிருந்த இடைவெளிக்குள் வாழைத் தண்டுகளைத் தள்ளிக்கொண்டேயிருந்தார். வாழைத்தண்டின் உள்மறைந்திருந்த நூல்கள் யாவும் சுழற்சியால் ஒன்று திரண்டு கயிற்று வடம் போல ஆயின. அவை அந்த இயந்திர அச்சைச் சுழவிடாமல் செய்துவிட்டன.

சுழற்சி நின்ற கதவுகளுக்குள் எளிதாக நுழைந்து, முழுவதும் பொன்னாலான புத்தப் படிமத்தைப் பெயர்த் தெடுத்துக் கொண்டு புறப்பட்டார் பரகாலர்.

" ஈயத்தால் ஆகாதோ? இரும்பினால் ஆகாதோ?
பூயத்தால் மிக்கதொரு பூதத்தால் ஆகாதோ?
தேயத்தேய் பித்தளைநற் செம்புகளால் ஆகாதோ?
மாயப்பொன் வேணுமோ? மதித்தென்னைப் பண்ணுகைக்கே! "*

என்று மகிழ்ச்சி பொங்கக் கூவி, அரங்கநகர் நோக்கிப் பறப்பட்டார் ஆழ்வார்.

வழியில் இரவு வந்ததால் திருக்கண்ணங்குடியில் ஒரு வயலில் தங்க விக்கிரகத்தைப் புதைத்துவிட்டு ஆழ்வார் ஓய்வு கொண்டார்.

விடியற்காலையில், வயலை உழவு செய்த வயலுக்குரியவன் வந்தான். நிலச் சொந்தக்காரனை வயலில் உழவிட்டால், தங்க விக்கிரகம் தட்டுப்படும். தட்டுப்பட்டால் அவன் அதற்குச் சொந்தம் கொண்டாடிவிடுவான் என்றுணர்ந்த ஆழ்வார், 'ஏய்! இந்த நிலத்தை

* என் திருப்பணியை மதித்து, நான் இத் திருப்பணி பண்ணுவதற்காகவே தங்கத்தால் இச்சிலையைச் செய்திருக்கிறார்கள் என்பது இப்பாடலின் கருத்து.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

நீ உழக்கூடாது. இந்த நிலம் என் முன்னோர் சொத்து. வழக்கிருக்கிறது. அது தீரும்வரை நீ உழக்கூடாது!' என்றார். 'ஆதாரங்களை நாளை காட்டுவேன்!' என்று கூறி, உழவன் உழுவதைத் தடுத்துவிட்ட ஆழ்வார் அன்றிரவே புத்தப் படிமையை எடுத்துக்கொண்டு திருவரங்கநகர் சென்றடைந்துவிட்டார்.

புத்தர் சிலை காணாமற் போனது கண்ட புத்த பிட்சுகள், இக்களவு திருமங்கையாழ்வாரால்தான் நிகழ்ந்திருக்க வேண்டும் என்று ஊகித்துத் திருவரங்கம் அடைந்து ஆழ்வாரிடம் புத்தர்சிலையைத் திருப்பித்தருமாறு வேண்டினர்.

'வரும் ஆண்டின் பங்குனி மாத ரோகிணி நட்சத்திரத்தில், உங்கள் விக்கிரகத்தில், சிறு விரலுக்குக் குறைவராமல் ஒப்பிப்பேன்' என்றார் ஆழ்வார். ஒப்பந்தப் பத்திரம் கேட்க, அப்படியே ஓலையில் எழுதித் தந்தார் பரகாலர்.

குறித்த நாளில் புத்தபிட்சுக்கள் மீண்டு வந்து கேட்கையில், சிலையிலிருந்து துண்டித்த பொற் சிறுவிரல் ஒன்றைத் தந்தார் ஆழ்வார். 'ஒப்பந்தப்படி சிறு விரலுக்குக் குறையில்லாமல் தந்துவிட்டேன்' என்று தோலா வழக்கன் துணையோடு வாதம் இட்டார். வெகுண்ட பிட்சுக்கள் 'இதையும் நீரே வைத்துக் கொள்ளும்' என்று ஆத்திரத்தோடு கூற, வாங்கிக் கொண்ட ஆழ்வார், அரங்கன் திருப்பணிக்குப் பிட்சுக்கள் தந்த கொடை என்று வரவு வைத்துக்கொண்டதாகச் சுவைபடக் கூறுவர் பெரியோர்.

திருவரங்கக் கோயில் திருப்பணியில் ஈடுபட்ட ஆழ்வாருக்குப் பொன்னாலான புத்தர் சிலையும் போதுமானதாக இருக்கவில்லை.

கோயில் திருப்பணியும் திருமதிலும் புரிந்த பணியார்களுக்கு உரிய கூலிகொடுக்க முடியாமல் ஆழ்வார் திண்டாடியதாக வழங்கும் கதையொன்றினால் இது தெரிய வருகிறது. பல நாட்களாகக் கூலி பெறாத பணியாளர்கள் கூலிகேட்டு ஆழ்வாரை நிர்ப்பந்தித்தனர்.

நிர்ப்பந்தம் தாங்கமுடியாத ஆழ்வார் வெள்ளம் கரை புரண்டோடும் காவிரியின் மறுகரைக்கு வந்து கூலிப் பொருளைப் பெற்றுக் கொள்ளுமாறு கூறினார். பணியாளர்கள் படகிலேறி அக்கரைக்குப் புறப்பட்டனர். படகுக்காரனிடம் ஆழ்வார் முன்பே சொல்லி வைத்திருந்தவாறு, கரைபுரண்டோடிய காவிரி வெள்ளத்தின் நடுவே படகைக் கவிழ்த்துவிட்டுப் படகோட்டி கரையேறி விட்டான்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

கூலி பெறவந்த பணியாளர்கள் அனைவரும் வெள்ளத்தில் மூழ்கி உயிர் துறந்தனர்.

இறை திருப்பணி செய்தவர்க்குப் பரமபதம் உறுதி. பரமபதச் செல்வம் பெற இவர்களை அனுப்புவதில் பாவம் ஒன்றுமில்லை என்று கருதி இச் செயலைச் செய்த ஆழ்வாரின் இறை பக்தியின் உறைப்பை என் என்று இயம்புவது!

உயிர் துறந்த அனைவரும், தேவர்கள் கொண்டுவந்த விமானத்தில் ஏறிப் பரமபதம் அடைந்த காட்சியைக் கரையில் இருந்தவர்கள் அனைவரும் கண்ணாரக் கண்டு களித்தனர் என்று குருபரம்பரைகள் கூறுகின்றன.

காவிரியில் மூழ்கி மாண்ட கூலியாட்களின் உறவினர்கள் அனைவரும் ஒன்றுகூடி, இறந்த உறவினரை மீட்டுத் தருமாறு ஆழ்வாரை வற்புறுத்தினர். ஆழ்வார் துயரத்தில் மூழ்கினார். இரவில் அரங்கப் பெருமான் கனவில் தோன்றி, 'மறு நாட்காலையில், காவிரியில் குளித்துவிட்டுத் திருநாமம் இட்டுக்கொண்டு கரையில் நின்று அவரவர் இறந்த உறவினரைப் பெயரைக் கூவியழைக்குமாறு கூறு' என்று கூறி மறைந்தார்.

பெருமாளின் கட்டளையை ஆழ்வார் கூற, உறவினர்களும் அவ்வாறே ஆற்றில் மூழ்கி, திருமண் இட்டு அவரவர் உறவினர் பெயரைக் கூவியழைத்தனர்.

இறந்தவர் எல்லோரும் உறவினர் கண் முன்னே காட்சியளித்து நின்றனர். 'ஆழ்வாருடைய பரமகிருபையால், நாங்கள் அனைவரும் பெரிய பெருமாள் திருவடிகளையடைந்து பரமபதத்தில் இருக்கிறோம். நீங்களும் ஆழ்வார் திருவடிகளுக்கு அன்பு செய்து, அவருக்குத் தொண்டுபுரிந்து பரமபதம் வந்தடைவீர்களாக' எனக் கூறி அவர்கள் மறைந்துபோனார்கள் என்பது குரு பரம்பரை கூறும் செய்தியாகும்.

இவற்றையெல்லாம் நோக்கும்போது, இறைவனுக்கும் ஆழ்வாருக்கும் உள்ள நட்பின் ஆழமும் கனமும் நம்மால் உணர முடிகிறது.

சைவசமய நாயன்மார்களில், சுந்தரருக்கும் இறைவனுக்கும் உள்ள தோழமையோடு ஆழ்வார்க்கும் ஆண்டவனுக்கும் உள்ள நட்பு ஒப்பாகத் திகழ்கிறது.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

சுந்தரரும் நட்பின் உரிமையில் இறைவனோடு ஊடிப் பாடிய பாடல்கள் தேவாரத்தில் உண்டு. 'மூன்று கண்கள் இருந்தும் எற்றுக்கு என் கண் கொண்டீர்! நீர் கோவிலுள் உள்ளீரா' என்று சுந்தரர் பாடியுள்ளார். 'உளோம் போகீர்!' என்று இறைவன் ஊடி உரைத்தார்'.

அதே உரிமையும் ஊடலும் திருமங்கையாழ்வார் பாசுரத்திலும் காணக் கிடைக்கின்றன.

திரு இந்தளூருக்கு ஆழ்வார் இறைவனைத் தரிசிக்கச் சென்றபோது, கோவிற்பூசனைகள் முடிந்து திருக்கதவங்கள் அடைக்கப்பட்டிருந்தன. தமக்குத் தரிசனம் தராமல் கதவடைத்து விட்டானே இறைவன் என்று ஆற்றாமையால் ஆழ்வார் பாடிய பாசுரம் இது;

" ஆசை வழுவாது ஏத்தும் எமக்கு இங்கு இழுக்காய்த்து; அடியோர்க்குத்
தேசமறிய உமக்கே ஆளாய்த்திரிகின் றோமுக்குக்
காசின் ஒளியில் திகழும் வண்ணம் காட்டீர் எம்பெருமான்!
வாசிவல்லீர்! இந்தளூரீர்! வாழ்ந்தே போம் நீர்! "

(பெரிய திரு. 4.9.4.)

'பொற்காசின் ஒளிகாட்டும் உம் பொன் உடம்பு எங்களுக்கே உரியது என்ற எம் எண்ணம் இழுக்காய் முடிந்தது. காட்டமுடியாது என்று கதவடைத்துவிட்டீர்! உம்முடைய உடம்பை, இனி நீரே கண்டு கொண்டு, நீரே தொட்டுக் கொண்டு, நீரே மோந்து கொண்டு, நீரே கட்டிக் கொண்டு, நீரே வாழ்ந்துபோம்!' என்ற ஆழ்வாரின் சினவுரை, ஆண்டானுக்கும் அடியனுக்கும் உள்ள உறவின் ஆழத்தை உரிமையின் எடையைத் தெளிய எடுத்துரைக்கிறது.

நமக்கு உரிய பொருளை, வலியவர் எடுத்துக்கொண்டு தரமறுத்தால், 'நீரே வைத்து வாழ்ந்து விட்டுப்போம்' என்று நாம் உரைப்பது போலவே, ஆழ்வாரும் இந்தளூர்ப் பெருமானை 'வாழ்ந்தே போம் நீரே!' என வசவோடு கூடிய வாழ்த்துரைக்கிறார்.

முதலில் காட்சி தராமல், கதவம் மூடிய எம்பெருமான், இப் பதிகத்துக்குரிய மீதிப் பத்துத் திருப்பாசுரங்களையும் காது குளிரக் கேட்ட பின்பு திருக்கதவந்திறந்து காட்சியளித்ததாக ஐதீகம். சுந்தரரோடு ஆண்டவன் ஊடினான். ஆழ்வார் இறைவனோடு ஊடினார், அவ்வளவே வேற்றுமை!

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

திருமங்கையாழ்வார், ஒருமுறை திருப்புள்ளம் பூதங்குடிக்குச் சென்றபோது, அத்திருப்பதிப் பெருமானைப் பாடாது செல்ல நேர்ந்தது. ஒரு சோதி வெள்ளம் அவர்முன் தோன்றியது. நான்கு திருக்கைகளுடன் சங்கு சக்கரதாரியாக இராமபிரான் ஆழ்வாருக்குக் காட்சி நல்கினார். திகைத்த ஆழ்வார் ஆணவத்தால் செல்லவில்லை. நீ இங்கு எழுந்திருப்பதை அறியாமல் சென்றுவிட்டேன் என்னும் பொருளில்,

"அறிவது அறியான், அனைத்துலகும்
உடையான் என்னை ஆள் உடையான்,
குறிய மாணி உருவாய
கூத்தன் மன்னி யமரும் இடம்
நறிய மலர்மேல் சுரும் பார்க்க,
எழில் ஆர் மஞ்ஞை நடம் ஆட,
பொறிகொள் சிறைவண்டு இசைபாடும்
புள்ளம் பூதங்குடி தானே"

பெரிய திரு : 5:1:1

என்று பாடியருளினார் என்று பெரியோர் உரைப்பர்.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருமழபாடித் திருத்தலம் வழியாக, இறைவன் வீற்றிருப்பது அறியாமல் செல்லும்போது, 'சுந்தரா! எம்மை மறந்தாயோ?' என்று ஒரு வான்ஒலி எழும்ப, பதைத்த சுந்தரர்,

" பொன்னார் மேனியனே! புலித்தோலை யரைக் கசைத்து
மின்னார் செஞ்சடை மேல் மிளிர் கொன்றை யணிந்தவனே!
மன்னே! மாமணியே! மழபாடியுள் மாணிக்கமே!
அன்னே! நின்னையல்லால் இனி ஆரை நினைக்கேனே! "

என்று, 'அறியாமல் சென்று விட்டேன்; உன்னை மறப்பேனா? உன்னை மறந்து விட்டுப் பின் யாரை நினைப்பேன்?' என்று பத்துப்பாட்டில் பதிகம் பாடி உருகிய நிகழ்ச்சி, ஆழ்வார் புள்ளம் பூதங்குடி நிகழ்ச்சியோடு ஒப்பிட்டு மகிழத்தக்கதாம்.

இறைவனின் அர்ச்சாவதாரத் திருப்பதிகள்தோறும் சென்று அகம் நெகிழ்ந்து ஆழ்வார் பாடிய இடங்க ளெல்லாம் 'திவ்விய தேசங்கள்' என ஆயின. ஆழ்வார் தீந்தமிழ் கேட்க ஆண்டவன் செவியூறிக் கிடந்தான்.

திருக்கண்ண மங்கையில் கோயில் கொண்டுள்ள பத்தர் ஆவிப் பெருமானைப் பத்துப் பாசுரங்களால் மங்களா

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

சாசனம் செய்துள்ளார் ஆழ்வார். அங்கு நிகழ்ந்ததாகக் கூறப்படும் செய்தி ஒன்று சுவையானது:

" பெரும் புறக்கடலை, அடல் ஏற்றினை,
பெண்ணை, ஆணை, எண்இல் முனிவர்க்கு அருள்
தரும் தவத்தை, முத்தின்திரள் கோவையை,
பத்தர் ஆவியை, நித்திலத் தொத்தினை
அரும் பினை, அலரை, அடியேன் மனத்து
ஆசையை, அமுதம் பொதி இன்சுவைக்
கரும்பினை, கனியை - சென்று நாடிக்
கண்ண மங்கையுள் கண்டு கொண்டேனே "

(பெரிய திரு. 7:10:1)

என்று தொடங்கும் பதிகத்தின் கடைசிப் பாசுரம் இவ்வாறு முடிகிறது.

" கண்ண மங்கையுள் கண்டு கொண்டேன் என்று
காதலால் கலிகன்றி உரைசெய்த
வண்ண ஒண்தமிழ் ஒன்பதொடு ஒன்று இவை
வல்லார் ஆய் உரைப்பார் மதியம் தவழ்
விண்ணின் விண்ணவர் ஆய், மகிழ்வு எய்துவர்;
மெய்ம்மை சொல்லில், வெண்சங்கம் ஒன்று ஏந்திய
கண்ண! நின்தனக்கும் குறிப்பு ஆகில்
கற்கலாம் கவியின் பொருள் - தானே!

(பெரிய திருமொழி : 7:10:10)

இப்பாசுரத்தில் பாசுரந்தோறும், அடுக்கு மொழிகளில், பெருமானின் பண்பு நலங்களை அடுக்கி நாமாவளி போல் ஆழ்வார் தொகுத்திருக்கும் அழகினை மீண்டும் கேட்க விரும்பும் இறைவன் முகக் குறிப்பினை யுணர்ந்த ஆழ்வார்,

" கண்ண! நின் தனக்கும் குறிப்பாகில்
கற்கலாம் கவியின் பொருள் தானே! "

என்று பாசுரத்தின் ஈற்றடியில் பாடியருளினார் என்பர் பெரியோர்.

'கண்ணபிரானே! நீகூட என்னுடைய பாசுரங்களைக் கற்க நினைத்தால் கற்கலாம்' என்பது இவ்வடியின் பொருள் ஆகும். இராமபிரான், பலருடன் சேர்ந்து யாக களத்தில் தம் மக்கள் இருவரின் திருவாய் வழியே இராமாயணம் கேட்டார்.

'விஷ்ணு சகஸ்ர நாமத்தை' வீடுமர் உபதேசித்தருளும்போது, யுத்தகளத்தில் பாண்டவர்களுடன் கண்ண பெருமானும் அமர்ந்து கேட்டருளினார்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

கண்ணமங்கையில் உறையும் பெருமானுக்கு ஆழ்வார் ஒரு நாமாவளி அமைக்க வேண்டும் என்று விரும்பி, 'பெரும் புறக்கடலை' எனத் தொடங்கும் பதிகத்தின் ஒன்பது பாடல்களிலும் பகவான் திருநாமமாகவே பாடிமுடித்தார்.

எனவே, இவற்றைப் பக்தர்களோடு கூடிப் பகவானும் கேட்டுக் களிக்கலாம் என்கிறார் ஆழ்வார்.

வசிட்டரிடம் இராமனாகவும், சாந்தீபிரி முனிவரிடம் கண்ணனாகவும் எழுந்தருளிப் பாடங் கேட்டவன்தானே நீ! உனக்கு விருப்பம் இருப்பின் என்னிடமும் உன் புகழைப் பாடங் கேட்கலாம் என்று ஆழ்வார் இவ்வடியில் குறித்தார் என்பர் பெரியோர்.

இவ்வாறு 'கற்கலாம் (என்) கவியின் பொருள்' என்று ஆழ்வார் சொன்னதும், எம்பெருமானுக்கும் திருமங்கையாழ்வாரிடம் மாணவனாகி, ஆழ்வாரின் பாடல்களைக் கேட்கும் அவாக் கிளர்ந்தெழுந்ததாம்.

அதற்காகத் திருமங்கையாழ்வாரே கலிகன்றிதாசன் எனும் பெயரோடு நம்பிள்ளையாகவும், எம்பெருமானே அவரிடம் பாடம் கேட்கும் பெரியவாச்சான் பிள்ளையாகவும் அவதாரம் செய்தார்கள் என்பது சான்றோர் கணிப்பாகும்.

இதுபற்றி ஓர் அரிய ஒற்றுமையினையும் பெரியோர் குறிப்பிடுவர்;

ஆவணி ரோகிணியில் அவதரித்தான் கண்ணபிரான். அதே ஆவணி ரோகிணியில் நம்பிள்ளையிடம் பாடம் கேட்கும் பொருட்டுக் கண்ணன் பெரியவாச்சான் பிள்ளையாக அவதரித்தார்.

கார்த்திகைத் திங்கள் கார்த்திகைத் திருநாளில் திருமங்கை யாழ்வார் அவதரித்தார். அதே கார்த்திகைத் திங்கள், கார்த்திகை நாளில் நம்பிள்ளை அவதரித்தார்.

" கார்த்திகையில் கார்த்திகை யுதித்த
கலி கன்றி வாழியே "

என்று நம்பிள்ளை வாழித் திருநாமத்தில், அவரைக் கலிகன்றியின் அவதாரம்! என்று குறிப்பித்திருப்பது காணலாம்.

ஆழ்வாரின் சொல்லுக்கெல்லாம் ஆண்டவன் கட்டுப்பட்டுக் கிடந்தமையை இந்த நிகழ்ச்சியின் வழியாகவும் நாம் உணரலாகும்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

சேரமான் பெருமாள் நாயனார் பூசனையில், இறைவன் பூசனையேற்றதற் கடையாளமாகச் சிலம்பொலி கேட்கும். அன்று நேரம் கழித்து ஒலித்த காரணம் ஏன் என்று நாயனார் வினவிய போது, 'அன்பன் சுந்தரன் திருப்பாடல் கேட்டு மயங்கிய மயக்கில் நேரம் போனது தெரியவில்லை' என இறைவன் உரைத்ததாகப் பெரிய புராணம் கூறும் செய்தி இங்கு நினைவுகூரல் தகும்.

ஆழ்வார்கள் தம் தீந்தமிழ்க் கவியால், இறைவனைச் சொன்ன வண்ணம் செய்யும் பெருமானாக ஆக்கிவைத்திருந்தனர் என்பது இங்குத் தெளிவாகிறது.

ஆழ்வார்கள் பாடலில் ஆழ்ந்து கிடக்கும் புதைபொருள்கள் அத்தனையும் நம்பிள்ளையிடம் கற்று, அவை முழுவதையும் வியாக்கியானமாக்கி உலகுக்கு உபகரித்த பேரருளாளர் வியாக்கியானச் சக்கரவர்த்தி பெரிய வாச்சான் பிள்ளை என்பது இங்கு நினைவு கொள்ளத்தக்கது.

இவ்வாறு தம்முடைய தீந்தமிழால், வற்றாத பக்தி யூற்றால், தளராத தொண்டுகளால், அடியார்க்குச் செய்த அடிமைகளால், இலக்குச் சரியானது என்றால், நெறி சிறிது தவறினும் தாழ்வில்லை என்னும் தாம் வகுத்த தனிநெறியின் தலைவராய் விளங்கிய திருமங்கையாழ்வார், தாம் புரிந்த திருப்பணிகளால் நிறைவடைந்த மனத்தினராய், தமக்கு வீடுபேற்றினைத் தந்தருளுமாறு இறைவனிடம் வினயம் மிக விண்ணப்பித்தார்.

அரங்கநகர் அப்பனும் தனது தெற்கு வீடான திருக்குறுங்குடி செல்லுமாறு ஆணையிட்டார்.

ஆழ்வாரும் ஆணைப்படி திருக்குறுங்குடி சென்று அங்குள்ள இறைவனைச் சேவித்தவாறே, அந்தமில் இன்பத்து அழிவில் வீடாம் பரமபத நாதனின் திருவடிகளைச் சென்றடைந்தார்.

திருமங்கையாழ்வாரால் இறுதியாக மங்களாசாசனம் செய்யப் பெற்ற திவ்விய தேசமும் திருக்குறுங்குடியாகவே அமைந்து விட்டது. அங்கே, கழனிகளின் நடுவே, அமைந்துள்ள 'திருவரசு' எனப்படும் ஆழ்வார் முத்திபெற்ற இடம் இன்றும் காணப்படுகிறது. கூப்பியகரங்களுடன் ஆழ்வார் சேவை சாதித்த வண்ணம் இன்றும் நிற்கிறார் ஆழ்வார். தமிழர் நெஞ்சில் என்றும் நிற்பார்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

திருமங்கையாழ்வார் தம் திருவாக்காலேயே தம் வாழ்க்கைச் சரிதச் சுருக்கம் முழுவதையும் பின்வரும் அடிகளில் அடக்கி வைத்துவிட்டுப் போயிருக்கிறார்.

" கள்வனேன் " ஆனேன்;
படிறு செய்திருப்பேன்;
கண்டவர் திரிதந்தேனேலும்
தெள்ளியேன் ஆனேன்;
செல்கதிக்கு அமைந்தேன் "

(பெரிய திருமொழி 1:1:3)

இதைவிடச் சுருக்கமாக அப்பெருமான் வாழ்ந்த வரலாற்றையும் பேற்றையும் யாரால் உரைக்க இயலும்?

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

2. தனித்து நிற்கும் தகையாளர்

வைணவ சமயத்தை ஓர் இமயமலை என்று உருவகித்தால், அதில் மிக உயர்ந்த இரு சிகரங்களாக நிற்பவர்கள் நம்மாழ்வரும், திருமங்கையாழ்வாரும் ஆவார்கள் என்று பெரியோர் மொழிவர்.

இவ்விரு சிகரங்களின் உயரத்தை அளந்தறிய முயன்று, தம் இயலாமையைத் தெரிவித்தோர் பலர் ஆவர். அளந்தவரையிலும் இலாபம் என்று அமைதி பெற்றோர் பலர்.

நம்மாழ்வார் இயற்றிய பிரபந்தங்கள் நான்காகும். அதனை நான்கு வேதங்களுக்குச் சமமாகக் கருவது வைணவ மரபு.

திருமங்கையாழ்வார் இயற்றிய ஆறு பிரபந்தங்களும் வேதங்களின் ஆறங்கங்களுக்கும் சமமாகும் எனக் கருதுவது வைணவ மரபு.

இக்கருத்தை 'மாறன் பணித்த தமிழ் மறைக்கு மங்கையர்கோன் ஆறங்கம் கூற அவதரித்த'தாக உபதேச ரத்தினமாலையில் மணவாள மாமுனிகள் அருளிச்செய்துள்ளமை காணலாம்.

திருமங்கை மன்னரின் ஆறு பிரபந்தங்கள் பின் வருபவையாகும்.

1.	பெரிய திருமொழி	1054	பாசுரங்கள்
2.	திருக்குறுந் தாண்டகம்	20	பாசுரங்கள்
3.	திருநெடுந் தாண்டகம்	30	பாசுரங்கள்
4.	திருஎழுகூற்றிருக்கை	1	அகவல் (சித்திரகவி, இரதபந்தம்)
5.	சிறிய திருமடல்	77	கண்ணிகள்
6.	பெரிய திருமடல்	148	கண்ணிகள்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

திருமங்கையாழ்வார் இயற்றிய பெரிய திருமொழி உண்மையிலேயே பெரிய திருமொழிதான் என்று போற்றுவர் வைணவச் சான்றோர்.

" அறிவு தரும் பெரிய திருமொழி தப்பாமல்
ஆயிரத்தோடு எண்பத்து நாலு பாட்டும் "

(தேசிகப் பிரபந்தம். பா. 379)

என்று வேதாந்த தேசிகர் போற்றுவர்.

ஆழ்வாரின் பெரிய திருமொழியில் ஈடுபட்டவர்கள் இவரைத் தமிழ்த் தலைவன் என்றுதான் பேசுவார்கள். இத்திருமொழியில் ஆழ்வார் இறைவனின் பேரழகையும் பேராற்றலையும் பெருங்கருணையையும் உருகி உருகிப் பேசுகிற பாசுரங்கள் கவிதைத் தேவியின் மணிமகுடம் என்பார் கம்பராமன் (ஆழ்வார்களும் கம்பனும். பக். 28).

பெரிய திருமொழியின் தனிச்சிறப்பை, அருமையைக் கூரத்தாழ்வான் அருளிச்செய்த தனியன் இவ்வாறு கூறுகிறது:

" நெஞ்சுக்கு இருள்கடிதீபம்; அடங்கா நெடும்பிறவி
நஞ்சுக்கு நல்ல அமுதம்; தமிழ் நன்னூல் துறைகள்
அஞ்சுக்கு இலக்கியம்; ஆரணசாரம்; பரசமயப்
பஞ்சுக்கு அனலின் பொறியாம் பரகாலன் பனுவல்களே "

மனத்தின் மாசாகிய அறியாமை யிருளைப் போக்கும் ஞானச் சுடர் விளக்காக நிற்பவை திருமங்கை மன்னனின் திருமொழிகள்.

மாற்றுச் செயல் எதனாலும் அடங்காமல் நீண்டு செல்லும் பிறவியாகிற நஞ்சுக்கு ஆழ்வார் திருமொழிகள் நல்ல அமுதமாக நிற்க வல்லவை.

எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்னும் தமிழ் இலக்கணம் ஐந்துக்கும் எடுத்துக் காட்டாய் இலங்க வல்லனவ இவ் ஆழ்வார் திருமொழிகள். இத்திருமொழிகள் தமிழ் இலக்கணத்திற்கு இலக்கியமாய் மட்டும் அல்லாமல் வேதங்களின் பிழிவாகி வேத சாரமாகவும் விளங்குபவை என்பர்.

இவை மட்டுமன்றி, பிற சமயங்கள் என்னும் பஞ்சுப் பொதிகளை எரித்துச் சாம்பலாக்கும் தீக் கனலாகவும் திகழ்பவை ஆழ்வாரின் திருமொழிகள் என்பது தரிசனத்துக்காகத் தம் தரிசனத்தைத் தந்த கூரத்தாழ்வார் திருவாக்கு.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

அவரும் வேண்டா; அவர் அருளிய திருமொழிகளே இந்தனையும் செய்யப் போதும் என்று வைணவச் சான்றோர்கள் இத்தனியனின் கருத்தாக ஏற்றிப் போற்றுவர்.

சோமாசியாண்டான் என்னும் அன்பர் ஆழ்வாரை வேண்டிய அருமைப் பாடல் இது:

" மாலைத் தனியே வழிபறிக்க வேணுமென்று
கோலிப் பதிவிருந்த கொற்றவனே! - வேலை
அணைத்தருளும் கையால் அடியேன் வினையைத்
துணித்தருள வேண்டும் துணிந்து "

'எல்லோர்க்கும் மேலானவனான திருமாலைத் தனி வழியிலே, வழிபறிக்க வேண்டும் என்று முயற்சி மேற்கொண்டு, அதற்கு ஏற்றவாறு அரசமரத்தின்அடியிலே பதுங்கியிருந்த கொற்றவனே! நீ வழி பறிக்கத் துணிந்த வாளால் என் வினைகளை வெட்டித் துணிக்க வேண்டும்!' என்று வேண்டுகிறார் சோமாசியாண்டான்.

'பறிகொடுப்பவன் தெய்வங்களுக்கு அரசு; பறிப்பவர் ஆலிநாட்டு அரசு; பறிக்கும் இடம் மரங்களுக்கு அரசு!' என நயங்காண்பர் பேருரையாளர்கள்.

" மாயோனை வாள்வலியால் மந்திரங் கொள் பரகாலன் "

'எல்லா ஆழ்வார்களிலும் உயர்ந்து திருமங்கையாழ்வாருக்கே உரிய ஏற்றங்களில் இதுவும் ஒன்று. மற்றை ஆழ்வார்கள் மந்திரத்தை வேண்டிப் பெற்றனர். இவ்வாழ்வாரோ அந்த மந்திரத்தை விரட்டிப் பெற்றார். வாள் காட்டி, அந்த மந்திரத்தைச் சொல் என்று இறைவனை மிரட்டிப் பெற்றவர்.

எம்பெருமானிடம் கலியனால் ஆயுதப் பிரசவம் போல் வலிந்து பெறப்பட்டது திருமந்திரம். 'ஆயுதப் பிரசவத்தால் பெறப்பட்ட குழந்தை அனைவராலும் பாதுகாத்து வளர்க்கப்பட வேண்டியது. ஆயுதப் பிரசவத்தால் பெறப்பட்ட இத்திருமந்திரம் என்னும் குழந்தையோ அனைவரையும் பாதுகாக்க வல்லது' என்பர் பெரியோர் (பரகாலன் பைந்தமிழ் பக் 15).

இறைவன் தம்மை எப்பணிக்காகத் தேர்ந்துள்ளான் என்பதை அறிந்துகொண்ட அக்கணத்திலிருந்தே, இறையன்பைப் பரப்பும் பெரும் பணியைப் பரகாலர் மேற்கொண்டுவிட்டார்.

தமிழ் மொழியில் அவர் பாடாத பாட்டு வகைகளே இல்லை யெனலாம். 108 வைணவத்தலங்களில் 85 தலங்களை, அவர் தம்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

பண்ணார் தமிழால் பாடி, மக்களைப் பக்திப் பேருல்கிற்கு அழைத்துள்ளார்.

உண்மை இறை ஞானத்தைப் பெற ஒருவன் ஞான பண்டிதனாக இருக்க வேண்டியதில்லை. இறைவனிடம் ஆழமான பத்திமை கொண்ட ஒருவனை ஞானிகளில் எல்லாம் சிறந்த ஞானியாக இறை பக்தி ஆக்கிவிடும் என்பதைப் பரகாலர் வரலாறு பக்தியுலகிற்கு என்றும் உணர்த்தி நிற்கிறது.

திருமங்கையாழ்வாரின் தனிப்பெருமைகள்

- ஏடும் நெறியும் அடையும் குறியும் நல்லவையாக இருக்க வேண்டும் எனும் கோட்பாட்டை ஏலாதவர் அடையும் குறி நல்லதாயின், செல்லும் நெறி சற்று இழுக்கினும் தவறில்லை என்னும் கோட்பாட்டில் வாழ்ந்தவர்.
- தொகையில் நம்மாழ்வார் பாடல்கள்அதிகமாயினும் பெரிய திருமொழி என இவருடைய பாடல்கள் வழங்கி வருவதால் இவர்தம் பாடல்களின் மேம்பாடு விளங்கும். (பெரிய புராணம் என்பது போல)
- நாலுகவிப் பெருமாள் எனும் பெயருக்கேற்ப, பல்வகைக் கவியமைப்புகளை இவருடைய பிரபந்தப் பாடல்கள் கொண்டிலங்குகின்றன.
- நாலடி மேல் வைப்பு, சாழல், கோத்தும்பி முதலிய பாமுறைகள் திவ்வியப் பிரபந்தத்தில் இவர் திருமொழியில் மட்டுமே அமைந்துள்ளன.
- குமமணிதூரம், பொங்கத்தம் பொங்கோ எனும் இருவகைப் பாவமைப்பு - இவரால் மட்டுமே தமிழ் இலக்கியத்தில் இடம் பெற்றுள்ளன.
- மடக்கணியில் வந்த அடியே வருவது என்பதை மாற்றி, இரண்டாமடியில் நான்கு சீர்களும் மூன்றாம் அடியில் மூன்று சீர்களும் வருவதாக மடக்கணியை மாற்றியமைத்துள்ளார் ஆழ்வார்.
- பிற ஆழ்வார்களைக் காட்டிலும் இயற்கைப் புனைவுப் பாசுரங்கள் இவரால் மிகுதியாக அருளப் பெற்றுள்ளன. இவ்வகையில் இவர் ஞானசம்பந்தரை நினையவைக்கிறார்.
- அகப்பொருள் துறையில் பல சோதனைகளையும் சாதனைகளையும் ஆழ்வார் நிகழ்த்தியுள்ளார்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

- பெண்பாலரும் மடல் ஏறலாம் என்று வாதாடும் இரண்டு மடல் பிரபந்தங்களைப் பாடியருளியுள்ளார்.
- அகத்திணைப் பகுதியில் களவு வாழ்க்கையில் நற்றாய் தலைவனிடம் உரையாடுவதில்லை. ஆழ்வார் பரகால நாயகிக்காகத் திருத்தாயார் நாயகனிடம் வாதாடி வேண்டுகின்றார்.
- எட்டெழுத்து மந்திரத்தை இறைவனே, இவர் திருச்செவியில் உபதேசிக்கப் பெற்றவர். வேறு எந்த ஆழ்வார்களுக்கும் இந்தப் பெருமை கிட்டவில்லை.
- திவ்வியப் பிரபந்தத்தில், 2118 பாசுரங்கள் அர்ச்சாவ தாரத்தைப் பற்றிப் பாடப்பட்டவை. இவற்றில் 1165 பாசுரங்களைத் திருமங்கையாழ்வார் பாடியுள்ளார்.
- அர்ச்சாவதாரத்தில் அளவற்ற ஈடுபாடு கொண்டவர் இவ்வாழ்வார் என்பது இதனாலே விளங்கும்.

" சந்தோகன், பௌழியன், ஐந்தழல் ஓம்பு
தைத்திரீயன், சாமவேதி " பெரிய திரு. 5:5:9

என்று உபநிடதப் பெயர்களைப் பாசுரத்தில் தமிழில் முதலில் குறித்தவரும் இவரே.

ஈரத்தமிழ்ப் பற்று

" ஆர் ஆர் உலகத்து அறிவுடையார்
அமரர் நன்னாட்டு அரசாள
பேர் ஆயிரமும் ஓதுமின்கள்;
அன்றி இவையே பிதற்றுமினே "

(பெரிய திரு : 1:5:10)

இறைவனின் ஆயிர (சகஸ்ர) நாமத்தை ஓதுங்கள் என்று சொன்ன ஆழ்வார், அதனை முறைப்படி ஓதவேண்டுமாதலால், 'ஓதுமின்கள்' என்கிறார்.

தன்னுடைய தெய்வத்தமிழ்ப் பாசுரங்களைப் பிதற்றினாலும் போதும்; பலன் உறுதி என்கின்றார். திவ்யார்த்த தீபிகை இக்கருத்தை, 'சகஸ்ர நாமங்களை ஓதினீர்களாயின் உங்கள் விருப்பம் நிறைவேறும். முரட்டுச் சமஸ்கிருத பாஷையிலே அமைந்துள்ள அவற்றை உருச்சொல்லித் தரித்து ஓத வல்லமை யில்லையேல்,

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

எளிய செந்தமிழில் அமைந்த இப்பாசுரங்களை ஒதுங்கள்; பேற்றில் குறையில்லை யென்றாயிற்று' என்று செந்தமிழின் அருமையையும், ஆழ்வார் பாசுரங்களின் பெருமையையும் ஒரு சேர மொழிகிறது இப்பகுதி.

இறைப் பேற்றுக்கு எக்காலத்தும் மொழி தடையாக முடியாது; உறுதுணையாக நிற்கவே அது ஒடிவந்து நிற்கிறது என்னும் அருங்கருத்தை ஒதுங்கள்; பிதற்றுங்கள் என்னும் இரு சொற்களைக் கொண்டு விளக்கியுள்ள ஆசாரியப் பெருமக்கள் நாம் தொழுது வணங்கத் தக்க தொழுகலம் ஆகின்றனர் என்றால் பிழையில்லை.

இங்குக் கூறப்படும் மரபு வழிச் செய்தி ஒன்று ஆழ்வார்களின் தமிழ்ப்பற்றை உலகுக்குத் தெள்ளத் தெளிவாக அறிவிக்கும்.

வங்கிபுரத்து நம்பி எனும் அன்பர் திருவரங்கக் கோயிலுக்கு வழிபடப் போய்க்கொண்டிருந்தார். வழியில் சில ஏழை எளிய பெண்களைக் கண்டு அவர்களோடு பேச்சுக் கொடுத்தார்.

உடன் வந்த தோழரான ஆண்டான் 'சுற்றியிருக்கும் வைணவரை விட்டுவிட்டு எளிய பெண்களிடம் என்ன உரையாடல்?' என்று வினவினார்.

'கள்ளங்கபடற்ற ஏழைகளிடமே இறைவன் உறைவதால் அவர்களோடு பேச விரும்பினேன்!' என்றார் நம்பி.

'என்ன பேசினீர்கள்!' என்று கேட்டார் ஆண்டான்.

'அவர்கள் என்னைத் தமிழில் வாழ்த்தினார்கள்; நான் அவர்களிடம், 'விஜயீபவ' என்று வாழ்த்தினேன்!' என்றார் நம்பி.

இதைக் கேட்ட ஆண்டான் நகைத்தவாறே, 'அவர்கள் இனிய தமிழில் பேச, அப்போதும்கூட முரட்டுச் சமஸ்கிருதத்தில் வாழ்த்தும் உம்முடைய பழக்கத்தைக் கைவிடவில்லை!' என்றார்.

வைணவ சமயத்தின் உயிர்க்கூறுகளுள் ஒன்று வைணவம் தமிழ் மொழிமேல் வைத்துள்ள பற்று என்பதை இந்நிகழ்ச்சி தெளிவுறுத்தி நிற்கிறது.

இதயத்தின் மொழியாகப் பக்தி இருக்கிறது. அதனால் இதயத்தின் மொழியாகிய தாய் மொழியின் வழியாகவே அதனை வெளிப்படுத்த இயலும் என்று ஆழ்வார்கள் இதய சுத்தியோடு நம்பினர்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

ஆழ்வாரின் இளகிய நெஞ்சை வெளிப்படுத்த இந்த ஈரத்தமிழ் மிகவும் உதவியது. ஆதலால் 'செந்திறத்த தமிழ் ஓசை' என்று நன்றி தழுதழுக்க இசைத்தமிழில் பாடுகிறார்.

இவரின் நன்றியுணர்வைக் கண்ட ஈரப் பசுந்தமிழ், இவர் உள்ளம் முழுதும் நிரம்பியது. அதன் விளைவாக மின்னல் வெட்டும் நேரத்தில் விரைவில் பாடும் ஆசுகவியாகவும், இனிமை ததும்பப் பாடும் மதுர கவியாகவும், விரித்துப் பாடும் வித்தார கவியாகவும், இரத பந்தம் பாடும் சித்திர கவியாகவும் ஆழ்வார் மலர்ந்தார். அதனால் 'நாலுகவிப் பெருமாள்' எனும் நல்விருது அவரை நாடி வந்தது.

ஆழ்வாரின் செந்தமிழ்ப் பற்றுக்கு மேலும் ஒரு சான்று

'செந்திறத்த தமிழ் ஓசை வடசொல் ஆகி' என்பது திருத்தாண்டகத் தொடர் (பா.4) இத்தொடருக்கு வியாக்கியானகர்த்தரின் உரை: ஆரிய மொழியாகிய சமஸ்கிருதத்தை முன்னே சொல்லித் தமிழைப் பின்னே சொல்லுதல் முறையாயிருக்க தமிழை முன்னே சொன்னதற்குக் காரணம் என்ன எனின், தமிழ் வேதமானது வடமொழி போல் அல்லாமல் சர்வாதிகாரமா யிருக்கிறது. எல்லா வருணத்தாருக்கும் உரியதாய் உள்ளது. இந்த வருணத்தார் தாம் ஓதவேண்டும் என்று ஓதும் அதிகாரத்தை வடமொழி சிலருக்கு அளித்திருக்கிறது.

தமிழ் எல்லா வருணத்தாருக்கும் ஓதும் அதிகாரம் தந்திருக்கிறதாம். அதனால் தமிழ் வேதம் சர்வாதிகாரமாகத் தந்தது என்கிறார்.

'செய்யதமிழ் மாலைகள் தெள்ளிய ஓதித் தெளியாத மறை நிலங்கள் தெளிகின்றோமே' என்பது வேதாந்த தேசிகரின் (தே.பி.40) திருவாக்கு.

அ. தெளிவாகப் பொருள்களை விளக்குதல்.

ஆ. தன்னியல்புக்குப் பொருந்தாதவையும் பொருந்துவன வற்றையும் சேர்த்துப் பேசுகிறது, வடமொழி வேதம். அப்படியில்லாமல் தன் இயல்புக்குப் பொருந்துபவை யாகுமாறே பேசுகின்றன தமிழ் மறைகள்.

ஆதலால் இச்சிறப்புகளைக் கண்ட ஆழ்வார், வடமொழி வேதங்களைவிடத் தமிழ் வேதங்கள் சிறந்தவை எனக் காட்ட, தமிழ் வேதம் முந்துறச் சொல்லப்பட்டது என்பது உரையாளர் கருத்து.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

'செந்திறத்த தமிழ் ஓசை' - வட மொழி முரட்டுச் சமஸ்கிருதம் என்று பேர்பெற்றிருக்கும். தமிழ்மொழி அங்ஙனமல்லாமல் ஈரத்தமிழ் என்றும், செவிக்கினிய சொல் என்றும் சிறப்புறுதல் பற்றிச் செந்திறத்த எனப்பட்டது.

யாப்பியலில் சாதனையாளர்

தமிழ் யாப்பு முறையில் பல்வகையான சோதனை முயற்சிகளைச் செய்து வெற்றிகண்டவர் திருமங்கையாழ்வார்.

1. எழுசீர் ஆசிரிய விருத்தம், 2. அறுசீர் ஆசிரிய விருத்தம், 3. கலிநிலைத்துறை, 4. கலிவிருத்தம், 5. ஆசிரியத்துறை, 6. கொச்சகக் கலிப்பா, 7. எண்சீர் ஆசிரிய விருத்தம், 8. வஞ்சி விருத்தம், 9. சந்தக்கவி விருத்தம், 10. கலித்தாழிசை, 11. வெண்துறை, 12. ஆசிரியப்பா, 13. கலிவெண்பா ஆகிய 13 யாப்பு வடிவங்களை ஆழ்வார் கையாண்டுள்ளார்.

திரு எழு கூற்றிருக்கை யாப்பு வகையில் மிகக் கடினமான ஒரு சித்திரகவி வகை. பாடலில் அடுத்தடுத்து வரும் எண்கள் உயர்ந்து கொண்டே போய் மணிமுடியாக ஏழு நிற்கும். பிறகு அது ஒன்று வரை குறைந்து கொண்டே வரும். தேரின் பீடத்திற்குக் கீழும் மேலும் போல விரிந்தும், சுருங்கியும் சொற்சேர்க்கை அமையும். அதே சமயத்தில் உள்ளீடு இந்த உத்தி முறைக்கு இசைந்து வரவேண்டும். இது வெறும் விளையாட்டல்ல. வைணவக் கவிஞர்களில் இவர் பாடியுள்ள திரு எழு கூற்றிருக்கை சொல்லும் பொருளும் சுவை கூட்டுவது. பிற ஆழ்வார்கள் யாரும் சித்திர கவி பாடவில்லை.

இதுபோலவே இரு திருமடல்களும் ஆழ்வாரின் தமிழ்ப் புலமைக்குச் சான்றாக நிற்பவை. ஒவ்வோர் அடியின் இரண்டாம் எழுத்து எதுகையாக ஒருமுறை வந்த எழுத்தே எல்லா அடிகளிலும் வரப் பாடவேண்டும். மிகக் கடினமான இந்த இலக்கணத்தால் மடல் இலக்கியங்களின் தொகையே அருகிவிட்டது.

சிறிய திருமடல் 'காரார்' என்று தொடங்குவதால் அதன் 154 அடிகளிலும் 'ரா' என்ற இரண்டாம் எழுத்தே எதுகையாக வரப் பாடியுள்ளார். பெரிய திருமடல் 'மன்னிய' என்று பெரிய திருமடல் தொடங்குவதால், பெரிய திருமடலின் 296 அடிகளிலும் இரண்டாம் எழுத்தாகிய 'ன்' என்பதே எதுகையாகப் பாடியுள்ள கவித்தடம் நம்மை வியக்கவைக்கிறது.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

சொல்லாக்கம் / சொற்றிறம்

திருமங்கையாழ்வாரின் பெரிய திருமொழிப் பாசுரங்களில் சில அருந்தமிழ்ச் சொற்களும் சொல்லாட்சிகளும் வழங்கப் பெற்றுள்ளன.

அ. கோயின்மை - தகுதியற்றது

ஆ. புதம் - தாவுதல் - புரவியென்னப் புதம் செய்து (பெரிய திரு. 9:3:7)

- மேகம் - புதம்மிகு விசும்பில் (பெரிய திரு. 9:3:7)

இ. சோத்து - வணக்கம். ஸ்தோத்திரம் என்பதன் திரிபு. 9:5:8

ஈ. அம்மம் - தாய்ப்பால் 10:4

உ. எம்பிராக்கன் - எம்பெருமான் 10:5:2

ஊ. புள்ளுவன் - புளுகன்

எ. எக்கே - இது என்ன? 10:8:8

ஏ. பாழிமை - பரந்துள்ளாமை 11:2:6

ஐ. கோல் தும்பி - கோத்தும்பி

ஒ. மோழை எழல் - குமிழி எழல் 4:4:9

ஓ. படல் - மூங்கிலால் ஆன குடிசைக்கதவு 4:4:3

- 'படல் அடைத்த சிறு குரம்பை'

ஔ. ஒவி - ஓவியம் 'ஓவிநல்லார்' 3:8:7

க. பப்ப - இகழ்ச்சிச் சொல், நிந்தைமொழி 1:3:7

கா. குழமணிதூரம் - தோற்றவர் வென்றவர் வெற்றியைச் சொல்லி ஆடும் கூத்து. 10:2

கி. பொங்கத்தம் பொங்கோ - வெற்றி பெற்றவர் புகழைச் சொல்லித் தோற்றவர் பறையடித்துக் கொண்டு ஆடுமிடத்தில் எழும் ஒலிக்குறிப்பு 10:3

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

தத்துவச் சுரங்கம்

திருமங்கையாழ்வார் பாசுரங்களில், வைணவ தத்துவங்கள் வெளிப்படையாகவும் இலைமறை காயாகவும் ஆங்காங்கே பொதிந்து கிடக்கின்றன.

வைணவ தத்துவ உண்மைகள் : அ) தத்துவம், ஆ) இதம், இ) புருடார்த்தம் என மூவகையாகும். தத்துவம் என்பது அ) இறைத் தத்துவம், ஆ) உயிர்த் தத்துவம், இ) உலகியல் தத்துவம் என மூவகையாகும். (ஈசன், சித்து, அசித்து).

இதம் என்பது இறைவனையடையும் நெறிகள். அவை கரும்ம், பக்தி, ஞானம், ஆசாரிய அபிமானம், சரணாகதி எனும் ஐந்தாகும். இவற்றில் கருமம், பக்தி, ஞானம் எனும் முன்றினையும் (பக்தி) யோக நெறி என்றும், ஆசாரிய அபிமானம், சரணாகதி யிரண்டையும் பிரபத்தி நெறி என்றும் வைணவம் கூறும். புருடார்த்தம் என்பது அடையத்தக்க பேறு ஆகும்.

இத்தத்துவங்களைத் திருமங்கையாழ்வார் தம் பிரபந்தங்களில் நெடுக விதைத்திருக்கிறார். பரம்பொருள் நாராயணனே; அப்பரமான்மா சித்து, அசித்துக்களைத் தன் உறுப்புக்களாகக் கொண்டு, படைப்பு, காப்பு, அழிப்பு ஆகியவற்றை நிகழ்த்துகிறான். மூவகைக் காரணங்களாகவும் அவனே நிற்கிறான். தூலமாய் விரியும் நிலையே படைப்பு (சிருஷ்டி) சூக்குமமாய்ச் சுருங்கும் நிலையே 'லயம்'. இவற்றின் இடைப்பட்டதே காப்பு. இம்முத்தொழிலையும் அப்பரமான்மாவே மூவுருவாக நின்று இயக்குகிறான். இவற்றை அவன் விளையாட்டாகப் புரிந்து கொண்டிருக்கிறான் என்பதே வைணவ சமயத்தின் உயிர்க் கொள்கையாகும். திருமங்கை யாழ்வாரின் இவ்வைணவக் கொள்கைகள் தொட்ட இடமெல்லாம் தட்டுப்பட்டுத் துளிர்த்துக் கொண்டிருப்பதைக் காணலாம்.

ஆழ்வார் நல்கும் அகச்சான்றுகள்

ஆழ்வார் பிரபந்தங்களின் தொடர்களிலிருந்து அகச்சான்றுகள் கொண்டு, அவர் வாழ்க்கை வெளிப்படுவதை யுணரலாம்.

" தெரியேன் பாலகனாய்ப் பல
தீமைகள் செய்துமிட்டேன்
பெரியேன் ஆயினபின் பிறர்க்கே
உழைத்து ஏழை ஆனேன் "

பெரிய : 1.9.2-7

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

என்று ஆழ்வார் கூறுவதனால், இளமைப் பருவத்தில் தீங்குபல செய்துள்ளார் என்பதும் இறைவனைச் சரண் அடைந்தபின், அவன் திருமந்திர உபதேசம் பெற்றபின் பெரியோர் தகுதியை யடைந்தார் என்பதும், அதற்குப் பின் பிறர் வாழவே தாம் வாழ்ந்தார் என்பதும் தெரியவருகின்றன.

" தாயே, தந்தை யென்றும்
தாரமே கிளை, மக்கள் என்றும்
நோயே பட்டொழிந்தேன் "

(பெரிய திரு : 1:9:2-1)

என்பதனால், உலகியல் வாழ்வே உயரிய வாழ்வு என்று கருதும் நம்போன்றவர் வாழ்வு போன்றுதான் ஆழ்வார் வாழ்க்கையின் தொடக்கம் இருந்திருக்கிறது என்பது புலனாகிறது.

" கோடிய மனத்தால் சினத்தொழில் புரிந்து
திரிந்து நாய்இனத்தொடும் திளைத்திட்டு
ஓடியும் உழன்றும் உயிர்களே கொன்றேன் "

(பெரிய திரு :1:6:6)

என்பதனால், வேட்டுவர் குலத்தவராகிய இவர் நாய்களோடு வேட்டையாடித் திரிந்து உயிர்கள் பலவற்றைக் கொன்று குவித்தவர் என்பதும் தெரிகிறது.

வாழ்க்கையின் குறிக்கோள் தெரியாமையால் இவ்வாறு கொலை பல புரிய நேர்ந்தது என்று பின்பு வருந்தியுள்ளார்.

" கொன்றேன் பல் உயிரைக்
குறிக்கோள் ஒன்றிலாமையினால் "

(பெரிய திரு : 1:9:2-3)

" கற்றவர் பரவும் மங்கையர் கோன் "

(பெரிய திரு : 5:1:10)

என்பதனால், புலவர் போற்றும் புலமையாளராய் இவர் பொலிந்திருக்கின்றார் என்பது புரிகிறது.

" இருந்தமிழ் நூல் புலவன் "

(பெரிய திரு : 1:7:10)

என்பதனால், பெருந்தமிழ்ப் புலமை படைத்த இவருடைய நூல்கள் பெருமைக்குரியவையாகத் தமிழ் நூல்களுள்ளே கருதத் தக்கவை யென்று அவர் கருதினார் என்பது கருத்தாகிறது.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

" பொய்ம் மொழி யொன்றில்லாத
மெய்ம்மையாளன் "

(பெரிய திரு : 3:4:10)

என்பதனால், ஒரு பொய்கூட உரைத்தறியாத வாய்மையாளர் என்பது தெரிகிறது. 'அருள் மாரி' என்று பல இடங்களில் கூறிக் கொள்வதால் கைம்மாறு கருதாமல் உலகுக்குக் கருணை பொழிந்தவர் என்பதை உணர முடியும்.

" அலைநீர் உலகுக்கு அருளே புரியும்
காரார் புயற்கைக் கலிகன்றி " (பெரிய திரு : 3:2:10)

என்பதனால், உலகம் முழுவதற்கும் அருள்பொழிய வாழ்ந்த வாழ்க்கை அவர் பிற்கால வாழ்க்கை என்பது புலனாகும்.

" பிரிந்தேன் பெற்ற மக்கள், பெண்டிர் என்று
பின் உதவாது அறிந்தேன் " (பெரிய திரு : 6:2:4)

என்பதனால், இறுதியில் இல்லற வாழ்வைத் துறந்து, தொண்டக் குலமே தொழுகுலம் என்று துறவற வாழ்க்கை வாழ்ந்தார் என்பதும் தெளிவாகிறது.

திருமங்கையாழ்வாரைத் திருத்திப் பணி கொண்ட ஈசன், எல்லாப் பொருள்களையும் விளக்கும் திருமந்திரத்திற்கு எல்லை நிலமான திவ்விய தேசங்களை(இறை திருப்பதிகளை)யும் ஆழ்வார்க்குக் காட்டிக்கொடுத்தான்.

திருமந்திரத்தின் (ஓம் நமோ நாராயணாய) மாண்பை, முதல் பதிகத்தில் பத்துப் பாசுரங்களில் விளக்கின ஆழ்வார், அம்மந்திரம் பிறந்த பதரிகாசிரமத்தைச் சேவிக்க முதல் திருத்தலப் பயணம் மேற்கொண்டார்.

அங்கிருந்து தொடர்ந்து திருப்பிரிதி முதலிய திவ்விய தேசங்களைத் தரிசித்து, தாம் அடைந்த பேரின்பத்திற்குப் போக்குவீடாய்த் திருப்பதிகள்தோறும் தீந்தமிழ்ப் பாசுரங்களைப் பாடிக் கொண்டே சென்றார்.

" தான் உகந்த ஊர் எல்லாம் தன்தாள் பாடி "

என்றபடியே இமயத்தில் உள்ள வடநாடு, தொண்டை நாடு, நடு நாடு, சோழ நாடு, பாண்டி நாடு, மலை நாடு ஆகிய நாடுகளில் உள்ள திவ்விய தேசங்களில் உள்ள எம்பெருமான்களையெல்லாம் நெஞ்சுருகப் பாடினார்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

இந்நாடுகளில் அடங்காத பரமபதம், திருப்பாற்கடல் இரண்டையும் சேர்த்து 86 திவ்விய தேசங்களைத் திருமங்கை யாழ்வார் பாடியருளியுள்ளார்.

108 திவ்விய தேசங்களில் 22 திவ்விய தேசங்கள் தவிர, பிற அத்தனை திவ்விய தேசங்களையும் பாடியுள்ள ஆழ்வார் இவர் ஒருவரே யாவார்.

மிகுதியான பாசுரங்களைப் பாடியவர்களில் நம்மாழ்வார் முதலிடம் பெற்றாலும், மிகுதியான திவ்விய தேசங்களைப் பாடியவர்களில் முதலிடம் பெறுபவர் திருமங்கையாழ்வார் ஆவார்.

அர்ச்சையில் மிகவும் ஈடுபட்டவர் எனும் பெருமை இதனால் இவ்வாழ்வாருக்கு வாய்த்தது.

இறைவனிடம் சரண்அடைகிறபோது, தம் வாழ்வின் முற்பகுதியில் அறியாது செய்த குற்றங்களை ஒளிவு மறைவின்றி, மனந்திறந்து எடுத்துக் கூறுகிறார். அப்போது தோன்றும் கழிவிரக்கம் நம் மனங்களை ஈர்க்கிறது.

நம் போன்ற மானுடர்களின் இயல்பும் அதுவாதலால், நமக்கென்றே ஆழ்வார் பாடிவைத்துப் போயுள்ளாரோ என்று இவர் பாசுரங்களைப் படிக்கும் போதெல்லாம் நமக்கு ஓர் உணர்வு தோன்றுகிறது.

செல்லும் திருப்பதிகளைச் சூழ்ந்தும், செல்லும் வழியிலும் உள்ள இயற்கைக் காட்சிகளைப் பாடி மகிழ்வதில், இவர் திருஞான சம்பந்தருக்கு ஒப்பாவார்.

நான்கடிகளில் இரண்டடிகளில் இயற்கையும், மீதி இரண்டடிகளில் இறைவனுமாகப் பல பாடல்கள். இவர்கள் இருவராலும் தமிழ்ப் பக்திப் பனுவல் உலகில் பாடப்பெற்றுள்ளன.

இயற்கை என்பது அழகின் வெளிப்பாடு. ஆகவே இறைவனின் இன்னொரு வெளிப்பாடு இயற்கை யென்பது இவர்தம் கருதுகோள் ஆகலாம்.

ஆகவே, இறைவனைப் போற்றும்போது இயற்கையையும் போற்றலாம். இறைவனைப் பேணுவதுபோலவே இயற்கையையும் பேணவேண்டும் என்பது இவர்கள் உள்ளக்கிடக்கையாகிறது.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

ஆழ்வாரும் கம்பனும்

ஆழ்வார்கள் இறைவனால் மயர்வற மதிநலம் அருளப் பெற்றவர்கள். கம்பனோ ஆழ்வார்களால் மயர்வற மதிநலம் அருளப் பெற்றவன் என்பது அறிஞர்கள் கருத்தாகும்.

சிந்தாமணிக் கடலிலிருந்து ஓர் அகப்பை யள்ளிக் கொண்டதாகக் கம்பனே கூறியதாக ஒருவழக்காறு உண்டு.

உண்மையில் கம்பன் ஆழ்வார்களிடமிருந்து பல அகப்பைகள் அள்ளிக் கொண்டிருக்கிறான். அதிலும் திருமங்கை ஆழ்வாரிட மிருந்து பற்பல அகப்பைகள் அள்ளிக்கொண்டிருக்கிறான் என்பது இருநூல்களையும் முறையாக ஆராய்ந்தால் மிகத் தெளிவாகத் தெரியலாகும்.

" ஆழநீர்க் கங்கை அம்பி கடாவிய
ஏழை வேடனுக்கு எம்பி நின்தம்பி; நீ
தோழன், நங்கை கொழுந்தி எனச் சொன்ன
வாழி நண்பினை உன்னி மயங்குவாள் "

(கம்ப. 5091)

என்று கம்பனின் புகழ்பெற்ற மனித நேயக் கோட்பாட்டின் அடிவேர், திருமங்கையாழ்வாரின் திருமொழியில் காலூன்றிக் கிடக்கிறது.

" ஏழை, ஏதலன், கீழ்மகன் என்னாது இரங்கி
மற்றவர்க்கு இன்னருள் சுரந்து
மாழை மான்மட நோக்கி உன் தோழி உம்பி
எம்பியென்று ஒழிந்திலை; உகந்து
தோழன் நீயெனக்கு இங்கு ஒழி என்ற
சொற்கள் வந்தடியேன் மனத்திடையிருந்திட
ஆழிவண்ண நின்அடியிணையடைந்தேன்
அணிபொழில் திரு அரங்கத்தம்மானே! "

(பெரிய திரு 5:8:1)

" தோழன் நீயெனக்கு இங்கொழி என்ற
சொற்கள் வந்தடியேன் மனத் திருந்திட
ஆழிவண்ண நின் அடியினை யடைந்தேன் "

என்னும் அடிகளில் 'தோழன் நீ எனக்கு' என்று இராமபிரான் சொல்லிய சொல், குகப் பெருமாளின் உள்ளத்தில் பதிவாகி விட்டது.

'தோழன் நீ எனக்கு' என்று இராமபிரான் குகனுக்கு உரைத்த தொடர் குகனின் அடிமனத்தில் மட்டுமன்றி ஆழ்வார்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

உள்ளத்திலும் கல்வெட்டாயிற்று. அப்படியே கம்பன் உள்ளத்திலும் பதிவாகிவிட்டது. அதனால்தான், குகன் கூற்றாக,

" தோழமை என்றவர் சொல்லிய சொல் ஒரு சொல் அன்றோ?'

என்று கம்பர் பாடமுடிந்தது.

'ஒரு சொல்' என்று கம்பர் குறிப்பது 'ஒப்பற்ற சொல் என்னும் பொருள் தந்து நிற்பதைக் காண்க.

தோழன் என்று இராமன் சொல்லிய சொல் குகன் மனத்திலிருந்து அகற்றமுடியாததாயிற்று. அதுபோலவே, 'தோழன் நீ எனக்கு' என்ற ஆழ்வார் சொல் கம்பன் மனத்திலிருந்தும் அகற்ற முடியாததாயிற்று.

'தோழன்' என்ற இந்த ஒரு சொல், இராமன், குகன், ஆழ்வார், கம்பர் ஆகிய நால்வருக்கும் மறக்க முடியாத சொல் ஆயிற்று, படிக்கிற நமக்கும் மறக்க முடியாத சொல் ஆயிற்று.

இராமனின் இந்தச் சுலபனாந் தன்மையை வெளிக்கொணர்ந்த பெருமை, திருமங்கையாழ்வாருக்கே தனியுரிமையாயிற்று.

இராமாவதாரம் நிகழ்ந்த பின்னணியைக் கம்பர் நாடகப் பாணியில் விளக்குவார். புத்திரப் பேறு யாகம் செய்வதற்கு முன்பு, விபவ அவதாரமாகிய திருப்பாற்கடலில் இராவண சங்காரம் நிகழவேண்டுமென்று தேவர்கள் வேண்ட, திருமால் 'தசரதன் மதலையாய் வருதும் தாரணி' என்று கூறியுள்ளமையை வசிட்டர் ஞானக் காட்சியால் கண்டதாகக் கூறுகிறார் கம்பர்.

வான்மீகியோ, தசரதன் யாகத்தைக் காண வந்த திருமாலிடம் தேவர்கள் தங்களுக்கு அரக்கர்களால் நேர்ந்த துன்பத்தைப் போக்க வேண்டுமென்று முறையிடுகிறார்கள் என்று கூறுகிறார்.

கம்பர் இந்த அவதாரக் காட்சியை அருமையான நாடகப் பாங்குடன் அமைத்து வெற்றி காணத் திருமங்கையாழ்வார் பாசுரமே உதவியுள்ள அருமையை உணரலாம்.

" வங்கமலி தடங்கடலுள் வானவர்களோடு
மாமுனிவர் பலர்கூடி மாமலர்கள் தூவி
எங்கள் தனிநாயகனே எமக்கருள்வாய் "

என்றும்,

" ஈசனவன் மகிழ்ந்தினிது மருவி யுறை கோயில் "
(பெரிய திரு 3:9:9)

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

ஆழ்வாரின் இந்த அழகிய பாசுரம் கம்பரின் உள்ளத்தில் ஆழப் பதிந்திருந்ததனால்தான், அவர் இராமாயண முன்னுரையே நாடகப் பின்னணி முறையில் அவ்வளவு அழகாக அமைக்க முடிந்தது என்று அறிஞர் கருதுவர்.

இறைவன் அத்தனை உலகங்களையும் அவற்றில் உலவும் உயிர்களையும் படைத்தான் என்பது ஆன்மிக உலகில் பரவலாக வழங்கும் ஒரு கருதுகோள்!

'அத்தனையும் படைத்த அந்த இறைவனைப் படைத்தது யார்?' என்பது கடவுள் மறுப்பாளர் அன்று முதல் தொடுத்து வரும் வினாவாகும்.

கம்பர் இந்த வினாவுக்கு விடையிறுக்கிறார்:

" தன்னைப் படைத்ததுவும் தானே "
" உன்னைப் படைத்தாய் நீ! " (கம்ப : 6435)

'இறைவன் எல்லாம் வல்ல ஆற்றலுடையவன் என்றால், தன்னைத் தானே படைக்கும் தனியாற்றலும் அவன் எல்லாம் வல்ல ஆற்றல்களுள் ஒன்றுதான்' சமற்காரமாகப் விடையளிக்கிறார் கம்பர்.

இந்த அருமைக் கருத்தைக் கம்பருக்கு நல்கியவரும் திருமங்கை யாழ்வாரே ஆகிறார்.

"தன்னாலே தன்உருவம் பயந்த தான் ஆய்"
(பெரிய திரு 6:7:6)

என்பது ஆழ்வார் திருவாக்கு.

அந்த ஆற்றல் மிக்க பரம்பொருளே, முத்தொழில்களையும் நிறைவேற்ற மூன்று பகுதியாக அயன், அரி, அரன் எனப் பிரிந்தது என்பது கம்பர் கூற்று:

"மூன்று கவடாய் முளைத்தெழுந்த மூலமே!"
(கவந்தன்வதை : 40)

இந்தக் கம்பரின் கருத்துக்கும் மூலவிதையிட்டவர் திருமங்கை யாழ்வாரே ஆவார் என்பதற்குக் கீழ்வரும் பாசுர அடி சான்றளித்து நிற்கிறது.

" தன்னாலே தன்உருவின் மூர்த்தி
மூன்றாய்த்தான் ஆயினான் " (பெரிய திரு 6:7:6)
" அறந்தான் ஆகித் திரிவாய்! " (பெரிய திரு 6:3:2)

என்பார் ஆழ்வார்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

"தருமத்தின் தனி மூர்த்தி" "அறத்தின் மூர்த்தி வந்து அவதரித்தான்" என்பார் கம்பர்.

'அமரர்க்கும் எய்தாத அண்டத்து இருப்பீர்!' (பெரிய திரு 3:2:9) என்று ஆழ்வார், அமரர்கட்கு உரிமையில்லாத அண்டம் ஒன்று உண்டு. அது பெருமாளின் அடியார்க்கு உரியது என்று கூறுகின்றார்.

"அண்ட மூலத்து ஓர் ஆசனத்து இருத்தினை"

(கம்ப : 10070)

என்று அந்த உலகைத் தசரதனுக்கு நல்குகிறார் கம்பர் பெருமான்.

அவதாரங்களைப் பற்றி ஆழ்வார்

"மீனோடு, ஆமை, கேழல், அரி, குறள்ஆய்
முன்னும் இராமன் ஆய்த்தான்
ஆய் பின்னும் இராமன் ஆய்" (பெரிய திரு : 8:8:10)

என்று பாசுரமிடுகிறார்.

மூன்று இராமர்கள் அவதார வரிசையில் வருகிறார்கள். முதலில் பரசுராமன்; அதன்பின் இராமன்; அதன்பின் பலராமன் என வரிசையிடுவது மரபு. இதனை,

"முன்னும் இராமனாய், தானாய், பின்னும் இராமனாய்"

என்று சுவைபடமொழிகின்றார் ஆழ்வார்.

இந்த நயத்தை ஆழ்வாரிடமிருந்து தம் காவியத்தில் பயன் படுத்திக் கொள்கிறார் கம்பர்.

தசரத இராமன், பரசுராமனுக்கும் பலராமனுக்கும் இடையில் வந்த இராமன், அதனால் 'இடை நிகழ்ந்த இராமாவதாரம்' (கம்ப: 11) என்பது கம்பர் வாக்கு ஆகிறது.

"கார் வண்ணம் திருமேனி; கண்ணும் வாயும்
கைத்தலமும் அடி இணையும் கமல வண்ணம்"

(திருநெடுந் : 18)

"மன்னுதிரு மார்பும் வாயும் அடியிணையும்
பன்னு கரதலமும் கண்களும் பங்கயத்தின்
பொன்னியல் காடோர் மணிவரைமேல் பூத்ததுபோல்"

(பெரிய திருமடல் 141-3)

ஆழ்வாரின் இந்த அழகிய வருணனையை அப்படியே எடுத்துக் கொண்டு கம்பர் அகமகிழப் பாடுகிறார்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

" கருமுகில் தாமரைக் காடு பூத்து, நீடு
இருசுடர் இருபுறத்து ஏந்தி, ஏந்து அலர்த்
திருவொடும் பொலிய ஓர் செம்பொற்குன்றின்மேல்
வருவபோல் கருடன் மேல் வந்து தோன்றினான் "

(கம்ப : 191)

பங்கயத்தின் பொன்னியல் காடு (தாமரைக்காடு) ஓர் மணிவரை மேல் (கருடனின் மேல்) பூத்ததுபோல் எனும் பெரிய திருமடல் அடிகளின் கருத்தை அப்படியே எடுத்து, கருமுகில் தாமரைக்காடு பூத்தச் செம்பொற் குன்றின்மேல் வருவ(து) போல் வந்து தோன்றினான் என்கின்றார் கமபர். முன்னோர் மொழி பொருளைக் கம்பர் பொன்னே போல் போற்றுபவர் என்பதற்கு இதைவிட வேறு சான்று வேண்டியதில்லை.

நல்ல குணங்களின் நல்ல பொருள்களின் நன்மையை யறிந்து கடைப்பிடிக்க, தீய குணங்களாகவும் தீய பொருள்களாகவும் இறைவன் இருக்கின்றான் என்று ஆழ்வார் கூறுகின்றார்.

" பாவமும் அறமும், வீடும், இன்பமும் துன்பம் தானும்
கோவமும் அருளும் எல்லாக் குணங்களும் ஆயஎந்தை "

(பெரிய திரு 4:5:9)

கம்பர் இக்கருத்தை அப்படியே ஏற்று மொழிகிறார் வாலியின் வாயால்:

" மூவர் நீ! முதல்வன் நீ! முற்றும் நீ! மற்றும் நீ!
பாவம் நீ! தருமம் நீ! பகையும் நீ! உறவும் நீ! "

(கம்ப : 4063)

" தீஎம்பெருமான்; நீர் எம்பெருமான்; திசையும் இரு நிலனும்
ஆய் எம்பெருமான்; ஆகி நின்றாய் அடியோம் காணோமால்! "

(பெரிய திரு. 4:9:5)

என்பது ஆழ்வார் திருமொழி.

எல்லாப் பொருளும் ஆகி நிற்கிறான் இறைவன்; எங்கும் நிற்கிறான் இறைவன். ஆனால் ஏழை மானுடர்களால்தான் பார்க்க முடியவில்லை! என்று இரங்குகின்றார் ஆழ்வார்.

" நீயாதி எப்பொருளும்; அவை நின்னை நிலையறியா!
மாயம் ஈது என்கொலோ!" (கம்ப : 2570)

என்று கம்பரும் வியக்கிறார்; இரங்குகிறார்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

" மை வளர்க்கும் மணியுருவம் மழைமுகிலோ
மரகதமோ என்கின்றாளால்! " (பெரிய திரு)

என்பது பரகாலநாயகி பாசுரம்.

" மையோ மறிகடலோ மழைமுகிலோ மரகதமோ
ஐயோ இவன் வடிவென்பதோர் அழியா அழகுடையான்! "
(கம்ப - 1926)

எனும் கம்பரின் புகழ்விஞ்சிய பாட்டின் மூலவிதை, பெரிய திருமொழி எனும் பூக்காட்டிலிருந்து எடுத்தது என அறிந்தால் பலர்க்கு வியப்பாயிருக்கும்!

" எஞ்சலில் இலங்கைக்கு இறை எங்கோன்தன்னை
முன்பணிந்து எங்கள் கண்முகப்பே
நஞ்சுதான் அரக்கர் குடிக்கு என்று நங்கையை
அவன் தம்பியே சொன்னான் " (பெரிய திரு : 10:2:4)

தோல்வியுற்ற அரக்கர் பாடியாடும் பொங்கத்தம் பொங்கோ!' எனும் பாசுரத்தில் எங்கள் கண் முன்னாலேயே, இராவணனிடம் அவன் தம்பி, 'நம் குடிக்கு நஞ்சு சீதை' என்று சொன்னதைக் கேட்டோம் என்கின்றனர்.

இக்கருத்தைச் சொன்னது எந்தத் தம்பியென்று அரக்கர்கள் சொல்லவில்லையாதலால், இராவணன் இரண்டு தம்பியர்களாகிய கும்பகர்ணன், வீடணன் ஆகிய இருவர் வாயிலிருந்தும் கவிச்சக்கரவர்த்தி சொல்ல வைக்கிறார் :

" திட்டிவிடம் அன்ன கற்பின் செல்வியை
விட்டிலையோ? இது விதியின் வன்மையே! "
(கும்பகர்ணன் - கம்ப : 7351)

" சனகியாம் .... நஞ்சு தின்றனர்கள் "
(வீடணன் - கம்ப. 6162)

இராவணன் முடிவுக்குப் பின், மீந்த அரக்கர்கள், வானரத் தலைவர்கள் 'நங்களைக் கொல்ல வேண்டா; எங்கள் தலைவன் செய்த தவறேயன்றி நாங்கள் என்ன தவறு செய்தோம்?' என்று கெஞ்சுகிறார்கள்.

" தையலை தகவிலி எம்கோமான் கொண்டு போந்து கெட்டான்;
எமக்கு ஓர் குற்றம் இல்லை கொல்லேல்; குலவேந்தே! "
(பெரிய திரு : 10:2:1)

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

ஆழ்வாரின் இந்த அருங்கருத்தை அப்படியே எடுத்துப் பிறிதோரிடத்தில் பயன்படுத்திக்கொள்கிறார் கம்பர் பெருமான்.

மீட்சிப் படலத்தில் சானகியை, 'உன்னைத் துன்புறுத்திய இவ்வரக்கியரைத் தீர்த்துக்கட்ட எனக்கு நீ ஒரு வரம் தர வேண்டும் தாயே!' என்று அநுமன் விநயத்துடன் பணிந்து வேண்டுகிறான்.

அரக்கியர் எல்லோரும் அஞ்சி நடுங்கி சானகியைச் சரண் அடைந்து, 'நின்பாதமே விடலம்; மெய்ச்சரண்' என்று கதறுகிறார்கள்.

''அன்னை, அஞ்சன்மின்! அஞ்சன்மின் நீர் என்று மன்னு மாருதி மாமுகம் நோக்கி, 'வேறு என்னதீமை இவர் புரிந்தார் அவன் சொன்ன சொல்லினது அல்லது - தூய்மையோய்!' என்பது கம்பர் வாக்கு (கம்ப. 9985). கம்பர் பெருமான் ஆழ்வாரின் கருத்துக்களை அப்படியே அகழ்ந்தெடுத்து, பொன் நகையில் வைரத்தைப் பதித்தாற்போல் தன் பாடல்களில் பதித்து அழகுபடுத்திக் கொள்வதில் எத்தகைய வல்லவராய் இலங்கினார் என்பது இதனாற் புலனாம்.

"செந்தமிழும் வடகலையும் திகழ்ந்த நாவர்"

(பெரிய திரு 7:8:7)

என்று இராமபிரானைத் திருமங்கையாழ்வார் போற்றுகின்றார்.

கம்பர் இக்கூற்றை அப்படியே ஏற்று

"தென் சொற் கடந்தான்; வடசொற்கலைக்கு ஓர்
எல்லை தேர்ந்தான்" (கம்ப : 1741)

என்று இராமபிரான் தென்தமிழும் வடகலையும் தீரக் கற்றவன் என்று ஆழ்வாரின் அருங்கருத்தை எடுத்து மொழிகிறான்.

"பகலவன் மீது இயங்கா இலங்கை" (பெரிய திரு. 7:8:7)

என்று இலங்கையின் உச்சிக்குச் செல்லும் திறம் அற்றவன் கதிரவன் என்கின்றார் ஆழ்வார்.

"கதிரவன் ஒளிபுகா" (கம்ப : 4857)

என்று ஆழ்வாரின் இக் கருத்தை அடியொற்றிப் பாடியுள்ளார் கம்பர்.

"கந்தனை யனையவர் கலை தெரிகழகம்" (கம்ப : 79)

என்று கோசல நாட்டு இளைஞர்கள் கந்த வேளைப் போன்றவர்களாய் அடலும் ஆற்றலும் பெற மிகப் பலகலை கற்றார்கள் என்கின்றார் கம்பர்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

இக்கருத்துக்கு முலத்தை ஆழ்வார் பாசுரத்திலிருந்தே கம்பர் எடுத்தாண்டுள்ளார்.

" திறல் முருகன் அனையார் தென்
அழுந்தையில் அற முதல்வன் " (பெரிய திரு : 7:6:10)

என்பது ஆழ்வார் திருவாக்கு.

கண்ணன் விளையாட்டும் யமுனையின் விளையாட்டும் ஒன்று போன்றன என்று ஆழ்வார் ஒரு பாசுரத்தில் ஒப்புமை காட்டுகிறார்.

" துளை ஆர் கருமென்குழல் ஆய்ச்சியர்
துகில் வாரியும், சிற்றில் சிதைத்தும், முற்றா
இளையார் விளையாட்டொடு காதல் வெள்ளம்
விளைவித்த எம்மான் இடம் " (பெரிய திரு. 3:8:8)

கம்பர் ஆற்றுப் படலத்தில் கண்ணன் செயல்களைச் சரயுநதியும் செய்வதால் சரயுவும் கண்ணனும் சமம் ஆவர் என்று பாடுகின்றார்.

" செறிநறுந் தயிரும் பாலும், வெண்ணெயும் சேந்த நெய்யும்
உறியொடு வாரிவண்டு, குருந்தொடு மருதம் உந்தி
மறிவிழி ஆயர் மாதர் வனைதுகில் வாரும் நீரால்
பொறிவரி அரவின் ஆடும் புனிதனும் போன்றதன்றே! "
(கம்ப : 26)

இவற்றால் எல்லாம் நாம் தெரிவது கம்பன் திருமங்கை ஆழ்வாரின் திருப்பாசுரக் கவிதைக் கடற்குள் மூழ்கி முத்தெடுத்திருக்கிறான் என்பதும், அதிலும் மற்றையாழ்வார்கள் எல்லோரையும்விடத் திருமங்கையாழ்வார் என்னும் கடலிலிருந்து பற்பல அகப்பைகள் மொண்டு உண்டு தேக்கெறிந்து நமக்கும் நல்கி, ஒப்பற்ற தமிழ் விருந்து படைத்தவன் என்பதும், அகப்பை களால் அள்ளத் தீரா அமுதக்கடல் திருமங்கையாழ்வாரின் பாசுரங்கள் என்பதும் தெளிவாகின்றன.

பிறநூல்களில் ஆழ்வார் கருத்துக்கள்

தம் காலத்துக்கு முன்வந்தோர் வழங்கிய கருத்துகளையும் ஆழ்வார் குறிப்பிட்டுள்ளார் என்பதையும் நாம் கருத வேண்டும்.

'நிலம், தீ, நீர், வளி, விசும் போடைந்தும் கலந்த மயக்கம் உலகம்' (91) என்று தொல்காப்பியர் மரபியலில் குறிப்பிடுவார்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

" மஞ்சுசேர் வான், எரி, நீர், நிலம், கால் இவை
மயங்கி நின்ற அஞ்சுசேர் ஆக்கை " (பெரிய திரு : 9:7:8)

என்று இதே கருத்தை ஆழ்வார் அழகுற மொழிந்துள்ளார்.

பொன்னும் மணியும் போலத் தெரியுமாறு சேர்ந்திருப்பது கலப்பு ; செப்பும் பொன்னும் போலத் தெரியாமல் சேர்ந்திருப்பது மயக்கம் என்று உரையாசிரியர் விளக்கம் இந்நூற்பாவுக்குத் தருவார்.

உடலில் ஐம்பூதங்களும் சேர்ந்தது தெரியாமல் சேர்ந்திருப்பதால், இதனை 'மயங்கி நின்ற அஞ்சுசேர் ஆக்கை' என்று அழகுறக் குறித்துள்ளார் ஆழ்வார்.

வாமனனாகச் சென்ற பெருமான் மாவலியிடம் மூன்றடி மண் கேட்டான். தன் காலில் மூன்றடி மண் கேட்டபோது இருந்த அடி குறள் அடி. அளந்ததோ விண்ணும் மண்ணுமாய் ஓங்கி நின்ற விசுவரூப அடி. சிறிய அடியைக் காட்டிப் பெரிய அடியால் அளந்தது முறையன்று என முதலில் எதிர்ப்புக்குரல் கிளப்பியவர் இளங்கோவடிகள்.

" மூவுலகும் ஈரடியால் முறை நிரம்பாவகை முடியத்
தாவிய சேவடி சேப்பத் தம்பியொடும் கான்போந்து "

(ஆய்ச்சியர் குரவை)

என்பது இளங்கோவின் சிலம்பு.

முறை திறம்பி இப்படி உலகளந்த குற்றத்தினால்தான், பாதுகையும் இல்லாமல் திருவடிகள் சிவப்பத் தம்பியோடும் பரம்பொருள் 14 ஆண்டுகள் காட்டில் திரிய நேர்ந்தது என்று குறிப்பை உள்வைத்து இளங்கோவடிகள் இங்குப் பாடியுள்ளார்.

ஆழ்வார் வெளிப்படையாகவே

" கள்ளத்தால் மாவலியை மூவடி மண் கொண்டு அளந்தான் "

(பெரிய திரு : 11:5:10)

என்று அவன் கள்ளத்தனத்தால் மண் அளந்தான் என்றே குறிப்பிடுகிறார்.

சொத்து அவனது; மண் அவனுடையது. அதனை எப்படி எடுத்தால் என்ன? என்று பேருரையாளர்கள் இதற்கு விளக்கம் அளிப்பர். தன் நிலத்தைக் கூடப் பிச்சையேற்றுப் பெறுபவன் என்று அவன் நீர்மைக் குணத்திற்கு இதனையும் சான்றாக்குவர் அவர்கள்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

" கொடுக்கிலாதானைப் பாரியே என்று
கூறினும் கொடுப்பார் இலை " (சுந்தரர் தேவாரம்)

' சின்னாட் பல் பிணிச் சிற்றறிவுடைய மனிதரைப் பாடாதீர்கள்! ஈசன் திருவடிகளையே பாடுங்கள் ' என்று சுந்தரர் தேவாரத்தில் பாடுவார்.

அதே கருத்தை,

" இப்பிறப்பு அறியீர்! இவர் அவர் என்னீர்!
இன்னதோர் தன்மை என்று உணரீர்!
கற்பகம்! புலவர் களைகண்! ஒன்று உலகில்
கண்டவா தொண்டரைப் பாடிடும்
சொற்பொருள் அறியீர்! "

(பெரிய திரு. 1:1:7)

என்று ஆழ்வாரும் மானுடரைப் புகழாது மகேசனைப் பாடுங்கள் என்று அழைக்கின்றார்.

பிரபஞ்சப் பெருவெளியில் எங்கு நோக்கினும் இறைவன் திருவுருவையே காண்கின்றோம். இக்கருத்தை நற்றிணைக் கடவுள் வாழ்த்தாகப் பாரதம் பாடிய பெருந்தேவனார் பாடிச் சென்றார்:

" மாநிலம் சேவடியாக, தூநீர்
வளை நரல் பவ்வம் உடுக்கையாக,
விசும்பு மெய்யாக, திசை கை ஆக,
பசுங்கதிர் மதியமொடு சுடர்கண் ஆக,
இயன்ற எல்லாம் பயின்று, அகத்து அடக்கிய
வேத முதல்வன் என்ப -
தீதற விளங்கிய திகிரியோனே "

(நற்றிணை - கடவுள் வாழ்த்து)

இறைவனுக்கு மண் திருவடி; மாகடல் ஆடை; வானம் உடம்பு; திசைகள் கைகள்; ஞாயிறும் திங்களும் இருவிழிகள். இக்கருத்தை அப்படியே ஏற்று ஆழ்வார் பாடுகிறார்.

" பவ்வ நீர் உடை ஆடையாகச் சுற்றி
பார் அகலம் திருவடியாப் பவனம் மெய்யா
செவ்வி மாதிரம் எட்டும் தோளா; அண்டம்
திருமுடியா நின்றான்பால் செல்லகிற்பீர்! "

(பெரிய திரு : 6:6:3:3)

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

அருஞ்செய்தி ஒன்று

❀ திருமங்கையாழ்வார் பாசுரங்களில் பிறநூல்களில் காணப்படாத சில அரிய நிகழ்வுகளும் செய்திகளும் கூறப்பட்டுள்ளன. அவறறுள் ஒன்று, இராமபிரான் அநுமானுடன் ஒரே இலையில் உண்ட நிகழ்ச்சியாகும்.

❀ சொன்ன கால எல்லை முடிய இருப்பதால், பரதன் அயோத்தியில் தீக்குளித்துவிடுவான் என்றஞ்சிய இராமபிரான் தான் வந்து கொண்டிருக்கிற செய்தியைப் பரதனிடம் உடனே போய்ச் சொல்லுமாறு அநுமானை அனுப்பினான்.

❀ அனுமான் வான் வழியாகத் தாவிச் சென்று கையினால் எரியைக் கரியாக்கி, பரதன் உயிரையும் அன்னைமார்கள் ஆருயிரையும், அயோத்தி மக்களின் ஆருயிரையும் காப்பாற்றிவிட்டு, அண்ணல் வருகிறான் என்ற செய்தியையும் சொல்லிவிட்டு, இராமனுக்குப் பரத்துவாச முனிவர் தரும் விருந்தில் கலந்துகொள்ள வந்து விட்டான்.

❀ அனுமன் வந்தபோது, அங்கு அனைவரும் இலையில் உணவருந்தியவாறு இருந்தனர். 'அனுமனுக்குத் தனியிலையிட வேண்டா; என்னுடனே உண்ணட்டும்' என்று இராமபிரான் உரைத்தான். இராமபிரான் அநுமன் மாட்டுக் கொண்டுள்ள அன்பின் உச்சியைத் தொட்டு, நம் உள்ளத்தையும் தொடும் இடம் இது.

❀ இராமபிரான் அனுமன் அன்பில் தன்னைக் கரைத்து நீர்ப்பண்டமாய் உருகி, அனுமனை நோக்கி, நீ என்னுடன் உண்க என்றான்.

❀ அனுமன் ஒரு தொண்டனுக்கே உரிய தன்னடக்கத்தோடு தனித்து உண்டான். அப்போது இராமபிரான், நீ என்னுடன் உண்ணாமல் போனாலும் நான் உன்னுடன் உண்பேன் என்று அனுமனுடன் ஓர் இலையில் உண்ண எதிர் அமர்ந்து கொண்டான்.

வாழையிலையில் நடுவில் இருக்கும் தண்டின் பள்ளத்தை இராமனும் அநுமனும் சேர்ந்து உண்ணும்போது அமைந்த கோடாக நாட்டுப்புற மக்கள் இன்றும் கூறிவருகின்றனர்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

'குருபரம் பரா சர்வார்த் சாரபூஷணம்' என்ற உ.வே.சா. நூல்நிலைய வெளியீட்டில் இராமன் அநுமன் இலையில் உண்ட செய்தி கூறப்பட்டுள்ளது.

" வாத மாமகன் மர்க்கடம் விலங்கு மற்றோர்
சாதியென்று ஒழிந்திலை: உகந்து
காதல் ஆதரம் கடலிலும் பெருகச் செய்
தகவினுக்கு இல்லை கைம்மாறு என்று
கோதில் வாய்மையினா யொடும் உடனே
உண்பன் நான் என்ற ஒண்பொருள் எனக்கும்
ஆதல் வேண்டும் என்று அடியிணையடைந்தேன்
அணி பொழில் திருஅரங்கத்துஅம்மானே! "

(பெரிய திரு : 5:8:2)

இந்த அரிய செய்தி மேற்காணும் நூல்தவிர வேறு எந்தத் தமிழ் நூலிலும் காணப்படவில்லை. வாழை இலையில் நடுவரையிருப்பது குறித்து நாட்டு மக்கள் வழங்கும் கதை, அனுமனின் அடிமைத் திறத்தையும், ஆண்டவனின் சௌலப்பியத்தையும் ஒரு சேர விளக்கும் அருமை கருதி, ஆழ்வார் இதனைப் பாசுரமிட்டருளியிருக்க வேண்டும்.

அத்யயனத் திருநாட்களை ஆக்கியவர்

திருமங்கை மன்னர், ஒப்பற்ற கவிஞர், பக்தர் மட்டும் அல்லர்; மிகப் பெரிய செயல்வீரரும் ஆவர். அதற்குத் திருவரங்கத்தைத் திரு மதிள் நகரமாக மாற்றியமைத்த அருமையே அவர் செயல் வீரத்தை உலகுள்ளளவும் செப்பி நிற்கும்.

நம்மாழ்வாரிடம் அளவற்ற பக்தி பூண்டவர் திருமங்கை யாழ்வார். நம்மாழ்வாரின் பிரபந்தங்களையும், ஏனைய ஆழ்வார்களின் அருளிச்செயல்களையும் பாடி உய்ந்து மக்கட் சாதி வீடுபேறு அடைய வேண்டும் என்று விரும்பினார். அவ்விருப்பத்தைச் செயல்படுத்த முயற்சி மேற்கொண்டார். அதற்கு அரங்கநாதனின் ஒப்புதல் பெறவேண்டும்.

தாம் பாடிய திருநெடுந்தாண்டகத்தைப் பண்ணில் இட்டுத் தேவகானமாகப் பாடினார். பாடப் பாட அவர் உடல் உருகியது. தொண்டை அடைத்துக்கொண்டது. கண்களில் கண்ணீர் பெருகியது. மேலும் பாடமுடியாமல் தவித்தார்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

ஆழ்வார் தொண்டைக்குத் தைலம் தடவுமாறு ஆணையிட்ட அரங்கநகர் அப்பன், ஆழ்வார்முன் காட்சி தந்து 'ஆழ்வாரே! உமக்கு என்ன வேண்டும் கேளும்' என்றார்.

ஆழ்வார் வேறெதுவும் வேண்டவில்லை 'தேவரீர் மார்கழி மாதத்தில் கண்டருளும் அத்யயன (மறையோதும்) உற்சவத்தில் நம்மாழ்வார் அருளிய திராவிட வேதத்தையும் திருச்செவி சாத்த வேண்டும்' என்று மட்டுமே வேண்டினார். வேறு எந்த வரமும் கேட்கவில்லை. பெருமாளும், அவ்வண்ணமே ஆகுக! என்று அருள் புரிந்தார்.

இவ்வேண்டலின் விளைவாக அத்யயன உற்சவத்தில் நம்மாழ்வாரின் திராவிட வேதம் முதலில் உட்புகுந்தது.

இராமானுசர் காலத்திற்குப் பின் மற்றைய ஆழ்வார்களுக்குப் பத்து நாள் பகல் உற்சவமும், பின், இரவு பத்து நாள் இயற்பாவுக்காக இரவு உத்சவமும், பட்டர் காலத்தில் திருநெடுந் தாண்டகத்தின் சிறப்புக் கருதி, பகல் பத்துக்கு முந்திய நாள் திருநெடுந் தாண்டக உற்சவமும் சேர்க்கப்பட்டு இன்றிருப்பதுபோல் மார்கழியில் 21 நாள் அத்யயன உற்சவம் நடைபெற்றுவருகிறது.

இந்தச் சிறப்பு முழுவதும் திருமங்கையாழ்வார்க்குப் போய்ச் சேர வேண்டியதாகும். திவ்வியப் பிரபந்தம் நாட்டில் பரவுவதற்கு அயநஉற்சவம் பேருதவி புரிந்துள்ளமை அன்பர்கள் அனைவரும் அறிந்த ஒன்றாகும்.

திருஎழு கூற்றிருக்கை

திருஎழு கூற்றிருக்கை திருக்குடந்தை ஆராவமுதனைப் பற்றியெழுந்தது. இந்நூல், மூர்த்தி சிறிதாயினும் கீர்த்தி பெரிது எனும் வகையைச் சேர்ந்தது.

இந்நூலுக்கு வியாக்கியான சக்கரவர்த்தி, பெரியவாச்சான் பிள்ளை இரண்டு பேருரைகள் இயற்றியிருக்கிறார்.

முதல் உரையின் உபந்யாசம் முடிந்தபிறகு வந்து சேர்ந்த அன்பர்களுக்காக, மீண்டும் ஒருமுறை உரையுரைத்தார். அந்த இரண்டாம் உரை 'மெனக்கிட்ட' உரையென வழங்குகிறது.

ஆழ்வாரின் எழுகூற்றிருக்கைப் பாசுரத்தில் மூழ்கி, அற்புதமான கருத்து முத்துக்களை வெளிக் கொணர்கிறது பெரிய வாச்சான் பிள்ளையின் உரை. ஒரு சோற்றுப் பதமாக ஒரு பகுதி:

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

"நாற்றிசை நடுங்க அஞ்சிறைப் பறவை ஏறி,
நால்வாய் மும்மதத்து இருசெவி
ஒருதனி வேழத்து அரந்தையை
ஒருநாள் இருநீர் மடுவுள் தீர்த்தனை"

திசைகள் நடுங்கக் கருடன் மீதேறி, மும்மதமும் இருசெவியும் உடைய யானையின் துயரை ஒரு நாள் பெரிய நீர்மடுவில் தீர்த்தாய் என்பது இதற்குப் பொதுப்பொருள்.

இதற்கு உரையாளர் சிறப்புப் பொருள்கள் ஆகிய முத்துக்களை வெளிக்கொணர்ந்து கொட்டும்போது நாம் வியந்து போகிறோம்.

ஒரு நாள் இருநீர் மடுவில் தீர்த்தனை ஒப்பற்றதோர் காலத்திலே (ஒரு - ஒப்பற்ற) அடியன் ஆன யானைக்கு வேற்று நிலமாய் அவனுக்கு விரோதியான முதலைக்குத் தன் நிலமாய் (இருநீர் என்பதற்கு நுண்பொருள் காண்கிறார். 'நெடும்புனலுள் வெல்லும் முதலை; அடும் புனலுள் நீங்கின் அதனைப் பிற' எனும் குறட் கருத்தையுட்கொண்டு, வேற்று நிலம் தன் நிலம் என்று பிரித்து உரை காண்கிறார்).

மிகுந்த நீர்ப் பெருக்கையுடைய மடுக்கரைக்கே அவ்வாபத்தின் கனத்தைக் கண்டு, அரைகுலையத் தலைகுலைய ஓடிவந்து ஆனையின் துன்பத்தைத் தீர்த்தருளினாய்.

'ஒரு நாள்' என்பதற்கு ஒப்பற்ற நாள் எனப்பொருள் கொண்டு விளக்கவுரை யருளுகிறார். (ஒரு நாள்) இப்படி எம்பெருமானையே ஓடிவரச் செய்த அதுவும் ஒரு நாளே என்று (அந்த) நாளைக் கொண்டாடுகிறார்.

முதலையின் வாயிலிருந்து யானையை மீட்டாற்போலே, சம்சாரத்தின் வாயில் விழுந்து கிடக்கும் என்னையும் மீட்கவேணும் என்று கருத்துரைக்கிறார்.

யானை கரையை நோக்கி இழுக்கிறது; முதலை நீரை நோக்கி இழுக்கிறது. இப்படியாகப் பல தேவ வருடம் போர் நடந்தது (விஷ்ணு தர்மம் 69).

யானைக்கு விரோதியான முதலை ஒன்று. எனக்கு விரோதியான இந்திரிய முதலைகள் ஐந்து. அது பலமுள்ள யானை; நான் வலிமை யற்றவன். அது சிலகாலமாக நோவுபட்டது. நான் அநாதிகாலமாக நோவு படுகிறேன். எனக்கு உதவ நீ அப்படி (அரை குலையத் தலை குலைய) ஓடிவரவேண்டாமா? என்கிறார் ஆழ்வார்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

ஒரு நீர்ப்புழுவாகிய முதலை, வலிமை மிக்க கஜேந்திரனைச் சிலகாலம் நலிந்ததைப் பொறுக்காதவன், ஐந்து இந்திரியங்களாகிற முதலைகள் அநாதிகாலமாக, வலிமையற்ற என்னை நலிவதைப் பொறுத்திருக்கலாமோ? அதைக் காட்டிலும் விரைவாக ஓடிவந்து ரட்சிக்க வேண்டாமோ என்னும் கருத்தைக் காட்டுகிறார் ஆழ்வார் என்பது இந்த நான்கு அடிகளுக்கும் உரையாளர் தந்துள்ள விரிவுரை!

உரையாளர் காட்டிய பிறகே, ஆழ்வார் மனத்தின் ஆழமெல்லாம் நமக்கு அங்கைக் கனியெனப் புரியத் தொடங்குகிறது.

பருந்தும் நிழலும் போல் பாசுரங்களின் மூலபாடங்களை ஓயாமல் அசைபோட்டு மீண்டும் மீண்டும் அவற்றையே சிந்தித்துக் கிடந்த தவத்தால் நமக்குக் கிடைத்த பெரும்பேறுகள் இந்த வியாக்கியான விரிவுரைகள்.

'ஆழ்வார்களால் வியாக்கியானங்களுக்குப் பெருமையா, வியாக்கியானங்களால் ஆழ்வார்களுக்குப் பெருமையா என்று விளங்கா நிலை நமக்கு ஏற்படுகிறது' என்பார் வைணவப் பேரறிஞர். பு.ரா. புருஷோத்தம நாயுடு அவர்கள்.

" நின் செய்கை கண்டு நினைந்தனவோ வேதங்கள்?
உன் செய்கை அன்னவைதான் சொன்ன ஒழுக்கினவோ? "
(கம்ப 3689)

என்று வேதங்கள் பற்றிக் கம்பருக்கெழுந்த ஐயம்தான் நமக்கும் இங்கு எழுகிறது என்பதில் பிழையில்லை.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

3. ஆழ்வாரும் அகத்திணையும்

திருமங்கையாழ்வார் தலைவியின் நிலையை ஏறிட்டுக் கொண்டு பாடும்போது, அவரைப் ''பரகால நாயகி'' என்றழைப்பது வைணவப் பெருமக்கள் மரபு.

அவ்வாறே நாயகி நிலையை ஏறிட்டுக் கொண்டு, பராங்குசராகிய நம்மாழ்வார் பாடும் போது, அவரைப் ''பராங்குச நாயகி'' என்றழைப்பதும் வைணவப் பெரியார்களின் மரபு.

உலகியற் காமம் போலன்றி, இது இறைவன் மேல் பெரு விருப்பம் கொள்வது ஆதலால் இதனைப் 'பகவத் காமம்' என்பர்.

இறைவனைப்பற்றிப் பாடவந்த ஆழ்வார்கள் எதற்காகக் அகத்துறைக் காதலைப்பற்றிப் பாடினார்கள் எனும் ஐயம் எழுவது இயல்பு.

இறைவனைத் தந்தையினிடத்தில் வைத்துப் பக்தி செலுத்தினால் மரியாதை கலந்த பக்தி தோன்றும். தெய்வம் என்ற உயர்நிலையில் வைத்து நோக்கின், அங்கு அச்சம் கலந்த 'பயபக்தி'யே தோன்ற இடமுண்டு. எசமானன் (முதலாளி) என்ற நிலையில் வைத்துப் பார்த்தால், அங்கு மரியாதையே தோன்றும், பக்தி தோன்றுவதில்லை. ஆனால், அவனைக் காதலன் என்ற நிலையில் வைத்து நோக்கும்போது, ஒருவருக்கொருவர் பகிர்ந்து கொள்ளத் தக்க சமநிலை அன்பு எழுகிறது. ஒத்த வயதுள்ள இரு நண்பர்களுக்கிடையேதான் இடையறா நெருக்கமும் உறவும் நம்பிக்கையும் பக்தியும் காதலும் பொங்கியெழும் வாய்ப்பு மிகுகிறது.

ஆழ்வார்கள் உள்ளத்தில் ஞானம் மிகுகிறபோது ''தானான தன்மையில்'' பேசுவார்கள். அன்பு தலையெடுக்கும் போது தானான தன்மை மாறி, தலைவியின் தன்மை மேலிட்டுப் பாடுவார்கள்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

இதனை, 'ஞானத்தில் தன் பேச்சு; பிரேமையில் பெண்பேச்சு' என்று ஆசாரிய இருதயம் கூறும்.

ஒரு கன்னிப் பெண்ணுக்கே உரிய நாணத்துடன் பரகால நாயகி வினவும் போது, நாமும் எம்பெருமானைக் கண் எதிரே கண்டு களிக்கின்ற ஒரு பரவச நிலையைத் தம் ஈரச் செந்தமிழ்ப் பாடலால் நமக்கும் உண்டாக்கிவிடுகிறார் ஆழ்வார்.

இவ்வாறு காதற் சுவைகெழுமிய அரிய காதற் பாடல்களைக் கொண்டிலங்குகிறது திருமங்கை ஆழ்வாரின் பெரிய திருமொழி

'ஆன்மிக இலக்கியத்திலேயே உள்ளத்தை உருக்கும் தெய்வீகக் காதல், ஆழ்வார் பாசுரங்களில்தான் ஈடு இணையற்ற முறையில் அமைந்துள்ளது' என்று காஞ்சி அண்ணங்கராசாரிய சுவாமிகள் கூறுவர்.

உலகியலில் ஊறித் ததும்பும் நம்மை, பகவானிடத்து பத்திமை செய்ய நமக்குப் பிடித்த காதல் வடிவில் வடித்தெடுத்து அவனை யடையச் செய்யும் முயற்சியே ஆழ்வார்களின் அகத்திணைப் பாடல்கள் ஆயிற்று.

மக்கள் தம் வாழ்வில் கொள்ளும் உலகியல் காதலைத் தெய்விகக் காதலாக மாற்றி எம்பெருமானிடம் தம்மை முற்றாகச் சமர்ப்பித்தவர் திருமங்கையாழ்வார். தாமான நிலை மாறி ஒரு பெண்ணின் நிலையை ஏறிட்டுக் கொண்டு பரகால நாயகியாக மாறிய ஆழ்வார், தமது உள்ளச் சிம்மாதனத்தில் வீற்றிருக்கும் காதலனாகிய எம் பெருமானைக் கண்டு

" அரி உருவாய் இவர் ஆர்கொலோ! "

" வேதம் உரைத்து
செந்தமிழ் பாடுவார் தாம் வணங்கும்
தேவர் இவர்கொல் "

" மாவலி வேள்வியில் மண்ணளந்த
அந்தணர் போன்று இவர் யார்கொல்? "

என்று உருவெளித் தோற்றத்தில் தாம் கண்ட இறைவனை நமக்கும் காட்டி மகிழ்கிறார்.

நம்மாழ்வார், திருமங்கையாழ்வார் பாசுரங்களில் நாயகி நிலைப் பாசுரங்கள் பின் வருமாறு அமைந்துள்ளன:

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

திருவாய்மொழியில் அகத்திணைப் பொருளில் 27 பதிகங்கள் உள்ளன. இவற்றுள் மகள் பேச்சாக 17 பதிகங்களும், திருத்தாயார் பேச்சாக 3 பதிகங்களும், தோழிகூற்றாக 7 பதிகங்களும் அமைந்துள்ளன. திருமங்கையாழ்வாரின் பெரிய திருமொழியில் 23 பதிகங்கள் அகப்பொருட் பதிகங்கள்; திருநெடுந் தாண்டகத்தில் 2 பதிகங்கள்; மடல் 2; ஆக மொத்தம் 27 பதிகங்கள் ஆகின்றன. இவற்றுள் தலைவி பேச்சாக 17; திருத்தாயார் பேச்சாக 10 பதிகங்கள். தோழிகூற்றாக எதுவும் இல்லை.

" தூவிரிய மலர் உழக்கி, துணையோடும் பிரியாதே
பூவிரிய மது நுகரும் பொறி வரிய சிறுவண்டே!
தீவிரிய மறை வளர்க்கும் புகழாளர் திருஆலி
ஏவரி வெஞ்சிலை யானுக்கு என்நிலைமை - உரையாயே! "

(பெரிய : 3:6:1)

இப்பாசுரத்தில் பரகாலநாயகி. வண்டினைப் பார்த்து, 'சிறகு விரியும்படியாக இருந்து மலர்களை மிதித்து, உன் துணைவியை விட்டுப் பிரியாமல் இருந்து பூக்கள் மலர அவற்றில் உள்ள தேனை யுண்ணுகின்ற சிறிய வண்டே! நான் துணையைப் பிரிந்து வருந்திக் கிடக்கும் போது, நீ இப்படி உன் காரியமே கண்ணாக இருப்பது தகுதியோ? எம்பெருமானிடம் எனது தனிமையையும் துன்பத்தையும் எடுத்துச் சொல்வாயாக!' என்று மனமுருக வேண்டுகின்றாள். இப்பாசுரத்தோடு இணைந்த ஒரு வரலாறு சுவையானது.

ஒரு சமயம், நஞ்சீயர் உடல் நலம் குன்றியிருக்கையில், பெற்றி என்னும் சீடர், அவர் நலம் விசாரிக்கச் சென்றார். 'இப்போது சுவாமிக்கு என்ன திருவுள்ளம்?' என்று பணிவோடு கேட்டார். 'தூவிரிய மலர் உழக்கி என்னும் பெரிய திருமொழிப் பாசுரங்களைக் கேட்கவும், பெருமானைச் சேவிக்கவும் விருப்பமாயுள்ளது' என்று நஞ்சீயர் கூறினார்.

உடனே வரம் தரும் பெருமாள் அரையர் என்பவரை அழைத்து வந்து இந்தத் திருமொழியைச் சேவிக்கச் சொல்லிக் கேட்டார்:

" தானாக நினையானேல், தன் நினைந்து நைவேற்கு ஓர்
மீன் ஆய கொடிநெடு வேள் வலிசெய்ய மெலிவேனோ?
தேன் வாய வரிவண்டே! திருவாலி நகர்ஆளும்
ஆன் ஆயற்கு என்உறுநோய் அறிய, சென்று உரையாயே! "

(பெரிய திரு. 3:6:4)

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

என்ற இந்தப் பாட்டிலே,

" தானாக நினையானேல் தன்நினைந்து நைவேற்கு
மீன்ஆய கொடிநெடுவேள் வலி செய்ய மெலிவேனோ? "

என்னும் அடிகளை எடுத்தோதி,

'நோவுபடுவதற்கு முன்பே வந்து உதவாமல் போனாலும், நேர்ந்த நோயை நீக்க வாகிலும் வரலாகாதோ?' என்றருளிச் செய்து மிகவும் வருந்தினாராம் நஞ்சீயர் - ஆழ்வார்கள் வாக்கே வாழ்வாக வாழ்ந்திருக்கிறார்கள் இப் பெரியோர்கள்!

இவ்வரலாற்றை நோக்கும்போது, ஆசாரியப் பெருமக்களுக்கு உண்ணும் சோறும், பருகும் நீரும், பிணியுற்றால், அது தீர்க்கத் தின்னும் மருந்தாகவும் ஆழ்வார்கள் பாசுரங்கள் உதவிவந்துள்ளன என்பது தெள்ளத்தெளிய நமக்குத் தெரிகின்றது.

எம்பெருமானை யடைய வேண்டும் என்று பேரார்வம் கொண்ட பரகால நாயகி, காக்கை, கிளி, கோழி முதலியவற்றைக் விளித்து, எம்பெருமான் என்னையடைய அவனைக் கூவியழையுங்கள் என வேண்டிக்கொள்கிறாள். கோழியைப் பார்த்து அவள் கூறும் பாசுரம் இது:

" கோழி கூவென்னு மால்
தோழி! நான் என் செய்கேன்?
ஆழி வண்ணர் வரும் பொழுதாயிற்று
கோழி கூவென்னு மால் "

(பெரியதிரு : 10:10:6)

பரகாலநாயகி தோழியை விளித்துரைக்கின்ற இனிய பாசுரம் இது.

'வாராய் தோழி! கோழியானது 'கூ'வென்று கூவுகின்றது. கடல் வண்ணனான எம்பெருமான் இங்கு வந்து சேருகிற வேளை யாயிற்று, மகிழ்ச்சி. விடிந்தது என்று மறுபடியும் கோழி கூவென்று கூப்பிடப் போகிறதே! நான் என்ன செய்வேன்!'

கண்ணன் முதலில் கோழி கூவியதும் கூடியிணைவதும், மறுபடியும் அடுத்த விடிகாலம் வந்ததைக் குறித்துக் கூவும்போது அவளைவிட்டு அவன் பிரிவதும் வழக்காயிருந்தது.

இந்நியதியை யறிந்த பரகால நாயகி, தன்தோழியை நோக்கி, 'கோழி கூவுவதால் கடல்வண்ணன் என்னோடு கூடவரும் பொழுதாயிற்றென்று' மகிழ்ந்து சொன்னாள்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

அப்படிக் கண்ணனோடு கூடியிருந்த காலம் குறைவாகத் தோனிறியதால், அதற்குள் கோழி மீண்டும் கூவ, 'ஐயோ! என் தோழி! நான் என் செய்வேன்! மீண்டும் கோழி கூவினால் மாயக் கண்ணன் ஓடிப் போவானே!' என்று ஏங்கிக் கூறுகிறாள் பரகால நாயகி.

" கண்ணன் கோழியை மடியிலே
இட்டுக் கொண்டு வரும் போலே காணும் "

என்று பட்டர் இதற்கு நயம் அருளிச் செய்வாராம்.

" குக்கூ என்றது கோழி; அதன் எதிர்
துட்கென்றது என் தூய நெஞ்சம்
கேள் போல் காதலர்ப் பிரிக்கும்
வாள் போல் வைகறை வந்தன்றால் எனவே!"

என வரும் குறுந்தொகைப் பாடல் இங்கு நினைத்தற்கு உரியது.

பாசுரங்களில் இழையோடும் ஆழ்வார் திருவுள்ளக் குறிப்பனைத்தும் கூர்மதியால் கண்டோதும் பட்டரின் ஞானத்தை இப்பாசுரத்திலும் கண்டு களிக்கிறோம்.

திருமடல்கள்

திருமங்கை ஆழ்வாரின் சிறிய திருமடல், திருக்கண்ணபுரத்துச் சௌரிராசப் பெருமானைப்பற்றிப் பாடுகிறது. பெரிய திருமடல், அர்ச்சை வடிவில் உள்ள திருநறையூர் நம்பி தொடர்பாக அருளப்பெற்றது.

நாயகன் அல்லது நாயகி எதிர்த்தலையை (நாயகனை) பெறாத கோபத்தாலே, நாயகன் அல்லது நாயகியை உலகெங்கும் தூற்றத்துணியும் துணிவை வெளிப்படுத்துவது 'மடலூர்தல்' ஆகும்.

நாயகி பாவனையை அனீடந்த திருமங்கையாழ்வார், இவ்விரு மடல்களிலும் இத்துணிவை வெளிப்படுத்துகிறார். காதல் கைமீறும்போது, தன்னியல்பை மறப்பதாலே, ஏற்படும் வரம்பு மீறித் துணியும் செயல்களில் மடலூர்தலும் ஒருவகையாகும். நாணம், அடக்கம் முதலியவற்றைக் காமம் அடக்கிவிடும்.

" காமக் கணிச்சி யுடைக்கும்; நிறையென்னும்
நாணுத் தாழ் வீழ்த்த கதவு"

என்பார் வள்ளுவனாரும்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

நாணமும், அடக்கமும் இல்லையேல், பெண்மை இல்லையாகிவிடும். அதனால், தமிழ் இலக்கண, இலக்கியங்களில் மடலூர்வதற்குப் பெண்மையை அநுமதிக்கவிலை.

" எத்துணை மருங்கினும் மகடூஉ மடல்மேல்
பொற்புடை நெறிமை இன்மையான் " அகத் : 38

என்பது தொல்காப்பியம்.

" கடலன்ன காமம் உழந்தும் மடலேறாப்
பெண்ணிற் பெருந்தக்க தில் " (திருக்குறள் : 1137)

என்பார் திருவள்ளுவனாரும்.

தமிழ் நூல்களில் பெண்களின் நாணத்தைக் கருதி, பெண் மடல் ஏறுதல் தகாது என்று கூறியுள்ள கூற்றைத் தாம் ஏற்பதற்கில்லையென்று ஆழ்வார் நாயகி தம் காதல் மிகுதியாலே கூறுகிறார்.

" அன்ன நடையார் அலர் ஏச ஆடவர் மேல்
மன்னும் மடலூரார் என்ப தோர் வாசகமும்
தென்னுரையிற் கேட்டறிவதுண்டு அதனை யாம் தெளியோம்
மன்னும் வடநெறியே வேண்டினோம் "
(பெரிய திருமடல் : 38-41)

வடநெறியில் பெண்களும் மடலேறலாம் என்றுள்ளது. அவ்வட நூல் நெறியினையே வேண்டுமென்று வேண்டுகின்றோம் என்று பரகால நாயகி வேண்டுகின்றாள்.

" வாரார் வனமுலை வாசவதத்தை யென்று
ஆராலும் சொல்லப் படுவாள் - அவளும்தன்
பேராயம் எல்லாம் ஒழியப் பெருந்தெருவே
தாரார் தடந்தோள் தளைக்காலன் பின் போனாள்
ஊரார் இகழ்ந்திடப் பட்டாளே? "
(சிறிய திருமடல் : 66 : 69)

என்பது முதலாகக் காதலுக்காக நாணம் துறந்து சென்றவர்கள் இகழ்ச்சி அடைந்தார்களா என்று பரகால நாயகி கேட்கின்ற போது நம் வாயடைத்து நிற்கிறோம்.

"ஆசை கரை கட்டாக் காவிரி போல் பெருகி வரும் போது, அது நூல் வரம்புகளைத் தகர்த் தெறிந்து விடும் என்னும் கருத்தின் நயம் சுவை மிக்கது" என்பார் பெரியார் எஸ். கிருஷ்ணசாமி ஐயங்கார்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

ஆழ்வார் ஏன் இருமடல்களைப் பாடினார்? விடை வருகிறது:

'சிறிய திருமடலிலே இவ்வாழ்வார் கண்ணன் விஷயமாக மடலூரத் துணிந்தார். அவன் காலாந்தரத்தில் (முன்யுகத்தில்) இருந்தவனாய், தானும் ஒக்க மடலெடுக்கக் கூடிய சுணைசேடனாய் (உணர்ச்சியில்லாத மழுங்கனாய்) இருந்ததனாலே முதல் மடல் பலிக்கவில்லை' என்று கருதினார் ஆழ்வார்.

நீர்மையின் எல்லை நிலமாய், தம் காலத்திலேயே விளங்கிய அர்ச்சாவதார வடிவனாகிய திருநறையூர் நம்பிமேல் பெரிய திருமடல் எடுக்கிறார்.

''மடலூர்தும்'' (திருவாய் : 5:3:9) என்ற நம்மாழ்வாரைப் போல, இவரும் எம் பெருமானை வரவழைப்பதற்காக மடலூர்வதாக இம்மடல்களில் பயமுறுத்துகிறாரே யொழிய உண்மையில் மடலூரவில்லை.

பொறுமையின் எல்லை நிலத்துக்குச் சென்ற காதலர்கள் எம்பெருமானை மிரட்டிப் பணிய வைக்கும் முயற்சியாகத் தோன்றினும், இம்மடலூர்தல் அவர்களின் அன்பின் அளவிலாக் கனத்தை உலகு எடைபோடச் செய்யும் அரிய முயற்சியாகிறது.

அகத்துறையில் அமைந்த ஆழ்வாரின் பாடல்களில் தமிழ் கொஞ்சி விளையாடுவதைப் பார்க்கலாம். ஆழ்வார் விரைவில் பரமபதம் செல்ல விரும்பினார். ஆனால் பெருமானின் விருப்பம் வேறுவிதமாக இருந்தது.

ஆழ்வாரிடம் தான் பாராமுகமாக இருந்தால் மேலும் மேலும் ஆழ்வாரின் ஈரச்செந்தமிழ்ப் பாசுரங்களைக் கேட்டு மகிழலாம் என்ற ஆசை காரணமாக எம்பெருமான் வாளா இருந்தான்.

அவன் உளக்குறிப்பை யறியாத ஆழ்வார், பரகால நாயகியாக மாறி முதற்கட்ட நடவடிக்கையாகப் பெருமானுக்கு எச்சரிக்கை செய்வது போல், 'சிறிய திருமடலை' வரைகிறார். இதற்கும் பெருமான் செவிசாய்க்காத காரணத்தால் ஆழ்வார் எம்பெரு மானுக்கு மற்றொரு கடிதம் வரைகிறார். அது தான் ''பெரிய திருமடல்'' ஆயிற்று.

இம்மடலின் வழியாக, ஆழ்வார் பெருமானை மிரட்டும் தோரணையில், பெருமான் முன்னைய அவதாரங்களில் சூர்ப்பணகையின் மூக்கையரிந்ததையும், தாடகையைக்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

கொன்றதையும் இந்நாட்டார்க்கு ஒவ்வாத பெண் கொலை புரிந்ததைப் பறைசாற்றி உலகறியச் செய்வேன் என்று ஆர்ப்பரிக்கிறார்.

சிறிய திருமடலில், கார்மேகம் அனைய எம்பெருமானின் திருவேங்கடம், வடமதுரை ஆகிய திருத்தலங்கள் தோறும் அவனது ஆயிரம் நாமங்களைப் பிதற்றிக் கொண்டு பெரியதெருவழியே ஊரில் உள்ள அனைவரும் பழித்தாலும், தான் மடலூராது ஒழிய மாட்டேன் என்று பரகால நாயகி பிதற்றுகிறாள்.

" ஊராது ஒழியேன் உலகறிய ஒண்ணுதலீர்!
சீரார் முலைத்தடங்கள் சேரளவும் - பாரெல்லாம்
அன்றோங்கி நின்றளந்தான் நின்ற திருநறையூர்
மன்றோங்க ஊர்வன் மடல் "

இது சிறிய திருமடலின் தொகு பொருளாகக் கம்பர் இயற்றிய பாடலாகும்.

சிறிய திருடமலுக்கு அவனிடமிருந்து மறுமொழி பெறாத பரகாலநாயகி சிறிய திருமடலில் தெளிவுபடக் கூறாதவற்றை யெல்லாம் தெளிவுபடக் கூறி, 'பெரியதிருமடல்' வரைகின்றாள்.

அவன் உறையும் திருப்பதிகள்தோறும் சென்று என் நிலைமையை அறிவிப்பேன். அவன் அப்பொழுதும் இரங்கானாகில், அவனை நான் சும்மாவிடப் போவதில்லை.

" மின்னிடையார் சேரியிலும், வேதியர்கள் வாழ்விடத்தும்
தன்னடியார் முன்பும் தரணி முழுதாளும்
கொன்னவிலும் வேல்வேந்தர் கூட்டத்தும், நாட்டகத்தும் "

போய்ப் பரகால நாயகி என்ன செய்வாளாம்?

தான் முன் நாள்
மின்னிடை ஆய்ச்சியர் தம் சேரிக்களவின்கண்
துன்னுபடல் திறந்து புக்குத் தயிர் வெண்ணெய்
தன்வயிறார விழுங்கக் கொழுங் கயற்கண்
மன்னுமடவார்கள் பற்றியோர்வான் கயிற்றால்
பின்னும் உரலோடு கட்டுண்ட பெற்றிமையும் "

.... இன்னும் இன்னும் எத்தனை எத்தனை அட்டுழியங்கள்! அவன் செய்த அத்தனையையும் உலகுக்கு அறிவித்து மடலூர்ந்தே தீருவேன்...

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

அவன் செய்யவேண்டியதைச் செய்யானாகில், நான் செய்யத் தகாததைச் செய்வேன்; நான் இருக்குமிடம் அவன் வரவேண்டியிருக்க, அவன் இருக்குமிடம் நான் செல்கிறேன்....

" என்னிலைமை யெல்லாம் அறிவித்தால், எம்பெருமான்
தன்னருளும் ஆகமும் தாரானேல் - பின்னைப் போய்
ஒண்துறை நீர் வேலல உலகறிய ஊர்வன்நான்
வண்டறை பூம் பெண்ணை மடல் "

(கம்பர் சாத்துப் பாடல்)

மாயோனை வாள்வலியால் மந்திரங்கொண்ட மங்கை மன்னர், பெண் ஆனாலும் முரட்டுப் பத்திமையே முற்றி நிற்பதை அவர் இருதிருமடலும் விளக்கி நிற்கின்றன. இந்த இருமடல்களையும் ஊன்றிக் கற்குந்தோறும் தமிழின் இனிமையையும் தமிழனாகப் பிறந்ததன் அருமையையும் குறிக்க வியப்புப் பெருகிக் கொண்டே போகும்.

திருநறையூர்த் திருத்தலத்தை, 'திருமடல் பரிசு பெற்ற தலம்', என்றே பெரியோர் கூறுவர். திருமடல் பிரபந்தம் பாடி ஏத்தியதற்காக ஆழ்வார்மேல் பேருவகை கொண்ட திருவரங்கத்தில் வதியும் அரங்கநாதன், ஆழ்வாருக்குத் தீர்த்தம், திருமாலை, பரிவட்டம், சடகோபம் போன்றவற்றை அளித்து, 'ஆழ்வீர்! திருமடல் பிரபந்தங்கள் நமக்கு அருளிச் செய்தால் ஆகாதோ?' என்று கேட்டானாம். அதற்கு ஆழ்வார், எம்பெருமான் முன் பணிந்து, வாய் புதைந்து நின்று, திருநறையூர் நம்பிக்குத் திருமடலும், அரங்கநாதர் அப்பனாகிய உமக்குத் திருமதிலும் அமைந்தது. 'மதில் இங்கே; மடல் அங்கே!' என்று விடையளித்தாராம் ஆழ்வார். இந்நிகழ்விலிருந்து ஆழ்வாரின் திருமடல்கள் இரண்டின் அருமை பெருமைகளைத் தெரிந்துகொள்ளலாகும்!

தேரும் போயிற்று

பரகாலநாயகியின் சுற்றத்தார் அனைவரும் ஒருங்கு திரண்டு 'நாங்கள் சொன்ன வார்த்தைகளைக் கேளாமல், அவன் சொன்ன வார்த்தைகளையே கேட்டாய். இப்பொழுது நாங்கள் சொன்னவை மெய்யாகி; அவன் சொன்னவையெல்லாம் பொய்யாயின. இனிமேலாகிலும் எங்கள் வார்த்தைகளைக் கேள்!' என்கிறார்கள்; நாயகி, 'அவன் சொன்ன பொய்யே எனக்கு மெய்; அதையே நம்புவேன்' என்கிறாள்:

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

" வில்லாய் இலங்கை மலங்கச் சரம்துறந்த
வல்லாளன் பின்போன நெஞ்சம் வருமளவும்
எல்லாரும் என்றென்னை ஏசிலும் பேசிலும்
புல்லாணியெம் பெருமான் பொய்கேட்டிருந்தேனே "

(பெரிய திரு : 9:4:5)

எம்பெருமானைத்தவிர, மற்றவர்கள் மெய்யுரைத்தாலும் எனக்கொன்றும் ஆகப்போவதில்லை. அவன் பொய்யுரைத்தாலும் நான் விடப்போவதில்லை என்கிறாள் பரகாலநாயகி. அவள் பற்றின் ஊற்றத்தை என் என்பது! 'இராமாவதாரத்தில் மெய்யும் கிருஷ்ணாவதாரத்தில் பொய்யுமே நமக்குத் தஞ்சம்' என்று பட்டர் சுவையாக அருளிச் செய்வார்.

பொய்யாகட்டும்; மெய்யாகட்டும்; அதில் ஒரு விசாரணை இல்லை. சொன்னது எம்பெருமானுடைய மொழிகள் என்பதனையே பற்றிக் கொண்டு உயிர்வாழ்பவர்கள் பக்தர்கள் என்பதனைப் பரகால நாயகியாக நின்று ஆழ்வார் விளக்கியுள்ள திறம் அழகானது. ஆழ்வார் பாசுரங்கள் வேறு; வாழ்வு வேறு என்னும் இருநிலையில் வாழாமல், ஆழ்வார் சொல்வதே வாழ்வு எனக் கொண்டு, ஆழ்வார் சொற்களோடு இரண்டறக் கலந்து வாழ்ந்திருக்கிறார்கள் ஆழ்வார் அடியார்கள்.

" மாரிமாக்கடல் வளைவணற்கு இளையவன்
வரைபுரை திருமார்பில்
தாரின் ஆசையில் போயின நெஞ்சமும்
தாழ்ந்தது; ஓர்துணை காணேன்
ஊரும் துஞ்சிற்று; உலகமும் துயின்றது;
ஒளியவன் விசும்பு இயங்கும்
தேரும் போயிற்று; திசைகளும் மறைந்தன;
செய்வது ஒன்று அறியேனே! "

(பெரிய திரு : 8:5:2)

'எம்பெருமான் திருமார்பில் அணிந்துள்ள மாலையின் மீது கொண்ட மையலால் அவன் பின்போன என் நெஞ்சம் இன்னும் திரும்பி வரவில்லை. எனக்குத் துணையாக இதுவரை இருந்த என் நெஞ்சமும் என்னை விட்டுப் போய்விட்டது. எனக்கு உற்ற துணையாக இருந்த எம்பெருமானும் என்னை அலட்சியம் செய்து விட்டான். எனக்குத் துணையாவார் ஒருவரும் இல்லை.

'உண்டியே உடையே உகந்தோடும் உலகினர் இவர்கள். உண்ணும் சோறும் பருகும் நீரும் கண்ணன் எம்பெருமான்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

என்றிருக்கிறவள் நான். எப்படி இவர்களோடு நான் பொருந்தி வாழ்வது? என்றாலும் யாருடனாவது எதையாவது பேசிப் பொழுதைப் போக்கலாம் என்றால் ஊராரும் உலகத்தாரும் தாங்கள் விரும்பிய இன்பத்தைப் பெற்றுக்கொண்டு உறங்குகிறார்கள். உலகப் பொருள்கள் எவற்றையாவது பார்த்து உரையாடலாம் என்றால், இருள் கவ்வியதால் ஒரு பொருளும் தெரிவதில்லை. என் செய்வேன்!' என்று பரகாலநாயகி கதறும் கதறல் இது.

நாயகியின் நிலை கண்டு கற்கும் நாமும் அவளோடு சேர்ந்து கதறலாம் போல நெஞ்சு துடிக்கிறது. இப்பாசுரம் கற்பார் நெஞ்சைக் கதற வைக்கும் ஆற்றலுடையது என்பதற்கு அழியாத ஒரு சான்று உள்ளது.

எம்பெருமானாரின் அரியசீடர், பிள்ளை யுறங்கா வில்லிதாசர் திருநாட்டுக்கு எழுந்தருளிவிட்டார். அவருடைய திருவுடல் திருத்தேரில் ஏற்றப்பட்டுத் தெருவுலாச் செல்கிறது.

உறங்கா வில்லிதாசரின் திருத்தேவியாரான பொன்னாச்சியார், பிரிவாற்றாமைப் பாசுரமாகிய பரகாலநாயகியின் இத் திருமொழியை நெஞ்சால் நினைத்து வாயால் பாடி வந்துகொண்டிருந்தார். இரண்டாம் பாசுரமாகிய இதனை அநுசந்தித்துக்கொண்டிருந்த பொழுது, நாயகரை ஏற்றிய தேர் விரைவாகச் சென்றதனால், அவர் திருவிழிப்பார்வையிலிருந்து மறைந்துவிட்டது.

அதற்குத் தகுதியாகப் பொன்னாச்சியார் அப்பொழுது சொல்லிக் கொண்டிருந்த பாசுரத்தின் இறுதியடிகள் இவை:

" தேரும் போயிற்று; திசைகளும் மறைந்தன;
செய்வ தொன்றறியேனே!'

என்று அவர் திருவாய் உச்சரித்தவாறே சாய்ந்தார்; பொன்னாச்சியார் உயிரும் போயிற்று.

உடையவர் உருவாக்கிய தொழு குலமாகிய தொண்டக் குலத்திற்கு, ஆழ்வார்கள் பாசுரங்கள் வெறும் பொழுதுபோக்குப் பொருளாக இருக்கவில்லை. பொழுதும் அவையே; போக்கும் அவையேயாக இருந்திருக்கின்றன என்பது இந்த அரிய நிகழ்ச்சியால் புரிந்துகொள்கிறோம்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

4. பேருரையாளர்கள் கண்ட நயவுரைகள்

வைணவ சமயத்திற்கே கிடைத்த தனிப்பெரும் சொத்து ஆசாரியப் பெருமக்கள் அருளிப்போன பேருரைகள்.

ஆழ்வார்கள் இறைவனால் மயர்வற மதிநலம் அருளப் பெற்றவர்கள். அவர்களைப் போலவே வியாக்கியான உரையாளர்களும் இறைவனுடைய திருவருளுக்கு முற்றும் இலக்காய், ஆழ்வாருடைய பேரருளுக்கும் இலக்கானவர்கள். வடமொழி, தென்மொழி ஆகிய இருமொழிகளிலும் பேரறிவு படைத்தவர்கள்.

ஆழ்வார்களுடைய உள்ளக் கடலில் மூழ்கிக் கருத்து முத்துக்களை வெளிக் கொணர்ந்து மக்களுக்கீந்து மகிழ்பவர்கள். தாங்கள் கண்டெடுத்த கருத்துக்களை விளக்க முன்னோர் சம்வாதங்களையும், ஐதிகங்களையும் பொருத்தமாக எடுத்தாண்டு நம்மை மகிழ்விப்பார்கள்.

திருமங்கையாழ்வார் பிரபந்தங்களுக்கு வியாக்கியான சக்கரவர்த்தி பெரியவாச்சான் பிள்ளையும், பிற ஆசாரியர்களும் நல்கிய நயவுரைகள் நம்மைப் பேரின்பத்தில் திளைப்பிக்க வைப்பவை. சிலவற்றை மட்டும் இப்பகுதியில் காண்கிறோம்.

" உடம்புஉருவில் மூன்று ஒன்றாய் மூர்த்தி வேறாய்
உலகுய்ய நின்றானை; அன்றுபேய்ச்சி
விடம்பருகு வித்தகனை; கன்று மேய்த்து
விளையாட வல்லானை; வரைமீ கானில்
தடம் பருகு கருமுகிலை; தஞ்சைக் கோயில்
தவநெறிக்கோர் பெருநிலையை; வையம்காக்கும்
கடும் பரிமேல் கற்கியை நான்கண்டு கொண்டேன்
கடிபொழில்சூழ் கடல்மல்லைத் தலசயனத்தே.
(பெரிய திரு : 2:5:3)

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

வைணவத்தில் சிறப்பித்துக் கூறப்படும் ஒன்பது தொடர்புகளில் (நவவித சம்பந்தம்) சரீர - சரீரி பாவனையும் ஒன்று. அத்தொடர்பை, இப்பாசுரத்தில் அழகுற மொழிகிறார் ஆழ்வார்.

சரீர சரீரி பாவனையில் பார்க்குங்கால் சிவன், திருமால், பிரம்மன் என்னும் மூன்று தத்துவங்களும் ஒன்றாக முடியும், உலகு உய்ய வேண்டுமென்றால், படைத்தல், காத்தல், அழித்தல் எனும் முத்தொழிலும் வேண்டும்; அந்த முத்தொழிலையும் முறையுறச் செய்வதற்காக பிரமன், திருமால், சிவன் எனும் மூன்று வடிவில் காட்சியளிக்கின்றான் பெருமான் என்று (சரீர-சரீரி பாவனை) உடல் உயிர்க் கோட்பாட்டை இப்பாசுரத்தில் அருமையாக விளக்குகின்றார் ஆழ்வார். இவர் கருத்தை அப்படியே ஏற்று 'மூன்று கவடாய்க் கிளைத் தெழுந்த மூலம்' என்று கம்பரும் மொழிவார்.

இந்தப் பாசுரத்திற்கு நஞ்சீயர் விளக்கவுரையாற்றுகையில், 'கன்று மேய்த்து விளையாட வல்லானை, வரைமீகானில் தடம்பருகு கருமுகிலை,' எனும் அடிகளுக்கு விளக்கவுரை சொல்லிக் கொண்டிருக்கையில் அதனைக் கேட்டுக்கொண்டிருந்த பிள்ளை யழகிய மணவாளப் பெருமாள் அரையர் என்பவர், 'இந்த இடத்திற்குப் பட்டர் அருளிச் செய்யும் பொருள் இதுவன்றே!' என்று பட்டர் அருளிய உரையை உரைத்தார்.

அவ்வுரை இது - 'வரை மீ கானில் தடம்பருகு கருமுகிலை' என்பது - மலை மீதுள்ள காடுகளில் கண்ணன் கன்றுகளை மேய்த்துக் கொண்டிருப்பான். கன்றுகளுக்குக் களைப்பால் நீர் வேட்கை எழும். அங்குள்ள தடாகங்களில் நீர்பருகப் போகும். நீரின் உள்ளே உள்ள ஆழம் தெரியாமையால் உள்ள இறங்கி நீர்பருகக் கன்றுகள் அஞ்சி நிற்கும். அப்போது கண்ணன் முழங்கால் அளவு நீரில் இறங்கித் தன் கைகளைப் பின்னே கட்டிக் கொண்டு தலையைக் குனிந்து நீரைப் பருகிக் காட்டுவானாம். அவன் பருகும் கோலத்தைக் கண்டு, கன்றுகளும் நீரில் இறங்கி, வாய் வைத்துக் குடித்து மகிழுமாம். கண்ணன் நீர் பருகும் போது, தடாகத்திலே ஒரு மேகம் படிந்தாற் போல இருக்குமாதலால் 'தடம் பருகும் கார் முகிலை' என்று ஆழ்வார் அக்காட்சியை ஓவியமாக்கிக் காட்டியுள்ளார்.

இப்பகுதிக்கு இவ்வாறு பட்டர் பெருமான் கூறிய நயவுரை, கண்ணபிரானின் நீர்மையாகிற சுலபனாந்தன்மையை (சௌலப்பியத்தை) அழகுறக் காட்டி நிற்கின்றது.

" கன்று மேய்த்து இனிது உகந்த காளாய்! "

(தி.நெ.தா. 21)

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

என்று திரு நெடுந் தாண்டகத்தில் ஆழ்வார் உரைப்பார். நித்திய சூரிகளைக் காப்பதைக் காட்டிலும் கன்று மேய்ப்பதையே மிக உகந்த செயலாகக் கண்ணன் கருதுகிறான். தன்னைக் காத்துக் கொள்ளும் அறிவுடைய உயிர்களைக் காப்பதிலும் தன்னைக் காத்துக் கொள்ளும் அறிவற்ற உயிர்களைக் காப்பது மகிழ்வுதரும் செயலாகும்.

கண்ணன் மற்றவர்களைக் காப்பதிலும் இடக்கை வலக்கையறியாத ஆயர்களைக் காப்பதில் மகிழ்ச்சியடைவான்; ஆயர்களிலும் சுதந்தரம் குறைந்த ஆய்ச்சியர்களைக் காப்பதில் இன்னும் இன்னும் மகிழ்ச்சியடைவான். ஆய்ச்சியர்களிலும் அறிவும் சுதந்தரமும் குறைந்த பசுக்களைக் காப்பதில் அதிக மகிழ்ச்சியடைவான்; பசுக்களிலும் தன்னைக் காத்துக் கொள்ளும் திறம் குறைந்த கன்றுகளைக் காப்பதில் மிகுமகிழ்வு கொள்வான். 'கன்று மேய்த்து இனிது உகந்த காளாய்!' என்ற ஆழ்வாரின் தொடருக்குள் மூழ்கி ஆசாரியர்கள் கண்டுபிடித்துவந்த முத்துக்கள் இவை!

இறைவன் தீனதயாளன் என்னும் அருங்கருத்தை, ஆழ்வார் உள்ளம் புகுந்து எத்தனை அழகாக வெளிக் கொணர்ந்து தந்துவிட்டார்கள். இந்த ஆசாரியப் பெருமக்கள்! ஆழ்வார்கள் மனக் கடலுக்குள் புகுந்து மண்டிக்கிடந்த முத்துக்களை வாரிவந்து நீரில் முழுகத் தெரியாத நம் போலியருக்கு அள்ளிக் கொடுத்த தொழிலையன்றோ இந்த ஆசாரியப் பெருமக்கள் உரையாளராகிப் புரிந்திருக்கிறார்கள்!

முத்துக்கள் கொட்டிக் கிடக்கும் கடல் ஆழ்வார் பாசுரம். அவற்றை மூழ்கி எடுத்துவந்து நம்முன் கொட்டி மகிழ்ந்தவர்கள் ஆசாரியப் பெருமக்களாகிய வியாக்கியான கர்த்தர்கள்.

திரு நெடுந் தாண்டகத்திலே, பரகாலநாயகி கண்ணனை நினைத்து உருகுகிறாள். அவள் வருகைக்குத் தவித்து ஏங்குகிறாள்:

"கன்று மேய்த்து இனிது உகந்த காளாய்! என்னும்
கடிபொழில் சூழ் கணபுரத்து என்கனியே! என்றும்
மன்று அமரக் கூத்தாடி மகிழ்ந்தாய்! என்றும்
வடதிருவேங் கடம்மேய் மைந்தா! என்றும்
வென்று அசுரர் குலம் களைந்த வேந்தே! என்றும்
விரிபொழில் சூழ்திருநறையூர் நின்றாய்! என்றும்
துன்று குழற் கருநிறத்து என்துணையே! என்றும்
துணைமுலைமேல் துளி சோரச் சோர்கின்றாளே! "

(திரு நெடுந். 16)

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

வானுலகாம் பரமபதத்தில் வாழும் நித்திய சூரிகளையும், சனகாதி முனிவர்களையும், இடக்கை வலக்கையறியா ஆயர்களையும் நீ காத்தவன். அந்த ரட்சகச் செயலையெல்லாம் கண்டு நீ என்னை ரட்சிப்பாய் என்று நான் ஆறியிருக்கவில்லை.

அறிவுக் கட்டுக்கு மேல் எல்லை நிலமான கன்றுகளை மேய்த்துக் காத்தவனே! என்னை நீ எப்படிக் கைவிடுவாய் என்று பொறுத்திருக்கிறேன்.

இறைவன் ஆயர்பாடியில் குடக்கூத்தாடி மகிழ்கிறவன். அதனை நினைத்து 'மன்று அமரக் கூத்தாடி மகிழ்வாய்' என்று அழைக்கிறாள் நாயகி. இத்தொடருக்கு விரிவுரை செய்கிறார் பெரிய வாச்சான் பிள்ளை. 'குடக் கூத்து ஆடுவதுதான் பகவானுக்கு இலக்கணமோ?' என ஒரு கேள்வியை எழுப்பிக்கொண்டு விடையிறுக்கிறார் வியாக்கியான சக்கரவர்த்தி.

அந்தணர்கள் ஐசுவரியம் மிகுந்தால் யாகங்களைச் செய்யத் தொடங்குவர். உலகியல் இன்பம் விரும்பிகள், செல்வம் மிகுந்தால் அழித்தழித்து விவாகம் செய்துகொள்வர்; இவைபோல, இடையர்களுக்குச் செல்வம் மிகுந்தால், எழும் செருக்குக்குப் போக்கு வீடாகக் குடக்கூத்து ஆடுவர்.

கண்ணன் தன் மகிழ்ச்சியின் போக்குவிடாக, தன் இனத்தாராகிய இடைமக்களோடு சேர்ந்து பிணைந்து குடக் கூத்தாடுவான்.

இப்படி, ஊர்ப் பொதுவான பண்டம் கண்டீர்! இப்போது எனக்குக் கிடைக்க அரிதாகிப் போய்விட்டது! அங்காடிப் பண்டங் கண்டீர்! எனக்கு அரிதாகிப் போயிற்று! என்று பரகால நாயகி கண்ணீர் விடுகிறாள். அவள் கண்ணீரில் நம் கண்ணீரும் இணைகிறது.

" என் துணையே! என்று துணை
முலைமேல் துளி சோரச் சோர்கின்றாளாம் "

தான் துணையென நம்பிய அவன் முகங்காட்டாமையால், தரையில் சோர்ந்து வீழ்கிறாள். அப்பொழுதும், தனக்குத் துணையாகாத அவனைத் 'துணையே!' கூறி(வி)யவாறு விழுகிறாள். இதுதான் பகவானோடு பக்தி கொண்டவர்களின் பண்பு என்றெழுதுகிறார் வியாக்கியானச் சக்கரவர்த்தி.

இங்கு 'அரிசினத்தால் ஈன்ற தாய் அகற்றிடினும் மற்றவள்தன் அருள்நினைந்தே அழும் குழவி அதுவே போன்றிருந்தேனே!' என்ற குலசேகரப் பெருமாள் திருமொழி நம் நெஞ்சில் நிழல் ஆடுகிறது.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

அவனால் நுகரப் படாத நாயகியின் மார்பகங்களில் பொன் நிறமான பசலை படர்கிறது. இதனை ஆழ்வார்,

" பொங்கார் மெல்லினங் கொங்கை
பொன்னே பூப்ப " (திருநெடுந் : 17)

என்று பாடுகிறார்.

அவனால் நுகரப் படாத உறுப்பைப் பசலை நுகர்கிறது என்று திருத்தாயார் மனம் வருந்தி ஏங்குகிறாள். திருத்தாயார் ஏக்கத்தை விளக்க, வியாக்கியானச் சக்கரவர்த்தி

" ஒரு புனிதத் திருத்தலம் மணல்மேடா னாற்போலே "

என்று உவமை கூறுகிறார். இந்த உவமை நினைக்க நினைக்க இனித்துக் கொண்டேயிருக்கிற உவமையாகும். ஆழ்வாரின் அற்புத வரிகளில் ஆழங்காற் பட்டதன் விளைவு, இத்தகைய அற்புத உவமைகளையெல்லாம் தமிழுக்குக் கொண்டுவந்து சேர்த்திருக்கிறது.

ஆழ்வார், பத்தாம் பத்தின் ஒன்பதாம் பதிகம் முழுவதிலும் நற்றாய் கூறுவது போல, பாசுரந்தோறும் ஒரு பழமொழியை உவமை கூறி என் மகளை இப்படியெல்லாம் செய்கின்றாயே! முறையா? என்று வேண்டுவது கற்பார் நெஞ்சை என்று படித்தாலும் உருக்கவல்லது.

இப்பதிகத்தைப்(10-9) பழமொழியால் பணிந்துரைத்த பாட்டு என்று பெரியோர் கூறுவர். அப்பர் பெருமானும் திருவாரூர்ப் பதிகத்தில் ஒரு பதிகம் முழுவதிலும் (மெய்யெலாம் நீறு பூசி 4200) பழமொழிகளை உவமைகளாக்கியுள்ளமை இங்கு நினையத் தகும்.

உடையவர் நடுக்கம்

" ஒளியா வெண்ணெய் உண்டாய் என்று
உரலோடு ஆய்ச்சி ஒண்கயிற்றால்
விளியா ஆர்க்க ஆர்ப்புண்டு
விம்மியழுதான் " (பெரிய திரு : 6:7:4)

ஆசாரியப் பெருமக்கள் ஆழ்வார் பாசுரங்களை வாழ்வியல் அநுபவங்களோடு இணைத்து உரைகண்டு அநுபவித்திருக்கிறார்கள் என்பதற்குக் கீழ்வரும் ஐதிகம் அரியதொரு சான்றாகும்.

யசோதைப் பிராட்டி தடாக்களில் சேமித்து வைத்திருந்த வெண்ணெய். தயிர் முதலியவற்றைக் களவு வழியாலே கைப்பற்றி

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

அமுது செய்த குற்றத்திற்காகத் தாம்பினால் கட்டுண்டு விக்கியழுதான் எம்பெருமான்.

இந்தப் பாசுரத்துக்கு உரை விரித்தபோது உடையவராகிய இராமாநுசர் அஞ்சி நடுங்கினார். ஏன்?

வங்கிபுரத்து நம்பியெனும் அன்பர், அடிக்கடி கடவுள் வழிபாட்டு முறைபற்றி, உபதேசிக்க வேண்டுமென்று வேண்டிக் கொண்டிருந்தார். ஆனால், உடையவருக்கு உபதேசிக்க நேரம் போதாக் குறையால் உபதேசிக்க இயலாமல் காலம் நீட்டித்துக் கொண்டிருந்தது.

ஒருநாள், கூரத்தாழ்வானுக்கும் அநுமந்த தாசர் என்பவருக்கும் வழிபாட்டு முறைபற்றி உபதேசிக்க வேண்டிய சூழலால் உபதேசித்துக்கொண் டிருந்தார் உடையவர். அப்போது, வங்கி புரத்து நம்பி அங்கு வந்தடைந்தார். அவரைக் கண்டவுடன் உடையவர் உள்ளம் அஞ்சி நடுங்கியது. 'இவர் பலமுறை வேண்டியும் உபதேசியாது இருந்தோம். இன்று இவ்விருவருக்கும் உபதேசிக்க நேர்ந்தபோதாவது நம்பியையும் சேர்த்து உபதேசித்திருக்கலாம். அதுவும் செய்யாமல் போனோமே!

'இவருக்கு உபதேசியாமல் இருந்தது ஒரு குற்றம். இவ்விருவர்களுடன் சேர்த்தாவது உபதேசியாமல் போனது இரண்டாவது குற்றம். இவ்விரு குற்றங்களுக்கும் ஆளாகிப் போனோமே!' என்று அஞ்சி நடுங்கினார் உடையவர்.

அப்போது வங்கிபுரத்து நம்பியைப் பார்த்து, உடையவர் ஓர் அழகான கருத்தை அருளிச் செய்தார்.

எனக்கு நெடுநாளாக இருந்த ஓர் ஐயம் இன்று தீர்ந்து போயிற்று. 'ஒளியா வெண்ணெய் உண்டாய்!' என்று ஆய்ச்சி உரலோடு 'ஒண்கயிற்றால் விளியா ஆர்த்து ஆப்புண்டு விம்மியழுதான்' என்று திருமங்கையாழ்வாரும்,

" எழில் கொள் தாம்பு கொண்டு அடிப்பதற்கு எள்கும் நிலையும்...
அழுகையும் அஞ்சி நோக்கும் அந்நோக்கும் "

(பெருமாள் திரு 7:8)

என்று குலசேகரர் ஆழ்வாரும் அருளிச் செய்கிறார்களே!

'உண்மையில் அப்படியிருக்குமோ? எல்லோரையும் எல்லாவற்றையும் நியமித்துக் கட்டளையிட வல்ல இறைவன்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

அவன் கட்டளைகளை நிறைவேற்ற உரிய ஏவல் செய்வதற்கு உரியவரிடத்தில் அஞ்சிவருந்தக்கூடுமோ? என்ற ஐயம் நெடுநாள் இருந்தது. இன்று தீர்ந்தது!

இன்று உம்மிடத்தில் நான் அஞ்சி வருந்தினேன்! குற்றம் புரிந்தவர்க்கு அச்சமும் நடுக்கமும் எழுதல் இயல்பே! ஆழ்வார்கள் கண்ணனிடம் கண்ட அச்சமும் நடுக்கமும் இயல்பாக எழக்கூடியவையே!' என்று 'இன்று துணிந்தேன்' என்று கூறினாராம் உடையவர்.

நண்டுத் தம்பதிகள்

திருநறையூர் எம்பெருமானைப்பற்றி ஆழ்வார் பாடிய பதிகத்தில் பின்வரும் அழகிய இயற்கை வருணனை வருகிறது.

"பள்ளிக் கமலத்து இடைப்பட்ட
பகுவாய் அலவன் முகம்நோக்கி,
நள்ளியூடு வயல் சூழ்ந்த
நறையூர் நின்ற நம்பியே" (பெரிய திரு : 6:7:6)

இத் திருமொழியின் இந்தப் பகுதி வரும்போது, பராசர பட்டருக்கும், பிள்ளைத் திருநறையூர் அரையருக்கும் இடையே அழகிய சம்வாதம் நடந்துள்ளது.

ஓர் ஆம்பல் மலரில் நண்டுத் தம்பதிகள் இனிதே இல்லறம் நிகழ்த்திவந்தன. அந்தப் பெண் நண்டு கருவுற்றிருந்தது. கருவுற்றுள்ள பெடை நண்டுக்கு அது விரும்பும் இனிய பொருளைக் கொண்டு வந்து தரவேண்டும் என்று ஆண் நண்டு கருதியது.

தாமரை மலரிலிருந்து மகரந்தத்தைத் திரட்டிக் கொண்டு வந்து தன் பெடைக்குத் தரவேண்டுமென்று ஆண் நண்டுக்கு ஆசை. இந்த நினைவுடன் ஒரு தாமரைப் பூவுக்குள் நுழைந்து மகரந்தம் திரட்டும் பணியில் ஈடுபட்டுக்கொண்டிருந்தது. அப்போது மேற்குவானில் சூரியன் மறைந்தான்.

சூரியன் மறைந்தவுடன் தாமரை தன் இயல்புப்படி கூம்பிக் கொண்டது. கூம்பிய இதழ்களுக்குள் ஆண் நண்டு சிறைப்பட்டு விட்டது. மறுநாள் கதிரவன் தன்கதிர்களை விரித்தவுடன் தாமரையின் இதழ்களும் விரிந்தன. சிறைவீடு பெற்ற ஆண் நண்டு, தன் அன்புப் பெடைக்கு ஆசையுடன் திரட்டிய மகரந்தப் பொதியினைச் சுமந்தவண்ணம் தன் வீடாகிய ஆம்பல் மலரை நோக்கி வந்தது.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

அது வந்து சேர்வதற்கும், சூரியக் கதிர்களைக் கண்டவுடன் இதழ் குவிக்கும் இயல்புடைய ஆம்பல் மலர் தன் இதழ்களைக் குவிக்கவும் சரியாயிருந்தது. தன் கணவன், இரவு முழுவதும் கண்ட இடத்தில் சுற்றி, சந்தனப் பூச்சோடு வருகிறது என்று பெண் நண்டு, தன் வீட்டுக் கதவைத் தாழிட்டு அடைப்பது போல் அக்காட்சியிருந்தது.

இவ்வாறு பட்டர் விளக்கிக்கொண் டிருக்கும்போது, பிள்ளை திருநறையூர் அரையர் எனும் அன்பர் 'முதலில் ஆராய்ந்து, குற்றம் என்று தெரிந்தால் அல்லவா தண்டித்திருக்க வேண்டும்? குற்றம் புரியாத ஆண் நண்டை, பெண் நண்டு தண்டிப்பது நியாயமாகுமோ?' என்று பட்டரை வினவினார்.

'என் செய்வது? கேள்வி இல்லாதபடி பெண்ணரசு நடத்தும் நாடாயிற்றே!' என்றாராம் பட்டர். திருநறையூருக்கு நாய்ச்சியார் கோயில் என்பது ஒரு பெயர். இங்கு எல்லாவற்றிலும் பிராட்டிக்கே முதலிடம். திருவீதி உலாப் புறப்படும்போதுகூட நாச்சியார் முன்னே எழுந்தருள்வதும், பெருமாள் பின்னே எழுந்தருள்வதும் இங்கு இன்றும் நிகழும் மரபு.

இவற்றையெல்லாம் மனத்திற் கொண்டே 'ஆணரசு நாட்டில் கேட்பாருண்டு; இது பெண்ணரசு நாடாயிற்றே! கேட்பாரில்லை!' என்று மிகச் சுவையாகப் பட்டர் பிரான் நயவுரை கூறினாராம்!

பாஞ்சாலி குழல் முடித்தோன்

" பந்தார் விரலாள் பாஞ்சாலி
கூந்தல் முடிக்கப் பாரதத்துக்
கந்தார் களிற்றுக் கழல் மன்னர்
கலங்கச் சங்கம் வாய்வைத்தான் "

(பெரிய திரு : 6:7:8)

இந்தப் பாசுரத்தில் பாஞ்சாலி குழல் முடிக்கத்தான் பரந்தாமன் தன் பவழ வாயில் வெண்சங்கம் ஊதிப் பகைவரை முடித்தான் என்று பாடுகிறார் ஆழ்வார்.

இந்தப் பாசுர அடிகளின் உட்பொதிந்திருக்கும் தத்துவப் பொருளை வெளிக் கொணர்ந்து உலகை மகிழ்விக்கின்றார் வியாக்கியான சக்கரவர்த்தி.

பாஞ்சாலியைத் துரியோதனாதியர் பேரவையில் அவமானப் படுத்தியதைப் பாண்டவர்கள் பார்த்தவாறு, பேசாது நின்றிருந்தனர்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

சூதில் தோற்றமையால் அடிமைகள் ஏதும் செய்ய இயலாது என்று அவ்வாறு இருந்தனர் என்று அமைதி கூறலாம். ஆனால், பாஞ்சாலி எம்பெருமானைச் சரணம் புகுந்தபிறகு, பாண்டவர்கள் அவ் வாறிருந்தது மாபெருந் தவறு. பாகவத அபசாரத்தைப் பார்த்துக் கொண்டிருந்த குற்றம் அது. பாண்டவர்களுக்கு அது சாரும் என்பது ஆசாரியர்கள் கருத்து.

எம்பெருமானின் அடியார்களைப் பிறர் மானபங்கம் முதலிய குற்றம் செய்வதைக் கண்டால், சக்தியுள்ளவனாகில் விலக்க வேண்டும்; சக்தியற்றவனாகில் வருத்தத்துடன் கண்மறையப் போக வேண்டும். அப்படிச் செய்யாது வாளா இருந்தனர் பாண்டவர்கள். மானபங்கம் செய்த துரியோதனாதியர்களைப் போலவே, மானபங்கம் செய்வதைப் பார்த்திருந்த இப்பாண்டவர்களையும் தலையறுத்துப் போட்டிருக்க வேண்டும். அப்படிச் செய்யாமல் பாண்டவர்களை உயிரோடு விட்டுவைத்தது, பாஞ்சாலி மங்கல நாணைப் பாதுகாக்கவே.

அவள் விரித்த கூந்தலையே காணப் பொறுக்காத எம்பெருமான் அவள் வெறுங்கழுத்தை எப்படிக் காண்பான் என்பது ஆசாரியர்கள் வினாவாகும். இதனால், அடியவர்களை அவமானப் படுத்துபவர்களைப் போலவே, அந்த அவமானத்தைப் பார்த்துக் கொண்டிருப்பவர்களும் அதே தண்டனைக்குரியவர்கள் என்பது புலனாம்.

அப்படித் தண்டனைக்குரியவர்கள், அடியார்களோடு விடவொண்ணாத ஒரு சம்பந்தம் உடையவர்களானால், அவர்களும் அந்த அடியவர்களுக்காக 'எம்பெருமானால் இரட்சிக்கப்படுவர்' என்பதும் தெளிவாகிறது.

இப்படித் தண்டிக்கும்படியான குற்றம் புரிந்தவர்களுள் ஒருவன் அருச்சுனன்.

பார்த்தனுக்காக கண்ணன் தாழ் தொழில் (சாரத்தியம்) செய்ததும், பரம ரகசியத்தை (சரணாகதித் தத்துவத்தை) உபதேசித்ததும் எல்லாம் இந்தத் திரௌபதிக்காகவே.

தூது போனது போரை விளைவிப்பதற்காக (சமாதானம் உண்டாக்கவன்று); சாரதியாய் நின்றது (படையெடேன் என்றமையால்); தேர்ச்சக்கரத்தால் எதிரிகளை நசுக்க! சங்கு வாய் வைத்தது அவ்வொலியால் நெஞ்சதிர்ந்து பலர் சாக!

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

முள் குத்தும்

பெரிய திருமொழியில் 11 ஆம் பத்தில்

" கள்ளார் துழாயும் கணவலரும் கூவிளயும்
முள்ளார் முளரியும் ஆம்பலும்முன் கண்டக்கால்
புள்ளாய், ஓர் ஏனமாய்ப் புக்கிடந்தான் பொன்னடிக்கென்று
உள்ளாதார் உள்ளத்தை உள்ளமாய்க் கொள்ளோமே! "

(பெரிய திரு : 11:7:6)

எனும் ஓர் அரிய பாசுரம் வருகிறது.

திருத்துழாயையும் அலரிமலரையும், வில்வ இலையையும் முள்நிறைந்த தாமரைப் பூவையும் கண்முன் கண்டால், இவையெல்லாம் எம்பெருமான் பொன்னடிகளுக்கு உரியவை என்று நினையாதவர் நெஞ்சத்தை ஒரு நெஞ்சமாக நாம் நினைப்பதில்லை யென்று இங்குக் கூறுகின்றார்.

பட்டர், இப்பாசுரத்திற்குப் பொருள் விரித்துக் கொண்டிருக்கும் பொழுது, நஞ்சீயர் எழுந்து 'முள்ளார் முளரியும்' இறைவனுக்கு உரியது என்று கூறுகின்றாரே?

" கண்ட காரிகா புஷ்பம் தேவாய விநிவேத யாத்'

என்று சுருதியில் (முள்ளுடைய மலர்கள் இறைவன் நிவேதனத்துக்கு உரியவையல்ல) கூறப்பட்டுள்ளதே! ஆழ்வாரின் கருத்து, சுருதிக்கு முரண்படுகிறதே!' வினாவினார்.

அதற்குப் பட்டர்பிரான், 'பறிக்கப் போகின்ற அடியார் கையில் முள் குத்தும் என்று கருதி விலக்கப் பட்டதேயன்றி இறைவனுக்கு ஆகாது என்னும் எண்ணத்தால் விலக்கப்படவில்லை' என்று நயவுரை தந்தார்.

சடங்கும் சம்பிரதாயமும் மண்டிக் கிடந்த பத்திமையுலகுக்குள் எல்லோரும் நுழைவதற்கு எத்தனை யெத்தனை முயற்சிகளை ஆழ்வார்களும் ஆசாரியர்களும் புரிந்துள்ளார்கள் என்பதனை எல்லாம் அறியும் போது திசைநோக்கித் தொழ மனம் இதனால் விரும்புகிறது.

தெட்ட பழம்

" தெட்ட பழம் சிதைந்து மதுச் சொரியும்
சீராம விண்ணகரம் சேர்மின் நீரே "

(பெரிய திரு : 3:4:8)

என்பது சீராம விண்ணகரப் பாசுரத்தில் வரும் ஓர் அடியாகும்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

உடையவர் இப்பகுதிக்கு விளக்கம் சொல்லிவரும் போதில் ''தெட்டபழம்'' எனும் தொடரில் 'தெட்ட' என்னும் பெயர் எச்சத்திற்குத் தெளிவான பொருள் விளங்கவில்லையென்று கூறியருளினார்.

இதற்குப் பின் சிலநாள் கழிந்தபின் ஒரு முறை ஸ்ரீராம விண்ணகரத்துக்கு, உடையவர் யாத்திரையாக வந்தபொழுது, அங்கு நாவல் மரங்களின் மீதேறியிருந்த ஒருவனைப் பார்த்து 'அண்ணே! தெட்ட பழமாகப் பறித்துப்போடு!' என்று கூறினர் கீழுள்ள பிள்ளைகள்.

அதைச் செவியுற்ற எம்பெருமானார் 'பிள்ளாய்! தெட்ட பழம் என்றால் என்ன!' என்று கேட்டருள, அதற்கு அவர்கள் 'கனியப் பழுத்த பழம்' என்றார்கள்.

கேட்ட உடையவர் 'ஓ! இது ஒரு திசைச் சொல் போலே இருந்தது! நம்மாழ்வார், திருநாவாய்ப் பதிகத்திலே (திருவாய் : 9:8:11)' 'குறுக்கும் வசையுண்டு கொல்லோ!' என்பதைப் போன்றது இது!' என்று மகிழ்ந்தாராம்.

மலையாள நாட்டுத் திருநாவாய் ஈசனைச் சேவிக்கச் சென்றபோது, 'நாவாய்க்கு இன்னும் எத்தனை தூரம்!' என்று கேட்க, 'குறுக்கும்!' என்று மலைமக்கள் சொல்லிப் போனாராம். அவர்கள் கருத்தில் குறுக்கும் என்பதற்குப் பக்கம் என்று பொருள்.

'தெட்டபழம் என்பதற்குக் கனிந்தபழம் என்று சிறுவர்கள் வாயிலிருந்து பொருளை தெரிந்து கொள்ள ஆழ்வார் திருவுள்ளம் இருந்ததே!' என்று அகமகிழ்ந்து போனாராம் உடையவர்.

நீரே வாழும்

திருமங்கையாழ்வாருக்கும் இறைவனுக்கும் இருந்த தொடர்பு, நெருங்கிய நண்பர்கள் இருவரிடையே இருந்த தொடர்பாகத் தோன்றுகிறது.

ஒருவகையில் பார்த்தால், சுந்தரர்க்கும் சிவபெருமானுக்கும் இடையே உள்ள தோழமைத் தொடர்பு போன்று தெரிகிறது.

திரு இந்தளூருக்குப் போகையில் கோயிற் கதவு சாத்தப்பட்டிருந்தது. தனக்குத் தரிசனம் நல்காமல் கதவடைத்திருந்த இறைவன்மேல் ஆழ்வாருக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

" ஆசை வழுவாது ஏத்தும் எமக்கு இங்கு இழுக்காய்த்து, அடியோர்க்குத்
தேசம் அறிய உமக்கே ஆளாய்த் திரிகின்றோருக்குக்
காசின் ஒளியால் திகழும் வண்ணம் காட்டீர்! எம்பெருமான்
வாசிவல்வீர்! இந்தளூரீர்! வாழ்ந்துபோம் நீரே! "

- பெரிய திரு 4:9:4

'இவ்வுலகில், ஆசை குறையாமல் உம்மைத் துதிக்கின்ற எமக்கு, இவ்வாறு துதிசெய்தலே இழுக்காய் முடிந்தது போலும். உலகமெல்லாம் தெரிய உமக்கே தொண்டராய்த் திரியும் எமக்கு, பொன்னின் வண்ணமுடைய உம் வடிவழகைக்காட்ட மறுக்கிறீர்!

உம்முடைய உடம்பு, ஆசைப்படும் எம்போன்ற அனைவருக்கும் உரியது என்று நினைத்திருந்தோம், அது அப்படியில்லையென்று நீர் நினைப்பதுபோல் தெரிகிறது. அப்படியென்றால், உம்முடைய உடம்பை நீரே தொட்டுக் கொண்டு, நீரே கண்டுகொண்டு, நீரே மோந்து கொண்டு, நீரே நன்றாக இரும்!' என்பது இப் பாசுரத்தின் பொருள்.

தமக்கு வேண்டிய பொருளை வேறொருவர் வைத்துக் கொண்டு தரமறுத்தால் அவர் வலியராயும் இருந்துவிட்டால், 'நீரே வைத்து வாழ்ந்து தொலையும்' என்று கூறுவது போல், தமக்குக் காட்சி தராத இறைவனை 'நீரே வாழ்ந்து விட்டுப்போம்!' என உரிமையோடு இகழ்கிறார். காட்சி தாராமலிருந்த இறைவன் பின்பு ஆழ்வாரின் 10 பாடல்களின் கோபத்தையும் கேட்டுச் சுவைத்துப்பிறகு கதவு திறப்பித்துக் காட்சியளித்தானாம்.

முதலில் காட்சிதாராமல் ஆழ்வார் ஆத்திரப் பாசுரங்களைக் கேட்டு மகிழ இறைவன் செய்த உத்தி இது என்பது இங்கு ஐதிகம்.

நாயேன் வந்தடைந்தேன்

" தாயே தந்தையென்றும் தாரமே கிளைமக்கள் என்றும்
நோயே பட்டொழிந்தேன்; நும்மைக் காண்பதோர் ஆசையினால்
வேய் ஏய் பூம்பொழில் சூழ்விரை ஆர் திருவேங்கடவா!
நாயேன்! வந்தடைந்தேன்! நல்கிஆள்! எனைக் கண்டுகொள்ளே! "

(பெரிய திரு : 1:9:2)

என்பது திருவேங்கட நாதனிடம் ஆழ்வார் கழிவிரக்கத்தோடு குறையிரக்கிற பாசுரம் இது. ஆழ்வாரின் உள்ளத்தைத் தம் ஆழ்ந்தகன்ற சிந்தனையால் அகழ்ந்தாய்ந்து வெளிக் கொணர்கிறார் உரையாளர்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

பரமபதநாதன் வேங்கடமலைக்கு எழுந்தருளியது பரமபதம் வசதிக் குறைவுடையதனால் அல்லவாம். குழந்தை கிணற்றில் வீழ்ந்தால் தாயும் உடன் வீழ்ந்து குழந்தையைக் கரையேற்ற முயல்வதுபோல, சம்சார சாகரத்தில் வீழ்ந்துள்ள உயிர்களைக் கரையேற்ற இம்மண்ணுலகில் உள்ள திருவேங்கடத்திற்கு வந்துள்ளானாம்.

'வேங்கடவா!' என்று விளித்து, இக்கருத்தை உணர்த்திய ஆழ்வார், 'நாயேன் வந்தடைந்தேன்' என்கின்றார்.

'நாயேன்' என்று ஆழ்வார் சுட்டிக் கொண்டதற்கு நுண்பொருள் காணுகின்றார் உரையாளர். 'நாயேன்' - நான் செய்து கொண்டதனைப் பார்த்தால், புறம்போகில் கல்லை விட்டெறிவார்கள். உள்ளே புகுந்தால் தொட்டனவும் தீண்டியனவும் எறிய வேண்டிவரும். வேறு ஒரு புகல் இன்மையால் உன்திருவடிகளிலே வந்து தஞ்சம் புகுந்தேன்.

அந்தக் கடைப்பட்ட நாயினையே மன்னன் மகன் செருக்காலே வேட்டைக்குப் பயன்படும் என்று மேல்விழுந்து விரும்புவான் அன்றோ? அதுபோல என்னை விரும்பி ஆண்டுகொள் என்று ஆழ்வார் வேண்டுகின்றார் என்பது பெரியவாச்சான் பிள்ளையின் அருமை உரை.

கொள்ளைப் பொருள்

" கலி கன்றி ஒலி வல்லார்
முடிகொள் நெடுமன்னர் தம்
முதல்வர் முதல் ஆவாரே! " (பெரிய திரு. 2:7:9)

என்று ஆழ்வார் தம்முடைய பாசுரங்களை ஓதுகின்றவர்கள், உலகச் செல்வம் எல்லாம் உடைய மன்னர்க்கு மன்னர் ஆவார்கள் என்று பலசுருதி ஓதுகிறார்.

'இது உலகச் செல்வத்தைப் பெரிதாக மதிப்பது ஆகாதோ?' என்று நஞ்சீயரை இப்பாசுர விரிவுரை நிகழும்போது பட்டர் கேட்டாராம்.

அதற்குப் பட்டர் 'திருமங்கையாழ்வார் திருவவதாரம் செய்தபின் 'கொள்ளைப்' பொருளும் உயர்வு பெற்றுவிட்டது.

பணமுள்ள இடங்களிலே சென்று கொள்ளையடித்து, பகவத், பாகவத கைங்கரியங்கள் செய்பவர் ஆகையாலே, கீழான

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

ஐசுவரியமும் இவ்வாழ்வார் திருவுள்ளத்தில் உயர் பொருளாகி விட்டது' என்று விடையளித்தாராம்!

மந்திரம் சொல்லத் தகுதி

பெரிய திருமொழிக்குத் திருவரங்கத்தில் விரிவுரை நிகழும்போது பரமபதம் மண்ணுக்கு வந்துவிட்டது போன்றிருக்குமாம். அரங்கநகர் அப்பனின் தொண்டக்குலம் மெய்ம்மறந்து கேட்டிருக்குமாம்.

நஞ்சீயருக்கும் பட்டருக்கும் நடக்கும் உரையாடல்கள், தேனும் பாலும் போல் தித்தித்திருக்குமாம்.

ஒரு சமயம் நஞ்சீயரைப் பார்த்து, பட்டர், திருமந்திரம் (ஓம் நமோ நாராயணா) சொல்லும்போது, உடற்சுத்தி செய்து 'தூயராய் இருக்க வேண்டுமோ?' என்று கேட்டார்.

'வேண்டா, கங்கையில் நீராடச் செல்கிறவன் நடுவில் ஓர் உவர்க்குழியில் மூழுகிப் போக வேண்டுமோ? எல்லா நன்மைகளையும் கொடுக்கவல்லதாக ஆழ்வாரால் சொல்லப்படும் திருமந்திரம் குளிக்காத குற்றத்தையும் போக்க மாட்டாதோ?' என்று பட்டருக்கு நஞ்சீயர் அருளிச்செய்தாராம்.

குளிப்பதற்கு என்ன தகுதி? அழுக்குடைமைதானே! ஆகவே,

" துஞ்சும்போது அழைமின்!, துயர் வரின் நினைமின்!
துயர்இலார்! சொல்லினும் நன்றாம்;
நஞ்சுதான் கண்டீர்! நம்முடை வினைக்கு
'நாராயணா' என்னும் நாமம்! "

இங்கு எட்டெழுத்துக்குரிய ஓம் நமோ என்னும் இரண்டும் சொல்லப்படாமல், 'நாராயணா' என்பது மட்டும் சொல்லுங்கள் போதும். அதுவே, மந்திரத்தின் பயனைத் தந்துவிடும் என்கிறார் ஆழ்வார்.

நாராயணா என்னும் நாமத்தைச் சொல்லுதற்கு இருந்த இடமே தகுந்த இடம்; சொல்ல விருப்பம் எழுந்த காலமே தகுந்த காலம்; நாராயணா என்று சொல்லக்கருதியவனே, கைக்கொள்ளத்தக்கவன் என்பது உரையாளர் அருளிய தெளிவுரை. பக்தியை எவ்வளவு எளிதாக்கி, எல்லோர்க்கும் பங்கிட்டுக் கொடுத்துள்ளனர் இவர்கள்! நினைக்க இனிக்கிறது மனம்!

போய் வருகிறேன்

பெரிய திருமொழியின் இறுதிப் பகுதி நெருங்குகிறது. ஒரு பத்தில் ஒரு திருமொழியில் ஒரு திவ்விய தேசத்தையே பாடுவதை

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

வழக்கமாகக் கொண்டிருந்த ஆழ்வார், பத்தாம் பத்தில் இரண்டாந் திருமொழியில் ஒவ்வொரு பாசுரத்திலும் இரண்டிரண்டு திருப்பதியைப் பதினெட்டுத் திவ்விய தேசங்களை அநுபவிக்கிறார்.

ஒரே திருமொழியில் 18 திவ்விய தேசங்களை அநுபவிக்கும் வாய்ப்பால், இத்திருமொழியை மிகச் சிறப்புடையதாகக் கருதுவர் பெரியோர்.

இப்படி ஒரு பாசுரத்தில் இரண்டு திவ்விய தேசங்களை ஆழ்வார் ஏன் பாடுகின்றார் என்று சிந்திக்கின்றார் வியாக்கியானச் சக்கரவர்த்தி. அதற்கு அவர் சிந்தை தந்த விடை நம்மைச் சிலிர்ப்புக் குள்ளாக்குகிறது.

இந்தக் கொடிய இருள்தருமா ஞாலத்திலிருந்து, நலம் அந்தம் இல்லதோர் நாடாகிய பரமபதம் செல்லும் வேட்கை, ஆழ்வார் உள்ளத்தில் மிக்கெழுந்தது. எம்பெருமான், விரைவில் தம்மைப் பரமபத நாட்டுக்கு அழைத்துக்கொள்வான் என்ற திடம் அவர் உள்ளத்தில் எழுந்தது.

ஆகவே, இத்திருமொழியில் பயணம் புறப்படும் பாவனை ஆழ்வாருக்கு வந்துவிட்டது. பிறந்த வீட்டிலிருந்து, புகுந்த வீட்டுக்குப் புறப்படுகின்ற புது மணப்பெண் ஒருத்தியின் மனநிலை ஆழ்வாருக்கு இப்போது வந்துவிட்டது.

புது மணப்பெண், தான் நெடுநாள் வாழ்ந்த இடத்தில் தன்னோடு முகம் பழகியிருந்த அன்புடைய சில பெண்பிள்ளைகளைச் சந்தித்து, அவர்களிடம் 'நங்காய்! நான்போய் வருகிறேன்!' 'மாதே! நான் போய் வருகிறேன்!' என்று சொல்லிவர, சில இல்லங்களின் படிகளில் ஏறியிறங்குவது போல, இவ்வாழ்வாரும் தாம் புகு(ந்த)ம் இடமாகிய பரமபதத்தின் பயணத்திற்குப் பூர்வாங்கமாகத் தமது மிகுந்த ஈடுபாட்டிற்கு இடமான சில திருப்பதிகளிலே சொல்லிக் கொள்வதற்காக நுழைந்து புறப்படுகிறார் என்று பெரியவாச்சான் பிள்ளை இத்திருவாய் மொழியின் தோற்றுவாயில் (அவதாரிகையில்) அருளிச் செய்திருப்பது நம் சிந்தையணு ஒவ்வொன்றையும் சிலிர்க்க வைக்கிறது.

தூணும் துலாமும்

புள்ளம் பூதங்குடி இறைவன் திவ்விய தேசத்தின் இயற்கை வளத்தை ஆழ்வார் இப்படிப் பாடுகிறார்:

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

" பள்ளச் செறுவில் கயல்உகள
பழனக் கழனி யதனுட் போய்ப்
புள்ளுப் பிள்ளைக்கு இரை தேடும்
புள்ளம் பூதங்குடி தானே " (பெரிய திரு 5:1:2)

வயல்களில் கயல்மீன்கள் துள்ளி விளையாடி மகிழும். நாரை முதலிய நீர்ப்பறவைகளோ தன் குஞ்சுக்கு இரைதேடித் திரியும் திருத்தலம் புள்ளம் பூதங்குடியாகும் என்பது இவ்வடிகளின் பொருளாகும்.

பட்டர் இவ்வாறு உரைகூறிக் கொண்டிருக்கையில், ஆலவாயுடையான் என்னும் அன்பர் ஒருவர் எழுந்து வினா ஒன்று விடுத்தார். 'பள்ளச் செறுவில் கயல் உகள என்பதனால் வயலில் மீன்கள் அளவற்று வாழ்கின்றன என்பது தெளிவு. அப்படியிருக்க, ஈற்றடியில் 'புள்ளுப் பிள்ளைக்கு இரைதேடும்' என்பது எங்ஙனம் ஆகும்?' என்றார்.

'பிள்ளாய்! நீ கற்றவன் ஆயினும் சொற்போக்கு அறிந்திலை!' பிள்ளைக்கு இரைதேடும் என்றுள்ளதுகாண். அங்குள்ள மீன்கள் வளமிகுதியாலே தூணும் துலாமும் போலே தடித்திருக்கும். அவை பறவைக் குஞ்சுகளின் வாய்க்கு அடங்காஒட்டா வாகையால், சிறிய குஞ்சுகளைத் தேடிப் பிடிக்க வேண்டுமன்றோ?' என்கிறார். இதனைப் படிக்கும் நாம் இப்படியும் சிந்திக்க இயலுகிறதே என்று வியக்கிறோம்.

தூதுக்குப் போட்டி

" முன்னோர் தூது வானரத்தின்
வாயில் மொழிந்து அரக்கன்
மன்னூர் தன்னை வாளியினால்
மாள முனிந்து, அவனே
பின் ஓர்தூது ஆகி மன்னர்க்குப்
பெருநிலத்தார்
இன்னார் தூதன் என நின்றான்
எவ்வுள் கிடந்தானே "

(பெரியதிருமொழி 2:2:3)

முன்பு, இராமனாகப் பிறந்து, இராவணன் முதலிய அரக்கர்களையழிக்க, அனுமனைத் தூதாக அனுப்பியவனே, பின்னங் கண்ணனாகப் பிறந்து, தானே தூதனாகச் சென்று 'இன்னார் தூதன்' என நின்றான் என்று பெருமானின் நீர்மைப் பண்பாகிய சுலபனாந் தன்மையை மொழிகிற பாசுரம் இதுவாகும்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

இப்பாசுரம் குறித்து ஓர் அழகிய உரையாடல் (சம்வாதம்) ஆசாரியப் பெருமக்களிடையே நிகழ்ந்துள்ளது.

பட்டர்பிரான் எப்போதும் இராமாவதாரத்தின்மேல் பேரன்புடையவர். சிறியாத்தான் எனும் அன்பர், 'சக்கரவர்த்தித் திருமகனாருக்கு எல்லா ஏற்றமும் (பெருமையும்) உண்டேயாகிலும் அன்பர்கட்காகக் கழுத்திலே ஓலை கட்டித் தூதுபோன ஏற்றம் இல்லையே! அந்த ஏற்றம் கண்ணபிரானுக்கேயன்றோ உள்ளது?' என்று வினாவினார்.

'ஓய் குணக்கடலாகிய இராமபிரானுக்குத் தூதுபோதல் நிகழாமல் போனது அவருக்குத் தூது போக விருப்பமின்மையால் அன்று காணும். இட்சுவாகு குலத்தில் உலகுக்கெல்லாம் தலைவனாகப் பிறந்தவன் (சார்வ பௌமன்) ஆகையாலே, அரசன் தூதுபோதல் மரபு இல்லையாதலாலே இராமபிரான் தூதுபோக இயலவில்லை. இது பிறப்பால் வந்த தடையாகும்.

இராமாவதாரத்திலே, அநுமன் தூதனாகச் சென்று செய்த நற்செயல்களையும், புரிந்த அரும்பணிகளையும், அவற்றால் அனுமன் அடைந்த பெருமைகளையும் உணர்ந்த இராமபிரான் அடுத்த பிறப்பில் கண்ணனாகப் பிறந்து பாண்டவர் தூதனாகி அனுமன் அடைந்த புகழையெல்லாம் தானும் பெற்றான். அரச குலத்திற் பிறந்தமை அறிந்தால் தூதுபோக விடமாட்டார்கள் என்று அறிந்ததனால்தான் அரசகுலத்தவராகிய வசுதேவர் திருமகனாகப் பிறந்திருந்தும் அதனை மறைத்துக் கொண்டு, இடையர்குலத்தவர் ஆகிய நந்தகோபன் திருமகனாகக் கண்ணபிரான் உலவினான்' என்று பட்டர்பிரான் அருளிச் செய்தார்.

இந்த உரையாடலை மனத்திற் கொண்டுதான் வில்லிபுத்தூர் ஆழ்வார்,

" முன்பு தூது கொண்டு இலங்கை தீ விளைத்தவன் ஐவர்க்கு
இன்று தூதுவந்து எயிற்புறத்து இருந்தனன் "

என்று பாடியுள்ளார் என அறிகிறோம்.

இதனால், இறைத்தன்மை என்பது பணிபுரிவதற்குக் காலம் பார்த்துக் கிடப்பது; பணியில் உயர்வு தாழ்வு பார்த்து ஒதுங்கிக் கிடப்பது அன்று என்னும் ஆழ்வார் உளக்கருத்தை அழகுற ஆசாரியர்கள் அறிந்து விளக்கிய அருமை பாராட்டுக்குரியது ஆகிறது.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

குலப்பெருமையால் பெயர்பெறுவது, செயல்திறத்தால் பெயர் பெறுவதையெல்லாம் விரும்பாதவனாய், பாண்டவர்க்குத் தூதுபோன அடிமைச் செயலால் பெயர் பெறுவதையே பெருமான் விரும்பி ஏற்றுக் கொண்டான் என்பது அவனுடைய 'பாண்டவர் தூதன்' எனும் பெயர் விளக்குகின்றது.

'சோற்றாலே வாழ்ந்தான், மண்ணாலே சுவர்நின்றது' என்பது போல, பாண்டவர் தூதன் என்னும் பெயராலே உயிர்தரித்து நிற்கிறான் என்பது விளங்க, இன்னார் தூதன் என நின்றான் என்று ஆழ்வார் கூறினார் என்று உரையாளர்கள் நயங்கண்டு பதசாரம் அளித்திருப்பது பெருமகிழ்வு தருகிறது.

கோவிந்தா வேணுமா?

திருஇடஎந்தை எனும் திருப்பதிப் பெருமான் மீது ஆழ்வாருக்கு அளவிறந்த அன்பு உண்டு. திருவேங்கடத் திருப்பதியைப் பாடும்போதும் திருஇட எந்தை மேவிய எம்பெருமான் வதியும் இடம் திருவேங்கடம் என்பார்.

" ஏத்துவார் மனத்துள்ளான், இட
எந்தை மேவிய எம்பிரான்
தீர்த்த நீர்த் தடஞ்சோலை சூழ்திரு
வேங்கடம் அடை நெஞ்சமே "

(பெரிய திரு 1:8:4)

திருஇட எந்தைப் பெருமான் மீது தனக்கெழுந்த காதலை, திருத்தாயார் பாசுரமாக ஆழ்வார் வெளிப்படுத்துவார்.

" ஓதிலும் உன்பேர் அன்றி மற்று ஓதாள்
உருகும் நின்திருவுரு நினைந்து
காதன்மை பெரிது; கையறவுடையாள்
கயல் நெடுங்கண்துயில் மறந்தாள்;
பேதையேன் பேதை பிள்ளைமை பெரிது
தெள்ளியள்; வள்ளிநுண் மருங்குல
ஏதலர் முன்னா என் நினைந்திருந்தாய்?
இடஎந்தை எந்தை பிரானே! "

(பெரிய திரு : 2:7:5)

'என் அருமை மகள் வாய் திறந்து ஒரு சொல்பேசுவதே அருமையாகிவிட்டது. அப்படி வாய் திறந்தாலும் 'அம்மா! அப்பா! அண்ணா!' என்று வருவதில்லை.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

'கோவிந்தா! கோபாலா!' என்று உன்பேரையே சொல்லுகிறாள். இவளை என்ன செய்வதாக நின் திருவுள்ளத்தே நினைத்திருக்கிறாய்?' என்று திருத்தாயார் வினவுவதாக இப்பாசுரக் கருத்து அமைந்துள்ளது.

இந்த இடத்தில் ஓர் அருமையான ஐதிகம் உரையாளர்களால் காட்டப்பட்டுள்ளது:

" ஒதினும் உன்பேர் அன்றி மற்ற ஒதாள் "

திருவாய்ப் பாடியில் ஓர் ஆய்ச்சி, இடைவிடாது கண்ணனையே சிந்தித்துக் காதல் வயப்பட்டாள். அவள் மாமி, அவள் சிந்தனையை மாற்றக்கருதி, தயிர் நெய் முதலிய ஆயர் பண்டங்களை விற்றுவரச் சொல்லியனுப்பினாள்.

அப்பொருள்களைத் தலையில் வைத்து வீதிவழி போனாள் அவள். விற்பதற்குக் கூவ வேண்டும். பண்டங்களின் பெயர்களைச் சொல்லிக் கூவ வேண்டும். சிந்தை முழுதும் கண்ணனே நிறைந்திருந்ததால் 'பால் வாங்கலையோ! தயிர் வாங்கலையோ! வெண்ணெய் வாங்கலையோ!' என்று கூவுவதற்குப் பதிலாக, 'கோவிந்தன் வாங்கலையோ கோவிந்தன்? கோபாலன் வாங்கலையோ கோபாலன்! தாமோதரன் வாங்கலையோ தாமோதரன்!' என்று கூவினாள்.

'ஒதிலும் அவன் பெயர் அன்றி மற்று ஒதாள்' என்று ஆகிய பரகால நாயகியின் நிலையும் ஆய்ப்பாடி ஆய்ச்சியின் நிலையே ஆயிற்று.

'முன்னை அவனுடைய நாமம் கேட்டாள்' என்ற தேவாரத்தில், நாவுக்கரசரின் நாயகி 'தன்னை மறந்தாள்; தன் நாமம் கெட்டாள்' என்ற நிலையும் ஒன்றாக இருப்பதனை இங்கு நினைதல் தகும்.

சொல் ஒன்று; பொருள் பல

ஆழ்வார் எம்பெருமானை,

" வேதத்தை வேதத்தின் சுவைப்பயனை
விழுமிய முனிவர்கள் விழுங்கும்
இக்கனியை நந்தனார் களிற்றை " (பெரிய திரு 2:3:8)

என்று போற்றுகிறார்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

நந்தகோபருடைய திருமாளிகையில் யானைக் கன்று போன்று விளையாடுவானாம் கண்ணன்.

யானைக்கும் எம்பெருமானுக்கும் உள்ள ஒப்பாந்தன்மையை உரையாளர்கள் விளக்கியுள்ள திறம் நம்மை வியக்க வைக்கிறது.

அ) யானை ஒரு நாள் கண்டவுடன் நிறைவடையாமல் நாள்தோறும் நாம்காண விருப்பத்தை யுண்டாக்குவது - எம் பெருமானும் நாள்தோறும் பூசித்து மகிழ வைக்கும் திருவுருவையுடையவன்.

ஆ) யானை, மிகுந்த பெருமிதமுடையது - எம் பெருமானும், எப்போதும் தான் இறைவனாயிருக்கும் பெருமிதம் தோன்ற இருப்பவன்.

இ) யானை, கைக்கு எட்டியவர்களை நினைத்த போது எடுத்து தலையில் வைத்துக் கொள்ளும் - எம்பெருமானும் தன்னையடைய நினைத்து அருகணைவாரைத் தன் முடிமேல் ஏந்தும் அருளாளன்.

ஈ) யானை, தன்மேல் ஏற நினைவார்க்குத் தானே பணிந்து தன் அடியையே படியாக்கி ஏறவைக்கும் - இறைவனும், மேல்கதியடைய நினைவார்க்குத் தான் பணிந்து, அவரை உயர்விக்கும் நீர்மையாளன்.

உ) யானை, தன்னை விரும்பாது பகைப்பவரைக் கிழித்துப் போடும் ஆற்றல் உடையது - எம்பெருமானும் தன்னைச் சரணடையாது எதிர்க்கும் பகைவர்களின் வாழ்வை முடிக்கும் பேராற்றல் உடையவன்.

ஊ) யானை தன்னைக் கட்டுவதற்குரிய கயிற்றைத் தானே சுமந்து வரும் - எம்பெருமானும், தன்னைக் கட்டுவதற்குரிய பக்திநெறியைத் தானே காட்டுவான்.

கண்ணனைக் களிறு என்று ஆழ்வார் உருவகித்ததற்கு, இத்தனை கருத்துக்களை ஆழ்வார் திருவுள்ளத்திற்குள் மூழ்கி எடுத்து வந்து நமக்குத் தருகிறார்கள் உரையாளர்கள்.

இவ்வாறே திருநெடுந்தாண்டகம் எட்டாம் பாட்டில், 'நீரசத்தாய்' என்பதற்கு, 'நீரைப் போன்ற மனமுடையாய்' என்று பொருள் கண்டு நீருக்கும் எம் பெருமானுக்கும் உள்ளவையாக இருபதுக்கும் மேலான பொருத்தங்களை, பெரியவாச்சான் பிள்ளை

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

எடுத்துக் காட்டியுள்ள திறம் நம்மை வியப்பின் விளிம்பில் நிற்க வைக்கிறது.

சுரங்கம் – தோண்டத் தோண்ட மாமணிகள்

நீருக்கும் எம்பெருமானுக்கும் உள்ள ஒற்றுமைகள்.

1. நீர் பள்ளம் நோக்கிப் பாயும். எம்பெருமானும் தாழ்ந்தாரிடத்தே எளிதாகச் செல்வான். வெள்ளம் பள்ளம் பாய்தலின்றி மேட்டில் ஏறாதது போல, உயர்ந்தோர் என்று நெஞ்சு நிமிர்த்தியவரிடத்தே செல்ல விரும்பான்.

2. 'நீர் இன்றி உலகு அமையாது'; எச்செயலும் செய்ய இயலாது. எம்பெருமான் உதவியின்றி எச்செயலும் செய்தல் இயலாது.

   ஒருவன் விரும்பியதை ஒருவன்விரும்பாத இயல்புடைய இவ்வுலகில் எல்லோரும் விரும்பவல்லது நீர் ஒன்றே. எம்பெருமானும் இத்தகையவன்!

3. நீருக்குக் குளிர்ச்சி இயற்கை. சூடுவந்தேறி எம்பெருமானுக்கும் தண்மை (அருள்) இயல்பு. சீற்றம் வந்தேறி.

4. நீர் சுடுவதானாலும் அதனை ஆற்றுவதற்கு நீரே உதவும். இறைவன் சீற்றத்தையும் அவன் அருளே ஆற்றவல்லது.

5. நீர் தேக்கி வைக்கவும் ஓடவிடவும் உரியதாய் இருக்கும். இறைவனையும் இருத்தி வைத்தும் ஓடவிட்டும் பயன் கொள்ளலாம்.

6. நீர் தானும் உணவாகும். மற்றைய உணவுப் பொருள்கள் உணவாக்கவும் உதவும். அவனே வழியும் அவனே பயனுமாக நிற்பவன் அவன்.

7. சோறு முதலிய உணவுகள் தமக்கு மாற்றாக வேறு உணவுகள் உண்பதை ஏற்கும். நீர் தனக்கு மாற்றுப் பொருளாக எதையும் ஏற்காது.

   எம்பெருமானும் அவனிடத்தில் வைக்க வேறொரு பொருள் இல்லாதவன். 'வேறொரு பொருளும் இல்லா மெய்ப் பொருள்' - கம்பர்.

8. விழுங்கும்போது, விக்கும்போதில், நீரன்றி வேறொன்று உதவாது. மற்றவர்களுக்கு எம்பெருமான் உதவிட வேண்டும். அவனுக்கு மாற்றார் உதவி தேவையில்லை.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

9. பாத்திர வடிவிற்கேற்ப நீர்வடிவு கொள்ளும். ஆனால், நிற்கும் நிலையில் சம வடிவிலேயே நீர் நிற்கும். இறைவனும் நல்லார்க்கும் பொல்லார்க்கும் நடுநின்ற நடு.

10. நீர் ஐவகைப் பட்டிருக்கும். 1. மேல்நீர் (ஆவரணநீர்), 2. கடல் நீர், 3. ஆற்று நீர், 4. நீர்நிலைகளில் தேங்கும்நீர், 5. மண்அடி நீர் என ஐவகைப்படும்.

இறைவனும் 1. பரநிலை, 2. வியூகநிலை, 3. விபவநிலை, 4. அர்ச்சை நிலை, 5. அந்தர்யாமி நிலை என ஐவகை நிலையினையுடையவன்.

11. நீர், இயல்பாகவே தூயது. ஆயினும் இருக்கும் இடத்துக்கேற்ப மாறுபடும் இயல்புடையது.

எம்பெருமானும், எல்லாத் தெய்வங்களுக்கும் உள்ளுறை தெய்வமாக இருப்பினும் எடுக்கும் உருவுக்கேற்ப நிலை வேறுபடுவதற்கும் அவனால் இயலும்.

12. நீர் தோண்டத் தோண்டுமளவுக்கு ஏற்பச் சுரக்கும் அளவு மிகும். எம்பெருமான் பக்தியின் ஆழத்திற்கேற்ப, இனிக்கும் தன்மை அதிகரிக்கும் தன்மையுடையவன்.

13. நீர், தனக்கொரு பயன் கருதத் தெரியாது. பிறஉயிர்க்கே பயன்படும். எம்பெருமானும் அத்தகையனே.

14. நீர் தானாகப் பொழியும் இயல்பானது. யாராலும் ஆணையிட்டுப் பொழிவிக்க இயலாது. எம்பெருமானும் ஆணையிடப்பட இயலாதவன்.

15. நீர், கடலிலிருந்து மேகமாக வந்தால் தவிர, உலகுக்குப் பயன் தருவதில்லை. ஆசாரியர் முகமாக வந்தே எம்பெருமானும் அடையத்தக்கவன் ஆகிறான்.

16. உயர்ந்தோர் தாழ்ந்தோர் இன்றி, எல்லோரும் ஒரு துறையிலேயே குடைந்தாடும்படி இருப்பது நீர். எம் பெருமானும் கல்லார்க்கும் கற்றவர்க்கும் களிப்பருளும் களிப்பாக இருப்பவன்.

17. நீர், சிறிய துளை கிடைத்தால் உள்நுழைந்துவிடும். எம்பெருமானும் சிறிய காரணம் கிடைத்தாற்போதும். நேராக நெஞ்சுள் நுழைந்துவிடுவான்.

18. காசி, அரித்துவார், திரிவேணி முதலிய இடச்சிறப்பினால், தீர்த்தச் சிறப்பு மிகுவதுபோல, எம்பெருமானும்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

திருவேங்கடம், திருவரங்கம் முதலிய தலச்சிறப்பினால் புகழ்ச்சிறப்பு மிகுகிறான்.

19. தாகம் மிக்கவர்கள் நீரை, முகத்தில் தெளித்து, முதுகில் கொட்டி, உள்ளே பருகி, படிந்து குடைந்து பல்வகையாகத் திளைத்துப் பயன் கொள்வது போல, எம்பெருமானையும் வாக்கினால், செயலால், மனத்தினால், சிரத்தை தன்னால் வேட்கை மீதூர வாங்கி (திருக்குறுந் 4.) விழுங்கித் திளைக்கலாம்.

20. நீர் வேட்கையன், நாக்கு நனைக்கத் துளியளவு கிடைத்தாலும் போதும் என்பான். எம் பெருமானையும், 'கூராழி வெண் சங்கேந்திக் கொடியேன் பால், வாராய் ஒரு நாள்' திருவாய் : 6:9:1 என்று ஒரு நாள் காட்சிக்கு அன்பர்கள் தவிப்பர்.

21. நீரிலே சிறிய கல்லும் அமிழும்; பெரிய தெப்பமும் மிதக்கும்; எம்பெருமானிடத்தும் பிரமதேவன் ஒன்றும் பெறாது போவதும், இடைச்சி எல்லாம் பெறுதலும் கூடும்.

நீருக்கும் எம்பெருமானுக்கும் இத்தனை ஒப்புமை கண்டது போலவே திருமங்கையாழ்வார், எம்பெருமானுக்கும் மாணிக்க மளிக்கும் எம்பெருமானுக்கும் மேகத்திற்கும் ஒப்பிட்டுச் சொல்லியதற்கும் இவ்வாறு மூழ்கி முத்தெடுத்துள்ளார் வியாக்கியானச் சக்கரவர்த்தி.

அவற்றையெல்லாம் கற்கக் கற்க நம் நெஞ்சம் குளிரும். பக்திப் பெருக்கால் உள்ளம் உருகும். இவற்றையெல்லாம் நுகரத்தக்க பேறு படைத்த தமிழனாகப் பிறந்தோமே என்ற பெருமிதம் பெருகும்.

இத்தகைய சிறப்புக்கள் அடங்கிய திருநெடுந் தாண்டகம் திருமங்கையாழ்வாரின் ஆறுபிரபந்தங்களுள் இறுதிப் பிரபந்தமாகும்.

இப்பிரபந்தம் 30 பாசுரங்களைக் கொண்டதாகும்.

அதில் முதல் 10 பாசுரங்கள் ஆழ்வார் தாமான தன்மையில் பாடியவையாகும்.

இரண்டாவது 10 பாசுரங்களும் நாயகி நிலையையடைந்த ஆழ்வாரின் தன்மைகளை, அவருடைய திருத்தாயார் பேசுவதாக அமைந்தவை.

மூன்றாவது 10 பாசுரங்களும் நாயகி நிலையிலுள்ள ஆழ்வார் தோழிகளுடன் பேசுவதாக அமைந்தவை.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

இப்பகுப்பை, கீதையில் கண்ணபெருமான் தன்னுடைய பக்தர்களை மூன்று வகையாகப் பிரித்திருப்பதனோடு ஒப்பிடுகிறார் பட்டர் பெருமான்.

'என்னிடத்தில் வைத்த சிந்தையராய் என்னைப் பிரிந்தால், தரிக்க முடியாதவராய், என்னிடத்தில் உயிரானவர்களாய், தாங்கள் என்னை அநுபவித்தது, பற்றி, ஒருவருக்கொருவர் தெரிவித்துக் கொண்டவர்களாய், என்னுடைய விளையாடல்களைப் பேசியும் கேட்டும் மகிழ்கிறார்கள்' என்று பக்தர்களில் ஒருவகையினரைக் குறிப்பிடுகிறார் கீதையில் கண்ணபிரான்.

முதல் பத்துப் பாசுரங்களில் எம்பெருமானிடத்தில் வைத்த சிந்தையராய் உள்ள முனிவர்களைப் போலே தாமான தன்மையில் பேசுகிறார் ஆழ்வார்.

இரண்டாவது பத்துப் பாசுரங்கள் கண்ணன் கூறியருளிய அவனைப் பிரிந்தால் வாழமுடியாத நிலையடைந்தவர்களைக் குறிக்கின்றன. எம்பெருமான் மீதுள்ள அளவற்ற அன்பினால், தான் மூச்சடங்கித் தன் நிலையைத் தானே பேச முடியாமல் தன் தாயார் பேசுவதாக அவை அமைந்துள்ளன.

மூன்றாவது பத்துப் பாசுரங்கள், அவர்கள் அவனை அநுபவித்ததுபற்றி ஒருவருக்கொருவர் தெரிவித்துக் கொள்பவர்களாய், தன் விளையாடல்களைப் பேசியும் கேட்டும் மகிழும் கண்ண பெருமான் கூறிய பக்தர்களைப் போல, தனக்கும் எம் பெருமானுக்கும் உள்ள தொடர்பைத் தன் தோழிமார்களுக்குத் தெரிவித்தும், அவர்கள் வார்த்தைகளைக் கேட்டுத் தான்தரித்தும் பேசுவதாக அமைந்தவையாகும்.

இப்படிக் கண்ணபெருமான் தன்அடியார்களைப் பற்றிக் கூறிய மூன்று நிலைகளுக்கும், திருநெடுந் தாண்டகத்தில், திருமங்கை யாழ்வார்க்கு உள்ள மூன்று நிலைகளுக்கும் உள்ள பொருத்தத்தைப் பட்டர் அழகாக விளக்கியருளியுள்ளார்.

ஆகவே, திருநெடுந் தாண்டகத்தில் கண்ணபிரான் கீதையில் கூறியருளிய பக்த உலகமே குடிகொண்டிருக்கிறது என்பது பொருளாகிறது.

திருநெடுந் தாண்டகத்தின் பெருமையை உணர்ந்து கொள்ள முன்பு நிகழ்ந்த ஓர் ஐதிகம் (முன்பு நடந்தது என்பது ஐதிகம் என்பதற்குப் பொருள்) இங்கு உதவும்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

பட்டரின் சீடர் ஒருவர் வடபாரதத்தில், கல்வி கேள்விகளில் சிறந்த வேதாந்தி ஒருவரைச் சந்தித்தபோது, பேச்சுப் போக்கில், அவரைவிடக் கல்வி கேள்விகளில் மேம்பட்ட 'பட்டர்' என்பவர் திருவரங்கத்தில் வாழ்ந்து வருகிறார் என்றார்.

'அவருக்கு என்னனென்ன கலை ஞானங்கள் தெரியும்?' என்று அவர் கேட்டார்.

'பட்டருக்குச் சப்தம், தர்க்கம், பூர்வமீமாம்சை, உத்தர மீமாம்சை உள்ளிட்ட அத்தனை கலை ஞானங்களும் தெரியும்' என்றார் பட்டரின் சீடர்.

திருவரங்கம் திரும்பியதும் பட்டரிடம் தாம் கூறியவற்றை யெல்லாம் கூறினார் சீடர்.

பட்டர் பெருமான் சீடரிடம் 'நமக்குக் கைவந்த கலை ஒன்றைக் கூற மறந்துவிட்டீரே! நமக்குத் திருமங்கையாழ்வாரின் திருநெடுந் தாண்டகம் தெரியும் என்று சொல்லாமல் விட்டுவிட்டீரே!' என்று கூறினாராம். இவ்வரலாற்றால் எந்தக் கலைஞானங்களிலும் விஞ்சிய ஞானம் திருநெடுந் தாண்டக ஞானம் என்பது விளங்கும்.

திருநெடுந் தாண்டகத்தின் ஆறாம் பாசுரத்தில், திருக்கோவலூர் எம்பெருமானைச் சேவிக்கப் போகின்ற பெருமகிழ்ச்சியினால் புனல் பரந்து, பொங்கித் ததும்பும் ஆரவாரத்துடன், கரைமீதுள்ள குடியிருப்புக்களை யெல்லாம் அழித்துக்கொண்டு வருகின்ற பெண்ணையாற்றை 'நிலம் பரந்து வரும் கலுழிப் பெண்ணை' என்று வருணிக்கிறார் திருமங்கையாழ்வார். இதற்கு உரை வரைய வந்த பெரியவாச்சான் பிள்ளை ஓர் உவமை கூறி மகிழ்கிறார். 'பிராட்டியை அனுமன் கண்டுவந்த மகிழ்வுச் செய்தியை, இராம பிரானிடம் அறிவிக்க வந்த வானர வீரர்கள், வழியில் மதுவனத்தில் நுழைந்து தம் மகிழ்ச்சியின் போக்குவீடாய், அவ்வனத்தை அழித்ததை' உவமையாக்குகிறார்.

இது குறித்த ஆசாரியர்களுக்கிடையே நிகழ்ந்த ஓர் உரையாடலையும் (சம்வாதம்) அவர் மேற்கோள் காட்டுகிறார்.

'நடுவில் மதுவனம் என்று ஒன்று இல்லையாகில், வானர வீரர்களுடைய மகிழ்ச்சியானது இராம லட்சுமணர்களுடைய முதுகிலன்றோ வெளிப்பட்டிருக்கும்!' என்பாராம் கம்பர்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

மது வனத்தில் நுழையாமல், நேரே இராம லட்சுமணரை வானர வீரர்கள், தங்கள் மகிழ்ச்சியை, தழுவியும் தட்டியும் இருவரின் முதுகிலன்றே முடித்திருப்பர்! என்பது கருத்து. 'அத்தனை வானரங்களும் கைவைத்தால் இராம லட்சுமனோர்களுடைய முதுகு என் ஆவது? நடுவே, மதுவனம் என்று ஒன்றிருக்கவே இருவர் முதுகும் பிழைத்தன!' என்றார் கம்பர். கோவர்த்தன கிரியை எடுத்து ஆயர்களையும் ஆவினங்களையும் காத்த கண்ணபெருமானின் அருஞ்செயல்களில் ஈடுபடுகிறார் ஆழ்வார்.

" கல் எடுத்துக் கல் மாரி காத்தாய்! "

என்பது திருநெடுந் தாண்டகத்தின் பதின்மூன்றாம் பாசுரத்தின் அடி.

'மாரி காத்தாய்!' என்று கூறியிருந்தாலே போதும்! கல் எடுத்துக் கல்மாரி காத்தாய்!' என்று ஆழ்வார் ஏன் சொன்னார் என்று சிந்திக்கிறார்கள் ஆசாரியார்கள். இந்திரன் வெகுண்டு கல்மழை பொழிந்தான். அவன் கல் மழை பொழிந்ததைத் தடுக்க, பெருங்கல்லாகிய பெருங்கல்லைப் பெருங் குடையாகப் பிடித்தான் எம்பெருமான்.

'இந்திரன் நீர்மழை பொழிந்திருந்தால், பெரு நீராகிய சமுத்திரத்தைக் குடையாகப் பிடித்துக் காத்திருப்பான் காணும்!' என்று அருளிச் செய்வாராம் பட்டர். அவனுக்கு அரிய செயல் ஒன்றும் இல்லை. எப்பாடு பட்டாகிலும் தன்னையடைந்த உயிர்களைக் காத்தாக வேண்டும் என்பதே அவன் குறிக்கோள் என்பது பட்டரின் கருத்து.

தற்பெருமை - அவன் தன் பெருமை

திருமங்கையாழ்வாரின் திருப்பெயர்கள் பலவாகும். அவருடைய பலவான திருக்குணங்களையும் செயல்களையும் பற்றிப் பல திருநாமங்கள் தோன்றின என்று கூறலாம். இதில் வியப்பென்ன எனில், அப்பெயர்கள் அனைத்தையும் தம்முடைய பாசுரம் ஒன்றில் அவரே தொகுத்துத் தந்திருக்கிறார்.

" அங்கமலத் தடவயல்சூழ் ஆலிநாடன்,
அருள்மாரி, அரட்டமுக்கி, அடையார்சீயம்,
கொங்குமலி குழலியர்கோன், மங்கைவேந்தன்
கொற்றவேல், பரகாலன், கலியன் "

(பெரிய திரு : 3:4:10)

'இது தற்பெருமைச் சாயலில் இல்லையோ?' என்று திருவிளக்குப் பிச்சன் என்பார், ஒரு முறை இறைவனிடம் விண்ணப்பித்தார்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

" நாயன்தே! தேவரைக் கவிபாடத் தொடங்கி
தம்மைக் கவி பாடிக் கொண்டதே! "

என்றாராம்.

'அதுவும் நம்மையன்றோ சொல்லிற்று!' என்று பெருமாள் திருவுள்ளமானார் என்றொரு வரலாறு வியாக்கியானங்களில் வருகின்றது.

'ஆழ்வார், தம்மைப் பற்றிக் கூறியவையெல்லாம் நம்மைச் சார்ந்தவையே' என்பது பெருமாளின் திருவுள்ளம். பகவானின் பக்தர்கள் கூறிக்கொள்ளும் பெருமையெல்லாம் இறைவனுக்குடையவையாம் என்பது கருத்து. சம்பந்தர், 'எனதுரை தனதுரை'யாக இறைவன் ஏற்றான் என்பதும், என்னைப் பாடுவித்துத் தன்னைப் பாடிக்கொண்டான் என்ற நம்மாழ்வார் கருத்தும் இங்கு நினையத் தக்கவையாம்.

பொங்கத் தம் பொங்கோ

இராமாவதாரத்தில் இலங்கையில் இராவணன் உயிர்துறக்கும் அளவில், மாண்டுபோனவர்கள் போக மீந்திருந்த அரக்கர் தங்கள் உயிருக்கு மன்றாடும் நிலையைப் பெருமான் ஆழ்வாருக்குக் காட்டிக் கொடுத்தான்.

அதை அநுபவித்த ஆழ்வார் பத்தாம் திருமொழியில் 2ஆம் பதிகமாக, 'பொங்கத் தம் பொங்கோ' எனும் ஈற்றுச் சீர்களோடு 10 பாசுரங்கள் பாடியுள்ளார். அவற்றில் முதற் பாசுரம்

" இரக்கம் இன்றி எம்கோன் செய்த தீமை
இம்மையே எமக்கு எய்திற்றுக் காணீர்!
பரக்க யாம் இன்று உளரத்தென்? இராவணன்
பட்டனன்; இனியாவர்க்கு உரைக்கோம்?
குரக்கு நாயகர்காள்! இளங்கோவே!
கோலவல்வில் இராமபிரானே!
அரக்கர் ஆடழைப் பாரில்லை! நாங்கள்
அஞ்சினோம்! தடம் பொங்கத் தம் பொங்கோ! "

இப்பாசுரத்தில் ஓர் அரிய அறக் கருத்தை ஆழ்வார் உரைக்கின்றார். இரக்கமில்லாது செய்யும் கொடிய செயல்களின் விளைவுகள் மறுமை வரையிலும் நீட்டிக்காது இம்மையிலேயே பயன்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

தந்துவிடும் எனும் இக்கருத்து இளங்கோவடிகள் கருத்தின் விளக்கமாக அமைந்துள்ளமை காணலாம்.

" முற்பகல் செய்தார் பிறன்கேடு; தங்கேடு
பிற்பகல் காண்குறூஉம் பெற்றிய காண்! "

(சிலம்பு 21:2-3)

பாண்டியன் கண்ணகிக்குச் செய்த தீமை இப்பிறப்பிலேயே பயன் தந்து விட்டது என்பது இளங்கோவின் கருத்து. இராவணன் பிராட்டிக்குச் செய்த தீமையும் இப் பிறப்பிலேயே பயன்தந்துவிட்டது என்று அரக்கர் வாய்வழியாக அறம் வரவழைக்கின்றார் ஆழ்வார்.

இந்த அறத்தை இப்பொழுது எங்கள் தலைவனாகிய இராவணனுக்குப் போய் உரைக்கலாம் என்றாலோ அவனும் அழிந்து போனான். அறத்திற்குக் கேடு செய்த அவன் அழிந்து போன பிறகு, வயிற்றுக்காகப் பணிபுரிந்த எங்களை வதைக்க வேண்டா; குரங்கினத் தலைவர்களே! இளைய பெருமாளே! எங்களை விட்டுவிடுங்கள் என்று அரக்கர்கள் கெஞ்சுகின்றார்கள்.

இப்பாசுரத்திற்கு உரையருளுகின்ற போது 'அரக்கர் ஆடமைப் பார் இல்லை' எனும் தொடருக்கு 'அரக்கர்களில் இனி ஆடுபோன்று கத்திக் கூப்பிடுவார் எவரும் இல்லை' என்று நஞ்சீயர் உரை கூறினார்.

தன் ஆசாரியப் பெருமான் இவ்வாறு உரையுரைத்ததைக் கேட்ட அவர் மாணவர் நம்பிள்ளை 'சுவாமி! ஆடு அமைப்பாரில்லை' என்பதற்கு, 'அரக்கர்களிலே 'வெற்றி' என்று சொல்ல வல்லார் ஒருவரும் இல்லை. தோற்றோம் என்று தோல்வியைச் சொல்ல வல்லார் உளரே தவிர, வென்றோம் என்று கூறவல்லார் ஒருவரும் இலர் என்று பொருள் கூறலாமே' என்று நஞ்சீயரிடம் விண்ணப்பித்தார்.

'இதுவே சரியான பொருள்!' என்று குருவாகிய நஞ்சீயர், சீடர் நம்பிள்ளை உரையை மகிழ்வோடு ஏற்றார் என்கிறது ஓர் ஐதிகம்

இதனால், ஆழ்வார் கூற்றுக்கு உண்மையுரை காண, கடலுள் மூழ்கி முத்தெடுப்பாரைப் போல, ஆசாரியப் பெருமக்களும் பேருரையாளர்களும் முயன்றிருக்கிறார்கள் என்பது தெளிவாகின்றது. யார் யார் வாய்க் கேட்பினும் மெய்ப்பொருள் காண்பதே அவர்கள் உயர் நோக்கமாய் இருந்தமையும் இந்நிகழ்வால் புலனாகிறது.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

நம்மாழ்வாருக்கு விளக்கம்

திருமங்கையாழ்வார் பாசுரங்கள் நம்மாழ்வார் பாசுரங்களுக்கு, விளக்கம் அளிப்பவையாக ஆசாரியப் பெருமக்கள் போற்றியுள்ளனர்.

'மாறன் (நம்மாழ்வார்) வகுத்த திருமறைகளுக்கு ஆறங்கம் வகுத்தவர் மங்கையர் கோன் எனும் திருமங்கையாழ்வார்' என்று பேசப்படுவதன் பொருள் இவ்வாறு நம்மாழ்வார் பாசுரங்களுக்கு, திருமங்கையாழ்வார் பாசுரங்கள் விளக்கவுரையாக அமைந்துள்ளமையாலேதான்.

ஒருசமயம் பட்டர்பிரான் 'மைப்படியும் மேனியும் செந்தாமரைக் கண்ணும்' எனும் நம்மாழ்வாரின் திருவிருத்த அடிகளுக்கு 'காண்பவர்கள் நெஞ்சில் பித்தேற்றும்படியான திருமேனியை யுடையவன் எம்பெருமான்' என்று கருத்துரைத்தார். (மை-இருள், மயக்கம்)

பிள்ளை விழுப்பரையர், திருவழுந்தூர் அரையர் எனும் அரையர் பெருமக்கள் இருவர், 'இவ்விடத்துக்கு, நஞ்சீயர், திருமங்கையாழ்வார் பாசுரத்திலிருந்து மேற்கோள் காட்டுவர்' என்று பட்டரிடம் கூறினர்.

அதனைக் கூறுங்கள் என்று பட்டர் வேண்டினார்.

" இன்னார் என்றறியேன்
அன்னே ஆழியொடும்
பொன்னார் சார்ங்கமுடைய அடிகளை
இன்னார் என்றறியேன் " திருமொழி (10:10-9)

எனும் பாசுரத்தை அவர்கள் கூறினர்.

சங்கு சக்கரங்களோடு எம்பெருமானைக் கண்டபோதும் அவனை இன்னார் என்று தெரிந்து கொள்ள முடியாத அளவுக்கு, அவ்வடிவு பித்தேற்றும்படியாக இருந்ததால், திருமங்கையாழ்வார் 'ஆழியோடும் பொன்னார் சார்ங்கமுடைய அடிகளை இன்னார் என்றறியேன்' என்றார் என்று விளக்கமும் அளித்தனர்.

'நெஞ்சைப் பித்தேற்ற வல்ல திருமேனி' என்ற தம்முடைய விளக்கத்திற்கு, மிகச் சரியான மேற்கோளாகத் திருமங்கையாழ்வார் பாசுரத்தைக் கூறக் கேட்ட பட்டர் மிகவும் மகிழ்ச்சியடைந்து 'பலநூறு காதங்களுக்கு அப்பாலுள்ள கருநாடக தேசத்திலே பிறந்திருந்தும், இவ்வளவு தூரம் வந்து இன்று நமக்கு இப்பாசுரத்தை எடுத்துக்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

கொடுப்பதே!' என்று நஞ்சீயருடைய திறமையை மிகவும் வியந்து கொண்டாடினார் என்பது ஓர் ஐதிகம்.

கருநாடக தேசத்திலே வேதாந்தியாயிருந்த நஞ்சீயரை வைணவம் திருத்திப் பணி கொண்டதனை இங்கு நினைவுகூரலாம்.

மிக்க சீர்த் தொண்டர்

மற்றொரு சமயம், நஞ்சீயர் தம் சீடரான நம்பிள்ளையிடம், திருமங்கையாழ்வாரின் அருளிச் செயல்களைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தனர்.

" கெண்டை ஒண்கணும் துயிலும் என்நிறம்
பண்டு பண்டுபோல் ஒக்கும் - மிக்கசீர்த்
தொண்டர் இட்ட பூந்துளவின் வாசமே
வண்டு கொண்டு வந்து ஊதும் ஆகிலே!"

(பெரிய திரு மொழிப்பாசுரம் : 11:1.9)

என்ற பேச்சு எழுந்தது.

'பயன் கருதாத அடியார்கள் சமர்ப்பித்த திருத்துழாய் மலரின் மணத்தை வண்டு முகர்ந்து கொண்டு வந்து, என் அருகில் ஊது மானால், என் மேனி நிறமும், என் கண்களும் உறக்கமும் பழைய நிலையை எய்தும்' என்ற பரகால நாயகியின் கருத்தை இப்பாசுரம் பகர்கிறது.

தொண்டர்களில் மூன்று வகைத் தொண்டர்கள் உண்டு என்று இப்பாசுரம் வரையறுக்கிறது. தொண்டர், சீர்த்தொண்டர், மிக்க சீர்த் தொண்டர் என்று தொண்டர்கள் மூவகையர் ஆவர்.

பெருமானிடம் சில பலன்களை விரும்பி, அடிமை பூண்டிருப் பவர்கள் 'தொண்டர்' எனப்படுவர்.

பெருமானிடம் புருடார்த்தத்தை (வாழ்வின் இலக்கினை யடைய) விரும்பி அடிமை பூண்டிருப்பவர்கள் 'சீர்த் தொண்டர்' எனப்படுவர்.

ஒரு பலனையும் விரும்பாமல் இறைதிருப்பணி (கைங்கர்யம்) செய்து வருபவர்கள் 'மிக்க சீர்த் தொண்டர்' எனப்படுவர். அப்படிப் பட்ட மிகச் சிறந்த தொண்டர்கள் சமர்ப்பித்த மலர்களின் பரிமளத்தை இங்கே பரகாலநாயகி விரும்புகிறாள்.

இங்குத் திருத்துழாயின் மணத்தை வண்டு கொண்டு வந்து ஊதுமாகில் என்று கூறினால் போதாதோ?

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

'மிக்க சீர்த் தொண்டர் இட்ட' என்ற அடைமொழிக்குக் கருத்து ஏன் என்று நம்பிள்ளை நஞ்சீயரிடம் கேட்டார். அதற்கு நஞ்சீயர் இப்பொழுது பரகாலநாயகி வருந்துவது தன்பொருட்டால் அல்ல. எம்பெருமானுக்கு உண்மையான, பலன்கருதாத தொண்டர் இல்லையே! வேறுபயன் எதையும் கருதாத 'மிக்க சீர்த் தொண்டர் அடிமை செய்கிறார்கள் என்று தெரிந்தால், உறங்காத கண்ணும் உறங்கும்; என்பழைய நிறமும் திரும்பும்! என்கிறாள் பரகால நாயகி' என்று விடை தந்தார்.

இந்த ஐதிகத்தில், திருமங்கை மன்னரின் ஒவ்வோர் அடைச் சொல்லையும் கூட, ஏன் இது ஆழ்வாரால் சொல்லப்பட்டது என்ற விசாரணைக்குப் பின்தான் பேருரைகள் விளம்பப்பட்டன என்பது தெளிவாகும்.

மூலத்தின் கருத்தை வெளிக் கொணர உரையாசிரியர்கள் எத்தனை பாடுபட்டிருக்கிறார்கள்? எப்படியெல்லாம் சிந்தித்திருக் கிறார்கள் என்பதை இதனால் நம்மால் உணர முடிகிறது.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

சான்றோர்களைப் பற்றி எழுதிய அறிஞர்கள்

1
- திருஞான சம்பந்தர் (மரபின் மைந்தன் முத்தையா)
- திருநாவுக்கரசர் (பேராசிரியர் இரா.இருகப்பிள்ளை)
- சுந்தரர் (புலவர்மணியன்)

2
- மாணிக்கவாசகர் (முனைவர் தெ.ஞானசுந்தரம்)
- காரைக்கால் அம்மையார் (முனைவர் தரணி பாஸ்கர்)
- சேக்கிழார் (முனைவர் செல்வக்கணபதி)

3
- ஆண்டாள் (முனைவர் நிர்மலா மோகன்)
- குலசேகர ஆழ்வார் (முனைவர் கா.அரங்கசாமி)
- திருமங்கையாழ்வார் (முனைவர் அமுதன்)

4
- பெரியாழ்வார் (முனைவர் தரணி பாஸ்கர்)
- நம்மாழ்வார் (முனைவர் சிற்பி பாலசுப்பிரமணியம்)
- வேதாந்ததேசிகர் (முனைவர் பிரேமா நந்தகுமார்)

5
- ஸ்ரீமத்வர் (டாக்டர் சுதா சேஷையன்)
- ஸ்ரீராமானுசர் (முனைவர் ம.பெ. சீனிவாசன்)
- வள்ளலார் (முனைவர் ம.ரா.போ.குருசாமி)

6
- திருமூலர் (முனைவர் அ.அறிவொளி)
- மெய்கண்டார் (முனைவர் ந.இரா.சென்னியப்பன்)
- தாயுமானவர் (முனைவர் இ.சுந்தரமூர்த்தி)

7
- வீரமாமுனிவர் (முனைவர் ம.செ.இரபிசிங்)
- குணங்குடி மஸ்தான் (முனைவர் தக்கலை பஷீர்)
- மகாகவி பாரதியார் (முனைவர் சிற்பி பாலசுப்பிரமணியம்)

8
- சாந்தலிங்க சுவாமிகள் (நவத்திரு.சாந்தலிங்க இராமசாமி அடிகளார்)
- கந்தசாமி சுவாமிகள் (புலவர் ப.வெ.நாகராசன்)
- சுவாமி சித்பவானந்தர் (வழக்கறிஞர் மு.மாரியப்பன்)

9
- சிவப்பிரகாசர் (முனைவர் ம.மனோன்மணி)
- சிவஞான முனிவர் (முனைவர் வே.செல்லாத்தாள்)
- வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் (முனைவர் நெல்லை ந.சொக்கலிங்கம்)

10
- ஆதிசங்கரர் (எஸ்.வைத்தியநாத கிருஷ்ணன்)
- அருணகிரியார் (முனைவர் கு.வெ.பாலசுப்பிரமணியன்)
- குமரகுருபரர் (முனைவர் இரா.மோகன்)

CC-0. In Public Domain. Panangal Research and Training Centre and Tamil Virtual Academy